
பாயும் புலி

பண்டித நேரு



கலைஞர்

மு.கருணாநிதி

பாயும்புலி
பண்டாரக
வன்னியன்

கலைஞர்
மு. கருணாநிதி

வெளியீட்டாளர்

ராக்போர்ட் பப்ளிகேஷன்ஸ்

(பி) லிட்.

S-6 திரு. வி. க. தொழிற்பேட்டை

கிண்டி-சென்னை-600 032

தமிழ்நாடு-இந்தியா

0010391

0010391
10 JAN 2010

பராசக்தி

பணமாமதி வினாசியினை



கலைஞர் மு.கருணாநிதி

ராக்ஃபோர்ட்
பப்ளிகேஷன்ஸ்(ஹ)லிட்.,
சென்னை-32

நூல் அளவை

தலைப்பு	:	பாயும்புலி பண்டாரக வன்னியன்
ஆசிரியர்	:	கலைஞர் மு. கருணாநிதி
பொருள்	:	வரலாற்றுக் காவியம்
வெளியீட்டகம்	:	ராக்போர்ட் பப்ளிகேஷன்ஸ்(பி)லிட்., சென்னை 600 032
வெளியீடு	:	5
பதிப்பு	:	ஒன்று
தாள்	:	மாப் லித்தோ
அளவு	:	14 x 21½ சி. எம்
படிகள்	:	3000
காலம்	:	மே-1991
விலை	:	ரூ. 125/- (ரூபாய் நூற்றி இருபத்தைந்து மட்டும்)
எழுத்து	:	12 புள்ளி
ஓவியம்	:	ஜெயராஜ்
முகப்பு	:	ஓவியக் கவிஞர் அமுதோன்.
கணிப்பொறி ஒளி அச்சு	:	ராக்போர்ட் பிரஸ்-சென்னை-32
அச்சிட்டோர்	:	ராக்போர்ட் பிரஸ்-சென்னை-32

ANNA CENTENARY LIBRARY
CHENNAI - 600 085.
Acc. No. 0010391
Call No. மாப் லித்தோ
Number and Size
Date of Invoice 29/18.01.10
Indian Price 125.00
Director

894.8113
KAR53

அணிந்துரை

"பாயும்புலி பண்டாரக வன்னியன்" என்னும் இந்தச் சுதந்திர வேட்கையை ஊட்டும் வரலாற்றுப் புதினத்தைப் படைத்து - தமிழ் மக்களுக்கு வழங்கியுள்ளார் முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்.

வரலாற்றுப் புதினம் படைப்பது எளிதல்ல எனினும் அது அவருக்குக் கைவந்தகலை. அதற்குரிய வரலாற்றுப் பின்னணியை - நாடு, காலம், அரசியல் சூழல், அண்டை நாட்டு நிலை, மக்கள் வாழ்க்கை முறை, சமயப் பழக்க வழக்கம், கதை மாந்தர் நடமாடும் இடத்தின் இயல்பு முதலான வற்றைப் பல்வேறு ஆதாரங்களைத் திரட்டி - ஆராய்ந்து தெளிந்து, காட்சிகளாகக் கண்டு, படிப்பவர் கருத்தில் படலம் படலமாக விரியும் வண்ணம், எழில் ஓவியமாகத் தீட்டுகின்றார் கலைஞர்.

சங்க காலத் தமிழகத்தின் பெருமைக்குரிய சூழல் விளக்கும் "ரோமாபுரிப் பாண்டியன்", ஆங்கிலேயர் ஆதிக்கம் தமிழ் மண்ணில் பரவிய காலத்தில் தமிழகத்தின் நிலையைச் சித்தரிக்கம் "தென்பாண்டிச் சிங்கம் ", வழிவழி வந்த நாட்டுப்புறக் கதைகளைக் கொண்டு தமிழ்வீரம் காட்டும் "பொன்னர்-சங்கர்" ஆகிய புதினங்களைப் படைத்த கலை உணர்வு இதனையும் வரைந்துள்ளது.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் வழங்கும் இராசராச சோழன் விருது-தென்பாண்டிச் சிங்கத்துக்கென வழங்கப்பட்டதையும்-அதை வழங்கி உரையாற்றிய குடியரசுத் துணைத் தலைவர் சங்கர் தயாள் சர்மா அவர்கள், கலைஞரை, முத்தமிழ் அறிஞர் என்று பாராட்டி வாழ்த்தியதையும் நாமறிவோம்.

தமிழ் ஈழ மண்ணின் பகுதியான வன்னிநாடான அடங்காப்பற்றின் காவலன் வைரமுத்து, பண்டாரக வன்னியன் என்னும் சிறப்புப் பெயரில் வரலாற்றுப் புகழ் கொண்டவன். தமிழ்நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சியும்-ஆதிக்கமும் கால் ஊன்ற இடந்தரக்கூடாது என்னும் இலட்சியத்துடன், அவர்களை எதிர்த்துப் போராடிய வீரபாண்டிய கட்டபொம்மன் போன்று,

அதே கால கட்டத்தில் - இலங்கையில் மண்ணின் உரிமைக் காக்கப் போராடியவனே பண்டாரக வன்னியன். அவன் தமிழ்நாட்டில் ஏற்பட்டு வந்த அரசியல் நிலவரங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் கொண்டிருந்த துடன், கட்டபொம்மனின் படைத் தளபதிகளில் ஒருவரான சுந்தரலிங்கத் துடன் நட்பாடியவன்.

மண்ணின் உரிமை காத்திடும் உறுதிபூண்டு வீரங்காட்டிப் போராடிய பண்டாரக வன்னியன் காலைச் சுற்றிய கருநாகமாக, ஈழத்துக் கரிக்காட்டு மூலையின் காவலனாக, காட்டிக் கொடுத்திடக்கூசாத காக்கை வன்னியன் இருந்தான்.

பண்டாரக வன்னியன் உள்ளங்கவர்ந்த காதலி - குருவிச்சி நாச்சியும், அவனது அருமைத் தங்கையர் நல்ல நாச்சியும், ஊமைச்சி நாச்சியும், உயர்ந்த பண்புள்ள வீராங்கனைகள்.

இலங்கையின் மையப்பகுதியான கண்டியில் ஆட்சிப் பொறுப்பேற்ற கண்ணுச்சாமி-முடிசூட்டிய காலத்தில் விக்கிரம ராச சிங்கன் என்னும் பெயர் பூண்ட மன்னன்-பண்டாரக வன்னியனின் உற்ற நண்பன். நாட்டுரிமை காப்பதில் நாட்டம் கொண்டவன்.

அந்த நாட்டு அமைச்சராக இருந்தவர், நயவஞ்சக நச்சுச் சிந்தனை யாளர், மனிதச் சிலந்தி பிலிமதளாவை. அவர் சிங்கள இனத்தவர். ஆங்கிலேயரின் நோக்கத்துக்குத் துணை நின்று, அவர்களின் ஆதிக்கத்திற்குப் பாய் விரித்திடத் திட்டமிட்டு, அதன்மூலம் ஆட்சியைத் தனதாக்கிக் கொள்ள பேராசை கொண்டு - சதி வலை பின்னியவர்.

அந்தப் பிலிமதளாவையின் மகள் பியசீலி. இளமை எழில் கொஞ்சும் பாவையான பியசீலி - அதனை எவருக்கும் வரையாது வழங்கும் கலையில் வல்ல ஆள் மயக்கி, ஆட்கொல்லி. தன்மகளான பியசீலியையே - பகடைக் காயாகப் பயன்படுத்தி பலருக்கும் விருந்தாகிடத் துணையாகி, அதன் மூலம் தனது பதவி மோகத்தை நிறைவேற்றிட முனைந்தான் பிலிமதளாவை.

ஆங்கிலேய தளகர்த்தர்களின் நாட்டை வளைக்கும் - சுரண்டும் திட்டம், அதற்குத் துணைபோன உள்நாட்டுச் சதிகாரர்கள், அவர்கள் திட்டமிட்டுப் பின்னிய சதிவலையை அறுத்தெறிந்திட முனைந்ததோடு, நாட்டுரிமை காத்திடத் தங்களையே ஒப்படைத்துப் போராடி உயிர் நீத்த வீரர்கள் வீராங்கனைகள் ஆகிய மாந்தர்களைக் கொண்டு ஒளிரும் இந்தக் காவியம் முல்லைத் தீவின் பரணியாக ஒலிக்கிறது.

வரலாற்றுச் செய்திகளை மையப்புள்ளிகளாகக் கொண்டு வரையப் படினும், கதை மாந்தர்களின் சிந்தனையையும் - செயலையும் - நிகழ்ச்சி யையும் விளைவையும் அவற்றை வரிசைப்படுத்துவதிலும், எதிர்பார்ப்புடன் வளர்ப்பதிலும், ஒவ்வொரு கட்டமாக வருணிப்பதிலும், வியப்பைத் தோற்றுவிப்பதிலும் கலைஞரின் கற்பனைத்திறன் காட்டும் எழுத்தாற்றல் சுவை ஏற்றுகிறது.

மனித வாழ்வு "காதலில்" கருக்கொண்டு வாழ்வில் வண்ணங் காட்டுவது. அந்தக் காதலில்தான் எத்தனை வகை, எத்தனை நிலை, எத்தனை சுவை அத்தனையும் - கதை மாந்தர்களின் தகுதிக்கேற்ற முறையில் சித்தரிக்கப்படுகின்றது.

தனக்கென வாழாதாரின் தூய உள்ளக் காதல், தன்னை மறைத்து நல்லவனாக நடித்த கயவனிடம் உள்ளம் பறிகொடுத்தவள் உண்மை அறிந்தபோது துடித்திடும் காதல், தனது வேட்கை தீரவும், நோக்கம் கைகூடவும் அன்றாட நாடகமாக அரங்கேற்றப்படும் காதல் - காதலின் திரிபான காமத்தில் திளைத்திடும் வெறிக்காதல் ஆகியவை - விவரிக்கப்படும் வகையினால் அவற்றின் மாண்பும் - இழிவும் புலப்படுத்தப்படுகிறது.

தமிழர்கள் வரலாற்றுச் செய்திளைக் குறித்து வைப்பதிலோ, முன்னோர் வரலாற்றைப் போற்றி அறிந்து கொள்வதிலோ ஆர்வம் அற்றவர்கள், அதன் விளைவு, அவர் தம் வரலாறு, சிதைந்த சித்திரமாகத் தான் கிடைக்கிறது. அதனால் - தமிழர்கள் தம்மை ஒரு வரலாற்றுப் பெருமை கொண்ட இனமாக மதித்திடவும் அறியாதவராயினர். இனவுணர்வு மங்கிய சமூகத்தில்தான், ஒற்றுமை அரிதாகி, பொது நலமும் தம்மவர் உரிமை வாழ்வும் காக்கும் உணர்வு மங்கி துரோகம் தலை தூக்கும். தமிழர் தம் வரலாற்றை உற்று நோக்குவோர், அவர்தம் வீழ்ச்சிக்கு வழி வகுத்தது இனவுணர்வு கொள்ளாமையே என்று தெளிவர்.

வஞ்சிக்கப்பட்ட நல்ல நாச்சியார், நானும் தமிழன்தானே என்று கூறும் கயவன் காக்கை வன்னியனை நோக்கி,

"நீ தமிழன்தான்! இனத்தால், மொழியால், உன் உடலில் ஓடும் இரத்தத்தால் நீ தமிழன்தான்! ஆனால் சூடு சொரணை இல்லாத தமிழன்! பணத்துக்காகப் பாதபூசை செய்யும் தமிழன்! பதவிக்காக மானத்தை அடகு வைக்கும் தமிழன்!" என்று சினந்து கூறிய சொற்கள், இன்றைய தமிழ் மண்ணில் எவ்வளவு பேருக்கு ஏற்புடையதாக அமைவன என்பதை எண்ணத் தோன்றுகிறது. அதுதான் எண்ணத் தொலையாதே என்ற ஏக்கந்தான் மேலோங்குகிறது. மற்றொரு களம். பண்டாரக வன்னியன் பற்று வைத்திருந்த

தமிழகத்தில், கயத்தாறு பூமியில், வெள்ளைக்கார மேஜர் பானர்மேன் வீரபாண்டிய கட்டபொம்மனைக் குற்றஞ்சாட்டியபோது கட்டபொம்மன் உரையாக இடம் பெறுவது இது:

"ஒற்றுமை இன்மையால் உருப்படாமல் போன இனம் என்று உலகில் ஒரு இனம் உண்டென்றால் அது தமிழ் இனம்தான்! எதிரிகள் கஷ்டப்பட்டுப் பிரித்து வைக்கத் தேவை இல்லாமலே - தாங்களாகவே கசப்பு பொறாமை, காழ்ப்பு இவற்றின் உச்ச கட்டத்திற்குச் சென்று பிரிந்து நிற்கும் இனமும் தமிழ் இனந்தான்! அதன் விளைவுதான் இதோ உமது எதிரில் வீரபாண்டியன் கூண்டில் நிற்பதும், அதனை இத்தனைத்தமிழ்க் குறுநில மன்னர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்பதும்"

இதுதானே இன்றையத் தமிழ்நாட்டின் அரசியல் திருக்கோலம்!

பண்டாரக வன்னியன் மாட்சியே இந்த உணர்விலேதான் ஒளி விடுகிறது என்பதைக் கலைஞர் திறம்பட உணர்த்துகிறார்.

"பெண்ணின் பெருமை"
"நாட்டுப் பற்று"
"இனவுணர்வு"

"தமிழ்ப் பண்பாடு" அத்தனையும் படிப்பவர் மனத்தில் பதிந்திடு மாறும், தெவிட்டாத தேன் தமிழ் நடையில் வடிக்கப்பட்டுள்ள இந்தப் புதினம் படிப்பவர்க்கு விருந்து; தமிழினத்துக்குத் தன்னம்பிக்கை ஊட்டும் மருந்து.

பலதுறை விற்பன்னராகவும், கலையுலக மேதையாகவும், எழுத்துலக வேந்தராகவும், இருபதாம் நூற்றாண்டில் தமிழ்க்குப் பெருமை சேர்க்கும் கலைஞர், ஒரு எழுத்தாளன் உள்ளத்தையும், ஒரு தலைவன் நெஞ்சத்தையும்கூட-தான் உணர்ந்த உணர்வாகப் பண்டாரக வன்னியனின் சிந்தனை வெளிப் பாடாக இடம் பெறச் செய்திருப்பதையும் காண்கிறேன்! அவர்தான் கலைஞர்.

அவருக்கு என் வாழ்த்து!

அவர் எழுத்துக்கு என் பாராட்டு!

அவரின் தொண்டுக்கு என் போற்றுதல்!

சென்னை.
5.5.1991

அன்பன்,
கு. அன்பழகன்

பதிப்புரை

கலைஞர் படைப்புகளில் எத்தனையோ அறிய நூல்கள், தமிழ் இலக்கியச் சோலையில் என்றும் நிரந்தரமாக மணம் வீசிக் கொண்டிருக்கின்றன. அவைகளில் மிகவும் சிறந்த நூல் 'சங்கத்தமிழ்'. சங்கத்தமிழ் நூலை வெளியிட்ட பெருமை எங்களுக்குண்டு!

இப்போது கலைஞரின் ''பாயும்புலி பண்டாரக வன்னியன்" என்ற வரலாற்றுக் காவியத்தை 'ராக்போர்ட்' வெளியிடுகிறது!

இந்த வரலாற்றுக் காவியத்தை நாங்கள் வெளியிடும் நேரமும் காலமும் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று! இன்று தமிழ் மண்ணுக்கு வேண்டிய உரத்தையும்-ஊக்கத்தையும் பாயும்புலி பண்டாரக வன்னியன் நூல் தந்து உதவும்.

அணிந்துரை வழங்கிய பேராசிரியர் அன்பழகனார் அவர்களுக்கு எங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வண்ணப்படங்களை வரைந்த ஓவியர் ஜெயராஜ், அட்டைப்படம் அமைத்த ஓவியக்கவிஞர் அமுதோன், கலைஞர் வண்ணப்படம் தந்த சுபா சுந்தரம் ஆகியோருக்கு எங்களது பாராட்டுக்கள்.


சென்னை-32 ராக்போர்ட் பப்ளிகேஷன்ஸ்(பி)லிட்

6-5-91

பண்டார வன்னி வேந்தன்
படைகண்டால் உடலில் ஆவி
உண்டா போயிற்றா என்றே
ஒடுவார் ஒளிவார் மாற்றார்!
விண்டாலும் சொல்லை மிஞ்சும்
வீரத்தான் தமிழீ ழத்தான்
துண்டாடிப் போட்ட வெள்ளைத்
துரைமார்கள் தலையும் உண்டே!

-எழுச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்

பாரதி பாடல்கள்



கலைஞர்
மு.கருணாநிதி

தோரணவாயில்

வீரம், விவேகம், தியாகம் இவை எந்தத் திசையிலிருந்து ஒளி உமிழ்ந்தாலும் அதனைப் போற்றிப் புகழ்க் காவியம் படைக்க வேண்டுமென்ற ஆர்வமுடையவன் நான்!

அதிலும் அந்த வீரமும், விவேகமும், தியாகமும் தமிழ்க் குலத்தின் சொத்துக்களாக எங்கேயிருப்பினும், அவை கால வெள்ளத்தின் கொடுமையால் கவனிப்பாரற்றுப் போய்விடக் கூடாது என்ற கவலை எனக்கு மிக உண்டல்லவா?

அதன் விளைவாகத்தானே தமிழனின் பழங்கால வரலாற்று அடிப்படையில் "ரோமாபுரிப் பாண்டியன்" என்ற பெரு நூலையும், அதற்கடுத்து பிற்காலத் தமிழ்மானச் செம்மல் "தென் பாண்டிச் சிங்கம்" என்ற பெரு நூலையும், அதனைத் தொடர்ந்து புராதனக் கதைகளை ஆதாரமாகக் கொண்டு, போர்ப் புலிகளாம் "பொன்னர்-சங்கர்" எனும் வரலாற்றுக் கற்பனைக் கதை யினையும் என்னால் தமிழர்க்குத் தர முடிந்தது!

அந்த ஆர்வத்தின் அடுத்த முயற்சியாகத்தான் **பாயும் புலி பண்டாரக வன்னியனின்** தீரமிகு தியாக சரித்திரக் கதையைத் தீட்டிட முற்படுகிறேன்.

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு (1982-ல்) இலங்கையில் வவுனியா மாவட்ட வளர்ச்சிக் குழுவினர், வவுனியாவில் கற்சிலை மடுவு என்ற இடத்தில் பண்டாரக வன்னியனுக்கு சிலையெடுக்கும்

விழா ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர். அந்த விழாவையொட்டி வெளியிடப்பட்ட மலருக்கு நான் எழுதியனுப்பிய வாழ்த்து பின்வருமாறு.-

"தமிழகத்தில் எந்த அளவுக்கு வீரபாண்டியக் கட்டப் பொம்மன், வெள்ளையரை எதிர்த்துப் போராடித் தன் உயிரைத் தியாகம் செய்தானோ - அதைப்போலவே இலங்கை வன்னி நாட்டில் "உண்டேல் சுதந்திரம், இன்றேல் இல்லை வாழ்வு!" என்ற கோஷத்தை முன் வைத்து, தன் இறுதி மூச்சு வரையில் போராடி, உயிர் விட்ட தியாகி மாவீரன் பண்டார வன்னியனுக்கு வவுனியாவில் சிலையெடுத்து அதனை யொட்டி முத்தமிழ் விழா ஒன்றினையும் கொண்டாட அருமை நண்பர் - பாராளுமன்ற உறுப்பினர் தா.சிவ சிதம்பரம் உள்ளிட்ட குழுவினர் முடிவு செய்துள்ளதறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தியாகத்திற்கு, நிகழ்காலம் உரிய மதிப்புத் தரத் தவறினாலும், எதிர்காலம் நிச்சயம் மதிப்பு தந்தே தீரும் என்பதற்கு அடையாளமாக இச்சிலை திறப்பு விழா நடைபெறுவது போற்றுதற்குரியதாகும்."

அன்று தொட்டே, அந்த மாவீரனைப் பற்றிய குறிப்புகளைப் பலர் வாயிலாகத் திரட்டிட ஆவல் எழுந்தது எனக்கு! எனினும் அக் குறிப்புகள் எளிதிற் கிடைத்திடவில்லை!

அச்சிலை திறப்பு விழாவுக்கு வாழ்த்தளித்த - யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி வித்யானந்தன் அவர்கள் .-

"வன்னி நாடாகிய அடங்காப்பற்றின் மானம் காக்க அந்நியருடன் இறுதி மூச்சு வரை போராடிய மாவீரன் பண்டார வன்னியன். மக்கள் நலனை மனதிற் கொண்டு தேசப்பற்றுடன் ஆண்டவன் அவன். ஆங்கிலப் படைத்தளபதி ஒன்டிரிபர்க் தனது புகழை நிலைநாட்டிக் கொள்வதற்காக கற்சிலை மடுவில் பண்டார வன்னியனுக்கு நினைவுக் கல் அமைத்தான். அவனின் வீரத்தைப் பறைசாற்ற வவுனியா மாவட்ட அபிவிருத்தி சபையினர் வவுனியாவில் சிலை யெழுப்புகின்றனர். வன்னிப் பிரதேசத்து மக்களுக்கு

மட்டுமன்றி, நம்பிக்கை குலைந்து தளர்ந்து போயிருக்கும் ஈழத்துத் தமிழர் யாவருக்கும் நம்பிக்கையும், தேசப்பற்றும், உரிமைக்குரலும் ஓங்கிட இச்சிலை அமையுமென எதிர்பார்க்கலாம். நல்ல தலைவர்களை மக்கள் விரும்பவும், இனங்கண்டு கொள்ளவும் நல்ல தலைவர்கள் தோன்றவும் இச்சிலை வழி வகுப்பதாக!" என்று குறிப்பிட்டுள்ளார்.



ஆங்கில தளபதி **ஒன்டிரி பர்க்** என்பான் தனது புகழை நிலை நாட்டிக் கொள்ள கற் சிலைமடு எனுமிடத்தில் பண்டார வன்னியனுக்கு நினைவுக் கல் அமைத்தான் என்கிறாரே, அது என்ன கல்?

இதோ படத்தில் இருப்பது தான் அந்த நினைவுக்கல்!

1803 ஆம் ஆண்டு அக் டோபர் 31 ஆம் நாள் ஒன்டிரி பர்க், பண்டார வன்னியனைத் தோற்கடித்தான் என்று அந்தக் கல்லில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது.

உண்மையிலேயே அந்த சுதந்திர வீரன் தோற்கடிக்கப் பட்டானா? அத்துடன் அவனது போர் முழக்கம் முற்றுப் பெற்றுவிட்டதா? அல்லது மீண்டும் ஆர்ப்பரித்துக் கிளம்பியதா அந்த அரிமா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் "பாயும் புலி பண்டாரக வன்னியன்" தொடர் சித்திரம், பதில் அளிக்கத்தான் போகிறது! விளக்கமான பதில்! வீரங் கொப்பளிக்கும் பதில்!

அந்த மானங்காத்த மன்னவனுக்குச் சிலையெழுப்பிய பொழுது இலங்கைப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவரான திரு. அமிர்தலிங்கம் அவர்கள் வழங்கிய வாழ்த்தில்

"ஆங்கிலேயரின் படையெடுப்பினால் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் ஆட்சி செய்த தமிழ் மன்னர்களும், சிங்கள மன்னர்களும் தங்கள் இறைமைகளை இழந்த

போதும் - இறுதிவரையில் தமது ஆட்சிக்கு உட்பட்ட மக்களின் இறைமையை நிலைநாட்ட முழு மூச்சாக நின்று போராடியவன் வன்னியின் கடைசி மன்னன் மாவீரன் பண்டார வன்னியன். அவனது வீழ்ச்சிக்கு ஆங்கிலேயரின் ஆக்ரமிப்பு மட்டுமல்ல, கூடப் பிறந்தே கொல்லும் வியாதி போல் விளங்கிய காக்கை என்பவனால் காட்டிக் கொடுக்கப்பட்ட இழிசெயலும் முக்கிய காரணமாக இருந்தது" என்று குறிப்பிடுகிறார்.

துரோகிகளைச் சந்திக்க நேர்ந்த அந்த தூயவனுக்கு நல்ல நண்பர்களும் இல்லாமலில்லை. கி.பி.1815 ஆம் ஆண்டு வரையில் கண்டியை ஆட்சிசெய்து ஆங்கிலேயர்களால் சிறைபிடிக்கப் பட்டு தமிழகத்து வேலூர் சிறையில் பதினாறு ஆண்டுக் காலம் அடைக்கப்பட்டு அந்தச் சிறையிலேயே உயிர் நீத்த **கண்ணுசாமி** என்ற **விக்ரம ராஜ சிங்கன்**, பண்டாரக வன்னியனின் உயிர்த் தோழனாவான்.

காட்டிக்கொடுப்போரால் மனம் நொந்த அந்த மாத்தமிழனின் எரிமலை இதயத்தைச் சிறிது மாற்றியமைத்து, அவன் இளைப்பாறும் குளிர் தருவாக **குரு விச்சி நாச்சியார்** என்னும் கோதையொருத்தியும் இருந்தாள்! மன உறுதியின் அடிப் படையில் கட்டப்பட்ட அந்தக் காதல் மாளிகை, ஒரு வைராக்கிய மாளிகை! தியாக மாளிகை!

போர்ச்சுகீசியர், ஒல்லாந்தர் எனப்படும் டச்சுக்காரர், ஆங்கிலேயர்-இவர்களின் நுழைவினால் இலங்கையில் தமிழ் மன்னர்களின் அரசுகளும், சிங்கள மன்னர்களின் அரசுகளும் ஒவ்வொன்றாக வீழ்ந்த போதும் பண்டாரக வன்னியனின் அரசும், கண்டி மன்னனின் அரசும் மட்டுமே, இறுதியாக ஆதிக்கம் பெற்று நிலைத்து விட்ட ஆங்கிலேயரை எதிர்க்கின்ற வல்லமை பெற்றவைகளாக விளங்கின.

"கொழும்போடு கோட்டையும் மட்டக்களப்பும்
குறைவில்லா யாழ்ப்பாண இராச்சியமும்
அழுங்குப் பிடியாகப் பிடித்தவற்றை
ஆண்டாரே ஆங்கில நாட்டினர்கள்"

இலங்கையில்
வவுனியா
மாவட்ட
அடிவிருத்தி
சபை வெளியிட்ட
பண்டார
வன்னியன்
படம்



என்ற நாட்டுப் பாடல், இலங்கையில் ஆங்கிலேயர் ஆதிக்கம் எங்கெங்கு பரவியிருந்தது என்பதை எடுத்துரைக்கும்.

அந்த ஆதிக்கத்திற்கு மத்தியிலேதான் வடக்கே யாழ்ப்பாணப் பரவைக் கடலையும், தெற்கே அருவி ஆற்றையும், மேற்கே மன்னார் மாவட்டத்தையும், கிழக்கே திருகோணமலையையும் எல்லைகளாகக் கொண்ட பகுதியைப் பண்டாரக வன்னியன் பரிபாலித்தான்.

டச்சுக்காரர் எதிர்ப்புக்கும் ஆங்கிலேயர் எதிர்ப்புக்கும் அவன் ஈடு கொடுக்க வேண்டியிருந்தது. அவனுக்குத் துணையாக திருகோணமலை எல்லைப்புறத்தில் **நல்லநாச்சி** - மன்னார் எல்லையில் பனங்காமம் பகுதியை **ஊமச்சிநாச்சி** - என்ற அவனது சகோதரிகளும் பரிபாலித்துப் பாதுகாத்தனர் என்ற வரலாற்றுக் குறிப்பைக் காணும்பொழுது - அந்த மண்ணில் வாழ்ந்திடும் தமிழர்கள் அன்றும் இன்றும் கண்ணகியைத் தமது தெய்வமாக வழிபட்டனர், வழிபடுகின்றனர் என்பது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது!

சேரன் செங்குட்டுவன் தமிழகத்தில் வஞ்சிமூதூரில் பத்தினித் தெயவமாம் கண்ணகிக்கு, இமயத்திலே கல் எடுத்து அதனைத் தன்னுடன் போரிட்டுத் தோற்ற கனக விசயர் தலையிலேற்றிக் கொணர்ந்து சிலையெடுத்தான். அப்போது ஈழத்து மன்னன் கயவாகு அந்தப் பத்தினி வழிபாட்டை ஈழத்தில் தொடக்கி வைத்தான எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. மதுரையை எரித்தும் சினந்தணியாத கண்ணகி பத்தாவது இடமாக வந்து அமர்ந்த இடந்தான், "பத்தாப்பளை" என வழங்கப்பட்டு, மருவி, இன்று 'வற்றாப்பளை' ஆகியது என ஒரு கதை, அந்தப் பகுதியில் இன்றைக்கும் உண்டு.

அந்தக் கண்ணகி வழி வந்தோரைத் தனது சகோதரிகளாகவும் - தனது அன்புக் காதலி குருவிச்சி நாச்சியாராகவும் பெற்றிருந்த பண்டாரவன்னியன் எனப் பட்டம் கொண்ட அந்த வீரன், மிக இளமைப் பருவத்திலேயே ஆட்சிப் பொறுப்பை ஏற்று- முப்பத்தி நான்கு வயதிலேயே, களச்சாவில் தனது புகழை நட்டான்!

பண்டார வன்னியன் என வரலாற்றுக் குறிப்புகளிலும்- பண்டாரக வன்னியன் என்று இந்தத் தொடர்கதைத் தலைப் பாகவும் குறிப்பிடப்படும் அவனது இயற்பெயர் குலசேகரம் **வைரமுத்து** என்பதாகும்.

குலசேகரம் என்ற குடிப்பெயருக்குரிய மன்னர்களின் வழி வழி வந்த தோன்றல்தான் வாள் வீரன் வைரமுத்து!

"ஏகாதிபத்தியம் எதுவாக இருந்தாலும் அந்த ஏகாதிபத்தியம் ஒரு இனத்தின் இறைமையைப் பறிக்க முற்படும்போது அந்த இனம் வீறு கொண்டு எழுந்து, தனது உரிமைக்காகப் போராடும் என்பதைப் பண்டார வன்னியன் வாழ்க்கை மெய்க்குத் தெளிவாகக் காட்டுகிறது. பண்டார வன்னியன் வாழ்ந்த மண்ணிலே அவனின் வாரிசுகளாக வாழ்ந்து வரும் மக்கள் இலங்கையின் அரசியல் வரலாற்றில் சுதந்திர தாகம் கொண்ட மக்களாக, தங்கள் அரசியல் உணர்வை வெளிப்படுத்தியதை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவதிலே நான் பெருமையடைகிறேன். இன்று அளிக்கப்படும் கௌரவம் மாவீரன் பண்டார வன்னியனுக்குத்தான் உடையதல்ல. இன்று கௌரவிக்



கப்படுவது அவனுடைய இலட் சியமும், சுதந்திர வேட்கையும் தான்"

என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு.மு. சிவசிதம்பரம் அவர்கள் பண்டார வன்னியனின் சிலை திறப்பு விழாவில் குறிப்பிட்டார்.

இலங்கையின் பிரதமர் பிரேமதேசா கூட, அந்த சிலை திறப்பு விழாவை முன்னிட்டு வழங்கிய வாழ்த்தில்,

"கௌரவிக்க வேண்டியவர்களைக் கௌரவிப்பது தார்மீக ஒழுக்க நெறியாகும்"

என்றும்,

"மாவீரன் பண்டார வன்னியனை கௌரவிக்க சிலை யெடுக்கும் விழா, முற்றிலும் சரியான செயல் என்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன்"

என்றும் குறிப்பிட்டிருப்பது அந்த வீரனின் புகழைப் பறை சாற்றுவதாகும்.

போர் வாளைத் தனது கொடியின் சின்னமாகக் கொண்டு- புலியெனப் பாய்ந்து களம்பல கண்ட - குலசேகர வைரமுத்து வின் உருவமோ,


உயர்ந்த தோற்றம்
விரிந்த மார்பு
ஒடுங்கிய இடை
பரந்த நெற்றி
உரமேறிய தோள்கள்
கூரிய பார்வை

அந்தத் தீரனின் அஞ்சாநெஞ்ச வாழ்க்கையின் அடிச் சுவட்டை அடுத்த இதழ் முதல் தொடருவோம்.


இக்கதைக்கான குறிப்புகள் பலவற்றை எனக்குத் தந்து உதவியவர் - முல்லைத்தீவு, வவுனியா பகுதிகளில் கலெக்டர் பதவிக்கு இணையான அரசுப் பதவி வகித்தவரும் எழுத்

தாளருமான நண்பர் செ.யோகநாதன் அவர்கள் - அவருக்கும், மற்றும் மதுரை யாதவர் கல்லூரி முதல்வர் தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும் - காந்தளகம் சச்சிதானந்தம் அவர்களுக்கும் - நன்றி கூறிக் கொண்டு, அந்தத் தமிழ்ச் சிங்கத்தின் வரலாற்றுத் தொடர்கதையை உங்கள் முன் படைக்கின்றேன்.

அன்புள்ள,



ஒரு இரகசியக் கடிதம்!



1798 ஆம் ஆண்டு!

காட்டாற்று வெள்ளத்தைக் கை கொண்டு தடுப்பது போல - கட்டபொம்மனைப் போன்ற பாளையக்கார மன்னர்கள். இந்தியாவில் வணிகர்களாக வந்திறங்கிய ஆங்கிலேயர்களின் அதிகார ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருந்த அதே கால கட்டத்தில் இலங்கையிலும் பண்டாரக வன்னியனின் அரசும், கண்டி அரசும் ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு இடம் தராத வகையில் போர்க்குரல் கொடுத்துக்கொண்டிருந்தன.

அந்த ஆண்டில்தான் ஒரு நாள் இரவு நேரத்தில் இராமேஸ்வரம் கடற்கரையோரமாக மூவர், சுற்று முற்றும் பார்த்தபடி வேகமாக நடந்து கொண்டிருந்தனர். மூவரில் ஒருவன் அழுத்தமான பட்டுத் துணியால் ஆன தலைப்பாகை கட்டியிருந்தான். தோளில் பளபளக்கும் ஜரிகைக் கரையுடன் கூடிய மேலங்கியொன்று கடற்காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்தது. வரிந்து கட்டப்பட்ட வேட்டி முழங்காலுக்குக் கீழே கெண்டைக்காலைப் பிடித்தாற்போல அமைந்து அவனுடைய உருவத்திற்கு ஒரு கம்பீரத்தை வழங்கிக் கொண்டிருந்தது. சற்று நீண்ட மீசையும், பெரிய விழிகளும் அவனது வீரத்தைப் புலப்படுத்திக் கொண்டிருந்தன. இடையில் உறையுடன் கூடிய வாள் ஒருபுறம் - மற்றொரு புறத்தில் சுருட்டி அடக்கமாக வைக்கப்பட்ட ஒரு மடல்!

அவன் இருபுறத்திலும் அவனோடு நடந்து சென்றவர்கள் சாதாரண உடையில்தான் இருந்தார்கள். அவனிடத்தில் மரியாதையுள்ளவர்களாக பணிவுடன்தான் அவன் பக்கத்தில் அவனைப் பின் தொடர்ந்து கொண்டிருந்தார்கள்.

இரவு நேரமென்றாலும் -இருட்டு, முழுமையாகப் பரவி உலகத்தை விழுங்கி விடவில்லை. சோற்றுப் பருக்கைகளை இலையில் வாரியிறைத்தாற்போல் வானத்தில் நட்சத்திரங்கள் ஒளிவிட்டுக் கொண்டிருந்தன. பாதியை மறைத்துக் கொண்டு மீதியைக் காட்டியபடி விண்வீதியில் உலா வந்த நிலவின் வெளிச்சமும் அந்தக் கடற்கரை மீதும் - கடற்கரையை அலைக் கரங்களால் தழுவத் துடிக்கும் கடலின் மீதும் பரவிப் படர்ந் திருந்தது. அதனால் கரையோரமாகச் சென்ற அந்த மூவரையும் தெளிவாகப் பார்க்க முடிந்தது. கொஞ்ச தூரம் நடந்தவர்கள், கரையோரமாகக் கிடந்த ஒரு தோணியின் பக்கம் சென்று நெருங்கி நின்றார்கள். மூவரின் கரங்களுமே அந்தத் தோணியைக் கரையிலிருந்து கடலை நோக்கித் தள்ளின. உடனடியாகத் தோணி, கடலுக்குள் முழுமையாக இறங் காவிட்டாலும், அவர்கள் மூவரின் வலிமைக்குப் பணிந்தது போல் கடல் நீரில் மிதக்கத் தொடங்கியது. அதற்குப் பிறகும் கூட மூவரும் கடற்கரையைத் தங்கள் விழிகளைச் சுழற்றிப் பரபரப்புடன் கவனித்தார்கள். யாரும் அவர்களின் கண்ணில் தென்படவில்லையென்றதும், ஒரு பெருமூச்சு ஏக காலத்தில் மூவரிடமிருந்தும் வெளிப்பட்டது.

சாதாரண உடையில் இருந்த இருவரில் ஒருவன், தோணி யில் முதலில் ஏறிக் கொண்டதோடு அங்கிருந்த துடுப்பையும் கையில் எடுத்துக் கொண்டான். அடுத்தது யார் தோணியில் ஏறுவது என ஒரு விநாடி யோசனை! அதற்குள் தோணியில் இருந்தவன், இருவரையும் பார்த்து "உஸ்! கொஞ்சம் மறைந்து கொள்ளுங்கள்!" என்று மெல்லிய குரலில் எச்சரித்தான். இரு வரும் மிக வேகமாகத் தோணியின் மறுபக்கம் சென்று கடல் நீரில் நின்றவாறே தங்களை மறைத்துக் கொண்டனர். தோணி யில் ஏறியவனும், தன்னைத் தோணிக்குள் ஒளித்துக் கொண்டு கடற்கரையோரத்தைக் கூர்ந்து கவனித்தான்.

நாலைந்து குதிரைகளின் குளம்படிச் சப்தம் ஒரே நேரத்தில் அந்த இரவின் அமைதியைக் குலைத்திடும் அளவுக்கு - வெள்ளை நிற வீரர்கள் கடற்கரையோரத்தைப் பார்வையிட்டவாறு அந்த

இடத்தைக் கடந்து கொண்டிருந்தனர். அந்த வெள்ளை வீரர்கள் கைகளில் துப்பாக்கிகள் நீண்டிருந்தன. அவர்கள் அந்த இடத்தை விட்டுக் கடந்து செல்கிற வரையில் ஒளிந்து கொண்டிருந்த மூவரும் மீண்டும், தங்கள் அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கினர். தோணியில் -இருந்தவன், மெதுவாக எழுந்து-தலையை நீட்டி -நீரில் கால்கள் நனைந்திட நின்று கொண்டிருந்த மற்ற இருவரையும் பார்த்து, தோணியில் ஏறிக்கொள்ளுமாறு சைகை செய்தான். அவர்கள் இருவருமே தோணியில் தாவியேற முயன்றபோது - தோணியிலிருந்தவன் அவர்களைப் பார்த்து, "ஒவ்வொருத்தராக ஏறுங்கள்! முதலில் சுந்தரலிங்கம் ஏறட்டும்!" என்றான்.

பட்டுத் தலைப்பாகையணிந்தவன்தான் சுந்தரலிங்கம் என்று சொல்லாமற் சொல்வதைப் போல - அவன் மட்டும் தோணியில் ஏறி உட்கார்ந்தான்! இறுதியாக மூன்றாவது ஆளும் ஏறிக் கொண்டு கையில் துடுப்பை எடுத்துக் கொண்டான். அந்த இருவரும் தோணி ஓட்டுபவர்கள் என்றாலும் சுந்தரலிங்கத்துக்குப் பாதுகாப்பாக வந்தவர்கள்! பாதுகாப்பாக வந்தவர்கள் என்றாலும் சுந்தரலிங்கத்தோடு சரிசமமாகப் பழகக்கூடிய நண்பர்களாகவே இருக்க வேண்டும். அதனால்தான் தோணி அந்தக் கரையை விட்டுக் கிளம்பிய சிறிது நேரத்திற்கெல்லாம் சுந்தரலிங்கம், தனது மடியைத் தளர்த்தி வெற்றிலை சீவல் எடுத்துப் போட்டுக் கொண்டதோடு -தோணி செலுத்த துடுப்புப் போட்டுக் கொண்டிருந்த அவர்களுக்கும் வெற்றிலையில் சுண்ணாம்பு தடவி, சீவலை வைத்து மடித்துக் கொடுத்து - அந்த இருவருக்கும் தேவையான புகையிலையும் கிள்ளிக் கொடுத்தான்.

இராமேஸ்வரம் கடற்கரையிலிருந்து தோணியில் மூவர்-பயணம் செய்வதோ இரவு நேரத்தில் - யாரும் பார்த்து விடுகிறார்களோ எனப் பயந்து பயந்து தோணியில் ஏறுகிறார்கள்-வெள்ளைக்கார வீரர்கள் வந்த குதிரைகளைக் கண்டதும் ஒளிந்து கொள்கிறார்கள் - யார் அவர்கள்?

நிச்சயமாக அந்த இருவர், ஆம் - அந்தச் சாதாரண உடையில் துடுப்பு போடுவோர், தோணிக்காரர்கள் மட்டுமல்ல,

சுந்தரலிங்கத்துக்குத் துணைவர்களும் கூட! தோழர்களும் கூட! ஒருவன் பெயர் மருதன்! இன்னொருவன் பெயர் பரதன்! இருவரும் மீனவர்கள்! அந்தத் தோணிக்குச் சொந்தக்காரர்கள்! ஏன்- இந்த மண்ணுக்கும் சொந்தக்காரர்கள்!

அப்படியானால் அந்த சுந்தரலிங்கம் யார்? மருதன்-பரதன் என்ற இருவருக்கும் தோழன் என்று கூறினால் மட்டும் போதுமா? போதாது! நிச்சயமாகப் போதாது!

வீரபாண்டியக் கட்டபொம்மனின் அன்புக்குரிய தளபதி வெள்ளையத்தேவனுக்கு உற்ற நண்பனும் - அவனையொத்த வீரனுமான சுந்தரலிங்கம் பாஞ்சாலங்குறிச்சிப் படைமுகத்துச் சிங்கங்களிலே ஒருவன்! தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்து இந்தத் தமிழ் மண்ணை அந்நியர் ஆக்ரமிக்கக் கூடாது என்பதற் காகத் தடந்தோள் தட்டிய பெரு வீரன்!

அந்தச் சுந்தரலிங்கம், இரவோடு இரவாக இராமேஸ்வரத் திலிருந்து, மருதன், பரதன் ஆகிய இருவரின் துணையோடு மேற் கொண்ட அந்தத் தோணிப் பயணம் எதற்காக?

அந்தக் காரணத்தை அவன் இடுப்பில் சொருகியிருக்கும் மடலைப் பிரித்தால்தான் புரிந்து கொள்ள முடியும்!

தந்தையின் தோளில் நழுவி, தாயின் மடியில் குதிக்கும் குழந்தைகளைப்போல - அலைகளின் மேலே ஏறிக் கீழேவிழுந்து, மீண்டும் எழுந்து அந்தத் தோணி, தனது பயணத்தை நடத்திக் கொண்டிருந்தது.

"வானம் பொழியுது
பூமி விளையுது
மன்னவன் காணிக்குக்
கிஸ்தி ஏதுக்கடா!"

என்ற பாடலை மருதனும் பரதனும் மாறி மாறி உரத்த குர லில் பாடினார்கள். அந்தப் பாட்டின் ஒலியும், எழுந்த கேள்வி யும் அந்தப் பெருங்கடற்பரப்பில் கேட்பாரற்றுப் போயின! ஆனால் சுந்தரலிங்கத்தின் உள்ளம் மட்டும் கொந்தளித்துக் கொண்டிருந்தது. ஏனெனில் பாஞ்சாலங்குறிச்சிப் படையுடன்

கூடி, பரங்கியரைப் பார்த்து அதே கேள்வியை வாள்முனையிலும் வேல் முனையிலும் எழுப்பிக் கொண்டிருப்பவனல்லவா அவன்?

இரவெல்லாம் பயணம் நடத்தி, இலங்கையில் உள்ள முல்லைத் தீவுக்குப் போய்ச் சேர வேண்டும் அவன்! இராமேசுவரத்திலிருந்து பருத்தித்துறை கடந்து, தெற்கே திரும்பி முல்லைத் தீவை அடைந்திட வேண்டும். வந்த பணியை முடித்து விட்டு உடனே தமிழகம் திரும்ப வேண்டும். அந்தப் பணியின்பாலுள்ள ஆர்வமும் அக்கறையும் அவனை உத்வேகப்படுத்திக் கொண்டிருந்தன.

வானத்து நட்சத்திரங்கள், இலையில் இறைத்த சோற்றுப் பருக்கைகள் போல் ஒளிவிட்டன அல்லவா? அவற்றைத் திடீரெனக் கருமேகங்கள் பொறுக்கித் தின்று விட்டன போலும்! பாதியை மறைத்து மீதியைக் காட்டி உலவிய நிலவுப் பெண்ணும் பயந்தோடிப் பதுங்கிவிட்டாள் போலும்! அதன் தொடர்பாக முதலில் மழைத் தூறல்! பிறகு காற்று! பின்னர் பெரு மழை! புயல்!.

அந்தத் தோணி, புயலிலும் மழையிலும் தத்தளித்தது. மருதன், தோணியிலிருந்த மூங்கிற்பாய் கொண்டு சுந்தரலிங்கத்தை மூடினான்.

"நீங்கள் இருவரும் நனைகிறீர்களேயப்பா!" என்றான் சுந்தரலிங்கம் கவலையுடன்!

"பரவாயில்லை! எங்களைப் பற்றிக் கவலைப்படாதே! நாங்கள் கடலிலேயே ஊறுகிற கட்டு மரங்கள்! இப்போது உனக்காகக் கவலைப்பட்டு மூங்கிற்பாய் போட்டு மூடியதாக நினைக்காதே! நீ மடியில் வைத்திருக்கிறாயே மடல், அது நனைந்து விடக்கூடாதே என்பதற்காகத்தான்!" என்றான் குறும் புத்தனமாக மருதன்!

"ஆமாம் ஆமாம்! உண்மைதான்! மிக முக்கியமான சேதி! மிக முக்கியமானவரிடம் போய்ச் சேர வேண்டும்!" என்றான் சுந்தரலிங்கம்!

"எங்களை நம்பித்தானே தோணியில் வந்திருக்கிறாய்!

உன்னைப் பிடித்துக் கடலில் தள்ளிவிட்டு, அந்தக் கடிதத்தை நாங்கள் எடுத்துப் படித்துப் பார்த்தால் என்ன செய்வாய்?"

என்று மிரட்டுவது போலக் கேட்டான் பரதன்!

அவன் வேடிக்கையாகப் பேசுகிறான் என்பதும், அது அவனுக்கு வாடிக்கை என்பதும் சுந்தரலிங்கத்துக்குத் தெரியு மாதலால் அவன் கடகடவென சிரித்தான். ஆனால் அந்தச்சிரிப் பின் ஒலி, புயலோசையிலும் பெருமழை ஒலியிலும் தோணிக் குள்ளேகூட சரியாகக் கேட்கவில்லை.

"எட்டப்பன் ஒருவன் போதாதா, கட்டபொம்மன் மன்னருக்கு? நீ வேறா இப்போது எனக்குப் புதிதாக முளைக்கப் போகிறாய்?"

என்று கேட்டுக் கொண்டே பரதனின் தோளைப் பிடித்துக் குலுக்கினான் சுந்தரலிங்கம்!

அந்த நேரத்தில் தோணியைக் கட்டுப்படுத்த முடியாமல் மருதனும் பரதனும் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தனர். எந்த நேரத்திலும் தோணி கவிழ்ந்து விடக்கூடும் என்ற அச்சம் அந்த இருவருக்கும் ஏற்பட்டு விட்டது.

கடல் நீர் முழுவதையும் புயல் தனது கொடிய கரங்களால் அள்ளி அள்ளி மேக மூட்டத்தின் மீது வீசுவது போலவும் - அதில் ஒரு கொட்டாங்கச்சி மேலும் கீழும் பரிதவிப்பது போலவும், அந்தச் சூழலும் அந்தத் தோணியும் தோன்றின!

விடிய விடிய அதே நிலைதான்! விடிந்து பல நாழிகைக்குப் பிறகுதான் புயலும் மழையும் ஓய்ந்து - முல்லைத்தீவை நெருங்கி விட்டோம் என்பதை மூவரும் உணர்ந்து மகிழ்ந்தனர்.

சுந்தரலிங்கத்திற்கு உற்சாகம் தாங்க முடியவில்லை! தோணியிலமர்ந்தவாறே மருதனையும் பரதனையும் இருபுறமும் கைகளைப் பின்னி அணைத்துக் கொண்டு, "தோழர்களே! உங்கள் தொண்டினை மறக்கவே முடியாது! துணிவையும் மறக்க முடியாது!" என்று புகழ்ந்துரைத்தான்.

"சுந்தரலிங்கம்! இப்போதாவது சொல்லக் கூடாதா, அந்தக் கடிதத்தைப் பற்றிய விபரம்?" என்று மருதன் கேட்க, அந்தக் கேள்வியை ஆமோதித்துப் பரதனும் தலையை ஆட்டினான்!

"இது பாஞ்சாலங்குறிச்சி தளபதி வெள்ளையத்தேவன் கைப்பட எழுதிய கடிதம். இதில் உள்ள விபரங்களை வெளியிட்டால் நான் நாட்டுத் துரோகி மட்டுமல்ல, நண்பனுக்கே துரோகியாகி விடுவேன்" என்றான் சுந்தரலிங்கம்!

"விபரங்களை வெளியிட வேண்டாம்! வெளியிடக் கூடாது! இவ்வளவு காலம் பழகுகிற நண்பர்களாகிய எங்களை நம்பி, இந்தக் கடிதம் யாருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது, என்ற முகவரியையாவது கூறக்கூடாதா? ஏன் இதைக் கேட்கிறோமென்றால் திடீரென உனக்கு ஏதாவது ஆகிவிட்டால் உரிய முகவரியாளரிடம் கடிதத்தை நாங்கள் சேர்க்க வேண்டுமல்லவா?"

என்றான் மருதன்!


சுந்தரலிங்கம் சிரித்துக் கொண்டான் - பிறகு, இடுப்பில் சொருகியுள்ள மடலை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு, "நான் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை! இதோ மடலின் உறையில் முகவரி எழுதியே இருக்கிறது!" என்று அதை மட்டும் அவர்கள் இருவருக்கும் காட்டினான்.

இருவரும் "வேண்டாம்! வேண்டாம்! அவ்வளவு பெரிய ரகசியத்தை, அதுவும் ராஜாங்க ரகசியத்தை நாங்கள் ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்?" என்று மருதனும் பரதனும் முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள்.

சுந்தரலிங்கம், புன்னகை புரிந்தவாறு, "ஏ.....ஏ.....கிராக்கி பண்ணிக் கொள்ளாதீர்கள்! மடலுக்குள் என்ன எழுதியிருக்கிறார் வெள்ளையத்தேவன் என்று எனக்கே தெரியாது! பரவாயில்லை, கடித முகவரியைப் படித்தால் ஒன்றும் குடி முழுகிவிடாது! படியுங்கள்!" என்று அந்தக் கடித உறையை அவர்கள் முகத்தை இடிப்பது போல் தூக்கிக் காட்டினான். இருவரும் கண்களை சிறிதாக்கிக் கொண்டு, அந்த மடலின் மேற்புறமுள்ள முகவரியைப் படித்தார்கள்.

"பண்டாரக வன்னியன் என்னும் குலசேகரம் வைரமுத்து மன்னருக்கு" என்று முகவரி எழுதப்பட்டிருந்தது.

வழியில் கண்ட வயோதிகர்!



முல்லைத்தீவு என்பது குறிப்பிட்ட ஒரு தோணித்துறைக்குரிய பெயராக மட்டுமன்றி அந்தப் பகுதிக்கே உரிய பெயராகும்.. சுந்தர லிங்கம் வந்த தோணி முல்லைத்தீவுக் கடற் கரைப் பகுதியின் ஓரத்தை நெருங்கியபோது, பரதன் அவனைப்பார்த்து, "எங்கே நிறுத்துவது? முல்லைத்தீவுத் துறையிலா? அளம்பில் துறையா? அல்லது சிலாவத்தை துறையா?" என்று கேட்டான்.

சுந்தரலிங்கம் புன்முறுவலுடன் "என்ன பரதா? தெரியாத வனைப் போல கேட்கிறாய்? வற்றாப்பளையைத் தாண்டித் தானே பண்டாரகவன்னிய மன்னர் கோட்டைக்குப் போகவேண் டும். அதனால் வற்றாப்பளைக்குச் செல்ல எது அருகில் உள்ள தோணித் துறையோ, அங்கே கொண்டு போய் நிறுத்து!" என்றான்.

உடனே மருது "அப்படியானால் சிலாவத்தைத் துறைதான் பக்கம்!" என்றான்.

"என்னமோ உங்களை நம்பி வந்திருக்கிறேன்! எங்கேயாவது நல்ல இடத்தில் கொண்டு போய் விடுங்கள்!" என்றான் சுந்தர லிங்கம் சிரித்துக் கொண்டே!

"கொண்டு போய்விட்டால் மட்டும் போதுமா? திரும்ப அழைத்துப் போக வேண்டாமா?" என்று பரதன் கேலியாகக் கேட்டான்.

மூவரும் சுவையாகப் பேசிக்கொண்டே தோணியில் சிலா வத்தைத் துறையின் கரைப்பகுதிக்கு வந்து சேர்ந்தார்கள்.

தோணியிலிருந்து இறங்கிய சுந்தரலிங்கம், மருது, பரதன் இருவரையும் பார்த்து – "நீங்கள் இங்கேயே இருங்கள்! நான் இரவு முன்னேரத்திலேயே திரும்பி வந்துவிடுகிறேன்" என் றான்.

"தனியாகப் போகிறாயே, இருவரில் ஒருவர் துணைக்கு வருகிறோமே!" என்றான் மருது!

"என்னோடு ஒருவர் வந்துவிட்டால் - இங்கே கடற்கரையில் ஒருவர் தனியாகத்தானே இருக்க வேண்டும். அதனால் நீங்கள் ஒருவருக்கொருவர் துணையாக இருங்கள்" என்று குறும்பாகப் பதில் அளித்தான் சுந்தரலிங்கம்.

"கடற்கரையில் எந்த பயமும் இல்லை! நீதான் வற்றாப் பளையைக் கடந்து அரண்மனைக்குச் செல்ல வேண்டியவன். வழியில் அடர்ந்த காடு, அந்தக் காட்டில் புலி சிங்கத்தைத் தவிர, வேறு எல்லா மிருகங்களும் உண்டு. அதனால்தான் துணையோடு போவது நல்லது!" என்றான் பரதன்.

"இதோ இருக்கிறது துணை!" என்று இடுப்பில் தொங்கிக் கொண்டிருந்த வாளைத் தொட்டுக் காட்டிவிட்டு, சுந்தரலிங்கம் அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டான்.

உயர்ந்து நிற்கும் காட்டு மரங்களின் இடுக்குகளில் காலைச் சூரியனின் கதிர்கள் பட்டு அந்த வழி முழுதும் எழிற்கோலம் காட்டிக் கொண்டிருந்தன. அந்த இயற்கை அழகைப் பருகிய வாறு சுந்தரலிங்கம் நடந்துகொண்டிருந்தான். காட்டுப் பகுதி யானாலும்கூட ஆங்காங்கு சிறு சிறு திட்டுகளாக சிற்றூர்கள் காணப்பட்டன. அந்த ஊர்களுக்குள்ளேயும் வளைந்து வளைந்து வற்றாப்பளைக்கான பாதையை அவன் கண்டு பிடித்துத் தொடர வேண்டியிருந்தது.

அந்தப் பகுதி வீடுகள் எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளன என் பதை அறிந்து கொள்வதிலும் சுந்தரலிங்கம் ஆர்வம் காட்டி, அதற்காகவே ஊர்ப் பகுதிகளைக் கடக்கும்போது நடையின் வேகத்தைக் குறைத்துக் கொண்டான்.

நீண்ட சதுரமான நிலப்பரப்பில் சாய்வான கூரைகளையுடைய வீடுகளும் - கூம்பக வடிவமைந்த கூரை வீடுகளும் - குவிந்த வடிவமைந்த கூரை வீடுகளும் - அந்த ஊர்களில் கலந்து கலந்து காணப்பட்டன. அந்தக் கூரைகள், தென்னோலைகளாலும், பனை ஓலைகளாலும், வைக்கோலாலும் வேயப்பட்டிருந்தன. சுவர்களோ பெரும்பாலும் களி மண்ணால் கட்டப்பட்டிருந்தன.

சில வீடுகளுக்குத் திண்ணைகளும் இருந்தன சற்று பெரிய வீடுகளின் முன்புறத்தில் பந்தல்கள் போடப்பட்டிருந்தன. உறுதி வாய்ந்த வைரம் பாய்ந்த மரங்கள் எனக் கூறப்படும் காயாமரம், முதிரை மரம், வெடுக்குநாறி மரம் போன்ற மரங்களையே பந்தல் கால்களாகப் பயன்படுத்தியிருந்தார்கள்.

திண்ணைப்பகுதி, பந்தல் முகப்பு இவற்றைப் பார்க்கும் போதே அந்த மக்கள், தங்கள் வீடுகளை மிகவும் தூய்மையாக வைத்துக் கொள்ளக்கூடியவர்கள் என்பது சுந்தரலிங்கத்துக்குப் புரிந்தது.

வீடுகளுக்கு முன்னால் பத்திரி மரம், தோடை மரம், தேசிக்காய் மரம், மாதுளை மரம், மற்றும் முருங்கை, மா, பலா முதலிய மரங்களும் நெருக்கமாக வளர்ந்திருந்தன. வீட்டுக்கு முன்பு கொஞ்ச தூரத்தில் கொம்பறை எனப்படும் நெல்லுப் பட்டறைகள் இருந்தன. வீடுகளுக்கு அருகாமையில் பசுக்களும், எருமைகளும் மேய்ந்து கொண்டிருந்தன.

சுந்தரலிங்கத்தைக் கவர்ந்த ஒன்று, அநேகமாக எல்லா வீட்டு முகப்புப் பந்தல்களிலும் பசுமையான இலைதழைகளைக் கொண்ட தோரணங்களும், வாழை மரங்களும் கட்டப் பட்டிருந்த காட்சிதான்!

எல்லா வீடுகளிலுமே பெரும்பாலும் இத்தகைய விழாக் கோலம் இருப்பதற்கு என்ன காரணம் என்று அறிந்துகொள்ள சுந்தரலிங்கம் ஆவல் கொண்டான். ஆனால் அவனது சந்தேகத்திற்கு விளக்கமளிக்க - அவன் கடந்து சென்ற சிற்றூர்களில் யாருமே அவன் கண்ணுக்குத் தென்படவில்லை. அதனால் அவனது ஆவல் மேலும் பெருகிற்று.

திட்டு திட்டுகளாக இருக்கிற ஊர்கள் - அங்கேயுள்ள வீடுகள் விழாக் கோலத்துடன் இருக்கின்றன, ஆனால் விழா நடத்துவோர் யாரையும் காணவில்லையே என்பதுதான் அவனுக்கு கெழுந்த பெரும் ஆவல்!

இரண்டு மூன்று சிற்றூர்களை அதுபோலக் கடந்து சென்ற அவன், ஒரு வீட்டின் திண்ணையில் ஒரு வயதான கிழவர் சாய்ந்தவாறு அமர்ந்திருந்ததைக் கண்டான். அவனுக்கு ஒரே மகிழ்ச்சி,

அவரைக் கேட்டால் விபரம் தெரியும் என்று, அந்தத் திண்ணை யின் அருகில் சென்றான்.

சுந்தரலிங்கத்தைக் கண்ட அந்த பெரியவர், யார்? என்று கேட்டுக் கொண்டே சிறிது நிமிர்ந்து உட்கார்ந்தார். அசைந்த தாலோ என்னவோ அவரால் அடக்க முடியாத இருமல் - பெரி தும் சங்கடப்படுகிறார் என்பதறிந்து, சுந்தரலிங்கம், அவரது மார்பைத் தடவிக்கொடுத்ததோடு திண்ணையில் ஒரு பாத் திரத்தில் இருந்த தண்ணீரையும் எடுத்து அவர் அருந்துவதற் குக் கொடுத்தான். தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்ட முதி யவர், அவனைப் பார்த்து, "நீ யாரப்பா? உனக்கு என்ன வேண்டும்?" என்றார்.

"நான் தமிழ்நாட்டிலேயிருந்து வருகிறேன் தாத்தா! பண்டாரக வன்னியர் அரண்மனையில் எனக்கு ஒரு முக்கிய மான வேலை இருக்கிறது."

"அப்படியா? ரொம்ப சந்தோஷம்!"

"தாத்தா! நான் வருகிற வழியிலே இரண்டு மூன்று கிரா மங்களை பார்த்தேன். இந்த கிராமத்தையும் பார்க்கிறேன். ஊர் முழுவதும் விழாக்கோலமாக இருக்கிறது. ஆனால் ஆள் நடமாட்டமே இல்லையே, அது ஏன்?"

"அதுவா? இன்றைக்கு விசாகத் திருவிழா முடிவடைகிற நாள்! வற்றாப்பளை கண்ணகியம்மன் கோயிலிலே இன்று ஒரே கொண்டாட்டமாக இருக்கும். இந்த வட்டாரத்து மக்கள் அனைவருமே வற்றாப்பளை கண்ணகி கோயிலில்தான் இருப் பார்கள். என்னைப்போல இயலாத கிழடுகள்தான் வீட்டிலே கிடப்போம். விசாகத் திருவிழாவை முன்னிட்டுத்தான் எல்லா வீடுகளிலும் வாழை மரம், தோரணம் கட்டியிருக்கிறோம். அதுவும் இந்த வருஷம் வற்றாப்பளை விசாகத் திருவிழாவை குருவிச்சி நாச்சியாரே முன்னின்று நடத்துவதாலே - மிகவும் சிறப்பாக நடக்கும்! எனக்குத்தான் பார்க்கக் கொடுத்து வைக்க வில்லை."

"அது யார் தாத்தா குருவிச்சி நாச்சியார்?"

"பண்டாரக வன்னிய மன்னர் இருக்கிறாரே, அவர் மிகவும் இளைஞர்! நெஞ்சுறுதியிலே அவருக்கு இணையானவர் யாருமே

கிடையாது! இந்தப் பகுதிக்கு அவர் மன்னராகப் பொறுப்பேற் றுக்கொண்டதிலேயிருந்து எப்போதும் போர்க்களம்தான்! போராட்டம்தான் அவருடைய வாழ்க்கையே! அப்படிப்பட்ட வருக்கு ஒரு திருமணம் செய்து வைத்துவிட வேண்டுமென்று அவரது உற்றார் உறவினர் எல்லோரும் எவ்வளவோ சொல் லிப் பார்த்து விட்டார்கள். அவர் அதற்குப் போட்ட நிபந்தனை என்ன தெரியுமோ?"

"என்ன தாத்தா? என்ன நிபந்தனை விதித்தார்?"

"வெள்ளைக்கார ஆதிக்கத்தை விரட்டியடித்து இந்த மண் ணின் சுதந்திரத்தைக் காப்பாற்றுகிற வரையிலே எனக்குத் திருமணம் வேண்டாம். என்னைத் திருமணம் செய்துகொள்ள விரும்புகிற பெண், யாராக இருந்தாலும் - அந்தப் பெண் என் னோடு இப்போதிருந்தே இணைந்து நின்று வெள்ளையர் ஆதிக்கத்தை எதிர்க்கும் போரில் எனக்குத் துணையாக இருக்க வேண்டும், என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்!"

கிழவர் இப்படியொரு தகவலைச் சொன்னவுடன் சுந்தர லிங்கத்திற்கு இதயத் துடிப்பு அதிகமாயிற்று. அதற்கு மேலும் விபரமறியப் பரபரப்பு காட்டினான். முதியவர், தொடர்ந்து சொன்னார்.

"அதற்குத் தயார் என்று முன் வந்துள்ள பெண்தான் குரு விச்சி நாச்சியார். தனது லட்சியம் முழுமையாக நிறைவேறிய பிறகுதான் குருவிச்சி நாச்சியாரை மணந்து கொள்வேன் என்று கூறி - இப்போது அவளைத் தனது காதலியாக ஏற்றுக் கொண்டிருக்கிறான் பண்டாரக வன்னியன்! தன்னைக் காதலி யாக ஏற்றுக்கொண்டதற்காக வற்றாப்பளை கண்ணகி கோயிலில் குருவிச்சி நாச்சியார் விசாகத்திருவிழா நடத்தி, கண்ணகி அம்மனுக்கு பிரார்த்தனை நிறைவேற்றுகிறாள். ஒரு வேளை அந்த விழாவுக்கு மன்னரும் வரக்கூடும் என்று பேசிக் கொள்கிறார்கள்"

என்று விளக்கமளித்த பெரியவர், நீண்ட நேரம் பேசிவிட்ட தால் மீண்டும் இருமத் தொடங்கினார்.

சுந்தரலிங்கம், அவரது மார்பைத் தடவிக் கொடுத்து அந்தத் திண்ணையிலேயே சாய்ந்து படுக்கவைத்தான். கனைத்துக் கொண்டு இருமலை சமாளித்தவாறு அந்த முதியவர், சுந்தர

லிங்கத்தைப் பார்த்து "நீ யாரென்று சொல்லவில்லையே! தமிழ்நாடு என்று மட்டும் மொட்டையாகச் சொன்னாய் என் றார்."

"தமிழ்நாடு இன்று மொட்டையாகத்தானே இருக்கிறது தாத்தா!" என்று பதில் அளித்தான் அவன் விரக்தியோடு!

"ஏன் அப்படிச் சொல்கிறாய்? வளம் பொருந்திய பூமி யல்லவா அது?"

"வளம் பொருந்திய பூமிதான்! ஆனால் இன்று, அந்நிய ஆதிக்கத்தின் கொடியல்லவா பறக்கத் தொடங்கியிருக்கிறது! உரிமை அழிக்கப்படுகிறது! அதை மீட்க வேண்டுமென்ற உணர்வு, கொஞ்சம் கொஞ்சமாக பட்டுப்போகிறது! தமிழர் களுக்குள் ஒற்றுமையில்லை! தன்மான உணர்ச்சி இல்லை! உரிமைக்குப் போராடவும்- அதற்காக உயிரைத் தரவும் சித்த மாக இருப்பவர்களைக் காட்டிக் கொடுத்துப் பதவிச்சுகம் அனுபவிக்கப் பல் இளிக்கும் துரோகிகள்தான் பெருகிக் கொண்டிருக்கிறார்கள்."

கிழவர், கண் கலங்கினார். ஏதோ ஒரு உணர்வு -அவரது தொண்டையை அடைத்துக் கொண்டது!

"ஆமாம் தம்பி - இங்கேயும் அப்படித்தான் இருக்கிறது! எங்கள் பண்டாரக வன்னியன் மட்டுமே பரங்கியர் ஆதிக்கத் துக்கு பகையாக விளங்குகிறான். மற்றவர்கள் மண்டியிட்டுவிட் டார்கள்! ஆனால் எங்களைப் போன்ற இந்தப் பகுதி - அதா வது முல்லைத் தீவு மக்கள் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் பண்டாரக வன்னியனுக்குப் பக்கபலமாகத்தான் இருக் கிறோம்."

"தமிழ்நாட்டிலும் இதே நிலைமைதான்! அந்த நிலைமையை விளக்கவும், இங்குள்ள நிலைமையைத் தெரிந்துகொண்டு திரும்ப வும்தான் நான் பண்டாரக வன்னியன் அரண்மனைக்குச் செல் கிறேன்."

"இன்னும் உன் பெயரைச் சொல்லவே இல்லையே!"

"என் பெயர் சுந்தரலிங்கம்! பாஞ்சாலங்குறிச்சி கட்ட பொம்மன் படையில் ஒரு தளபதி!"

"ஓ! அந்த தாழ்த்தப்பட்ட குலத்துச் சிங்கம் நீதானா? நீயும் அந்த வெள்ளையத் தேவனும் சகோதரர்கள் மாதிரியென்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்."

"அப்படியா? தாத்தாவுக்கு தமிழ்நாட்டு நிலவரங்களும் அத்துப்படியா? தங்களுக்கு இங்கே அரண்மனைத் தொடர்பு உண்டா தாத்தா?"

"ஒரு காலத்தில் இருந்தது! தளபதியாக இருந்தேன் இதோ பார்! ஒரு போரில் காலை இழந்து விட்டேன்!"

முதியவர், காலை மூடியிருந்த போர்வையை விலக்கிக் காட்டினார். சுந்தரலிங்கம், அந்தக் கிழவர் மீது தனி மரியாதை செலுத்த ஆரம்பித்து விட்டான்.

"தாத்தா! உங்கள் பெயரை நான் தெரிந்து கொள்ளலாமா?"

"சங்கிலித் தளபதியென்று கூப்பிடுவார்கள்! இப்போது சங்கிலித் தாத்தா என்று கூப்பிடுவார்கள்!"


"சங்கிலித் தாத்தாவுக்கு பேரன் பேத்திகள் உண்டா?"

"பேரன் இல்லை! தாய் தந்தையை இழந்துவிட்ட ஒரு பேத்தி மட்டும் உண்டு, இந்தத் தாத்தாவுக்கு! அந்தப் பேத்தியின் பெயர் என்ன தெரியும்மா?"

"என்ன தாத்தா?"

"குருவிச்சி நாச்சியார்!"

குருவிச்சி நாச்சியார்



சங்கிலித் தளபதியிடம் விடைபெற்றுக் கொண்ட சுந்தரலிங்கம், வற்றாப்பாளை வழியாக பண்டாரக வன்னியன் அரண்மனைக்குப் போகும் பாதையைப் பற்றியும் தெளிவாகத் தெரிந்துகொண்டு அங்கிருந்து புறப்பட்டான். அந்த சிற்றூரைத் தாண்டியதுமே தொடர்ந்து காட்டு மார்க்கமாகவே அதுவும் ஒற்றையடிப் பாதையில் - சில இடங்களில் அந்தப் பாதைகூட இல்லாமல் கல்லிலும் முள்ளிலும் செடி கொடிகளிலும் கால் வைத்து நடக்க வேண்டியிருந்தது. கடமையைச் செய்து முடிக்க வேண்டுமென்ற உணர்வு, அவனை உந்தித் தள்ளிக் கொண்டிருந்த காரணத்தால் கடலில் தோணியில் புயலுக்கிடையே செய்த பயணத்தினால் ஏற்பட்ட களைப்பைக்கூடப் பொருட்படுத்தாமல் வேகமாக நடந்துகொண்டிருந்தான். பாதையோரத்தில் பரவலாக அடர்ந்து பூத்திருந்த மஞ்சள் நிறக் காட்டு செவ்வந்தி மலர்களின் அழகையும் - வெள்ளை வெளேரென்று பூத்துக் குலுங்கிய எருக்கம்பூக்களின் அழகையும் சுந்தரலிங்கம் ரசித்துக் கொண்டே பயணம் நடத்திய போது, அவனுக்குத் தமிழ்நாட்டில் தென்பகுதி மண்ணில் இருப்பது போன்ற உணர்வுதான் ஏற்பட்டது.

என்றோ ஒருநாள் தமிழக நிலப்பரப்பும் இலங்கை நிலப்பரப்பும் ஒன்றாக ஒட்டியிருந்து - கடற்கோளின் வலிமையினால் வெட்டிப் பிரிக்கப்பட்டவைதானே! அதனால்தான் தமிழகத்தைப் போன்ற தன்மையை அங்கேயும் சுந்தரலிங்கத்தினால் காண முடிந்தது.

கடமையில் கண்ணுங்கருத்துமாக இருந்த அவனது மனத்தில் அந்த சங்கிலித் தாத்தா கடைசியாகச் சொன்ன அந்த பதில் மட்டும் அலைமோதிக் கொண்டிருந்தது.

"என் பேத்தியின் பெயர்

குருவிச்சி நாச்சியார்!"

அந்தச் சிற்றூரில் நடுத்தரமான ஒரு வீடு - அந்த வீட்டின் விளக்காகச் சுடர்விடுகின்ற பெண்தான் குருவிச்சி நாச்சியார்- அவளது பாட்டனார், அந்தப் பகுதியில் ஒரு காலத்தில் தளபதியாக இருந்து களத்தில் காலையிழந்தவர் - அவரது பேத்திக்கும் நாடாளுகிற மன்னனுக்கும் காதல். அந்தக் காதலும் திருமணம் வரையில் போகாமல் - அரும்பு, மலராகி, ஆனால் மணம் வீசாத நிலையில் இருக்கிறது! எப்பொழுது பார்த்தாலும் போர் முனையில் நின்று தீரவேண்டிய இளம் மன்னவனுக்கு இடையிடையே இளைப்பாறுவதற்கு ஒரு நிழல் போலக் குருவிச்சி நாச்சியார் கிடைத்திருக்கிறாள் போலும்! அவள் சாதாரணமான வீட்டில்தான் வாழுகிறாள் என்றாலும் - சாதாரணமானவரின் பேத்தியல்லவே! -என்ன இருந்தாலும் அவள் பாக்கியசாலிதான்- வீரர்கள் போற்றும் வீரர் குலத் தலைவனைத் தனது காதலனாகப் பெற்றிருக்கிறாள் என்றால் அவள் பாக்கியசாலிதானே!

வன்னி முல்லைப் பகுதியில் எத்தனையோ வடிவழகிகள் இருப்பினும் - அதிலும் வளம் செறிந்த இல்லங்களில் எளிதில் கிடைப்பினும் - அந்தப் பெண்மணிகளையெல்லாம் விட்டு விட்டு இவள் ஒருத்தி மீது மட்டும் மன்னன் காதல் கொண்டிருக்கிறான் என்றால், இவளுக்கு ஏதோ தனி மகத்துவம் இருக்கத்தான் வேண்டும்!

அழகியோ? அல்லது அறிவிற்சிறந்தவளோ? தீரமிகுந்த வீராங்கனையோ? அல்லது தியாகத் திருவிளக்கோ?

இவ்வாறெல்லாம் குருவிச்சி நாச்சியார் பற்றிச் சிந்தனை செய்தவனாகச் சுந்தரலிங்கம் நடுக்காட்டுப் பாதைக்கு வந்து விட்டான். அவன் வந்து சேர்ந்த இடத்துக்கும் வற்றாப்பாளை கண்ணகி அம்மன் கோயிலுக்கும் ஒரு கல் தொலைவுதான் இருக்கக்கூடும். ஆனாலும் அந்தப் பகலிலும்கூட, அவனிருந்த

இடம் இருள் கப்பிக்கொண்டிருந்தது. கதிரவனின் ஒளி தலை காட்ட முடியாத அளவுக்கு அவ்வளவு நெருக்கமான காடு!

வற்றாப்பாளை கண்ணகி கோயிலில் முழங்கிய பல்வேறு இசைக்கருவிகளின் ஓசை, அந்தக் காட்டுக்குள்ளும் எதிரொலித்தது. இடிமுழக்கம் போன்ற முரசின் சப்தமும் எக்காள வாத்தியம், தாரை, கொம்பு, தப்பட்டை போன்ற கருவிகளின் பேரோலியும் அந்தக் காட்டகத்து மரக்கிளைகளைக்கூட அதிர்ச்சியுறச் செய்துகொண்டிருந்தன. கண்ணகி கோயில் வாசல் ஆயிரக்கணக்கான மலர்களைக் கொண்ட அழகிய வளைவுகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தரை முழுவதும் ஓருவிதக்கோரைப் புற்கள் பரப்பப்பட்டு மிதிப்போர் பாதம் பட்ட மாத்திரத்தில் படபடவெனச் சோளப் பொறி பொறிவது போல வெடித்துக்கொண்டிருந்த வேடிக்கையைச் சிறுவர் சிறுமியர் கைகொட்டி ரசித்து மகிழ்ந்த வண்ணமிருந்தனர். கோயிலைச் சுற்றி வாழை, கமுகு மரங்கள் அலங்காரமாகக் கட்டப்பட்டிருந்தன. பெரிய வட்டில்களின் அடியில் தண்ணீர் நிரப்பி அதற்கு மேலே நெய்யை ஊற்றி - அதில் பெருந் திரிகளையிட்டுக் கொளுத்தி, அந்த வட்டில்களை நூற் றுக்கணக்கான பெண்கள் ஏந்திக்கொண்டு அம்மன் சந் நிதியில் நடனமாடினர்.

அந்தப் பெண்களுக்கு நடுநாயகியாக - சந்தன நிற மெழுகு வத்தியால் செய்திட்ட உருவம் போன்ற ஒருத்தி, நிலவைப் பிளந்து ஒரு பாதியை நெற்றியாக்கிக் கொண்டு - நீல மலர்களில் கரு வண்டுகள் சுழல்வது போன்ற விழிகளுடையவளாக- எடுப்பான தோற்றத்துக்கும், மிடுக்கான நடைக்கும் இவளுக்கு நிகர் இவளே தான் என்று கூறத்தக்க அளவுக்கு - தனது கையில் நெய் வட்டில் ஏந்தி நடனமாடினாள்.

"கற்புக்கொரு மாதரசு எங்கள் கண்ணகி தேவி!
பொற்புடைய தமிழர் குலப் பெண்களின் ஆவி!"

ஆயிரத்துக்கு மேற்பட்டோர் - ஆடவர், பெண்டிர், இளைஞர், முதியோர் என அந்தப் பகுதி மக்கள் நடனப் பாடலின் அந்த உணர்ச்சிமிகு வரிகளில் கட்டுண்டு போயினர். ஆடும் மகளிரில்

நாலைந்து சிங்களப் பெண்களும் இருந்தனர். அவர்களும் தமிழ்ப் பெண்களைப் போலவே அந்த உணர்ச்சிகரமான பாடலை இசைத்துக் கொண்டு ஆடினர்.

பாட்டும் கூத்தும் கண்ணகியம்மனுக்குப் படையலும் வெகு விமரிசையாக நடந்து கொண்டிருந்த போது – திடீரென காட்டுக் குள்ளிருந்து ஒரு யானை வெகுண்டெழுந்து அந்தக் கோயிலின் வாசலுக்கு ஓடிவந்தது. யானையின் திடீர்பிரவேசம் கண்டு கூடியிருந்த மக்கள் திக்குத் தெரியாமல் ஓடத் தொடங்கினர். கண்ணகி கோயில் விசாகத் திருவிழாவின் இசை ஒலி, நடன ஒலி, மற்றும் தாரை, தப்பட்டை, முரசு ஒலிகளினால் அந்த யானை மிரண்டு போயிருக்கிறது என்பதை அக்கணமே புரிந்துகொண்ட குருவிச்சி நாச்சியார், அங்கு ஆலயத்திற்கு அருகே நின்று கொண்டிருந்த தனது குதிரையில் தாவி ஏறினாள். ஏறும்பொழுதே, குதிரைக்கருகில் வைத்திருந்த தனது ஈட்டியையும் கையில் எடுத்துக்கொண்டாள். ஏறி உட்கார்ந்த வேகத்தில், குதிரையை ஒங்கித் தட்டிக் கொடுத்து– "கண்ணா! ஒடு!" என்று குரல் கொடுத்ததுதான் தாமதம் – அந்தக் குதிரை காற்றை மட்டுமல்ல, அந்தக் காட்டையும் கிழித்துக் கொண்டு அந்த மத யானையைத் துரத்தத் தொடங்கியது.

தாக்கப்படுவோம் என்று உணர்ந்து கொண்ட அந்த யானை, காட்டுக்குள் அங்குமிங்கும் நுழைந்து ஓட்டமாய் ஓடியது! எங்காவது சரியான இடத்தில் நின்றுகொண்டு – அந்தக் குதிரையையும் குருவிச்சி நாச்சியாரையும் எதிர்த்து நொறுக்க வேண்டுமென்ற தினவு அந்த யானையின் துதிக்கை, தந்தம், மத்தகம், கால்கள் அனைத்துக்கும் ஏற்பட்டுவிட்டதால், எதிர்ப் பட்ட மரங்களையெல்லாம்கூட இடித்தும், அசைத்தும் துவம் சம் செய்தது.

குருவிச்சி நாச்சியார், அந்த யானை நிற்கும் இடம் நோக்கிக் குதிரையைப் பாயவிட்டாள். தன்னை நோக்கி மிக அருகாமை யில் குதிரையும், அதன் மீது குருவிச்சி நாச்சியும், அவள் கையில் ஈட்டியும் இருப்பதைப் பார்த்த யானை மேலும் மிரண்டுபோன

நிலையில் அங்கிருந்த பல மரங்களை முட்டி மோதித் தகர்த்தெறிந்து விட்டு - செடி கொடிகளைத் துவைத்துக்கொண்டு வெறியில் பிளிறியவாறு வேறு பக்கம் பாய்ந்தது.

அந்தப் பக்கமாகத்தான் சுந்தரலிங்கம் வந்துகொண்டிருந்தான். கட்டுக்கடங்காமல் தன்னை நோக்கிவரும் யானை, காட்டு யானையாகத்தானிருக்க வேண்டுமென்ற எண்ணமுடன், தன்னை அதனிடமிருந்து காப்பாற்றிக் கொள்ள அவன் தனது வாளை உருவிக்கொண்டான். வெறிகொண்ட யானையை நோக்கி அவன் நடத்திய வாள்வீச்சு பயனற்றுப் போயிற்று! காரணம், அந்த யானையின் துதிக்கையில் ஒரு வலுவான மரக் கிளை இருந்தது! அந்தக் கிளையை ஆயுதமாகக் கொண்டு– துதிக்கையின் உதவியோடு அந்த யானை, சுந்தரலிங்கத்தை எதிர்த்தது. எப்படியும் தன்கை வாளினால் அந்த யானையின் துதிக்கையைத் துண்டித்து விடவேண்டுமென்று சுந்தரலிங்கம் துடித்தான். பெருந்தாக்குதலுக்கு அதனை உள்ளாக்கிவிட்டால் தனது உயிருக்குப் பாதுகாப்பில்லை என்பதை அவன் அறிந்துகொண்டான்.

யானை மீது அவன் நடத்திய வீரப் போர், அவனுக்கு வெற்றியைத் தரவில்லை. யானையோ, தன் துதிக்கையில் பிடித்திருந்த மரக்கிளையைக் கீழே போட்டுவிட்டு, அந்தத் துதிக்கையால் அவனது வாளைப் பறித்துக் கொண்டு விட்டது. அடுத்து என்ன செய்வதென்று அவன் யோசிப்பதற்குள், யானையின் துதிக்கைக்குள் சுந்தரலிங்கம் சிக்கிக் கொண்டான்.

தனது முடிவு நெருங்கிவிட்டது என்பதை உணர்ந்து விட்ட அவன், "அய்யோ! இந்தக் கடிதத்தை பண்டாரக வன்னிய மன்னரிடம் சேர்க்க முடியாமல் போய்விட்டதே!" என வாய் விட்டு அலறிவிட்டான்.

சாவின் நுழைவு வாயிலுக்குள் போய்க் கொண்டிருக்கும் போதுகூட, தனக்குத் தரப்பட்ட பணியை முடிக்க முடியவில்லையே என்ற ஆதங்கம்தான் அந்த நன்றியுள்ள வீரனை ஆட்டிப் படைத்தது. துதிக்கையில் மாட்டிக் கொண்ட சுந்தரலிங்கம், சிலந்தியின் காலில் அகப்பட்டுக் கொண்ட சிறு பூச்சி

போல ஆனான்! இன்னும் ஒருமுறை அந்த யானை, தனது துதிக்கையைச் சுழற்றி மேலே தூக்கித் தரையில் அடித்து, தனது கால்களால் அவனை மிதித்தால் அவன் ஒரு வாழை மட்டை போல மண்ணோடு மண்ணாகத் தட்டையாகப் போய் விடுவான்!

பாஞ்சாலங்குறிச்சிப் படைத் தளபதிகளில் ஒருவனாகச் சிங்கம் போல் தலை தாழாமல் நிமிர்ந்து நிற்கும் அந்த தீராதி தீரன் சுந்தரலிங்கம் – ஒரு வெறி கொண்ட யானையினால் வீழ்த்தப்பட்டு உயிர் விடப்போகிறான் – அவனோ சாவதற்கு வருந்தவில்லை அவன் வசமிருக்கும் அந்த மடலை உரியவரி டம் சேர்க்க முடியவில்லையே என்றுதான் வருந்தினான்!

ஒரு பெரும் பிளிறல் சப்தம்! யானை சுந்தரலிங்கத்தை மிக உயரத்தில் தூக்கிவிட்டது. அவ்வளவு உயரத்திலிருந்து அவனைக் கீழே அடித்தால் சிதறுண்டு போவான்!

திடீரென யானையின் துதிக்கை மீது குருவிச்சி நாச்சியார் எறிந்த ஈட்டி தாக்கியது!

ஓங்கிய துதிக்கை, செயலற்றுக் கீழே சாய்ந்தது. அதற்குள் சுந்தரலிங்கம் அந்தத் துதிக்கையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு எழுந்து நின்றான்.

துதிக்கையிலிருந்து ரத்தம் குபுகுபுவென வழிய, அதிகச் சினம்கொண்டு பொங்கிய யானை –குதிரையிலிருந்த குருவிச்சி நாச்சி மீது தாக்குவதற்குத் திரும்பி ஓடியது. ஆவேசங்கொண்ட யானை, அவளை மோதிச் சாய்த்துவிடும் என்று கருதிய சுந்தர லிங்கம், கீழே வீழ்ந்து கிடந்த தனது வாளை எடுத்து அந்த யானையின் பிடரிப் பகுதியிலும், வயிற்றுப் பகுதியிலும் மாறி மாறிக் குத்தினான். ஏற்கனவே துதிக்கை அறுபட்டுத் துடித்த யானையினால் அதற்கு மேல் சமாளிக்க முடியவில்லை.

அந்த நேரம் கண்ணகி கோயிலின் பெரிய மணி அடிக்கும் ஓசை, குருவிச்சி நாச்சியின் காதில் விழுந்தது. விசாகத்திரு விழாவின் இறுதித் திருநாளில்தான் அந்தப் பெரிய மணி அடிக் கப்படும். அப்படி அடித்தால் மன்னர் ஆலயத்திற்கு வந்து விட்டார் என்று அர்த்தம். எனவே அந்தப் பெரிய மணி ஓசை

கேட்டதும் குருவிச்சி நாச்சி, குதிரையிலிருந்தவாறே திடுக்கிட்டாள். "அடடே! அவர் வந்துவிட்டார்!" என அவளது வாய் முணுமுணுத்தது! ஒருகணம்கூட அங்கு தாமதிக்க விரும்பாமல் குதிரையைக் கண்ணகி கோயிலுக்குச் செல்லும் வழியில் திருப்பிச் செலுத்தினாள். குதிரை அவளைத் தூக்கிக் கொண்டு பறந்தது.

"யார் இந்தப் பெண்மணி? நம்மை ஆபத்திலிருந்து காப்பாற்றினாள் – நாமும் அவளை ஆபத்திலிருந்து காப்பாற்றினோம்! ஆனால் ஒரு வார்த்தைகூட விசாரிக்காமல் போய்விட்டாளே!"

என்று சுந்தரலிங்கம் தனக்குத்தானே சொல்லிக் கொண்டு சுற்றும் முற்றும் பார்த்தான். அப்போது அவனை நோக்கி வேலும், வாளும், ஈட்டியும் தாங்கிய வீரர்கள் பத்து பேர் வந்தார்கள். "இவர்கள் யார் திடீரென்று?" எனச் சுந்தரலிங்கம் சிந்திப்பதற்குள்ளாக அந்த வீரர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டுவிட்டனர். அவர்களில் தலைமை வீரன் மற்றவர்களைப் பார்த்து "இவனைக் கைது செய்யுங்கள்!" என்று கட்டளையிட்டான்.


"என்னை ஏன் கைது செய்ய வேண்டும்?" என்று சுந்தரலிங்கம், எரிச்சலுடன் கேட்டான்.

"அரசுக்கு சொந்தமான காட்டு யானையைக் கொன்றிருக்கிறாய்! இது மிகப்பெரிய குற்றம்! அதனால்தான் உன்னைக் கைது செய்கிறோம்!"

"நான் சொல்வதைக் கேளுங்கள் !"

"பேச்சு தேவையில்லை! பேசாமல் எங்களுடன் வா!"

நாலு கால் மண்டபத்தில்!



அவசர அவசரமாகக் குதிரையிலிருந்து இறங்கிய குருவிச்சி நாச்சியார், கண்ணகி யம்மன் கோயில் மண்டபத்திற்குள் விரைந் தோடினாள். அங்கே கண்ணிமைகளை மெல்ல மூடியபடி மன்னன் பண்டாரக வன் னியன் எனும் குலசேகரம் வைரமுத்து கரங்கூப்பிக் கண்ணகி தெய்வத்தைத் தொழுது நிற்கும் காட்சியைக் கண்டு – சற்று ஒதுங்கி நின்று அவனையே கவனித்துக் கொண்டிருந்தாள் இமை கொட்டாமல்!

கோயில் மண்டபத்திற்குள் வந்து கண்ணகி அம்மனை வணங்குவோர் மன்னர்களாகவே இருந்தாலும் மேலங்கி எதுவும் அணியாமல், உத்தரீயத்தைக்கூட இடுப்பில் கட்டிக் கொண்டு மரியாதையாக நடந்துகொள்ள வேண்டுமென்ற மரபின்படி அவன் தோற்றமளித்தான். அந்த நிலையில் அவ னது விரிந்து பரந்த மார்பையும் – வைரம் பாய்ந்த புஜங்களை யும் தனது விழிகளால் விழுங்கிக் கொண்டிருந்த குருவிச்சி நாச்சி, இந்த வீரத் திருமகன், தனக்குக் காதலனாகக் கிடைத் திட வரம் அருளியவள் கண்ணகி தேவிதான் என்ற நன்றி யுணர்வு அருவியெனப் பெருக்கெடுத்திட அம்மன் சிலையை நோக்கி ஆனந்த கண்ணீர் பொங்கிடத் தாழ்த்தி வணங்கினாள்.

இளமையின் இன்பக் கூத்து – எழிலின் பூரிப்பு –அங்கமெல் லாம் ஆரவாரம் செய்திடும் அந்தக் காதலர் இருவரும், கோயில் மண்டபத்திற்குள் எவ்வளவு பவ்யமாகவும் பக்தி பூர்வமாகவும் பத்தினித் தெய்வத்தை வழிபடுகின்றனர் என்பதை விசாகத் திருவிழாவுக்குத் திரண்டிருந்த வன்னிமுல்லைப் பகுதி மக்கள் அனைவருமே வியப்புடன் கண்டு களித்து வாழ்த்தினர்.

சென்ற ஆண்டே இருவரின் திருமணமும் அந்தக் கோயில் மண்டபத்தில் கண்ணகியின் திருமுன் எளிய முறையில் நடை பெறப் போகிறது என எதிர்பார்த்து ஏமாற்றமடைந்திருந்த மக்கள், இந்த ஆண்டு ஒருவேளை அந்த இனிய நிகழ்ச்சி நடைபெறக் கூடுமென எண்ணிக் காத்திருந்தனர்.

அம்மனை வணங்கிய குருவிச்சி நாச்சி அடுத்து, குல சேகரம் வைரமுத்துவின் கால்களில் விழுந்து வணங்கினாள். மன்னன், அவளை இரு தோள்களையும் மெல்லப் பற்றி எழுந்திடச் செய்து தனது கையிலிருந்த மலர்க்கொத்தை அவளது கூந்தலில் சூட்டினான். தனக்கு முன்னே நீட்டப்பட்ட தட்டிலிருந்த குங்குமத்தை எடுத்து – குருவிச்சி நாச்சியார் அவன் நெற்றியில் திலகமிட்டாள். பிறகு இருவரும் அம்மனைத் தெண்டனிட்டுத் தொழுது எழுந்தனர்.

மண்டபத்தை விட்டு வெளியே வரும் வரையில் இருவரும் பேசிக் கொள்ளவில்லை. அவர்களை மீறி அவர்களின் நெஞ்சங்கள்தான் இணையாக இசைப்பாடிக்கொண்டிருந்தன. கம்பீரமாகச் சிங்கம் போல் நடந்து வரும் இளம் மன்னனை யும், கவர்ச்சி முழுவதும் கொட்டி செதுக்கப்பட்ட சிலை போல அவனருகே நடந்து வரும் அந்த மயிலனையாளையும் – வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த ஒரு வயோதிகத் தாய், தன்னருகே இருந்த ஒரு நடுத்தர வயது படைத்த பெண்மணியிடம், "என் கண்ணே பட்டுவிடும் போலிருக்கிறது!" எனச் சொல்லிக் கொண்டே, தன் கையிலிருந்த ஒரு எலுமிச்சம் பழத்தைத் தனது பலம் முழுதும் பயன்படுத்தி, இரண்டாக உடைத்து – தொலைவிலிருந்தவாறே திருஷ்டி கழித்துப்போட்டாள்.

"இன்றைக்கும் திருமணம் நடக்கவில்லையே!" என ஒருவன், கேட்டான்! "திருமணம் நடக்காவிட்டால் என்ன? திருமணம் நடக் காமலேயே அவர்கள் கணவன் மனைவிதானே!" என்று இன் னொருவன் சிரித்துக்கொண்டே சொன்னான். "ஏய், மெதுவாகப் பேசுங்கள்! யார் காதிலாவது விழப்போகிறது!" என எச்சரித் தான் மற்றொருவன்.

"போன வருஷம் காதல் – இந்த வருஷம் தனது காதல் உறுதிப்பட்டதற்காக கண்ணகியம்மனுக்கு விசாகத் திருவிழா– அடுத்த வருஷம் பாருங்களேன், நிச்சயமாகத் திருமண விழா நடக்கும்" என்று ஆரூடக்காரன் போல ஒருவன் சொன்னான்.

அவர்களையோ அவர்களது பேச்சுக்களையோ கவனிக்க இயலாத சிந்தனையுடன் இருவரும் தங்களின் குதிரைகளிடம் வந்தனர். அவர்களது குதிரைகளுக்கு இருமருங்கிலும் நீண்ட ஈட்டிகளை ஏந்திய இருபதுக்கு மேற்பட்ட வீரர்கள் திடகாத்திரர் களாகக் குதிரைகளில் அமர்ந்து காத்திருந்தனர்.

தங்கள் தங்கள் குதிரைகளில் வைரமுத்துவும் குருவிச்சி நாச்சியும் ஏறிக்கொண்டனர். வைரமுத்து அவளைப் பார்த் தான். அவளும் அவனைத் தனது விழிவேலால் தாக்கினாள். உதவியாளர்கள் ஓடோடி வந்து, அவனது மேலங்கியை அவனுக்கு அணிவித்ததோடு உடைவாளையும் மரியாதை யுடன் அளித்தனர். அதுவரையில் இடுப்பில் கட்டியிருந்த உத்தரீயத்தை அவிழ்த்துத் தோளில் போட்டுக் கொண்டான். மீண்டும் அவளை நோக்கினான். ஏதோ சொல்லப் போகிறான் என்று குருவிச்சி நாச்சி எதிர்பார்த்தாள் ஆவல் அலை மோதிட!

"குருவீ! யானையைத் துரத்திக் கொண்டு போனாயாமே ?"

"குருவி" என அவன் கூப்பிட்டதுமே , அவள் உடல் முழுதும் மூடுபனியின் குளிர் இறங்கியது போல் இருந்தது! குழந்தை போல "களுக்" எனச் சிரித்து விட்டாள்!

அடுத்த கணமே அவளுக்கு சிறிது நேரத்துக்கு முன் நடந்த நிகழ்ச்சியின் நினைவு – இரும்புத் துண்டைக் காந்தம் இழுப் பது போல் வெடுக்கென இதயத்தைப் பற்றிக் கொண்டது.

"தங்களைக் காணும் துடிப்பில் ஒரு பெரிய தவறு செய்து விட்டேன்!" என்றாள்.

"என்ன தவறு?" வளைந்து நிமிர்ந்திருந்த மீசையை விரலால் நீவி விட்டுக்கொண்டே குறுஞ்சிரிப்பு தவழ்ந்திடக் கேட்டான் அவன்.

"யானை, மதம் கொண்டு கிளம்பியதால் துரத்திச் சென்றேன், மக்களுக்கு ஆபத்து நேராமல் தடுப்பதற்கு! அப்போது யாரென்று தெரியவில்லை – ஒருவர், அந்த யானையிடம் சிக்கிக் கொண்டார். அவரைக் காப்பாற்றினேன். ஆனால் அந்த யானை என்னைக் கொல்ல என் மீது பாய்ந்தது– அதற்குள் அந்த வீரர், தனது வாள்கொண்டு யானையைத் தாக்கினார். முடிவு தெரிவதற் குள் ஆலய மணி ஒலித்துவிட்டது. வந்திருப்பீர்கள் காத் திருப்பீர்கள் என்ற தவிப்புடன் இங்கு ஓடோடி வந்துவிட்டேன்! அவர் என்ன ஆனாரோ தெரியவில்லை!"

இதனை அவள் சொன்னதும் "பரவாயில்லை! இப்போது அந்த இடத்துக்கே செல்லலாம்! குருவி, வழி காட்டட்டும்!" என் றான் சற்று பரபரப்புடன் –அதே சமயம் குறும்புத்தனமாக!

குருவிச்சி நாச்சி, தனது குதிரையை அந்தத் திக்கு நோக்கித் திருப்பித் தட்டிவிட்டாள். அவளைப் பின் தொடர்ந்தான் அவன். பாதுகாப்பாக வந்த வீரர்களின் குதிரைகளும் இருமருங்கிலும் அணிவகுத்தன.

கைது செய்யப்பட்ட சுந்தரலிங்கத்துடன் பத்து வீரர்கள் அவர்களின் எதிரே வந்து கொண்டிருந்தனர். அவர்களின் நடுவே சுந்தரலிங்கம் பீடு நடை போட்டுக் கொண்டு அச்சத்தின் நிழல்கூட முகத்திலே தென்படாத அளவுக்கு ஒரு வேங்கை யைப்போல் வந்து கொண்டிருந்தான்.

"அதோ! அவர்தான்! அவரைத்தான் நமது வீரர்கள் அழைத் துக் கொண்டு வருகிறார்கள்!" என்றாள் குருவிச்சி நாச்சி.

"அழைத்து வருவது போல் தெரியவில்லையே! கைது செய்து கொண்டு வருவது போலன்றோ தெரிகிறது!" என்று கூறிய மன் னன் பாதையோரத்திலிருந்த நாலு கால் மண்டபத்தின் பக்கம் குதிரையைத் தட்டிவிட்டு அங்கு சென்று நிழலில் நின்றான். அவளும் அவனைப் பின் தொடர்ந்து மண்டப நிழலில் குதிரை யுடன் போய் நின்றாள். பாதுகாப்புக்கு வந்த வீரர்களில் இரு வரைப் பார்த்து, "நீங்கள் உடனே சென்று அவர்களை இங்கு அழைத்து வாருங்கள்" என மன்னன் கட்டளையிட்டான். சுந்தர லிங்கத்தை அழைத்து வரும் வீரர்களும், தங்களின் மன்னவன் மண்டபத்திலிருப்பது கண்டு அங்கு விரைந்து வந்தனர்.

"அவரை ஏன் கைது செய்து அழைத்து வருகிறார்களாம்– அதை முதலில் கேளுங்கள்!" என்று குருவிச்சி நாச்சியார், வைரமுத்துவின் காதோரமாகக் கூறினாள். மன்னன் இருக்கும்போது, அந்தக் கேள்வியை அவளே கேட்பது முறையல்ல என அவள் கருதியிருக்கக்கூடும். அவள், சுந்தரலிங்கம் எந்த ஆபத்துமின்றி வருவது கண்டு மனத்துக்குள் ஆறுதலடைந்தாள்.

சுந்தரலிங்கமும் அவனை அழைத்து வரும் வீரர்களும் அருகே வந்தவுடன் – மன்னன் குதிரையிலிருந்து கீழே குதித்து எதிரே சென்று, சுந்தரலிங்கத்தை ஆரத் தழுவிக்கொண்டு "நீங்களா? அடடே! இப்படி நடந்துவிட்டதற்கு மன்னிக்க வேண்டும்!" என்று அன்பும் பாசமும் நிரம்பிய தழுதழுத்த குரலில் கூறினான். சுந்தரலிங்கமோ, மன்னனின் தழுவலில் இருந்து மெதுவாகத் தன்னை விடுவித்துக்கொண்டே, "பரவாயில்லை!" என சமாளித்தான். அவனைக் கைது செய்து வந்த வீரர்களைப் பார்த்து விழிகளை உருட்டி, "இவரை ஏன் கைது செய்தீர்கள்?" என்று சினந்தான் வைரமுத்து!

"அரசே! நமது காட்டு யானைகளை யாரும் வேட்டையாடக் கூடாது அரசின் அனுமதியின்றி! ஆனால் இவரோ ஒரு யானையை தனது வாளாலேயே குத்திச் சித்திரவதை செய்து கொன்றுவிட்டார்". தலைமை வீரனொருவன் இந்தப் பதிலை சொல்லி முடிப்பதற்குள் குருவிச்சி நாச்சி, மன்னன் காதில் விழும்படியாக மட்டும், "இல்லாவிட்டால் அவரையும் என்னையும் அந்த வெறிகொண்ட யானை மிதித்துக் கொன்றிருக்கும்" என்றாள்.

வைரமுத்து, தன்னைச் சூழ்ந்து நின்ற வீரர்கள் அனைவர் மீதும் விழிகளைச் சுழலவிட்டான். நிலவின் குளிர்ச்சியும், சூரியனின் நெருப்பும் இணைந்து உறவாடும் அவனது அதிசயமான பார்வைக்கு ஆத்திச்சூடிக்கு உரை காணுவது போல எளிதாக அர்த்தம் புரிந்து கொள்ளக்கூடிய அவனது வீரர்கள் ஒதுங்கிச் சென்று தொலைவில் நின்று கொண்டனர்.

"தவறு நடந்துவிட்டதற்கு மீண்டும் மன்னிக்க வேண்டுகிறேன்" என்று பேச்சைத் தொடங்கினான் பண்டாரக வன்னியன்.

ஏற்கனவே தொடர்புடைய தோழர்கள் இருவரும் என்பதை உணர்ந்துகொள்ள குருவிச்சி நாச்சிக்கு அதிகநேரம் தேவைப்படவில்லை. அதைப்போலவே மன்னனுக்கு அருகிருக்கும் அந்த வீராங்கனைதான் குருவிச்சி நாச்சியாக இருக்க வேண்டுமென அவன் யூகித்து அதனை உறுதி செய்து கொள்ளத் தனது பேச்சுத் திறமையைப் பயன்படுத்திக் கொண்டான். மீண்டும் மன்னிப்புக் கேட்டுக்கொண்ட அரசனைப் பார்த்து – "நமக்குள் இதெல்லாம் எதற்காக? தங்களின் வீரர்கள் என்னை அறிந்து கொள்ளவில்லை, அவ்வளவுதான்!" என்று பதில் அளித்துவிட்டு, குருவிச்சி நாச்சியாரைப் பார்த்து, "வழியில் தங்களின் பாட்டனார் சங்கிலித் தளபதியாரைப் பார்த்து சந்தித்தேன்" என்றான். அதைக் கேட்டவுடன் அவளுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. கொடியிலிருந்து ஒரு பூ உதிர்வது போல புன்னகையொன்று உதிர – அவள் அவனைப் பார்த்து, "ஓ! அப்படியா?" என்று இதழசைத்தாள்!

"குருவிச்சி! இவர் யார் என்று உனக்கு அறிமுகப்படுத்த வில்லையே!" என்றுரைத்த மன்னனை மடக்கி, குறும்புச் சிரிப்புடன், "அதை முதலிலேயே செய்திருக்க வேண்டும்." என்றாள் அவள்!

"இவர் பெயர் சுந்தரலிங்கம்."

"நீங்கள் குதிரையிலிருந்து குதித்து அவரைத் தழுவிக் கொண்டபோதே அதைச் சொல்லிவிட்டீர்களே!"

"மற்ற விபரம் சொல்கிறேன் கேள்! பாஞ்சாலங்குறிச்சி மன்னர் கட்டபொம்மன் படைத்தளபதி வெள்ளையத்தேவன் என் ஆருயிர் நண்பர் என்பதுதான் உனக்குத் தெரியுமே! அந்த நண்பருக்கு நண்பர் இந்தச் சுந்தரலிங்கம்! இவரும் ஒரு படைப் பிரிவின் தளகர்த்தர்தான்! தேவர் குலத்தில் உதித்த வெள்ளையத்தேவனும் தேவேந்திர குலத்தில் உதித்த இந்தச் சுந்தரலிங்க குடும்பனும் கூடப்பிறக்காத குறையொன்றே தவிர இருவரும் இணை பிரியாத சகோதரர்கள்! நம்மைப் போலவே நாடு காக்கும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறவர்கள்..."

என்று மன்னன் விபரம் கூறிக்கொண்டிருக்கும்போதே குரு விச்சியின் முகத்தில் ஒரு புத்தொளி பரவியது. சுந்தரலிங்கத்தை அன்பொழுக நோக்கிக் கரங்கூப்பி வணங்கினாள். அவனும் பதிலுக்கு வணக்கம் தெரிவித்தான்.

"பயணத்தின் நடுவே புயலில் பெருங் கஷ்டம் ஏற்பட்டிருக்குமோ?" என வைரமுத்து, கவலையுடன் விசாரித்தான்.

"அந்நிய ஆதிக்கப் புயலையே எதிர்த்துக் கொண்டிருக்கும் நமக்கு, இந்தப் புயலெல்லாம் சாதாரணம்தானே!" என்றான் சுந்தரலிங்கம்.

"பாண்டிய மண்ணின் உரிமைக்காக வீரப்போரிட்ட வெட்டும் பெருமாளின் பரம்பரையில் வந்தவர் இந்த சுந்தரலிங்கக் குடும்பன் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்! பார்த்தாயா குருவிச்சி! அது உண்மையென்று நிரூபிப்பது போல இவர் பேச்சு இருக்கிறது!" என்றான் பெருமை பொங்கிட பண்டாரக வன்னியன்!

"அவசரமாக வந்த வேலையை மறந்துவிட்டேனே! நான் உடனே தமிழகம் திரும்ப வேண்டியிருக்கிறது!"

"முதலில் அரண்மனைக்குப் போவோம். அங்கு ஒரு நாளாவது என் விருந்தினராகத் தாங்கள் தங்க வேண்டும்."

"தளபதி வெள்ளை யத் தேவன் சில முக்கிய விஷயங்கள் குறித்துத் தங்களிடம் என்னைக் கலந்து பேசச் சொல்லியிருக்கிறார். அவரும் சில குறிப்புக்களை இந்த மடலில் விளக்கி எழுதியிருக்கிறார்."

"வெள்ளையத் தேவன் என் நண்பர்! அதைப்போலவே தாங்களும் எனக்கு நண்பர்! எனவே அவரது கடிதத்தைப் படிப்பதும், அது குறித்துத் தங்களிடம் விவாதிப்பதும் இப்படி நடுவழியில் என்றால் அது மரியாதையாக இருக்காதல்லவா?"

"போரின் நெருக்கடி, தமிழகத்திலும் சரி – இங்கும் சரி – மிகக் கடுமையாக இருக்கும்போது அந்த மரியாதைகள் எல்லாம் தேவையில்லை என்பது என் கருத்து! அதனால் இந்த மண்டபத்தில் அமர்ந்தே பேசுவோம் – ஏனெனில், நான் இன்றைக்கே திரும்பிச் சென்றிட வேண்டும்.

"மிகவும் பிடிவாதமாக இருக்கிறீர்கள்! உங்கள் விருப்பம் போலவே இங்கு அமர்ந்தே பேசலாம்!"


என்று ஒப்புக்கொண்ட பண்டாரக வன்னியன், குருவிச்சி நாச்சியிடம், "நீ, சில வீரர்களுடன் சென்று முள்ளியவளைப் பாதையில் எச்சரிக்கையாக இரு! ஆங்கிலேயரின் ரகசியப் படையொன்று நமது பகுதிகளில் ஒற்று வேலைக்காகத் திரிந்து கொண்டிருப்பதாக கேள்விப்பட்டேன். அதனால் இங்கிருந்து சற்று தொலைவில் உள்ள முள்ளியவளைப் பாதையில் நீயும் சில வீரர்களும் விழிப்புடன் இருப்பது நல்லது!" என்றான்.

அவளும், உடனே அங்கிருந்து கிளம்பி, தொலைவில் அணி வகுத்து நின்ற வீரர்களில் சிலரை மட்டும் அழைத்துக் கொண்டு முள்ளியவளைப் பாதை நோக்கி விரைந்தாள்.

"நண்பர் வெள்ளையத் தேவன் கொடுத்த கடிதத்தைத் தருகிறீர்களா?" என்று கரம் நீட்டினான் பண்டாரக வன்னியன்.

"இதோ!" என்று இடையில் சொருகியிருந்த கடிதத்தை எடுக்க முனைந்த சுந்தரலிங்கம் திடுக்கிட்டுப்போனான். காரணம், கடிதம் இல்லை!

கண்டியின் வாரிசுப் போட்டி!



யானையுடன் போர் நிகழ்த்திய அந்த இடத்தில்தான் கடிதம் கைதவறியிருக்க வேண்டுமென்ற முடிவுக்கு இருவருமே வந்தார்கள்.

"கடிதத்தில் எழுதப்பட்டுள்ள எல்லா விபரங்களும் எனக்குத் தெரிந்தவைதான். அங்கே நடந்துள்ள நிகழ்ச்சிகளும், இங்கே தாங்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளும்தான் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. கடிதமே தேவையில்லை. நீயே நேரில் செல்வதால் அனைத்தையும் மன்னரிடம் விளக்கி வருக என்றுதான் கட்டபொம்மன், வெள்ளையத் தேவன் இருவருமே என்னிடம் கூறினார்கள். நான்தான் எதற்கும் ஒரு முன்ஜாக்கிரதைக்கு இருக்கட்டும் கடிதமே எழுதித் தருக என்று வெள்ளையத் தேவனிடம் வலியுறுத்தினேன். காரணம், வழியில் அந்நியப் பகைவரால் ஏதேனும் எனக்கே கூட ஆபத்து நேரிடலாம் - அப்போது என்னால் இங்கு வரமுடியாத நிலையில் அந்த மடலை, வேறு யார் வாயிலாகவாவது கொடுத்து அனுப்பிவிடலாம் அல்லவா?" என்றான் சுந்தரலிங்கம்!

"அந்தக் கடிதம் எங்கும் போய்விடாது! தங்களை எனது வீரர்கள் சந்தித்த அதே இடத்தில் சற்று சிரமப்பட்டுத் தேடினால் கிடைத்துவிடும். நான் இப்பொழுதே அந்த இடத்துக்குச் சில வீரர்களை அனுப்புகிறேன்" எனக் கூறிய பண்டாரக வன்னியன் தனது கையை உயர்த்திக் காட்டி சைகை செய்தவுடன் இரண்டு மூன்று வீரர்கள், அவனை நோக்கி ஓடிவந்து பணிந்து நின்றார்கள்.

"யானையை இவர் வெட்டி வீழ்த்திய இடத்திற்கு விரைந்து செல்லுங்கள்! அங்கே நமது முகவரியிட்டும் பாஞ்சாலங்குறிச்சி

முத்திரை பதித்ததுமான மடல் ஒன்று கிடக்கும். போய்ப் பார்த்த வுடன் ஒருவேளை எளிதில் கிடைக்காமல் இருக்கலாம். புதர் களிலோ, குழிகளிலோ, மரப் பொந்துகளிலோ எங்கேனும் வீழ்ந்து மறைந்து கிடக்கவும் கூடும். களைப்பைப் பார்க்காமல் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வாருங்கள்!" என அவர்களுக்கு மன்னன் ஆணையிட்டான்.

பிறகு சுந்தரலிங்கத்தைப் பார்த்து - "நண்பரே! இந்த வீரர்கள் வரும் வரையில் கடிதத்தில் உள்ள முக்கிய விஷயம் குறித்து தாங்கள் என்னிடம் தெரிவித்தால் அதுபற்றிக் கலந்து பேச இயலுமே!" என்றும் கேட்டுக் கொண்டான்.

"முதலில் அங்குள்ள நிலவரங்களையும் அண்மையில் நடை பெற்ற நிகழ்ச்சியையும் கூறி விடுகிறேன்" என்று தொடங்கினான் சுந்தரலிங்கம்!

இலங்கை மண்ணில் அந்நியரை எதிர்த்து நடைபெறுவது போன்ற ஒரு மானப் போர் - தமிழ் மண்ணிலும் நடைபெறுகிறது என்பதிலே பெருமை கொண்டிருந்த குலசேகரம் வைரமுத்து, சுந்தரலிங்கம் சொல்லப்போகும் செய்திக்காகத் தனது செவியைத் தீட்டிக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தான்.

"இதுவரையில் இருந்த ஆங்கிலேயத் தளகர்த்தர்களால் பாஞ்சாலங்குறிச்சியைப் பணிய வைக்கமுடியவில்லை என்ப தால் முரட்டுக் குணமும் முட்டாள்தனமும் சம எடையில் கலந்துள்ள ஜாக்சன் என்பவனை ஆங்கிலேயர் அங்கே கலெக் டராக அனுப்பி வைத்துள்ளனர். முரடனாகவும், முட்டாளாக வும் இருந்தாலும் கூட அவன் போர்ப் பயிற்சியில் மிகுந்த அனுபவம் வாய்ந்தவன்."

இதைச் சுந்தரலிங்கம் சொன்னபோது, வைரமுத்து தலை யசைத்துக்கொண்டு "ஆமாம்! நான்கூட கேள்விப்பட்டேன்! இருதயமே இல்லாத பேர்வழி என்று!" என்று பல்லை நறநற வெனக் கடித்தான்.

"ஆங்கிலேய தளகர்த்தர்கள் சூளுரைத்திருக்கிறார்கள் - இது 1798ஆம் ஆண்டு - அடுத்த 1799 முடிவதற்குள்ளாகப் பாஞ்சாலங் குறிச்சியை வென்று காட்டுகிறோம் என்று!" எனக் கோபக் குரலில் மொழிந்த சுந்தரலிங்கம் தொடர்ந்து பேசலுற்றான்.

"ஜாக்சன், கலெக்டர் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன், எவர் பொறுப்புக்கு வந்தாலும் அவர்களுக்குக் கட்டியங் கூறுகிற எட்டையபுரத்து பாளையக்காரர் மற்றும் சில பாளையக் காரர்கள் ஜாக்சனைப் போய்ச் சந்தித்து அவனுக்கு எடுபிடி களாக இருப்போம் என வாக்குறுதி வழங்கிவிட்டனர். அந்தக் கோழைத்தனமும் குள்ளநரிக் குணமும் எமக்கும் எமது பாஞ் சாலங்குறிச்சிக் காவலர்களுக்கும் இல்லாத காரணத்தால் ஜாக்சனைப் பற்றிக் கவலை கொள்ளாமலே இருந்தோம். அவன் சந்நிதானத்துக்கு நாங்கள் செல்லவில்லையே என்று புழுங்கியிருக்கிறான் பாவம்! பொறுத்துப் பொறுத்துப் பார்த்து விட்டு இறுதியாக ஒரு கடிதம் அனுப்பினான், கட்டபொம்மன் உடனே தன்னை வந்து பார்க்க வேண்டுமென்று! ஆனால் கட்டபொம்மன் அந்தக் கடிதத்தை மதிக்கவில்லை. பிறகு ஜாக்சன் தொடர்ந்து பல கடிதங்கள் எழுதவே - என்னதான் சொல்லுகிறான் என்பதைத் தெரிந்து கொள்ளலாம் என் பதற்காக, அவனைச் சந்திக்கப் போவது என முடிவாயிற்று! நாலாயிரம் வீரர்கள் புடை சூழக் கட்டபொம்மனும் நாங்களும் ஜாக்சனைச் சந்திக்கத் திருநெல்வேலிக்குக் கிளம்பினோம். இத்தனை வீரர்கள் வருகிறார்களே - இவர்களை அலைக்கழிப் போம் என்று திட்டமிட்ட ஜாக்சன், திருநெல்வேலியிலிருந்து குற் றாலம் புறப்பட்டுப் போய்விட்டான். நாங்களும் விடவில்லை. அங்கேயும் எமது படைகளுடன் சென்றோம். அவசர வேலை யாக சொக்கம்பட்டிக்குப் போவதாகச் சொல்லிவிட்டு ஜாக்சன் குற்றாலத்தைக் காலி செய்து கிளம்பிவிட்டான். படைகளுடன் வருவதால் பயப்படுகிறான் போலும் பரங்கித் துரை, அதனால் அனைவரும் பாஞ்சாலங்குறிச்சி திரும் புங்கள் - நான் மட்டும் தனியாகச் சென்று, ஜாக்சனை சந்திக்கிறேன் என்று கட்டபொம்மன் கூறிய யோசனையை யாரும் ஏற்கவில்லை. படைகள் சூழ சொக்கம்பட்டிக்குச் சென்றோம். ஆனால் ஜாக்சன், சடுகுடு விளையாடத் தொடங்கிவிட்டான். சொக்கம்பட்டியிலிருந்து சிவகிரி, திருவில்லிப்புத்தூர், பேரையூர், பாவாலிபள்ளிமடை, கமுதியென இடங்களை மாற்றிக்கொண்டே சென்று கடைசியாக இராமநாதபுரத்தை அடைந்தான் ஜாக்சன்!

திரும்பி விடலாமெனப் பலர் அறிவித்தபோதும்கூட ஜாக்சனின் சூழ்ச்சிதான் என்ன என்பதைத் தெரிந்து கொண்டேயாக வேண்டுமெனக் கட்டபொம்மன் பிடிவாதமாக அவனைப் பின்தொடர விரும்பினார்.

இராமநாதபுரத்தில் இராமலிங்க விலாசம் என்னும் சிறிய மாளிகையில் ஜாக்சன் தங்கியிருக்கிறான் என்றும் - மாளிகையின் உள்ளும் புறமும் ஆயிரக்கணக்கான வீரர்களைப் பாதுகாப்பாக நிறத்தியிருக்கிறான் என்றும் எங்களுக்குச் செய்தி கிடைத்தது.

இராமலிங்க விலாச மாளிகையில் எங்களை சிக்க வைத்து விட வேண்டுமென்று சதிவலை பின்னிய ஜாக்சன், தன்னை அங்கு வந்து சந்திக்குமாறு கட்டபொம்மனுக்கு அழைப்பு விடுத்தான். அந்த அழைப்புக் கடிதத்தில் முக்கியமான நிபந்தனை என்ன தெரியுமா? கட்டபொம்மன், தனது படையினர் புடை சூழ வரக்கூடாது, கட்டபொம்மன் மட்டுமே தனக்கென ஒரு சில பாதுகாப்பு வீரர்களுடன் வரவேண்டும் என்பதாகும். அந்த நிபந்தனையைக் கேள்வியுற்று நாங்கள் யாரும் நெற்றியைச் சுளிக்கவில்லை. பிறந்த மண்ணின் சுதந்திரத்திற்காக எங்கள் பிணங்களை எருக்களாகத் தருவதற்கு சபதம் எடுத்துக் கொண்ட எங்களின் தோள்களுக்கு ஈடு கொடுக்க ஆங்கிலேயக் கூலிப் படையினரால் ஆகாது என்பது எங்கள் திடமான நம்பிக்கை. எனவே ஜாக்சனின் நிபந்தனை ஏற்கப்பட்டது. கட்டபொம்மன், தானாபதிப் பிள்ளை, ஊமைத்துரை, வெள்ளையத்தேவன், நான் உட்பட நாற்பது பேர் மட்டுமே இராமலிங்க விலாசத்துக்குப் புறப்பட்டோம். நாங்கள் சென்ற காட்சியை இராமலிங்க விலாசத்தின் மேல்தளத்திலிருந்து கண்ட ஜாக்சன், அங்கிருந்தே ஆட்களை அனுப்பி கட்டபொம்மன் மட்டுமே அவனிருக்கும் மேல் மாடிக்கு வரலாம் என்று கூறச் செய்தான். கட்டபொம்மன், அதற்கும் சரியென்று கூறி மேல் மாடிக்குச் சென்றபோது - ஊமைத்துரை, தானாபதிப் பிள்ளை ஆகிய இருவர் மட்டும், தங்களைத் தடுத்த காவலர்களை உதறித் தள்ளிவிட்டு கட்டபொம்மனுடன் சென்றுவிட்டனர். வந்தவர்களை

மரியாதை கொடுத்து வரவேற்கத் தெரியாத ஜாக்சன், தனது சூழ்ச்சி வெற்றி பெறப் போகிறது என்ற ஆணவத்தின் காரணமாக - அடுக்கடுக்காக குற்றச்சாட்டுகளைக் கூறி, இதற்கு உமது பதில் என்ன? என்று கேட்டிருக்கிறான்."

இப்போது சுந்தரலிங்கம் பேச்சில் பண்டாரக வன்னியன் குறுக்கிட்டு, "அப்படியென்ன குற்றச்சாட்டுகள்?" என மீசை படபடக்கக் கேட்டான்.

சுந்தரலிங்கம் தொடர்ந்தான்.

"கிழக்கிந்திய கம்பெனிக்கு வரி கொடுக்காதது ஒரு குற்றம்! ஆங்கிலேயரின் தாசரான எட்டையபுரத்தாருடன் இணங்கி நடக்காதது ஒரு குற்றம்! வெள்ளையரிடம் அனுமதி பெறாமல் வரி வாங்குவது ஒரு குற்றம்! கிழக்கிந்திய கம்பெனிக்குரிய சில பகுதிகளை பாஞ்சாலங்குறிச்சி ஆக்ரமித்துக் கொண்டது ஒரு குற்றம்! ஆங்கிலேய துரைமார்களை வந்து சந்தித்து அபயம் கோராமல் இருப்பது ஒரு குற்றம்! கம்பெனிக்கு விரோதமாக மற்ற பாளையக்காரர்களையும் கூட்டு சேர்ப்பது ஒரு குற்றம்!"

மீண்டும் பண்டாரக வன்னியன் இடை மறித்து, "அதாவது என் மீது என்னென்ன குற்றங்கள் இங்கு சாட்டப்படுகிறதோ, அதே குற்றங்கள்! பரவாயில்லை - மேலே சொல்லுங்கள்!" என்றான்.

"ஜாக்சனின் குற்றசாட்டுகளைச் செவிமடுத்த கட்டபொம்மன் பொறுமையாக இருக்க முடியுமா? ஒண்ட வந்த பிடாரிகள் ஊர்ப் பிடாரிகளைத் துரத்துகிற கதையைத் தனது கண் முன்னே கண்ட கட்டபொம்மன், எரிமலையாய் - சுடுதழலாய் - சூறைக் காற்றாய் மாறிவிட்டார்! ஆனால் ஜாக்சன் தனது சூழ்ச்சித் திட்டம் நிறைவேற உடனே மணியடித்துவிட்டான். முன்னரே ஏற்பாடு செய்தபடி மறைந்திருந்த ஆங்கிலேய வீரர்கள் கட்டபொம்மன் மீது பாய்ந்திருக்கின்றனர். அது கண்டு அஞ்சாத வீரபாண்டியக் கட்டபொம்மன், தனது வாளை வீசி அந்த வீரர்களை எதிர்த்திருக்கிறார். ஜாக்சன் படையின் துணைத் தளபதி லெப்டினென்ட் கிளார்க் என்பவன், கட்டபொம்மன் வாள் வீச்சில் கண்டதுண்டமாகி விட்டான்.

இராமலிங்க விலாசத்துக்குள் அமளி துமளி நடப்பதை அறிந்ததும் வெளியில் நின்ற பாஞ்சாலங்குறிச்சிப் படையை உள்ளே வருமாறு பணித்துவிட்டோம். எமது படையின் மீது ஆங்கிலேயப் படையின் துப்பாக்கிக் குண்டுகள் மழையாகப் பொழிந்துகொண்டிருந்தன. அவற்றைவாளும், வேலும், கம்பும் கொண்டு எதிர்த்து வெளியேறினோம். அந்தப் போரில் வெள்ளையத் தேவன் காட்டிய திறமையையும் துணிவையும் கண்டு கட்டபொம்மன் அவருக்கு "பகதூர்" என்ற பட்டத்தையே கொடுத்தபோது, என் நண்பருக்குக் கிடைத்த புகழ் கண்டு பூரித்துப் போனேன். வெள்ளையத் தேவன், தனக்கேற்பட்ட மகிழ்ச்சியில் என்னை வாரி அணைத்துத் தூக்கிக் கொண்டார். ஆனால் ஒன்று! அந்தத் திடீர்த்தாக்குதலில் எங்களுடன் இருந்த தானாபதிப் பிள்ளை மட்டும் அவர்களிடம் சிக்கிக்கொண்டார். பிறகு அவரை விடுதலை செய்து அனுப்பிவிட்டார்கள்."

சுந்தரலிங்கம் இதனைச் சொல்லி முடித்தபோது பண்டாரக வன்னியனின் முகத்தில் ஒளி பரவியது! தமிழ் மண்ணில் அந் நியர்களின் ஆதிக்கத்தை எவ்வளவு தியாக உணர்வுடனும்- வீர தீரத்துடனும் – நம்மவர் எதிர்த்து நிற்கிறார்கள் என எண்ணிப் பெருமிதம் கொண்டான்.

"அரசே! இதுவரை நான் சொன்னவை அங்கு நடந்துள்ள நிகழ்ச்சிகள்! இப்போது சொல்லப்போவது, தங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் வீரபாண்டிய கட்டபொம்மன் சார்பாக பகதூர் வெள்ளையத் தேவன் விடுத்துள்ள வேண்டு கோளாகும்."

"என் நண்பர்கள் விடுத்ததை வேண்டுகோளாக அல்ல- அன்புக் கட்டளையாகவே எண்ணக்கூடியவன் நான்! சொல் லுங்கள்!"

"இலங்கையில் கண்டி மன்னர் இராஜாதி இராஜ சிங்கா சில நாட்களுக்கு முன் திடீரென்று இறந்துவிட்ட செய்தி எமக்குக் கிடைத்துள்ளது. அவரது மரணத்தால் கண்டியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து சில தகவல்கள் எங்களுக்கு வந்துள்ளன!"

"என்ன தகவல்கள்? விபரமாகச் சொல்லுங்கள்!"

"இராஜாதி இராஜ சிங்காவுக்குக் குழந்தைகள் யாருமில்லை என்பதால், இப்போது பட்டத்துக்கு வருவது யார் என்பதில் பெரிய குழப்பம் ஏற்பட்டிருக்கிறதாம்!"

"சபாஷ்! பரவாயில்லையே! இலங்கையின் செய்திகள் அனைத்தையும் நன்கு தெரிந்து வைத்திருக்கிறீர்களே!"

"நாம் இருவரும் சந்திக்க வேண்டியிருப்பது ஒரே எதிரியை அல்லவா? அதனால்தான் அவ்வளவு அக்கறையுடன் அந்தச் செய்திகளை அறிந்து வைத்திருக்கிறோம்."

"சரி – மேலும் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?"

"இறந்து போன மன்னரின் ஒரு மனைவிக்கு கண்ணுசாமி என்ற ஒரு தம்பியும், மற்றொரு மனைவிக்கு முத்துசாமி என்ற ஒரு தம்பியும் இருக்கிறார்கள் அல்லவா?"

"ஆமாம் – இருக்கிறார்கள்."

"இந்த இருவரில் யார் பட்டத்துக்கு வந்தால் – ஆங்கிலேயரை எதிர்ப்பதற்கு நமக்கு உதவியாக இருப்பார் என்று சிந்தித்துத் தாங்கள் அதற்கு வழிவகை செய்ய வேண்டுமெனக் கட்டபொம்மன் அந்தக் கடிதத்தின் வாயிலாக – தங்கள் நண்பர் வெள்ளையத் தேவன், அவர் நண்பர் இந்த சுந்தரலிங்கம் வாயிலாக – தங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறார்!"

"இருவரில் யார் வெள்ளையருக்கு வெண்சாமரம் வீசக் கூடியவர் என்பது தங்கள் கணிப்பு?"

"கண்ணுசாமி, கண்டியின் மன்னராகப் பொறுப்பேற்றால் நலமென்றும் – முத்துசாமி என்பவர், வெள்ளையருக்கு அடி பணிந்து போகக் கூடியவரென்றும் கேள்விப்பட்டோம்!"

"உண்மைதான்!"

"உடனடியாகத் தாங்கள் தலையிட்டு அந்த ஆங்கிலேய அடிமை முத்துசாமி பட்டத்துக்கு வராமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதே எமது ஆசை! அதற்காகவே நான் வந்தேன்."

"நல்ல யோசனை! நல்ல ஆசை! ஆனால் கண்டியில் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள **பிலிமதள்ளவா** என்பவன் பொல்லாதவனாயிற்றே!"

பண்டாரக வன்னியன் ஆழ்ந்த சிந்தனையுடன் இதைச் சொல்லிக் கொண்டிருக்கும்போது, சற்றுத் தொலைவில் படபடவென துப்பாக்கிக் குண்டுகள் வெடிக்கும் ஒலி பயங்கரமாகக் கேட்டது!

"தாங்கள் இங்கேயே இருங்கள்! இதோ வருகிறேன்!" எனக் கூறிவிட்டுக் குதிரை மீது பாய்ந்து ஏறினான் பண்டாரக வன்னியன்!

தீவுக்குள் தீயவர்கள்!

7

விண்ணோக்கி வீசிய கல், திரும்பவும் பூமிக்கு வரும் வேகத்தில் பண்டாரக வன்னியனின் குதிரை - துப்பாக்கி வேட்டு முழங்கிய திசை நோக்கி விரைந்தது. குதிரையிலிருந்த மன்னனின் கண்களுக்கு முள்ளியவளைக்குச் செல்லும் பாதைக்கும் வற்றாப்பளையிலிருந்து முல்லைத்தீவு செல்லும் பாதைக்குமிடையிலே ஒரு சிறு கூட்டத்தாருக்கிடையே சண்டை நடப்பது தென்பட்டது. அவர்கள் யார் என்று அறிந்துகொள்ள இமைகளைக் குறுக்கி விழிகளைக் கூராக்கிக் கவனித்தான். ஒருபுறம் வெள்ளைக்கார வீரர்கள் குதிரைகளில்! எதிர்ப்புறத்திலோ குருவிச்சி நாச்சியார் தலைமையில் முல்லைத்தீவின் வீரர்கள்! வெள்ளையரிடமிருந்து வெடித்துக் கிளம்பி வருவதோ துப்பாக்கி ரவைகள்! அவற்றைச் சமாளித்து முல்லைத் தீவு வீரர்களிடமிருந்து பாய்ந்து செல்வதோ ஈட்டிகள்! வாட்கள்!

பண்டாரக வன்னியன் மேலும் வேகமாகக் குதிரையைத் தட்டிவிட்டு அந்த இடத்திற்குச் சென்றடைவதற்குள்ளாக அங்கே சண்டை முடிந்து விட்டது!

முல்லைத்தீவு வீரர்களின் தீரப்போருக்கும் தினவெடுத்த தோள்களுக்கும் ஈடுகொடுக்க முடியாமல் துப்பாக்கி ஏந்திய அந்த வெள்ளைக்காரக் கும்பல் குதிரைகளில் ஓடத் தொடங்கி விட்டது! அந்தக் கும்பலில் கடைசியாக ஒரு வெள்ளையன் மட்டும் தாமதமாக ஓடிச் சென்று தனது குதிரையில் ஏறிப் பறந்து போகப் பரபரப்பு காட்டினான். அவனுடைய விலாப்புறத்தில் குருவிச்சி நாச்சியார் குறி பார்த்து வீசிய ஈட்டி பாய்ந்திடவே அவன் குதிரையிலிருந்து குற்றுயிரும் குலை உயிருமாகக் கீழே உருண்டான். குதிரை அவனை அங்கேயே விட்டுவிட்டு நாலு கால் பாய்ச்சலில் ஓடி மறைந்தது.


குருவிச்சி நாச்சியார், தரையில் விழுந்து கடைசி மூச்சு விட்டுக் கொண்டிருந்த அந்த வெள்ளைக்கார வீரனருகே வந்து குதிரையிலிருந்து குதித்தாள். அப்போது பண்டாரக வன்னியனும் அங்கு வந்து சேர்ந்தான்.

"என்னம்மா? என்ன ஆயிற்று?" என்று கேட்ட மன்னனைப் பார்த்து அவள் பெருமூச்சு விட்டாள்! ஒரு பயங்கரமான திடீர் தாக்குதலில் இருந்து பண்டாரக வன்னியனைப் பாதுகாத்து விட்ட மன ஆறுதல், அவளுடைய அந்தப் பெருமூச்சின் ஏற்ற இறக்கத்தில் நன்றாகத் தெரிந்தது. அவனிடம் உடனடியாக எந்த விபரமும் சொல்லாமல், வீழ்ந்து கிடக்கும் வெள்ளைக்கார வீரனிடம் நெருங்கினாள். அவன் கண்கள் அவளையே வெறிக்கப் பார்த்தன! அதை அவள் கவனிக்காமல் அவனது இடது கையில் ஏதோ ஒரு பொருளை வைத்துக்கொண்டு அதை அவன் மறைத்திட முயற்சிப்பதை உற்றுப் பார்த்தவாறு மெதுவாகக் குனிந்தாள்! அந்தப் பொருளைக் கைப்பற்ற வேண்டுமென்பது அவளது நோக்கமாக இருந்தது! அந்த ஒரே நோக்கத்தில் அவள் செயல்பட்டு அவனது இடது கையின் பக்கம் தலை குனிந்த போது, அந்த வெறியன் தனது கைத்துப்பாக்கியை அவளது நெற்றிப் பொட்டுக்கு நேராகக் குறி வைத்துத் தூக்கிவிட்டான்!

அப்போது அவனது வலது கையை ஒரு கால் மிதித்தது! ஆம் பண்டாரக வன்னியனின் கால்! வெடித்த குண்டு யார் மீதும் படாமல் வான் நோக்கிப் போயிற்று! அப்போதுதான் குருவிச்சி நாச்சியாருக்குத் தனது உயிரைத் தனது காதலன் காப்பாற்றிய விஷயமே புரிந்தது! அதற்குள் அவள், அந்த வெள்ளைக்காரனின் கையிலிருந்த பொருளைக் கைப்பற்றிக் கொண்டாள். அவனும் தனது மூச்சை நிறுத்திக் கொண்டான்.

குருவிச்சி கொடுத்ததை மன்னன் வாங்கி ஆவலுடன் பார்த்தபோதுதான்; அது சுந்தரலிங்கம் கொண்டு வந்த கடிதம் என்பது அனைவருக்கும் விளங்கிற்று.

காணாமற்போன கடிதத்தைத் தேடுவதற்கு அனுப்பப்பட்ட வீரர்கள் அந்தக் குறிப்பிட்ட இடத்திற்கு வந்தபோதுதான்



அவர்களுக்கு முன்பே வெள்ளைக்கார வீரர்கள் அங்கே வந்து அந்தக் கடிதத்தைக் கைப்பற்றியிருக்கிறார்கள். அவர்களிட மிருந்து அந்தக் கடிதத்தை மீட்பதற்காக முல்லைத்தீவு வீரர்கள் மேற்கொண்ட முயற்சி, இருதரப்பாரிடையே கைகலப்புக்கு வழிவகுத்துவிட்டது. பண்டாரக வன்னியன் யோசனைப்படி முள்ளிய வளைக்குச் செல்லும் பாதையை குருவிச்சி அடைவதற்கு முன்ன தாகவே ஆங்கிலேய ஒற்றர்கள் அந்த இடத்தைத் தாண்டி வந்து விட்டதை அறிந்து அவளும் அவளுடன் வந்த வீரர்களும்- ஒற்றர்களை மிக ரகசியமாகப் பின்தொடர்ந்திருக்கின்றனர். அதனால் முல்லைத்தீவு வீரர் களுக்கும் வேவுபார்க்க வந்த வெள்ளைக்கார வீரர்களுக்கும் ஏற்பட்ட கைகலப்பின்போது குருவிச்சி நாச்சியுடன் வந்த

வீரர்களும் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டு விட்டது.

"பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து நமக்கு செய்தி வருகிறது என்பது தெரிந்துதான், சுந்தரலிங்கக் குடும்பரை வழிமறித்து, இந்தக் கடிதத்தை அபகரிக்க ஆங்கிலேய அதிகாரிகள் திட்டமிட்டிருக்கிறார்கள்! அவர்கள் திட்டத்தை நீயும் நமது வீரர்களும் சரியான சமயத்தில் தகர்த்து விட்டீர்கள்!" என்று முகமலர்ந்தான் பண்டாரக வன்னியன்.

"எனக்கென்னமோ அவர்கள் கடிதத்தைத் தட்டிக் கொண்டு செல்ல வந்தவர்களாக மட்டும் தெரியவில்லை. வற்றாப்பளை கண்ணகியம்மன் கோயிலுக்கு நீங்கள் நிச்சயம் வருவீர்கள் என்றும், ஆலயத்துக்கு வரும்பொழுது பெரும் படையுடன் வரமாட்டீர்கள் என்றும் தெரிந்த காரணத்தால்

உங்களைத் திடீரெனத் தாக்கி வீழ்த்திவிடவே அந்த ஆங்கி லேய வீரர்கள் வந்திருக்கிறார்கள்" என்று குருவிச்சி நாச்சியார் திட்டவட்டமாகக் கூறினாள்.

"நமது ஆட்சிப் பகுதிக்குள் அவ்வளவு துணிவுடன் நுழைந்து, நம்மை நேரிடையாகத் தாக்கும் வலிமை ஆங்கிலேயர்களுக்கு வந்துவிட்டதாக நான் நம்பவில்லை!"

"நமது தீவுக்குள்ளேயே நுழைந்து, பல பகுதிகளில் ஆங்கி லேயர்கள் தமது ஆதிக்கத்தைப் பரவலாக்கிக்கொண்டு வருவதைப் பார்த்த பிறகுமா இப்படிப் பேசுகிறீர்கள்?"

இவ்வாறு ஆச்சரியப்பட்டாள் குருவிச்சி!

வீழ்ந்து விட்ட வெள்ளை வீரனின் சவத்தை எடுத்து முறைப்படி அடக்கம் செய்யுமாறு தனது வீரர்களிடம் பணித்த பண்டாரக வன்னியன், அங்கிருந்து நாலுகால் மண்டபத்து வழியில் குதிரை யைத் திருப்பினான். அவளும் மற்ற வீரர் களும் பின்தொடர்ந்தனர்.

மண்டபத்திற்குச் சென்று சுந்தரலிங்கத்தைச் சந்திப்பதற்கு முன்பாகவே சுந்தரலிங்கம், துப்பாக்கி ஒலி கேட்டுப் பரபரப் புடன் கிளம்பிய பண்டாரக வன்னியனுக்கு என்ன ஆயிற்றோ என்ற குழப்பத்துடன் மண்டபத்தை விட்டு அவர்களுக்கு எதிரே வந்து கொண்டிருந்தான்.

"இதுதானே தாங்கள் கொண்டு வந்த கடிதம்?" என்று தன்னிட மிருந்த கடிதத்தைக் கொடுத்தான் மன்னன். அங் கொன்றும் இங்கொன்றுமாக இரத்தத் துளிகள் சிதறியிருந்த அந்தக் கடிதத்தைப் பிரித்துப் பார்த்த சுந்தரலிங்கம் "ஆமாம்" என்பது போலத் தலையசைத்தான். கடிதத்தைத் திரும்பவும் பண்டாரக வன்னியனிடம் கொடுத்துவிட்டான்.

ஆங்கிலேய வீரர்கள் பண்டாரகனின் ஆட்சிப் பகுதிக்குள் ளும் தங்களின் சூழ்ச்சித் திட்டங்களை நிறைவேற்றத் துடிக் கிறார்கள் என்பதை உணர்ந்து கொண்ட சுந்தரலிங்கம், பண்டாரகனை மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டு மென்று கேட்டுக் கொண்டான்.

"மன்னரை ஆபத்திலிருந்து காப்பாற்றிய நாச்சியார் அவர்களுக்கு என் இதயமார்ந்த நன்றியை தமிழ்நாட்டு விடுதலைப் போர் வீரர்கள் சார்பாகத் தெரிவித்துக்கொள் கிறேன்" என்று சுந்தரலிங்கம் சொன்னதும், குருவிச்சி நாச்சி, மெத்த மரியாதையுடன் தலை வணங்கி அவனது பாராட்டுக் குப் பதில் தெரிவிக்கும் வகையில் தனது செக்கச் சிவந்த உதடுகளில் புன்னகையை நெளிய விட்டாள்.

"குருவிக்கு இன்று கொள்ளை அதிர்ஷ்டம்தான்! தமிழ் நாட்டிலிருந்து பாராட்டு குவிகிறது!" என்றான் அவளைக் கடைக் கண்ணால் பார்த்துக்கொண்டே பண்டாரக வன்னியன்.

"அவரை வழியில் நிற்க வைத்தே பேசிக்கொண்டிருப்பது நன்றாக இருக்கிறதா? அரண்மனைக்கு அழைத்து வந்து ஒரு வேளை விருந்தாவது அளித்து அனுப்பி வைப்பதுதானே மரியாதை!" என்று முகத்தை மன்னன் பக்கம் திருப்பாமல் வேறு பக்கம் திருப்பிக் கொண்டு மெல்லிய குரலில் வீணை போல் அதிர்ந்தாள் குருவிச்சி!

மன்னன் எவ்வளவோ வலியுறுத்தியும்கூட சுந்தரலிங்கம் கேட்பதாக இல்லை.

"எனக்காக இல்லாவிட்டாலும், என் குருவி சொல்வதற் காகவாவது அரண்மனைக்கு வந்துவிட்டுச் செல்லுங்கள்!"

"மன்னித்துக் கொள்க! நானில்லாவிட்டால் வெள்ளையத் தேவனுக்கு வேலையே ஓடாது! நான் தங்களைச் சந்தித்தேனா? பத்திரமாகப் போய்ச் சேர்ந்தேனா? கடிதத்தில் உள்ள விஷயங் களுக்குத் தங்கள் பதில் என்ன? இவற்றையெல்லாம் அறிந்து கொள்ள கட்டபொம்மன் மிகவும் ஆர்வத்தோடு இருப்பார். எனவே என்னை உடனடியாக விடை கொடுத்து அனுப்புவதே சிலாக்கியமான செயலாகும்."

பேசிக்கொண்டிருக்கும்போதே ஒரு வீரன் சென்று ஒரு குலை இளநீர்களை வெட்டிக்கொண்டு அங்கு வந்துவிட்டான். குருவிச்சியின் மௌனமான ஜாடையின் மூலம் அந்த உத்திரவு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதைக் கவனித்த சுந்தர லிங்கம், அவளது விருந்தோம்பும் பண்பை தனக்குள்

வியந்துகொண்டான். இளநீர் ஒன்றை வாங்கி அதனைத் தானே தன் கையால் வெட்டி, சுந்தரலிங்கத்திடம் பண்டார வன்னியன் கொடுத்தபோது, சுந்தரலிங்கம்-அவர்களிருவரும் காட்டிய அன்பில் அப்படியே சொக்கிப் போய் விட்டான்.

"முடிவாக நான் பாஞ்சாலங்குறிச்சி மன்னரிடம் என்ன சொல்லட்டும்?" என்று ஆவலுடன் கேட்ட சுந்தரலிங்கத்தைத் தட்டிக்கொடுத்துக்கொண்டே "சொல்லுங்கள்! இந்த வைர முத்து ஆங்கிலேய ஆதிக்கத்தின் வேர் ஊன்றாமல் தடுத்து நிற்பதற்கு எப்போதும் தயாராக இருக்கிறான் என்று!" எனப் பண்டாரக வன்னியன் சொன்னபோது அவன் பனை வைரத் தோள்கள் விம்மிப் புடைத்தன.

"மிக்க மகிழ்ச்சி! நான் விடை பெற்றுக்கொள்கிறேன்!" என்று கரங் கூப்பினான் சுந்தரலிங்கம்.

அப்போது குருவிச்சி நாச்சி, பண்டாரக வன்னியன் காதில் ஏதோ மெதுவாகச் சொன்னாள். மன்னன் முகம் மலர்ந்தது. சுந்தரலிங்கத்தைப் பார்த்து, "குருவி எனக்கு சில நேரங்களில் நல்ல ஆலோசனையும் சொல்லக்கூடியவள்! நான் மறந்தே விட்டேன். அவள்தான் ஞாபகப்படுத்துகிறாள். கடற்கரை வரையில் தங்களுடன் துணைக்கு என் வீரர்கள் வருவார்கள்!" என்றான். ஒரு வீரன், தனது குதிரையிலிருந்து இறங்கிக் கொண்டு, அதில் சுந்தரலிங்கம் ஏறிச் செல்ல வசதி செய்ய முனைந்தான். ஆனால் குருவிச்சி நாச்சிக்கு அது பிடிக்க வில்லை. ஒரு சாதாரண வீரனின் குதிரையில் சுந்தரலிங்கக் குடும்பரை ஏற்றி அனுப்புவது மரியாதையில்லையென்று கருதினாள். அதனால் அவள், அந்த வீரனின் குதிரையில் ஏறிக்கொண்டு, தனது குதிரையை சுந்தரலிங்கம் செல்வதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொண்டாள்.

"கடற்கரையிலிருந்து இங்கு வரும்பொழுது கிராமங்களை யெல்லாம் கடந்து சுற்றுப்பாதையில் வந்திருக்கிறீர்கள். திரும்பிச் செல்லும்பொழுது குறுக்குப் பாதையிலேயே சென்று விடலாம்" என்று பண்டாரக வன்னியன் கூறிய பொழுது, சுந்தரலிங்கம் அந்த யோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை.

"அரசே! நான் குறுக்குப் பாதையில் செல்ல விரும்பவில்லை. தங்கள் யோசனையை ஏற்கவில்லையென்று தவறாகக் கருதாதீர்கள். நான் மீண்டும் கிராமங்களைக் கடந்துதான் செல்ல விரும்புகிறேன். ஏன் தெரியுமா?" என்று கேள்வியுடன் நிறுத்தினான் சுந்தரலிங்கம்.

"ஏன்?" என்று கேட்டு பண்டாரகனின் உதடுகளோ குருவிச்சியின் உதடுகளோ அசையவில்லை! அதற்குமாறாக அவர்களது விழிகள் வினாக் குறிகளாயின!

"வழியில் நான் சந்தித்த சங்கிலித் தாத்தாவை மறுபடியும் ஒருமுறை பார்த்துவிட்டுப் போக விரும்புகிறேன். மறுபடியும் அவரைப் பார்க்க எனக்கு வாய்ப்பு இருக்கிறதோ இல்லையோ? தமிழ்நாட்டில் நாங்கள் நடத்தும் வீர மரணப் போராட்டத்தில் அந்த மலர்ப்படுக்கை எனக்கு விரைவில் கிடைத்தாலும் கிடைக்கலாம்! அதனால் இந்த வீராங்கனையின் பாட்டனாரை இன்னொரு தடவை பார்த்துப் பேசிவிட்டுப் போகிறேன்" என்றான் சுந்தரலிங்கம்.

பண்டாரகன், குருவிச்சியை அர்த்தமுடன் பார்த்தான். அவளும் அதைப் புரிந்துகொண்டு "தாத்தா வீட்டுக்குப் போகும்போது அங்கு பேத்தி இருக்க வேண்டாமா?" என்று இதழ் அசைத்தாள்!

வேலும் வாளும் ஈட்டியும் தாங்கிப் போரிடும் அந்த வீர மங்கை, தன் காதலனுக்கு முன்னே மட்டும் எப்படித்தான் இவ் வளவு நாணத்தால் வளைகிறாளோ என்று தெரியவில்லை சுந்தரலிங்கத்துக்கு!

"தேவையில்லை! நான் ஒன்றும் தாத்தா வீட்டில் தங்கப் போவதில்லை! போகிற போக்கில் அவரை தரிசித்து விட்டுப் போகப் போகிறேன் - அவ்வளவுதான்!" என்று கூறி, மீண்டும் இருவரிடமும் விடைபெற்று மகிழ்ச்சி பொங்கிடக் கிளம்பினான்.

அவனும் அவனுக்குத் துணை வந்த குதிரை வீரர்களும் முல்லைத்தீவின் கடற்கரை நோக்கி விரைந்து கொண்டிருந்தனர்.

வழியில் சங்கிலித் தளபதியாரின் ஊர் வந்துவிட்டது!

"அந்த வீட்டு வாசலில் மறந்து விடாமல் நில்லுங்கள்!" என்று, தன்னுடன் வந்த வீரர்களுக்குக் கூறி வைத்திருந்தான்.

அவ்வாறே அந்த வீரர்கள், சங்கிலித் தாத்தா வீட்டு வாசலில் குதிரைகளை இழுத்துப் பிடித்து நிறுத்தினார்கள். அவர் அமர்ந்திருந்த திண்ணையை சுந்தரலிங்கம் ஆவலுடன் நோக்கினான். அவர் அந்தத் திண்ணையில் இல்லை. "வீட்டுக்குள் இருக்கிறாரா? பாருங்கள்" என்று சொல்லி முடிப்பதற்குள் அந்தத் தெருவில் உள்ள நாலைந்து மூதாட்டிகள் அலறியடித்துக்கொண்டு ஓடி வந்தனர். அவர்கள் கண்ணீரும் கம்பலையுமாகக் காட்சி தந்தனர்.

"சங்கிலித் தாத்தா எங்கே?"

"அய்யோ, அவரை பத்துப் பதினைந்து அன்னிய சிப்பாய்கள் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள்!"


"ஏன் ? எதற்காக?"

"குருவிச்சி, ஒரு சிப்பாயைக் கொன்றுவிட்டாளாம் – அதற்கு பதிலுக்குப் பதில் அவரைத் தூக்கிப் போய்விட்டார்கள்!"

விபரம் கேட்ட வீரர்களுக்கு அந்த மூதாட்டியர் இவ்வாறு விளக்கமளித்தனர்.

"அடப்பாவிகளா? கால் முடமான அந்தப் பெரியவரையா? என்று தன்னையறியாமல் சப்தமிட்டான் சுந்தரலிங்கம்!

காக்கை வன்னியன்!



அதிர்ச்சியுற்ற சுந்தரலிங்கம், சோகமே உருவாக நின்ற மூதாட்டியரை நோக்கி, "சங்கிலித் தாத்தா எங்கே கொண்டு போகப் பட்டிருப்பார் என்பது தெரியுமா?" என்று ஆவ லுடன் கேட்டான். அந்த மூதாட்டியரில் சிறிது விபரம் தெரிந்தவராகத் தோற்றமளித்த ஒரு அம்மையார் முன்வந்து விடையளித்தார்.

"அவரை தூக்கிச் சென்றவர்கள் ஆங்கிலேய சிப்பாய்கள் என்பதால் கரிக்கட்டு மூலை அரண்மனைக்குத்தான் கொண்டு போயிருக்க வேண்டும்."

"கரிக்கட்டு மூலை அரண்மனையா? அது யாருக்குச் சொந்தம்? அது எங்கே இருக்கிறது?"

"அதுவும் இந்த வன்னிப் பிரதேசத்தில்தான் ஒரு மூலை யில் இருக்கிறது. அது ஒரு தனி ராஜ்யம். அந்தக் குட்டி ராஜ் யத்தை காக்கை வன்னியன் ஆண்டுகொண்டிருக்கிறான்."

"என்ன? ஆச்சரியமாக இருக்கிறதே! பண்டாரக வன்னி யனின் ராஜ்யத்துக்குள் இன்னொரு ராஜ்யமா?"

"ஆமாம்! அது அப்படித்தான்! பண்டாரக வன்னியனைத் தனது எதிரி என்று பிரகடனப்படுத்திக் கொண்டு, காக்கை வன்னியன் ஆங்கிலேயரின் கைக்கூலியாக இருந்து வருகிறான். அவனுக்குப் பாதுகாப்பாக ஆங்கிலேயப் படையினர் அவனைச் சுற்றி இருக்கிறார்கள். அவர்களின் பாதுகாப்பு, தனக்கு இருக் கிறது என்ற தைரியத்தில் காக்கை வன்னியன் பண்டாரக வன்னியனுக்குப் பல இடையூறுகளைச் செய்து வருகிறான். அவனைத் தமது கைக்குள் போட்டுக்கொண்டுவிட்ட ஆங்கி லேயர், கரிக்கட்டு மூலை அரண்மனையைத் தமது பாசறையாக வைத்துக்கொண்டு, முல்லைத்தீவு பகுதியை எப்படியும் வச மாக்கிக் கொள்ள திட்டங்களை வகுத்துக் கொண்டிருக் கிறார்கள்!"

அந்தக் கிழவி, விளக்கமாக அந்த விஷயங்களை விவரிக் கும்போது அவளது முதுமையையும் மீறிக்கொண்டு, அந்த மண்ணின் மீதுள்ள பற்றுதலும் பரிவும் - அந்த மண்ணை மாற்றார் அடிமையாக்கிவிடக்கூடாது என்ற உணர்வும் வெளிப்பட்டதை சுந்தரலிங்கம் புரிந்துகொண்டு உடல் புல்லரிக்க நின்றான். அந்த மூதாட்டியிடம் இன்னும் சிலவற்றை அறிந்து கொள்ள லாம் என்ற நம்பிக்கை அவனுக்கு ஏற்பட்டதால், "அம்மா! தங்கள் பெயர் என்ன?" என்று மிகுந்த மரியாதையுடன் கேட்டான். "தங்கச்சி" என்றாள் கிழவி. அந்த சோகச் சூழலிலும் சுந்தர லிங்கத்துக்கு உள்ளூர சிரிப்பு பொங்கியது. அதை கவனிக்கத் தவறாத அந்தக் கிழவி, "தங்கநாச்சி என்று பெற்றோர் இட்ட பெயர் இப்படிக் குறுகிப் போய்விட்டது" என்றாள். மேலும் விபரங்களறிய விரும்பினான். எனினும், சங்கிலித் தாத்தா கடத்தப்பட்ட செய்தியை பண்டாரக வன்னியனுக்கும் குருவிச்சி நாச்சிக்கும் முதலில் ஒரு வீரன மூலம் சொல்லியனுப்பிவிட வேண்டுமென முடிவு செய்தான். அதன்படி, ஒரு வீரனை விரைந்து சென்று அறிவிக்குமாறு பண்டாரக வன்னியனின் மாளிகைக்கு அனுப்பி வைத்தான்.

"காக்கை வன்னியன், பண்டாரக வன்னியனை எதிர்ப் பதற்குக் காரணம் என்ன?"

"ஆங்கிலேயருக்கு அடிமையாகிவிட்டது முதற்காரணம்! அஃதன்னியில் மற்றொரு காரணமும் இருக்கிறது!"

"என்ன அந்தக் காரணம்?"

"குருவிச்சி நாச்சியாரைத் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்று காக்கை வன்னியன் தலை கீழாக நின்று பார்த்து முடிவில் தோல்வியடைந்துவிட்டான். அவள், அவனது விருப்பத்தை மறுத்தது மட்டுமல்ல, பண்டாரக வன்னியனையே காதலிக்கிறேன் என்று காக்கை வன்னியனிடம் வெளிப்படையாகவே கூறிவிட்டது, அவனுக்கு அதிக சினத்தை மூட்டிவிட்டது! அதுமுதல் அவன் போக்கே மாறிவிட்டது! ஏற்கனவே குரங்கு - அதற்கு ஒரு சிரங்கு என்பதுபோல முதலிலேயே காட்டிக்கொடுக்கும் புத்தி கொண்ட காக்கை

வன்னியன், இப்போது பண்டாரக வன்னியனுக்கும் குருவிச்சி நாச்சிக்கும் பரம எதிரியாகவே மாறி, அதைப் பறை சாற்றிக்கொள்வதிலும் பரமானந்தம் அடைகிறான்."

"அப்படியானால், சங்கிலித் தளபதியாரைத் தூக்கிச் சென்றதும், காக்கை வன்னியனின் ஏற்பாடாகத்தான் இருக்குமோ?"

"அது யார் ஏற்பாடு என்று தெரியாது! ஒன்று மட்டும் நிச்சயம்! சங்கிலித் தளபதியை தூக்கிச் சென்ற ஆங்கிலேயச் சிப்பாய்கள், அவரை காக்கை வன்னியன் அரண்மனைக்குத்தான் கொண்டு போய் வைத்திருப்பார்கள்!"

"அப்படியானால் கரிக்கட்டு மூலை அரண்மனைக்குப் போனால் அவரை அங்கு பார்க்கலாம் அல்லவா?"

"பார்க்கலாம்! ஆனால் மீட்க முடியாது!"

"ஏன்?"

"அந்த அரண்மனையில் அரசன்தான் காக்கை வன்னியன்! பாதுகாப்பு முழுதும் வெள்ளைக்காரர்கள்தான்! அந்தப் பாதுகாப்பை முறியடித்து அவரை மீட்டு வருவது என்பது உங்களால் முடியாது!

"நாங்கள் அவ்வளவு சாதாரணமா?"

"நீங்கள் உயிருக்குத் துணிந்தவர்கள்! உறுதிகொண்ட நெஞ்சத்தினர்! அதில் சந்தேகமில்லை! ஆனால் துப்பாக்கி, பீரங்கி போன்ற போர்க்கருவிகளை வைத்துக் கொண்டு அரண்மனை முழுதும் காவலிருக்கும் ஆங்கிலேயர்களை வென்றிட, இந்தச் சிறுபடைபோதாது என்பதே என் கருத்து!"

தங்கநாச்சியின் பேச்சில் நிதானம், அனுபவம், உறுதி, அனைத்தும் நிறைந்து கிடந்தது!

"இவ்வளவு தீர்க்கமாகப் பேசுகிறீர்களே - உங்கள் பெயரை மட்டுமே கேட்டேன்! சொன்னீர்கள்! தங்களின் இளமைக் காலத்தில் ஆற்றிய பணி என்னவோ? ஒரு வேளை அரண்மனைப் பணியாக இருக்குமோ?"

"இல்லை! என் பணி இளமையில் மட்டும் ஆற்றக்கூடிய பணி அல்ல! முதுமை ஏற்பட ஏற்பட முதிர்ச்சியுற்று ஒளிவிடக் கூடிய அறிவுப் பணி! நான் ஒரு ஆசிரியை! இந்தக் கிராமத்துப்

பிள்ளைகள் என்னிடம் பயின்றவர்கள்தான்! இப்போதும்கூட என்னிடம் பல பிள்ளைகள் கற்கிறார்கள். பெருமையுடன் ஒன்றைச் சொல்லட்டுமா? குலசேகரம் வைரமுத்து எனும் பண்டாரக வன்னியனும், அவனருகே இன்று கூர்வாள் தாங்கி கொடும்பகை வீழ்த்திட இணையாக வீற்றிருக்கிறாளே, அந்த குருவிச்சி நாச்சியும் எனது மாணவர்கள் தான்! இத்தகைய பெருமையுடன் எனக்கு அவமானகரமான ஒரு சிறுமையும் உண்டு! அதுதான் காக்கை வன்னியனும் என்னுடைய மாண வன் என்பது! என்ன செய்வது, அப்போது அந்த மாணவப் பருவத்தில் எல்லோருமே இந்த மண்ணின் மானம் காப்பவர் களாகவே விளங்கினார்கள்! ஆனால் கால மாறுதலில் காக்கை வன்னியன் போன்ற சிலரது உள்ளங்களில் தன்னலம் எனும் கரையான் புற்றெடுத்து அங்கே துரோகம் எனும் கருநாகமும் குடியேறிவிட்டது."

"தாயே! உங்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டே இருக்கலாம் போல் தோன்றுகிறது. அவ்வளவு அருமையாகப் பேசுகிறீர்கள். ஆனால் நாங்கள் தாமதிக்க விரும்பவில்லை. கரிக்கட்டு மூலை அரண்மனைக்குச் செல்ல வேண்டிய அவசியம் எங்களுக்கு இருக்கிறதல்லவா?"

"அதுகுறித்துத்தான் மன்னனுக்கு செய்தி அனுப்பியிருக் கிறீர்களே - அங்கிருந்து உங்கள் துணைக்குப் படையும் வந் தால் நல்லதல்லவா?"

"அந்தப் படை வருவது வரட்டும்! அதற்குள் நாங்கள் எங்கள் முயற்சியைச் செய்கிறோம்! அம்மா! உங்கள் வாழ்த்துடன் நாங்கள் கரிக்கட்டு மூலைக்குப் புறப்படுகிறோம்" எனக் கூறிய சுந்தரலிங்கம், தன்னுடன் வந்த வீரர்களைப் பார்த்து, "கரிக்கட்டு மூலைக்குச் செல்லும் வழியில் யாராவது ஒருவர் முன்னால் வழிகாட்டிச் செல்லுங்கள்!" என்று கேட்டுக் கொண்டான்.

அப்போது தங்கநாச்சிக் கிழவி, சுந்தரலிங்கத்தைப் பார்த்து "எல்லா விபரமும் என்னைக் கேட்டுத் தெரிந்துகொண்டீர்கள். நீங்கள் யார் என்று சொல்லவில்லையே?" என்று கேட்டாள்.

"எங்களைத் தெரியவில்லையா? நாங்கள் பண்டாரக வன்னியன் மாளிகையிலிருந்து வருகிற வீரர்கள்!" என்று சுந்தர லிங்கம் பதில் அளித்ததும் தங்கநாச்சி, மெல்லச் சிரித்துக் கொண்டாள்.

"மாளிகை வீரர்கள் என்பது தெரிகிறது! ஆனால் நீங்கள் ஒருவர் பேசும் தமிழ் கொஞ்சம் வித்தியாசமாக இருக்கிறதே! உங்கள் தமிழைக் கேட்கும்போது தமிழ் நாட்டிலிருந்து வந்துள்ளவர் போலல்லவா தெரிகிறது!" என்று கேட்டுவிட்டு அவன் முகத்தையே அந்த மூதாட்டி உற்றுப் பார்த்தாள்.

"தமிழ் உச்சரிப்பில்தான் தாயே சிறிது வித்தியாசத்தைக் காண்பீர்கள். ஆனால் உணர்வில் ஒரு ஊசி முனையளவுகூட வித்தியாசம் காணமுடியாது. ஒளிவு மறைவு ஏதுமின்றி உண்மைகளை உரைத்திட்ட தங்கள் முன்னால் நான் உண்மையை மறைக்கக் கூடாதல்லவா? நான் பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து வருகிறேன். வீரபாண்டிய கட்டபொம்மனின் படைத்தளபதிகளில் ஒருவன். என் பெயர் சுந்தரலிங்கக் குடும்பன்."

"போதும் தம்பி! இதற்கு மேல் விபரம் எதுவும் எனக்குத் தேவையில்லை. எல்லாவற்றையும் சொல்ல வேண்டுமென நீ எண்ண வேண்டாம். அதற்காக நான் வருத்தப்பட மாட்டேன். அங்கும் இங்கும் நடைபெறுகிற சுதந்திரப் போராட்டத்தில் எத்தனையோ ரகசியங்கள் இருக்கும்"

என்று சுந்தரலிங்கம் சொல்ல வந்த ஏனைய விபரங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்ட தங்கநாச்சி, "என்ன செய்வது? வற்றாப்பளை கண்ணகியம்மன் திருவிழா நேரமாகப் பார்த்து வெள்ளைக்காரர்கள் தங்கள் சூழ்ச்சித் திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். ஊரில் உள்ளவர்கள் ஓரிருவரைத் தவிர எல்லோருமே வற்றாப்பளை விசாகத் திருவிழாவுக்குப் போயிருக்கிறார்கள். இதுதான் வேவு பார்க்க தகுந்த நேரமென்று வந்தவர்கள், ஏதோ ஒரு காரணம் காட்டி, சங்கிலித் தளபதியாரைத் தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள்" என்று வேதனையோடு கூறினாள்.

"சரி தாயே! நாங்கள் வருகிறோம்!" என்றவாறு குதிரையைத் தட்டிவிட்டான் சுந்தரலிங்கம். அவனைப் பின்தொடர்ந்து சென்ற பண்டாரக வன்னியனின் பாதுகாப்பு வீரர்கள் சிறிது தொலைவு சென்றதும் அடர்ந்திருந்த புதர் அருகில் தயங்கி நின்று, சுந்தர லிங்கத்திடம் ஏதோ முக்கியமாகச் சொல்ல விரும்பியவர் களாய், தங்கள் குதிரைகளைப் பிடித்து நிறுத்தினார்கள்.

"அசட்டுத் துணிச்சலுடன் கரிக்கட்டு மூலை அரண்மனைக் குச் செல்வது நல்லதல்ல! அங்குள்ள ஆங்கிலேயப் படைவீரர்கள் நம்மைவிட பலமடங்கு எண்ணிக்கையில் அதிகமானவர்கள்! யோசிப்பது நல்லது."

தன்னுடன் வரவேண்டிய வீரர்களே தயங்குகிறார்கள் என்கிற போது, சுந்தரலிங்கத்துக்கும் குழப்பம் ஏற்பட்டது.

"மன்னரிடம் செய்தி அறிவிக்கச் சென்ற வீரன், இந்நேரம் மாளிகை போய்ச் சேர்ந்திருப்பான்! மன்னர் என்ன முடிவு எடுக்கிறார் என்று பார்ப்போம்!"

என்று வீரர்கள் அனைவரும் ஒரே விதமாகக் கருத்தறிவித் ததும் சுந்தரலிங்கமும் அதற்குக் கட்டுப்பட வேண்டியதாயிற்று.

தங்கநாச்சியம்மையார் யூகித்தவாறே, அந்த ஆங்கிலேயச் சிப்பாய்கள், சங்கிலித் தளபதியை கரிக்கட்டு மூலை காக்கை வன்னியன் அரண்மனைக்கே தூக்கிச் சென்று சேர்த்தனர்.

ஆலோசனைக் கூடத்தில் காக்கை வன்னியனை எதிர்பார்த்து ஆங்கிலச் சிப்பாய்கள், சங்கிலித் தளபதியுடன் காத்திருந்தனர். ஆனால் அவனோ அந்தக் கூடத்தை ஒட்டினாற்போலுள்ள அந்தப்புரத்தில் ஆரணங்கு ஒருத்தியுடன் ஆனந்தமாய்ச் சாய்ந்து கிடந்தான். மதுக்கிண்ணம் கையில்! தலையோ அந்த மயக்கு விழியாளின் மடியில்! அன்றைய மஞ்சத்து விருந்துக்கு வர வழைக்கப்பட்ட வாடகை வனிதை அவள்! எப்படியும் வாழ லாம் என இலக்கணம் வகுத்துக்கொண்ட காக்கை வன்னி யனுக்கு சிங்காரிகளின் சிரிப்பு அலைகளில் மிதப்பதும், அதுவே ஜென்மம் எடுத்த பயன் என நினைப்பதும் தான் சுக போக சொர்க்கமாக இருந்தது.

பெயருக்கேற்றபடி நிறம் - எப்போதும் பூமியை நோக்குவது போல் தாழ்ந்து இமைக்கு மேலே எக்கிப் பார்க்கும் விழிகளில் தூக்க நேரம் போக மற்ற நேரமெல்லாம் வழிந்து கொண்டே யிருக்கும் விஷம்-பருத்த உடல் - பல் இளித்துப் பேசும் பழக்கம் - பகல் இரவு என்றில்லாமல் படுக்கை இன்பம் தேடும் பசி-பகைவர்க்குத் தன்னையே விற்றுக் கொண்டு, நாட்டையே காட்டிக் கொடுக்கும் பிறவி என்பது பார்த்தவுடனே தெரியும்!

நீண்ட நேரம் காத்திருந்து அலுத்துப்போன ஆங்கிலேய அதிகாரி, அந்தப்புர அறைக் கதவைத் தனது துப்பாக்கியின் அடிப்பாகத்தினால் நாலைந்து முறை ஓங்கித் தட்டவே, கதவைத் திறந்து கொண்டு, கையில் மதுக்கிண்ணத்துடன் காக்கை வன்னியன் ஆலோசனைக் கூடத்துக்கு வந்து சேர்ந் தான்.

வந்தவுடன் அவன் கண்ணில் பட்டது சங்கிலித் தளபதியின் உருவம்தான்!

"ஓ! இந்த நொண்டிக் கிழவனைக் கொண்டுவந்து விட்டீர்களா?" எனக் கேட்டுக் காக்கை வன்னியன் கலகல வெனச் சிரித்தான்.

அந்தச் சிரிப்பு, அவனது எஜமானர்களான ஆங்கிலேய அதிகாரிகளுக்கே வெறுப்பாக இருந்தது. ஆனால் அதைக் காட்டிக்கொள்ளாமல், "இந்தக் கிழவனை என்ன செய்ய வேண்டும் அரசே!" என்று ஆங்கிலேயர் அழைக்கிறார்களே, அந்த மரியாதையொன்று போதும் - மற்றபடி மானம், உரிமை, சுதந்திரம் எதுவுமே தேவையில்லையென்று அவர்களிடம் மண்டியிட்டுக் கிடக்கும் காக்கை வன்னியனுக்கு, சங்கிலித் தளபதியைக் காணவும் ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு கிளம்பிற்று.

"ஏய் நொண்டிப் பயலே! உன் பேத்தி என்னமோ பேரழகி யென்றும் இந்திர லோகத்திலிருந்து வந்த தேவதையென்றும் அவளை மணக்க எனக்கு அருகதையில்லையென்றும் உளறி னாயே, இப்போது என் தகுதி என்ன? என் அருகதை என்ன? அதிகாரம் என்ன? என்பதைக் காட்டவா?"

ANNA CENTENARY LIBRARY

சங்கிலித் தளபதி, அச்சத்தின் சாயலோ, கவலையின் ரேகையோ முகத்தில் இல்லாதவராக காக்கை வன்னியனைப் பார்த்து சிரித்தார்.

"என்னடா நொண்டிக்கு சிரிப்பு வேண்டிக் கிடக்கிறது! இப்போது நீ என் பிடியில்! உன் உயிர் பிழைக்க வேண்டுமானால் ஒரு வழி இருக்கிறது. உன் பேத்தி குருவிச்சி நாச்சிக்கு ஒரு கடிதம் எழுது. அம்மா குருவிச்சி! உடனே வந்து என்னைக் காப்பாற்றம்மா! என்று எழுது!"

சங்கிலித் தளபதி, இடறப்பட்ட புலி போல ஆனார்!

"என்ன சொன்னாய்? முட்டாளே! என் உயிரைவிட மேலானது என் பேத்தியின் வாழ்க்கை! குருவிச்சி நாச்சி, பண்டாரகனுக்குத் தான் சொந்தம்! உன் பஞ்சணைப் பதுமையாக அவளை ஆக்கிட நானும் மானமற்றவனல்ல, என் பேத்தியும் புத்தி பேதலித்தவள் அல்ல!"

"இப்போது அப்படித்தான் சொல்வாய்! இரண்டு நாள் பாதாளச் சிறையில் பூட்டி பட்டினி போட்டால், தானாக வழிக்கு வந்து தண்டனிடுவாய்! 'தருகிறேன் குருவிச்சியை' என்று தவிப்பாய்! துடிப்பாய்! தெரியும் எனக்கு! அதனால் இவனை பாதாளச் சிறையில் அடையுங்கள்!" என்று கூச்சலிட்டான் காக்கை வன்னியன்!

ஆங்கிலேய அதிகாரி ஜாடைகாட்ட - வீரர்கள் சங்கிலித் தளபதியை அங்கிருந்து அப்புறப்படுத்தினார்கள், பாதாள சிறைக்குக் கொண்டுபோக!

முத்து மாளிகை!

9

வற்றாப்பளை கண்ணகி கோயில் விசாகத் திருவிழா விலிருந்து நான்கு திசைகளிலும் கலைந்து சென்று கொண்டிருந்த மக்களுக்கு, வற்றாப்பளையிலிருந்து சற்றுத் தொலைவில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் எதுவும் தெரிந்திருக்க நியாயமில்லை. தமிழகத்திலிருந்து வந்த சுந்தரலிங்கக் குடும்பன் பண்டாரக வன்னியனைச் சந்தித்ததோ, சந்திப்பதற்கு முன்பு யானையிடம் போரிட்டதோ, வேவு பார்க்க வந்த வெள்ளையர்களில் ஒருவனை குருவிச்சி நாச்சியார் கொன்று குவித்ததோ, எஞ்சிய வெள்ளைக்கார சிப்பாய்கள் குருவிச்சியின் பாட்டனார் சங்கிலித் தளபதியைக் காக்கை வன்னியன் அரண்மனைக்குத் தூக்கிக் கொண்டு போனதோ எதுவும் தெரியாத நிலையில் அந்த மக்கள் கண்ணகியம்மன் திருவிழா சிறப்பு பற்றியும், விழாவை முன்னின்று நடத்திய குருவிச்சி நாச்சி, பண்டாரக வன்னியன் மீதுகொண்டுள்ள குன்றாத அன்பு பற்றியும், பண்டாரக வன்னியனும் அவள் மீது வைத்துள்ள பாசம் பற்றியும் ஒருவருக்கொருவர் உற்சாகமாக உரையாடியவாறு தங்கள் தங்கள் ஊர்களுக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர்.

அந்த மக்களில் ஒரு பகுதியினர் சென்ற வழியில், பண்டாரக வன்னியனும், குருவிச்சியும் பாதுகாப்பு வீரர்கள் சிலர் சூழ்ந்து வரத் தங்கள் அரண்மனை நோக்கிப் போவது கண்டு "வாழ்க பண்டாரக வன்னியன்" என்ற முழக்கமும் ஒலித்தது.

வாழ்த்தொலித்து, வழிவிட்டு, இருமருங்கும் சாலையில் நின்ற தனது பிரியத்துக்குரிய குடிமக்களைப் பணிந்து வணங்கிக்

கொண்டே மன்னன், குருவிச்சியுடன் அரண்மனைக்கு வந்து சேர்ந்தான்.

ஆடம்பர அலங்காரங்கள் எதுவுமின்றி அடக்கத்துடன்- ஆனால் அரிமாவின் கம்பீரத்துடன் உயர்ந்து நின்ற அந்த அரண்மனை பெரும் நிலப்பரப்பைக் கொண்டதல்ல எனினும் காக்கை வன்னியனின் அரண்மனையைவிட, நாலு மடங்கு பெரியது! எழில் மாடங்கள் கூடங்கள் இல்லையெனினும் எழுச்சிக்கோலம் கொண்டு விளங்கியது! அரண்மனை மதில் களுக்குள் ஒரு புதுமையான மாளிகை! பார்ப்பதற்குப் புதுமையே தவிர பளபளப்போ பகட்டோ இல்லாமல் காட்சி தந்தது! அந்த மாளிகையை அமைத்தவனின் கற்பனை வியக் கத்தக்கது! திறந்திருக்கும் சிப்பியைப் போல மாளிகையின் புற அமைப்பு! அந்த சிப்பிக்குள் இருக்கும் முத்தைப் போல உள் அமைப்பு! முத்தில் பொதிந்திருக்கும் கதவைத் திறந்தால் உள்ளே விசாலமான இடம்! அங்கே உறங்கும் அறை- ஓய்வெடுக்கும் அறை- உரையாடும் அறை - உணவருந்தும் அறை -உணவு தயாரிக்கும் அறை - அத்தனையும் உண்டு! அந்தப் புதுமையான முத்து மாளிகை, மிக எளிமையாகவே உருவாக்கப்பட்டிருந்தது!

அந்த மாளிகைக்குள் பண்டாரகனும், குருவிச்சியும் நுழைந் தனர். பண்டாரகன் மட்டும் தனியாக அந்த முத்து மாளிகைக் குள் செல்லும்போதுதான் வாசல் கதவை அவன் தாளிட்டுக் கொள்வது வழக்கம். அவனுடன் குருவிச்சியும் வரும்பொழுது, வாசல் கதவை மூடுவது வழக்கமில்லை!

அவளும் அவனும் இருதயத்தால் ஒன்றியிருக்கிறார்களே தவிர-இருவரிடையே காதல் தழைத்ததின் காரணமாக உடலுறவு என்றகட்டத்திற்குச் சென்றவர்களல்ல! அப்படியொரு ஐயப்பாடு குடிமக்களுக்கு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே மாளிகைக்குள் தனித்திருப்பது போன்ற ஒரு தோற்றத்தை வெளிப்படுத்துவது கூடத் தவறு என அவர்கள் கருதினார்கள்!

பண்டாரகனின் ஒவ்வொரு அசைவையும் பார்த்து மகிழ்ச்சி கொள்பவள் குருவிச்சி! அவனது பேச்சில் இழையோடும் நயம்,

நளினம், உறுதி வாய்ந்த வீரம், தியாக உணர்வு இவற்றுக்குத் தன்னை அடிமையாக்கிக் கொண்டவள் அவள்! இப்போதல்ல, ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே-அவனுக்கு வயது பதினாறாகவும் அவளுக்கு வயது பதினைந்தாகவும் இருந்தபோதே - தங்க நாச்சியம்மையிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பயின்றபோதே - இருவரும் என்றும் தணியாத அன்பில் கட்டுண்டு விட்டனர். குருவிச்சியின் அழகுமேனி - அகன்ற விழிகள் - இவைகளில் அவன் மோகம் கொண்டான் என்பதை விட, அவளது தூய்மையான அன்புக்கு அவன் வசப்பட்டான் என்பதே உண்மை! இருவரது உள்ளங்களையும் இணைக்கக் கூடிய பெரும் சக்தியாக முல்லைத் தீவின் சுதந்திர ஜோதியை அணையவிடாமல் காத்திட வேண்டுமென்ற உணர்வு மேலோங்கி நின்றது! அந்த உணர்வின் வலிமையினால் தான் - தங்கள் லட்சியம் ஈடேறும் வரையில் திருமணம் செய்து கொள்ளாமல் காதல் நண்பர்களாக வாழ்வது எனத் தீர் மானித்துக் கொண்டார்கள்.

அருகருகே அமர்ந்து பேசுவர் - உண்பர் - உலாவிடுவர்- ஆங்கிலேய ஆதிக்கத்தைச் சமாளிக்கும் சாகசங்கள் குறித்து சிந்திப்பர் - ஒருவர் குறையை ஒருவர் குத்திக் காட்டுவர் - குறும்பு மொழி கூட வாரியிறைப்பர் - ஆனால் ஈருடல் இணைந்துதான் இன்பம் காண வேண்டுமென்ற எண்ணமே இருவருக்கும் எழுந்ததில்லை! அந்த இன்பத்தை விட மேலான இன்பமாக அவர்கள் கருதியது, ஆதிக்க வெறியரிடம் நாடு சிக்கிக் கொள்ளாமல் காப்பாற்றுவதற்கு ஆற்றுகிற கடமைதான் என்பதாகும்!

அந்தக் கடமை குறித்துத் தீர்க்கமாகக் கலந்து பேசி, ஒருவரையொருவர் நெஞ்சாரக் காதலிக்கிறோம் என்பதையும் கண்ணகிஅம்மன் முன்னால் சத்தியம் செய்து உறுதிப்படுத்திக் கொண்டு, காமத்தை அடித்தளமாகக் கொள்ளாமல் கடமையை அடித்தளமாகக் கொண்ட அந்தத் தூய காதல் உறுதிப்பட்ட மகிழ்ச்சியால் வற்றாப்பளை தெய்வத்துக்கு விசாகத் திரு விழாவும் விமரிசையாக நடத்தி வைத்த குருவிச்சி, தனது

ஐந்தாண்டு கால கனவு நிறைவேறியது என்ற களிப்பு துள்ளிட, முத்து மாளிகையின் அடுக்களைக்குள் அவசரமாக நுழைந்தாள்.

விழா முடிந்தவுடன் திரும்ப முடியாமல் வேறு சில எதிர் பாராத சம்பவங்களின் காரணமாகத் தாமதிக்க நேரிட்டதால் - பகலுணவு அருந்தும் நேரம் தள்ளிப் போய்விட்டதே என்ற கவலையுடன், பண்டாரகன் பசி பொறுக்கமாட்டான் என்பதை அறிந்திருந்த குருவிச்சி, பரபரப்பாகப் பண்டங்களை எடுத்துக் கொண்டு உணவருந்தும் அறைக்கு விரைந்தாள்.

"ஏன் குருவி இப்படிப் பறக்கிறாய்?" என்றான் அவன் கேலியாக!

"நீங்கள்தான் சிறகு கட்டிவிட்டிருக்கிறீர்களே, அதனால் தான்!" என்றாள் அவளும் குறும்பாக!

"பதறாமல் பரிமாறு! எனக்கொன்றும் அப்படிப் பசி இல்லை!"

"பசித்தால் சொல்ல மாட்டீர்கள்! ஆனால் உங்கள் முகம் சொல்லிவிடும்!"

"நீயும் உட்கார்ந்து சாப்பிடு! ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டே பசியாறலாம்!"

"பரவாயில்லை! நீங்கள் சாப்பிட்டு முடியுங்கள்!"

"நான் ஒன்று கூட மிச்சம் வைக்காமல் சாப்பிட்டு விடுவேன்!"

"இலையைக் கூடவா?"

இருவரும் கலகலவெனச் சிரித்தார்கள்! அவன் சிரிப்பில் அருவியின் ஓசை! அவள் சிரிப்பில் சதங்கையின் ஒலி!

பூரிப்பால் மேலும் பூத்துச் சிவந்த செந்தாமரைக் கன்னங் கள் மின்னிட, குருவிச்சி, பண்டாரகனுக்கு முன்னால் இலை போட்டுப் பரிமாறத் தொடங்கினாள். பால் கலந்த பச்சையரிசிக் கஞ்சியென்றால் பண்டாரகனுக்குக் கொள்ளை ஆசை! அதை ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொடுத்தாள். 'முதலில் நீ கொஞ்சம் குடி!' என்று அந்தப் பாத்திரத்தை அவள் வாயருகே நீட்டினான். அவள், தன் அழகிய கரத்தால் அதனை மெல்லத் தள்ளி - அவனையே முதலில் பருகச் செய்தாள்! அவன் பரு கிடும் அழகை, வைத்த விழி வாங்காமல் பார்த்து ரசித்தாள்.

பின்னர் பனங்கிழங்கு, அல்லைக் கிழங்கு - இவற்றைத் தேனில் தோய்த்து இலையில் வைத்தாள். அந்தக் கிழங்குகளை அவன் சுவைத்துச் சாப்பிடுகிறானா என்பதை உன்னிப்பாகக் கவனித்து உவகை பூத்தாள்! அதைத் தொடர்ந்து சோறு, இறைச்சிக் குழம்பு - பண்டாரகன், உணவின் ருசியில் ஒன்றிக் கலந்து போனான்.

பரிமாறிக் கொண்டிருந்த குருவிச்சியின் பார்வை, கதவின் பக்கம் திரும்பியது. ஒரு வீரன் பதைப்புடன் ஏதோ செய்தி சொல்லவந்திருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டாள். அந்த வீரனைப் பண்டாரகன் பார்க்கவில்லை. அவன் வேறு பக்கம் திரும்பி உட்கார்ந்து உணவருந்திக் கொண்டிருந்ததால்- அவனுக்குத் தெரியாமலே குருவிச்சி நாச்சி, அந்த வீரனைப் பார்த்து சைகை செய்து என்னவென்று கேட்டுக் கொண்டே வெளியே வந்தாள் கதவருகே!

சுந்தரலிங்கத்தால் அனுப்பப்பட்ட வீரன் அவன்! "அம்மா! தங்கள் பாட்டனார் சங்கிலித்தளபதியாரை ஆங்கிலேய சிப்பாய்கள் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள்! சுந்தரலிங்கம் இதை உடனே சொல்ல என்னை அனுப்பி விட்டு அவர் அங்கேயே இருக்கிறார்!" என்று தகவல் கொடுத்தான் அந்த வீரன்!

"சரி! சரி! மன்னர் காதில் இதைப் போடாதே! எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்!" என்று கூறிவிட்டு குருவிச்சி உள்ளே வந்து - மீண்டும் பண்டாரகனுக்குப் பரிமாற ஆரம்பித்தாள்.

"என்ன குருவி? யார் அது? எங்கே வந்தான்? ஏதாவது விசேஷமா?" என்று சாப்பிட்டுக் கொண்டே சாதாரணமாகக் கேட்டான் பண்டாரக வன்னியன்!

"ஒன்றுமில்லை! கடல் மீன் வாங்கி வரச் சொல்லியிருந்தேன்! மீனவர்கள் எல்லாம் திருவிழாவுக்குப் போய்விட்டதால் மீன் கிடைக்கவில்லையென்று இப்போது வந்து சொல்கிறான் புத்திசாலி!"

என்று பதில் சொல்லி சமாளித்தாள் குருவிச்சி!

ஒருவழியாகப் பண்டாரகன் உணவருந்தி முடித்துவிட்டு- அவளைச் சாப்பிடுமாறு வற்புறுத்தினான்! அவளுக்குத் தானே

பரிமாறுவதாக அடம் பிடித்தான்! தனது தாத்தாவுக்கு என்ன நேரிட்டதோ - என்ன ஆனாரோ - என்ற ஏக்கம் ஒருபுறத்தில் அவளை வாட்டினாலும்கூட, அதை வெளிப்படுத்தாமல் இருப்பதுதான் சரியென்று அவள் தீர்மானித்துக் கொண்டாள்!

நாட்டுப் பிரச்சினையில் கவனம் செலுத்திக் களத்தில் நிற்கும் மன்னனுக்கு, தனது வீட்டுப் பிரச்சினைக்காக ஒரு புதுக் கவலையை அளிக்கக் கூடாது என்பது அவள் எண்ணம். தாத்தாவைப் பற்றித் தகவல் அறியவும், அவரைக் காப்பாற்றவும் தானே செல்வது என மனதுக்குள் முடிவு செய்து கொண்டாள். அதனால் தன்னுள்ளத்தைத் திடப்படுத்திக் கொண்டு, தனது காதலன் தனக்குப் பரிமாறுவதில் மட்டற்ற மகிழ்ச்சியுற்றவளாகக் காட்டிக்கொண்டு, சாப்பிட்டாள்.

பண்டாரகனுக்குள்ள எத்தனையோ பிரச்சினைகளில், சங்கிலித் தளபதியின் பிரச்சினையும் சேர்ந்து கொள்வானேன்? அதைத் தான் ஒருத்தியே முன்னின்று கவனிக்கலாம் - என்று கருதிய குருவிச்சியின் தியாக உள்ளத்திற்கு ஈடு இணை ஏது?

"நீங்கள் ஒய்வெடுத்துக் கொள்ளுங்கள்! நான் கண்ணகி யம்மன் கோயில் பிரசாதங்களைக்கொண்டு போய் தாத்தாவுக்குக் கொடுத்துவிட்டு, அவரிடம் ஆசீர்வாதமும் பெற்று வருகிறேன்" எனக் கூறிக்கொண்டே, உறங்கும் அறையில் உள்ள படுக்கையைத் தட்டிப் போட்டாள் குருவிச்சி!

"தாத்தாவிடம் ஆசீர்வாதம் பெற நான் வரக்கூடாதா? அப்போதே இருவரும் வற்றாப்பளையிலிருந்து போய், தாத்தாவைப் பார்த்திருக்கலாமே!" என்று கேட்டான் பண்டாரகன்!

"இனிமேல் இருவரும் ஒன்றாக வந்து உங்களைப் பார்ப்பது மணக்கோலத்துடன்தான்! என்று தாத்தாவிடம் நான் ஏற்கனவே சொல்லியிருப்பதை மறந்துவிட்டீர்களா? விடை கொடுங்கள்! போய் வருகிறேன்! நீங்கள் ஒய்வெடுத்துக் கொள்ளுங்கள்!"

"உன் உத்திரவுப்படியே ஆகட்டும்! எதற்கும் பாதுகாப்புக்கு வீரர்களை அழைத்துப்போ! தனியாகக் கிளம்பி விடாதே!"

"தனியாக இல்லை! பாதுகாப்பு வீரர்களை அழைத்துக் கொண்டே போகிறேன்!"

"எப்போதும் போல் இரண்டு மூன்று பாதுகாப்பாளர் களுடன் போகாதே! பத்து வீரர்களாவது உன்னுடன் வரட்டும்! என்ன? நீ அழைத்துப் போகிறாயா? அல்லது நானே ஏற்பாடு செய்து அனுப்பட்டுமா?"


"உங்கள் விருப்பப்படி பத்து பேரை அழைத்துப் போகிறேன்! நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்! நான் சொன்னால் வரமாட்டார்களா?"

"குருவீ! குருவீ! உன் குறும்புக்கு என்ன பரிசு தருவதென்றே தெரியவில்லை!"

"உங்களையே தந்திருக்கிறீர்களே, போதாதா?" என்று சோகத்திலும் ஒரு புன்னகையைச் சிந்த விட்டு, குருவிச்சி, முத்து மாளிகையிலிருந்து வெளியேறி, கதவையும் சாத்திக் கொண்டு போய் விட்டாள்.

படுக்கையில் குருவிச்சி பற்றிய இன்ப நினைவுடன் புரண்டு படுத்துக் கண்களை மூடித் தூங்குவதற்கு முயன்ற பண்டாரக வன்னியன் காதில் - ஏககாலத்தில் நூறு குதிரைகளின் குளம் படிச் சப்தம் கேட்டது! தூங்க முயன்றவன், திடுக்கிட்டு எழுந்தான்!

சிலந்தி வலையோ?
சிறிய பூச்சியோ?



முத்து மாளிகையின் வாயிற்புறம் வந்து பார்த்த பண்டாரக வன்னியனுக்கு மெய்க்காப் பாளன் ஒருவன் விளக்கம் சொன்னான், குருவிச்சி நாச்சியார்தான் நூறு குதிரை வீரர் களைத் தன்னுடன் அழைத்துச் செல்வதாக!

பண்டாரகனுக்கு ஒன்றும் புரியவில்லை! கண்ணகி அம்மன் கோயில் பிரசாதத்தை சங்கிலித் தாத்தாவிடம் கொடுத்துவிட்டு வருவதாகச் சொல்லிப் போனாளே தவிர, காக்கை வன்னியனை எதிர்த்துக் களம் காணப்போவதை அவனிடம் அவள் தெரிவிக்கவில்லை - அத னால் அவனுக்குக் குழப்பம்! தாத்தாவை சந்தித்து விட்டு வர நூறு வீரர்கள் எதற்காக?

மெய்க்காப்பாளனும் அதற்கு மேல் எந்த விபரமும் தெரி விக்கவில்லை. காரணம் அவனுக்கும் எதுவும் தெரிந்திருக்க வில்லை. அவனிடம் மேலும் கிளறிக் கிளறிக் கேட்க மன்னன் விரும்பவில்லை. அப்படிக் கேட்பதால் தன்னிடம் கூடக் கூறா மல் அவள் ஏதோ ஒரு விஷயத்தை மறைத்திருக்கிறாள் என்று மெய்க்காப்பாளன் எண்ணக்கூடும். தனக்கும் அவளுக்குமிடையே ஒரு சாதாரண விஷயத்தில்கூட கருத்து மாறுபாடு இல்லை என்பதிலும், ஒருவருக்குத் தெரியாமல் ஒருவர் எந்த முக்கியமான காரியங்களிலும் ஈடுபடுவதில்லையென்பதிலும் பண்டாரகனுக்கு ஒரு இன்பமயமான மன ஆறுதல் எப்போதும் உண்டு! அதனால் அவன் - நாச்சியார், தன்னிடம் சொல்லாமலே நூறு வீரர்களுடன் புறப்பட்டுச் சென்றுள்ள காரணத்தை அறிந்து கொள்ள விரிவாக விசாரிக்க விரும்பவில்லை.

ஏதோ பகைவரின் எதிர்ப்பையொட்டித்தான் அவள் அவ்வாறு சென்றிருக்க வேண்டும் - அதை ஏன் தன்னிடம் சொல்லியிருக்க கூடாது? அப்படியாயின் அது எந்தப் பகை? ஆதிக்கக்காலை அழுத்தமாக ஊன்றிட அலைந்து கொண் டிருக்கும் ஆங்கிலேயப் பகையா? அல்லது ஆதிக்கத்தை ஆங்கி லேயரிடம் கைமாற்றிக் கொடுத்துவிட்டு மிச்சம் மீதி சொச்சம் என்ற நிலையில் திரிந்து கொண்டிருக்கும் ஒல்லாந்தர் எனப் படும் டச்சுக்காரப் பகையா?

எப்படியிருப்பினும் - பகை எதுவாக இருப்பினும், பண்டார கனுக்கு ஒரு தைரியம் எப்போதும் போல் நிச்சயமாக இருந்தது. எதையும் துணிவுடன் சந்தித்து, வீரம் விளைத்து, வெற்றியுடன் திரும்புவாள் குருவிச்சி நாச்சியென்பது தான் அந்தத் தைரியம்!

குதிரைகள், நாச்சியாரைத் தொடர்ந்து சென்ற வேகத்தில் கிளம்பிய புழுதிப் படலத்தையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு உள்ளே வந்த பண்டாரகன், படுக்கையில் சாய்ந்து கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தான்!

எங்கே போயிருப்பாள்? எதற்காகப் போயிருப்பாள்? தாத் தாவுக்குப் பிரசாதம் கொடுக்கப் போவதற்கு நூறு வீரர்கள் பாதுகாப்பா? இருக்காது! இருக்கவே முடியாது! பத்து வீரர் களைப் பாதுகாப்புக்கு அழைத்துப் போ என்றுதானே நான் சொன்னேன்! தாத்தாவுக்குப் பிரசாதம் கொடுப்பதுதான் முக்கிய நோக்கமென்றால் அப்போதே வற்றாப்பளையிலிருந்து அருகிலுள்ள அந்தக் கிராமத்துக்குப் போய் வந்திருக்கலாமே! நாச்சியாரின் நோக்கம் எதுவாக இருக்கும்? எதுவாக இருந் தாலும் என்னிடம் சொல்லியிருக்கலாமே! என்றைக்குமில்லாத புதுமையாக இன்றைக்கு நடந்திருக்கிறதே! கடல் மீன் என்றாள் கண்ணகி கோயில் பிரசாதம் என்றாள்! கடைசியில் நம்மைக் குழப்பத்தில் தள்ளிவிட்டாளே! அய்யோ! அவளுக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால்? எதுவும் நேராது! அவளால் எதிரிகளை முறியடிக்க முடியும் - இன்று நேற்றல்லவே - தங்கநாச்சியம்மை யிடம் பயின்ற காலத்திலேயே குருவிச்சியின் மன உறுதியையும் வீரச் செயல் புரியும் துடிப்பையும் நான் அருகில் இருந்தே அறிந்திருக்கிறேனே!

ஒருமுறை - அடடா! நீர்நிலைப் படித்துறையொன்றில் அவள் அமர்ந்திருக்கிறாள்! நான் அவளுக்குத் தெரியாமல் அவள் கண்களைப் பொத்தி விளையாட வேண்டுமென்ற ஆவலுடன் பூனைபோல் நடந்து புதர்களில் மறைந்து மறைந்து அவளை நெருங்கிக் கொண்டிருக்கிறேன்! அதற்குள் ஒரு ஆண் குரல் கேட்டு அவள் திரும்பிப் பார்க்கிறாள் அசட்டுச் சிரிப் பென்று அதைக் கூற முடியாது. ஆந்தைக்குப் பற்கள் இருந்து அது இளித்தால் எப்படியிருக்கும் - அதுபோன்ற ஒரு சிரிப்பு! அந்த சிரிப்புடன் அவள் எதிரே வந்து நிற்கிறான் காக்கை வன்னியன்! "என்ன குருவிச்சி! நீண்ட சிந்தனை?" என்று கேட்டுக் கொண்டே படித் துறையில் அவனும் உட்காருகிறான். எனக்கு அவளைப் பற்றித் தெரியும். என்மீது அவள் கொண் டுள்ள அன்புக்கு எல்லையே கிடையாது என்பதும் தெரியும். காக்கை வன்னியனை எப்படிக் கடுமையாக நடத்தப் போகி றாளோ என்ற பயம் குடிகொண்டது எனக்கு! அதைத் தடுக் கலாமென்று முந்திக்கொண்டு அவர்கள் முன் போய் நின்றால் - அது அநாகரீகச் செயலாக இருக்கும்! இருந்தாலும் ஆண்மனம் அல்லவா? என்னதான் நடக்கிறது பார்ப்போமே என்ற ஒரு சபலம்! ஆமாம் சந்தேகம்! அதை இப் போது நினைத்தாலும் வெட்கமாக இருக்கிறது! அவளைப் போய் அப்படி எண்ணி னோமேயென்று!

காக்கை வன்னியனும் எங்களுடன் தங்கநாச்சியாரின் குருகுலத்தில் இருந்தவன்தானே! அந்த நெருக்கத்தில் அவன் குருவிச்சியிடம் பேச முனைந்ததும் - அவள் அவனைப் பார்த் துச் சிரித்துவிட்டு "சங்க இலக்கியங்களைப் பற்றித் தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்" என்கிறாள்!

"ஆமாம் குருவிச்சி! சங்க இலக்கியம் என்ன இனிமை! என்ன இன்பம்! காதலியின் தாய், வீட்டு வாசலில் இருக்கிறாள். காதலன் போய் தாகத்திற்குத் தண்ணீர் கேட்கிறான். அவள், தனது மகளிடம் தண்ணீர் கொண்டுவரச் சொல்லுகிறாள். தண்ணீர்க் குவளையை நீட்டும் காதலியின் கையைக் காதலன் பிடிக்கிறான். அப்போது காதலி வெட்கத்தால் அம்மா என

அலறி விடுகிறாள் தன்னை மறந்து! 'என்னம்மா ஆச்சு' எனத் தாய் ஓடி வருகிறாள். காதலிக்கோ தன் காதலனைக் காட்டிக் கொடுக்க மனம் வரவில்லை. ஒன்றுமில்லையம்மா! அவருக்கு விக்கல் எடுத்தது என்கிறாள். அந்தத் தாயும் அதை நம்பி, அவனது முதுகில் தடவிக் கொடுக்கிறாள். முதுகுப்புறம் தாய் நிற்க - அவளறியாவண்ணம் காதலன் காதலியைப் பார்த்து புன்னகை புரிகிறான்! அதை அந்தக் காதலி வர்ணிக்கிறாள், 'நகைக்கூட்டம் செய்தான் அக்கள்வன் மகன்' என்று! எவ்வளவு அருமையான காதல் கற்பனை! ஆகா! ஆகா!"

இப்படிக் காக்கை வன்னியன் வாயைப் பிளந்துகொண்டு ரசிக்கத் தொடங்குகிறான். ஆனால் குருவிச்சியோ அவனைப் பார்த்துச் சொல்கிறாள்.

"நீங்கள் அந்தக் காட்சிகளை மட்டுமே சுவைக்கிறீர்கள் போலிருக்கிறது! நான் அப்படியல்ல, தனது தந்தையும், தமையனும், கணவனும் களத்தில் மாண்ட செய்தி கேட்டு, கடைசியாக தனது இளம் மகனையும் போர்முனைக்கு அனுப்பு கிறாளே புறநானூற்றுத் தாய் அவளைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்"

"குருவிச்சி! அந்தத் தாயைப் பற்றி என்ன சிந்திக்கிறாய்?"

"அந்தத் தாயாக நானிருந்தால் - மகனை வழியனுப்பி வைத்தது மட்டுமல்ல, நானும் கையில் வாளேந்தி, களம் நோக்கிப் போயிருப்பேன்! அதைப்பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்."

இப்படியொரு பதிலை எதிர் பார்க்காத காக்கை வன்னியன் திகைக்கிறான். நானோ உடல் புல்லரிக்கப் புதர் மறைவில் நிற்கிறேன்! அவள் எனக்கு எவ்வளவு பொருத்தமானவள் என்று பெருமிதம் கொள்கிறேன். காக்கை வன்னியன், தனது கழுகு விழிகளால் என் குருவிச்சியை விழுங்கி விடுவது போலப் பார்த்துக் கொண்டே தொடர்ந்து பேசுகிறான்.

"வளையல் ஏந்தும் கரங்களில் வாள் ஏந்துவதா? ஆண் என்னும் மரத்தில் படருவதற்கேற்ற அழகுமேனி பெற்றிருக்கிற காரணத்தால்தானே பெண்ணைக் கொடி என்கிறார்கள்!

அந்தக் கொடி, அப்படிப்பட்ட முரட்டுத்தனமான வேலைகளுக் கெல்லாம் போகலாமா?"

அப்போது குருவிச்சி சிரிக்கிறாள். காக்கை வன்னியனைக் குறும்பாக நோக்குகிறாள்.

"காக்கைக்கு, புராணங்களில் பரிச்சயம் உண்டல்லவா?"

"நிறைய உண்டு! ஏன் கேட்கிறாய்? எந்தப் புராணத்திலாவது ஏதாவது சந்தேகமா? கேள்! விளக்கமளிக்கிறேன்!"

"இல்லை! பெண் என்றால் கொடி போல வளைந்து நெளிந்து கிடக்கவேண்டும்! வாளேந்துவது கூடாது என்கிறீர் களே - புராணத்தில் சக்தி தேவியே காளி வடிவமெடுத்து, கையில் சூலமேந்தி மகிஷாசூரனைக் கொல்லுகிறாளே! அவளும் பெண்தானே!"

இந்தப் பதிலைக் கேட்டதும் காக்கை வன்னியன் திணறிப் போகிறான். அவன் அங்கு வந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதில் குறியாக இருந்ததால், கொஞ்சம் அவசரமாகவே குருவிச்சியின் அருகில் நெருங்கி உட்காருகிறான். அவன் எண் ணத்தைப் புரிந்துகொண்ட குருவிச்சி, படித்துறையிலிருந்து எழுந்து நிற்கிறாள், முட்டாள் காக்கை, "ஏன் எழுந்துவிட்டாய்?" என்று கேட்டுக்கொண்டே அவள் கரம் பற்றுகிறான். அவள் கையை விடுவித்துக் கொள்ளவே காக்கைக்கு முகம் அழுது வடிந்தாலும் முயற்சியை விடவில்லை.

"குருவிச்சி! உன்னை ஒன்று கேட்கிறேன்! தயவுசெய்து பதில் சொல்! கல்யாணம் செய்து கொள்வதா இல்லையா என் பது பற்றி தீர்மானிக்கவே ஒரு காலக்கெடு வைத்துப் பேசிக் கொண்டு, உன்னிடம் ஒரு நண்பனைப் போல பழகிக் கொண் டிருக்கும் பண்டாரகனையும் - நீ இதழசைத்தால் இன்றைக்கே மணநாளை முடிவு செய்து உன்னை மஞ்சத்தில் கொஞ்சிடத் துடிக்கும் என்னையும் ஒப்பிட்டுப் பார்! அவனைவிட நான் உன் மேல் உயிரை வைத்திருப்பது உனக்குப் புரியவில்லையா?"

"நீங்கள் என்மீது உயிரை வைத்து என்ன பயன்? நானு மல்லவா பதிலுக்கு என் உயிரை உங்கள்மீது வைக்கவேண்டும்? நாட்டின்மீது உயிரை வைத்திருக்கும் அந்த நல்லவர் மீது

வல்லவர் மீது - நான் உயிரை வைத்திருக்கிறேன் என்பது தெரிந்தும் விலகிக்கொள்ளத் தெரியாதவர்களை என்ன வென்று அழைப்பது?"

"என்னமோ குருவிச்சி! உன்னை எப்படியும் அடைந்திட வேண்டுமென என் மனம் துடிக்கிறது! உன்னை அணைத்து மகிழ்ந்து ஆனந்தம் காணத்தான் வேண்டுமென விதி என் தலையைப் பிடித்து அழுத்திக் கொண்டேயிருக்கிறது!"

குருவிச்சி முகம் கறுத்துவிடுகிறது! அதுபற்றிக்கூடக் கவலைப்படாமல் அவன் அவள் மீது தாவிப் பாய்கிறான்! ஒரு மின்னல், அவ்வளவுதான்!

என் குருவிச்சிக்கு எங்கிருந்து தான் அவ்வளவு வலிமை வந்ததோ - காக்கை வன்னியனைப் பிடித்து உலுக்கி, படித் துறையிலிருந்து நீர்நிலையை நோக்கி ஒரு தள்ளு தள்ளிவிட்டு மளமளவென்று அங்கிருந்து போய்விடுகிறாள்.

ஆழத்தில், அடிச்சேற்றில் கால்கள் சிக்கிக்கொள்ள காக்கை வன்னியன் தன் கைகளைப் போட்டு அடித்துக்கொண்டு மூச்சு முட்டத்தவித்த அந்த நிகழ்ச்சியை இப்போது நினைத்தாலும் சிரிப்பு வருகிறது!

பாவம் - போனால் போகிறான் அவனைக் காப்பாற்று வோமென்று எண்ணுகிறேன்! உடனே சென்றால், அவ்வளவு நேரம் நான் அங்கிருந்தது அவனுக்குத் தெரிந்துவிடும் என்ப தால் கொஞ்சம் தாமதித்து - பிறகு படித்துறைப் பக்கம் ஓடு கிறேன். பதறிப் பதைப்பது போல நடித்துக்கொண்டு, அவ னைத் தண்ணீருக்குள்ளிருந்து இழுத்து வெளியே கொண்டு வருகிறேன்.

என்ன நடந்தது என்று கேட்டால் சொல்லுகிறான் - ஒன்று மில்லை! முகம் கழுவிக்கொள்ள படித்துறையில் கால் வைத் தானாம் - பாசி பிடித்த படிகள் வழுக்கி விட்டனவாம் - அத னால் விழுந்துவிட்டானாம்! நானும் அதனை நம்பிக் கொள் வதாகப் பாசாங்கு செய்கிறேன்.

அந்த நிகழ்ச்சி இன்னமும் என்கண்களை விட்டகலவில் லையே! கற்பின் மாண்பு - எடுத்த முடிவில் உறுதி - அஞ்சா

நெஞ் சம் - அதற்கேற்ப வீரச் செயல் - இத்தனையும் மொத்த உருவாய்க் காணும் குருவிச்சி நாச்சியார், பகையைப் புறங் காண்பாள் என்ற திடநம்பிக்கை எனக்கிருக்கிறது எனினும்- எதற்காக வீரர்கள் புடைசூழப் போனாள்? எங்கே போனாள்? எனத் தெரியவில்லையே! என்றவாறு பண்டாரக வன்னியன் படுக்கையில் புரண்டுகொண் டிருந்தான் தூங்காமல்!

குதிரை வீரர்கள் நூற்றுவருடன் புறப்பட்ட குருவிச்சி நாச்சியார், முதலில் சுந்தரலிங்கக் குடும்பனைச் சந்திக்க வேண்டுமென்ற நினைவுடன் சென்றுகொண்டிருந்தாள். சங் கிலித் தாத்தாவை, ஆங்கிலேயச் சிப்பாய்கள் தூக்கிக் கொண்டு போயிருக்கிறார்கள் என்றால், அவரைக் காக்கை வன்னியன் மாளிகையில்தான் வைத்திருக்க வேண்டுமென அவளும் யூகித் தாள். தன்னுடன் வரும் வீரர்களைவிடப் பலமடங்கு அதிக மான வீரர்கள். அந்த மாளிகையில் இருப்பார்கள் என்று அவளுக்குத் தெரிந்தாலும்கூட, அவளோடு இயல்பாக ஊறி யிருந்த அந்தப் போர்க் குணமும் துணிவும் அவள் உள்ளத் தில் எவ்விதத் தயக்கத்திற்கும் இடம் தரவில்லை. மிக விரை வில் சுந்தரலிங்கம் காத்திருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தாள்.

"நீங்கள் எதற்காக இங்கே புதிய சிரமத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்? நீங்கள் தமிழகம் திரும்புங்கள்! இங்குள்ளவற்றை நாங்கள் கவனித்துக்கொள்கிறோம்!" என்றாள் சுந்தரலிங்கத் தைப் பார்த்து!

"எங்கும் விளையும் தீமை எனினும் அது தமிழனுக்கு வரும் தீமைதானே! அதில் இங்கு, அங்கு என்று பேதம் பார்ப்பானேன்? சங்கிலித் தாத்தாவை மீட்கும் வரையில் நான் தங்களுக்குத் துணையாக இருப்பது என்று தீர்மானித்துவிட்டேன்!" என்று உறுதியாகப் பதில் அளித்தான் சுந்தரலிங்கக் குடும்பன்!

பின்னர் அந்தச் சிறிய படை, காக்கை வன்னியனின் கோட்டை யிருக்கும் பாதையில் தனது பயணத்தைத் தொடங்கியது!

குருவிச்சிநாச்சியின் தலைமையில் வீராவேசமாகப் பண்டா ரக வன்னியனின் படை வீரர்கள் வருகிறார்கள் என்ற செய்தி,

காக்கை வன்னியனுக்குஎட்டியவுடன், அவன் தனது ஆங்கிலேய அதிகாரிகளுடன் ஆலோசனை கலந்தான்!

அவளைப் படைகளுடன் கோட்டை வரையிலே வரவிட்டு சுற்றிச் சூழ்ந்து வளைத்துக் கொள்வது என்று முடிவெடுத்து அதற்கான வியூகம் வகுக்கப்பட்டது!

காக்கைக்கு ஒரே மகிழ்ச்சி! இருக்காதா என்ன? குருவிச்சி நாச்சியார், தனது கோட்டைக்குள்ளேயே வந்து சிக்கப் போகி றாளே- தனது விருப்பம் போல் அவளைச் சுவைக்கலாமே என்ற வெறி, அவனுக்குத் தலைதூக்கி நின்றது!

வலை பின்னிக்கொண்டு அமர்ந்திருக்கும் சிலந்தி போலத் தன்னையும் - அதில் அகப்பட்டுக்கொள்ளப் பறந்துவரும் சிறிய பூச்சிபோல குருவிச்சியையும் அவன் கற்பனை செய்துகொண்டு, ஒரு மதுக் கலயத்தைக் காலி செய்தான்.

அதிகாரி வழங்கிய ஆலோசனை

11

குருவிச்சி நாச்சியார் தலைமையில் வரும் படை, காக்கைக் கோட்டையில் உள்ள வீரர் களை நோக்கி மோதும் என எதிர்பார்த்ததற்கு மாறாக- கோட்டையிலிருந்து அரைக்கல் தொலைவுக்கு அப்பாலேயே நின்றுவிட்டதாகக் காக்கை வன்னியனுக்குமுதல் தகவல் வந்தது. தகவல் தந்த அந்த வீரனைத் தொடர்ந்து மற் றொரு வீரன் புரவியில் விரைந்து வந்தான்.

"தானும் தனது படை வீரர்களும் தொலைவிலேயே இருந்து கொண்டு குருவிச்சி நாச்சி, யாரோ ஒரு வீரன் மூலமாகத் தங்களுக்குச் செய்தி அனுப்பியிருக்கிறாள்! அவன் அரண் மனைக்கு வந்து கொண்டிருக்கிறான். வந்தால் அனுமதிக்க லாமா?" எனக் கேட்டான் அவன்.

காக்கையோ, வியப்பிலாழ்ந்தவனாகத் தன்னருகேயுள்ள ஆங்கிலேய அதிகாரியின் முகத்தைப் பார்த்து, அந்த அதி காரியின் அபிப்பிராயத்தைக் கோரினான்.

"நாம் பலமுள்ளவர்களாக இருக்கும் வரையில் எந்த பய மும் இல்லை! குருவிச்சி என்னதான் சொல்லியனுப்பியிருக் கிறாள் எனத் தெரிந்து கொள்ளலாமே! அதனால் அந்த வீரனை அனுமதிப்பதில் தவறில்லை!" என ஆங்கிலேய அதிகாரி கருத் துத் தெரிவித்ததும் காக்கை, குருவிச்சியிடமிருந்து செய்தி கொண்டு வருபவனை அழைத்து வருமாறு கட்டளை பிறப் பித்தான்.

எதிரியாக இருந்தால் கூடப் பரவாயில்லை ஒரு துரோகியின் கோட்டைக்குள், அப்படித் தன்னந்தனியாக வரத் துணிந்த அந்த வீரன் யார்?

அவன்தான் சுந்தரலிங்கக் குடும்பன்! அவன்தான் அத் தகைய ஆலோசனையைக் குருவிச்சி நாச்சிக்குக் கூறியவனும்கூட!

"சங்கிலித் தளபதியாரை மீட்கப் போகிறோம் என்று முனைந்து, நீங்களும் போய் அவர்களிடம் சிக்கிக் கொள்வதால் என்ன பயன்? முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது - காக்கையின் கோட்டைக்குள்ளேதான் சங்கிலியார் இருக்கிறாரா என்பதை! அடுத்தது அவரை விடுவிக்க முடியுமா?-முடியாதா? என்று காக்கையிடமே கேட்டறிவது! எனக்கு அனுமதி கொடுங்கள்! நானே சென்று இது குறித்து காக்கை வன்னி யனிடம் பேசுகிறேன்!"

சுந்தரலிங்கத்தின் இந்த யோசனை குருவிச்சிக்குப் பிடித்திருந்த காரணத்தால் சம்மதித்தாள்! சுந்தரலிங்கத்தைக் காக்கை வன்னியனிடம் அனுப்பிவிட்டு, அவளும் வீரர்களும் அங்கேயே மரங்கள் அடர்ந்து நிழல் விரிந்திருந்த ஒரு பகுதியில் இறங்கி அமர்ந்தனர். தமிழகத்திலிருந்து வந்துள்ள சுந்தரலிங் கக் குடும்பனின் கடமையுணர்வும், ஆர்வமும் - அஞ்சாநெஞ்ச மும் அவளது பாராட்டுக்குரியவை ஆயின! தமிழகத்திலிருந்து வந்த வேலையை முடித்துக் கொண்டு - திரும்பிச் செல்வதற்குப் பதிலாக, இங்கேயுள்ள இடர்பாடுகளையும் பகிர்ந்து கொள்ள வலுவில் தன்னை ஒப்படைத்துக்கொண்ட அவனது பரந்த மனப்பான்மையை எண்ணியவாறு, அவள் ஒரு மரத்தின் பெரிய வேர் முடிச்சின் மீது உட்கார்ந்திருந்தாள்.

அரண்மனை ஆலோசனை மண்டபத்திற்குள் அழைக்கப்பட்டு வருபவன் இலங்கையைச் சேர்ந்த தமிழனாகத் தெரியாதது கண்டு திகைப்புற்றான் காக்கை வன்னியன்!

எதிர் வந்து, கைகட்டி, வாய் புதைத்து, பணிவுடன் நின்று செய்தி தெரிவிப்பான் என காக்கைவன்னியன் எதிர்பார்த்ததற்கு மாறாகச் சுந்தரலிங்கக் குடும்பன் - அந்த ஆலோசனை மண்ட பத்தை அலங்கரித்துக் கொண்ட ஆடம்பரமான நாற்காலிகளில் ஒன்றில் அவனே அமர்ந்து கொண்டான்.

பார்த்த மாத்திரத்திலேயே பண்டாரக வன்னியனுக்கும் காக்கைவன்னியனுக்கும் இடையே உள்ள பெரும் வேறுபாடு

சுந்தரலிங்கத்திற்குப் புரிந்துவிட்டது! பண்பு, வீரம், பாசம், அன்பு, அஞ்சாமை, பழகுதற்கு எளிமை இத்தனையும் பண்டாரகனின் தலையைச் சுற்றிலும் தகத்தகாயமான ஒளிவட்டமாகத் திகழ்வதையும் - பழிவாங்கும் முகப்பாவமும் - துரோக சிந்தனையை வழிய விட்டுக் கொண்டிருக்கும் சதிக் கண்களும் - காக்கை வன்னியனின் குணத்தை எளிதில் புலப்படுத்துவதையும் சுந்தரலிங்கக் குடும்பன் ஒரு கணத்திற்குள் உணர்ந்து கட்டபொம்மன் வடிவில் பண்டாரகன் இருப்பதையும் எட்டப்பன் உருவில் காக்கை இருப்பதையும் நினைத்து "தமிழ் இனமே! இதுதான் உன் நிலையா?" எனக் கண்கலங்கினான். நல்ல வேளை அவன் விழிகளைக் கண்ணீர் திரையாக மறைத்து - திரை போலவே விலகிவிட்டது! திவலைகளாகக் கன்னத்தில் விழவில்லை!

"அமர்க" எனச் சொல்லவுமில்லை - அமர்வதற்கு அனுமதியும்கேட்கவில்லை அதற்குள் அவனாகவே அமர்ந்துவிட்டானே, இவன் யாராக இருக்கும்? பண்டாரகனின் ஆட்சியில் இவன் வகிக்கும் பொறுப்பு எதுவாக இருக்கும்? என்ற சிந்தனைச் சிக்கலுடன் காக்கை வன்னியன், சுந்தரலிங்கத்திடம் பேச்சுக் கொடுத்தான்.

"என்ன விஷயம்?"

இந்தக் கேள்விதான் அவனது பேச்சின் ஆரம்பம்!

"முதலில் நான் யார் என்று சொல்லி விடுகிறேன். என் பெயர் சுந்தரலிங்கம். தமிழகத்தில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போர்க் குரல் கொடுக்கும் பாஞ்சாலங்குறிச்சி மன்னன் கட்டபொம்மனின் தானைத் தளபதியாம் வெள்ளையத் தேவனுக்கு உற்ற நண்பன்! பாஞ்சைப் படையில் நானும் ஓர் துணைத் தளபதிதான்! என்னடா இது, தமிழ்நாட்டிலிருந்து இவன் ரகசியமாகத்தானே வந்திருக்க முடியும்! இருந்த போதிலும் வெட்டவெளிச்சமாக உண்மையைப் பேசுகிறானேயென்று நினைக்கக்கூடும் நீங்கள் எல்லோரும்! தங்கள் சொந்த மண்ணையும், சுதந்திரத்தையும், சுயமரியாதையையும் பாதுகாத்துக் கொள்ளச் சுழலும் வாள் தூக்கிக் கிளம்பிவிட்ட என்னைப்

போன்றோர் - எந்தக் கணத்திலும் சாவைத் தழுவிடத் தயாராக இருக்கவேண்டும்! அவ்வாறே இருக்கிறோம்! ரகசியமாக இலங்கைப் பூமிக்கு வந்த நான் ரகசியமாகவே திரும்பியிருப் பேன்! ஆனால் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் உங்களை யெல்லாம் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளேன்!"

பீடும் பெருமிதமும் நிறைந்த சுந்தரலிங்கத்தின் பேச்சு காக்கை வன்னியனையும் அவனைக் காக்கும் ஆங்கிலேய அதிகாரிகளையும் அயர்த்திவிட்டது.

"குருவி நாச்சியாரிடமிருந்து கொண்டு வந்துள்ள செய்தி என்ன?" காக்கை கேட்டான், ஆணவத்தைச் சிறிதும் மறைத்திட முயற்சிக்காமல்!

"நாச்சியாரின் பாட்டனார் சங்கிலித் தளபதியார் ஆங்கிலேயச் சிப்பாய்களால் கடத்தப்பட்டுள்ளார். அவர் இங்குதான் அடைக்கப்பட்டிருக்கக் கூடுமென ஒரு யூகம். எங்கள் யூகம் சரிதானா? என்பதை முதலில் அறிவித்தால் - பிறகு நான் சொல்லவேண்டிய செய்தியைச் சொல்லுவேன்!"

"யூகமல்ல! உண்மைதான்! ஆங்கிலேய துரைகளிடம் இந்தக் காக்கைக்கு இருக்கும் விசுவாசத்தையும் - அவர்கள் என்னிடம் வைத்துள்ள நம்பிக்கையையும் புரிந்து வைத்திருப்பவர்கள். ஆங்கிலச் சிப்பாய்களால் கடத்தப்பட்ட சங்கிலித் தளபதி இந்தக் கோட்டையில் தானிருக்க வேண்டுமென்பதை யூகிப்பதில் எந்தவித ஆச்சரியமும் இருக்க முடியாது!"

"நன்றி! உண்மையைச் சொன்னதற்கு! ஆனால் ஒன்று! இந்தச் செய்தி பண்டாரக வன்னியருக்கு இன்னமும் தெரிவிக்கப்படவில்லை! முழுப்பொறுப்பையும் குருவிச்சி நாச்சியாரே தனது தலையில் சுமந்து கொண்டு, தனது பாட்டனாரை மீட்டுச் செல்வதற்கு வந்துள்ளார். நான்தான் நாச்சியாருக்கு முதலில் பேசிப் பார்க்கலாம் என மாற்று யோசனை சொன்னேன். மோதுதல் எழுந்தால் முல்லைத் தீவின் படை முழுமையும் திரளும், நீங்களும் இலங்கைத் தீவில் குவிக்கப்பட்டுள்ள அந்நியப் படைகள் அனைத்தையும் இங்கு கொண்டு வந்து உங்கள் கோட்டையைக் காப்பாற்றிக் கொள்ளப் பிரயத்தனப்பட

வேண்டியிருக்கும். அப்படியொரு விரும்பத்தகாத சூழ்நிலை ஆங்கிலேயர் மீது காக்கை வன்னியர் தினிக்க மாட்டார் என நம்புகிறேன்!"

"அதனால்?" என்று காக்கை வன்னியன் தனது மீசையைத் தடவிக்கொண்டு, சுந்தரலிங்கத்தை முறைத்து விழித்தான்! அந்த விழிகளிலிருந்து ஒரு படி விஷம் கொட்டியது!

அதற்குள் அங்கிருந்த ஆங்கிலேய அதிகாரி சுதாரித்துக் கொண்டு காக்கை வன்னியனின் முதுகில் மெதுவாகத் தட்டிய வாறு சற்று தொலைவாக வேறிடத்துக்கு அழைத்துச் சென்று, "அமைதி! அமைதி! இந்த நண்பர் சொல்வதையும் யோசித்துப் பார்க்கவேண்டும்! ஏனென்றால் கொழும்புத் தலைநகரில் உள்ள எங்களின் மேல் நிர்வாகத்தைக் கலந்து கொள்ளாமல் நாங்கள் யாரும் பண்டாரக வன்னியனோடு நேரடியாக மோத முடியாது! இப்போது ஏதோ அங்கொன்றும் இங்கொன்று மாகச் சில சம்பவங்கள் முல்லைத் தீவு வீரர்களுக்கும் எமது வீரர்களுக்குமிடையே நடந்தாலும் கூட - பெரிய சண்டை என மூண்டு விட்டால், கொழும்பு மேலிடத்திலிருந்து ஆட்சேபணை கிளம்பும்! அதனால் தீர்க்கமாக யோசித்துத் தந்திரமாகச் செயல்படுவது நல்லது" என்று அறிவுரை கூறினான்.

"அப்படியானால் - சங்கிலித் தளபதியை கடத்திக் கொண்டே வந்திருக்க வேண்டியதில்லையே?"

இது காக்கை வன்னியனின் கேள்வி!

"பெரும் போர் இப்போது தேவையில்லை என்பதுதான் முடிவே தவிர சில்லறைத் தொல்லைகளைக் கொடுத்து பண்டாரகனின் பிடிவாதத்தைச் சிதைக்கும் தந்திரத்தை ஆங்கிலேய நிர்வாகம் கைவிட்டு விடவில்லையே! அதனால்தான் குருவிச்சியால் ஒரு ஆங்கிலேயர் கொல்லப்பட்டதற்குப் பதிலுக்குப் பதில் நாங்கள் உடனடியாகக் கொடுக்க வேண்டியிருந்தது!"

"நீங்கள் சொல்வதைப் பார்த்தால் உங்களை நம்பியிருக்கும் என்னைக் கைவிட்டு விட்டு, அந்தப் பண்டாரக வன்னியனுடன் கைகோத்துக் கொள்ளும் ராஜ தந்திரத்தில் ஈடுபட்டிருப்பதாக அல்லவா தெரிகிறது!"

"பண்டாரகவன்னியனை எங்கள் ஆதிக்கத்திற்கு கட்டுப்பட்டு ஆட்சி நடத்த இணங்கச் செய்ய வேண்டும். எங்களிடம் அவன் சரணடையாவிட்டால் - இறுதியில் அவனை முழு மூச்சுடன் எதிர்த்து வெற்றி கொள்ளவேண்டும்! அப்படி முடிவாக எதிர்க்கும்போது, அவனுக்கு இப்பொழுதுள்ள வலிமையைச் சிறிது சிறிதாகக் குறைக்கவேண்டும்! அதாவது பெரிய பாராங்கல்லை உளி கொண்டு வெட்டி சிறிய கல்லாக ஆக்கு வது போல!"

மெல்லிய குரலில் பேசிக் கொண்டிருந்த ஆங்கிலேய அதிகாரி, அவனையுமறியாமல் இந்தத் திட்டத்தைச் சற்று உரத்த குரலிலேயே காக்கை வன்னியனிடம் கூறியதை - சுந்தர லிங்கம், தனது காதுகளைத் தீட்டிக் கொண்டு கேட்டுவிட்டான்.

அவன் அமர்ந்திருந்த இடத்திலிருந்தே அந்த அதிகாரியைப் பார்த்துச் சொன்னான்.

"பெரிய கல்லை உளி கொண்டு உடைப்பதாக எண்ணி செயல்படுகிறீர்கள் நீங்கள்! ஆனால் உளிபட்டுப்பட்டு அந்தப் பெரிய கல், அரியதோர் சிலையாக உருவாகிறது என்பதை மறந்து விடாதீர்கள்! இன்றோ நாளையோ என்றோ ஒரு நாள் ஆங்கிலேய ஆதிக்கத்தின் சூழ்ச்சித் திறனும் எங்கள் தமிழ்ச் சாதி மக்களிடையே கிடைக்கும் காட்டிக் கொடுக்கும் துரோகிகளின் துணையும் கொண்டு எம் போன்ற சுதந்திர வேட்கையாளர்களை வீழ்த்தி விடலாம்! மறந்து விடாதீர்கள், விழுவது உடல்களாக இருக்கும் - ஆனால் எழுவது உணர்வு களாக இருக்கும்! அந்த உணர்வுகளுக்கு என்றைக்குமே தோல்வியில்லை!"

பேசிக் கொண்டிருந்ததை, சுந்தரலிங்கம் கேட்டுவிட்டான் என்ற அதிர்ச்சி ஏற்பட்டபோதிலும் அளவுக்கு மீறி மது அருந்தி யிருந்ததால் வந்த வினையெனத் தெளிந்து - உடனடியாக அந்த அதிகாரி சமாளித்துக்கொண்டான்.

"பண்டாரகவன்னியனோ -தமிழ்நாட்டில் கட்டபொம்மனோ எமக்கு நண்பர்களாகி விட்டால் பிரச்சினையே இல்லையே!" என்றான் சிரித்துக் கொண்டே!

"நட்புடன் இருப்பதற்கும் நத்திக் கிடப்பதற்கும் இடையில் உள்ள முரண்பாடு மிகப் பெரியது என்பது தெரியுமா?" என்றான் திட்டவட்டமாகச் சுந்தரலிங்கம்!

"பேசிக்கொண்டே இருப்பானேன்! சங்கிலித் தளபதியை விடுவிப்பதற்குத் தயார்! குருவிச்சி நாச்சியே இங்கு நேரில் வரட்டும்! அவரும் பகையுணர்வுடன் வரக் கூடாது! நாங்களும் பகையுணர்வுடன் எதிர்நோக்க மாட்டோம்! ஒரு விருந்தினர் போலவே இந்த அரண்மனைக்குவந்து - அவரது பாட்டனாரை அழைத்துச் செல்லலாம்!"

ஆங்கில அதிகாரி இவ்வாறு சொன்னதும் - சுந்தரலிங்கம் என்ன பதில் அளிக்கப் போகிறான் என்று காக்கை வன்னியன் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்தான்.

மன்னிப்பு யார்? யாரிடம்?

12

"நாச்சியாரிடம் நான் பேசிப் பார்க்கிறேன். அவர்கள் சரியென்று தலையசைத்தால் பரவாயில்லை! இல்லையேல் நான் தெரிவித்ததுதான் நடக்கும்! வருகிறேன்!"

என்று கூறிவிட்டுச் சுந்தரலிங்கம் புறப்பட்டான். எதிர்த்துப் பேசுவான் - நான் வந்து கேட்பது போதாதா? நாச்சியாருமா வர வேண்டும்? என்று எரிச்சலைக் கொட்டுவான் - எது நேரினும் அதனைச் சந்திக்கத் தயார் என அறைகூவல் விடுத்துச் சென்றிடுவான் என்றெல்லாம் எதிர்பார்த்து, ஒரு கணம் குழப்ப முற்ற காக்கை வன்னியனுக்கு, சுந்தரலிங்கத்தின் அணுகுமுறை ஆச்சரியத்தை அளித்தது. எப்படியும் பிரச்சினை இப்போதைக்கு சுமுகமாக முடிய வேண்டுமென்று சுந்தரலிங்கமும் மனத்துக் குள் ஒரு கருத்தினை வைத்துக் கொண்டுதான் வந்திருக்கிறான்- எனவே அவனது யோசனையைக் குருவிச்சியார் ஏற்றுக் கொண்டு தனது அரண்மனைக்கு வந்திடுவாள் என்று காக்கை நம்பினான்.

உடனே அவனையுமறியாமல் அவனது போதையேறிச் சிவந்த விழிகள், ஒட்டுக்குள் புகுந்து கொள்ளும் ஆமை போல இமைகளுக்குள் அடங்கிக்கொண்டன! இமைகளுக்குள் விழி களை மூடி வைத்துக் கொண்ட காக்கை வன்னியனால் அவனது இதயக் கதவுகளைத் திறந்து கொண்டு பீறிட்டுக் கிளம்பிய ஆசைகளை அடைத்து வைக்க முடியவில்லை.

குருவிச்சி நாச்சியார் வந்துவிட்டது போலவே கற்பனை செய்தான். அவனையுமறியாமல் எழுந்து முன் சென்று அவளை வரவேற்று உபசரிப்பது போல எண்ணிக் களித்தான். அவள் அவனைப் பார்த்து விதைத்த புன்னகை, அவளுக்கு அவன் மீது ஏற்படும் காதலுக்காக வேர்விடப் போகும் முதல் பிரகடனமாக

அமையும் என முடிவு செய்தான். நேரில் வந்து நிற்காமலே குரு விச்சி நாச்சி, அழகு வடிவமாக அவனது அகக் கண் முன்னே தோன்றினாள்.

"எவ்வளவு நாட்களாகத் துடிக்கிறேன் – தவிக்கிறேன் – இவள் மனதில் இடம் பிடிக்க வேண்டுமென்று! நடக்கமாட்டேன் என்கிறதே; அடடா! என்ன அழகு! வசீகர வானவில் என்றால் இவள் ஒருத்தி தானே! வட்டமிட்டு வட்டமிட்டு வாடிப் போய்க் கிடக்கிறேன். இந்த வடிவழகி என் மடியில் அமர மறுக் கிறாளே! என்னை வெறுக்கிறாளே! படை பல கொண்டு வந்தா என்னை இவள் ஜெயிக்க வேண்டும்? கடைவிழியின் பார்வை யொன்று போதுமே இவளுக்கு நான் ஆயுள் முழுதும் அடிமை யெனப் பத்திரம் எழுதிக் கொடுத்விடுவேனே! நீண்டுயர்ந்த நெற்றி! அது என் முகத்தருகே நெருங்கிவிட்டால் எனக்கு இமாலய வெற்றி! நெற்றிக்கு மேலே நெளி நெளியாகச் சுருண்டு அடர்ந்து அழகு காட்டும் கூந்தல் – அதனைக் கோதிக் கொண்டே அவள் மீது மெல்ல மோதிக் கொண்டால், ஆகா! அந்த இன் பத்தை எண்ணிக் கணிக்க இயலவில்லையே! காதோரங்கள் வரையில் கீழிறங்கும் புகை போல வளர்ந்திருக்கும் பூனை முடியைக் குருகுல வகுப்பறையில் சிறிது தூரத்தி லிருந்து பார்க்கும் போதெல்லாம் அதனை என் விரல்களால் தடவி மகிழ வேண்டும் என நினைத்துத் தவித்திருக்கிறேனே! மாயனால் படைக்கப்பட்ட அந்த மாம்பழ மேனிக்குத்தான் ஆண்களைச் சுண்டியிழுப்பதில் அப்படி யென்ன மந்திரமோ, நானறியேன்! உடைமறைக்கும் உடலில் இடை உள்ளதோ இல்லையோ என்று ஏற்படும் சந்தேகத்தைப் போக்கிக் கொள் ளும் சந்தர்ப்பம் ஒன்றை சர்வேஸ்வரன் எனக்கு அளிக்கா மலே போய் விடுவானா? கண் முன்னே தோன்றாமல் மறைந் திருப்பினும் – தோன்றாமல் தோன்றி என்னுயிரைத் துளைத் தெடுக்கும் கதலி வாழைத் தண்டுகளாம் அந்தத் தொடை யழகை – துள்ளும் நடையழகை – தொலைவிலேயே கண்டு கண்டு துவண்டு போன எனக்கு, தொட்டுச் சுவைக்கும் வாய்ப் பொருநாள் வாராதா? அந்த இன்ப வாய்ப்பு – இனிய வாய்ப்பு

-இன்று உடனடியாக எனக்குக் கிடைக்காவிடினும், இந்த நாள் -அந்த நாளுக்கான அச்சாரம் போடும் நாளாக அமையட்டும்! அமையுமென நம்புகிறேன்! அப்படி அமைத்துக் கொள்வதில் அவசரப்படாமல் அமைதி காட்ட வேண்டும்! அவளை எப்படியும் சமாதானம் செய்து, சுந்தரலிங்கம் இங்கே அழைத்து வருவான்! பாட்டனை மீட்டுச் செல்வதற்காக அந்தப் பாவை - என் பலாச்சுளை - இங்கு வருவாள்! வந்தவுடன் அவளைப் பார்த்து மன்மத ரதத்தில் ஏறி மவுன சொர்க்கம் போகலாமா? என்று கேட்டுவிடக் கூடாது! அப்படி அவசரப்பட்டுக் கேட்டால், அவள் உடனடியாக அழைத்ததின் நோக்கத்தைப் புரிந்து கொள்வாள்! அப்படியொரு நினைப்பு இருப்பதாகவே காட்டிக் கொள்ளக் கூடாது! பழைய குருகுலத்து நட்பை மட்டும் பாராட்டுவதாகவே அவள் கருதிக் கொள்ளவேண்டும்! அந்த அளவுக்குச் சாகசம் காட்ட வேண்டும்! அதற்கு நிதானம் வேண்டும்! பரவாயில்லையே, காக்கை வன்னியன் முன்போல் இல்லாமல் இப்போது மிகவும் பண்பாளராக மாறி விட்டாரேயென்று, குருவிச்சி நாச்சி ஆச்சரியப்பட வேண்டும். அவளை, அவளே எதிர்பாராத அளவுக்குக் கௌரவமாக நடத்த வேண்டும். அவள் பாட்டனை விடுவிப்பதாகச் சொல்ல வேண்டும். விருந்தருந்திச் செல்க என விழுந்து விழுந்து உபசரிக்க வேண்டும். இன்று அவள் இருதயத்தில் நல்ல அபிப்பிராயத்துக்கான அரிநமோத்து சிந்தம் எழுதப் பட்டு விட்டால், அதன் பிறகு அவளை நம் பக்கம் ஈர்த்திடும் முயற்சிகளைத் தொடர்ந்து அதில் வெற்றி பெற முடியும். ஆண்டவனே! இன்று அவள் எப்படியும் இங்கு வருவதற்கு இசைவு தந்து வந்தால் போதும்-தெரியாத்தனமாகப் பண்டார வன்னியனிடம் அவள் மனதைப் பறி கொடுத்துவிட்டு இப்போது உள்ளூர வேதனைப்பட்டுக் கொண்டிருப்பதைப் படாதபாடு பட்டு அவள் மறைத்துக் கொண்டிருக்கிறாள்! இலட்சியம் ஈடேறும் வரையில் திருமணமில்லை, தொடமாட்டேன்! என்று பண்டார வன்னியன் சத்தியம் செய்வான் என்று எதிர்பார்க்காமல் அவன் மீது மையல் கொண்டு விட்டாள்! என்ன இருந்தாலும் பெண்தானே! அவளுக்கு ஆசைகள் இருக்காதா?

ஆஸ்ரமத்திலே வாழும் முனிவர்கள் கூட அனைத்து மகிழ ஒரு ஆரணங்கு தேவையென அப்படியொரு இல்லற ஏற்பாட்டைத் துறவறத்திலே செய்துகொண்டார்கள் என்கிறபோது - எத்தனை நாளைக்குப் பண்டாரகனிடம் பேசிக் கொண்டும், அவனைப் பார்த்துக் கொண்டும் குருவிச்சியால் சும்மா கிடக்க முடியும்? அதனால் பதட்டமில்லாமல் பையப் பையக் கைவரிசையைக் காட்டினால் காந்தத்தை நெருங்கும் இரும்பாக ஆகிவிடுவாள் குருவிச்சி!"

காக்கையின் விழிகள் இமைகளுக்கு வெளியே இப்போது எட்டிப் பார்த்தன! இரத்தச் சிகப்பு! அவ்வளவு மது போதை! மாதின் நினைவு வாதை வேறு!

ஒருவேளை, குருவிச்சி அரண்மனைக்கு வந்தால் அவள் வருவதற்குள்ளாக சில ஏற்பாடுகளைச் செய்திட வேண்டு மெனக் கருதினான். விருந்துக்குத் தயாராக விதவிதமான பண்டங்கள் வேண்டும் - விரைந்திடுவீர் என சமையல் கட்டுக் காரர்களை விரட்டினான்! சிறையில் கிடக்கும் சங்கிலித் தளபதியை, குருவிச்சி நாச்சியார் இப்போதுள்ள நிலையில் பார்த்தால் அதிர்ச்சிக்கும் ஆத்திரத்துக்கும் ஆளாகித் தன்மீது வெறுப்பைப் பொழிவாள் என்பதற்காக - உடனடியாக அந்தச் சிறைக்கோட்டத்தில் எல்லா வசதிகளையும் கொண்டு போய்க் குவிக்கச் சொன்னான். கட்டில் - மெத்தை - மற்றும் தேவையான பொருள்கள் அனைத்தும்! நூல்கள் கூட!

திடீரெனப் பார்த்தால், சிறைக் கூட்டத்தின் சூழல் இல்லாமல் ஒரு பெரிய மேதையின் நூல் நிலையம் போலக் காட்சி தர வேண்டும் என்பது அவன் திட்டம்! அப்போதுதான் அதைப் பார்த்திடும் குருவிச்சிக்குத் தனது அறவழிக் கொள்கை மீது ஒரு மதிப்பு ஏற்பட்டு, அந்த மதிப்பு - நாளாவட்டத்தில் மயக்க மாக மாறும் என்று திடமான நம்பிக்கை!

நினைத்த ஏற்பாடுகளையெல்லாம் கணத்தில் நிறைவேற்று மாறு கட்டளையிட்டு விட்டு - தனது எஜமானர்களான அந்நிய அதிகாரிகளுடன் அமர்ந்து மேலும் சில மதுக் கிண்ணங்களைக் காலி செய்தான் காக்கை!

சங்கிலித் தளபதிக்கு சிறைக் கொட்டடியில் எல்லா வசதி களும் செய்யப்பட்டு விட்டன என்பதை ஓர் ஆள் ஓடி வந்து தெரிவித்தவுடன், அதிகாரிகளிடம் சொல்லிக் கொண்டு அவனே அந்தச் சிறைக் கொட்டடியைப் பார்வையிடப் புறப்பட்டுச் சென் றான்.

சற்றும் எதிர்பாராமல் இத்தனை வசதிகள் ஒரு நொடியில் செய்யப்பட்டிருப்பதைக் கண்டு வியந்து போன சங்கிலித் தளபதி, அடுக்கப்பட்டிருந்த நூல்களில் ஒன்றையெடுத்து புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். இத்தனை வேகமாக இவ்வளவு சீராட்டும் பாராட்டும் எதற்காக என்று புரியா மலேயே அவர் இருந்தார். யூகத்தின் வாயிலாக விளக்கமெது வும் அவருக்குக் கிடைப்பதற்குள்ளாக, காக்கை வன்னியன்- சிறைக் கொட்டடிக்குள் நுழைந்தான்.

"சங்கிலியாரே! சௌக்யந்தானே!" எனக் கேட்டுக் கொண்டே காக்கை சுற்றிலும் ஒருமுறை விழிகளைப் பாய விட்டான். அவர் மௌனமாக இருந்தார்.

"கடுமையாக நடந்து கொண்டேன் என்று வருத்தப் படாதீர்கள். அன்னிய அதிகாரிகளுக்கு நேராக நான் அப்படித் தான் நடிக்க வேண்டியிருக்கிறது! அவர்களுக்கு முன்னால் நமது பற்று பாசத்தை காட்டிக் கொண்டால், பிறகு அவர்கள் என்னையும் சந்தேகப்பட ஆரம்பித்து விடுவார்கள்! அதனால் தான் தங்களைக் கொஞ்சம் அதிகமாகவே சினந்து கொள்ள வேண்டியிருந்தது. இல்லையேல் அன்னியரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவனாக நான் இருக்க முடியாது!"

சங்கிலித் தளபதியார் உதட்டைப் பிதுக்கிச் சிரிப்பை அடக் கிக் கொண்டார்!

"இவரைப் போலுண்டோ? என உயர்த்திப் பேசியோ, அல்லது இவனா? இவன் ஒரு மனிதனா? என இழித்துரைத்தோ - இந்த இரண்டு முறைகளாலும் ஒருவன் ஆதாயம் பெறுவதற்கு என்னைப் போன்ற சிலர், பயன்படுகிறோம் என்பது இன்று நேற்றல்ல, தொன்று தொட்டு வருகிற பழக்கம்தான்! எனவே எதற்காகவும் நான் வருத்தப்படமாட்டேன்!"

சங்கிலியாரின் இந்த பதிலில், ஒங்கிடும்போது வாளின் பிடியைப் பிடிக்கும் வீரனின் கையிலிருக்கும் உறுதி இருந்தது. காக்கை வன்னியன் இந்தப் பதிலால் தடுமாறினான் எனினும் சமாளித்துக் கொண்டவனாக ஒரு அசட்டுச் சிரிப்பை அவிழ்த்த வாறு பேச்சைத் தொடர்ந்தான்.

"அதிகாரிகள் உங்களைச் சிறையில் கொடுமைப்படுத்த வேண்டுமென்றுதான் ஆலோசனை கூறினார்கள். நான் அவர் களிடம் சரியென்று தலையசைத்தாலும் கூட, என் மனம் கேட்க வில்லை. அதனால்தான் உங்களை இங்கு ராஜ உபசாரத்துடன் நடத்துமாறு பணித்திருக்கிறேன்."

சிறிது கனைத்துக் கொண்ட சங்கிலித் தளபதி, காக்கை வன்னியனை உற்றுப் பார்த்தார். நல்ல போதை நிலையிலும் கூட நய வஞ்சகமாகப் பேசுவதிலேயிருந்து நழுவி, அவன் தடம் மாறிவிடவில்லை என்பதை உணர்ந்து கொண்டவராக - "நன்றி!" என்று ஒரு வறட்சியான சொல்லை உதிர்த்தார்.

"செய்தி தெரியுமா? உங்களை இங்கிருந்து மீட்டுக் கொண்டு செல்வதற்காக உங்கள் பேத்தி குருவிச்சி நாச்சி வந்துகொண் டிருக்கிறாள்!" என்றான் காக்கை!

"குருவிச்சியா?"

சங்கிலியாரால் அதனை நம்ப முடியவில்லை! "இருக்காது! இருக்கவே இருக்காது!" என்றார் அழுத்தம் திருத்தமாக!

"முதலில் போர்புரியும் நோக்கத்துடன்தான் இங்கே கிளம்பி யிருக்கிறாள். வழியில் வேறுவிதமான சிந்தனை! அதன் காரண மாகத் தூதன் ஒருவன் வந்தான்! உங்களை விடுவிக்க வேண்டு மென குருவிச்சியின் சார்பாக அவன் கேட்டான். குருவிச்சியே அரண்மனைக்கு வந்து நேரில் பேசி கோரிக்கை வைத்தால் அது குறித்து யோசிக்கப்படுமெனச் சூசகமாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. அதிகாரிகளுக்குத் துளி கூட விருப்பமில்லை. என் கட்டாயத்தின் பேரில் இந்த ஏற்பாடு - அநேகமாக எனது யோசனையை ஒப்புக் கொண்டு உங்களை மீட்டிட குருவிச்சி, அரண்மனைக்கு வரக் கூடும்!"

"ஒருக்காலுமில்லை! பறிக்கப்பட்ட எதையும் போரிட்டுத்

திரும்பப் பெறும் பரம்பரையே தவிர, கையேந்திக் கருணை கேட்கும் பரம்பரையல்ல எமது பரம்பரை!"

"உங்களைக் கடத்தியது ஆங்கிலச் சிப்பாய்களும் அதிகாரி களும்! அவர்களிடம் எடுத்துச் சொல்லி, உங்களை விடுவிக் கும் பொறுப்பை நான் ஏற்றிருக்கிறேன். அதற்கு அனுகூலமாக குருவிச்சி நாச்சியார், அரண்மனைக்கு வந்தால் - ஆங்கிலேயே அதிகாரியிடம் ஒரு மன்னிப்புக் கேட்டுக் கொண்டால் - எல்லாம் சரியாகி விடும்!"

"மன்னிப்பா? எதற்காக? ஏன் மன்னிப்புக் கேட்க வேண்டும்?"

"அன்னியச் சிப்பாயைக் கொன்றது குற்றமல்லவா? அதற் காகத்தானே உங்களைச் சிறைபிடித்திருக்கிறார்கள் - மன்னிப் புக் கேட்க வேண்டிய அவசியம் இருக்கிறதல்லவா?"

சங்கிலியாருக்கு கண்கள், கனல் துண்டங்களாயின! வீராங் கனையாக வளர்க்கப்பட்ட தனது பேத்தி தனக்காக மன்னிப் புக் கேட்கப் போகிறாளா? எதிரிகளிடம் மன்னிப்பு! அதுவும் துரோகியின் பாசறையில்! அவரால் அந்தத் தகவலைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை!

"குருவிச்சி, இங்கு எப்போது வரப்போகிறாள்?"

"விரைவில் வரக்கூடும்! வந்தவுடன் அவளை முதலில் இங்குதான் அழைத்து வருவேன். தனது பாட்டனாருக்குச் சிறை யில் எந்தக் குறையுமில்லை என்பதை அவள் கண்டு ஆறுதல் பெற வேண்டுமல்லவா, அதற்காக!"

"சரி! அப்படியே ஆகட்டும்! எனக்கு இங்கு பொழுது போக - ஒரு வசதி உடனே தேவை!"

"எது வேண்டுமானாலும் தயார்!"

"பெரிதாக ஒன்றுமில்லை! கவிதை எழுதும் பழக்கம் உண்டு! அதற்குரிய உபகரணங்கள் கிடைக்குமா?"

"இப்பொழுதே! கொண்டு வந்து கொடுக்கச் செய்கிறேன்!" வருகிறேன்!" எனக் கூறியவாறு காக்கை வன்னியன், அந்தப் பாதாளச் சிறையிலிருந்து வெளிப்பட்டான்.

சங்கிலித் தளபதிக்குப் பெருங்குழப்பம்! தன் பேத்தியாவது வருவதாவது, என்று தனக்குள்ளே கேட்டுக்கொண்டு பெருமூச் செறிந்தார்.


சிறைக் கொட்டடியின் வாயிலைக் காக்கை வன்னியன் கடப்பதற்குள்ளாக, ஒரு வீரன் அவனை நோக்கி ஓடி வந்து, கை கட்டி குனிந்து நின்றவாறு "குருவிச்சி நாச்சியார் இங்கே அரண்மனைக்கு வந்து தங்களைச் சந்திக்க சம்மதித்து ஆள் அனுப்பியிருக்கிறார்" என்றான்.

"சபாஷ்!" என்று அந்த வீரனின் முதுகில் ஓங்கித் தட்டி விட்டு வேகமாக நடந்தான் காக்கை!

வீரன், அவனிடம் சொன்ன அந்தத் தகவல், சங்கிலி தளபதி யாரின் காதிலும் விழுந்தது

அவரையுமறியாமல் அவர் "ஆ!" என்று அலறிவிட்டார்.

மான மரணை மறக்கலாமா?



வீரர்கள் புடைசூழக் குதிரை மீதமர்ந்து அரண்மனை வாசலுக்கு வந்த குருவிச்சி நாச்சியாரை, காக்கை வன்னியன் எதிர் கொண்டு இன்முகம் காட்ட மிகவும் முயற்சி எடுத்துக்கொண்டு உபசரித்து உள்ளே அழைத்து வந்தான். குருவிச்சியுடன் சுந்தர லிங்கமும் வரவே, அவனைப் பார்த்து காக்கை, நன்றிப் பெருக்குடன் புன்னகை புரிந்தான். உட் கூடத்தில் அமர்ந்திருந்த ஆங்கிலேய அதிகாரிகள், தங்களின் இருக்கைகளில் இருந்தவாறே தலையசைத்து அவளை வரவேற்பது போல் காட்டிக்கொண்டனர்.

"குருவிச்சி எனக்குக் குருகுலத்துச் சிநேகிதி!" என அவளை, அந்த அதிகாரிகளுக்கு அறிமுகப்படுத்தியபோது, அவளும் தனது பெருமிதப் பார்வையின் மூலம், யாருக்கும் பணிந்து வளைந்து போகக் கூடியவள் அல்ல என்பதை மெய்ப்பித்துக் கொண்டாள்.

"முதல் தடவையாக உன் கால்கள் என் அரண்மனையை மிதித்திருக்கின்றன!" என்று காக்கை வன்னியன் அசடு வழிந்த போது, "எதற்கும் நேரம் வரவேண்டுமல்லவா?" என்று குருவிச்சி, கன்னங்களில் குமிழ் சிரிப்பு மின்னலிடச் சொன்னாள்.

"நீ வந்தது நல்ல நேரம் தான்! ஆனால், இதற்காக வராமல் -எதற்காகவோ எப்போதோ வந்திருக்க வேண்டியவள்!" என்று காக்கை வன்னியன், கண்சிமிட்டினான். அதற்கு அவள் சொல் கிற பதில் எப்படியிருக்குமோ என்ற பயத்தின் காரணமாக அவளைப் பேசவிடாமலே "சரி! சரி! முதலில் இங்கு வந்த விருந்தினரை உபசரிக்கிறேன்! சாப்பிடலாம்!" என அழைத் தான்.

"இல்லை! நான் வந்த காரியம் குறித்து முதலில் பேச வேண்டும்" என்றாள் குருவிச்சி.

"வந்த காரியம்தான் தெரியுமே! வயதான தாத்தாவை விடுவிக்க என்று! அது என்ன பெரிய காரியம்? என் வீடு தேடி வந்த பிறகு வெறுங்கையுடன் அனுப்பி வைப்பேனா? நீ வருவதற்கு முன்பே, இதோ இந்த துரைமார்களிடம் பேசிவிட்டேன். இவர்களும் உன் தாத்தாவை விடுவிப்பதற்கு ஒப்புக் கொண்டார்கள்."

"நன்றி" என்று வாய் திறந்து சொல்ல குருவிச்சிக்கு மனம் வரவில்லை. ஏதோ எதிரிகளிடம் பணிந்து கேட்டுக் கிடைக்கும் கோரிக்கை என ஆகிவிடுமோ என்ற பயத்தினால்!

சுந்தரலிங்கமும் அவளும், காக்கை வன்னியனின் அரண்மனைக்கு வருவதற்குச் சம்மதித்ததே ஒரு கௌரவமான பேச்சு வார்த்தையின் அடிப்படையில், சங்கிலித் தளபதியை விடுவித்து அழைத்துச் செல்லலாம் என்ற நம்பிக்கையுடன்தான்! அதனால் காக்கை வன்னியன், மேலும் என்ன சொல்கிறான் என்று இருவரும் ஆவலுடன் கவனித்தார்கள். காக்கை, தொடர்ந்தான்.

"பெரிய நிபந்தனை எதுவுமில்லாமலே சங்கிலித் தளபதி விடுவிக்கப்படுவார். குருவிச்சியே நேரில் வந்துவிட்டால் - நிபந்தனையைத் தளர்த்துவதற்கு நான் இந்தத் துரைகளிடம் வெகு பாடுபட்டு விட்டேன்."

"நிபந்தனை! அந்த நிபந்தனையைத் தளர்த்துவது!" நாச்சியாரின் நெற்றியை நோக்கிப் புருவங்கள் உயர்ந்து வளைந்தன.

"பிரமாதமொன்றுமில்லை! முதலில் துரைமார்கள் சொன்னது, சங்கிலியாருக்கு பதிலாக பண்டாரகனின் வீரர்களில் ஒருவர் சிறையில் இருக்க வேண்டுமென்பது..."

இதை, காக்கை சொல்லி முடிப்பதற்குள் குருவிச்சியின் கண்களில் கனல் கிளம்பிற்று!

"என் தாத்தாவுக்குப் பதில் ஒரு வீரன் சிறையிலா? மிக நேர்த்தியான நிபந்தனை! அதற்கு என் தாத்தாவே சிறையில் இருக்கலாமே! அவரை எப்படி மீட்க வேண்டுமோ, அப்படி மீட்டுக் கொள்கிறோம்!"

குருவிச்சியின் கோபத்தைப் புரிந்து கொண்ட ஆங்கிலேய அதிகாரிகள், காக்கை வன்னியனை அர்த்தப் பொலிவுடன் பார்த்தார்கள். உடனே அவன், அவளைப் பார்த்து, "இல்லை! இல்லை! அந்த நிபந்தனையை நீ ஏற்க மாட்டாய் என்று நான் முன்பே கூறி விட்டேன்!" என்றான்.

சங்கிலித் தளபதியை விடுவிக்க மறுப்பதை பெரும் பிரச்சினையாக்கிவிட்டால் அதனால் தோன்றக்கூடிய சிக்கலை அதிகாரிகள் ஏற்கனவே அவனிடம் கூறியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் அவனுக்கு இப்போது முக்கிய குறிக்கோளாக இருப்பது, குருவிச்சியின் இருதயத்தில் தனக்கு இடம் தேடுவது! எனவே படிப்படியாக இறங்கி வர அவன் தயாராகவே இருந்தான். எதிரியை வீழ்த்தி வெற்றி பெற வேண்டும் - அல்லது, எதிரி, இணக்கமாக வந்து பிரச்சினை சுமுகமாகத் தீர வேண்டும் - இரண்டுமில்லாத பட்சத்தில் செத்தொழிவது மேலெனக் கருதும் மானமிகு பாசறையில் வீராங்கனையாகத் திகழும் குருவிச்சி நாச்சியிடம் காக்கை வன்னியன் வைக்கும் நிபந்தனைகள், கொதிக்கும் கொப்பரையில் விழுந்திடும் நீர்த் துளிகளின் நிலையைத்தானே பெற முடியும்!

பலித்த வரையில் பலிக்கட்டும் என்ற நினைப்புடன் அவன் தொடர்ந்தான்.

"குருவிச்சி! கடைசியாக, நான் துரைமார்களை எந்த நிபந்தனைக்கு ஒப்புக் கொள்ள வைத்திருக்கிறேன் தெரியுமா?"

அவள், அவனைக் கம்பீரமாக நிமிர்ந்து பார்த்தாள். மஞ்சள் வண்ணங் கலந்த அந்தப் பொன்னோளி மேனியாளின் முகம் குங்குமம் போலச் சிவந்திருந்தது. அவன், என்ன சொல்லப் போகிறான் என்று கூர்ந்து கவனித்தாள்.

"ஆங்கிலேயச் சிப்பாயைக் கவனக்குறைவால் கொன்று விட்ட தாகக் கூறி, அதற்காக ஒரு மன்னிப்பு..."

காக்கை முடிக்கவில்லை! துடித்துவிட்டாள் குருவிச்சி!

"மன்னிப்பு!" என்று உரக்கக் கூறியவாறு இருக்கையிலிருந்து எழுந்துவிட்டாள்.

"கேட்க வேண்டுமென்று துரைமார்கள் சொன்னார்கள்.

நான், அதெல்லாம் தேவையில்லை – வருத்தம் தெரிவித்தால் போதும் என்று சொல்லி இருக்கிறேன்."

காக்கை வன்னியன் , மளமளவென்று வழுக்கிக் கொண்டு, உச்சியிலிருந்து கீழே வந்துவிட்டான்.

"வருத்தம் தெரிவிக்கலாம்! பாவம், ஒரு சிப்பாய் இறந்து விட்டானே என்று! இறந்தவர்களுக்காக இரங்கல் தெரிவிப்ப தில்லையா, அது போல!"

என்று கண்டிப்பாக தெரிவித்தாள் அவள்.

"நானும் இதைத்தான் சொன்னேன். நான் துரைமார்களிடம் சொன்ன வார்த்தைகளை அப்படியே திருப்பிச் சொல்லுகிறாய். அது போதும்! அது போதும்!"

என்றவன், "அதிகாரிகளைப் பார்த்து – பார்த்தீர்களா! குரு விச்சியும் நானும் ஒரே மாதிரி சிந்திக்கிறோம்! இருவரும் ஒரே குருகுலத்தில் பயின்றவர்கள் அல்லவா?" எனக் கூறிக் கொண்டே,

"குருவிச்சி! உன் விருப்பப் படியே பேச்சு வார்த்தை வெற்றி பெற்றுவிட்டது! இனிமேலாவது விருந்தில் கலந்து கொள்ளலாம் அல்லவா?"

என ஆசை பொங்கக் கேட்டான். "சிறையிலிருக்கும் சங்கிலித் தளபதியாரும் இருந்தால் எல்லோரும் மகிழ்ச்சியுடன் விருந்தில் கலந்து கொள்ளலாம்"

என்று குறுஞ்சிரிப்புடன் கூறினான் சுந்தரலிங்கம்.

"அழைத்து வந்தால் போகிறது! குருவிச்சி! வாருங்கள் எல்லோரும்! சிறையிலிருக்கும் உன் தாத்தாவை விருந்துக்கு அழைத்து வருவோம்!"

என்றவாறு காக்கை எழுந்தான்! அப்போது சிறைக்காவலன் விரைந்து வந்தவன்,

"சிறையில் உள்ள சங்கிலித் தளபதியார் இந்த மடலை, நாச்சியாரிடம் கொடுக்கச் சொன்னார்"

என்று காக்கை வன்னியனிடம் நீட்டினான்.

"நேராக குருவிச்சியிடமே கொடு! தாத்தாவின் மடலைப் பேத்தி படிக்க என் அனுமதி ஒன்றும் தேவையில்லை"

என்று காக்கை சொன்னதும், தனது கையில் தரப்பட்ட

அந்த மடலைக் குருவிச்சி, சற்று பரபரப்புடன் படிக்கத் தொடங்கினாள். படிக்கும்பொழுது அவள் முகமாற்றங்களைக் கண்ட மற்றவர்கள், கடிதத்தில் அப்படியென்ன எழுதப்பட்டிருக்கும் என்ற ஆவலுடன் அவளையே நோக்கிக் கொண்டிருந்தனர்.

"அன்புள்ள பேத்தி குருவிச்சிக்கு, வீரர்கள் உலவும் மண் இது! கோழைகள் ஒரு சிலர் பிறந்திருக்கக் கூடும், பயிர்களுக்கிடையே களைகள் இல்லையா? அதுபோல! பரங்கியர்களை எதிர்த்து, அவர்களது ஆதிக்கம் இந்த மண்ணில் வேரூன்றாமல் இருந்திட பண்டாரக வன்னியனுடன் இணைந்து நீ நடத்தும் போராட்டத்தை எண்ணியெண்ணி மகிழ்பவன் நான்! அந்த மகிழ்ச்சியில் மண் விழுந்து விட்ட நாள் இந்த நாள்! எப்படியென்று கேட்கிறாயா? முல்லைத் தீவின் படைத் தளபதிகளில் ஒருவனாக நான் பொறுப்பேற்றிருந்த போது ஓல்லாந்தராம் டச்சுக்காரர்களுடன் நடத்திய போரில் எனது காலை இழந்து விட்டேன்! ஏன் இழந்தேன்? எப்படி இழந்தேன்? களத்தில் எதிரிகள் என்னை வளைத்துக் கொண்டனர்! அவாகளை அயரவைக்கும் அளவுக்குத் தனியொருவனாக நின்று போரிட்டேன்! பகைவர் பிணங்கள் பல என்னைச் சுற்றி வீழ்ந்து கொண்டே இருந்தன! தொலைவிலேயிருந்த எனது படை வீரர்கள் எனக்குத் துணை புரிய ஓடி வருவதை எதிரிகள் கண்டுவிட்டனர். அதற்குள் என்னைத் தீர்த்துக் கட்டி விடுவதாகப் பயமுறுத்தி, உயிர் வேண்டுமெனில் மன்னிப்புக் கேள் என மிரட்டினர். மன்னிப்புக் கேட்கும் மரபு அல்ல என முழங்கினேன். எதிரியொருவன் துப்பாக்கியால் சுட்டான். சுருண்டு விழுந்தேன். அதற்குள் நமது வீரர்கள் வந்து விடவே அந்நியர் அங்கிருந்து ஓட்டம் பிடித்தனர். அந்தக் களத்தில் உயிரிழக்கத் தயாரானேன். மானத்தை இழக்க அல்ல. கால் போயிற்று. ஆனால் காலமெல்லாம் நமது இனம் காத்து வரும் மான உணர்வு போய் விடவில்லை. இன்று நீ செய்துள்ள காரியம் அந்த மான உணர்வுக்கு ஒரு அறைகூவலாக ஆகிவிட்டதோ என ஐயுறுகிறேன்.

என்னைக் கடத்திக் கொண்டு வந்து, காக்கை வன்னியன் அரண்மனையில் காவல் வைத்துள்ளனர் அன்னியர்கள்! காக்கையைப் பற்றி உனக்குத் தெரியும்! காட்டிக் கொடுப்பதற்குப் பரிசாக எச்சில் பதவியைப் பெற்றுக் கொள்ளக் கூடிய இயல்பு கொண்டவன்! தாத்தாவை மீட்டுத்தான் தீர வேண்டுமென்று வீரமுள்ள ஒரு பேத்தி கருதினால் - தனது உயிரைத் திரணமாக மதித்து களத்தில் குதித்திருக்க வேண்டும்! அதற்காக முல்லைத் தீவின் படை வீரர்களை பயன்படுத்திக் கொள்ள நினைத்தது கூடத் தவறு! இது நமது சொந்தப் பிரச்சினை- இதற்காக அரசின் படையை துணைக்கு அழைப்பதா? அதுதான் போகட்டும்! அந்தப் படையை அழைத்து வந்த நீ காக்கை வன்னியன் கோட்டையை உடைத்து என்னை விடுவித்திருந்தால் -அல்லது அந்த முயற்சியில் செத்திருந்தால், வீர வரலாற்றில் இடம் உண்டு! இப்போது நீ இந்த அரண்மனைக்கு - ஆம், எதிரியின் பாசறைக்கு, பிச்சை கேட்க அல்லவா வந்திருக்கிறாய்! இது உனக்கே வெட்கமாக இல்லை? எனக்கு மானக்கேடாக இருக்கிறது! எதிரியின் அரண்மனைக்கு வந்து அவனெதிரே தலைகுனிய வேண்டிய அளவுக்குப் பேத்தியை ஆளாக்கி விட்டோமே என்று வேதனைப்படுகிறேன்!

அன்றைக்கே களத்தில் காலையிழக்காமல் - உயிரையே இழந்திருந்தால் உனக்கு இந்த அவமானம் நேர்ந்திருக்காதல்லவா? உனக்கு இந்த இழிநிலை ஏற்பட நான் பொருளாக இருந்து விட்டேனே என்றுதான் கவலைப்படுகிறேன்!

இப்படியொரு முயற்சியெடுத்து என்னை விடுவித்துச் செல்ல வேண்டுமா?

முடியாது! வீர மரபில் வந்த என் பேத்தி குருவிச்சி நாச்சியார் என் பொருட்டு வீரர் தம் இலக்கணத்திற்கு விடை கொடுத்து அனுப்பி விட்ட பிறகு, நான் அவள் முயற்சியால் விடுதலை பெறுவதை விரும்பவில்லை!

இப்படிக்கு

உன் சங்கிலி தாத்தா.

உணர்ச்சிகள் மாறி மாறிப் பொங்கி வழிந்திட அந்தக் கடிதத்தைப் படித்து முடித்த குருவிச்சி நாச்சியார், காக்கை வன்னியனையும் சுந்தரலிங்கத்தையும் பதட்டமுடன் நோக்கி, "வாருங்கள்! சிறைச்சாலைக்குப் போகலாம்!" என்றாள்.

அவர்களுடன் ஒரே ஒரு ஆங்கிலேய அதிகாரி மட்டும் பின் தொடர்ந்து சென்றான்.

சங்கிலித் தளபதி அடைக்கப்பட்டுள்ள சிறைக் கதவு திறக் கப்பட்டது. உள்ளே குருவிச்சி பதைப்புடன் பார்த்தாள். கட்டில் மெத்தையில் அவர் இல்லை. அருகிலிருந்த நாற்காலியிலும் அவரைக் காணவில்லை.


"உம்! உள்ளே வரலாம்!" எனக் காக்கை வன்னியன் கூறவே அனைவரும் அவனைத் தொடர்ந்து நுழைந்தனர்.

சிறைச் சுவரின் ஒரு மூலையில் சங்கிலித் தளபதி சுருண்டு படுத்திருந்தார்.

"இவ்வளவு வசதிகள் செய்து கொடுத்திருந்தும் -கோபித்துக் கொண்டு, தரையில் படுத்திருக்கிறார் பாவம்!" என்று சொன்ன படி காக்கை வன்னியன் அருகே சென்றான்.

குருவிச்சி நாச்சியார், ஓடிப்போய் "தாத்தா" என அழைத்த வாறு அவரது உடலை அசைத்தாள். அவள் அசைத்ததால் அசைந்தது. ஏற்கனவே அது அசைவற்றுப் போய் விட்டது. "அய்யோ! தாத்தா!" என அலறிவிட்டாள் குருவிச்சி!

அவள் நடந்த பாதை



பனித் துளி தொத்திக் கொண்டிருக்கும் பசும்புல்லின் நுனி போன்ற கண்கள் படைத்த வராய் அந்தச் சிற்றூர் மக்கள் இடுகாட்டில் மொய்த்திருந்தனர். காக்கை வன்னியன் மாளிகையிலிருந்து சவமாக எடுத்து வரப்பட்ட சங்கிலித் தளபதியாரை அடக்கம் செய்வதற் கான காரியத்தில் அவ்வூரார் மெத்த கவலை யுடன் ஈடுபட்டிருந்தனர். முல்லைத் தீவு வீரர்கள் சங்கிலித் தளபதியாருக்கு அரச மரியாதை வழங்க அணிவகுத்து நின்று கொண்டிருந்தார்கள். தளபதியாரின் சாவு கேட்டு அருகாமையில் உள்ள கிராமங்களிலேயிருந்து ஆடவர், பெண்டிர், சிறார் என மக்கள் வரிசை வரிசையாக வந்த வண்ண மிருந்தனர். அடக்கம் செய்வதற்கான பணிகள் நடைபெறுவதை ஓரிடத்திலிருந்து கவனித்துக் கொண்டு, கவலை தோய்ந்த முகத்தினனாக பண்டாரக வன்னியன் நின்றிருந்தான். அவனுக்குச் சற்று தொலைவில் குருவிச்சி நாச்சி, இன்னும் சற்று நேரத்தில் குழிக்குள் இறங்கி, மண் போர்வையால் தன்னை மூடிக்கொள்ளப் போகும் தாத்தாவின் திருமுகத்தையே பார்த்துக் கொண்டு இருந்தாள். அவள் கண்கள், நீர்த்துளிகளுக்குப் பதிலாக இரத்தத் துளிகளைக் கொட்டிக் கொண்டிருந்தன.

மெல்ல ஒரு கரம் அவள் தோளைத் தொட்டதை உணர்ந்து, திரும்பிப் பார்த்தாள். அவளது ஆசிரியை தங்கநாச்சிதான் அது! தங்கநாச்சி, சிறிது நடுங்கும் தனது விரல்கள் கொண்டு குருவிச்சியின் கண்ணீரைத் துடைத்தாள். தன் தலையை அழுத்திக் கொண்டிருந்த சோகச் சுமையை அப்படியே தூக்கி தங்கநாச்சியார் மீது வைப்பது போல குருவிச்சி, அந்த

அம்மையைத் தழுவிக் கொண்டாள். தனது அன்பு மாணவியின் தலையைக் கோதி விட்டு, அவளது கன்னத்துடன் தனது கன்னத்தைப் பொருத்தி ஆசுவாசப்படுத்தியது குருவிச்சிக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது.

இலங்கையின் முல்லைத் தீவு மக்கள், தங்களுக்காக மான உணர்வுடன் போராடி மாண்டிடும் மறக்குல மாந்தரை எப் படி உணர்ச்சிமயமாக நின்று போற்றுகிறார்கள் என்பதை நேரிலே கண்ட சுந்தரலிங்கம், மெய்மறந்து அந்த இடத்தில் நின்று கொண்டிருந்தான்.

ஆசிரியை தங்கநாச்சியின் அணைப்பிலே இருந்த குருவிச் சிக்குத் தனது பாட்டனைப் பற்றிய பசுமையான நினைவுகள்.

சின்னஞ்சிறு குருவிச்சிக்கு அவளது தாய், சிங்காரமாக ஆடை அணிவித்து, ஏடெடுத்துக் கையில் கொடுத்து பள்ளிக்கு அனுப்பி வைக்கிறாள். அப்போது குருவிச்சியின் தந்தை, திண்ணையில் அமர்ந்திருந்தவர் மகளை அழைத்துக் கன்னத் தில் முத்தமிட்டு, வாழ்த்தி வழியனுப்பி வைக்கிறார். பெற் றோரிடம் விடை பெற்றுக் கொண்டே சிறுமி குருவிச்சி, பள்ளி யில் பயிற்சி முடிந்து, இளந் தோழிகளுடன் ஆடிப்பாடி விளையாடி, மாலை மயங்கும் வேளையிலே வழக்கம் போல் வீடு திரும்புகிறாள். அவள் வீடிருக்கும் அந்த வீதியின் முனைக்கு வந்தபொழுதே ஏதோ ஒரு திகில் உணர்வு! அந்தத் தெருவே அமைதியாக இருக்கிறது! ஒன்றிரண்டு வீடுகள், எரிந்து தணிந்து -புகைந்து கொண்டிருக்கின்றன! அதைப் பார்க்கும் குருவிச்சி, தன் பெற்றோரை எண்ணித் துடித்தவளாய் அப்பா! அம்மா! எனக் கூவியழைத்துக் கொண்டு வீடு நோக்கி ஓடு கிறாள்! வீடு எரிந்து சாம்பலாகவில்லை எனினும், தெருப் புறத்து வாசல் பகுதி முற்றாக சிதறுண்டு கிடக்கிறது! அலறிக்கொண்டு உள்ளே ஓடுகிறாள். அங்கே இளஞ்சிறுமி குருவிச்சி கண்ட காட்சி என்ன? தாய், அலங்கோலமாக இரத்த வெள்ளத்தில் மிதக்கிறாள்! தந்தையோ - தலைவேறு, உடல் வேறாக துண் டாடப்பட்டு கிடக்கிறார்! விழிகள் ஒளியிழந்து விடுகின்றன. அவளை அந்தகார இருள் கப்பிக் கொள்கிறது!

நிலை கொண்டு நிற்க இயலாத ஒரு நிலை! தலை சுழலுகிறது! பிறகு என்ன நடந்தது தெரியாது! இரண்டு நாளோ மூன்று நாளோ மயங்கியிருந்ததற்குப் பிறகு, சங்கிலித் தாத்தாவின் மடியி லிருப்பதை அவளால் உணர முடிகிறது.

தாத்தா ஆறுதல் சொல்கிறார். அன்னியர்கள் முல்லைத் தீவில், தங்கள் ஆதிக்கம் வேரூன்றுவதற்காகப் பெரும் முயற்சி செய்கிறார்கள். அவர்களை எதிர்ப்போர் யாராயினும் அவர்களை அழித்துக் குவிக்கிறார்கள். ஆதிக்க வெறியர் களால் அனுப்பப்படும் வீரர்கள், தங்களிடமுள்ள நவீன ஆயுதங்களின் வலிமையினால் எந்தக் கொடுமை செய்வதற் கும் தயங்கிடுவதில்லை. அதன் தொடர்ச்சி தான் உன் தாயும் தந்தையும் பலியானது என்று தாத்தா சொன்ன பொழுது, அவரது கண்கள் தீப்பொறி கக்கியதை இன்றைக்கும் மறக்க முடியாது.

அந்த நினைவு அவள் நெஞ்சத்து உதடுகளைத் துடிக்க வைத்துத் தனக்குத்தானே பேச வைத்தது!

தாய் - தந்தை - அவர்களுக்கு நான் ஒரே குழந்தை! காலை யில் வழியனுப்பி வைத்தார்கள்! மாலையில் பிணமாகி விட் டார்கள்! எனக்கு அப்போது என் தாத்தாவைத் தவிர வேறு துணையே கிடையாது! அவரோ முல்லைத் தீவின் தளபதிகளில் ஒருவர்! என்னருகே இருந்து என்னைக் கவனிக்க இயலாத சூழ் நிலை அவருக்கு! தங்கநாச்சியம்மையிடம் என்னை அழைத்துச் சென்று, தாயே! நீதான் குருவிச்சிக்கு தாய்! தந்தை! தெய்வம்! எல்லாம்! உன்னை நம்பித்தான் என் பேத்தியை ஒப்படைக் கிறேன்! என்று கூறி ஒப்படைத்தார். இருந்தபோதிலும் அடிக் கடி வந்து தாத்தா என்னைப் பார்த்துச் செல்வார்! நான் பெரிய வளாக வளர வளர வாட் பயிற்சி, வேல் பயிற்சி போன்ற போர்ப் பயிற்சிகளிலும் நான் சிறந்து விளங்க வேண்டுமென்று தாத்தா விரும்பினார். நானும் ஆர்வமாக இருந்தேன். தாத்தாவே எனக்கு அந்தப் பயிற்சிகளை அளித்தார். ஒருநாள் செய்தி வந்தது, களமொன்றில் என் தாத்தா காலிழந்து கிடக்கிறார் என்று! எனக்குத் துணையாக இருந்த தாத்தாவுக்கு நான் துணை யாக இருக்க வேண்டிய திருப்பம் ஏற்பட்டது வாழ்க்கையில்!

அந்தக் காலகட்டத்தில்தான் பண்டாரகன் தமிழ் இலக்கியப்

புலமை பெற்றிட, தங்கநாச்சியாரின் குருகுலத்துக்கு வந்தது. கூடவே காக்கை வன்னியனும்! சங்க இலக்கியங்களில் பொங்கி யெழும் காதல் கட்டங்கள் என்னையும் பண்டாரக வைரமுத்து வையும் ஒருவரையொருவர் கடைக்கண்ணால் பார்த்துக் கொள் ளத் தூண்டின எனினும், வீர நிகழ்ச்சிகள்தான் எங்கள் இருவர் உள்ளங்களையும் ஒன்றுபட வைத்தன! உடல் இன்பத்தைப் பகிர்ந்து கொள்ளும் அன்பாக இல்லாமல், இனத்துக்காக, நாட்டுக்காக ஏதோ ஒரு கடமை செய்திட எங்களை நாங்கள் இணைத்துக் கொண்டதாகவே எண்ணினோம்! இப்படியொரு நிலை தோன்றியதை என் தாத்தாவிடம் சொன்ன போது முதலில் அவர் தயக்கம் காட்டினார்! அம்மா! உன் தாய் தந்தை என் கண்முன்னால் பிணமாயினர். நீயாவது இந்தக் குலக் கொடியாக நீண்டநாள் வாழ வேண்டும் - நிம்மதியாக வாழ வேண்டும் என விரும்புகிறேன்! நீ யாரை விரும்புகிறாயோ, அந்த வைரமுத்துப் பண்டாரக வன்னியன் -போர்! போர்! என எப்போதும் தினவெடுத்த தோள்களுடன் அலையும் தீரன்! அவருடன் எப்படியம்மா உனக்கு ஒரு அமைதியான வாழ்க்கை அமைய முடியும்? வேண்டாம், விபரீத ஆசை! என எச்சரித்தார்.

"பெண்குலம் என்பது ஆண் குலத்துடன் ஒட்டியிருந்து குடும்பம் நடத்த மட்டும்தானா? ஆண் குலம் ஏற்றுக்கொள்ளும் கடமைகளை நிறைவேற்றும் பொறுப்பு அதற்குக் கிடையாதா? அதனால் தாத்தா நான் அவரைக் காதலிப்பது என்பது அவருடன் இணைந்து அன்னியரை விரட்டி அவர்களது ஆதிக்கத்தை வீழ்த்துவதற்காகவே! அந்த இலட்சியம் ஈடேறும் வரையில் திருமணம் இல்லை -அதற்குப் பிறகு என்னைத் திருமணம் செய்து கொள் வதாக அவர் வாக்களித்து விட்டார்!" என்று நான் தாத்தாவிடம் சொன்னபோது, அவர் எப்படி என்னை மகிழ்ச்சியோடு பாராட்டினார்!

"இந்த வீர உணர்வு என்றைக்கும் மங்கிவிடாமல் இருக்கட் டும் அம்மா" என வாழ்த்தினார்! ஆனால் அந்த தாத்தாவின் மனம் நோகும்படி செய்து விட்டேன். அவரை மீட்டுக் கொண்டு வர காக்கை வன்னியன் அரண்மனைக்குச் சென்றதே பெருந் தவறு என அவர் மனம் புழுங்கித்தானே மரணத்தை அணைத் துக்கொண்டுவிட்டார். அய்யோ! நான், என் குடும்பப் பிரச்சினை

யைப் பெரும் யுத்தமாக மாற்றிவிடக் கூடாது என்றுதானே தாத்தாவை மீட்பதற்கு நானே புறப்பட்டேன். நான் எதிர்பார்த்த அளவுக்கு சிறு சண்டைகூட இல்லாமல், பிரச்சினை, பேச்சு வார்த்தை மூலம் தீர்ந்திடும் என்கிறபோது - அதை நான் ஏற்றுக் கொண்டது ராஜதந்திரம் தானே! வெற்றி அல்லது வீர மரணம் என்று கொண்டுள்ள உறுதியான நிலைக்கு இடையிலே விவேகத்தையும் சில நேரங்களில் பயன்படுத்துவது தவறில்லையென நான் கருதினேன்! அந்தக் கருத்து, தாத்தாவின் உயிருக்கே உலை வைத்துவிடுமென நான் நினைக்கக்கூட இல்லையே! அவரை மீட்கும் முயற்சியில் நான் ஈடுபடாமல் இருந்திருந்தால் - அவர் உயிரோடாவது இருந்திருப்பாரே! அதை நான்தான் கெடுத்துவிட்டேனா? இது என்னால் தாங்க முடியாத வேதனை! சிறையில் அவர், எவ்வளவு சித்திரவதைகளுக்கு ஆளாக நேரிடும் என நான் அஞ்சியதால்தானே, அவரை மீட்பதற்குப் புறப்பட்டேன்! எப்படியோ, என் வீர உணர்வைக் குறை கூறி - என் தாத்தா வாழ்வை முடித்துக் கொண்டார்! இதோ, சவமாகச் சாய்ந்திருக்கும் போதும் அவர் முகத்தில் அந்த வீரத்தின் சாயல்! கம்பீரம் நிறைந்த இந்தத் தோற்றத்தை இன்னும் சில நொடிகளில், மண் மாதா வாரி அணைத்துக் கொள்ளப் போகிறாள்!

குருவிச்சியின் இதயத்தில் நினைவு அலைகள் உயரக் கிளம்பி உருண்டு சிதறிக் கொண்டிருந்தன. "சங்கிலித் தளபதியார் வாழ்க!" என்ற முழக்கம் விண் முட்டிட - அவரது உடலை, அகன்று ஆழமான குழியில் வைத்தனர். முல்லைத் தீவின் வீரர்கள் அவருக்கு வணக்கம் தெரிவித்தனர். பண்டாரக வன்னியன், அவர் அருகே வந்து அவரது கால்களைத் தொட்டு கண்களில் ஒத்திக் கொண்டு, மலர்களை வாரி அவர் உடல் மீது வீசினான். குருவிச்சியை தங்கநாச்சியார், கைத்தாங்கலாக அழைத்துச் செல்ல, அவளும் பூக்களைத் தனது தாத்தாவின் உடல் மீது தூவி, பாதங்களைக் கண்களால் முத்தமிட்டு எழுந்தாள்.

அடக்கம் முடிந்தவுடன் ஊரார், மௌனமாகக் கலைந்து சென்றனர். அசைவற்று நின்று கொண்டிருந்த பண்டாரகனையும், குருவிச்சியையும் சோகமாகப் பார்த்தான் சுந்தரலிங்கம்.

"இந்த சோகச் சூழலில் நான் நாடு திரும்ப வேண்டிய அவசியத்தில் இருப்பதற்காக வருந்துகிறேன்."

"பரவாயில்லை, சுந்தரலிங்கம் அவர்களே! வீரபாண்டியக் கட்டபொம்ம மன்னரிடமும், வெள்ளையத் தேவரிடமும் சொல்லுங்கள், நான் உடனடியாகக் கண்டியுடன் தொடர்பு கொண்டு, அவர்களின் எண்ணத்தை நிறைவேற்றுவேன் என்று!"

"நாச்சியார் அவர்களே! மீண்டும் ஒருமுறை தங்களின் பாட்டனார் மறைவுக்காக என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டு, விடைபெறுகிறேன்!"

"நமது வீரர்கள் போதுமான அளவுக்கு, சுந்தரலிங்கம் அவர்களுடன் கடற்கரை வரையில் சென்று வழியனுப்பி வாருங்கள்!"

இருவருக்கும், தங்கநாச்சியாருக்கும் வணக்கம் தெரிவித்து விட்டு, சுந்தரலிங்கம் குதிரையிலேறிக் கிளம்பினான். பாதுகாப்புக்காக முல்லைத்தீவின் வீரர்கள் அவனைத் தொடர்ந்து சென்றனர்.

தங்கநாச்சியார், மெல்ல நடந்து பண்டாரக வன்னியனருகே வந்து,

"வைரமுத்து! என்னுடைய மகளைப் போலவே வளர்த்து ஆளாக்கிய குருவிச்சி நாச்சி, பெரிய இழப்புக்கு உள்ளாகியிருக்கிறாள். தாய் தந்தையை இழந்த இவளுக்கு எல்லாமாக சங்கிலித் தளபதியார் இருந்தார். இனி, எல்லாம் நீதான் இவளுக்கு. இந்தத் துன்பமயமான இடத்திலிருந்து நான் வேறென்ன சொல்லப் போகிறேன்! வருகிறேன்!" எனக் கூறி அங்கிருந்து அகன்ற சிறிது நேரத்திற்குப் பிறகும், சங்கிலியாரின் சமாதியையே உற்று நோக்கிக் கொண்டிருந்த பண்டாரக வன்னியன், தனது குதிரையிலேறிப் புறப்பட ஆயத்தமானான். அவன் புறப்படுவது கண்ட குருவிச்சி நாச்சியும் தனது குதிரையில் ஏறுவதற்கு அதனருகே சென்றாள். அதட்டலும் ஆத்திரமும் நிறைந்ததாக பண்டாரகனின் குரல் ஒலித்தது.

"வேண்டாம்! நீ என்னுடன் வர வேண்டாம்!"

குருவிச்சி நாச்சி திகைத்துப் போய் நின்றாள். பண்டாரகன் குதிரையை வேகமாகச் செலுத்தி அங்கிருந்து மறைந்தான்.

இருவர் உள்ளம்

15

குருவிச்சியைப் பிரிந்து வேகமாகப் புறப்பட்ட பண்டாரகன், நீண்ட தூரம் அந்த வேகத்தை மேற்கொள்ளவில்லை. படிப்படியாக குதிரையின் வேகம் குறைந்து, பின்னர் ஒரு ஊர்வலத்தின் முகப்பில் போவது போல மெதுவாகச் சென்று கொண்டிருந்தது. அவன், அவளைச் சந்தித்து இருவரது உள்ளங்களும் நெருக்கமான பிறகு, இப்படியொரு நிகழ்ச்சி என்றைக்குமே உருவானதில்லை. கோபதாபங்கள் எதுவுமின்றி பிரிந்திருப்பதை ஒரு ஆணும் பெண்ணும் சகித்துக் கொள்ள முடியும். பிரிவின் துன்பம் இதயத்தை துளைத்தெடுத்தாலும் ஒவ்வொருவரும் மேற்கொண்டுள்ள கடமையின் காரணமாக அந்தப் பிரிவு தவிர்க்க இயலாதது என இருவருமே ஆறுதல் தேடிக்கொள்ள முடியும். ஆனால் இந்தத் திடீர்ப் பிரிவு பண்டாரகவன்னியனுக்கு, குருவிச்சி நாச்சி மீது ஏற்பட்ட கடுங் கோபத்தினால் விளைந்தது!

அவனது அந்தச் செயலுக்குக் காரணத்தை, குருவிச்சியும் புரிந்து கொள்ள அதிக நேரம் ஒன்றும் ஆகிவிடவில்லை. தனது பாட்டனாருக்குத் தன்மீது எப்படி ஒரு வருத்தம் வந்ததோ, அதே போலத்தான் பண்டாரகனுக்கும் வந்துள்ளது என முடிவு செய்து கொண்டாள். அவன் சென்ற திசையையே வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த அவள், நீண்ட பெரு மூச்சுடன் தனது பாட்டனார் அடக்கம் செய்யப்பட்ட இடத்தைக் கலங்கிய கண்களுடன் நோக்கினாள். பின்னர், அந்த இடத்திலிருந்து ஊருக்குள் செல்லும் ஒற்றையடிப் பாதையில் சோக நடை போட்டுக் கொண்டிருந்தாள். அவளது குதிரை அவளைப் பின் தொடர்ந்து ஊர்வது போல் சென்று கொண்டிருந்தது.

"காக்கை வன்னியன் மாளிகைக்கு நான் சென்றது தவறு என்று என்னை அவர் நேருக்கு நேர் கண்டித்திருக்கலாம். திட்டியிருக்கலாம். அல்லது அதற்குரிய தண்டனையைக் கூடத் தந்திருக்லாம். "நீ என்னுடன் வரவேண்டாம்!" எனச் சொல்லி நெருப்புக் குண்டத்தில் அல்லவா தள்ளி விட்டுப் போய் விட்டார்! என் தாத் தாவுக்கு ஏற்பட்ட துன்பத்தையும் அதிலிருந்து அவரை மீட்பதை யும் ஒரு அரசியல் பிரச்சினை ஆக்கிட வேண்டாம், நாமே அதனைப் பார்த்துக் கொள்வோம், என் பண்டாரகனுக்கு தொல்லை கொடுக்க வேண்டாமென எண்ணியது எங்கு போய் முடிந்துவிட்டது!"

இந்த நினைவுகள் உள்ளத்தைத் தாக்கிட, அவள் நடந்து கொண்டிருந்தாள்.

"என்னை முழுவதுமாக உணர்ந்த குருவிச்சி ஏன்தான் இப்படி நடந்து கொண்டாளோ, எனக்குத் தெரியவில்லை! இழந்து விட்ட ஒன்றை, எதிரிகள் கொடுத்து வாங்கிக் கொண்டோம் என்பது இழிவு! அதனை நாமே திரும்ப எடுத்துக் கொண்டோம் என்பது பெருமை! இந்தச் சாதாரண உண் மையைக் கூட என்னுடைய குருவிச்சி எப்படி மறந்து போனாள்? அவளுக்கு நான் இப்போது அளித்திருக்கும் தண்டனை அவளை மிகவும் வேதனைப்படுத்தியிருக்குமோ? இத்தனை நாள் அவ ளோடு பழகியதில் இப்படியொரு சுடுச்சொல், அவளைப் பார்த்து நான் சொன்னதே இல்லையே!"

ஊர்ந்து கொண்டிருந்த பண்டாரகனின் இதயமும் உருகிக் கொண்டிருந்தது!

"நீ என்னுடன் வரவேண்டாம்!" என்று சொன்னதற்குப் பதி லாக - அரண்மனைக்குச் சென்ற பிறகு என்னிடம் பேசாமலே இருந்து கோபத்தைக் காட்டியிருக்கலாம்! நான் காரணம் கேட்டிருப்பேன்! அப்போது என் தவறைச் சுட்டிக் காட்டி இடித்துரைத்திருக்கலாம்! அவர் காலில் விழுந்து நான் மன்னிப்புக் கேட்டிருப்பேன்! மன்னிக்கிற குற்றமல்ல இது, மரண தண்டனைக்குரியது, என்று அவர் கூறியிருப்பாரேயானால் அந்தத் தீர்ப்பைக் கூட மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்பவள்

தானே நான்! என்னையே அவருக்காக - அவர் கொண்டுள்ள இலட்சி யத்திற்காக நான் கொடுத்திருக்கும்போது, 'அவரது வெறுப்புக்குரியவள் நான்' என்ற நிலையை ஏற்படுத்த அவருக்கு எவ்வளவு கடுமையான நெஞ்சம்! பனிப்பார்வை காட்டி என்னைப் பரிவுடன் அரவணைத்து வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொள்கிறேன் என உறுதியளித்த அவரது வாயிலிருந்தா இத்தகைய கொடுமையான சொற்கள்?"

சோகநாதம் மேலும் அவளை வருத்திட, தனது ஊருக்குள் குருவிச்சி நுழைந்தாள்.

"கொஞ்சம் எல்லை மீறித்தான் நடந்து கொண்டு விட்டேனோ? வீராங்கனைதான் அவள் எனினும், இதுநாள் வரையில் அவளை விரல் நுனியில் வைத்து மகிழும் மலர் போல பாவித்துப் பழகிவிட்டு - இன்றைக்கு திடீரென்று எரிமலையாய் வெடித்து விட்டேன் போலிருக்கிறதே! என் முகம் வாடினால், தன் முகம் வாடி - என்னவென்று தவித்துப் போய்த் துடிப்பாளே, இப போது அவள் முகம் வாடி வதங்கி இருக்குமே! இருவரிடை மலர்ந்த அன்பு - காதல் உணர்வை ஏற்படுத்தியது என்பதை விட, இருவரை யும் கவர்ந்த ஒரு உன்னதமான இலட்சியமல் லவா எங்களைக் காதலர்களாக்கியது! ஆனால் அந்த இலட்சி யப் பாதையில் கடைபிடித்துத் தீரவேண்டிய கடுமையான வழி முறைகளை ஒரு கடுகளவு ஊனமுமின்றி பின்பற்ற வேண்டு மென்பதை அவள் எப்படி மறந்து போகலாம்? நடந்ததை உடனடியாக என்னிடம் சொல்லியிருந்தால் - இந்நேரம் நடந் திருப்பதே வேறு! தனது பாட்டனுக்கு ஒரு தீங்கு என்றதும், அவரைக் காப்பாற்ற முல்லைத்தீவு வீரர்களை அவள் அணி வகுத்து அழைத்துச் சென்றது கடைந்தெடுத்த சுயநல மனப் பான்மை அல்லவா? ஒரு புனிதப் போரில் ஈடுபட்டு, தன் னுயிரையே அர்ப்பணித்துக் கொள்ள சங்கற்பம் செய்து கொண்டு களத்தில் நிற்பவர்களுக்கு இது போன்ற சுயநல நினைவுகள் வருவது எவ்வளவு பெரும் தீங்கு! முல்லைத்தீவின் ஓய்வு பெற்ற தளபதியாரை, பதிலுக்குப் பதில் நடவடிக்கை என்ற பெயரால் அந்நியர்கள் கடத்திச் சென்றதும், அவரைக்

காக்கை வன்னியன் மாளிகையில் அடைத்து வைத்ததும்- எவ்வளவு பெரிய அரசியல் பிரச்சினை என்பது கூடப் புரியாமல் வெறும் குடும்பப் பிரச்சினையாக அதனை ஆக்கிவிட்டது பெருந்தவறுதானே! இருந்தாலும் அவளுக்கு நான் கொடுத்துள்ள தண்டனை அதிகம்தான்! இந்தத் திடீர்ப் பிரிவை அவளால் தாங்கிக் கொள்ள முடியாது! இங்கென்ன வாழ்கிறது, என்னாலும் தாங்கிக் கொள்ள முடியாமல்தான் துன்புறுகிறேன்! பிரிவைவிடக் கொடுமையானது நான் சொன்ன அந்த வார்த்தை என அவள் எண்ணி ஏங்கக் கூடும்! தாக்கப்பட்டவனுக்கு வலிப்1பதைவிட தாக்கியவனுக்கு அதிக வலி என்பதுபோல் இப்போது என் நிலைமை!

இலட்சிய வெறிக்கும் அவன் கடைப்பிடிக்கும் காதல் நெறிக்கும் இடையே ஒரு மனப் போராட்டம்!

அதே போராட்டம்தான் குருவிச்சிக்கும்! ஆனால் வேறு விதத்தில்! தனது குடும்பப் பிரச்சினைக்காக பெரும் அரசியல் மோதுதல் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக அவள் மேற்கொண்ட செயலை - அவன் வேறு மாதிரி நினைத்து, சுய நலநோக்குஎன்றமுடிவுக்குவந்துவிட்டான். அவளோ, அப்படி நினைத்திருப்பான் அவன் என்று கனவு கூடக் காணாமல் அவன் காட்டிய வெறுப்பை வென்றிடும் அளவுக்கு அவன் மீது விருப்பம் மேவிட, வீட்டருகே வந்துகொண்டிருந்தாள். அழித்தெழுத முடியாத அந்த அன்புப் பெருக்கினை அவன்பால் பொழிவாள் என்பதால்தான் அந்த வார்த்தையை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

வீதியின் முனையிலிருந்தவாறே வீட்டு வாசலைப் பார்த்த குருவிச்சி, திகைத்து நின்றாள். நாலைந்து குதிரை வீரர்கள் வாசலில் கம்பீரமாக நின்று கொண்டிருந்தார்கள். அவர்களில் இரண்டொரு அந்நியச் சிப்பாய்களும் இருந்தனர். நிலைமை ஏதோ குழப்பமாகிவிட்டிருக்கிறது. ஒரு வேளை, தன்னைக் கைது செய்து அழைத்துக் கொண்டு போக வந்திருக்கக் கூடும்! இந்தச் சமயத்தில் தன்னந்தனியாக இருக்கிறோம், சரி - நடப்பது நடக்கட்டும்! என்றெண்ணியவளாய் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு வீடு நோக்கி விரைந்து வந்தாள். வாசலில் நின்ற குதிரை வீரர்கள் ஒதுங்கி வழி விட்டார்கள். அவர்களைத்

தனது விழிகளால் பொசுக்கித் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தாள். வீட்டின் முகப்புக் கூடத்தில் அவள் கண்ட காட்சி ஆச்சரியமாகவும் இருந்தது. மிக்க அருவெறுப்பாகவும் இருந்தது.

காக்கை வன்னியன் அமர்ந்திருந்தான்! அவளைக் கண்ட வுடன், அவன் எழுந்து நின்று, "நாச்சியாரே! உன் பாட்டனார் அடக்கத்துக்கு வரலாமென்றுதான் விரும்பினேன். அங்கே பண்டாரகன் வருவான்! இருவரும் அந்த இடத்தில் நேருக்கு நேராக சந்திப்பது அவ்வளவு நன்றாக இருக்காது! அவனோ முரட்டு சுபாவமுள்ளவன்! என்னைப் போல நளினம் தெரியாதவன்! அதனால் தான் துக்கம் தெரிவித்து ஆறுதல் கூறிட வீட்டுக்கே வந்துவிட்டேன்!" என்றான். குருவிச்சியின் கண்கள் தீப்பிழம்புகளாயின! எனினும் துக்கம் விசாரிக்க வந்தவனை அநாகரீகமாக நடத்தக் கூடாது என்பதில் மிக அக்கறை கொண்டு அமைதியான ஆனால் ஆழமான மனப்புண்ணுடன் "நன்றி!" என்றாள்.

"ஒருவேளை நீ பண்டாரகனுடன் போய்விடுவாயோ என்று நினைத்தேன். நல்லவேளை வந்துவிட்டாய்! உட்கார்!" என்று அவள் வீட்டில் அவன் அவளுக்கு உபசாரம் செய்தான்!

அவள் உட்காரவில்லை. நின்று கொண்டிருந்தாள்.

"உட்கார மாட்டாயா? என்னிடம் எப்போதுமே எல்லையற்ற மரியாதை உனக்கு!" என்று கூறியபடியே அவன் அங்கிருந்த இருக்கையில் உட்கார்ந்து கொண்டான்.

அவளது உள்ளத்தை, அவன் சொன்ன வார்த்தைகள் துளைத்துக் கொண்டிருந்தன!

"ஒருவேளை நீ பண்டாரக வன்னியனுடன் போய்விடுவாயோ என்று நினைத்தேன்!"

அந்த வார்த்தைகள் அவள் காதுகளில் எதிரொலித்துக் கொண்டே இருந்தன! அதற்கு மாற்று ஒலியாக இடி முழக்கம் போல "நீ என்னுடன் வரவேண்டாம்" என்ற பண்டாரகனின் வார்த்தையும் ஒலித்துக் கொண்டேயிருந்தது!


மெல்ல மெல்ல நயந்து கொண்டே, தனது காதல் விளை

யாட்டுக் காயை சாமர்த்தியமாக நகர்த்தலாம் என்ற திட்டமுடன் முயற்சிகளை மேற்கொண்ட காக்கை வன்னியன், அவளிடம் ஏதோ கேட்பதற்குவாயெடுத்தான். அதற்குள் அவளிடம் துக்கம் கேட்பதற்கு ஊரார் சிலர் வாயிற்படி தாண்டி வருவதைத் தனக்கு சாதகமாக்கிக் கொண்ட குருவிச்சி, "எல்லோரும் வருகிறார்கள், துக்கம் விசாரிக்க! மிகவும் நன்றி!" எனக் கையெடுத்துக் கும்பிட்டு காக்கைவன்னியன் எழுந்து போகுமாறு சொல்லாமல் சொன்னாள். அவனும் இளித்தவாறு, அவளுக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு - அவளையே விழுங்கி விடுவது போல உற்றுப் பார்த்துக் கொண்டு, அங்கிருந்து புறப்பட்டான். அவன் தொலைந்தான் என்ற உணர்வில் குருவிச்சிக்கு ஒரு பெருமூச்சு. இந்த பெருமூச்சில் உயர்ந்து தணிந்த அவளது மார்பகத்து அழகை, குதிரையிலிருந்தவாறு காக்கை ரசித்துக் கொண்டே நகர்ந்தான். சாவு வீட்டில் இப்படி ஒரு சண்டாளன்!

அந்தச் சண்டாளன் அரண்மனைக்கு சங்கிலித் தளபதியை மீட்க, குருவிச்சி போனாளே என்ற வேதனையிலிருந்து மீள முடியாத நிலையில் பண்டாரக வன்னியன், தனது அரண்மனைக்குள் நுழைந்தான்.

அவன் உள்ளே அடியெடுத்து வைத்ததும் அவனுக்குத் தரப்பட்ட செய்தி, கண்டியிலிருந்து அவரசமாகக் காண்பதற்கு ஒரு ஒற்றர் வந்திருக்கிறார் என்பதுதான்!


பண்டாரகனின் சகோதரிகள்!



கண்டியிலிருந்து வந்துள்ள ஒற்றரை வரச் சொல் என்று உத்திரவிட்டவாறு மாளிகைக் கூடத்துக்குப் பண்டாரக வன்னியன் சென்ற போது அங்கே இரண்டு பெண்மணிகள் அவனைப் பார்த்து, "அண்ணா! வணக்கம்!" என்றனர் புன்னகை புரிந்தவாறு! "அடேடே! நல்ல நாச்சியும், ஊமைச்சியும் எப்போது வந்தீர்கள்?" என்று பாசம் பொங்கிடக் கேட்டான் பண்டாரகன். "இப்போதுதான் வந்தோம்!" என்று பதில் அளித்தாள் நல்ல நாச்சி! "அக்காள் வருவது தெரியாமல் நான் வந்தேன்!" என்றாள் ஊமைநாச்சி.

பண்டாரகனின் தங்கை நல்லநாச்சி பண்டாரகனின் ஆட்சிக்கு உட்பட்ட திருகோணமலைப் பகுதியை கவனிக்கும் பொறுப்பை ஏற்று நிர்வாகம் நடத்தி வந்தாள். மற்றொரு தங்கை ஊமைச்சியோ, பனங்காமம் என்ற பகுதியின் நிர்வாகப் பொறுப்பை ஏற்று அண்ணனுக்குத் துணையாக இருந்தாள்.

நல்லநாச்சி, பெயருக்கேற்ப அருங்குணவதி! அழகிலும் அவ்வாறே! மெலிந்த உருவம் - மேனியோ சந்தனமும் குங்குமமும் கலந்தது போல! அவளது கவர்ச்சியும் வசீகரமும் காண்போரை வீழ்த்த வல்லது எனினும் - அவளொரு பண் பார்ந்த குடும்பத்தின் குலவிளக்காகத்தான் இருந்தாள். அடக்கமும், ஆழமான சிந்தனைத் திறனும் இயல்பாகவே வாய்க்கப் பெற்றவள் நல்லநாச்சி என்பதை அவளது தோற்றமும், நடையுடை பாவனைகளும் தெளிவாக்கிக் கொண்டிருந்தன. இன்னொரு தங்கை ஊமைச்சி நாச்சியோ குறும்புக்காரி! அழகிதான்! ஆள் மயக்கி போல அவளது



ஒவ்வொரு அசைவும் தென்படும். ஆனால், தமிழ்க் குலத்து இல்லற நெறி கற்புப் பண்பு இவற்றிலிருந்து சிறிதும் பிசகாதவள்! எதையும் அச்சமின்றி சந்திக்கும் மனவலிமை யுள்ளவள்! இரண்டு தங்கைகளையும் இதயமார நேசிப்பவன் பண்டாரக வன்னியன் என்பதால், இருவரும் திடீரென்று எதிர்பாராத நேரத்தில் வந்ததற்கு என்ன காரணம் என அறிய விரும்பினான். அவனது ஆவலைப் புரிந்து கொண்ட ஊமைச்சி நாச்சி, அவனைப் பார்த்து, "திருமண விஷயமாகப் பேசுவதற்கு நான் வந்திருக்கிறேன்" என்றாள்!

"என் திருமணம்தானே! எனது லட்சியம் நிறைவேறும் வரையில் அதனை ஒத்திப் போட்டிருந்தேன். இப்போது, திருமணமே வேண்டாமென்று முடிவு செய்துவிட்டேன்" என்று பளிச்செனப் பதில் வந்தது.

"நான் அடிக்கடி வற்புறுத்துகிறேன் என்பதால் இப்படி ஒரேயடியாகக் கோபித்துக் கொண்டு, திருமணமே வேண்டா மென்று, கூறுகிறாயா அண்ணா!" எனக் களுக்கெனச் சிரித்துக் கொண்டே கேட்டாள் ஊமைச்சி நாச்சி.

"அதெல்லாம் ஒன்றுமில்லை! இடி விழுந்து ஒடியப்போகிற மரக்கிளையில் தாவிப் படருகிறேன் என்று கொடியொன்று தவிக்கும் போது - அந்தக் கொடியின் முயற்சியைத் தடுப்பது எப்படித் தவறாக முடியும்! பாவம், குருவிச்சி நாச்சி, அவளாவது நன்றாக வாழட்டும்!" என்றான் பண்டாரகன். அப்போது அவன் குரல் தழுதழுத்தது.

"அண்ணா! நான் வந்திருப்பது உன் திருமணத்தைப் பற்றிப் பேச அல்ல! உன் திருமணத்தைப் பற்றியும் பேசி, விரைவில் ஒரு முடிவுக்கு வந்தாகத்தான் வேண்டும். ஆனால் இப்போது நான் அவசரமாக வந்தது அக்காள் நல்ல நாச்சியின் திருமண விஷயமாக! அதற்காக நான் இங்கு வந்தால், எனக்கு முன்பே அக்காள் வந்து விட்டாள்!" என்று நல்லநாச்சியைக் குறும்பாகப் பார்த்தாள் ஊமைச்சி!

"என்னம்மா! திருமணமா? எனக்குக்கூடத் தெரியாமல் நிச்சயமாகி விட்டதா?" என்று கேலிப் புன்னகை புரிந்தவாறு,

நல்லநாச்சியிடம் பண்டாரக வன்னியன் கேட்டதும், அவள் நாணிக்கோணி, தலைகுனிந்தவாறு அங்குள்ள தூணில் கரு முகிலில் மறைந்த கவின் நிலவாக ஒளிந்து நின்று கொண்டாள்.

"நான் சொல்லுகிறேன் அண்ணா, முழுக் கதையையும்!" என்றாள் ஊமைச்சி!

"ஓகோ! இதில் கதை வேறு இருக்கிறதா? காதல் கதை யாக்கும்?" எனச் சிரித்தான் மன்னன்!

அண்ணன், வியப்படையாமல் கதையைக் கேட்கிறான் என்ற தைரியத்தில் ஊமைச்சி, உற்சாகம் நிறைந்தவளாகக் கூற ஆரம்பித்தாள்.

"அண்ணா! நீ நினைக்கிறபடி காதல் கதைதான்! ஆனால் அந்தக் காதலனை நான் பார்த்ததே இல்லை! அக்காளும் அவனை எனக்குக் காட்டியதில்லை! ஒருவேளை அக்காளுக்குப் பயமாக இருக்கும்! அக்காளைவிட நான் அழகாக இருப்பதால் அவன், இவளை விடுத்து என்னைக் காதலித்துவிட்டால் என்ன செய்வதென்று!"

ஊமைச்சி நாச்சி, கலகலவென்று இயல்பாகச் சிரித்தாள்.

தங்கையின் குணமறிந்த பண்டாரக வன்னியன், "சரி! சரி! விஷயத்தைச் சொல்!" என்று அவளிடம் கூறிக்கொண்டிருக்கும் போதே - கண்டியின் ஒற்றரை அழைத்துக் கொண்டு வந்த வீரன், அவரைப் பண்டாரகனுக்கு அறிமுகப்படுத்தி வைத்து விட்டு வெளியேறினான்.

"வாருங்கள்! எப்போது வந்தீர்கள்? என் நண்பர் கண்ணுச் சாமி நலமாக இருக்கிறாரா?" என்று கேட்டுக்கொண்டே, ஒற்றரை அமரச் செய்து, தானும் அமர்ந்து கொண்டான் பண்டாரகன்.

"அவர் தான் என்னைத் தங்களிடம் அனுப்பினார்!"

"என்ன விசேஷமோ?"

"மன்னர் ராஜாதி ராஜசிங்கா மறைவுக்குப் பிறகு கண்டியில் ஏற்பட்டுள்ள நிலவரம் அனைத்தும் தங்களுக்குத் தெரியும்."

"மன்னர் மறைவின் போதே எல்லா நிலவரமும் நான் அறிந்ததுதானே! வாரிசுப் போட்டியில் இருப்போர் இருவருமே என் நண்பர்கள்தான்! கண்ணுச்சாமி - முத்துச்சாமி இருவரில் இப்போது யாருக்கு வாய்ப்பு அதிகம்?"

"முதலில் தாங்கள் கொண்டிருந்த கருத்துப்படி இளவரசர் கண்ணுச்சாமிக்கே அதிக வாய்ப்பிருந்தது. ஆனால் திடீரென்று ஆங்கிலேய அதிகாரிகளின் தலையீட்டினால் கண்டியின் முதலமைச்சர் ஏதோ சதிவலை பின்னுவதாக உணரப்படுகிறது!"

"அந்த சதி வெற்றி பெற்றால்?"

"மற்றொரு இளவரசர் முத்துச்சாமிதான் பட்டத்துக்கு வரமுடியும்!"

"என்ன? ஆங்கிலேயர் தலையீடு! அதற்கு முதலமைச்சர் பிலிமதள்ளவை அவர்களின் துணை! சதி! அந்த முயற்சியில் என் நண்பன் முத்துச்சாமி முடிசூட்டிக் கொண்டால், கண்டி, ஆங்கிலேயர்களுக்கு மண்டியிட்டு வாழத் தயாராகிவிடுமே!"

"ஆமாம்! அப்படித்தான் நிலைமை, தலைகீழாக மாறிக் கொண்டிருக்கிறது! தாங்கள் உடனே கண்டிக்குப் புறப்பட்டு வந்தால்தான் இளவரசர் கண்ணுச்சாமி அவர்களை கண்டிக்கு மன்னராக்க முடியும். அதனால் தான் என்னைத் தங்களிடம் அவசரமாக அனுப்பியுள்ளார் இளவரசர் கண்ணுச்சாமி!"

"சரி, ஒற்றரே! நான் நாளைய தினம் புறப்பட்டு கண்டிக்கு வருகிறேன். இதனைக் கண்ணுச்சாமியிடம் கூறி, என்னை சந்திப்பதற்கு முன்பு எந்த முடிவையும் அறிவிக்க வேண்டாமெனக் கூறுங்கள்!"

பண்டாரகனிடம் விடைபெற்றுக் கொண்டு, கண்டியின் ஒற்றர் புறப்பட்டவுடன், அதுவரையில் காத்திருந்த பண்டாரகனின் சகோதரிகள் மீண்டும் அந்தக் கூடத்துக்கு வந்தனர்.

"என்னம்மா நல்லநாச்சி! யார் உன்னை மணக்கப்போகும் காதலன்?" என்று முகமலர்ந்த நிலையில் பண்டாரகன் கேட்டான்.

"அக்காளை போய்க் கேட்கிறாயே, என்னைக் கேள்! நான் சொல்கிறேன்! திருகோணமலை நிர்வாக சம்பந்தமாக ஒருநாள் அக்காள் வெளியில் சென்றிருந்த போது அந்தக் காதலனைக் கண்டிருக்கிறாள். ஏதோ ஒரு அன்பு இருவர் உள்ளத்திலும் அவன் பெரும் வணிகன். பெயர் பிர்மானந்தன். வாலிப வயதினன்தானாம். அழகில் மன்மதனாக இல்லாவிட்டாலும்,

அக்காளின் மனத்தை எப்படியோ கொள்ளை கொண்டு விட்டானாம். பிறகு இரண்டு மூன்று தடவை இந்த சந்திப்பு நடந் திருக்கிறது. அவசரப்பட்டிருக்கிறான் மாப்பிள்ளை!"

"இந்தா ஊமைச்சி! அக்காளுக்குக் கணவனாக வரப் போகிறவன்தானே! கொஞ்சம் மரியாதையாகத்தான் பேசேன்! மாப்பிள்ளையைப் போய் - அவன் - இவன் என்கிறாயே!"

"அப்படிப் பேசித்தான் எனக்குப் பழக்கம்! அது சரியண்ணா, விஷயத்தைக் கேள்! மூன்றாவது சந்திப்பில் மாப்பிள்ளை அவசரப்படவே அக்காள் அவனைத் தடுத்து, முதலில் திருமணம்! என்று கண்டிப்பாகச் சொல்லியிருக்கிறாள்!"

"உம்! அதற்கு அந்த பிர்மானந்தன் என்ன சொன்னானாம்?"

"என்ன சொல்வான்? பழம் நழுவிப் பாலில் விழுந்தது என்று, சரி! திருமணத்துக்குத் தயார்! என்று கூறி தியாகம் செய்ய முன் வந்துவிட்டான்!"

"அவன் ஒன்றும் தியாகம் செய்துவிடவில்லை. உன் அக்காள் தான் தியாகம் செய்ய முன் வந்திருக்கிறாள். திருகோணமலை யின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருப்பவள் - முல்லைத்தீவு மன்னன் பண்டாரக வன்னியனின் தங்கை, ஒரு வியாபாரியை மணந்து கொள்வதென்றால் - அதுதான் பெரிய தியாகம்!"

"நல்லநாச்சி அக்காள் அவர்களே! நான் சொல்ல வேண்டியதை சொல்லவேண்டியவரிடம் சொல்லிவிட்டேன். என்னை முந்திக்கொண்டு அண்ணனிடம் சொல்லி அனுமதி கேட்க நீ ஓடி வந்தாயே, கேளேன் இப்போது!" என்று அக்காளின் கைகளைப் பிடித்து இழுத்து, அண்ணனின் முன்னால் நிறுத்தினாள் ஊமைச்சி!

"என்னம்மா, நல்லநாச்சி! யாரோ எவரே ஊர் பேர் தெரியாத ஒருவனைக் காதலித்துவிட்டு - திடீரென்று அனுமதி கேட்க வந்திருக்கிறாயே! இதற்கு நான் என்ன பதில் சொல்வது?"

அதற்குள் ஊமைச்சிநாச்சி, குறுக்கிட்டாள்.

"யாரோ எவரோ ஒன்றுமில்லை! அக்காள் அவளது காதலனின் உருவத்தை ஓவியமாக வரைந்து வைத்திருக்கிறாள்! கையடக்கமான ஓவியம்! அதைப் பார்த்தால் மாப்பிள்ளை பொருத்தமா? இல்லையா? என்பது தெரியும்?"


"எங்கே ! அந்த ஓவியத்தைக் காட்டு பார்க்கலாம்!" என்று பண்டாரகன், நல்லநாச்சி பக்கம் திரும்பினான்.

நல்லநாச்சி, வெட்கம் தலையைப்பிடித்துக் கீழே கவிழ்க்க - கன்னச் சிவப்பைக் காட்டியபடி ஒரு சிறிய ஓவியத்தை எடுத்து அவன் கையில் கொடுத்துவிட்டு - வேகமாகத் துள்ளிக் கூடத்து திரைச்சீலையில் தன்னை ஒளித்துக் கொண்டாள்.

அவள் தந்த ஓவியத்தைப் பார்த்த பண்டாரக வன்னியன் திடுக்கிட்டான்.

அவன் கண்களை அவனால் நம்ப முடியவில்லை. அந்த ஓவியத்தில் அவன் கண்டது காக்கை வன்னியனின் உருவம்!

கண்ணீர் பயணம்!



அதிர்ச்சி தரக்கூடிய செய்திகள் தாக்கும் போதும்- குழப்பங்கள் முற்றுகையிட்டுச் சூழ்ந்து கொள்ளும் போதும்--ஏடெடுத்து எதையாவது கிறுக்குவது பண்டாரக வன்னியனுக்கு வாடிக்கை! அந்தக் கிறுக்கல்கள், அவனே எதிர்பாராத அளவுக்கும் - அவனை வியப்பிலாழ்த்தும் அளவுக்கும் கவிதை வரிகளாக ஒளிவிடத் தவறுவதில்லை. அதனால் அவன் எதிர்கொள்ளும் நெருக்கடிகளும்- குழப்பங்களும் தற்காலிகமாக அவனை விட்டு விலகிய ஒரு நிம்மதி அவனுக்கு ஏற்படுவதுண்டு.

ஏற்கனவே குருவிச்சி நாச்சியுடன் கோபித்துக் கொண்டு, அவளை விட்டுப் பிரிந்திருக்கும் துயரம், நெஞ்சை அழுத்திப் பிசைந்து கொண்டிருக்கும் நிலையில் - தனது தங்கை நல்ல நாச்சி, காக்கை வன்னியனைக் காதலிக்கிறாள் என்ற நஞ்சினும் கொடிய தகவலை, தனது தங்கையின் வாயிலாகவே அறியும் போது அவன் தலையில் ஆயிரமாயிரம் சம்மட்டி அடிகள் ஏக காலத்தில் விழுந்தது போலாயிற்று!

சிறிது நேரம் பல்லைக் கடித்துக் கொண்டு மௌனமாக நின்றவன், பிறகு அந்த இடத்தைவிட்டு அகன்று, தனது தனியறைக்குள் நுழைந்தான். நல்லாச்சியும் ஊமைச்சி நாச்சியும் ஒருவரையொருவர் நடுக்கத்துடன் பார்த்துக் கொண்டனர். நல்ல செய்தியென்று நினைத்து சொல்ல வந்த இடத்தில் இப்படியாகி விட்டதேயன்று இருவரும் தத்தளித்தனர். இருவரிடையே பேச்சில்லை. முக ஜாடை காட்டிக் கொண்டே, பிறகு பேசலாம் என்று முடிவு கட்டியவர்களாக மாளிகையின் உட்பகுதிக்குள் சகோதரிகள் இருவரும் சென்றனர்.

பண்டாரக்குளம் அரண்மனையின் பலகணி வழியாக வானத்தை வெறித்துப் பார்த்துக்கொண்டே, தனது அறையில் உள்ள இருக்கையில் 'தொப்' என்று உடலைப் போட்டான் பண்டாரக வன்னியன்.

அவன் ஏற்கனவே எழுதிக் குவித்திருந்த கவிதை வரிகள் நிறைந்த ஏடுகளின் தொகுப்பு அவனெதிரே விரிந்து கிடந்து அவன் கவனத்தை ஈர்த்துக் கொண்டிருந்தது.

விண் மீதுவீசிய பார்வையை திரும்பப் பெற்றவாறு- ஏடொன்று எடுத்து எழுதத் தொடங்கினான். எத்தனை பிரச்சினைகள்! எத்தனை குழப்பங்கள்! எத்தனை நெருக்கடிகள்! எத்தனை எதிர்பார்ப்புகள்! எத்தனை அதிர்ச்சிகள்! இவற்றுக் கிடையே எழுதுவதா? ஆம்! அது ஒன்றே அவன் சோர்வையும் -கலக்கத்தையும் - வேதனையையும் தீர்க்கின்ற மருந்தாக, அவனுக்கு என்றைக்குமே இருந்து வந்திருக்கிறது! எனவே, களைப்பு நீக்கி - கவலை போக்கும் - அந்த மாமருந்தின் துணையை அவன் நாடினான்!

எழுதியது என்னமோ வேதனைக் கவிதை வரிகள்தான்! இருந்தாலும் அவன் கற்பனை கருவில் உதித்துப் பிறந்த குழந்தை என்பதால், அதனைப் பெற்றெடுத்ததில் ஒரு இன்பம்! ஒரு ஆறுதல்! மகிழ்ச்சி!

வாழ்வையே போராட்டமாக்கிக் கொண்டு
வாழ்கின்ற மனிதன்
காரிருளில் மின்னல் ஒளி கண்டு
களிப்படைகிறான்.
அந்த மின்னலுடன் பின்னிக் கொண்டு
அவன் தலையில் இடியொன்றும் வீழ்ந்துவிட,
அதிலும் சாகாமல் பிழைத்துக் கொண்டு
அக்கினியைப் புசித்தன்றோ வாழ்கின்றான்!
உடனிருந்து உயிர் தருகின்றேன் என ஒப்பி வந்தவரே -சிலர்
உடனிருந்து குழிப்பறிக்கின்றார்!
உடன் பிறப்பாய் இணைந்து பிறந்தவரோ, சிலர்
உடன் பிறந்தே கொல்லும் நோயாக மாறிவிட்டார்!

இதையெல்லாம் எதிர்த்து நிற்க எனக்கு
எதையும் தாங்கும் இதயம் யார் தருவார்?

வானத்தில் ஓட்டை போட ஒரு கோடி வல்லூறுப் பறவையினம் முயன்றாலும் முடியாதென்பேன்!

தமிழர்,

மானத்தைத் தேட்டை போட ஒரு கோடி அந்நியப் பகைவர் வரினும் தோற்றே போவார்!

குலசேகரம் வைரமுத்துப் பண்டாரகன், அவன் எழுதி முடித்த கவிதை வரிகளை அவனே இரண்டொரு முறை படித்துப் பார்த்துக் கொண்டான். இப்பொழுது அவன் உள்ளத்தில் அழுத்தியிருந்த சோர்வு ஒடிப்போயிற்று! உடலில், ஒரு புதிய தெம்பு பிறந்து விட்டது! எழுதிய ஏட்டினை, பழைய ஏடுகளுடன் சேர்த்து அடுக்கிவிட்டு, கைகால்களை உதறிக்கொண்டு உற்சாகமுற்றவனைப் போல எழுந்தான். அந்த அறையில் இருந்த அழைப்பு மணியைத் தட்டினான். அதன் ஓசை அடங்கு வதற்குள் ஒருவரையொருவர் முந்திக் கொண்டு இரண்டு வீரர்கள் எதிரே வந்து வணங்கி நின்றனர்.

"காலையில், கண்டிக்குப் புறப்படுகிறேன். என்னுடன் பாதுகாப்புக்கு நூறு வீரர்கள் கொண்ட ஒரு படை வர வேண்டும். அதற்கான ஏற்பாடுகள் தயாராகட்டும்!"

கம்பீரமான குரலில் பண்டாரகன் உத்தரவிட்டான். அந்த வீரர்கள் அங்கிருந்து காற்றாகப் பறந்தனர்.

கவிதை வரிகளை மருந்தாக்கிக் கொண்டு அவன் பெற்ற நிம்மதியை நிலைக்கவொட்டாமல், காக்கை வன்னியனுக்கும் நல்லநாச்சிக்கும் ஏற்பட்ட உறவு பற்றிய நினைவு அவனை அலைக்கழித்தது!

"எப்படி ஏமாந்தாள் என் தங்கை? இத்தனை நாளும் காக்கை வன்னியன் எனும் அந்தக் கயவனை அவள் பார்த்ததே இல்லையா? வணிகன் எனச் சொல்லியல்லவா அவளை அவன் வளைத்திருக்கிறான்! இவனுக்கெல்லாம் காதல் ஒரு கேடா? காதல்! அது எவ்வளவு புனிதமானச் சொல்! அந்தச் சொல்லின் தூய்மைக்கே கேடு விளைவிப்பவன், நல்லநாச்சியை எவ்வளவு

வஞ்சகமாக ஏமாற்றியிருக்கிறான்! காதல் எனும் திரை மறைவில், என் தங்கையைத் தன் கைக்குள் போட்டுக் கொண்டு - ஏதோ ஒரு பெரிய அரசியல் சதி நடத்தத்தான் காக்கை வன்னியன் திட்டம் போட்டிருக்கிறான்! இந்த உண்மையை நல்லநாச்சியிடம் எப்படிச் சொல்வது? சொன்னால் அவள், அதைத் தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொள்வாளே! பிறகு எப்படித்தான் இந்தச் சூழ்ச்சி வலையிலிருந்து அவளை மீட்பது? சரி நடப்பது நடக்கட்டும்! நானிருக்கிறேன்! என் கையில் வாளிருக்கிறது! அதுவும் பறிக்கப்பட்டால் யாராலும் பறிக்க முடியாத அஞ்சா நெஞ்சம் இருக்கிறது!" என்றெண்ணியவாறு படுக்கையில் தூக்கமின்றி புரண்டு கொண்டிருந்தவன், இரவை ஒருவாறு நகர்த்திவிட்டு - விடியற்காலை எழுந்து கண்டிப் பயணத்திற்குத் தயாரானான்.

அவனது ஆணைப்படி வலிமை மிக்க வீரர்கள் நூறு பேர் குதிரைகளில் அமர்ந்து அவர்தம் கைகளில் பலமான படைக் கலன்களுடன் அரண்மனை முகப்பில் அணி வகுத்து நின்றனர். பயணத்துக்கும் எதிரில் பகைவர் வரின் அவரை எதிர் கொள் வதற்கும் ஏற்ற வகையில் உடையணிந்து, பளபளக்கும் பட்டாக் கத்தியொன்றைக் கையில் ஏந்தியவாறு பண்டாரக வன்னியன், அரண்மனை வாசலுக்கு வந்தான். அவனது சகோதரிகள் இரு வரும் எதுவும் பேசாத ஊமைகளாய் அவனைப் பின் தொடர்ந்து வந்தனர்.

அலங்கரிக்கப்பட்டு நிறுத்தப்பட்டிருந்த அவனது போர்ப் புரவியின் மீது அவன் தாவி ஏறுவதற்கு முன் - சகோதரிகளை ஒருமுறைப் பார்த்தான். அவனது விழியொளிகளைத் தாங்க முடியாதவர்களாய் நல்லநாச்சியும், ஊமைச்சி நாச்சியும் தலைகுனிந்து மெல்ல நகர்ந்தனர். இதயத்தில் மண்டிக் கிடக் கும் சோகத்தை வெளிப்படுத்துவது போல சிறு கனைப்பு கனைத்துக் காட்டினான். அந்தக் கனைப்பு, மழை மூட்டத் துக்கான மேகத்திரளுக்கிடையே இடியொலி முனகுவதைப் போல மெல்ல ஒலித்தது. அண்ணன் மனத்தில் ஏதோ ஒரு சஞ்சலம், சதங்கை கட்டிக்கொண்டு பாதத்தை அழுத்தி அழுத்தி பரதம் ஆடுவதாக - சகோதரிகள் இருவரும் புரிந்து கொண்டனர்.

அப்போது அவன், அந்த ஓலைச் சுருளை நல்லநாச்சியின் கையில் திணித்தான். அவள், அதை வாங்கிக் கொண்டே - கண் களில் தோன்றிய முத்துக்கள், கன்னங்களில் உருண்டிட, அவனைப் பார்த்தாள்!

"நீ ஒரு ஓவியம் வரைந்து காட்டினாய் அல்லவா? இதோ நான் ஒரு ஓவியம் வரைந்திருக்கிறேன்! படித்துப் பார்! இதுதான் என் வாழ்க்கை ஓவியம்! வருகிறேன்!"

நல்லநாச்சியார் அதனைப் படிக்கத் தொடங்கினாள் - அவளருகே நெருங்கி ஊமைச்சி நாச்சியும் அதை உற்றுப் பார்த் தாள். அவன் எழுதிய கவிதை வரிகள்!

மீண்டும் சகோதரிகள் ஒருவரையொருவர் வெளிறிப் போன முகத்துடன் பார்த்துக் கொண்டனர். "கண்டிக்குப் போகிறேன், அவசரமாக! திரும்பி வரும் வரையில் இங்கே இருங்கள்!" என்று இருவரையும் நோக்கிக் கூறிவிட்டு, குதிரையில் பாய்ந் தான் பண்டாரகன்!

கண்டியின் அரசுரிமை யாருக்கு? கண்ணுச்சாமிக்கா? முத்துச்சாமிக்கா? இந்த மிகப் பெரும் பிரச்சினையில் தலை யிட்டு முடிவு காண்பதற்காகப் பண்டாரக வன்னியன், கண் டிக்குப் புறப்பட்டுச் செல்கிறான் என்ற செய்தி, கொழும்புக் கோட்டையில் இருந்த ஆங்கிலேயர்களுக்கு எட்டியதுதான் தாமதம், அந்தத் தலையீட்டை எப்படியும் தடுத்து நிறுத்த வேண்டுமென்று திட்டம் தீட்டப்பட்டது!

கண்ணுச்சாமி, ஆங்கிலேயரின் காலடியில் கிடக்க விரும்பா தவன் - எனவே அவனை அரசுப் பொறுப்பு ஏற்றிட விடக் கூடாது. பகைவர்க்கு மண்டியிட்டுப் பழகியவனும், சொந்த இனத்தைக் காட்டிக் கொடுப்பதில் சூராதி சூரனுமான முத்துச்சாமிக்கே முடிசூட்டு விழா நடத்த வேண்டுமென கொழும்பு நகரில் கூடிய ஆங்கிலேய அதிகாரிகள் தீர் மானித்தனர். எனவே பண்டாரக வன்னியன் கண்டிக்கு வரு வதை எப்படித் தடுப்பது என யோசித்தனர். படைகொண்டு சென்று, அவனைத் துரத்தியடிக்கலாம் என ஒரு சில அதி காரிகள் கருத்தறிவித்தனர். இப்போது அப்படியொரு திட்டம்

வகுப்பது - பெரும் யுத்தத்தில் கொண்டுபோய் விட்டுவிடும் என்றும், கண்டி அரசும் - பண்டாரகனின் முல்லைத்தீவு அரசும் இணைந்து போராடினால் அவற்றை வெல்வது கடினமென்றும், எனவே அவர்களைத் தனித்தனியாகத்தான் போரில் சந்திக்க வேண்டுமென்றும் - முதலில் அந்த இரு அரசுகளின் நட்பைப் பிரிக்க வேண்டுமென்றும் - அதன் பிறகே கடுமையான நடவடிக்கை வெற்றி பெறும் என்றும் சில அதி காரிகள் கருத்தறிவித்தனர். அப்படியானால் பண்டாரகனைக் கண்டிக்கு வரவிடுவோம் - பிறகு நமது சதி வலையில் சிக்க வைப்போம் - என இறுதி முடிவு மேற்கொண்டது கொழும்பு நகரில் கூடிய ஆங்கிலேயர் ஆலோசனை மன்றம்!

இவை எது குறித்தும் கவலைப்படாமல் பண்டாரக வன்னியன் பயணம், கண்டியை நோக்கித் தொடர்ந்து கொண்டிருந்தது.

நண்பர்கள் சந்திப்பு!

18

பண்டாரக வன்னியன், கண்டி வந்த டைவதற்குள்ளாக கண்டியின் மறைந்த மன்னர் ராஜா ராஜசிங்காவின் நம்பிக்கைக்குரிய அமைச்சராக இருந்த பிலிமதளாவைக்குக் கொழும்பு நகரிலிருந்து ஒரு அவசரக் கடி தத்தைத் தூதன் ஒருவன் கொண்டு வந்தான். அது, ஆங்கிலேயக் கவர்னர் பிரடரிக் நார்த் அனுப்பிவைத்த கடிதமாகும். அந்தக் கடிதத்தைப் பார்த்ததும் பிலிமதளாவை கலங்கிப் போனார். காரணம், உடனடியாகக் கண்ணுசாமியைக் கைது செய்து காவலில் வைக்குமாறும் - முத்துசாமியின் முடிசூட்டு விழாவுக்கான ஏற்பாடுகள் அனைத்தையும் கவனிக்குமாறும் கவர்னர் பிரடரிக் நார்த் குறிப்பிட்டிருந் ததுதான்!

பிலிமதளாவை அப்படியொன்றும் நல்ல மனிதர் அல்ல! இருந்தாலும் ஆங்கிலேயருக்குக் கீழ்ப்படிந்து அவர்கள் ஆட்டி வைக்கிற படி ஆடுகிற பதுமையாக இருக்க விரும்பாதவர். அதே சமயம், ராஜா ராஜசிங்காவின் மரணத்தையொட்டி, தானே கண்டி ராஜ்யத்தின் மன்னராக முடிசூட்டிக் கொள்ள வேண்டுமென மலையளவு ஆசையை மனத்தில் அடக்கி வைத்திருப்பவர். அந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்வதற்கு மாத்திரம் ஆங்கிலேயரின் உதவி கிடைத்தால் போதுமென எண்ணிக் கொண்டிருந்தவர். அவர் எண்ணியதற்கு மாறாக ஆங்கிலேய கவர்னர் பிரடரிக் நார்த்தின் கடிதம் வந்து விடவே அவர் திடுக்கிட்டுப் போனார்!

ராஜா ராஜசிங்காவுக்குப் பிறகு, இன்னமும் யாரும்

கண்டியின் அரசனாக முடிசூடிக் கொள்ளாத நிலையில், கண்ணுசாமியைக் கைது செய்துவிட்டால் அந்தப் பழி அமைச்சர் பிலிமதளாவையின் மீது விழுந்துவிடும்! முத்துசாமியின் முடி சூட்டு விழாவையும் பிலிமதளாவையே முடித்து வைத்து விட்டால், பிறகு முத்துசாமியைக் கையில் போட்டுக் கொண்டு பிலிமதளாவையும் ஒழித்துவிடலாம். அதற்குப் பிறகு முத்து சாமியின் மூக்கையும் சுலபமாக அறுத்து விட்டு, கண்டி ராஜ்யத்தையும் - ஆங்கிலேய ஆதிபத்தியத்தின் கீழ் கொண்டு வந்து விடலாம் என்பதே கவர்னர் பிரடரிக் நார்த்தின் திட்டமாகும்.

அந்தத் திட்டத்தை ஓரளவு உணர்ந்து கொண்ட கண்டியின் அமைச்சர் பிலிமதளாவை நேரடியாக ஆங்கிலேய எதிர்ப்பில் தன்னை சிக்கவைத்துக் கொள்ளாமல் - அதே சமயம் தன்னிஷ்டப் படி கண்டி ராஜ்யத்தின் நிர்வாக இயந்திரத்தைச் சுழற்ற என்ன வழியென்று சிந்தித்துக் கொண்டிருந்தார்.

கண்ணுசாமியைக் கைது செய்துவிட்டால் கவர்னர் நார்த்தின் கோபத்திற்கு ஆளாக நேரிடும் - அவனைக் கைது செய்து சிறையில் வைத்தாலோ பண்டாரக வன்னியனின் பகையை வலுவில் சென்று தேடிக் கொண்டதாக ஆகிவிடும்.

கவர்னரின் விருப்பப்படி முத்துசாமியை கண்டியின் வேந்தனாக ஆக்கிடும் முயற்சியில் ஈடுபடுவது எதிர்காலத்தில் தனக்குக் கேடாக முடியும் என்பதையும் பிலிமதளாவை உணர்ந்திருந்தார். முத்துசாமி, ஆங்கிலேயரின் அடிமை! அவர்கள் காலால் இடும் கட்டளையைத் தலையால் செய்து முடிக்கக் காத்துக் கிடப்பவன்! அவனை அரசனாக்கி விட்டால் அவனுக்கும் ஆங்கிலேயருக்கும் பகையை மூட்டிவிட்டு- அதற் கிடையே தன்னைக் கண்டி மன்னனாக அறிவித்து விடலாம் என்ற சதித் திட்டம் நிறைவேறாமலேயே போய்விடும்! மாறாகக் கண்ணுசாமியை மன்னனாக்கினால் - இயல்பாகவே அவனுக்கு ஆங்கிலேயர் மீதுள்ள வெறுப்பை வளர்த்து இருவரிடையே போர்க்களம் உருவாக்கி, அந்தச் சாக்கில் கண்டிக்கு அரசனாகவே, தான் வந்து விடக்கூடும் எனக் கணக்கிட்டுக் கொண்டிருந்தவர் பிலிமதளாவை!

தனது ராஜதந்திரத்துக்கு முற்றிலும் விரோதமான முறையில் காரியங்கள் நடைபெறத் தொடங்குகிறதே என்று அவர் கைபிசைந்து நின்றார்.

கண்ணுசாமியைக் கைது செய்வதா? முத்துசாமிக்கு முடி சூட்டுவதா? தனது எதிர்காலத் திட்டங்களுக்கெல்லாம் இப் போதே கல்லறை கட்டி விடுவதா? ஒரு வழியும் புரியாமல் தவித்துக்கொண்டிருந்த பிலிமதளாவையின் காதில், பண்டாரக வன்னியன் கண்டி நோக்கி வரும் செய்தி விழுந்தது.

பண்டாரக வன்னியனின் வீரம், தீரம், உறுதி வாய்ந்த நெஞ்சம், ஆங்கிலேயரை எதிர்க்கும் திண்மை, அவனுக்கு மக்க ளிடையே இருந்திடும் செல்வாக்கு - இவற்றை ஏற்றுக் கொள்ள முடியாத பொறாமை இதயம் கொண்டவர் பிலிமதளாவை என்றாலும் கூட - தற்சமயம் அவருக்கு அவனுடைய உதவி தேவைப்பட்டது!

பண்டாரகன் வருவது, கண்ணுசாமியின் அழைப்பின் பேரில்தான் என்பதை அவர் அறிவார் எனினும் - அவரும் அதை விரும்பியவர் போலக் காட்டிக் கொண்டு, தனது மாளிகைக்கு அவனை அழைத்து வந்தார்.

பண்டாரக வன்னியனின் கண்கள், கண்ணுசாமி எங்கே? என வினவி அங்குமிங்கும் அலைந்தன!

"பண்டாரகர் யாரைத் தேடுகிறார் என்று புரிகிறது! தங்கள் நண்பர் கண்ணுசாமியைத்தானே!" என்று குறும்பாகக் கேட்டார் பிலிமதளாவை!

ஆமாம்! அவர் அழைப்பின் பேரில்தானே வந்திருக்கிறேன்! கண்டியின் வாரிசுப் பிரச்சினையில் என்ன சிக்கல்?" எனக் கேட்டான் பண்டாரகன்!

"சிக்கல் ஒன்றுமில்லை! நீங்களும் நானும் விரும்புவது போல -கண்ணுசாமிதான் கண்டி மன்னனாக மகுடம் புனைதல் வேண்டும். அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் நான் மேற் கொண்டிருக்கும்போது, திடீரென ஆங்கிலேய கவர்னர் நார்த் பிரச்சினையில் பெரும் சிக்கலை ஏற்படுத்தி விட்டார்!"

"விபரமாகச் சொல்லுங்கள்!"

"கண்ணுசாமியைக் கைது செய்! முத்துசாமிக்கு முடிசூட்டு! இப்படியொரு கட்டளை, கவர்னரிடமிருந்து வந்துள்ளது!.

"அவர் யார் நமக்குக் கட்டளையிடுவதற்கு? நமது பூமியில் யாருடைய அரசு நடைபெற வேண்டுமென்று நிர்ணயிக்கிற உரிமை நமக்குத்தான் உண்டே தவிர, எங்கிருந்தோ வந்து, ஏமாந்தவர்களை வென்று, எமது ஏகாதிபத்யத்தை எவராலும் அசைக்க முடியாது என எக்களாமிடும் அந்த எத்தர்களுக்குக் கிடையாது! கிடையவே கிடையாது! அந்தக் கட்டளைக்குத் தலைவணங்க வேண்டிய அவசியமே இல்லை!"

"பண்டாரகர் பாயும் புலி! சீறும் சிங்கம்! பகை கண்டு மிரளாத வீராதி வீரர்! அறிவேன் நான்! ஆனாலும் ஆங்கிலேயரின் படை பலம் நமது இருநாடுகளின் படைபலத்தைவிட பலமடங்கு அதிகமன்றோ! அதனால் யோசித்துத்தானே முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கிறது!"

"என்ன யோசனை செய்திருக்கிறீர்கள்? என்ன முடிவுக்கு வந்திருக்கிறீர்கள்?"

"கண்ணுசாமியைக் கைது செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதாக கவர்னர் நார்த் அவர்களுக்குத் தெரிவிக்க ஒரு தந்திரம் என் மூளையில் உதித்திருக்கிறது!"

"என்ன தந்திரம்?"

"என் மகளுக்கும் கண்ணுசாமிக்கும் காதல் ஏற்பட்டு, அது கல்யாணம் வரையில் வந்துவிட்டதாகவும் - அந்த ஏற்பாடு களைச் செய்து கொண்டிருக்கும்போது, நான் எப்படிக் கண்ணு சாமியைக் கைது செய்ய முடியும்? என்று குழப்பமடைந் திருப்பதாகவும், கவர்னர் நார்த்துக்குத் தகவல் அனுப்பப் போகிறேன்!"

"அதை நார்த் நம்பவேண்டுமே?"

"தாங்கள் மனது வைத்தால் நிச்சயம் நம்புவார்!"

"நான் மனது வைப்பதா? அது எப்படி?"

"பண்டாரகர், தனது நண்பர் கண்ணுசாமிக்குப் பக்குவமாக நிலைமையைச் சொல்லி, இந்தத் திருமணத்துக்கு அவரை இணங்க வைக்க வேண்டும்."

"நானா? கண்ணுசாமியை இணங்க வைப்பதா? ஏற்கனவே நான் கண்ணுசாமியிடம் ஒரு தமிழ்ப் பெண்ணைத் திருமணம்

செய்துகொள் என்று அறிவுரை கூறியிருக்கிறேன். இப்போது அதைவிடுத்து தங்கள் மகளை - அதாவது ஒரு சிங்களப் பெண்ணை மணந்து கொள் என்று எப்படிக் கூற முடியும்?"

"ஆபத்திலிருந்து கண்ணுசாமி தப்புவதற்கும், அரசுப் பொறுப்பை ஏற்பதற்கும் அது ஒன்றுதானே சிறந்த வழியாகத் தென்படுகிறது! கண்டியின் அமைச்சராக இருக்கும் என்னிடம் ஆங்கிலேயர் நல்ல நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். கண்ணுசாமியை என் மருமகனாக்கிக் கொண்டால், எனக்காகக் கண்ணுசாமிக்குச் சலுகை கிடைக்குமல்லவா!"

"இந்தத் திட்டத்தை நாமிருவரும் ஒத்துக் கொண்டால் கூட, உங்கள் மகள் ஒத்துக்கொள்ள வேண்டுமே?"

"என் மகளுக்குக் கண்ணுசாமி என்றால் உயிர்! கண்ணுசாமி தான் அவளது கோரிக்கையை இதுவரையில் ஏற்றுக் கொள்ளவில்லை. மணந்தால் கண்ணுசாமியை மணப்பேன், இல்லையேல் மரணத்தைத் தழுவிவிடுவேன் என்று என் மகள் புலம்பாத நாளே இல்லை!"

பிலிமதளாவையே காதலில் உருகிப் பேசுவதைப் புன்ன கையுடன் கவனித்துக் கொண்டிருந்த பண்டாரக வன்னியன், யாரோ அந்த மாளிகைக் கூடத்திற்குள் நுழைவதைப் பார்த்து விட்டு, மகிழ்ச்சி ததும்ப "ஓ! நீயும் வந்துவிட்டாயா?" எனத் துள்ளிக் குதித்து எழுந்தான்.

கம்பீரமாக ராஜநடை போட்டு வந்த கண்ணுசாமியும், விரைந்தோடி வந்து பண்டாரக வன்னியனின் கரங்களைக் குலுக்கிக் கட்டித் தழுவிக் கொண்டான்.

"என்ன, உனக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருக்கிறதாம்! எனக்குச் சொல்லவே இல்லையே!" என்று கண்சிமிட்டிக் கேலியாகக் கேட்டான் பண்டாரகன்!

"யாருக்கு? எனக்கா? ஓ! முன்பு சொன்னாயே, அந்த மதுரை இளவரசி! அவளா? பேசி முடித்துவிட்டாயா?"

"நான் சொன்ன மதுரை இளவரசி தமிழச்சியல்லவா? இப் போது நான் கேள்விப்படுவது சிங்களத்து மயில்!"

கண்ணுசாமிக்கு ஒரே திகைப்பு! பண்டாரகவன்னியனையே பார்த்துக் கொண்டு மரம்போல் நின்றுவிட்டான்.

மனமில்லா மணம்!

19

பியசிலீ ஒரு திராட்சைக் கொத்து! பிலிமதளா பெற்றெடுத்த பருவக்கொடி! மதுவை, அருந்தினால் தான் போதையும் மயக்கமும் வருமென்பர் - இந்த மாதரசியைக் கண்டாலே போதும் வாலிபர் மயங்கி வீழ்வர்! வயோதிகர் இதழ்களின் இருபுறமும் உமிழ் நீர் வழிய ஸ்தம்பித்து நின்றிடுவர்! ஒரு கை தராவிடில் ஓடிந்து விழுந்து விடுமோ என எண்ணிடத்தக்க வகையில் துடியிடை! அந்த இடை தாங்குமோ இத்தனை கனம் என வியக்கும் வண்ணம் இரு பெருந்தனம்! இளம் உள்ளங்களை வலை போட்டு வாரிக் கொள்ளும் வண்டுநிகர் குண்டு விழிகள்! அசைவுக்கு ஆயிரம் ஆடவர் அடிமையாகிடுவர்- ஆடையணியும் விதமோ முற்றும் துறந்த முனிவரைக் கூட அறைகூவலுக்கு அழைத்து. அரை நொடியில் தோற்கடித்து ஜெயபேரிகை கொட்டும்! இப்படியொரு மயக்குமேனியாளை மகளாகப் பெற்ற பிலிமதளாவை - அந்த மகளைக் கொண்டே கண்டியின் மகுடத்தைத் தனதாக்கிக் கொள்ளக் கனவு கண்டு கொண்டிருந்தார் தந்தையின் மனத்திலிருப்பதை முழுமையாக உணராத, பியசீலியும், தன்னைச் சுதந்திரமாகக் கண்ணுசாமியிடம் பழக விட்ட வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, அவனைச் சுற்றிச் சுற்றி வந்தாள். அவளைச் சுற்றிப் பலபேர் வரிசையில் நின்றார்கள் - ஆனால் அவளோ அவர்கள் மீது பட்டும் படாமல், தொட்டும் தொடாமல் உரசியவாறு, அவர்களை இன்பலோகத்து உச்சியிலே ஊசலாட விட்டுவிட்டு - கண்ணுசாமியின் கட்டில் ராணியாகவே வட்டமிட்டுக் கொண்டிருந்தாள். கண்ணுசாமியும் கட்டிளங்காளை - அரண்

மனையின் செல்லப் பிள்ளை - தட்டிக் கேட்க யாருமின்றி வளர்ந்தவன்–வானமுதம் வலுவில் வந்து வாயில் விழுந்திடும்போது சுவைக்காமலிருக்க அவன் என்ன மரக்கட்டையா?

ஆள்மயக்கியாக இருக்கிறாளே - ஆகுமோ இவளுடன் உறவு? இப்படித்தான் முதலில் தயங்கினான்! அவளோ விடுவதாக இல்லை! அந்த இளம் வயதில் அத்தனை வித்தைகள் எப்படிக் கற்றாளோ, அத்தனையும் அவனுக்குக் கற்றுக் கொடுத்தாள்! அரசன் உயிருடனிருக்கும்போதே அமைச்சரின் வீடுதான் கண்ணுசாமிக்கு பொழுதுபோக்குகூடம்! போக சாலை! காம வேள் யாகசாலை! அமைச்சர் மாளிகையின் அந்தப்புரத்தில் - கூடத்தில் - தாழ்வாரத்தில் - நந்தவனத்தில் - பகலில் - இரவில் - சதா நேரமும் திராட்சை ரசம் ஒரு கையில்! பியசீலி மற்றொரு கையில்! அந்த ரசம் இருக்கும் கிண்ணங்களாக இருவர் வாய்களும் மாறும்! இருவரும் பருகப் பருகத் தேன் ஊறும்! அந்த உல்லாசக் கேளிக்கைகளைப் பார்த்தும் பார்க்காதவர் போல பிலிமதளாவைப் பல நேரங்களில் போய் விடுவார்! அவர் விரும்பியது நடக்கும்போது, தடை எதற்கு?

அவள் தந்த அமுதகலச பானத்தை அள்ளி அள்ளிப் பருகிய கண்ணுசாமி, அவளைப்போகப்பொருளாகத்தான் கருதினான். சிற்பி செதுக்காத அந்த அழகு வடிவத்தை கடித்து விழுங்கத்தான் துடித்தான். வழுவழுப்பான கல்லில் வடிக்கப்பட்ட சிலையைப் பலரும் தொட்டு தொட்டு மகிழ்வதைப்போல–பியசீலியையும் சில ஆணழகர்கள் தொட்டு மகிழ்வது அவனுக்குத் தெரியும். அவனுக்குள்ள உரிமையெல்லாம் அவன், அவளை அதிக நேரம் தொட்டு மகிழலாம் என்பதுதான்! அது மட்டுமல்ல, பியசீலியின் அந்தத் தேனுடல், அவன் சுவைக்கும் நேரம் போகத்தான் மற்றவர்களுக்கு! அதையும் அவள் முழுமையாகச் சுவைக்க யாரையும் அனுமதிப்பதில்லை! அதற்காக அவர்களை விரட்டி விடுவதுமில்லை! எடுப்பான தனது அழகு மேனிக்காக எத்தனை பேர் தவமிருக்கிறார்கள் என்று கண்ணுசாமியிடம் காட்டிக் கொள்வதில் அவளுக்கோர் பெருமிதம்! கோபுரத்துப் பொம்மையாகத்தான் பியசீலியை

அவன் கருதினான் - ஆனால் அந்தப் பொம்மை கோயிலின் கர்ப்பக்கிரகத்திற்குள் மூலவிக்கிரகமாகப் போய் உட்கார்ந்து கொள்ளத் திட்டமிட்டு அவனை முத்தமிட்டுக் கிடந்தது!

"கண்ணாளா! என்னைப் பார் என் அழகு முழுதும் உனக்குப் படையல் போடுவதற்காகவே! என் புன்னகையொன்று போதும் அதற்கு இந்தப் புவியே ஈடாகாது எனப் பல் இளித்து வந்த பரங்கித் துரைமார்களை பட்டு விரல்களால் தொட்டுத் தடவியே அவர்கள் வந்த பாதையிலேயே அனுப்பி வைத்து விட்டேன்! என் முறை மாப்பிள்ளை எவ்வளவு பெரிய முரடன்! முரட்டுத்தன மென்றால் எனக்கு மிகவும் பிடிக்குமென்று நீ கூட அனுபவத்தில் அறிவாயே கண்ணாளா, அவனுக்குக் கூடத் தொலைந்து போகிறான் என்று, இடுப்பில் ஒரு முத்தம் கொடுக்க இடம் கொடுத்து விலகிக் கொண்டேனே தவிர, அவன் விரக தாபத்துக்கு இன்னமும் விருந்தாகவில்லை. ஏன்? எதற்காக? எண்ணிப்பார் என் உயிரே! எத்தனை பேர் பற்றி இழுக்கத் துடிக்கின்றார் என் இதழை! அதில் ஓரிருவர் வெற்றி கண்டா லும் கூட, நீ சுவைக்க வேண்டும் என் இதழை என்றுதானே உன் மடியை மஞ்சமாக்கிக் கொள்கிறேன்! உன் பிடியில் மயங்குகிறேன்! தந்தையறிவார், நமது உறவை! என்ன விந்தை இது? எனக் கேட்டாரில்லை! கேட்க மாட்டார்! சரியான ஜோடியென அவரும் சரி, உற்றார் உறவினரும் சரி தீர்மானித்து விட்டனர்! இனி என்ன மிச்சம்? திருமணம் ஒன்றுதானே! திருமணத்திற்குப்பின் நடக்கவேண்டியவை அனைத்தும் இப்போதே ஒத்திகைகளாக நடந்து விட்டன! சரி சொல்லுங்கள், சதிபதிகளாக வாழ்வோம்!"

இப்படிச் சொல்லிக் கொண்டே சில நாட்களுக்கு முன்பு உடையின்றி அவன் உடல் மீது சரிந்தது நினைவுக்கு வந்தது இப்போது கண்ணுசாமிக்கு!

தனது நண்பன் பண்டாரகனிடம் அமைச்சர் பிலிமதளாவை, பியசீலியின் திருமணத்தைப் பற்றித்தான் பேசியிருக்க வேண்டு மென்று கண்ணுசாமி, தீர்மானித்துக் கொண்டான்.

கண்ணுசாமியின் மனோநிலையிலும் ஏதோ மாற்றமிருப்பதைப் புரிந்துகொண்ட பண்டாரக வன்னியன், அமைச்சரைப் பார்த்து, "நானும் கண்ணுசாமியும் சிறிது நேரம் தனியாகப் பேசவேண்டும்" என்று கூறவே – "தாராளமாக!" என்று சொல்லிக்கொண்டே பிலிமதளாவை, அங்கிருந்தவர்களையெல்லாம் சைகை செய்து அழைத்துக் கொண்டு வேறு பக்கம் போய்விட்டார்.

"என்ன? காதல் வலையில் விழுந்துவிட்டாயா?" சிரித்துக் கொண்டே குறும்பு செய்தான் பண்டாரகன்.

"இந்தக் காதல் பண்டாரகனுக்கும் குருவிச்சிக்கும் ஏற்பட்டது போன்ற உள்ளத்தால் ஒன்றுபட்டது அல்ல! உண்மையைச் சொன்னால் இது காதலே அல்ல! உடற்பசிக்குக் கிடைத்த உணவு!"

இதைச் சொல்லும்போது நண்பனின் முன்னே தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டான் கண்ணுசாமி!

"குருவிச்சியின் காதலே குந்தகப்பட்டுவிட்டது என்கிறபோது – ராஜதந்திரத்துக்காக நடத்தப்படும் காதல் என்பது ஒரு நாடகமாகத்தானே இருக்கும்!"

"ஆமாம்! நண்பா! அமைச்சரின் மகள் பியசீலி இருக்கிறாளே, அவள் ஒரு அழகு தேவதை! அவள் எப்படியோ என்னை அடிமை கொண்டுவிட்டாள்! நான் மட்டுமா? எத்தனையோ ராஜகுடும்ப வாலிபர்கள் அவள் காலடியில் கிடக்கத் தவம் இருக்கிறார்கள்!"

"ஓ! வரம் உனக்கு மட்டும் கிடைத்ததாக்கும்!"

"தவறு! அவள் சிலபேரை பொறுக்கி எடுத்துக் கொள்கிறாள்! அதில் அதிக உரிமை – அதிக நேரம் எனக்கு!"

"உன் பருவக் கோளாற்றின் பயன் என்ன தெரியுமா? பியசீலியை நீ திருமணம் செய்து கொள்ள வேண்டு மென்று திட்டம் தயாராகி விட்டது!"

"அது மாத்திரம் முடியாதென்று நான் அவளிடமே திட்ட வட்டமாகத் தெரிவித்து விட்டேன்!"

"அவள் ஒத்துக் கொண்டாளா?"

"இல்லை! நானில்லையேல் அவள் இல்லையாம்! நஞ்சருந்தி மாண்டு விடுவேன் என்கிறாள்!"

"அவளை மணப்பதற்கு நீ ஏன் மறுக்க வேண்டும்?"

"அழகான பறவை அவள்! ஆனால் புழுக்களைத் தின்னுகிறாள்!"

இப்போதைக்கு சமாதானப் புறாவாக அந்தப் பறவையைத் தான் உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும் ."

"என்ன சொல்லுகிறாய்? எனக்கு எதுவும் புரியவில்லையே!"

"உன்னைக் கைது செய்து சிறையில் அடைத்துவிட்டு, முத்து சாமிக்கு மூடிசூட்டுமாறு கவர்னர் நார்த், பிலிமதளாவைக்குக் கட்டளை பிறப்பித்திருக்கிறான். இந்த இக்கட்டான நிலை யிலிருந்து சமாளிக்க, உன்னைத் தனது மாப்பிள்ளையாக்கிக் கொள்ள முடிவு செய்திருக்கிறார் பிலிமதளாவை!"

"மாப்பிள்ளையாக்கி விட்டால் கைது செய்யத் தேவை யில்லையா?"

"முத்துசாமியைவிட கண்ணுசாமியும், கண்ணுசாமியின் மாம னார் பிலிமதளாவையும் ஆங்கிலேயருக்கு நெருக்கமான நண் பர்களாகிவிடக் கூடும் எனக் கொழும்பு கவர்னர் நினைக்க லாம் அல்லவா?"

"பியசீலியை மணப்பதா? அவள், கண்ட பூனைகளும் முகர்ந்து பார்க்கும் தின்பண்டமல்லவா?"

"அந்தப் பூனைகளில் நீதானே முக்கியமான பூனை! முதலில் மணந்துகொள்! ஆபத்திலிருந்து தப்பித்துக்கொள்! பிறகு மகுடம் புனைந்துகொள்! அதன் பிறகு வேறு பூனைகள் வராமல் விரட் டும் வேலையைப் பார்த்துக் கொள்!"

"விளையாடுகிறாயா?"

"விளையாடவில்லை! தந்திரத்தை தந்திரத்தால் வென்று, கண்டியின் ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு இன்னும் பல சூழ்ச்சிகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது! அதற்கு நான் நிச்சயம் துணை இருப்பேன்! இப்போது இந்தத் திருமணத்துக்கு ஒப்புக் கொள்!"

"பியசீலியுடன் நடப்பதற்குப் பெயர் திருமணமா?"

"சாணத்தைச் சந்தனமெனப்பூசிக்கொண்டவன் நீ! அதனால் நீதான் "ஆகா! என்ன மணம்! என்ன மணம்!" என்று பாராட்டி மகிழ வேண்டும்!"

"வேறு வழியே கிடையாதா?"

"வேறு வழி! அந்த முத்துசாமியிடம் கண்டி ராஜ்யத்தை ஒப் படைத்துவிட்டு, ஆங்கிலேயர்களுக்கு கதவு திறப்பதுதான்!"

"வேண்டாம்! வேண்டாம்! ஆங்கிலேயர் ஆதிக்கம் அடிவைக் காமலிருக்க, பியசீலி என்ன, இவளை விட ஒரு கேவலமான பெண்ணை மணக்கவும் நான் தயார்!"

"பியசீலி, யார் என்று தெரிந்துதானே தொட்டாய்! இனி திருந்தி விடுவாள் என்ற நம்பிக்கையோடு திருமணத்துக்கு சம்மதம் கொடு!"

கண்ணுசாமி, பண்டாரக வன்னியனை வேதனையுடன் தழுவிக் கொண்டு– அந்த மனமில்லா மணத்திற்குத் தலை யசைத்தான்.

சதி வலை!

20

பியசீலி கண்ணுசாமி திருமணம் கண்டியில் மிக விமரிசையாக நடந்தது. கண்ணுசாமியைக் கைது செய்யுமாறு பிலிம தளாவைக்குத் தாக்கீது அனுப்பியிருந்த கொழும்பு கவர்னர் நார்த்தும்கூட திருமணத்திற்கு வந்திருந்து மணமக்களை வாழ்த்தியது கண்ட முத்துசாமி பெரும் ஏமாற்றத்துக்கு ஆளானான். வித்தியாசமான ராஜ தந்திர வேடிக்கைகளின் விளைவுகள் என்ன ஆகுமோ என்று சிந்தித்தவாறு பண்டாரக வன்னியன் சில நாட்கள் கண்டி அரண்மனையிலேயே தங்கியிருந்தான். கண்டியின் மன்னனாகக் கண்ணுசாமி முடிசூடிக் கொள்ளப் போகிறான் என்றும் - அதற்குக் கொழும்பு கவர்னர் மறுப்பு தெரிவிக்கப் போவதில்லையென்றும் செய்திகள் வரவே, அதனை எப்படியாவது சூழ்ச்சி செய்து தடுத்திட வேண்டுமென முத்து சாமி எவ்வளவோ முயன்று பார்த்தான். ஆனால் முடிய வில்லை. கண்ணுசாமிக்கு முடிசூட்டு விழா நடைபெறும் நாளில் கண்டியிலேயே இருக்கக் கூடாதென்று கருதி, கொழும்பு நகருக்கே ஓடிவிட்டான்.

கவர்னர் நார்த்தின் காலில் விழுந்து கதறிய முத்துசாமியைத் தட்டிக் கொடுத்து ஆறுதல் கூறினார், அந்த ஆங்கிலேய ஆதிபத்யத் தூதுவர்!

"கவலைப்படாதே முத்துசாமி! காரியங்கள் எப்படி நமது எண்ணத்துக்கு மாறாக நடக்கின்றன என்பதை நானும் கவனித்துக்கொண்டு தானிருக்கிறேன். ஆனால் ஒன்று. ஆங்கிலேயர்களின் மூளையை மட்டும் சாதாரணமாக எடை போட்டு விடாதே! டச்சுக்காரர்கள், போர்ச்சுக்கீசியர்களைப் போல அவசரப்பட மாட்டோம் நாங்கள். ஆத்திரமிருக்கும் மனத்தில்! ஆனால் அதை வெளியில் காட்டிக்கொள்ள மாட்டோம்! எங்கள் ஆதிக்க பலமே எதிரியைக் குறைத்து மதிப்பிடாமல் ஜாக்கிரதையாக அணுகுவதுதான். அப்போதுதான் வெற்றி யடைய முடியும்! அப்படிப் பல வெற்றிகளைப் பெற்றுக் கொண்டு வருபவர்கள் நாங்கள்! அதனால் தான் கண்டியில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டும் காணாததுபோல இருந்து வருகிறோம்! அதற்காகக் கண்டியைக் கை கழுவி விட்டோம் என்று அர்த்தமல்ல!"

கவர்னர் நார்த்தின் இந்த உரைகள் முத்துசாமிக்குச் சிறிது மனத்தெம்பினை வழங்கிய காரணத்தால் நார்த்தின் யோசனைப்படி, ஆங்கிலேயருக்கு எடுபிடியாகக் கொழும்பு மாளிகையிலேயே தங்கிக் கொண்டான்.

கண்டியில் கண்ணுசாமியின் முடிசூட்டு விழாவுக்கு கவர்னர் நார்த் வாழ்த்துச் செய்தி மட்டுமே அனுப்பியிருந்தார்.

நல்லவேளை! இன்னொரு முறை அந்த வெள்ளைக் குரங்கின் முகத்தைப் பார்க்கக் கூடிய தொல்லை, தனக்கு ஏற்படவில்லை யென்ற மகிழ்ச்சி பண்டாரக வன்னியனுக்கு!

ஆனால் அவனுக்கு, கொழும்பு கவர்னர் நார்த் - பிலிமதளாவைக்கு அனுப்பி வைத்த நீண்ட கடிதம் பற்றிய விபரம் எதுவும் தெரியாது! அது ஒரு சூதுச் சுரங்கம்! சூழ்ச்சிப் பின்னல்! அந்தப் பின்னணி தெரியாமலே கண்டி அரண்மனையில் மேலும் சில நாட்களைத் தனது நண்பன் கண்ணுசாமியுடன் பண்டாரகன் கழித்தான்.

குருவிநாச்சி என்ன ஆனாளோ என்ற கலக்கம் ஒருபுறம் - முல்லைத்தீவு அரண்மனையில் தங்கியிருக்குமாறு கூறிவிட்டு வந்தானே, அந்தச் சகோதரிகள் என்ன எண்ணிக் கொண்டிருக் கிறார்களோ, என்ற கவலை ஒருபுறம்!

அவற்றுக்கிடையே கண்டியில் கண்ணுசாமியின் ஆட்சிக்குத் துணையாகச் சில நாட்கள் இருந்து விட்டுப் போவதுதான் சிறந்தது என்ற எண்ணம் வேறு!

அமைச்சர் பிலிமதளாவை, தனக்குக் கொழும்பு கவர்னர் அனுப்பியிருந்த அந்த நீண்ட கடிதத்தைத் திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்துக்கொண்டார். காலையில் படுக்கை விட்டெழுந்ததும் ஒரு முறை எடுத்துப் படிப்பார். நடுப்பகல் உணவருந்தி விட்டுச் சற்று ஓய்வு கொள்வதற்கு முன்பு ஒரு முறை படிப்பார். இரவு, உறங்கச் செல்லும்போதும் ஒருமுறை படிப்பார்.

"கண்ணுசாமிக்கும் பண்டாரக வன்னியனுக்குமிடையே கலகமூட்டுவதா? நடக்கிற காரியமா? நம்மால் முடியுமா? முடிந்தால் – கண்டி ராஜ்யத்தையே எனக்கு வழங்கி, அதனைக் காத்திட ஆங்கிலேயப் படைகளையும் ஆயிரக்கணக்கில் வழங்குவதாகக் கொழும்பு கவர்னர் கூறுகிறாரே, எவ்வளவு இனிப்பான செய்தி! படை மட்டுமல்ல, பணமும் குவியல் குவியலாக ஆங்கிலேய சாம்ராஜ்யம் அளிக்கும் என உறுதி வழங்கும்போது – ஆண்டவனே குறுக்கே நின்றாலும், அவனையும் மீறி நான் செயல்பட்டுத்தானே ஆக வேண்டும்! பண்டாரகனும் கண்ணுசாமியும் நகமும் சதையும் போல! எப்படிப் பிரிக்க முடியும் அவர்களை! நகம், சதையை விட்டு வெளியே நீண்டு வளர்வதில்லையா? அதைப்போல பண்டாரகனை, கண்ணுசாமியை விட்டு சற்று விலக்க வேண்டியதுதான்! விலக்குவதால் மட்டும் பயனில்லை! விரோதத்தையே உருவாக்க வேண்டும்! அப்போதுதான் இருவரும் ஒருவரோடு ஒருவர் மோதிக் கொள்வர்! கண்ணுசாமியும் பண்டாரகனும் தீராத பகைவர்களாகிவிட்டால், கண்டியை ஆங்கிலேயர் துணையுடன் நானே, வசப்படுத்திக் கொள்வேன்! பகை மூளட்டும் – என்று மட்டும்தானே கவர்னர் எழுதியிருக்கிறார். எந்த வகையில் பகையை உருவாக்குவது என ஒரு ஜாடை கூடக் காட்டவில்லையே! அந்த யோசனையையும் கவர்னர் துரையிடமே கேட்டால், அவர் நமது அறிவுக் கூர்மையை அல்லவா சந்தேகப்படுவார்! நானே

சிந்திக்கிறேன்! பண்டாரகனுக்கும் கண்ணுசாமிக்கும் பெரும் பகை மூண்டிட வழி காணுகிறேன்! ஆனால் ஒன்று! பண்டாரகன், கண்டி யிலிருந்து திரும்புவதற்குள் அந்தப் பகையை விதைக்க வேண்டும்!"

பிலிமதளாவையின் மூளையில் பல்வேறு திட்டங்கள் தோன்றித் தோன்றித் தன்னை ஏற்றுக் கொள்க - தன்னை ஏற்றுக்கொள்க- எனத் தொழுது நின்றன! எல்லாத் திட்டங்களையும் புறக்கணித்து விட்ட அவர், இறுதியாக இதுவே ஏற்புடைய திட்டமென ஒரு சதித் திட்டத்தைத் தேர்ந்தெடுத்தார். அந்தத் திட்டத்தை எண்ணிப் பார்த்திட முதலில் அவருக்கே கொஞ்சம் கூச்சமாக இருந்தது! பிறகு வெட்கத்தை உதறிவிட்டு, வெற்றிப் புன்னகையுடன் எழுந்தார்.

நண்பர்களாம் தங்களுக்குள் பகை மூட்டிட பிலிமதளாவை சதி வலை தயாரிப்பது பற்றிய தகவல் எதுவுமறியாமல், கண்டி அரண்மனையில் ஒரு எழில்மிகு அறையில் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான் பண்டாரக வன்னியன். முல்லைத்தீவு குறித்தும், இலங்கையில் அன்னியப் பகைவர் ஆதிக்கக் கால்களை ஊன்றிக்கொள்ள முயற்சிகள் மேற்கொள்வது குறித்தும் நீண்ட நேரம் மனத்தைக் குழப்பிக் கொண்டிருந்துவிட்டுக் கடைசியாகத் தூங்கியவன், தன்னருகே என்ன நடக்கிறது என்று அறியாமலே அயர்ந்து போய்விட்டான்.

பிரகாசமாக அந்த அறையில் எரிந்துகொண்டிருந்த விளக்கை, ஒரு அழகிய கை தொட்டு, வெளிச்சத்தைக் குறைத்தது. அது பெண்ணின் கைதான். பின்னர், படுக்கையைச் சுற்றி மெல்ல அசைந்து கொண்டிருந்த மெல்லிய சல்லாத் துணி விலகிற்று! அந்தத் திரையை விலக்கிக்கொண்டு, ஒரு பெண் - பண்டாரகனின் படுக்கையில் அமர்ந்தாள். சிறிய வெளிச்சத்தில் அவள் கண்கள் படபடவெனத் துடித்தன. அவள் இதழ்களும் விழிகளுடன் போட்டி போட்டன.

வேறுயாருமல்ல, பியசீலிதான்! அவள், அவன் முகத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள். மனிதர்களை மயக்கும் மார்பக அழகை மறைத்திருந்த மேலாடையை விரல்களால் கீழே வீழ்த்தியவள், பண்டாரகனின் தோளை மெதுவாகத் தொட்டாள்.

தழுவுதும் — முதுகரியபுள்

21

நாலைந்து முல்லை அரும்புகள், தோளில் விழுந்து உருள்வது போன்ற உணர்வுடன் பண்டாரக வன்னியன் மெல்லப் புரண்டு, திரும்பிப் படுத்துக் கொண்டான். இப்போது அவனது முதுகின் அழகை ரசிக்கும் வாய்ப்பு பியசீலிக்குக் கிடைத்தது. மகாபாரதத்தில் வரும் கிளைக்கதைகளில் ஒன்று, யாரோ சொல்ல அவள் கேள்வியுற்றது. இப்போது நினைவுக்கு வந்தது. பார்வதி தேவிக்கு அர்ச்சுனனின் முதுகு அழகைப் பார்க்க வேண்டுமென்ற ஒரு ஆசை! அந்த ஆசையை தேவி, பரமசிவனிடம் வெளியிட்டாராம்! அதற்காகவே பரமசிவன், அர்ச்சுனனைத் தன்னுடன் வலியப்போருக்கு அழைத்து இருவரும் பொருதிடும்பொழுது, அர்ச்சுனனின் முதுகைத் திருப்பிப் பார்வதி தேவிக்கு காட்டினாராம்! இப்படியொரு கதை! அவ்வளவு கவர்ச்சிகரமான முதுகாம், காண்டீபனுக்கு!

"நான் பார்த்திபனைப் பார்த்ததில்லை! பார்த்திருந்தால் தான் என்ன? பண்டாரகனின் முதுகின் அழகு, அவனுக்கு இருந்திருக்க முடியாது!" எனத் தீர்மானித்துக்கொண்டவளாகத் தனது தளிர் இலை போன்ற உள்ளங்கையால் அவன் முதுகை மெதுவாகத் தடவினாள்.

பண்டாரகனுக்கு ஆழ்ந்த தூக்கம்! அந்தத் தூக்கத்தைக் கலைக்க முயன்ற பியசீலியின் செயல், அவனைக் கனவுலகத்திற்குத் தூக்கிச் சென்றுவிட்டது!

கட்டிலில் தன்னருகே பியசீலி! அது அவனுக்குத் தெரியாது! கனவிலோ குருவிச்சி நாச்சி! அவளை அவன் கொஞ்சுகிறான்!

"கோபமா குருவீ! என்னுடன் வரவேண்டாம் என்றுதான் சொன்னேனே தவிர, என்னுடன் வாழ வேண்டாம் என நான்

சொல்லவில்லையே! என்செய்வது, நாமிருவரும் எடுத்துக் கொண்ட உறுதி மொழியின்படி நமது இலட்சியம் ஈடேறும் வரையில் நமக்குள் உடலுறவுதான் கிடையாதே தவிர - இரு உள்ளங்களும் தழுவிக்கொள்வதை, கொஞ்சிக் கொள்வதை, குலாவிக் கொள்வதை, முறுவல் பூத்து முத்தமாரி பொழிந்து கொள்வதை நீயோ அல்லது நானோ தடுக்க முடியுமா? முடியாது குருவி, முடியாது!"

என்று தழுதழுத்த தொனியில் கூறியவாறு, குருவிச்சியின் மடியில் தலைசாய்த்து அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் பண்டாரகன்! அவளோ, அவன் கால்களை வருடிக்கொடுத்தவாறு, அவன் முகத்தருகே தன் முகம் சாய்த்து, வைத்த விழி வாங்காமல் அவனை விழுங்கிக் கொண்டிருந்தாள். பண்டாரகன் கண்களோ குளங்களாக! குருவிச்சியின் கண்களோ கொட்டும் அருவிகளாக!

மலர் தூவாத படுக்கைதான் அது! அதில் இருமலர்களும் கண்ணீர் எனும் பனியில் தங்களை நனைத்துக்கொண்ட மலர்களாகக் கிடந்தன! இணைந்து இறுக அணைத்து மகிழும் இன்பத்தைவிட, பிரிந்து சோகப் புலம்பலைப் பாட்டாக்கிக் கொண்டிருக்கும் போது ஏற்படும் காதலின்பம் காலத்தால் வெல்லமுடியாத ஒன்று என்ற உணர்வைப் பெற்றவர்களாய் இருவரும் அந்தக் கனவுலகில் கண்ணீர்க் கடலில் மிதந்தனர்.

"குருவி! நான்தான் ஏதோ ஆத்திரத்தில் கடுஞ்சொல் கூறி விட்டுக் கிளம்பினேன் - நீ என்னிடம் உன்னைத் தந்துவிட்டது உண்மையென்றால், நீ என்னைத் தொடர்ந்து ஓடி வந்திருக்க வேண்டாமா? அறியாமல் செய்து விட்ட தவறு - அதனைப் பெரிது படுத்தாமல் என்னை மன்னித்து விடுங்கள்! என்று நீ ஒரு வார்த்தை கூறியிருந்தால் - நூறாயிரம் சம்மட்டிகளால் என் இருதயத்தில் ஓங்கி ஓங்கி அடித்தது போல் இருந்திருக்குமே! நீயேன் என்னை விட அதிகமாகக் கோபம் கொண்டு, என்னையே திரும்பிப் பார்க்காமல் மறந்து விட்டாய்?"

"வேதனை வெள்ளத்தில் என்னைத் தள்ளியதுமல்லாமல் - வேலொன்றையும் என்மீது வீசுகிறீர்கள்! எல்லாமே எனக்கு

நீங்கள்தான் என்று நம்பியிருக்கும் போது - என்னை உங்களில் இருந்து தனித்துப் பிரித்து வெறுத்துவிட்டுப் புறப்பட்டீர்களே, அது எந்த வகை நியாயம் அத்தான்?"

கன்னத்தோடு கன்னம் ஒட்டிக் கொண்டு அந்தக் கட்டழகி குருவிச்சி கேட்ட கேள்விக்குப் பதிலளிக்க முடியாத காரணத்தால் - தப்பித்துக்கொள்ள ஒரே வழி அவளை அப்படியே அள்ளித் தழுவிக்கொள்வதுதான் எனும் முடிவுக்கு வந்தவனைப் போல ஈருடல் ஒருடலாயிற்று என அவளை அணைத்துக் கொண்டான். கண் கட்டி வித்தைக்காரனின் தந்திரக் காட்சிகளையும் தோல்வியுறச் செய்யக் கூடியவையன்றோ கனவுக் காட்சிகள்! அதனால் அந்த மஞ்சம் மேகத் திரளாயிற்று! அது நீலவானில் இருவரையும் தூக்கிக் கொண்டு நீச்சலடித்தது. விண் மீன் பெண்கள் கண் சிமிட்டிப் பூரித்து அவர்களைச் சுற்றிக் கும்மியடித்தனர். பின்னர் அந்தத் தாரகைகள் கொடிகளாக மாற்றம் பெற்று, பல வண்ண மலர்களைச் சொரிந்திட, அந்தப் பூமழையில் பண்டாரகனும் குருவிச்சியும், வெண்ணிலவைக் குடையாக்கிக் கொண்டு வெள்ளிப் பனிமலை மீது ஒருவரையொருவர் தழுவியவாறு நடந்தனர்! ஓடினர்! ஆடினர்! பாடினர்!

"குருவீ!" என்று ஓலியெழுப்பியவாறு அவன், அவளை நோக்கி ஓட - அவளும் "பாண்டூ!" எனச் செல்லப் பெயரிட்டுக் கூவிய வாறு அவனை நோக்கி விரைந்தோடி வந்திட - இரு வரும் சந்திக்கு மிடத்திற்குத் தடையாக, இடையே ஒரு மாபெரும் மலைப் பள்ளத் தாக்கு! அவர்கள் அந்த இடைவெளியைப் பொருட்படுத்தாமல் ஒருவர் மீதொருவர் தாவுகின்றனர்! ஒருவரையொருவர் இறுக்கிய படி இருவரும் ஒருவராய்க் கீழே கிடுகிடு பள்ளத்தில் விழுகின்றனர்!

கனவு கலைந்த நிலையில் பண்டாரகன், "குருவிச்சீ!" என உளறியவாறு மீண்டும் திரும்பிப் படுத்து அருகில் தனது முது குடன் ஒட்டிக் கிடந்தவளை அழுத்தி அணைத்துக் கொண்டான். பியசீலியும், நல்ல சமயமடா இதை நழுவவிடலாமா? என்றெண் ணியவளாய், மிச்சமிருந்த ஆடைகளையும் நழுவ விட்டாள்!

ஒருக்கணம்தான்! பண்டாரகன் விழித்துக் கொண்டான்! பரபரப்புடன் எழுந்தான்!

"யாரது?" திகிலுடன் கேட்டான். மங்கிய ஒளியில், அவன் நிதானத்துக்கு வந்திட சிறிது நேரமாயிற்று!

"பியசீலி! நீயா? என்ன இது"

"விளக்கம் தேவையா? கட்டில் - அதிலே ஒரு கட்டழகன் - அருகே ஒரு கட்டுக்குலையாத அழகி!"

"இது உனக்கே விகாரமாக இல்லை?"

"விகாரமாகவும் இல்லை! விவகாரமாகவும் இல்லை! வண்டுகள் தான் மலரில் தேன் உண்டு மகிழப் பறந்து வரும்! இப்போது மலரே விருந்துண்ண வந்திருக்கிறது, இந்த வண்டிடம்!"

"உன்னைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன்!"

"உங்கள் நண்பர் கண்ணுசாமியே என்னைப்பற்றி நிறைய கதைகள் கூறியிருப்பார்!"

"கதைகளா அவைகள்? பெண்குலத்துக்கே களங்கங்கள்!"

"களங்கம் என்றால் என்ன என்பதற்கும் தூய்மை என்றால் என்ன என்பதற்கும் நாம்தானே அர்த்தம் கற்பித்துக் கொள்கிறோம்! கடவுள், மனித ஜாதியை நன்றாக அனுபவித்து மகிழத்தான் படைத்திருக்கிறார்! கடவுளின் படைப்புத்தானே புறாக்கள், குயில்கள், மயில்கள், புலிகள், மான்கள் இன்னும் பொல்லாத மிருகங்கள் அத்தனையும்! அவைகள் கற்பு பற்றியோ களங்கம் பற்றியோ வீண் கதை பேசித் திரிகின்றனவா?"

"ஓ! நீ அனைத்தையும் உதிர்த்தவள்! உன்னிடம் பேசுவது - சந்தனம் பூசிக்கொண்டு சாக்கடையில் குதிப்பது மாதிரி!"

"பூக்கடையெனப் புகழ்வீர்கள், இன்னும் சிறிதுநேரம் கழித்து!"

இப்படிச் சொல்லிக்கொண்டே பியசீலி, அவன் தடுத்து நிறுத்தியும் விடாமல் அவன்மீது தாவி, அவனைப் படுக்கையிலிருந்து எழுவதற்கு இயலாமல் கட்டிப் பிடித்துக் கொண்டாள்! அவன், தன்னை விடுவித்துக்கொண்டு திமிறி எழுவதற்குள், அங்கு மங்கலாக, எரிந்து கொண்டிருந்த விளக்கையும், கீழே தள்ளி அணைத்து விட்டாள்!

அதற்குள் அந்தப் படுக்கையறையின் கதவை ஒங்கி அடித்துத் திறந்துகொண்டு உள்ளே யாரோ வரும் ஒலி கேட்டது! வந்தவர் கையில் ஒரு தீப்பந்தம்!

நள்ளிரவு நாடகம்!

22

அந்தத் தீப்பந்த வெளிச்சத்தில் மழுங்கச் சிரைத்த மொட்டைத் தலை - ஆந்தை விழிகள் - அன்றொரு நாள் இராமாயண காலத்தில் சீதையைத் தேடிச்சென்ற அனுமான் சிரஞ்சீவி வரம் பெற்றவுடன் அங்கேயே தங்கி விட்டான்போலும் என எண்ணிடத்தக்க வண்ணம் வசீகர முகம் - ஆண்மையற்ற ஒரு நடை - அந்த உருவம், குதித்துக்கொண்டும் உறுமிக்கொண்டும் அறைக் குள் அமளி செய்தது! ஆம், பிளிமதளாவைதான் அது!

பியசீலி போன்ற ஒரு கவர்ச்சிப் பாவையைப் பெற்றெடுத்த தந்தை பிலிமதளாவைதான் என்று யாராவது அறிமுகப் படுத்தும்போது, ஒருவேளை பியசீலியைக் கருத்தரித்த அன்னை மிக அழகியாக இருக்கவேண்டும் என்றுதான் கருதிக் கொள்வர்.

மண்டைக்குள் சுரந்துகொண்டேயிருக்கும் விஷத்தை அருவியெனக் கக்கிக்கொண்டேயிருக்கும் பிலிமதளாவையின் விழிகளை, அந்தத் தீப்பந்த வெளிச்சத்தில் பார்க்க சகிக்க வில்லை. அவர் அறைக்குள் நுழைவதற்குமுன்பே, பியசீலியைப் படுக்கையிலிருந்து உருட்டிக் கீழே தள்ளிவிட்டு - பண்டாரக வன்னியன், கம்பளிப் புழுவைக் கையால் தொட்டு விட்டது போன்ற வெறுப்பு உணர்வுடன் வெகுண்டெழுந்து நின்றான்.

"வாருங்கள் மாப்பிள்ளை! பாருங்கள் இந்த அநியாயத்தை!" எனப் பிலிமதளாவை பெருங் கூச்சலிட்டவாறு, தனக்குப் பின் னால்வந்துகொண்டிருந்த கண்ணுசாமியின் கரத்தைப் பிடித்து வேகமாக இழுத்தார். மாமனாருடன் உள்ளே வந்த மருமகனின்

கண்களில்பட்டது, தரையில் உருண்டு கொண்டிருந்த தளிர் மேனியாள் பியசீலியின் அரை நிர்வாண உருவம்தான்!

"கண்ணுசாமீ!" என்று தழுதழுத்த குரலில் - ஆனால் உரக்கக் கத்திவிட்டான் பண்டாரக வன்னியன்!

அப்போது அமைச்சர் பிலிமதளாவை தனது நடிப்புத் திறமையை மிக நன்றாக வெளிப்படுத்தினார்.

"கண்ணுசாமியென்று பெயர் சொல்லி என் மருமகனை இழிவு படுத்தாதே! என் மருமகன் கண்டி மன்னன் என்பதை மறந்து விடாதே! மதகுருமார்கள் ஆசிகளுடன் கண்ணுசாமிக்கு "ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன்" என்று பெயர் சூட்டப்பட்டு, பட்டாபிஷேகம் நடைபெற்றதை இந்த உலகமே அறியும்போது, உனக்கு மட்டு மென்ன அவ்வளவு அகந்தை? விக்கிரம ராஜசிங்கரே என அழைத்து விழுந்திடு காலில்!"


"அமைச்சர் அவர்களே! என்ன தான் நாங்கள் இருவரும் மன்னர்களாக இருந்தாலும் - எனக்கு இவன் கண்ணுசாமிதான்! இவனுக்கு நான் வைரமுத்துதான்! எங்கள் நட்பின் ஆழம் அப்படி!"

பண்டாரக வன்னியன், இவ்வாறுசொன்னதும், பிலிமதளாவை தனது மொட்டைத் தலையைத் தடவிக் கொண்டு, முட்டைக்கண்கள் மேலும் புடைத்தெழ - பயங்கரமாகச் சிரிக்கத் தொடங்கினான். படபடவெனக் கடுஞ்சொற்களைக் கொட்டவும் ஆரம்பித்தான்.

"நட்பாம் நட்பு! தூ! வெட்கமாக இல்லை! நண்பனின் மனைவியை நள்ளிரவில் கடத்தி வந்து நீ செய்கிற துரோகத்திற்குப் பெயரா நட்பு?"

"அமைச்சரே! அவசரப்பட்டுப் பேசாதீர்! அயர்ந்து தூங்கினேன் - அவளாக வந்தாள் - அட்டூழியம் புரிந்தாள் -"

"அடப்பாவி! கண்ணால் கண்ட காட்சியையே, பொய் என்கிறாயே! என் மகள்தான் இவள்! இருந்தாலும் ஒன்று, இவளை நீ கெடுத்து விட்டாயே என்ற கோபம் தந்தை எனும் நிலையில் எனக்கு வரவில்லை! ஆனால் உன்னை உயிருக்குயிராக நேசிக்கும் நண்பனின் மனைவியை அல்லவா கெடுத்து, அவள் கற்பின் மாண்பை நாசப்படுத்தியிருக்கிறாய்!"



பண்டாரகன் மீது பாய்ந்தவர், திடீரெனத் தன் மகள் பியசீலியின் பக்கம் திரும்பி – "அடி பேதாய்! நீ என் மகள் என்ற நிலையில் இவனோடு சரசமாடியதைக்கூட மன்னித்து விடுவேன் – ஆனால் இந்த துரோகி அழைத்தான் என்பதற்காக நீ எப்படி உன் கணவனுக்குத் துரோகம் செய்யத் துணிந்தாய்! விக்கிரம ராஜசிங்கன் கண்டியின் மகாராஜா இப்போது! இந்தப் பண்டாரக வன்னியனோ ஒரு பாளையக்காரன் போல! தமிழ் நாட்டிலே ஒரு கட்டபொம்மனைப்போல – இலங்கைத் தீவிலே இவன் ஒரு வெள்ளைக்கார விரோதி! இவ்வளவு சாதாரணமான வனுடன் இந்த நாட்டின் ராணியான நீ சரசமாட வருவதா? நாயே! பேயே! என்னை விட்டு விடடா! நான் நாடாளும் ராணி

மட்டுமல்ல, உன் நண்பனின் மனைவியடா! என்றுரைத்து இவனை உன் காலால் உதைத்திருக்க வேண்டாமா?"

பாதி ஆடையுடன் உடல் மூடி – மீதியுள்ள பளிங்கு மேனிப் பகுதிகளைக் கொஞ்சமும் வெட்கமின்றி விளம்பரப்படுத்திக் கொண்டு நெளிந்து வளைந்து நின்ற பியசீலி, "அப்பா! என்னை மன்னித்து விடுங்கள்! நடந்ததை அறியாமல் என்மீது நாராசம் வீசாதீர்கள்! நானாக இங்கு வரவில்லை! வருவேனா? நான் படிதாண்டாப் பத்தினியாக என் வாழ்வை அமைத்துக் கொண்டவள் என்பது தங்களுக்குத் தெரியாதா? ராஜ காரியங்கள் இன்று சிறிது அதிகம். அதனால் கொஞ்சம் தாமதமாக வருவேன் என்று என் கண்ணாளர் விக்கிரம ராஜசிங்கர் எனைத் தழுவிப்

பிரிந்து சென்றார். சில நாழிகை நேரம்கூட அவரைப் பிரிந்திருக்க இயலாத நான், மனக்கவலை தீர மதுக்கிண்ணத்தின் துணையை நாடினேன். மாளிகைத் தாழ்வாரத்தில் மயக்க நிலையில் உலவிக்கொண்டே என் மன்னரின் வருகை நோக்கி விழிகளை அலைய விட்டுக் கொண்டிருந்தேன். அப்போது என் முதுகுப்புறம் இரு கைகள்! மகாராஜா தான் என எண்ணி நான் கட்டுண்டேன்! இப்போதுதான் தெரிகிறது, நட்புக்கு இலக்கணம் தெரியாத இந்த நயவஞ்சகத் துரோகி, இருட்டில் வந்து என் கணவரைப் போல இங்கு இழுத்து வந்திருக்கிறான் என்று!"

தந்தையை நோக்கிப் புலம்பிய பியசீலி, பண்டாரக வன்னியனின் முன்னே சென்று,

"ஏய்! காமாந்தகாரா! உண்மையைச் சொல்! மது மயக்கத்தில் இருந்த என்னைக் கெடுத்து விட்டாயா? மகோன்னதமான என் கற்புக்குக் கடுகளவு மாசு எனினும் நான் உயிர் வாழ மாட்டேன்! உண்மையைச் சொல்!" என்று ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள்.

தந்தையும் மகளும் திட்டமிட்டு நடத்துகிற நாடகம் அவர்கள் எதிர் பார்த்தது போலவே வெற்றிகரமாக நிறைவேறிக் கொண்டிருந்தது.

கண்ணுசாமியையும், பண்டாரக வன்னியனையும் பகை மூட்டிப் பிரித்து விட்டால் - பின்னர் ஆங்கிலேயர் துணையுடன் கண்டியின் அடிமை ராஜாவாகத் தானே அமர்ந்து கொள்ளலாம் என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்திட பெற்ற பெண்ணையே பயன்படுத்தி கொண்ட பிலிமதளாவை ஜெயபேரிகை கொட்டும் முரசுகளாகத் தனது விழிகளை உருட்டிக்கொண்டு நின்றார்.

"என்ன மகாராஜா! ஸ்தம்பித்துப் போய் தூண் போல ஆகிவிட்டீர்கள்! ஏமாற்றப்பட்டு கற்பைப் பறிகொடுத்து நிற்பவள் என் மகள் பியசீலி அல்ல! கண்டி மன்னரின் மனைவி மகாராணி பியசீலி! இன்னும் உங்கள் பொறுமை நீடிக்கிறதா? நண்பன் தானே, போனால் போகிறான் என்று மறப்போம்! மன்னிப்போம்! என எண்ணுகிறீர்களா? இது மண்ணல்ல மகாராஜா - எல்லை பிரித்துக் கொண்டு ஆளுக்குக் கொஞ்சம் ஆள்வதற்கு! பெண்! பெண்! அதுவும் ராஜகுலப்பெண்! அய்யோ! இன்னமும் நீங்கள் சாந்தமாக நிற்பதைப் பார்த்தால் என்

மொட்டைத் தலையை இந்தத் தூணில் முட்டிக்கொண்டு செத்துத் தொலையலாம் போலிருக்கிறது!"

பிலிமதளாவை, கதறியழுது கொண்டு, அங்குள்ள தூணில் தனது தலையை மோதிக்கொள்ளப் போனார். அதற்கும் முன்னமே ஒத்திகை பார்த்து வைத்திருந்தது போல – திடீரெனப் பியசீலி துள்ளிக் குதித்து, "அப்பா! வேண்டாம்!" எனக் கூச்சலிட்டவாறு, அவரைத் தடுத்து நிறுத்தினாள்.

"ஏ, அப்பா! எத்தனை நச்சு நாகங்களை நரம்புகளாக்கி இந்த பிலிமதளாவையின் தலை உருவாக்கப்பட்டிருக்கிறது! அடடா! அப்பனும் மகளும் எவ்வளவு திறமையாக நடிக்கிறார்கள்! என்னைக் கண்ணுசாமிக்கு விரோதியாக்கிக் கண்டி ராஜ்யத்தை அந்நியர் காலடியில் வைத்து, அந்தக் கால் கழுவிய பதவித் தண்ணீரை அருந்த எப்படியொரு ஆபாசமான திட்டத்தை இந்த மனிதன் வகுத்து விட்டான்! இந்த அசிங்க நாடகத்துக்குப் பிரதான நாயகியாக, தான் பெற்றெடுத்த பெண்ணையே பயன்படுத்திடும் இவனது மானமற்ற செயலை என்னவென்று சொல்வது!"

பண்டாரக வன்னியன் நெஞ்சில் இந்த நினைவுகள் கணைகளாகத் துளைத்துக் கொண்டிருந்தன.

பிலிமதளாவை, வெறி பிடித்தவனாகச் சீறிக்கொண்டு – கண்ணுசாமியின் தோள்களைக் குலுக்கிச் சப்தம் போட்டார்.

"நண்பனுக்கு துரோகம் செய்யத் துணிந்து, நண்பனின் மனைவியைச் சூறையாடிய இந்தப் பாவியை நீங்கள் பழி வாங்குகிறீர்களா? அல்லது என் மகளுக்குஏற்பட்ட களங்கத்தை, தந்தை என்ற முறையில் நானே இவனது தலையை வெட்டிப் போக்கிக் கொள்ளவா?"

கேட்டுக்கொண்டே, பிலிமதளாவை தனது வாளையெடுத்து பண்டாரக வன்னியனை நோக்கி ஓங்கினார்.

உடனே, கண்ணுசாமி, அந்த வாளைத் தடுத்து, தனது கையில் வாங்கி –

"வேண்டாம்! துரோகிக்கு நானே பாடம் கற்பிக்கிறேன்!" எனச் சிங்கமெனக் கர்ச்சனை செய்தான்.

நட்பின் இலக்கணம்!

23

"சபாஷ் மன்னவா!" என்று உண்டியல் கலயம் போன்றிருந்த தனது தலையைக் குலுக்கிக் கொண்டு, பண்டாரக வன்னியன் மீது கண்ணுசாமி பாய்வதற்கு வசதியாக வழிவிட்டு ஒதுங்கிக் கொண்டார் பிலிமதளாவை!

ஆனால் அவரும் அவரது மகள் அந்த மயக்குப்பாவை பியசீலியும் எதிர்பார்த்தற்கு மாறாக, விக்ரம ராஜ சிங்கன் எனும் கண்ணுசாமி ஓங்கிய வாளை, பியசீலியின் கழுத்துக்கு நேராக வீசி விட்டான். ஆயிரம் மின்னல்கள் ஒரு சேரத் தாக்கிய அதிர்ச்சியுடன் பியசீலி, திடுக்கெனக் குனிந்து, அவனது கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு "பிரபோ! உங்களுக்கென்ன பைத்தியமா? பழியோரிடம் பாவமோரிடம் என்ற பழமொழியை மெய்யாக்கத் துணிந்து விட்டீர்களா? உங்கள் உருவத்தை உள்ளத்தில் கோயில் கட்டிப் பூஜை செய்யும் என்மீது உங்களுக்குச் சந்தேகம் வரலாமா? உங்கள் கம்பீரமான உடலின் ஸ்பரிசம் பட்டால் போதும் அதுவே தேவலோகத்து அமுதம் உண்ட சுகம் என்று நினைத்துக் கிடக்கும் எனக்கு நீங்கள் தரும் அன்புப் பரிசு இதுதானா?" எனக் கதறியழுதாள்!

ஆனால் கணவன் கசிந்துருகவில்லை – கலகலவெனச் சிரித்தான்! அந்தச் சிரிப்பில் கனல் கிளம்பியது!

"என்னடி நடிக்கிறாய்? ஏரிகளையும் குளங்களையும் கண்களுக்குப் பின்னால் அமைத்துக் கொண்டு, தேவைப்படுகிற நேரமெல்லாம் திறந்து வாய்க்கால்களாக வழிய விடுகிற உன் போன்ற போலிப் பத்தினிகள் பல பேரின் கதைகளைக் கேள்விப்

பட்டிருக்கிறேன். இப்போது உன் விழிகளிலிருந்து வழிவது கண்ணீர் அல்ல! நச்சுப் பொய்கையின் ஊற்று!"

"நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள்? இந்தச் சுகம் என் சொந்தச் சுகமடியெனச் சொல்லிச் சொல்லி சுவைத்து மகிழ்வீர்களே, நீங்களா இப்படி என்னைப்பற்றிப் பேசுகிறீர்கள்?"

"தெரியும்டி எனக்கு உன்னை! தினமொரு புது ரகம் தேடுபவள் நீ என்று நன்றாகவே தெரியும்! ஆள் மயக்கும் உனது அலங் கோலத்துக்கு அடிமையாகிச் சித்தம் பேதலிக்காதவர்கள் ஒரு சிலர் தான் இந்தக் கண்டி அரண்மனையில் மிச்சமிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும்! நீ என்ன செய்வாய்! அப்படி வளர்ந்து விட்டாய் - அல்லது வளர்க்கப்பட்டு விட்டாய்! உனக்கு ஒரு சுபாவம் - எந்த ஆண் மகனாக இருந்தாலும் அவன் உன் தேக அசைவு கண்டு மோகம் கொண்டு ஏங்கி நிற்க வேண்டும்! நீயோ மேலும் மேலும் அவனை வாட்ட வேண்டும் - அந்தப் பைத்தியக்காரன் ஊனுருக, உடலுருக, உளமுருக உன்னைச் சுற்றிச் சுற்றி வட்டமிட வேண்டும் - இப்படிப் பல ஆடவர்களை அலைய விட்டு மகிழ்வதிலே உனக்கு ஒரு தனி இன்பம்! அந்தக் காமாந்தகாரக் கூட்டத்தில் ஒவ்வொரு நாளும் ஒருவனைப் பொறுக்கிக் கொண்டு போதையேறிக் கூத்தடிப்பது உனது பொழுதுபோக்கு!"

"அய்யோ! என் காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுகிறீர் கள்! நான் ஒப்பனை செய்து கொள்வதும் - ஒய்யாரமாக ஆடை அணிகள் பூணுவதும்- உங்களுக்காகத்தான் பிரபு, உங்களுக் காகத்தான்! கடவுளுக்காகத் தயாரிக்கப்பட்ட பிரசாதத்தை - தொலைவிலிருந்து காக்கைகளும் கழுகுகளும் பார்ப்பதால், அந்தப் பிரசாதத்தின் மகிமை குறைந்து விடுமா? நான் உங்களுக்காக, ஆம் இந்தக் கடவுளுக்காகத் தயாரிக்கப்பட்ட பிரசாதம் பிரபு!"

"பிரசாதம் என்பதே, கடவுளின் முன்னால் காட்டி விட்டு, பக்தர்கள் பங்கு போட்டுக் கொள்வதுதானடி! உனக்கு எத்தனையோ பக்தர்கள்!"

பேச்சினிடையே குறுக்கிடாமல் இருந்த பிலிமதளாவை

திடீரெனக் குறுக்கிட்டார். அவரது சூளை மூளையில் சுறுசுறுப்பாக ஒரு யோசனை முளைத்தது போலும்!

"மாப்பிள்ளை அவர்களே! தாங்கள் எனக்கு மன்னரும் கூட! பியசீலி எனது பெண் என்ற உறவை மறந்து விட்டு இப்போது உங்களோடு பேசுகிறேன். அதாவது ஒரு அரசரிடம் அமைச்சர் ஒருவர் பேசுகிற முறையில் பேசுகிறேன். இந்தப் பெண் பியசீலி, என்னதான் மோகினிப் பிசாசாக இருக்கட்டும்! கண்டவரை நேசிக்கும் காமக் கன்னியாக இருக்கட்டும்! எனக்கே வெட்கமாக இருக்கிறது, ஒரு கணவன் தனது மனைவியைப் பற்றி இவ்வளவு கேவலமாகப் பேசுவது! பரவாயில்லை! நான் இப்போது கேட்கிற கேள்வி ஒன்றே ஒன்றுதான்! பியசீலி ஒரு காமப் பேய்! கட்டிலறை உல்லாசி! ஊர் கெடுக்கும் ஊர்வசி! எவ்வளவு அர்ச்சனை வேண்டுமானாலும் இவளைப் பற்றிச் செய்யுங்கள்! ஆனால் என்ன தான் மோசமானவளாக இருந்தாலும்— தனது நண்பனின் மனைவி யாயிற்றே என்ற எண்ணம் சிறிதுமின்றி, கெட்டுப் போனவளே வா- இன்னும் கொஞ்சம் கெடலாம் என்று தனது படுக்கைக்கு இழுத்து வந்த இந்தப் பாதகனை எப்படித் தாங்கள் மன்னிக்கப் போகிறீர்கள்! இதைவிட நண்பனுக்கு ஒரு துரோகம் செய்ய முடியுமா? இவளே வந்து இவனை இம்சித்திருந்தாலும் கூட, என்ன செய்திருக்க வேண்டும்? நில்லாதே இங்கு! உடனே போய் விடு! தோழனுக்கு நான் துரோகம் செய்ய மாட்டேன்! என்றல்லவா இந்தப் பண்டாரகன் கூறியிருக்க வேண்டும்!"

கடைசியாகத்தான் பயன்படுத்திய அந்த அஸ்திரத்தில், கண்ணுசாமி- தவறியவாறு அடிபட்டு விடமாட்டானா என்ற எதிர்பார்ப்புடன் பிலிமதளாவை தனது மொட்டைத் தலையைத் தடவிக் கொண்டிருந்தார்.

"அமைச்சர் அவர்களே!" என்று குரலை அழுத்திக் கூறியவாறு விக்ரமராஜசிங்கன் அவர்பக்கம் திரும்பினான்.

"மகாபாரதத்தில் ஒரு முக்கியமான நிகழ்ச்சி தெரியுமா உங்களுக்கு? துரியோதனனும் கர்ணனும் உயிருக்குயிரான நண்பர்கள்! ஒரு நாள் துரியோதனன் வெளியில் சென்றிருக்கும்போது அவனது மனைவி பானுமதியும் கர்ணனும்

அமர்ந்து சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்தார்களாம். ஆட்டத்தில் பானுமதி தோற்று விடுவது போன்ற ஒரு கட்டம்! கர்ணனோ வெற்றி பெறப்போகிற பூரிப்புடன் ஆடிக் கொண்டிருக்கிறானாம்! அந்தச் சமயம் வெளியில் சென்றிருந்த துரியோதனன் வந்து விட்டானாம். அவன் வருவதை பானுமதி பார்த்து விட்டாளாம். கணவன் வருகிறானேயென்று மரியாதைக்காக எழுந்தாளாம். துரியோதனன் வருவதைக் கவனிக்காத கர்ணன், பானுமதி தோல்வியைத் தவிர்க்கவே எழுந்து விட்டாள் எனத் தவறாகக் கருதி, அவள் அணிந்திருந்த முத்துமாலையை இழுத் திருக்கிறான். மாலை அறுந்து முத்துக்கள் தரையில் சிதறி ஓடினவாம். அப்போது அருகில் வந்து துரியோதனன் நிற்கிறானாம். கர்ணன், கலங்கிப் போய்விட்டான். கர்ணனின் நெஞ்சில் துளிக் களங்கமும் இல்லை என்பதை உணர்ந்த துரியோதனன், சிதறிய முத்துக்களை எடுக்கட்டுமா? எடுத்துக் கோக்கட்டுமா? என்று தாய்மையான மனத்துடன் கேட்டானாம்! அமைச்சர் அவர்களே! நட்பை பொறுத்தவரையில் அந்தத் துரியோதனன்தான் நான்! கர்ணன்தான் பண்டாரக வன்னியன்! ஆனால் உமது மகள் பியசீலியை அந்தப் பத்தினித் தங்கம் பானுமதியுடன் ஒப்பிட முடியாது!"

கண்ணுசாமி, வார்த்தைகளை முடிக்கவில்லை, பண்டாரக வன்னியன் உடம்பெல்லாம் புல்லரிக்க ஓடிச்சென்று தனது ஆருயிர் நண்பனைக் கட்டித் தழுவிக் கொண்டான்.

சூழ்ச்சி நாடகத்தின் முடிவு வேறுவிதமாக அமைந்து விட்டது கண்ட பிலிமதளாவை, தனது மகள் பியசீலியின் தோளில் கை வைத்து ஆறுதலாக அவளை அழைத்துக் கொண்டு, "வாம்மா! எல்லாவற்றையும் கடவுள் கவனித்துக் கொண்டிருக்கிறார்- அவர் பார்த்துக் கொள்வார்!" என உருக்கமுடன் கூறியவாறு அந்த அறையிலிருந்து வெளியேறினார்.

வீரனல்ல, வீராங்கனை!



பண்டாரக வன்னியன், கண்டி மன்னன் விக்கிரம ராஜசிங் கனிடம் விடை பெற்றுக் கொண்டு முல்லைத் தீவுக்குப் புறப் பட்டான். பிலிமதளாவைக்குத் தனது திட்டம் நிறைவேறவில்லையே என்ற கவலை உள்ளத் தைத் துளைத்தது. பியசீலிக்கோ, பெரும் குழப்பம். வசீகர வானவில்லான அவளால் பண்டாரக வன்னியனைக் கவர்ந்திட இயலவில்லையே என்ற தோல்வி மனப்பான்மை ஒரு புறம் - தனது கணவன் விக்கிரமராஜசிங்கன்; தன்னைப் பற்றிய முழு விபரங்களையும் தெரிந்து வைத்திருக்கிறானே என்ற உறுத்தல் உணர்வு மற்றொரு புறம்! பிரியமுள்ள நண்பர்களைப் பிரித்துக் காட்டுகிறேன் என்று சபதம் செய்து, அந்தச் சபதத்தில் வெற்றி காண முடியாமல் வாடிப் போன பிலிமதளாவை ஆங்கிலேயர் முகத்தில் எப்படி விழிப்பது என வெட்கப்பட்டுக் கொண்டிருந்தார். இந்தச் சூழலில் கண்டியின் அரண்மனை வாயில் முகப்பில் பண்டாரக வன்னியனை வழி யனுப்ப விக்கிரமராஜ சிங்கன் தனது மனைவி பியசீலியுடன் வந்து நின்றான். அமைச்சர் பிலிமதளாவையும் அரசனுக்குப் பக்கத்தில் வந்து நின்று, பண்டாரகனின் பயண ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

இந்த நால்வருமே முதல் நாளிரவு அப்படியொரு விரசமான நிகழ்ச்சி நடக்காததுபோல நடந்து கொண்டனர். ஆனால் ஒவ்வொருவரின் நெஞ்சிலும் ஒவ்வொரு வகையான அலை மோதல்கள்!

"இவளைப் போய் மணந்து கொள்ள நேரிட்டதே! பாபச் செயல்களே சொர்க்கத்தின் படிக்கட்டுகள் எனக் கருதிக்

கொண்டு, அன்பு, ஆசை, பாசம் எல்லாமே ஆண்களை அடிமைகொள்ளும் உதட்டளவு உச்சரிப்பாகத் தானிருக்க வேண்டுமென முடிவு செய்து கொண்டு - இப்படியும் ஒருத்தி வாழ்கிறாளே! ஆண்டவனே! பியசீலிகளைப் போன்ற பளபளப்பான பாம்புகளைப் பாவைகளாக இந்த உலகத்தில் எவ்வளவு பேரைப் படைத்திருக்கிறாயோ! என்னைக் கடவுள் என்கிறாள் - ஆனால் என்கழுத்தை எப்போது நெறிப்பது எனக் காத்துக் கிடக்கிறாள்! என்னைப் பிரிந்து ஒரு பொழுதும் வாழ முடியாது என்கிறாள் - ஆனால் எப்போது இவன் பிரிவான்? இவனைப் போல் பலரோடு இன்பம் கண்டு அதனை ஒப்பிட்டுப் பார்க்கலாமெனத் துடிக்கிறாள்! இந்த மகாபாதகி, இப்போது மட்டும் மாசற்ற மருக் கொழுந்துபோல என்னருகே வந்து நிற்கிறாளே! இவளை மன்னிக்கக் கூடுமா? கூடாது! ஆனாலும் என் செய்வது? எனக்கு ராணியாக இருந்து தொலைக்கிறாளே!"

-இது கண்டி ராஜனின் இதயத்துப் புலம்பல்!

"எவ்வளவு அழகு இருந்தென்ன? எதுவும் இந்தப் பண்டாரக வன்னியனிடம் பலிக்கவில்லையே! கலையழகு கண்களிலே! இருமலையழகு கழுத்தின் கீழே! இடையழகு - இரு தொடை அழகு, அதனால் என் நடை அழகு எல்லாமே இவனிடம் விழலுக் கிரைத்த நீராகப் போயிற்றே! சென்றதும் சீறிப் பாய்வான் மான் மீது புலி போல - அந்தப் பாய்ச்சலில் பரலோக சுகம் முழுதும் பெறலாம், நாமும் திரும்ப இவனுக்கு வழங்கலாம் என்று எண்ணியதனைத்தும் மண் ஆனதே! முனிவர்களே கூட மோக விழி மாதரிடம் காமதாக மொழி பேசி முடி கவிழ்த்தனர் அவர் மடி வீழ்ந்தனர் எனப் புராணங்கள் கூறுகின்றன! இவனோ முனிவர்கள் அனைவரினும் மேம்பட்ட மகா முனிவனாகி விட்டானே! வானூரும் நிலவு போல் முகம்! தேனூறும் இதழ்கள், எப்போதும் தித்திக்கும்! ஒருமுறை அனுபவித்துப் பார்த்திருந் தால், பின்னர் சொல்லுவான் - அகிலமே தோற்குமடி ஆரணங்கே உன் முன்னே என்று! தந்தை தயாரித்தார் திட்டம்! நான் ஏன் அதற்கு இணங்கினேன்! தந்தைக்கு இந்தக் கண்டி தேசம் வேண்டும் - எனக்கோ இந்தக் கட்டழகன் உடல் மீது உலகை

மறந்து ஒருக்கணமாவது கிடக்க வேண்டும் - அதற்காகவே தந்தையின் திட்டத்தை நிறைவேற்றத் தயார் ஆனேன்! தோல்வியுற்றேன்! எத்தனை பேர் என்னழகைக் கண்களால் கவிதையாக்குகிறார்கள்! எத்தனை பேர் என் அங்கங்களை விதவிதமாக வர்ணித்து ரகசிய ஓலைகளை அனுப்புகிறார்கள்! அதைப் பார்க்கும்போதும், படிக்கும்போதும் என்னழகில் எனக்கே ஒரு கர்வம்! ஆனால் அந்தக் கர்வம், நேற்றிரவு பங்கப்பட்டுவிட்டதே!"

-இது பியசீலியின் உள்ளத்துக் குமுறல்!

"இவளை வைத்து இந்த மண்டிலத்து அரசியலையே மாற்றி அமைக்கத் திட்டம் தீட்டினேன்! என் திட்டத்திற்கு வெற்றி தேடித் தருவதற்கு இவளைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்? இவள் காலைத் தொட்டுப் பார்க்கத் தவித்து, அது முடியாமல் இவளது காலணியைத் தடவிப் பார்த்துப் பரவசமடையும் வாலிபர்கள் பலர் இந்தக் கண்டியில் உண்டு என்பதை நானறிவேன்! இவள் சாகசத்தால் மயங்கி, ஏவல் நாய்களாக இவளுக்கு முன்னால் செயல்படுவதற்கு எத்தனையோ பிரபுக்கள், தங்கள் மானத்தை மறந்து அணி வகுத்து நிற்கிறார்கள். ஆனால், என் போதாத காலம் இந்தப் பண்டாரக வன்னியன் மட்டும் இவளிடம் சரணடையவில்லை. என் சூழ்ச்சி நிறைவேறவில்லையே என்ற வருத்தம் ஒரு புறம் இருப்பினும் - சபலங்களுக்கு ஆட்படாத இந்த சுத்த வீரனை என் மனம் மறைமுகமாகப் பாராட்டத்தான் செய்கிறது!"

-இது பிலிமதளாவையின் மனப் போராட்டம்!

"சூது ஒரு மாதின் உருவில்! சூழ்ச்சி ஒரு மந்திரி உருவில்! நட்பு, கண்டியின் மன்னன் உருவில்! என் நண்பனை மணந்த பிறகாவது, ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருப்பவனின் அன்புக்குரிய மனைவியாக - பண்புக்குரிய பத்தினியாக விளங்குவாள் என எதிர் பார்த்தேன். இவளோ இரவுகளின் ராணியாக - இளைஞர்களின் கனவு மோகினியாக - இஷ்டப்படி வாழ்வதற்கு இலக்கணம் கற்றவளாக அலைகிறாள்! இவளை வைத்து இந்த தேசத்தில் தனது அரசியல் ஆதாய வேட்டையை நடத்த - பிலிமதளாவை, தான் வகுத்த திட்டத்திற்கு என்னையே

பலியாக்கிடப் பார்த்தானே பாவி! நல்லவேளை என் நண்பன் என்னை நம்பினான்! நட்பும் பிழைத்தது! இந்த நாடும் பிழைத்தது!"

-இது, பண்டாரக வன்னியனின் பெருமூச்சுச் சிந்தனை!

நால்வரும் ஒருவரையொருவர் சாதாரணமாகப் பார்த்துக் கொண்டனர்.


"வரட்டுமா?" எனக் கேட்டப் பண்டாரகனை கண்டி மன்னன் தழுவிக் கொண்டான். பண்டாரகனின் விழிகளில் நீர்த்துளிகள், காலைச் சூரிய ஒளியில் வைரமணிகளாக ஜொலித்தன! அதுவே கண்டி மன்னன் நிலையும்!

"வருகிறேன்!" என்று பிலிமதளாவையும் பியசீலியையும் பார்த்துச் சொன்னான். அதற்குப் பதிலாக அவன் அந்த அரண்மனையின் தூண்களிடம் சொல்லிக்கொண்டு புறப்பட்டிருக்கலாம். இருவரும் தலையைக் கூட அசைக்காமல் நின்றனர்.

பண்டாரகன், தனது குதிரையிலேறி அதனைத் தட்டி விட்டான். அவனது குதிரையைத் தொடர்ந்து மற்ற குதிரைகளும் கிளம்பத் தயாராயின! பண்டாரகனின் குதிரை பாய்ந்து கிளம்பும்போது பியசீலி, திடீரென ஒரு பேய்க் கூச்சலிட்டுக் கொண்டு மறைத்து வைத்திருந்த கட்டாரியை ஓங்கி, பண்டாரக வன்னியனின் விலாப்புறத்தை நோக்கி வீசி விட்டாள். அப்போது பண்டாரகனுக்குப் பக்கத்துக் குதிரையிலிருந்த ஒரு வீரன் சரேலெனப் பாய்ந்து அந்தக் கட்டாரிக் குத்தைத் தனது நெஞ்சில் தாங்கிக் கொண்டான்.

குத்தப்பட்ட கட்டாரியுடன் குதிரையிலிருந்து கீழே விழுந்த அந்த வீரனின் தலைப்பாகை அவிழ்ந்தது! வீரனல்ல? வீராங்கனை! யார் அது?

பேய் மகள் பியசீலி!



ஆள் மயக்கி பியசீலியின் கொலை வெறித் தாக்குதலுக்குத் தப்பிய பண்டாரக வன்னியன், தன்னைக் காப்பாற்றியதும், காப்பாற்று வதற்காகக் கட்டாரிக் குத்தினைத் தன்மீது தாங்கிக் கொண்டதும் தனது அருமைக் காதலி குருவிச்சி நாச்சிதான் என்பதை அறிந்து கொள்ள அதிக நேரமாகவில்லை. "குருவிச்சி!" என அலறியவாறு அவளருகே ஓடிப் பாய்ந்து அவளைத் தூக்கிக் கொண்டான். பரபரப்பும் பயங்கரச் சினமும் கொண்ட விக்கிரமராஜ சிங்கன், பியசீலியின் கன்னத்தில் ஓங்கி அடித்து இவளைக் கொண்டுபோய் அந்தப்புரத்தில் சிறைவையுங்கள் என ஆணையிட்டான். பிலிமதளாவை, பதைத்துப் போய் ஏதோ சொல்வதற்காகக் குறுக்கிட்டதைக் கூட அவன் பொருட்படுத்த வில்லை. பியசீலியை, அரசனின் ஆணைப்படி சிறைவைத்திட அரண்மனைக் காவலர்கள் அவளை நெருங்கியபோது அவள் உரத்த குரலெடுத்துக் கத்தினாள். அய்யோ! என்னைக் கொல்லத் திட்டமிட்டு விட்டார்களே! ஒரு பெண் என்றும் பார்க்காமல் என்னைச் சிறையிலிடும்படி கட்டளையிட்ட நீயும் ஒரு மன்னவனா? அப்பா! அரசனிடம் சொல்லுங்கள்! ஒரு பாவமும் அறியாத என்னைத் தண்டிப்பது தர்மமல்ல! ஆண்டவனுக்கே ஆகாது! வேண்டுமானால் இந்த அரண்மனையை விட்டே வெளியேறி விடுகிறேன் - இனி இந்த அரண்மனை வாசலை மிதிப்பதே இல்லை! என் இஷ்டம் போல் எங்கேயோ போய் வாழ்கிறேன்! என்னை இங்கே சிறைவைப்பது மட்டும் வேண்டாம் வேண்டவே வேண்டாம்!

பியசீலியின் கதறல் கேட்டு எதுவும் பேசாமல் பிலிமதளாவை நின்றார் எனினும் விக்கிரமராஜ சிங்கன் கோபம் கொப்பளிக்கக் கலகலவெனச் சிரித்தான்.

"ஓகோ! சரியான கைகாரக் கள்ளியடி நீ! அரண்மனை வாசமே வேண்டாம் - சுதந்திரப் பறவையாக என்னைப் பறக்க விட்டு விடுங்கள் என்று கேட்பதற்கு எனக்குக் காரணம் புரிகிறதடி! அரண்மனையில் உள்ள ஆடவர் பலபேரை உன் அடிமையாக்கி ஆசை தீர்த்துக் கொண்டாகி விட்டது - இனி வெளி உலகத்திலே ஆடவர்களின் மயக்க மோகினியாக உல்லாச கீதம் பாடவேண்டும். போதும்! உன் பொல்லாத நச்சுப்பல்லுக்கு நான் ஒருவன் சிக்கிச் சீரழிகிறேனே. அது போதாதா? நன்றாகப் போதும்! மற்றவர்களையும் கெடுக்க நீ மாளிகையை விட்டு வெளியேற வேண்டாம்! நீ தான் சிரிக்கும் சிலந்தியாயிற்றே! நீ தேடிச் செல்லாமலே, உன் வலையில் பல இரைகள் தானாக வந்து விழுமே! பிறகேன் கவலைப்படுகிறாய்? பரவாயில்லை! அந்தப்புர சிறையிலேயே கிட!" என்று கூறிவிட்டு, விக்கிரம ராஜ சிங்கன், பண்டாரக வன்னியனிடம் விரைந்தான். மூர்ச்சையற்ற நிலையில் குருவிச்சி நாச்சியைத் தன் கரங்களில் தாங்கிக் கொண்டிருந்த தனது ஆருயிர் நண்பனின் தோளைப் பற்றியவாறு "வைரமுத்து! உடனே மருத்துவரை அழைக்கிறேன். பிழைக்க வைத்து விடலாமென்ற நம்பிக்கையிருக்கிறது. தயவுசெய்து மாளிகைக்குள்ளே போகலாம்" என்று தழுதழுத்த குரலில் அழைக்கவே, பண்டாரகனும் குருவிச்சியைத் தூக்கிக் கொண்டு களமான கண்களுடன் மாளிகைக்குள்ளே நுழைந்தான்.

பண்டாரகன், விக்கிரமராஜ சிங்கன், குருவிச்சி மூவரும் மாளிகைக்குள் செல்வதைத் தனது பாஷாணப் பார்வையால் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த பியசீலி, பண்டாரக வன்னியனை அனுபவிக்க வேண்டுமென்ற ஆசையும் அந்த ஆசை நிறைவேறாதது மட்டுமல்ல - அவனால் அலட்சியப் படுத்தப்பட்ட மைக்காக அவனைப் பழி தீர்க்க வேண்டுமென்ற கொலை முயற்சித் திட்டமும் நிறைவேறாமல் போய்விட்டதே என்ற வெறியினால் தனது தலை மயிரைப் பிய்த்துக்கொண்டு

கலிங்கத்துப் பரணிக் களத்திலே குதித்துக் கூச்சலிடும் பேயைப் போலக் காட்சியளித்துக் கொண்டு கத்தினாள். அந்தக் கள்ளியின் முகம் கள்ளிப்பழம் போலச் சிவந்தது. எந்நேரமும் விஷம் கக்கிடும் விழிகளைக் கொண்ட பிலிமதளாவை, அவளை அணைத்துக் கொண்டு "மகளே! பொறுமையாக இரு! இந்த விக்கிரமராஜ சிங்கனின் ஆட்ட பாட்டமெல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான்! என்றைக் கிருந்தாலும் நார்த் நமக்கு உதவி செய்யும் நிலை விரைவில் வரத்தான் போகிறது! அதற்குத்தான் நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறேன் நான்! நீ அதற்குள் இந்த அரண்மனையை விட்டுத் துறவறம் கொள்ளப் போகிறேன் என்கிறாயே, உன் கருத்து புத்திசாலித்தனமானதா? இல்லை! இல்லவே இல்லை! அந்த நார்த் துரை இருக்கிறானே, அவன் கொழும்புத் தலைநகரில் தினமும் இரவு விருந்துக்கு ஒரு குமரியைத் தேடி அலைகிறவன்! அவனுக்கு உன்மீது ஒரு கண் என்பது எனக்குத் தெரியும்! ஆனால் மலிவான பண்டமாற்றுக்கு என் மகளை அவன் மஞ்சத்திற்கு அனுப்ப நான் தயாராக இல்லை! கண்டி ராஜ்யத்தின் அதிபதியாக நான் அமர வேண்டும். அதற்கு நார்த் துரையின் துணை வேண்டும் – அந்தத் துணையின் மூலம் சுலபமாக வெற்றி பெறத்தான் பண்டாரக வன்னியனுக்கும் கண்ணுசாமிக்கும் பகை மூட்டிட உன்னைத் தயாரித்து அனுப்பினேன். முதல் தோல்வி! ஆனால் முற்றிலும் தோல்வியல்ல! விக்கிரம ராஜ சிங்கனின் கட்டளையை ஏற்றுக் கொண்டது போல இப்போது அந்தப்புர சிறைவாசத்துக்குப் போ! அந்தச் சிறைவாசமென்ன அவ்வளவு கொடுமையா? அங்கும்தான் மது நிரம்பிய நீச்சல் குளம் ஒன்று இருக்கிறது! பெயர்தான் சிறைவாசமே தவிர, சிறைக்காவலர்கள் அனைவரும் நமது சிங்களவர்கள் தானே! நீ கேட்டது கிடைக்கும்! அரசன் அங்கு வர மாட்டான், அவ்வளவு தானே!"

என்று பிலிமதளாவை சொன்னபோது, பியசீலி – தன்னை சமாதானப்படுத்திக் கொண்டு எண்ணிக் கொண்டாள், அரசன் வராவிட்டால் என்ன? அங்கென்ன ஆண்களுக்கா பஞ்சம் என்று!

"போ பெண்ணே, போ! இந்தச் சிறைவாசத்தினால் ஒன்றும் குடி முழுகி விடாது. இன்று நம் இருவர் நெஞ்சிலும் உருவாகிற வஞ்சினம் இருக்கிறதே, இதை நாம் நிறைவேற்றி – இன்றில்லா விட்டாலும் வெகு விரைவில் ஒரு நாள் விக்கிரம ராஜ சிங்கனை வீழ்த்தியே தீருவோம்! பண்டாரக வன்னியனை ஆங்கிலேயர் காலடியில் அடிமையாக்கியே தீருவோம்!"

பிலிமதளாவை, தனது மொட்டைத் தலையை அழுத்திப் பிடித்துக்கொண்டு, முட்டைக் கண்கள் பிதுங்கிடச் சப்தமிட்டார்.

"ஆம் அப்பா! அதுவே சரி! நீங்கள் நினைக்கும் அந்த தேச பக்தி வெல்வதற்கும் – தீயவர்களாம் எனது கணவனும் அவனது நண்பனும் வீழ்வதற்கும் – நார்த் மட்டுமல்ல, இன்னும் எத்தனை ஆங்கிலேயர்களுக்கு இந்த உடலை ஆலிங்கனப் பொருளாக ஆக்குவதற்கும் நான் தயார்!" என்று ஒரு கையை உயரத் தூக்கிக் கொக்கரித்தாள் பியசீலி!

"அடடா! என்னே வைராக்கியம்! என்னே வைர நெஞ்சம்! இப்படிப்பட்ட ஒரு பெண்ணைப் பெற்ற நானே பாக்கியசாலி! இருந்தாலும் கொஞ்சம் குறி தவறி விட்டாய்! சரியாக அந்தக் கட்டாரியை வீசியிருந்தால் இந்நேரம் ஒரு சனியன் தொலைந் திருப்பான்!"

மகளைத் தட்டிக் கொடுத்தார் பிலிமதளாவை!

"நான் பண்டாரக வன்னியனை வழியனுப்புவது போல அரண்மனை வாசலுக்கு வந்ததே, அவனை இன்று தீர்த்துக்கட்ட வேண்டுமென்றுதான்! எவளோ ஒருத்தி, குறுக்கே பாய்ந்து அவனைக் காப்பாற்றி விட்டாளே, யார் அவள்?"

என்று முணுமுணுத்தாள் பியசீலி!

"அவள்தான் அவனது உயிர்க் காதலியாம்! இருவரும் தெய்வீகக் காதலர்களாம்! இலட்சியத்துக்காக ஒன்று பட்டவர்களாம்! பெயர் என்ன தெரியுமா? குருவிச்சி நாச்சியாராம்!"

"குருவிச்சி நாச்சி!" என ஏளனமாகச் சொல்லிக்கொண்டே, பியசீலி தன் இருபுறமும் நின்ற சிங்கள சிப்பாய்களின் தோள் களில் கைகளைப் போட்டுக் கொண்டு, "சிப்பாய்களே! என்னை

இப்போது சிறைக்கு அழைத்துச் செல்லுங்கள்!" என்று அவர்களைத் தன்னோடு இழுத்துக்கொண்டு அந்தப்புரம் நோக்கி நடந்தாள். அவள் இதயத்தில் மட்டும் "குருவிச்சி" என்ற வார்த்தை குடைந்து கொண்டேயிருந்தது.


குருவிச்சிக்கு, மாளிகையின் ஒரு மண்டபத்தில் அவசர சிகிச்சை நடைபெற்றது. பண்டாரக வன்னியன், நெஞ்சு படபடக்க அவளையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அவனுக்கு ஆறுதலாக, விக்கிரம ராஜ சிங்கன் அவனருகே அமர்ந்திருந்தான். அந்த சோக நிகழ்ச்சியில் பங்கு கொள்வதற்கு அக்கறையுடன் வந்தவரைப்போல பிலிமதளாவையும் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு அங்கு வந்து நின்றார். குருவிச்சியின் நெஞ்சில் ஆழமாகப் பதிந்திருந்த அந்தக் கட்டாரியை மிகுந்த சிரமப்பட்டு, வெகு லாவகமாக அரண்மனை மருத்துவர் வெளியே எடுத்து விட்டார் எனினும் குபுகுபுவெனப் பெருகிக் கொண்டிருந்த குருதி வெள்ளத்தை நிறுத்துவது அவ்வளவு எளிதான காரியமாக இல்லை. அதற்கான மூலிகைகள் அந்தக் காயத்தில் வைத்துக் கட்டப்பட்டன. மெல்ல மூச்சு இழைந்து கொண்டிருந்ததே தவிர குருவிச்சி நாச்சியார் கண் திறந்து பார்க்கும் நிலையில் இல்லை.

"இவள் எப்படி இங்கு வந்தாள்? அதுவும் வீரர்கள் உடையில் வீரர்களோடு வீரனாக எப்படி இருந்தாள்? தனக்கு இப்படி ஒரு ஆபத்து வரப் போகிறது என்பதை முன் கூட்டியே உணர்ந்து, அதைத் தடுப்பதற்காகவே வந்தாளா? இந்த விபரங்களை யெல்லாம் – அவள் முழுமையாக நலம் பெற்றால் தானே அறிந்து கொள்ள முடியும்!"

பண்டாரக வன்னியன், தன்னுயிர் காத்திடத் தனது உயிரைத் தரவும் தயங்காத அந்தத் தங்கச் சிலையாளையே வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்போது அவளிடமிருந்து ஒரு முனகல் ஒலி! அனைவருமே அவளை ஆவலுடன் நோக்கினர்! இவ்வளவு நேரம் மூடியிருந்த அவள் விழிகள், மெல்லத் திறந்தன!

நடந்ததை விளக்கிய நச்சு நாக்கு !



கண்திறந்த தனது கண்மணியாம் குருவிச்சியின் முகத்தருகே பண்டாரக வன்னியன் குனிந்தவாறு மெல்லப் பேசினான். கண் கலங்கிப் பேசினான். கனிவாகப் பேசினான். கசிந்துருகும் உள்ளத்துடன் பேசினான். தனது உயிருக்கு உயிராக நேசித்த அந்த உத்தமி, இனி உயிர் பிழைத்துக் கொள்வாள் என்ற நம்பிக்கை சிறகடிக்கும் நிலையில் பேசினான். அவளோ, அவன் பேசியதைக் காதில் போட்டுக் கொள்ளாமலே மெதுவாகத் தனது கரங்களைத் தூக்கி, அவனது கன்னங்களை விரல்களால் வருடிக்கொண்டே, "உங்களுக்கு ஏதும் காயமில்லையே?" எனக் கேட்டாள்.

பண்பார்ந்த பெண்களின் அன்பார்ந்த நெஞ்சங்களின் கவலை, தங்களைப்பற்றியா இருக்கும்! தாங்கள் ஏற்றுக்கொண்ட காதல் தலைவனைப் பற்றியதாகத்தானே இருக்கும்! தனது கன்னங்களில் ஊர்ந்த அவளது விரல்களைத் தனது விரல்களால் தடவிக் கொடுத்தவாறு, "எனக்கு ஒன்றுமில்லை! நீ எப்படியிருக்கிறாய்? அதைச் சொல்லம்மா!" என்று பண்டாரகனின் வாயிலிருந்து சொல் முத்துக்கள் உதிர்வதற்குள் அவன் விழிகளிலிருந்து நீர்முத்துக்கள் உதிர்ந்து குருவிச்சியின் கன்னங்களில் உருண்டன.

"நாம் ஈடுபட்டுள்ள இலட்சியப் போராட்டத்தில் எப்படியும் நாமிருவரும் நம்மை வெகு விரைவில் சாவின் வாயில் ஒப்படைத்துக் கொள்ளத்தான் போகிறோம். என் ஆசையெல்லாம், உங்களுக்கு முன் நான் போய்விட வேண்டும். அப்படிப்

போவதும்கூட, உங்களைக் காப்பாற்றும் முயற்சியில் போக வேண்டும் என்பதுதான்! இப்போது கூட அது நிறைவேறினால் எனக்குப் பேரின்பம்தான்!"

"குருவிச்சி! அப்படியெல்லாம் சொல்லாதே! நாம் எதற்காக சாகப் போகிறோம்? சாகவே மாட்டோம்! உன்னதமான ஒரு இலட்சியத்துக்காக உயிர் விட்டவர்களை "செத்தவர்கள்" என்று எந்த வரலாறும் வரைந்து காட்டியதில்லை! எப்போதும் வாழ்கிறவர்கள் அவர்கள்! வாழப் போகிறவர்கள்!"

"எப்படியோ நான் நினைத்தது நடந்துவிட்டது! நான் மாத்திரம் கண்டிக்கு வராமல் இருந்திருந்தால் இந்நேரம் உங்களை....உங்களை....

குருவிச்சியினால் பேச முடியவில்லை. தேம்பித் தேம்பி அழுதாள்.

"ஆமாம் - நீ எப்படி இங்கு வந்தாய்? ஏன் வந்தாய்?"

"ஓகோ! என்னுடன் வராதே என்று நீங்கள் உத்தரவு போட்ட பிறகு எப்படி வரலாம் என்று கேட்கிறீர்களா? உங்கள் உத்திரவுக்குக் கீழ்ப்படிந்துதான் நான் உங்களுடன் வராமல் தனியாக வந்தேன். நீங்கள் என்மீது கோபம் கொண்டது தவறல்ல! நான் செய்த தவறை நானே உணரும்போது, உங்கள்மீது நான் வருத்தப்பட முடியுமா? என் தாத்தாவைக் காத்திட வேண்டுமென்பதற்காக காக்கை வன்னியன் மாளிகைக்குச் சென்றது பெரிய குற்றம்தான். என்செய்வது, பாசம் என் அறிவை மறைத்துவிட்டது! ஆசாபாசங்களால் இணையாமல் - கேவலம் உடலுறவுக்கு ஏங்கிக் கிடக்காமல் - அன்பு ஒன்றினால் மட்டுமே பிணைக்கப்பட்டு சில நாழிகை நேரம்கூட பிரியாமல் இருந்த நீங்கள், திடீரென்று என்னை வெறுத்து ஒதுக்க நினைத்தீர்கள் என்றால், அது உங்கள் குற்றமே அல்ல! என் குற்றமேதான்! காட்டிக் கொடுப்பதையே கைவந்தக் கலையாகக் கொண்ட அந்தக் காக்கை வன்னியனின் மாளிகைக்குச் சென்றது அவனுடன் பேசியது நமது இலட்சியத்துக்கு நான் செய்த துரோகம் என்பதை உணர்ந்து கொண்டேன்! சத்தியமாக உணர்ந்து கொண்டேன்!"



என்றவாறு குருவிச்சி நாச்சியார், தனது வேதனையையும் பொருட்படுத்தாமல் மெல்ல எழுந்து, பண்டாரகனின் கால்களைப் பிடித்துக்கொள்ள முயற்சி செய்தாள். ஆனால் அதற்குள் பண்டார கன் அவளைத் தடுத்து-படுக்கையிலேயே சாய்த்து அவளைத் தட்டிக் கொடுத்து அமைதிப்படுத்தினான்.

"குருவிச்சி! துரோகம் என்ற சொல்லைப் பயன்படுத்தாதே! தளபதி சங்கிலித் தாத்தாவைக் காப்பாற்றி மீட்டுவர வேண்டு மென்ற பரபரப்பில் அறிவு தடுமாறிவிட்டாய்! நானும்கூட உன்னைக் கண்டித்துவிட்டுப் பிரச்சினையை முடித்திருக்கலாம்! "என்னுடன் வராதே!" எனும் கொடுமையான முறையில் ஆணை பிறப்பித்திருக்கக் கூடாதுதான்! சரி! நடந்தவைகளை மறந்து விடுவோம்! இப்போதுதான் நீயே வந்து விட்டாயே!"

குருவிச்சியின் முகத்தில் புன்னகை அரும்பியது. அவள், தனது விழிகளைச் சுழற்றி மருத்துவரையும்-கண்ணுசாமியையும் -பிலிமதளாவையையும் பார்த்தாள். பார்த்துவிட்டு, பண்டார கனின் கையைப் பிடித்துக்கொண்டு கேட்டாள், "ஆமாம்! இந்த சதிகாரர்கள் கோட்டையில் இத்தனை நாள் ஏன் தங்கினீர்கள்?" என்று!

பிலிமதளாவையின் முகத்தில் அசடு வழிந்தது. இருப்பினும் அதனை அவர் காட்டிக் கொள்ளவில்லை. தனது மொட்டைத் தலையைத் தடவிக்கொண்டு, முட்டை விழிகளைப் பிதுங்கப் பிதுங்க உருட்டியவாறு "கடவுளே! கடவுளே! கண்டி அரண்மனை சதிகாரர் கோட்டையா?" என்று ஆகாயத்தை நோக்கிய வாறு அலறினார்.

விக்கிரமராஜ சிங்கன், திடுக்கிட்டவனாகத் தனது நண்பன் பண்டாரக வன்னியனைப் பார்த்தான். உடனே பண்டாரகன், குருவிச்சியிடம், "ந ீ நினைப்பது தவறு! கண்டி மன்னன் கண்ணுசாமி என் உயிர்தோழன் என்பது உனக்குத் தெரியாதா? என்னைக் கொல்ல என் நண்பன் சதி செய்தான் என்றால் அது உண்மையாக இருந்தால் -நான் இறந்து போவதையே விரும்புவேன். ஏனெனில் தமிழ்நாட்டில் கட்டபொம்மனும் வெள்ளையத் தேவனும் எப்படி நண்பர்களோ, அதற்கீடான

நண்பர்கள் நாங்கள்!" என்றான். குருவிச்சியும் அதை ஏற்றுக் கொண்டவளாகப் பண்டாரகனுக்குப் பதில் அளித்தாள்.

"உங்கள் இருவரின் உயர்ந்த நட்பைப் பற்றி எனக்குத் தெரியும். ஆனால் அந்த நட்பைப் பிரித்து, உங்கள் இருவரிடையே பகை மூட்டி - கண்டி அரசைத் தங்கள் காலடியில் போட்டுக் கொள்ள நடைபெற்ற சூழ்ச்சியும் எனக்குத் தெரியும். அதை அறிந்து கொண்டவுடன்தான் முல்லைத் தீவின் வீரர்களில் ஒருவனைப் போல மாறுவேடம் அணிந்துகொண்டு, கண்டிக்குப் புறப்பட்டு வந்து உங்களைக் காப்பதற்குக் காத்திருந்தேன். நான் எண்ணியபடி உங்களைக் காப்பாற்றியும் விட்டேன்."

இப்படிப் பேசிக் கொண்டிருந்தவள் தன் முகம் நோக்கிக் குனிந்திருந்த பண்டாரகனின் தலையை இழுத்து, உச்சியில் ஒரு முத்தமும் கொடுத்துவிட்டாள்.

இதற்குள் பிலிமதளாவையின் மொட்டைத் தலைக்குள்ளிருந்த மூளையின் நாக நரம்புகள் வெகு வேகமாகத் துடித்து, மேலும் ஒரு சூழ்ச்சிச் சித்திரத்துக்குக் கோடுகள் அமைத்துவிட்டன.

"ஆண்டவனே! இந்த உலகத்தில் நல்லவர்கள் கெட்டவர்களாகக் கருதப்படுகிறார்கள். கெட்டவர்கள் உத்தமர்களாக வர்ணிக்கப்படுகிறார்கள்! பண்டாரக வன்னியருக்கும் கண்டி மன்னருக்கும் இடையே ஆழமான நட்பு என்ற ஆதாரமற்ற ஒரு பொய்யின் அடிப்படையில் எவ்வளவு பெரிய அன்புக் கோபுரம் கட்டப்பட்டுவிட்டது. இது கோபுரமல்ல, மகாபாரதக் கதையில் வரும் அரக்கு மாளிகை என்பதை நாம் விளக்கினால், இந்தக் காதலர்கள் நம்பவா போகிறார்கள்! எதற்கும் ஆண்டவனே, நான் ஊதுகிற சங்கை ஊதி வைக்கிறேன்!"

என்று பிலிமதளாவை பிரமாதமாக நடிக்கத் தொடங்கினார். அந்த நச்சுப் பற்களின் இடுக்குகள் வழியாக எத்தகைய விஷம் கொட்டுகிறது என்பதைப் பண்டாரகனும், கண்டி மன்னனும் உன்னிப்பாகக் கவனித்தார்கள்! பிலிமதளாவை சிறு கனைப்புக் கனைத்தவாறு பேசினார்.


"குருவிச்சி நாச்சியார் அவர்களே! சாவின் வாயிலிருந்து மீண்ட நீங்கள் என்னை நம்பினால் நம்புங்கள். இல்லையேல்

எனக்கு கவலை கிடையாது! நீங்கள் பண்டாரக வன்னியனை உயிருக்குயிராகக் காதலிக்கிறீர்கள். உண்மை. ஆனால் நடந்தது என்ன? என் அருமை மகள் பியசீலியைக் கண்டி மன்னர் மணந்து கொண்டார். பிற புருஷர்களை ஏறெடுத்தும் பார்க்காத கற்புக்கரசி என் மகள் பியசீலி! ஆனால் பண்டார கனுக்கு அவள்மீது ஒரு கண்! நண்பனின் மனைவியென்றும் பாராமல் பியசீலியிடம் பண்டாரகன் நெருங்கிப் பழகினான். என் மகளும் நல்ல உள்ளத்துடன் பண்டாரகனிடம் நெருங்கிப் பழகினாள். இதற்கிடையே பியசீலியும் கண்டி மன்னரான என் மருமகன் அவள் திருப்திப்படும் அளவுக்கு நடந்து கொள்ளவில்லை. ஏதோ இளமையின் தவிப்பினால் என் மகள் பியசீலி, பண்டாரகனின் வலையில் விழுந்துவிட்டாள். இருவரும் அந்தப்புர அறையில் ஆபாசமான நிலையில் இருந்ததைக் கண்டி மன்னர் கண்டுவிட்டார். அதற்குத் தண்டனையாகத்தான், தனது மனைவி பியசீலியின் கையாலேயே- தன் கண் எதிரில் பண்டாரகனைக் கொல்லுமாறு கண்டி மன்னனால் கட்டளையிடப்பட்டது! கணவன் ஆணையை நிறைவேற்றத்தான் பியசீலி, பண்டாரக வன்னியன் மீது கட்டாரி வீசினாள்! நீங்கள் குறுக்கிட்டுக் காப்பாற்றி விட்டீர்கள்! இப்போது சொல்லுங்கள் - யார் சதிகாரர்கள்? அழகும் அன்பும் ஒருங்கிணைந்த உங்களை ஏமாற்றிவிட்டு நண்பனின் மனைவி பியசீலியையும் அனுபவிக்க விரும்பாத இந்தப் பண்டாரகன் சதிகாரனா இல்லையா? கெட்டுப் போன மனைவியைக் கொண்டே அவளைக் கெடுத்த பண்டாரக வன்னியனைக் கொல்லச் சொன்ன கண்டி மன்னன் சதிகாரனா இல்லையா?"

பிலிமதளாவை ஆத்திரம் கொப்பளிக்கப் பேசி முடிப்பதற்குள் கண்டி மன்னன் விக்கிரம ராஜ சிங்கன், திடீரெனப் பாய்ந்து-பிலிமதளாவையின் மொட்டைத் தலையைத் தனது முரட்டுக் கரங்களால் பற்றிக்கொண்டு, அங்குள்ள தூணில் படார் படார் எனப் பல முறை மோதினான். அதற்குள் பண்டாரக வன்னியன் குறுக்கிட்டு, பிலிமதளாவையைக் காப்பாற்றினான். பிலிமதளாவை, தனது மண்டையைப் பிடித்து கொண்டே-

"அய்யோ - கடவுளே! என் மகள் கற்புக்கரசி பியசீலியை மானபங்கப்படுத்திய மகாபாவிகள், என் மண்டையையும் பிளந்துவிட்டார்களே!" என்று கூச்சலிட்டுக் கொண்டே அந்தத் தூணின் கீழே சோர்ந்து விழுந்தார்.

நாத்தும் நயவஞ்சகமும்!



குருவிச்சி நாச்சியார் முழுமையாக உடல் நலம் பெறுகிற வரையில் கண்டியிலேயே தங்கிவிட்டுப் போக வேண்டுமென்று விக்கிரம ராஜ சிங்கன் விடுத்த வேண்டுகோளைத் தட்டிக் கழிக்க இயலாத நிலையில் தனது பயணத்தை ஒத்திவைத்துவிட்டுப் பண்டாரக வன்னியன், அருமை நண்பனின் அந்த மாளிகையிலேயே குருவிச்சியுடன் தங்கினான். வருவதற்கு மேலும் சில நாட்கள் ஆகுமென்று காரணம்காட்டி, அதுவரையில் தனது சகோதரிகள் நல்லநாச்சி யும், ஊமைச்சி நாச்சியும் முல்லைத் தீவு அரண்மனையில் காத்திருக்கத் தேவையில்லை யென்றும் – அவர்களிருவரும் மேற்பார்வைப் பொறுப்பேற்று இருக்கும் திருகோண மலைப்பகுதிக்கும், பனங்காமம் பகுதிக்கும் போகலாமென்றும் சொல்லியனுப்பினான். அவர்களும், பண்டாரக வன்னியன் முல்லைத் தீவுக்குத் திரும்பி வராமலே கண்டியில் தங்கியிருப்பது என்ன காரணம் எனப் புரிந்து கொள்ள முடியாத குழப்பத்தில் –நல்லநாச்சி, திருகோண மலைக்கும், ஊமைச்சி நாச்சி பனங்காமத்துக்கும் திரும்பிச் சென்று, தமது பொறுப்புக்களைக் கவனிக்கப் பயணப் பட்டனர்.

இதற்கிடையே, கண்டியின் அமைச்சர் பிலிமதளாவை எங்கு போனார் என்றே தெரியவில்லை. அந்தச் செய்தி, கண்டி அரண்மனையில் பெரும் பரபரப்பை உருவாக்கி விட்டது. விக்கிரமராஜ சிங்கனுக்கும் பண்டார வன்னியனுக்கும் பிலிமதளாவை திடீரெனக் கண்டியை விட்டு வெளியேறியது பெரும் வியப்பை ஏற் படுத்தியது.

பிலிமதளாவை போன்ற சூழ்ச்சிக்காரர்கள் – துரோகச் சிந்தை கொண்டவர்கள் எங்கே போவார்கள்? எதிரிகளின் இருப்பிடத்திற்குத்தானே!

கொழும்புத் தலைநகரில் கொலுவீற்றிருக்கும் நார்த் துரையின் காலடியில் போய் விழுந்தார், அந்தக் காட்டிக் கொடுக்கும் கட்டுவிரியன்!

தனது மூளையின் விஷரசம் முழுதும் சுண்டிப் போகிற அளவுக்கு சிந்தித்துத் தீட்டிய திட்டம் தோற்றுப் போனதோடு - பண்டாரக வன்னியனும் விக்கிரமராஜ சிங்கனும் மேலும் ஆழமான நட்புக் கொண்டவர்களாகி விட்டார்களே என்ன செய்வது என்று ஓலமிட்டார்.

நார்த், அவரைப் பார்த்துத் தைரியமாகவே சொன்னான்.

"ஆங்கிலேயர்களின் ராஜதந்திரத்தையும், ஆயுத பலத்தையும் குறைத்து எடை போடாதீர்! கண்ணுசாமியைக் கண்டி மன்னனாகக் காண்பதற்கு சகிக்காமல் வயிறு எரிந்து கொண்டிருக்கிறமுத்து சாமி என்கையில்தான் இருக்கிறான். கொழும்பில் இருந்தவாறேமுத்துசாமிதான் கண்டியின் மன்னன் என்று பிரகடனம் ஒன்று நடைபெறப் போகிறது!"

"நார்த் பிரபு அவர்களே! இதனைத் தாங்கள் அறிவித்தால்- கண்டி ராஜ்யத்து மக்கள் ஆவேசத்துடன் கொந்தளித்து எழுவார்களே! அந்தக் கொந்தளிப்பும் குமுறலும் விக்கிரம ராஜசிங்கனுக்கு அதிக பலத்தை அளித்துவிடுமே! அதை யோசித்துப் பார்த்தீர்களா?"

பிலிமதளாவையின் இந்தக் கேள்வியை எதிர்பார்க்காத நார்த், அவரைத் தட்டிக்கொடுத்து "சபாஷ்! சரியான கேள்வி! ஆனால் நான் யோசித்துப் பார்க்காததல்ல! தீர யோசித்த பிறகுதான் இந்த முடிவுக்கே வந்திருக்கிறேன். முதலில் பிலிமதளாவை கண்டிக்குத் திரும்ப வேண்டும். விக்கிரம ராஜசிங்கனோ, அல்லது பண்டாரக வன்னியனோ - உமது கொழும்பு விஜயம் பற்றிக் கேட்டால் என்ன சொல்ல வேண்டும் தெரியுமா?" என்றான் சிரித்துக் கொண்டும், புகைத்துக் கொண்டும், குடித்துக் கொண்டும்!

"அந்த விஷயத்தை என்னிடம் விட்டு விடுங்கள்! கண்டி மன்னன் கண்ணுசாமியை என் கண்ணீரால் கரைய வைத்து விடுவேன்! மருமகனே! என் மகளை வைத்துக் காப்பாற்றுவாய்

–கண்டி மண்டிலத்தையும் காத்திடுவாய் என்று நம்பியிருந்தேன். ராஜவிசுவாசியாக இருக்கும் என் பேச்சை நீ முழுவதுமாக அலட்சியப்படுத்தி விட்டாய்! என்னையே விரோதியாகவும் நினைத்து விட்டாய்! அதனால் தான் நிம்மதி தேடி கொழும்புக்குச் சென்றேன்! அங்கு சென்றும் நார்த் பிரபுவிடம் கண்டி ராஜ்யத் தின் மேன்மைக்காகவும், உன் ஆட்சி இங்கு நீடிப்பதற்காகவும் தான் வேண்டிக்கொண்டு வந்திருக்கிறேன். உனக்கு விரோத மான காரியம் எதிலும் ஈடுபடவில்லை. ஈடுபடவும் மாட்டேன். ஏன் தெரியுமா? நீ என் மகளின் கணவன் என்பதை நான் எப்படி மறக்க முடியும்? அந்தப் பாசம் போகுமா?"

பிலிமதளாவை இதைச் சொல்லி முடிப்பதற்குள், அவரது மொட்டைத் தலையில் ஒரு தட்டுத் தட்டி நார்த் துரை, கலகலவென்று நகைத்தான்.

"எப்படியோ நீர் கண்டி போய்ச் சேர்ந்து, அந்தக் கண்ணு சாமியை பகைத்துக் கொண்டதாகக் காட்டிக் கொள்ளாமல் – அதே நேரத்தில் அவன் காலைச் சுற்றிய பாம்பாக இருந்திடும்! முத்துசாமி, கண்டியின் மன்னன் என்று நான் அறிவிக்கப் போவ தில்லை! நான் அறிவித்தால்தானே கண்டி மக்கள் என் மீது ஆத்திரப்படுவார்கள்! முத்துசாமியே, தன்னைத்தானே கண்டியின் மன்னன் என்று அறிவித்துக் கொள்ளுவான். அப்படி அவன் அறிவித்தால் கண்டி ராஜ்யத்து அரசியலில் ஒரு குழப்பம் ஏற்படுமல்லவா?"

"ஆமாம்! குழப்பம் ஏற்படும்! அதே நேரத்தில் கண்டி மக்கள் வேறு விதமாகவும் நினைப்பார்கள்!"

"எப்படி நினைப்பார்கள்?"

"நார்த் துரையின் பின்பலத்தோடுதான் முத்துசாமி அப்படி அறிவித்திருக்கிறான் – இருந்தாலும், கண்டியின் மன்னனாக அவனை உள்ளே நுழைய விடமாட்டோம் என்று மக்கள் ஆத்திரப் படுவார்கள் என்பது என் கருத்து."

"கொஞ்ச நாள் கண்டி அரசியலில் குழப்பம் – பிறகு, முத்துசாமி இந்த நார்த் வழங்கும் படைபலத்துடன் கண்டியில் நுழைவான் – குழப்பம் சற்று அதிகமாகும் – தொடர்ந்து போர்!

அதில் முத்துசாமிக்கு வெற்றி! அதாவது இந்த நார்த்துக்கு வெற்றி! பின்னர் ஆங்கிலேயர் அரசு கண்டியில்! அதன் ஏஜண்டாக பிலிமதளாவை!"

"திட்டம் தித்திப்பாகத்தான் இருக்கிறது! ஆனால், விக்கிரம ராஜசிங்கனுக்குபண்டாரகவன்னியனின் துணையிருக்கும்-வரையில் நிறைவேறுமா என்பதுதான் சந்தேகமாக இருக்கிறது!"

"அவர்களைப் பிரிக்கும் முயற்சியில் பிலிமதளாவை தோற்றுவிட்ட பிறகு வேறு என்ன செய்ய முடியும்? நான் சொல்லுகிற திட்டம் நாளைக்கே நிறைவேறி, நாளை மறுநாளே நீர் கண்டி ராஜ்யத்தின் எமது ஏஜண்டுப்பதவியை ஏற்றுவிடலாம் எனக்கோட்டை கட்டிவிடாதீர்! தமிழ்நாட்டில் கட்டபொம்மனை அடக்குவதற்காக நடைபெறும் முயற்சி வெற்றி பெற்று விட்டால் - அங்குள்ள எமது படையினர், ஏராளமாக இலங்கைக்கு வர இயலும். அதற்கு இன்னும் ஆறு மாதமோ ஒரு வருடமோ கூட ஆகலாம்! அதுவரையில் பொறுமையாக நாம் காய்களை நகர்த்திக் கொண்டிருக்க வேண்டும். கட்டபொம்மன் அடக்கப் பட்டு, அங்குள்ள நமது படை பலம் இங்கு வந்து விடுமேயானால் அதன் பிறகு பண்டாரக வன்னியனை வீழ்த்துவதும் - விக்கிரம ராஜசிங்களை வீழ்த்துவதும் - எமக்கு மிக எளிதான காரியம்! எனவே அவசரப்படாமல் - அமைதியாக நமது சூழ்ச்சி வலையைப் பின்ன வேண்டும்!"

"எதற்கும் நான் தயாராக இருக்கிறேன்!"

"ஏன் இருக்க மாட்டீர்? எதிர் காலத்தில் கண்டி ராஜ்யத்தின் எமது ஏஜண்டு அல்லவா?"

"இப்போதும் அப்படித்தானே பிரபூ!"

"சரி! நீர் விரைவில் கண்டிக்குத் திரும்பலாம்! நீர் கண்டி போய்ச் சேர்ந்தவுடனே - இரண்டொரு நாட்களில் முத்துசாமியின் பிரகடனம் வெளியாகும்! அந்தப் பிரகடனத்தை மிகக் கடுமையாகக் கண்டிப்பது போல நீர் காட்டிக் கொள்ள வேண்டும். கண்ணுசாமியின் விசுவாசியாகவே வேடம்போட்டுக் கொண்டிருக்க வேண்டும்."

நார்த்தும், பிலிமதளாவையும் பேசிக் கொண்டிருக்கும் போது, ஒரு வெள்ளைக்கார அதிகாரி வேகமாக கம்பீரமாக வந்து நிமிர்ந்து சலாம் போட்டு - நார்த்திடம் பின் வருமாறு சொன்னான்.

தமிழ்நாட்டிலிருந்து முக்கியமான செய்தியொன்று வந்திருக்கிறது! கட்டபொம்மனின் நிழல் போல இருந்த தானாபதி பிள்ளையை கோயில்பட்டியில் பிடித்து - நாகலாபுரத்தில் தூக்குத் தண்டனை கொடுத்தாகி விட்டது! அவரது தலையை வெட்டி அதை ஒரு கொம்பில் குத்தி, பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்கு எதிரில் நட்டு வைத்து விட்டார்கள் நமது படை வீரர்கள்!"

இச்செய்தி கேட்டு நார்த் துரை, தனது கையிலிருந்த மதுக் கோப்பையை உடனடியாகப் பாதியைக் காலி செய்துவிட்டு மீதியைப் பிலிமதளாவையின் மொட்டைத் தலையில் ஊற்றி - மகிழ்ச்சியைக் கொண்டாடினான்.

28

"தானாபதி பிள்ளையைத் தூக்கிலிட்டுக் கொன்று, அவர் உடலைக் கூறு போட்டது மட்டுமல்ல, அவரது பேச்சைக் கேட்டு - அந்த பானர்மேன் என்கிற ஆங்கிலேய ஆணவக் காரனைச் சந்திப்பதற்குச் சம்மதித்துப் புறப் பட்டுவிட்டார் கட்டபொம்மன் எனக் கேள்விப் பட்டவுடனே, எட்டப்பன் ஓடிப்போய் பானர் மேனிடம் இதுதான் சமயம், பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டை யைத் தாக்க என்று தூபம் போட்டிருக்கிறான். வழியில் கோலார் பட்டியில் தங்கியிருந்த கட்டபொம்மன் காதில் விழுந்த செய்தி என்ன தெரியுமா? பானர்மேன் அனுப்பிய படைகள், பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைக் கைப்பற்றிவிட்டன என்பதுதான்! அடுத்த நான்கு நாட்களுக்கெல்லாம் தானாபதி பிள்ளையும் அந்தக் கம்பெனியார் கையில் சிக்கி உயிரிழந் திருக்கிறார்."

தழுதழுத்த குரலில் - ஆனால் தணல் தகிக்கும் விழிகளுடன் பண்டாரகவன்னியன், இச்செய்திகளைக் கண்டி மன்னனுக்குச் சொன்னான். கலங்கிப்போன கண்டியரசன், "உண்மையாகவா? இப்படி நடந்திருக்குமா? நடந்திருக்கவே கூடாதே!" என்று பதைப்புடன் பேசினான்.

"தமிழ் நாட்டிலிருந்து வந்த தகவலைத்தான் கூறுகிறேன். பாஞ்சைக் கோட்டைக்குத் திரும்ப முடியாத நிலையில் கட்டபொம்மனை கோலார்பட்டி மாளிகையிலேயே ஆங்கிலேயப் படையினர் வளைத்துப் விட்டார்களாம். அந்தப் படையுடன் பெரும்போர் புரிந்து இறுதியாக அவர் அவர்களிடமிருந்து தப்பிச்

சென்று விட்டாராம். அவரைப் பிடிப்பதற்கு எட்டப்பனின் உதவியோடு பல திசைகளிலும் ஆங்கிலேயக் கம்பெனியார் படைகளை அனுப்பியிருக்கிறார்களாம்!"

குமுறுகிற நெஞ்சத்துடன் பண்டாரக வன்னியன் கூறிய வார்த்தைகள் கேட்டு, விக்ரம ராஜ சிங்கன் - தனக்கே அப்படி யொரு கேடு வந்தது போல அந்தக் கூடத்தில் புலிபோல உறுமிக் கொண்டிருந்தான். இருவர் உரையாடலைக் கேட்டுக் கொண் டிருந்த குருவிச்சி நாச்சியார் - "பாஞ்சாலங்குறிச்சி மன்னரைக் காப்பற்ற வழி ஏதுமில்லையா? அது குறித்து யோசிக்கக் கூடாதா?" என்று உருக்கமுடன் கேட்டாள்.

"இந்த நிலையில் எப்படி முடியும்? நாம் ஆங்கிலேயரிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று அவரும் வெள்ளையத் தேவனும் நமக்கு அடிக்கடி செய்தி அனுப்பிக் கொண்டி ருந்தார்கள். இப்போது அவர்களே எச்சரிக்கையாக இல்லாமல் ஏமாந்து போய் விட்டார்கள்! எனக்கென்னமோ இன்னமும் நம்பிக்கையிருக்கிறது. கட்டபொம்மன் அந்தக் கம்பெனியார் கையில் அகப்படமாட்டார். எப்படியும் தனது படை பலத்தைப் பெருக்கிக் கொண்டு, மீண்டும் ஆங்கிலேயர்களை எதிர்ப்பார் - பாஞ்சைக் கோட்டையைக் கைப்பற்றுவார் - என எதிர்பார்க் கிறேன்."

நம்பிக்கையுடன் பேசிக் கொண்டிருந்த பண்டாரகனைப் பார்த்து குருவிச்சி சொன்னாள்.

"உங்கள் நம்பிக்கை நன்றாகத்தானிருக்கிறது! பாஞ்சாலங் குறிச்சியில் இப்படியொரு வீழ்ச்சி ஏற்பட்டபிறகு, இங்கே இலங்கையில் உள்ள நார்த்தும் அவனது அதிகார வர்க்கமும், மிகுந்த உற்சாகத்தோடு துள்ளிக் குதிப்பார்கள்! கண்டி மன்னரையும், தங்களையும் வெல்வது சுலபம் எனக் கணக்கிடு வார்கள்! தமிழ்நாட்டில் கட்டபொம்மனுக்கு ஒரு எட்டப்பனைப் போல இங்கே கண்டியில் மன்னரின் மாமனாரே இருக்கிறார்! அதுமட்டுமா? காக்கைவன்னியனும் காத்துக் கொண்டி ருக்கிறான்! அதனால் நாம் உடனடியாகச் சிந்தித்துச் செயல்பட வேண்டும்."

"என்ன சொல்லுகிறாய் குருவிச்சி? ஆபத்தை மட்டும் கூறிப்பயனில்லை! அதிலிருந்து மீள்வதற்கு வழியும் சொல்ல வேண்டாமா?"

"தாங்கள் முல்லைத்தீவை விட்டுப் புறப்பட்டு நெடுநாட்கள் ஆகின்றன! நாம் அங்கில்லாத நேரத்தில் ஆங்கிலேயப் படையினர் அதனை வளைத்துக் கொள்ள வியூகம் வகுக்கலாம் அல்லவா?"

அப்போது கண்டி மன்னன் குறுக்கிட்டு, "அப்படியே ஒன்று நடந்து விட்டால்தான் என்ன? இந்தக் கண்டி அரண்மனை என் நண்பன் பண்டாரகனுக்கு நிலையான இடத்தைத் தராமலா போய் விடும்!" என்றான் அவசரமாக!

ஆம், அவன் அவசரமாகத்தான் பேசிவிட்டான்! நட்பு உரிமை யுடன் அப்படிப் பேசிவிட்டான்! அந்த வார்த்தைகளைப் பண்டாரக வன்னியன் ஏற்றுக் கொள்ளவில்லை யென்பதை அவனது முகமாற்றம் புலப்படுத்தியது.

"என்ன கண்ணுசாமி இப்படித் திடீரென்று சொல்லிவிட்டாய்? என் மீது கொண்டுள்ள ஆழமான நட்பை உன் பேச்சு மெய்ப் பிக்கிறது என்றாலும் - ஒரு நாட்டை ஆள்பவருக்குரிய வீரமோ, ராஜதந்திரமோ ஒரு சிறிதும் இல்லையே!"

"உன் மனம் புண்படும்படி நான் எதுவும் சொல்லியிருந்தால் மன்னித்துக் கொள் நண்பா!"

"பரவாயில்லை! அதற்காக நீ வருத்தப்படாதே! குருவிச்சி கூறுவதையும் அலட்சியப்படுத்திவிட முடியாது. முல்லைத் தீவுக்கு நான் இன்றே புறப்பட்டுச் சென்று நமது படை வலிமையைப் பெருக்க வேண்டும். நீயும் கண்டியின் படையைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். நார்த்தும் அவனது படைத் தளபதிகளும் முதலில் முல்லைத் தீவுக்குத்தான் குறிவைப் பார்கள். என்னை தீர்த்து கட்டிவிட்டால், அடுத்து இருப்பது நீ ஒருவன்தான் இலங்கை மண்ணில் ஆங்கிலேய ஆதிக்கம் பரவக் கூடாது என ஆர்ப்பரிப்பவன் என்பது அவர்களுக்குத் தெரியும். அதனால் நாம் இருவரும் நமது கோட்டை கொத்தளங்களை யும், வீரர்களையும் பெரியதோர் போருக்குத் தயார்நிலையில் வைத்திருக்கவேண்டும்."

"வைரமுத்தா! உன் வார்த்தைக்கு நான் மறுவார்த்தை பேசி வழக்கம் உண்டா? உனக்கு எது சரியென்று படுகிறதோ, அதைச் செய்! உன் சொற்படி கண்டி அரசின் படைபலத்தை நாளை முதலே இரட்டிப்பு ஆக்குகிறேன்."

"படைபலம் பெருகினால் மட்டும் போதாது! பிலிமதளாவை, பியசீலி இருவரும் பின்னிடும் விஷவலையையும் மிகுந்த சாதுர்யத்துடன் அறுத்தெறிந்தாக வேண்டும். கண்டியிலிருந்து காணாமற் போயிருக்கின்ற அந்தக் காட்டிக்கொடுக்கும் திருமேனி, எப்படியும் திரும்பி வரத்தான் போகிறது! என்ன திட்டத்துடன் வருகிறதோ? யார் கண்டது? அதைப் போலவே நீ அரண்மனையில் அடைத்து வைத்திருக்கும் பியசீலியும் நேரம் பார்த்துக் கொண்டிருப்பாள்."

"நீ என்னைப் பிரிவது மட்டுமல்லாமல் அந்தப் பயங்கர பிராணிகளின் பெயரைச் சொல்லி பயமுறுத்தவும் செய்கிறாயே!"

"பயமுறுத்தவில்லை கண்ணுசாமி! நினைவுபடுத்துகிறேன் அவ்வளவுதான்! நண்பா! நான் இப்போது சொல்லப் போவது உனக்கு வியப்பாகவும் இருக்கும். கசப்பாகவும் இருக்கும்."

"என்ன சொல்லப் போகிறாய்?"

"ராஜதந்திரமெனக் கருதிக் கொண்டு, பியசீலியை நீ மணப்பதற்கு நான் சம்மதித்தேன். உன்னையும் கூடத் தூண்டினேன். ஆனால் இவ்வளவு விபரீதங்கள் விளையும் என நான் எதிர் பார்க்கவே இல்லை. எப்படியோ, பிலிமதளாவையின் எண்ணத்தைத் தற்காலிகமாகத் தடுத்து உன்னைக் கண்டியின் மன்னனாக முடிசூட வைத்துவிட்டேன். உனக்காகவே மதுரைப் பாளையக்காரரின் மகள் இளவரசியென்பவள் காத்துக் கொண்டிருக்கிறாள். அவள் பெயரே இளவரசிதான்! அவளை நீ மணப்பதால் ஒரு நல்ல மனைவி கிடைப்பது மட்டுமல்ல, மதுரைப் பாளையக்காரரின் பெருந்துணையும் கிட்டும். அவரிடம் குவிந்துள்ள செல்வத்தைப் பயன்படுத்தி, கண்டி ராஜ்யத்தை வளங் கொழிக்கச் செய்யலாம். நீ வைத்துள்ள நிதியைக் கொண்டு ஆங்கிலேயருக்கு எதிராகக் கண்டியின் படைபலத்தை அதிகரித்துக் கொள்ளலாம்."

"என்ன சொல்லுகிறாய்? அதற்குள் இன்னொரு திருமணமா?"

"நடக்கப் போவதற்குப் பெயர் தான் திருமணம்! நடந்தது மணமல்ல! சூதுக்கு எதிரான ஒரு தந்திரம்!"

"அந்தத் திருமணத்தையும் நீயே இருந்து நடத்தி வைத்துவிட்டுப் போவதுதானே முறை!"

"அடடா! திருமணம் - பெண் - அதுவும் அழகான பெண் - என்றால் உனக்குத் தேவாமிர்தமாயிற்றே! விடுவாயா? மதுரைப் பாளையக்காரருக்கு நான் முன்பே எல்லா விபரமும் தெரிவித்து விட்டேன். மதுரையில்தான் திருமணத்தை வைத்துக்கொள்ள வேண்டுமென்று செய்தி அனுப்பினார். நான் அதற்கு இணங்கவில்லை. விரைவில் உனது எதிர்கால மனைவியுடன் பாளையக்காரர் கப்பலேறி இங்கு வருவார். நான் வந்திருந்து வாழ்த்துவதாக எண்ணிக் கொண்டு திருமணத்தை முடித்துக் கொள்!"

"உண்மைதானா? நீ வரமாட்டாயா?"

"வருவேன்! முல்லைத்தீவுப் பக்கமே முகம் காட்ட மாட்டோமென ஆங்கிலேயர் தோற்றோடுகிற அளவுக்குச் செய்து விட்டு - கண்டிக்குள்ளேயும் அந்தக் கயவர்கள் நுழைய முடியாமல் தத்தளித்து ஓடிவிட்டனர் என்ற செய்தி கேட்டு - உன்னோடு சிரித்து மகிழ்ந்திட மட்டுமே வருவேன்! கண்ணுசாமி! நீ ஒரு மாதிரியாக வாழ்க்கையைப் பழகிக் கொண்டாய்! உன் நண்பன் வைரமுத்தனாகிய நானோ - வேறு மாதிரியாக வாழ்க்கையைப் பழகிக் கொண்டேன்! ஆனால் இருவர் லட்சியமும் அந்நிய ஆகத்தை ஒழிப்பதுதான்!"

அப்போது கண்டி மன்னன், பண்டாரகனைக் கட்டித் தழுவிக் கொண்டு - "நமது லட்சியத்தில் நாம் வென்றே தீருவோம்!" எனச் சபதம் செய்தான்.

"என்னம்மா குருவி! நான் என் நண்பனிடம் பேசுவதெல்லாம் உனக்கு வெறும் வறட்டுப் பேச்சாக இருக்கிறதா?"

குருவிச்சி நாச்சி, மெல்லப் புன்னகை புரிந்தாள்.

உடலுறவு பற்றிக் கவலை கொள்ளாமல் உள்ளத்தில் ஏந்தியுள்ள உன்னத லட்சியத்திற்காக அந்த அன்பு நெஞ்சங்கள்

இரண்டும் ஒன்றிக் கலந்திருப்பதை எண்ணி, அவள் இன்பப் பெருமூச்சு விட்டாள். அன்றைக்கே பண்டாரக வன்னியன், குருவிச்சி நாச்சியுடனும் தனது படை வீரர்களுடனும் கண்டியை விட்டுப் புறப்பட்டான்.

அவனும் அவனது வீரர்களும் கண்டியின் எல்லையைத் தாண்டுவதற்கும் - வேறு ஒரு பகுதியில் பிலிமதளாவை, கண்டியின் எல்லையில் நுழைவதற்கும் சரியாக இருந்தது.

பியசீலி–பிறந்த நாள்!

29

கொழும்பிலிருந்து திரும்பி வந்த பிலிமதளாவை, கண்டி அரண்மனையில் அரசனைக் கூடப் போய்ச் சந்திக்காமல் தனது அமைச்சகத்துக்குச் சென்று அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கினார். அவரிடம் வேலை பார்க்கும் சிங்கள உயர் அதிகாரிகள் கூட, பிலிமதளாவையின் போக்கினால் அதிர்ந்து போயிருந்தது மட்டுமல்ல, அவர் மீது அதிருப்தியும் கொண்டிருந்தனர் என்பதை அவர்களது முகபாவங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொண்டிருந்தன. இருப்பினும் கடமை தவறாமல் பிலிமதளாவை இட்ட பணிகளில் ஈடுபட்டனர். என்னதான் பண்டாரக வன்னியன் மீது பிலிமதளாவைக்கு விரோதம் இருந்தாலும் – அவனை அன்னியருக்குக் காட்டிக் கொடுப்பதையோ, அதே போல கண்டியின் சிம்மாசனத்துக்கு ஆசைப்பட்டு விக்கிரம ராஜ சிங்கனை வீழ்த்தி – ஆங்கிலேய ஆதிக்கத்திற்குக் கண்டியை உட்படுத்துவதையோ, அந்தச் சிங்கள அதிகாரிகள் விரும்பாத காரணத்தினால் பிலிமதளாவை, கொழும்புக்குச் சென்று நார்த்துடன் பேசிவிட்டு வந்ததையே அவர்கள் முற்றாக வெறுத்தார்கள். அந்த அதிகாரிகளில் முக்கியமானவனும் அமைச்சர் பிலிமதளாவையின் அந்தரங்கச் செயலாளனுமான விஜயதுங்கா என்பவன், மெதுவாகத் தனது கருத்தை பிலிமதளாவையிடம் வெளியிட்டு விடுவதெனத் தீர்மானித்துக் கொண்டான். ஆனால் அதற்கு உரிய வேளை வரவேண்டுமே என காத்துக்கொண்டிருந்தான்.

இரண்டு மூன்று நாட்கள் முதலமைச்சர் பிலிமதளாவையின் அலுவலகம், என்றுமில்லாத சுறுசுறுப்புடன் இயங்கிக் கொண்டிருந்தது. ஏராளமான பிரச்சினைகளை மனுக்கள் வாயிலாகப்

படித்துக் கொண்டிருந்த பிலிமதளாவை, எந்த மனுக்கள் மீதும் விரைவான முடிவு மேற்கொள்ளத் தோன்றாத காரணத் தாலோ என்னவோ, அந்த மனுக்களின் குவியலை அப்படியே கைகளால் வேகமாகத் தள்ளி அங்கே தயாராக இருந்த பெரிய குப்பைக் கூடைக்குள் தினித்தார்.

"என்ன? எல்லா மனுக்களின் மீதும் எளிதாகத் தீர்வு கண்டு விட்டீர்கள் போலிருக்கிறதே!"

என்று கேட்டவாறு சிரித்துக் கொண்டே விஜயதுங்கா அறைக்குள் நுழைந்தான்.

பிலிமதளாவை - தன்னையும் ஒருவன் கேலி செய்கிறானா? அப்படிக் கேலி செய்கிறவன் நமது அந்தரங்கச் செயலாளன் விஜயதுங்காவா? என்ற பரபரப்புடன் அவனையே நிமிர்ந்து பார்த்துக் கொண்டு தனது முட்டைக் கண்களை மூடாமல், மொட்டைத் தலையைத் தடவிக் கொண்டு சிலைபோல் அமர்ந்திருந்தார்.

"மன்னித்துக் கொள்ளவும். என்ன ஒரு மாதிரி பேசுகிறானே என்று நினைக்கக் கூடாது! மனதில் பட்டதை மறைப்பது சரியல்ல! தங்கள் நன்மைக்காகவும். இந்தக் கண்டி ராஜ்யத்தின் நன்மைக்காவும் சிலவற்றை நான் சொல்லியே ஆக வேண்டும்."

இப்போது விஜயதுங்கா, தனது புஜங்களை கரங்களால் பற்றிக் கொண்டு - எந்த விளைவுகளுக்கும் அஞ்சாதவனைப் போல கம்பீரமாக நிமிர்ந்து நின்று கொண்டிருந்தான். மேலுதட்டின்மேல் இரண்டு கோடுகள் கிழித்தாற் போல மீசைகள்! அகன்ற நெற்றி! ஆழமான ஊடுறுவும் விழியொழி! ஆஜானுபாகுவான உருவம்! பிலிமதளாவையின் செயலாளனாக மட்டுமல்ல, மெய்க்கப்பாளனாகவும் இருந்திடத் தகுதி படைத்தவன்.

வித்துவான் ஒருவன் கடம் வாசிப்பதைப் போல - தனது மொட்டைத் தலையில் விரல்களால் வேகமாகத் தட்டிக் கொண்டே யிருந்து விட்டு, பிலிமதளாவை ஆணவத்தோடு எழுந்தார்.

"என்னப்பா! விஜயதுங்கா! திடீரென்று ராஜ விசுவாசியாகி விட்டாயா?"

"நான் எப்போதாவது ராஜதுரோகியாக இருந்தால் அல்லவா - திடீரென்று ராஜவிசுவாசியாகியிருப்பேன். இல்லாத கற்பனை எதற்கு? நான் என்றைக்குமே ராஜவிசுவாசிதான்! ராஜ விசுவாசி மட்டுமல்ல. இந்தக் கண்டி ராஜ்யத்தின் விசுவாசியும்கூட! தாங்கள் தான் மன்னருக்கும், இந்த மண்டிலத்துக்கும் துரோகம் புரியும் பணியில் ஈடுபட்டிருக்கிறீர்கள்!"

"என்ன? என்ன சொன்னாய்? என்னிடமே இவ்வாறு பேசுவதற்கு உனக்கு எவ்வளவு வாய்க்கொழுப்பு இருக்க வேண்டும்!"

"என் உள்ளத்தில் இருப்பதை முழுவதையும் கொட்டி விடுகிறேன்! பிடித்தால் ஏற்றுக் கொள்ளுங்கள்! இல்லையேல் - அத்துமீறிப் பேசியதற்காக என்ன தண்டனை வேண்டுமானாலும் அளியுங்கள்! ஆனால் ஒன்று - நமது அந்தரங்க மெல்லாம் இந்த விஜயதுங்காவுக்குத் தெரியுமே - இவனைத் தண்டித்தால் அனைத்தையும் அம்பலமாக்கி விடுவானேயென்று அணுகளவும் சந்தேகப் படாதீர்கள். சத்தியமாகச் சொல்லுகிறேன். நீங்கள் கண்டி ராஜ்யத்துக்கு விசுவசமாக இருக்கிறவரையில் தங்களைப் பற்றிய அந்தரங்கங்கள் எதையும் வெளியிடமாட்டேன்!"

கொல்லாமல் கொல்லுகிறானேயென்று பிலிமதளாவை, குழப்பமடைந்து - தனது மொட்டைத் தலையை வேக வேகமாகத் தேய்த்து விட்டுக் கொண்டார்.

"விஜயதுங்கா! கொஞ்சமாவது உனக்கு சூடு சொரணை இருக்கின்றதா? கண்டி ராஜ்யத்தை விக்கிரமராஜ சிங்கன் என்றஒரு தமிழன் ஆளுகிறான்! அதை உன்னையும் என்னையும் போன்ற சிங்களவன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா?"

"தங்களுக்கு எப்போது இந்தப் புதிய சிந்தனை எழுந்தது? கண்டியை ஆள்பவர் தமிழன்தான்! ஆனால் சிங்களவச் சிங்கம் பிலிமதளாவையின் மருமகன் என்பதை ஏனோ மறந்து விட்டீர்கள்?"

"மடையா! மடையா! விக்கிரம ராஜ சிங்கனுக்கு என் மகள் பியசீலியை ஏன் மனைவி ஆக்கினேன் என்பது கூட உனக்குத் தெரியதா?"

"தெரியும்! முத்துசாமி பட்டத்துக்கு வந்தால் அவன் நேரடியாகவே ஆங்கிலேயக் கம்பெனியாரின் செல்லப் பிள்ளையாகி, கண்டி ராஜ்யத்தில் பரிபலானம் புரிய ஆரம்பித்து விடுவான். அதைத் தற்போதைக்கு தடுத்து விட வேண்டும். அப்படித் தடுப்பதற்கு முதலில் கண்ணுசாமியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது தங்கள் திட்டம். அதற்காக அவரை மருமகனாக்கிக் கொண்டு, கண்டி அரசின் மணிமுடி யையும் அவர் தலையில் ஏற்றி வைக்காதீர்கள். அந்த முடி தங்கள் தலையில் விரைவில் ஏற வேண்டும் என்பதுதானே தங்களின் குறிக்கோள்!

"சபாஷ்! என் குறிக்கோளைப் புரிந்துகொண்ட பிறகும் இப்படிக் குத்திக்காட்டுகிறாயே - ஏன்?"

"தங்களின் அந்தரங்கச் செயலாளன் என்பதற்காக - தங்களின் தனிப்பட்ட வாழ்க்கை ரகசியங்களை மனதில் போட்டு புதைத்து வைத்துக் கொள்ளலாம். ஆனால் தங்களின் செயல்முறைகளால் உருவாகும் விளைவுகள், கண்டி ராஜ்யத்தில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் ஒரு மோதலை ஏற்படுத்தவும் - கண்டி ராஜ்யம், அந்நியர்களின் ஆதிக்கத்தில் அகப்பட்டுக் கொள்ளவுமான ஒரு பயங்கர நிலையை தோற்றுவிக்குமானால் - அப்போது என்னைப் போன்ற தேச பக்தியும் ராஜபக்தியுமுள்ள சிங்களவர்கள் வாய் மூடி மௌனிகளாக இருந்திட இயலாது"

"விஜயதுங்கா! யாரிடம் அந்தரங்கச் செயலாளனாகப் பணிபுரி கிறாயோ, அந்தப் பிலிமதளாவைக்கு இந்த நாட்டை ஆளும் பாக்கியம் கிடைக்கக் கூடாது என்கிறாய்! ஆகா! அற்புதமான எஜமான விசுவாசம்!"

"விழிகளை விற்றுவிட்டு எழிலோவியம் வாங்கிப் பயன் என்ன? தாங்கள் வகுத்துள்ள திட்டப்படி - சூழ்ச்சிகளின் படி - தாங்கள் வெற்றி பெறுவீர்களேயானால் கிரீடம் தங்கள் தலையில் இருக்கும்! ராஜ்யம், ஆங்கிலேயர் கைக்குப் போய்விடும்!"

"அவர்கள் உதவியில்லாமல் கண்டி ராஜ்யத்தைப் பரிபலிப்பது சுலபமான விஷயமா? அவர்களிடமிருந்து பணம்

மட்டுமல்ல, படையும் நமது பாதுகாப்புக்காக என்றைக்கும் இருக்குமே! விஜயதுங்கா! நீ ஆங்கிலேயருடன் அவ்வளவாகப் பழகியதில்லை! அவர்கள் மிகவும் பவ்யமானவர்கள்! நம்மிடம் மிகுந்த அன்பும் மரியாதையும் வைத்திருக்கிறார்கள்!

"மஞ்சள் தெளித்து மாலை போடுகிறார்களே, ஆடுகளுக்கு! எதற்காக? பலி கொடுப்பதற்கு! இந்தச் சிறிய உதாரணத்தைப் புரிந்து கொண்டால் இந்த நாடும் தப்பும்! தங்களின் நாணயமும் தப்பும்! தயவு செய்து சொல்வதைக் கேளுங்கள் - நாசத்துக்கு வெற்றிலை பாக்கு வைத்து அழைக்காதீர்கள்!"

விஜயதுங்காவிடம் பேசிப் பயனில்லை என்பதைப் புரிந்து கொண்ட பிலிமதளாவை திணறினார். கொஞ்சம் விட்டுப் பிடித்து, அவனைத் தன் வழிக்குக் கொண்டு வரலாமென்று நம்பினார். எனவே திசை மாற்ற எண்ணினார்.

"விஜயா! நான் உன்னிடம் கொண்டுள்ள நம்பிக்கை கடல் போன்றது! நீ என்னிடம் கொண்டுள்ள பற்றும் பாசமும் வானம் போன்றது! இந்தக் கணிப்பில் இருவேறு கருத்துக்கே இடமில்லை! நீ ஒரு சிங்களவன் என்ற உணர்வோடு இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும். அதற்கு உனக்கு அவகாசம் தருகிறேன். நன்றாகச் சிந்தனை செய். மீண்டும் இது குறித்து நாமிருவரும் விரிவாகப் பேச வேண்டும்"

"பேசத்தான் வேண்டும். எனக்காக அல்ல. தங்கள் நன்மைக்காகவும், இந்த நாட்டின் நன்மைக்காகவும்! ஆனால் ஒன்று - என்னை "சிங்களவன் தமிழன்" என்ற வேறுபாடு காட்டி, தங்கள் பக்கம் திருப்பிவிட மட்டும் முயற்சி செய்யாதீர்கள்! சிங்களப் பெண் பியசீலி, தமிழன் கண்ணுசாமியை மணந்ததும் - அந்த மணவிழாவைத் தாங்களே முன்னின்று நடத்தி வைத்ததும் மறந்து போகக் கூடிய நிகழ்ச்சிகள் அல்ல! அப்போது வராத சிங்கள உணர்வு, திடீரென்று வானத்தைப் பொத்துக் கொண்டு நட்சத்திரங்கள் பொலபொல வென உதிர்வது போல் இப்போது மட்டும் உதிர்வானேன்?"

"புரிகிறது விஜயா, புரிகிறது! பியசீலியை மணக்கத் துடித்தவன் நீ! அதை நானும் அவளும் மறுத்த நிகழ்ச்சியை

இன்னமும் மனத்தில் கல்மேல் எழுத்தாக ஆக்கிக் கொண்டிருக் கிறாய்! தயவு செய்து, அதை நீர்மேல் எழுத்தாக்கி விடு! பியசீலி இப்போது எங்கு போய் விட்டாள்? இந்த அரண்மனை யில்தானே அடைக்கப்பட்டிருக்கிறாள்! அதுவும் உன் மேற்பார் வைக்குட்பட்ட அதி காரிகளின் காவலில்தானே இருக்கிறாள்! நீ விரும்பினால் அவளைச் சந்திக்க உனக்கு வழியா தெரியாது!"

விஜயதுங்காவுக்கு, தன் எதிரேநிற்பது பிலிமதளாவைதானா? அல்லது வெட்கம், மானம், சூடு, சொரணை, அனைத்தையும் உணராத ஒரு பிராணியா? என்ற சந்தேகம்! பிலிமதளாவை யின் எதிரிலேயே "தூ" என்று சொல்ல வேண்டும் போலிருந்தது. பிலிமதளாவை, விஜயதுங்காவின் உணர்வுகளைப் பொருட் படுத்தாமல் புன்னகை புரிந்தார்.

"கோபமா விஜயா! இதோ குளிர்ச்சியான ஒரு செய்தி! இன்று பியசீலியின் பிறந்த நாள்! அவள் இன்று ஒருநாள் அரண்மனையில் சுதந்திரமாக இருக்கலாம் என்று அரசன் உத்திரவாம்! இரவு, விருந்தும் விழாவும் இருக்கிறது! நீ அவசியம் வர வேண்டும்!"

"நான் எதற்காக வரவேண்டும்! வரமாட்டேன்! முடியாது!"

என்று அங்கிருந்து திரும்பிட முனைந்தான்! அப்போது பனிமலர் போல ஒரு கைமலர் அவனது முன்கையைப் பிடித்தது.

"ஏன்? என் பிறந்த நாளுக்கு நீங்கள் வரக்கூடாதா?"

இந்த வினா இதழ் இடுக்கில் தேனருவியாக வழிந்திட, விழிகளால் அவனை விழுங்கிக் கொண்டு, பியசீலி அங்கே நின்றாள்.

வெற்றிப் புன்னகை!

30

கைபட்ட இடம் மட்டுமல்ல, பியசீலியின் விழிபட்ட இடமெல்லாம் சிலிர்த்துப்போன நிலையில் விஜயதுங்கா, அந்தப் பாவையின் உடலைப் போர்த்திக் கொண்டே தனது பார்வையை விலக்க முடியாமல் திணறினான். தடுமாறினான்.

வென்று காட்டுவாள் தன் மகள் என்ற நம்பிக்கையுடன் இதுதான் சமயமெனச் சென்றுவிட்டார் பிலிமதளாவை!

இழப்பது எதுவாக இருப்பினும் கிடைப்பது பதவியாக இருந்தால் போதுமானது என எண்ணிடும் சுயநலச் சுரங்க மனிதர்களின் வரிசையில் முன் வரிசையில் நிற்பவர் பிலிமதளாவை என்பதை உணர்ந்தவன்தான் விஜயதுங்கா எனினும் - இப்போது அவன் எதிரே எழிலுறுவாக நிற்பது, அவன் ஏந்திக் கொள்ள வேண்டுமென்று ஒரு காலத்தில் நினைத்த சித்திரமல்லவா? அதனால் அவன் அகக் கண்களிலிருந்தும் பிலிமதளாவை சிறிது நேரத்திற்கு மறைந்து போனார். பியசீலி மட்டுமே அவன் நெஞ்சை நிறைத்துக் கொண்டிருந்தாள்.

"என்ன விஜயா! என்னை விழுங்கி ஏப்பம்விட்டு விடலாமா என்பதுபோல இப்படிப் பார்க்கிறாய்?"

"ஊம்! இலவு காத்த கிளி நான்! வெடித்துப்போன பழத்தை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்."

"கடித்துத் தின்னமாட்டாயா என்று துடித்துக் கொண்டிருக்கும் பழம் இது என்பதை நீ அறிய மாட்டாயா?"

"பிறகு ஏன் திருமணத்திற்கு மறுப்பு சொன்னாய்? திரும்பிப் பார்க்கக் கூட அன்று மறுத்தாய்?"

"முதலில் சொன்னாயே, அது சரி! உன் அந்தப்புரத்து மயிலாக நானிருக்க - அந்தஸ்த்து பேதம் தடுத்தது! அதற்காக உன் ஆலிங்கனவல்லியாக இருக்க நான் என்றைக்காவது மறுப்பு சொன்னதுண்டா? நீதான் திருமணம் செய்து கொண்டபிறகுதான் என்னைத் தொடுவேன் என்றாய்! அந்தக் கோபத்தில்தானே நான் உன்னைத் திரும்பிப் பார்க்காமல் கூட போய்க் கொண்டிருந்தேன்! விஜயா! அப்படி நான் போனதுபோது கூட நீ என் பின்னால் நின்று என்னை ரசித்துக் கொண்டிருந்தாய் என்பது எனக்குத் தெரியும்."

"இல்லை! இல்லவே இல்லை!"

"பொய் சொல்லாதே ஒரு பெண்ணின் முன் அழகு ஒரு ஆடவனை வெல்லும். ஆனால் பின்னழகோ அவனைக் கொல்லும்!"

பியசீலி, பேசிக்கொண்டே அங்குள்ள மேசையிலிருந்த மதுரசக் கிண்ணத்தை எடுத்து அவனுக்குத் தருவதற்காகத் திரும்பி நடந்தாள் அவன் கவனித்தான். அவள் சொன்னது சரிதான். செத்துக் கொண்டுதானிருந்தான்.

தன் கையில் தனக்காக ஒரு கிண்ணத்தை வைத்துக் கொண்டு மற்றொரு கிண்ணத்தை அவனிடம் நீட்டினாள். அவன் தயங்கினான். அதற்குள் அந்தக் கிண்ணம் அவன் வாயருகே சென்றது. அவளே அளித்தாள்! களித்தான்! வீராதி வீரன் பல்லையும் இளித்தான்! அந்தச் சரசவல்லி தன் இடையை நெளித்தாள்!

செத்தவன் உடல் இப்போது எரியத் தொடங்கிவிட்டது! கள்ளி வைத்த கொள்ளியில் வெந்து போனான்!

"மதுரசம் போதும் கண்ணே, உன் இதழ் ரசம் வேண்டும்" என்றான்.

"தடையில்லை எனக்கு! ஆனால் கதவு தாழிடவில்லை!" என்றாள்.

தாழிட்டான்! உடன் அவள் தழுவிட்டாள்!

பிலிமதளாவையின் அலுவலக அறையில் - தரையே பஞ்சணையாயிற்று!

"தங்கமே! உன்னை நீ முழுமையாக எனக்குக் கொடுத்திருந்தால்!"

"அப்போது எவ்வளவு தவறு செய்து விட்டேன் என்று இப்போது தான் புரிகிறது விஜயதுங்கா! என் செய்வது, என் தலையெழுத்து என ஒன்றிருக்கிறதே - கண்ணுசாமியைக் கட்டிக் கொண்டு காலமெல்லாம் அழ வேண்டுமென்று!"

"த்சு! த்சு! உன் இளமை இப்படித் தவிப்பதற்காக நான் வேதனைப் படுகிறேன்!"

"தவிப்பைத்தான் போக்கிக் கொண்டிருக்கிறாயே! எவனோ ஒருவனுக்கு மனைவியாகிவிட்டுப் போகிறேன். என் இளமை தாகம் இதுபோல அடிக்கடி தணிந்தால் போதும் எனக் கொள்கை வகுத்துக் கொண்டு, அந்தக் கோட்டிலிருந்து தாண்டாத வாழ்க்கையல்லவோ நான் நடத்துவது!"

"விகாரமான கொள்கை!
விரசமான வியாக்கியானம்!
பெண்ணா இவள்?
பித்தமேறிய சித்து
விளையாட்டுக்காரி!"

இப்படித்தான் விஜயதுங்கா முணுமுணுத்திருக்கவேண்டும்! ஆனால் முணுமுணுக்கவில்லை! அவள் பேசப் பேச முத்தமாறி பொழிந்துகொண்டிருந்தான் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையில்!

"உன் பிறந்த நாள் விழா நிகழ்ச்சிக்கு நான் வரலாமா?"

"தாராளமாக! ஆனால், இப்போது கொடுப்பதை விட சிறந்த பரிசை நீ எனக்கு அந்த விழாவில் தர முடியாது!"

"ஏன் தர முடியாது?"

"என்னதான் அரண்மனையில் அடைபட்டுள்ள கைதியாக நானிருந்தாலும் - பிறந்த நாள் விழாவில் அரசனுக்கு அருகே நிற்கும் அரசியல்லவா நான்!"

"அதனால்?"

"நீ வீரன் என்பது உண்மையானால், அப்போது என் கன்னத்தில் ஒரு முத்தமிடேன் பார்க்கலாம்!"

"அது முட்டாள்தனமான காரியமல்லவா?"

"இப்போது நடப்பது மட்டும் மிகவும் புத்திசாலித்தனமான காரியமோ?"

பியசீலி இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொண்டே அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

மீண்டும் மெய்மறந்தான்!

"கண்ணே! உனக்காக வானத்தையே வண்ணக் கிண்ணமாக்கி, அதில் வற்றாத கடலை மதுவாக்கித் தரவும் தயார்!"

"இரு மேனிகள் ஒரு மேனியாகும்போது, இப்படி உளறுவது ஆண்களுக்கு சகஜம்!"

"உளறல் அல்ல! உறுதி மொழி! சத்தியம்!"

இப்போது அவனைத் தனது முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டதாக மகிழந்து போன பியசீலி, அவன் முகம் முழுவதையும் இதழ்த் தேனால் ஈரமாக்கினாள். அவன் சொக்கிக் கிடந்தான். சொர்க்கம் எல்லாம் இதன் முன்னே மிகச் சொற்பமென சொக்கிக் கிடந்தான்.

"நீ வானத்தைக் கிண்ணமாக்கவும் வேண்டாம். கடலை மதுவாக்கவும் வேண்டாம். அதைப் பருக நான் ஒன்றும் பர்வதம் போல் பெருத்தவள் அல்ல! என் ஆசை மிகச் சாதாரணமானது அதை மட்டும் நிறைவேற்றி விடு! பிறகு நான் எப்போதும் உனக்குக் கொய்யாப்பழம்! நீ அணில்! என்னடா கண்ணா! சரிதானா?"

"என்னடா!" என்று அவள் வாயால் சொன்னதும் - அந்தச் சொல், ஏதோ மந்திரம் போட்டது போல் அவன் இதயத்தில் தகதக வெனக் குதித்துக் கும்மாளம் போடத் தொடங்கிவிட்டது.

"என்னடீ தங்கம் உன் ஆசை? இப்போதே சொல்லடி நிறைவேற்றுகிறேன் என் சொர்ணமே!"

எனத் தழுவிக் கொண்டான். அவளோ அவன் தலை முடியைத் தன் விரல்களால் லாவகமாகக் கோதிக்கொண்டு கூறினாள்.

"ஒன்றுமில்லை! முதலில் கேட்டேனே அதுதான்!"

"என்ன?" என்று கேட்பதே எவ்வளவு இன்பமாக இருக்கிறது! என் ராஜா!"

இதழ்களால் அவன் சிறிய மீசையை அழுத்தினாள்.

இப்பொழுது அவன், அவள் இடும் கட்டளை எதுவானாலும் ஏற்றுக் கொள்ளத் தயார்!

"இன்றிரவு பிறந்தநாள் விழாவில் அந்த மண்டூக மன்னனுக்கு அருகில் இந்த மகாராணி! அப்போது இந்த மன்மதன் அங்கே வருகிறான்! பிறந்த நாள் பரிசாக என் கையில் ஒரு மலர்க் கொத்து தருகிறான்! நான் நன்றி என்று சொல்லுகிறேன்! பிறகு.. பிறகு..."

"மகாராஜவை வணங்குகிறேன்!"

"அதுதான் இல்லை!"

"பிறகென்ன?"

"நான் நன்றி என்று சொன்னவுடன் நீ என்னைக் கட்டிப்பிடித்து என் கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்து விடுகிறாய்!"

"இப்போது இத்தனை முத்தம் கொடுத்தேனே... இன்னும் கூடக் கொடுக்கிறேன்!"

"இங்கல்ல ! அங்கு!"

"மன்னர் என்ன நினைப்பார் என்னைப் பற்றி?"

"எத்தனையோ பேர்! அதில் இவன் ஒருவன் என்று நினைப்பார்! ஆனால் ஒன்று - இன்று மட்டும் நீ என் ஆசையை நிறைவேற்றிவிட்டால் - இனிமேல் நான் மன்னருக்கு ராணி! உனக்கு மட்டுமே இன்பலோகக் கேணி!"


மீண்டும் தழுவினாள். விஜயதுங்கா எதிர்பாராத விருந்து! அதுவும் வகை வகையாக! அதனால் வகையாக சிக்கிக் கொண்டான்!

"சரி! உன் விருப்பம் நிறைவேறும்!"

என்று சொல்லி அதற்கு உடனடியாக அவன் பெற்றுக் கொண்ட பரிசு இருக்கிறதே - இவள் இத்தனை கலைகளை இந்த வயதுக்குள் எப்படித்தான் கற்றாளோ என அவனை அதிர வைத்தது!

காவல் இருந்த கதவு திறக்கப் பட்டது. ஒரு முத்தம்! அதில் இருவருக்கும் பங்கு! விடைபெற்றுக் கொண்டு விஜயதுங்கா அவளைப் பார்த்துக் கொண்டே நடந்தான். அவளோ, அகதி களாய்க் கிடந்த ஆடைகளுக்கு அபயம் அளித்தவாறு ஒரு வெற்றிப் புன்னகை புரிந்தாள்.

"மகளே உன் சமர்த்து!"



பிறந்த நாள் விழாவுக்கான ஏற்பாடுகள் கண்டி அரண்மனை முழுதும் மிக விமரிசை யாக நடைபெறத் தொடங்கின. அந்தப் புரத் திலே அடைபட்டுக் கிடக்கும் ராணி பியசீலி அந்த ஒரு நாள் சுதந்திரமாக விழாக் கூடத் துக்கு வருகிறாள் என்றதும் - அவளை சுற்றித் திரிந்து கொண்டிருந்த சுந்தராங்கதர்கள் நீண்ட இடைவெளிக்குப் பிறகு அவளை நேரிலே பார்க்கும் வாய்ப்பு கிட்டப் போகிறதேயன்று வாயில் நீர் ஊறிட விழா நேரத்தை எதிர் நோக்கிக் காத்துக் கிடந்தனர்.

வண்ண வண்ணத் தோரணங்கள் எண்ணத் தொலையாத அளவுக்கு அரண்மனையின் மூலை முடுக்குகள் அனைத்திலும் சில நொடிகளில் அழகூட்ட ஆரம்பித்து விட்டன. சுவர்களின் விளிம்புகள் முழுதும் வரிசை வரிசையாக அகல் விளக்குகள் ஒளிவிட்ட காட்சி. இரவு நேரத்தில் மரக் கிளைகளில் வெளிச்சம் காட்டும் மின்மினிப் பூச்சிகளை நினைவூட்டிக் கொண்டிருந்தது. நெடுதுயர்ந்த அந்த மாளிகையின் கட்டிப் பிடிக்க முடியாத கல் தூண்களில் சரம் சரமாக மாலைகள் தொங்கிக் கொண்டிருந்தன. சிங்கள இசை பாடிக் குதித்தாடும் குமரர் குமரிகள் அரண்மனையின் தாழ்வாரங்களில்! தமிழிசை பாடிக் கூத்திடும் அதே வயதினரான இருபாலரும் அதே தாழ்வாரங்களில் வேறு பகுதிகளில்!

அந்த முழக்கங்களுக்கிடையே இருபுறம் வேல் தாங்கிய வீரர்கள் அணிவகுத்து வர விக்கிரமராஜ சிங்கன் விழா மண்டபத்தை நோக்கி நடந்து வந்தான். வந்தவன், தனது விழிகளை அகலமாக்கிப் பார்க்கிற அளவுக்கு வியப்பில்

ஆழ்ந்தவனாக - தன் எதிர் வந்து வணங்கி நின்ற பிலிமதளாவையின் கையைக் குலுக்கிக் கொண்டே,

"அமைச்சரைப் பார்த்து ஒரு யுகமே கழிந்தது போலிருக் கிறதே!" என்றான்,

பிலிமதளாவை, அரசனுடன் நெருங்கி நடந்து பேசியவாறு இருக்கையினருகே சென்று, மெல்லிய குரலில் விடையளிக்க முற்பட்டான்.

"என் மகள் பியசீலியை அரண்மனைக்குள் சிறை வைத்த பிறகு என் மனமே ஒடிந்து போய்விட்டது மன்னா! தங்கள் முகத்தில் விழிக்கவும் எனக்குத் தாங்க முடியாத சங்கடம்! அதனால்தான் சற்று மன ஆறுதல் கிடைக்குமென்று நமது அரசின் அலுவல்கள் நிமித்தமாக நமது ராஜ்யத்தின் பல ஊர்களுக்குச் சென்றிருந்தேன்"

"ஓ! அப்படியா?" கொழும்பு நகரம் கூட நமது ராஜ்ஜியத்தின் ஒரு பகுதியோ?"

பிலிமதளாவை தடுமாறினார்! இருந்தாலும் கூட தனது மொட்டைத் தலையைத் தடவிய மாத்திரத்தில் அரசனைச் சமாளிக்கும் சாமர்த்தியம் மூளையிலிருந்து வழிந்தது!

"இல்லை அரசே! கொழும்பில் இருக்கும் நார்த் பிரபு நமது கண்டியின் மீது பாய்ந்திட திட்டம் வகுத்துக் கொண்டிருப்பதாக அறிந்தேன்!"

"அது பழைய செய்தி ஆயிற்றே!"

"புதிய செய்தி கேட்டால், தாங்களே திகைப்பீர்கள்! நானே திகைத்து விட்டதால்தான் கொழும்புக்குச் சென்றேன்!"

"புதிய செய்தியா?"

"ஆம்! முற்றிலும் புதிய செய்தி! முல்லைத்தீவில் உள்ள காக்கை வன்னியனையும் - பண்டாரக வன்னியனையும் ஒற்றுமைப்படுத்தி, அவர்கள் இருவருக்கும் தேவையான உதவிகள் அனைத்தையும் செய்து பண்டாரகனைத் தனது நண்பனாக ஆக்கிக் கொள்ள நார்த் பிரபு திட்டமிட்டு, அதற் கான ஏற்பாடுகளைத் தொடங்கி விட்டான்."

"பண்டாரகனைப் பணிய வைக்கப் பகவானே அவதாரமெடுத்து வந்தாலும் முடியாது! அவன் வெள்ளைப்

பரங்கியருக்கு ஆலவட்டம் சுற்றுகிற அடிமைத்தனத்தை சுமப்பதைவிட, தன்னை இந்த நிலத்துக் கல்லறை சுமக்கட்டும் எனத் தீர்மானித்துக் கொண்டுள்ள தீரன்! ஆம். என் நண்பன் நீங்கள் சொல்வதை நினைத்துப் பார்க்கவே கூட நெஞ்சம் இடம் தரவில்லை"

"வெளுத்தது எல்லாம் பால் என எண்ணும் வேதாந்தம் தங்களுடையது! இருப்பினும் மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல் எனும் கடமையிலிருந்து நான் வழுக்கிவிடக் கூடாதல் லவா? அதனால்தான் ஒரு ராஜ தந்திரத்தைக் கையாண்டு, திடீரெனக் கொழும்புக்கு விரைந்தேன். நார்த் துரையுடன் பண்டாரக வன்னினுக்கு நட்பு ஒரு துளியும் ஏற்படாமல் எப்படித் தடுக்க வேண்டுமோ அந்தச் செயலைச் செவ்வனே செய்து முடித்தேன்!"

பிலிமதளாவையின் பேச்சை மன்னன் நம்பவில்லையாயினும், அரசன் - அமைச்சர் என்ற உறவின் காரணமாக சம்பிரதாயத் துக்காக அவர் பக்கம் செவியைத் திருப்பிக் கொண்டிருந்தான்.

"அமைச்சரே! என் நண்பன் பண்டாரகனுக்கும் நார்த் பிரபுவுக்கும் எந்தவொரு உடன்பாடும் ஏற்படாமல் தடுத்திடத் தாங்கள் கையாண்ட உபாயம் தான் என்னவோ?"

"அப்படிக் கேளுங்கள்! இந்தக் கேள்வி எனக்குச் செந்தேனாக இனிக்கிறது! இதை விடுத்து, பண்டாரக வன்னியன் மீதுள்ள எல்லையில்லாத பாசத்தால் அவனது உறவினால் ஏற்படும் தொல்லைகளை வெற்றிலை பாக்கு வைத்து அழைத்திடல் ஆகாதல்லவா?"

"அறிவுரை இருக்கட்டும்! கொழும்பில் நீங்கள் ஆற்றிய சாதனையின் சாராம்சம் என்ன? அதைச் சொல்லுங்கள்! சுருக்கமாக!"

"சொல்லுகிறேன்! சுருக்கமாகவே சொல்லுகிறேன்! இராமாயணத்தையே இரண்டு மூன்று வாக்கியத்தில் சுருக்கிச் சொல்வதில்லையா! இராமன் மனைவியை இராவணன் தூக்கிப் போனான். அனுமான் கண்டு பிடித்தான். அடித்தார்கள் பிடித்தார்கள். அவளை அழைத்துக் கொண்டு வந்துவிட்டார்கள்

என்று இன்றைக்கும் தமிழ் நாட்டு கிராமங்களில் வேடிக்கை யாகச் சுருக்கிச் சொல்லுவார்கள். அது போலவே சுருக்கிச் சொல்கிறேன்."

"சுருக்கிச் சொல்லவே இவ்வளவு சுற்றி வளைப்பதா?"

"மன்னிக்கவும் மன்னா! வேறொன்றுமில்லை! நான் கொழும்பில் நார்த் பிரபுவிடம் சொன்னது இதுதான்! கண்டி அரசு, ஆங்கிலேயர் அதிகாரத்தையும் அதன் காரணமாக நல்லுறவையும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறது! எனவே எங்களைத் துணையாகக் கொண்டு பண்டாரக வன்னியனை அடக்கி ஒடுக்குங்கள் என்று..."

பிலிமதளாவை சொல்லி வாய்மூடவில்லை. விக்கிரம ராஜ சிங்கன் வெகுண்டெழுந்து,

"என்ன? என்ன? ஆங்கிலேயர் அதிகாரத்திற்கு அடி பணிவதா? அதற்குப் பெயர் நல்லுறவா? அமைச்சர் அவர்களே! யாரைக் கேட்டுக் கொண்டு, அந்த நார்த் துரையிடம் இதனைக் கூறினீர்கள்-"

"அரசே! அவசரப்படாதீர்கள்! நெருப்பு என்று சொன்னால் வாய் வெந்து விடாது! தற்போதைக்கு, நார்த் பிரபுவுக்கும் பண்டாரக வன்னியனுக்கும் தோழமை ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக கொழும்பில் இப்படியொரு பொய்யைச் சொன்னேன் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்"

"பிலிமதளாவை அவர்களே! நான் உங்களை மதிக்கிறேன். ஆனால் உங்கள் செயல்கள் என் உள்ளத்தை மிகவும் பாதித் துள்ளன. மேலும் பாதிக்கிற காரியங்களைச் செய்யாதீர்கள். விளையாட்டுக்காகக் கூட நமக்கும் வெள்ளையருக்கும் உறவு ஏற்படக் கூடுமென்று சொல்வது அவமானம்! வெட்கக்கேடு! இந்த மண்ணுக்கு மாசு தேடும் பணி!"

"அரசே! நீங்கள் என்ன சொன்னாலும், எவ்வளவு கண்டித்தாலும் - நான் கொழும்பில் கையாண்ட தந்திரத்தை, இன்று நீங்கள் ஏற்றுக் கொள்ளாவிடினும், எதிர்காலத்தில் நினைத்துப் பார்த்து, என்னைப் பாராட்டத்தான் போகிறீர்கள்!"

"இருப்பது ஒரு உயிர்! அது போகப் போவது ஒருமுறை! அந்த உயிர், மானத்தோடு போக வேண்டுமெனக் கருதுகிறவன்

நான்! எனவே ஆங்கிலேயர்களுக்கு அடிமையாக இருக்க ஒரு போதும் சம்மதிக்க மாட்டேன்! அவர்களுக்கு அடிமையாக இருந்து, இந்தப் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதைவிட - எதிர்த்து நின்று இன்றைக்கே அழிவதுதான் வீரர்களின் மாண்பு! அதுவே என் மனத்தில் இருப்பதும்!"

இருவரது பேச்சிலும் சிறிது கடுமை தலை காட்டத் தொடங்கிய சமயத்தில் இருபுறமும் பெண்கள் மலர்களைத் தூவிட - ரத்தினக் கம்பள விரிப்பில், தனது பட்டுப் பாதங்களைப் படவிட்டு - பியசீலி, விழாக் கூடத்துக்குள் நுழைந்தாள். பிறந்த நாளுக்காக அவள் செய்து கொண்டிருந்த அலங்காரம் - அவளை மனதால் அடியோடு வெறுக்கும் மன்னவனையே மயக்கத்தில் ஆழ்த்தியது.

முழுமையாக இரு புஜங்களும் தெரியவும் - மார்பகம், மேலும் எடுப்பாக அமையவும் - உடையென்ற பெயரால் மிக மெல்லிய சல்லாத்துணி அணிந்து, இடை நெளியுதோ? அன்றி ஒடியுதோ? என்று ஐயுறும் நிலையில் பாதாதி கேசம் வரையில் நவரத்தினங்கள் மின்னிட வந்தவள், தன் விழிகளை அம்புகளாக்கி விக்கிரம ராஜ சிங்கனை வீழ்த்துவது போல நெருங்கிவந்து அவன் முன்னால்கைகளை நீட்டினாள். அவனும் அவளது கரங்களைப் பற்றிக் கொண்டு பின் பிறந்த நாள் வாழ்த்துக் கூறினான்.

அவளோ, அவனது கரங்களை விடாமல் எடுத்துத் தன் கண்களில் ஒன்றிக் கொண்டு - முத்தமீந்தாள்!

இசை நிகழ்ச்சி - நடன நிகழ்ச்சியென பல்வேறு கலை நிகழ்ச்சிகள் அந்த விழா மண்டபத்தில்!

அப்போது அவள் விழிகள், யாரையோ தேடிக் கொண் டிருந்தன! மகளைப் போலவே தந்தை பிலிமதளாவையின் முட்டைக் கண்களும் அலைந்து கொண்டிருந்தன. அந்த மண்டபத்தில்!

பியசீலி எதிர்பார்த்தவாறு விஜயதுங்கா, பூங்கொத்துடன் அங்கு நுழைந்தான். அவனுக்கு முன்பே பலர் அவளுக்கு பரிசுப் பொருள் களை வழங்கிக் கொண்டிருந்தனர். சற்று தொலைவில், மன்னன் நின்று கொண்டு அவளையே கூர்ந்து நோக்கிக்

கொண்டிருந்தான். ஒரு புறம் பிலிமதளாவையின் கொழும்புப் பயணம் பற்றிய குழப்பம்! மறுபுறமோ, அந்தக் குழப்பத்தை வெல்லுகிற அளவுக்கு மாயா மோகினியாக பியசீலி நின்று கொண்டு அவனை அடிமையாக்கும் காட்சி!

விஜயதுங்காவைக் கண்டதும், பியசீலியின் முகம் மலர்ந்தது! மலர்ந்த முகம் உடனே விகாரமடைந்தது! தனது தந்தையைப் பார்த்தாள்! அவரும் மகளையே பார்த்துக் கொண்டிருந்தார்!

விஜயதுங்கா, பூங்கொத்தினை பியசீலியின் கையில் கொடுத்தான். ஆனால் அவளிடம் உறுதியளித்தபடி அந்த இடத்தில் அவளை அணைத்து முத்தமிட அவன் தயாராக வரவில்லை. பயந்து விட்டான். ஆனால் அவள் விடுவதாக இல்லை. பூங்கொத்தை வாங்கும்போதே, அவன் கையில் தன் விரல்களால் மெதுவாகத் தடவினாள். அதில் இன்ப போதை ஏறிவிட்டது அவனுக்கு. தன்னை மறந்தான். பியசீலியைத் தழுவிக் கொண்டான். முத்தமிட்டான்.

பியசீலி, ஆ! அய்யோ! இது என்ன அநியாயம்? என்று பேய்க் கூச்சல் போட்டாள்!

அவளை முத்தமிட்டுக் கொண்டிருந்த விஜயதுங்காவின் தலை வெட்டுண்டு கீழே உருண்டது! அந்தத் தலையை வெட்டி விழ்த்திய வாள் விக்கிரம ராஜசிங்கன் கையிலே இருந்தது! அந்த வாளிலிருந்து ரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது! பியசீலி, தன் தந்தையைப் பார்த்து புன்னகை புரிந்தாள்! தனது எதிரியை மன்னன் கையாலேயே தீர்த்துக் கட்டிவிட்ட திருப்தியில் "மகளே! உன் சமர்த்து!" என்பது போல பிலிமதளாவை, பியசீலியைப் பார்த்து கண் சிமிட்டினார்.

நிதானமான கையெழுத்து!

32

"என் பிறந்த நாளில் தங்கள் பொற் கரத்தில் ரத்தக்கறை படிந்து விட்டதே அரசே!" என்று மன்னனின் கரங்களை எடுத்துத் தன் மார்பகத்தில் பதிய வைத்துக்கொண்டே கலங்கிக் குலுங்கினாள் அந்த மாயாதேவி பியசீலி!

பிலிமதளாவைக்குப் பேரானந்தம்! தனக்கொரு எதிரி தோன்றினான். அவனைத் தன் மகளைக் கொண்டே சிக்க வைத்து பழிபாவத்தை விக்கிரம ராஜ சிங்கன் மீதே போட்டுவிட்ட, தனது அபார மூளையின் ஆற்றலை அவரே மனத்திற்குள் புகழ்ந்து கொண்டார். தனக்கு நேராகத் தன் மகளை, மன்னன் இழித்தும் பழித்தும் பேசியது - தன்னையே மிகத் தரக் குறைவாக நடத்தியது - இதற்கெல்லாம் சிரித்துக் கொண்டே அவனைப் பழிவாங்க வேண்டுமென்பது பிலிமதளாவையின் திட்டம். அந்தத் திட்டத்தில் ஒரு கட்டம்தான் நிறைவேறியிருக்கிறது. இன்னும் பல கட்டங்களை வெற்றி கரமாகக் கடக்க வேண்டும். பெரும்பகை நெஞ்சுக்குள் பாம்பாக நெளிந்து கொண்டிருப்பினும் புன்னகையை ஆயுதமாக ஏந்தி, மன்னனைப் பார்த்து, பிலிமதளாவை மிக்க உருக்கத்துடன் சொன்னார்.

"அரசே! இந்த அற்பப் பதர் அவனுக்குரிய தண்டனையைத் தங்கள் கையால் பெற்றதற்கு எனக்கு அளவிட முடியாத மகிழ்ச்சி. ஒரு உண்மையை இன்றைக்கு நான் புரிந்து கொண்டேன். என்ன தான் என் மகள் மீது கோபமிருந்தாலும், அவள் கற்புக்கு கடுகளவு சேதம் ஏற்படுவதைக் கூடத் தங்களால் தாங்கிக் கொள்ள முடியாது என்பதைப் புரிந்து கொண்டேன்! அடடா!

என் மகளின் மானங் காத்திட தாங்கள் சீறி எழுந்து இந்த நன்றி கெட்ட நாயின் தலையை நறுக்கிப் போட்ட காட்சியிருக்கிறதே, அது கண் கொள்ளாக் காட்சி! கண்டியின் வீரத்துக்கும் மான உணர்வுக்கும் அதுவே சாட்சி! இந்தக் காமாந்தகாரக் கழுகின் உடலைஅப்புறப் படுத்தும் வேலையை என்னிடம் விட்டுவிட்டு தாங்களும் பியசீலியும் அந்தப்புரம் செல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன். நெடுநாள் தங்களைப் பிரிந்து, தனிமையில் அடைபட்டுக் கிடந்த மகளின் இளம் உள்ளம், பிறந்த நாளும் அதுவுமாகத் தங்களுடன் மகிழ்ச்சியாக இருக்கத் துடித்துக் கொண்டிருக்குமல்லவா? நடந்தவைகளை மறந்து, பியசீலிக்கும் பிறந்த நாள் பரிசினை வழங்குங்கள்!"

தந்தையார், மன்னனுடன் பேசிக் கொண்டிருக்கும்போதே- பியசீலி, மன்னனின் கையை இழுத்துத் தன் தோளில் போட்டுக் கொண்டு, அவனையும் தன்னோடு நகர்த்தி அழைத்தவாறு நடக்கலானாள். அப்போது அவளது விஷமக் கண்கள், பிலிமதளாவையின் விஷமக் கண்களோடு ஏதோ ரகசியம் பேசின. இருவரும் அந்த இடத்தை விட்டு அந்தப்புரம் நோக்கிச் செல்வதை அவர் இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார். அவரது அடுத்த கட்டத் திட்டம் நிறைவேறியாக வேண்டுமே - அதற்காக!

விஜயதுங்காவை வெட்டி வீழ்த்திய உணர்வோடு தன்னை மறந்தவனாக விக்ரமராஜசிங்கன், பியசீலி இழுத்த இழுப்புக்குச் சென்று அவளது அந்தப்புர அறையை அடைந்தான்.

"என்ன நெற்றியெல்லாம் முத்து முத்தாக வியர்க்கிறது! அந்த வெறியன் விஜயதுங்காவின் மீது கொண்ட சினம் இன்னமும் தீர வில்லையா?" என்று கேட்டுக் கொண்டே, அவன் நெற்றியைத் துடைத்துவிட்டு — மெல்லியதாக ஒரு முத்தமும் அவன் நெற்றியில் கொடுத்தாள்.

அவள் கைகள், அவன் கழுத்திலும் படர்ந்து தடவிப் பார்த்தன.

"என்ன இது? உடல் முழுதும் கடலாக வியர்வை! சரி! சரி! இந்தக் கனத்த உடையைக் கழற்றுங்கள்!" என்று கூறிக்கொண்டே

– அவன் பதிலை எதிர்பாராமல் அவனது உடைகளைக் களையத் தொடங்கினாள் அந்தக் கைகாரி! அப்போது அவளது உணர்ச்சி மயமான அங்கங்கள் அவன் உடலில் உரசி, உரசி அவனை அந்தத் கொலையிலிருந்து மீட்டுக் கொண்டு அந்தப்புரத்துக்கு வந்தன!

"பியசீலி! என்ன இது?" என்றான் அவன்!

"பிறந்த நாள் அல்லவா?" அந்த ஜாலக்காரி கண் சிமிட்டினாள்!

"அதற்காக நான் பிறந்த மேனியாக இருக்க வேண்டுமா?" மன்னன் சிரித்துக் கொண்டே கேட்டான்!

"ஓ! எனக்கல்லவா பிறந்த நாள்?" என்றாள் அந்த சரசக்காரி! மயக்கத்தில் மறந்து விட்டாயா?"

"சரியான ஆள்தான் நீங்கள்! இன்னும் மது தரவில்லை என்பதைக் குத்திக் காட்டுகிறீர்கள்!"

மன்னன், அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். எரிந்து கொண்டிருந்த விளக்கின் ஒளியைச் சிறிதாக்கினாள்.

"நியாயப்படி என் பிறந்த நாளில் நான்தானே தங்களைப் போல இருக்க வேண்டும்!" என்று மோகராகம் பாடிக்கொண்டே, அவனைப் போல் அவளும் ஆனாள்!

மணி மகுடம், மாளிகை, ரத கஜ துரக பதாதிகள், ஆணையிட்டால் ஓடிவர ஆயிரம் ஆட்கள், அணிவகுத்துக் கப்பம் கட்டும் சிற்றரசர்கள், அனைத்தையும் துறந்து ஒரு லட்சியத்திற்காக முனிவராகித் தவம் புரிந்த விசுவாமுத்திரரையே நிலைகுலையச் செய்ததல்லவா ஆடலரசி மேனகையின் மேனியழகு!

அதைப்போல் ஒரு அழகு, இங்கே பெண்ணுருக்கொண்டு அலையென எழும்பியும் தாழ்ந்தும் – காமக்கலையெல்லாம் கற்று கண்ணுக்கு விருந்தாக எதிரே தவழ்ந்தும் மதுக் கிண்ணத்தை யெடுத்து மலர்க்கரத்தால் மடியில் சாய்ந்தவாறு அவன் வாயில் தந்தும் அவனைக் கொள்ளைப் பொருளாக்கும்போது, பாவம் அந்த ஆண்மகன் என்ன செய்வான்! அதிலும் சற்றே இந்தவிவகாரத்தில் சஞ்சலபுத்தி படைத்தவன்! அதனால் உடும்பாகப் பற்றிக் கொண்டு உடம்பெல்லாம் கொதிப்பேறக்

கிடந்தான்! சரியான சமயம்என்று அந்த சாகசக்சக்கரவர்த்தினி, கிண்ணத்தால் மது தருவதைத் தவிர்த்து, தன் வாயில் ஊற்றிய மதுவை அவன் வாயில் உறிஞ்சக் கொடுத்தாள். இரட்டிப்பு போதையால் கண்டி மன்னன், அந்தக் கட்டிற் களத்தில் சரணடைந்து புலம்பலானான்.

"மகாராஜா! என் மீது சந்ததேகப்பட்டீர்களே! நியாயந் தானா?"

"தப்பு தங்கம் தப்பு! நீ பத்தரை மாற்றுப் பசும்பொன்! ஏதோ அவசரத்தில் ஆத்திரத்தில் அப்படிப் பேசியிருப்பேன். அதை யெல்லாம் மறந்து விடு! அருகில் வா!"

அவன் அடிமையாகிறான் எனத் தெரிந்து கொண்டதும், அவனைத் தவிக்க விடுவதாகச் சற்று விலகிப்போய் கட்டிலைத் தாண்டி நின்று கொண்டாள்.

அப்போது மயங்கியிருந்த விளக்கின் ஒளி, அவள் உடல் மீது பரவியிருந்த அழகே அழகு!

ஓவியங்களின் உயர்வே, அதனையொட்டித் தீட்டப்படும் நிழல் வண்ணத்தில்தான் எடுப்பாக இருக்குமென்பர்! அப்படி அவளை அங்கம் அங்கமாகப்பற்றிக் கொண்ட மயங்கிய ஒளியால் விளைந்த நிழல் - அவனை அனல் பட்ட புழுவாகத் துடிக்க விட்டது!

படுக்கையிலிருந்து குதித்து, அவள் மீது தாவினான் மது மயக்கத்தில்! அவள் ஒதுங்கிக் கொள்வது போல விளையாடவே, தரையில் விழுந்தான். அவளும் அவனருகே விழுந்தாள். அந்தப் பளிங்குத் தரை இருவரும் உருளுவதற்கு ஏற்றதாக வழவழ என இருந்தது! தரையில் படுத்தவாறே, மதுக் கிண்ணத்தை எடுத்து ஒரு வாய் ஊற்றிக் கொண்டாள்! ஆனால் விழுங்க வில்லை! ஆம், அவனுக்குத் தருவதற்காக வாயில் கொப்பளித்துக் காட்டினாள்! அவன்தான் அதற்குத் தவம் கிடக்கிறானே! அனைத்தையும் மறந்து விட்ட உலகத்தில் தரையில் கொஞ்ச நேரம் கொஞ்சல்! அவனின் கெஞ்சல்!

"ஊஹூம்! அதெல்லாம் கட்டிலில்தான்!" அவளது தித்திப்பான கண்டிப்பு!

அவளைத் தூக்கிக் கட்டிலில் போட்டான்! அவனும் பக்கத்தில் படுத்துக் கொண்டான். ஆனால் அவள், புரண்டு வளைந்து எழுந்து போய் -விளக்கெரியும் இடத்தருகே சென்று எழுது கோலை எடுத்து ஏதோ எழுதினாள்.

"என்ன செய்கிறாய்?" என்று கேட்டுக் கொண்டே விக்ரம ராஜ சிங்கன் அவளருகே போய் அணைத்துக் கொண்டு பார்த்தான்!

"இல்லை கண்ணா! நிறையக் குடித்திருக்கிறேனே, நிதான மாகக் கையெழுத்துப் போட முடிகிறதா? என்று பார்க்கிறேன்" எனக் கூறிக் கொண்டே, அவள் பியசீலி என்று ஐந்தாறு கையெழுத்துக்களைப் போட்டு முடித்தாள்!

"இது என்ன பெரிய காரியம்! நான் கூடத்தான் என் கையெழுத்தை நிதானமாகப் போடுவேன்" என்றான் மன்னன்.

"முடியாது! உங்களால் முடியவே முடியாது! நீங்கள் என்னை விட அதிகம் குடித்திருக்கிறீர்கள்!" என்று, அவன் முதுகைக் கட்டிக் கொண்டு மோக போதை ஏற்றினாள்.

அந்தப் பதிலை அவன் அறைகூவலாக எடுத்துக் கொண்டான்.

"கொடு என்னிடம் எழுது கோலை! நான் போடுகிறேன் கோடி கையெழுத்து!" என்றான்.

"உங்களால் முடியாது! நீங்கள் இருக்கும் நிலையில் கையெழுத்து போட மாட்டீர்கள்! கிறுக்குவீர்கள்!" என்றாள் பியசீலி!

"அதையும் தான் பார்ப்போமே!" என்று எழுதுகோலை அவளிடமிருந்து பிடுங்கிக் கொண்டான்.

அப்போது பியசீலி, "கொஞ்சம் பொறுங்கள்!" என்று சொல்லிக் கொண்டே அங்கிருந்த பேழையைத் திறந்து, அவனுக்குத் தெரியாமல் ஒரு வெற்று மடலை எடுத்து அவனிடம் நீட்டினாள். அவன், தள்ளாடிக் கொண்டே அதை வாங்கி விளக்கருகே உள்ள மேடையில் வைத்துக் கொண்டு, "இதோ பார் என் கையெழுத்தை!" என்றவாறு எழுதுகோலைப் பிடித்தான்.

பியசீலி, வெற்றிப் புன்னகை கொடி கட்டிப் பறக்க – "இதோ! இந்த இடத்தில்! இந்த இடத்தில்!" என்று விரலால் சுட்டிக் காட்டினாள். அவன், கையெழுத்தைப் போட்டு விட்டு, "எப்படி? நிதானமாகப் போட்டிருக்கிறேனா?" எனக் கேட்டுக் கொண்டே, உதடுகளால் அவள் இதழ்களை அழுத்தினான்!

"உம்! கெட்டிக்காரர்தான்!" என்று அந்தக் கெட்டிக்கார மோகினி கொஞ்சிக் கொண்டே, அந்த மடலை மறைத்து விட்டாள், மயக்கத்தின் உச்சத்திற்குச் சென்று விட்ட மன்னன், அவளை வாரித் தழுவிக் கொண்டு –

"வாடி என் இன்பமே! வானுலக சஞ்சாரம் செய்வோம்!" என்று குலாவினான்! அவளுக்கும் தேவைப்பட்டது அவன் விருப்பத்துக்கெல்லாம் இடம் கொடுத்தாள்! அவன் விருப்பம் நிறைவேறிவிட்ட களிப்பு அவளுக்கு! நிறைவேறியதால் ஏற்பட்ட களைப்பு அவனுக்கு! இப்போது அவனுக்கு இன்னொருத்தி தேவைப்பட்டாள்! அவள்தான் நித்ராதேவி!

ஓப்பந்தப் பத்திரம்

33

நித்திரை கலைந்தெழுந்த சூரியன், இத்தரை முழுவதையும் பொன் மயமாக்கிய வாறு புறப்பட்டான் கடமையைச் செய்திட, எனக் கவிஞர்கள் கற்பனைச் சித்திரம் தீட்டிடுவர் எனினும் - சூரியனுக்கு ஓய்வேது! அவன் பூமியின் மறு பகுதிக்கு ஒளி வழங்கிட உழைத்து விட்டு உதயக் கதிர்களால் கண்டி மாளிகைக்கு எழில் கூட்டிவிட்டு வானின் மேலே உயர்ந்து கொண்டிருந்தான்.

விடிந்து நெடுநேரமாகியும் விக்ரம ராஜசிங்கனின் விழிகள் மூடியே கிடந்தன. சற்று சதைப் பிடிப்பான உடல் என்பதால் குறட்டைச் சப்தம் வேறு அந்த ஆடம்பர அறையிலிருந்து அசையும் பொருட்களையெல்லாம் அலைக்கழித்துக் கொண்டிருந்தது. அளவுக்கு மிஞ்சி குடித்திருந்ததால் ஆனந்தமாக தூக்கம்! காமக்களியாட்டத்தின் எல்லைக் கோடு தாண்டிச் சென்றதால் அவனுடல் அவனிடமில்லை என்பது போன்ற அயர்வு!

அந்தப்புரத்தின் கதவு படபடவெனத் தட்டப்பட்டது. அந்த ஒலி, அவனைத் திடுக்கிடவைத்து விழிப்பை ஏற்படுத்தவில்லை. மேலும் மேலும் பெரிய சப்தமுடன் கதவு தட்டப்பட்டது. மெதுவாகப் புரண்டு படுத்த மன்னன் முனகிக் கொண்டே, தன்னையறியாமல் எழுந்து உட்கார்ந்தான். அவன் எழுந்து போய் திறக்காமலேயே அறையின் கதவு திறந்து கொண்டது.

"பியசீலி! பியசீலி!" என்று கத்திக்கொண்டே பிலிமதளாவை உள்ளே மிக வேகமாக நுழைந்தார். ஆடையின்றி இருந்த அரசன், அவசர அவசரமாக அங்கு கிடந்த ஒரு பொன் னாடையை எடுத்து இடுப்பில் சுற்றிக்கொண்டு பரபரப்புடன் கவனித்தான்.

"பியசீலி! எங்கேயம்மா இருக்கிறாய்?"

பிலிமதளாவை கலக்கமடைந்தவராக அந்த அறைக்குள் வட்டமிட்டது கண்ட மன்னன், "என்ன? என்ன?" என்று பதைத்தான்.

"அறைக்குள் புகை வாசனை அடிக்கிறதே, தெரியவில்லையா? அய்யோ! என் பியசீலிக்கு என்ன ஆயிற்று?"

ஓரளவு தன் உணர்வுக்கு வந்தவனாக விக்ரம ராஜ சிங்கன், "அவளுக்கு ஒன்றும் ஆகவில்லை. இங்குதான் இருக்கிறாள். இரவு முழுதும் என்னுடன்தான் இருந்தாள். நடந்தவைகளையெல்லாம் மறந்து விட்டு நானும் அவளும் சந்தோஷமாக இரவைக் கழித்தோம். எனக்குமுன் எழுந்து குளியல் அறைக்குச் சென்றிருப்பாள்" என்று பிலிமதளாவையை சமாதானப்படுத்திக் கொண்டே குளியலறையை நோக்கிச் சென்றவன் - அந்த அறையின் கதவை மெதுவாகத் தள்ளிப் பார்த்தான். குளியலறைக் கதவு, உடனே திறந்து கொண்டது.

"பியசீலி! நீ சின்னக் குழந்தை! பாப்பா! உன்னைக் காணாமேயென்று உன் அப்பா தேடிக்கொண்டு வந்துவிட்டார். உன்னை நான் என்ன விழுங்கியா விடுவேன்?" என்று சிரித்துக் கொண்டே குளியலறைக்குள் நுழைந்த விக்ரம ராஜ சிங்கன் - நெருப்பை மிதித்தவன் போல "ஆ!" என்று அலறிவிட்டான்.

"என்ன? என்ன? என் பெண்ணுக்கு என்ன?" என்று கதறியவாறு பிலிமதளாவை அந்த அறைக்குள் எட்டிப் பார்த்தார்.

முகம், உடல் அங்கங்கள் எவையுமே அடையாளம் காண முடியாத அளவுக்கு ஒரு பெண்ணின் உருவம் கருகிப் போய், கரிக்கட்டையாக அந்தக் குளியலறைக்குள்ளே கிடந்தது.

"அடப்பாவி! என் பெண்ணைத் தீயில் கருக்கிக் கொன்று விட்டாயே!" என்று பிலிமதளாவை, விக்ரம ராஜ சிங்கனின் தோள்களைப் பிடித்து ஆவேசமாகக் குலுக்கினார். அரசனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

அன்றிரவு அறைக்குள்ளே அவனும் அவளும்தான் இருந்திருக்கிறார்கள். காலையிலே அவள் கருகி கிடக்கும் பிணம் என்றால், காரணம் அவனது செயல் என்றுதானே எவரும்

சொல்வார்கள். அந்தப் பழி தன்மீது விழுந்து விடுமோ என்ற பயத்தில் அரசன் ஆடிப்போய்விட்டான். பிலிமதளாவை தனக்கு அடங்கிப்போக வேண்டிய அமைச்சர் என்றாலும்கூட இப்போது நடந்துள்ள நிகழ்ச்சியினால் அவருக்கு அடங்கிப் போக வேண்டிய நிலையில் அரசன் இருந்தான்.

"மாமா! ஆண்டவன் சத்தியமாக நான் எதுவும் செய்ய வில்லை! இரவு நாங்கள் அனுபவித்த சந்தோஷம் - எனக்கு அவள் மீதிருந்த குறைகளை எல்லாம் பின்னுக்குத் தள்ளி விட்டதை என்னால் உணர முடிந்தது. ஒரு உண்மையை மட்டும் மறைக்கவில்லை. இருவரும் எல்லை மீறிக் குடித்தோம். அந்த மயக்கத்தில் குளியலறை மெழுகுவத்தியில் அவளது உடைபட்டு பற்றிக் கொண்டு இருந்திருக்க வேண்டும்."

"நான் வெட்கத்தை விட்டுக் கேட்கிறேன் - உடையில்லாத உடலில் எப்படி தீபிடித்தது?"

"என்ன மாமா இப்படிக் கேட்கிறீர்கள்? குளியலறைக்குச் செல்ல விடியற்காலையில் எழுந்தவள் உடைகளை உடம்பில் சுற்றிக் கொண்டு போயிருக்கலாம் அல்லவா? அதோ கட்டிலில் பாருங்கள் அவளது உடைகள் எதுவும் இல்லை!"

"இருக்கலாம்! நான் நம்புகிறேன்! உடுத்திக் கொண்டு, குளியலறைக்குச் சென்றவளைப் பின் தொடர்ந்து சென்று அவளைத் தீ மூட்டிக் கொன்றுவிட்டு - இப்போது திசை திருப்பப்படுகிறது என்ற உண்மையையும் நம்புகிறேன்!"

அரசன், கருகிக் கிடக்கும் பிணத்தின் அருகே அமர்ந்து "பியசீலி! என்ன காரியமடி செய்துவிட்டாய்? உன் மாம்பழ மேனியை இப்படி நெருப்பு கருக்கிடும்போது என்னை ஒரு வார்த்தை சத்தமிட்டு அழைத்திருக்கலாகாதா? உனக்காக உயிரைக்கூடக் கொடுக்க சம்மதம் என்று இரவு நான உரைத்ததை மறந்து விட்டாயா?" எனக் கூறிக் கண்ணீர் வடித்தான்.

"அடடா! நாடாளும் மன்னவர் நன்றாகத்தான் நாடகம் ஆடுகிறார். மோசடி செய்து என் பெண்ணை மயக்கி, மோசடி செய்து என் பெண்ணைக் கருக்கிய செய்தியை இந்த நாடறிந்தால் - அதைவிடக் களங்கம் - அவமானம் - கேவலம் -இழிவு வேறு எதுவும் இல்லை!"

பிலிமதளாவை கொந்தளித்துக் குதித்தார்.

"மாமா! சத்தியமாகச் சொல்கிறேன். பியசீலியை நான் கொல்லவே இல்லை. தற்செயலாக நடந்துவிட்ட விபத்து இது. ஆனால் எனக்கும் அவளுக்குமிருந்த பிணக்கைப் பயன்படுத்தி, அரண்மனையில் உள்ள சிப்பந்திகள் நான்தான் அவளைத் தீர்த்துக் கட்டிவிட்டதாகக் கதை கட்டக் கூடும். இந்த அவப் பெயரிலிருந்து என்னைக் காப்பாற்றும் பொறுப்பு மாமா என்ற முறையிலும், மதியூக அமைச்சர் என்ற முறையிலும் தங்களிடம் தான் இருக்கிறது."

"மாணிக்கம், வைரம், வைடூர்யம் என்று சொல்லக் கூடிய மாதரசியாம் என் மகளைப் பறி கொடுத்துவிட்டு நிற்கிறேன். அவளைக் கொன்றவன் வேறு யாருமல்ல! அவள் கணவன்! இந்த நாட்டின் காவலன்! அவப் பெயரிலிருந்து அந்தக் கொலைகாரனை நான் காப்பாற்ற வேண்டும்! மிக நன்றா யிருக்கிறது நியாயம்!"

மொட்டைத் தலையை உலுக்கிக் கொண்டு, பிலிமதளாவை பயங்கரமாகச் சிரித்தார். அந்தச் சிரிப்பினூடே அழுகையும் தலைநீட்டியது.

"மாமா! இப்போது இங்கே நாம் இருவர் மட்டுமே இருக்கிறோம். யாரும் வருவதற்குள் ஒரு முடிவுக்கு வருவோம். நீங்கள் என்ன கேட்டாலும் தருகிறேன். எனக்காக நீங்கள் பொய் சொல்லத் தேவையில்லை! பியசீலி, தீவிபத்துக்கு ஆளாகி மாண்டுவிட்டாள் என்ற உண்மையைச் சொன்னாலே போதும்! என்னை அவப்பெயரிலிருந்து காப்பாற்றுங்கள்! என்னை என் நாட்டு மக்கள் மிகவும் நேசிக்கிறார்கள்! அவர்கள் மனத்தில் என்னைப் பற்றிக் கடுகளவு தவறான கருத்தும் ஏற்படக் கூடாது என்பதே என் தவம்!"

"பாவம், உம்மைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது! பரவாயில்லை! என் மகளைக் கொன்ற உம்மை மன்னித்து விடுகிறேன். எதற்காகத் தெரியுமா? இந்த நாட்டுக்காக! உமது செயல் வெளிப்பட்டால் மக்களிடையே குழப்பம் ஏற்படும்! உம் மீது நம்பிக்கை குறையும்! நமது எதிரிகளுக்கு அது இடம்

கொடுத்துவிடும்! அதனால் உம்மை மன்னித்து விடுகிறேன்! என் மகள் தற்செயலாகத்தான் தீ விபத்தில் சிக்கினாள் என்று நெஞ்சறிந்த பொய்யைக் கூறுகிறேன்! அதற்குப் பிரதி உபகாரமாக நீர் என்ன செய்ய வேண்டும் தெரியுமா?"

"என்ன செய்ய வேண்டும்? எதுவானாலும் செய்கிறேன்!"

"கண்டி ராஜ்யத்தை ஆளுகிற பொறுப்பை என்னிடம் கொடுத்து விடச் சொல்லிக் கேட்பேன் என்று பயந்து விடாதீர்! தேவையில்லை! எனக்கு அப்படி ஒரு பேராசை எப்போதும் கிடையாது! நான் கேட்பது உமக்கும் இந்த நாட்டுக்கும் நன்மை செய்யக் கூடிய ஒன்றைத்தான்!"

"கேளுங்கள்! தயக்கமின்றி கேளுங்கள்!"

"கண்டியின் அதிகாரப்பூர்வமான மன்னராக மட்டுமே நீர் இருக்க வேண்டும். இந்த மாளிகை வாசமும் - மகிழ்ச்சியும், உல்லாசமும் - உமக்கு எப்போதும் சொந்தம்! ஆனால் உம்மை ஒரு பதுமையாக வைத்துக் கொண்டு, இந்த ராஜ்யத்தின் நிர்வாகம் அனைத்தையும் நானே நடத்துவேன்! நீர் பெயருக்குத் தான் மன்னர்! எல்லாமே நான்! ஏன்? எனக்காக அல்ல! இந்த நாட்டின் நல்வாழ்வுக்காக! இந்த நாட்டின் சுதந்திரத்திற்காக!"

"சரி! அப்படியே ஆகட்டும்!"

"ஆகட்டும் எனச் சொல்லி, பிறகு என்னை ஏமாற்றிவிட முடியாது! இப்போதே எழுதித்தர வேண்டும்!"

"என்னவென்று?"

"மந்திரியாக மட்டுமின்றி மன்னரின் நிர்வாகப் பொறுப்பு அனைத்தையும் கவனிக்கிறவராகவும் - ஆங்கிலேயர்களுடன் எழுகிற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பவராகவும் — பண்டாரக வன்னியனுடன் உறவு நீடிப்பதா வேண்டாமா என்பதை நிர்ணயிப்பவராகவும் இனிமேல் பிலிமதளாவை விளங்குவார் என்று எழுதிக் கையெழுத்திட்டு என்னிடம் தர வேண்டும்."

"அதைப் பிரகடனப்படுத்துவீர்களா?"

"பிரகடனப்படுத்த நான் என்ன முட்டாளா? அதனால்தான் அப்போதே சொன்னேன். திரைமறைவில் இருந்து திட்டம் தீட்டுவேன் என்று!"

"சரி! ஏற்றுக் கொள்கிறேன். எழுதிக் கொடுக்கிறேன். ஆனால் ஒன்று பண்டாரக வன்னியனின் நட்பும் உறவும் பட்டுப் போகாமல்..."

"பட்டுப் போக வேண்டும் என்று நான் சொல்லவில்லையே! அந்தப் பிரச்சினையை நான் கவனித்துக் கொள்வதாகத்தானே கூறுகிறேன்."

விக்ரம ராஜசிங்கன் மௌனமாக நின்றான். மௌனம், சம்மதத்திற்கு அறிகுறியாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

தலைநகர மக்களின் ஆழ்ந்த அனுதாபத்துடன் - சோகப் பெருமூச்சுடனும் - பியசீலியின் சவ ஊர்வலம் நடைபெற்று, இறுதிச் சடங்குகள் நிறைவேறின.

அதே நேரத்தில் கண்டி ராஜ்யத்தின் எல்லையைத் தாண்டி இரண்டு குதிரைகள் போய்க் கொண்டிருந்தன. ஒரு குதிரையில் ஒரு அழகான வாலிபன்! இளந்தாடியுடன்! தலைப்பாகையுடன்! அருகே மற்றொரு குதிரையில் ஒரு இளம்பெண்! கவர்ச்சிகரமாக! அந்த இளம்பெண், அந்த வாலிபனைப் பார்த்து - "பியசீலி! இது சரியான பாதைதானா?" என்று கேட்டாள்!

உடனே அந்த வாலிபன், அந்தப் பெண்ணைப் பார்த்து,

"ஏய் முட்டாள்! நான் இப்போது பியசீலி இல்லை! ஜெயசீலன்! உன்னுடைய ஊமைக் கணவன்! இதை மறந்து எங்காவது உளறி வைக்காதே!"

இருவரும் சிரித்தார்கள்! குதிரைகள் போய்க் கொண் டிருந்தன!

கடவுள் யார் பக்கம்!

34

ஜெயசீலனாக வேடந்தரித்துள்ள பியசீலியைப் பார்த்து அந்தப் பெண் "ஆமாம்! இன்னும் எவ்வளவு தூரம் போக வேண்டும்?" என்று கேட்டுக் கொண்டே குதிரையைத் தட்டி விட்டாள். "மர்த்தனீ! எவ்வளவு தூரம் போகிறோம்என்பதைவிடஎங்கேபோகிறோம் என்பதுதான் முக்கியம்! அதைவிட முக்கியம் எதற்காகப் போகிறோம் என்பது! அதனால் அயராமல் என்னோடு வந்து கொண்டேயிரு!"

"அதுதான் வந்து கொண்டிருக்கிறேனே - இனியும் வரப் போகிறேனே!"

"வந்தால் மட்டும் போதாது! நாம் இருவரும் கணவன் மனைவியாக வேறு வாழ வேண்டும்! அதை மறந்து விடாதே!"

"மறக்கவில்லை பியசீலி! இருந்தாலும் எனக்குள்ள பயமெல்லாம்- என்றைக்காவது ஒரு நாள் நமது வேடம் கலைந்து விட்டால்?"

"நமது என்று உன்னையும் சேர்த்து ஏன் சொல்லுகிறாய்? இந்த ஜெயசீலன் வேடம் கலைந்துவிட்டால் என்று கேள்! அஞ்சாதே! அப்படியெல்லாம் ஏமாறக் கூடியவள் அல்ல உன் தோழி! ஏமாறக்கூடியவளாக இருந்தால் கண்டி மன்னனின் காதிலேயே பூ சுற்றி விட்டு வருவாளா?"

"அதில் உன் புத்திசாலித்தனம் கால் பங்குதான்! முக்கால் பங்கு உன் அப்பா பிலிமதளாவையைத்தான் சாரும்! பாவம் அந்த பாமினி!"

"அடியே மர்த்தனீ! உனக்கு ஒன்று தெரியுமா? நானும் என் தந்தையும் அந்த அபாரமான சூழ்ச்சித் திட்டத்தை வகுக்கும்

போது அந்த நேரம் பாமினிக்குப் பதில் நீ வந்திருந்தால் - தீயில் கருகிய பியசீலியாக நீ ஆகியிருப்பாய்! நல்லவேளை உன் ஆயுள் கெட்டி நீ தப்பித்துக் கொண்டாய்!"

"மாளிகை வாசிகளுக்கு இருதயம் என்ற ஒன்று இல்லையென்று கேள்விப் பட்டிருக்கிறேன். உன்னையும் உன் தந்தையையும் பார்த்த பிறகுதான் அது உண்மை என்ற முடிவுக்கே வந்தேன்! உம்! என் உயிருக்கு என்றைக்குக் கெடு வைத்திருக்கிறீர்களோ?"

"பைத்தியக்காரி! பயப்படாதே! நாங்கள் நினைத்தபடி தான் கண்டி மாளிகையில் காரியம் நடந்து விட்டதே! இனிமேல் உனக்கு எந்த ஆபத்தும் ஏற்படப் போவதில்லை! அதற்கு உத்திரவாதம் நான் தருகிறேன்!"

"பியசீலி! என் பாட்டி காலத்திலிருந்து கண்டி அரண்மனையில் சேவகம் புரிகிற குடும்பம் என் குடும்பம். அப்படியே நீங்கள் விரும்பினால் ராஜவிசுவாசத்துடன் என் உயிரையும் உன் நன்மைக் காகத் தருவதற்கு நான் தயார்!"

"ராஜவிசுவாசம் என்று உளறாதே! ராஜனுக்கு எதிராகத்தான் இப்போது நாம் போராடுகிறோம். நான் அந்த ராஜனின் மனைவியாக இருக்கலாம். ஆனால் அவன் என் சுதந்திரத்தில் தலையிடுவது மட்டுமல்ல, கண்டியின் சுதந்திரத்தையே பண்டாரக வன்னியனின் நட்பினால் பறிகொடுத்து விடுவான் போலிருக்கிறது! அதனால்தான் இவ்வளவு திட்டங்கள் தீட்டி நானும் என் தந்தையும் நமது அன்னை பூமியைக் காத்திடப் பாடுபடுகிறோம்."

"பியசீலி! நீ மாண்டுவிட்டதாக கண்டி மன்னன் நம்புவதால் என்ன ஆதாயம்?"

"அன்று காலையில் நான் உயிரோடு அவனருகே படுத்திருந்தால் மீண்டும் என்னைக் காவலில் வைத்திருப்பான். என் பிறந்த நாளை முன்னிட்டுத்தானே ஒருநாள் சுதந்திரம் கொடுத்தான்! அதுவும் அவனோடு மட்டும் இருக்கிற சுதந்திரம்!"

"அதற்குள்தான் நீ விஜயதுங்கனுடன் விளையாடி விட்டாயே!"

"அதை நினைத்தால் இப்போது கூட என் உடல் புல்லரிக்கிறதடி! அந்த விஜயதுங்கன் என் தந்தையை எதிர்க்கிறான்

என்பதற்காக அவனைத் தீர்த்துக் கட்ட முடிவு செய்தோம்! அவனை என் தந்தை கொன்றால் அரண்மனை சிப்பந்திகள் அனைவரும் என் தந்தைக்கு எதிராகக் கிளம்புவார்கள் என்று பயந்து தான் அரசன் கையாலேயே அந்தக் காரியத்தை முடிக்குமாறு செய்தோம்!"

"அவனும் அறிவில்லாதவன்! அறிவு இருந்தால் அத்தனை பேர் மத்தியிலே உன்னை முத்தமிடுவானா?"

"அவனா முத்தமிட்டான்? அவனை அப்படிச் செய்யுமாறு என் கண்கள் கட்டளையிட்டன! காளையல்லவா? அதனால் தலைக்கு மேலே வரும் வாளை எதிர்பார்க்கவில்லை! வாரியணைத்து விட்டான் என்னை! இருந்தாலும் மர்த்தனீ, அவன் தலை துண்டிக்கப்பட்டபோது நான் துடித்து விட்டேன்! ஏன் தெரியுமா? அவன் அன்று எனக்கு அளித்த இன்பம் அவ்வளவு விசேஷமானது! இன்னொரு நாள் அவனைச் சந்தித்து விட்டு, அதற்குப் பிறகு தந்தையின் இஷ்டப்படி காரியத்தை முடிப்பதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய் விட்டதடி! அவன் தந்த அந்த இன்பத்தை நினைத்தால் இப்போது கூட எனக்கு ஒரு மாதிரி கிளுகிளுப்பு வருகிறது மர்த்தனீ!"

பியசீலி, பேசிக் கொண்டே தனது தோழி மர்த்தனியின் முகத்தில் தோன்றிய ஒரு பொருள் பொதித்த புன்னகையைக் கவனித்து விட்டாள்.

"என்னடி, ஒரு மாதிரி புன்னகை சிந்துகிறாய்?"

"ஒன்றுமில்லை பியசீலி! அரண்மனை ரகசியங்களை நினைத்துப் பார்த்தேன். என்னை அறியாமல் வந்த சிரிப்பை, புன்னகையாக மாற்றிக் கொண்டேன் அவ்வளவு தான்!"

"என் சுயநலத்துக்காகவோ என் தந்தை பிலிமதளாவையின் சுயநலத்துக்காகவோ எந்த ரகசியத் திட்டமும் போடவில்லையடி! எல்லாம் நமது நாட்டின் எதிர்காலத்திற்காகத்தான்! கொஞ்சம் யோசித்துப் பார்! ஆங்கிலேயர்கள் பெரும் படை பலத்துடன் இலங்கையின் பல பகுதிகளைத் தங்கள் வசம் ஆக்கிவிட்டனர். மிச்சமிருப்பது கண்டி ராஜ்யம் ஒன்றுதான்! மற்றொன்று முல்லைத் தீவுப் பகுதி! முல்லைத் தீவு அப்படியொன்றும்

பெரிய ராஜ்ய மில்லை! ஆனால் அதனை ஆளுகின்ற பண்டாரக வன்னியன் பலம் பொருந்தியவன்! அவனோடு நமது ராஜ்யத்துக்கு நட்பு இருப்பதால் தானே ஆங்கிலேயர் நம்மைப் பகையாகக் கருதுகிறார்கள். அந்த நட்பை அறுக்க வேண்டுமென்று நானும் சொல்லிப் பார்த்துவிட்டேன். தந்தை பிலிமதளாவையும் சொல்லிப் பார்த்துவிட்டார். பண்டாரக வன்னியனை விக்ரம ராஜ சிங்கன் மலை போல நம்புகிறான். அந்த நம்பிக்கையைத் தகர்க்க நானும் தந்தையும்நடத்திய ராஜ தந்திர நடவடிக்கைகள் கண்டி ராஜனிடத்தில் எடுபடாமல் போய்விட்டன. இருந்தாலும் அந்த முயற்சியைக் கைவிடக் கூடாதென்றுதான் இத்தனை கஷ்டமும் எங்களுக்கு?"

"பண்டாரக வன்னியனுக்கும் நமது மன்னருக்கும் பகை ஏற்பட்டு விட்டால் - ஆங்கிலேயர்கள் இடையில் புகுந்து இரு வரையும் சுலபமாக வென்றுவிட மாட்டார்களா?"

"முல்லைத் தீவு பற்றியோ பண்டாரக வன்னியனைப்பற்றியோ நமக்கென்ன கவலை? நமது கவலையெல்லாம் கண்டி ராஜ்யத்து மக்களைக் காப்பாற்றுவதுதானே!"

"அது எப்படி பியசீலி?"

"உனக்கு திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டுமா? நாம் மேற் கொண்டுள்ள இந்தப் பயணத்தின் மூலம் கிடைக்கிற வெற்றியினால் பண்டாரக வன்னியனுக்கும் கண்டி ராஜனுக்கும் பகை மூண்டு விடும்! கண்டியின் துணையுடன் ஆங்கிலேயப்படை பண்டாரகனை வீழ்த்தி - முல்லைத் தீவைக் கண்டியிடம் ஒப்படைத்து விடும். செத்துப் போன நான் திடீரெனத் தோன்றி முல்லைத் தீவின் அரசியாக முடிசூட்டிக் கொள்வேன்."

"முடிகிற காரியமா?"

"நார்த் பிரபு கொழும்பில் இருக்கும் போது ஏன் முடியாது? ஒருநாள் இரவு அவரும் நானும் சந்தித்தால் போதாதா? பண்டாரக வன்னியன் இல்லாத முல்லைத் தீவுக்கு நான்தான் ராணி!"

"நீ உயிருடன் இருப்பது தெரிந்ததும் - உன்னுடைய சூழ்ச்சி களைப் புரிந்து கொண்டு கண்டி மன்னர் விக்ரம ராஜ சிங்கர் சும்மா இருப்பாரா?"

"முட்டாளே! அவர் அப்போது இருக்கவே மாட்டாரடி கண்டி ராஜ்யத்தின் நன்மைக்காக, கண்டி மக்களின் நன்மைக்காக, என் தந்தை பிலிமதளாவை கண்டியைப் பரிபாலிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வார்!"

"அடியம்மா, இவ்வளவு திட்டங்களும்..." என்று வியப்புடன் கூறி மர்த்தனி, தனது முகவாய்க் கட்டையில் ஒரு கையை வைத்த போது - வானம் திடீரென பயங்கரமாக உறுமிற்று! இருள் கப்பிக் கொண்டது! மின்னல்கள் தெறித்தன! கண்ணைப் பறித்தன! படபட வென அடித்து உதிரும் புளியம் பழங்களைப் போல மழைத் துளிகள் விழத் தொடங்கின! பெருமழை! மிகப் பெருங்காற்று! காதுகளைப் பிளக்கும் இடி முழக்கம்!

பியசீலி, மர்த்தனி இருவரின் குதிரைகளும் நகர முடியாமல் தினறின! இருவர் பார்வையும் ஏக காலத்தில் அங்கிருந்த ஒரு மண்டபத்தில் பாய்ந்திடவே குதிரைகளை வேகமாகச் செலுத்தி மண்டபத்திற்குள் நுழைந்தனர்.

பாழடைந்த மண்டபம், அதன் மூலையில் ஒரு பகுதி மட்டும் இருவரும் உட்காருவதற்குச் சிறிது ஏற்றதாக தெரிந்தது. குதிரைகளை மண்டபத்தின் தூண்களில் கட்டிவிட்டு, குளிர் தாங்கமுடியாத நிலையில், பியசீலியும், மர்த்தனியும் உடல் நடுங்கிட அந்த மூலையில் போய் ஒடுங்கி உட்கார்ந்து கொண்டனர்.

மழையும் புயலும் நிற்பதாக இல்லை. இடியொலியில் அந்த மண்டபம் அதிர்ந்து அவர்களைப் பயமுறுத்திக் கொண்டிருந்தது.

"ஜெயசீலன் வேடம் மழையில் கலைந்துவிடப் போகிறது ஜாக்கிரதை!" என்றாள், மர்த்தனி!

தாடி, மீசை, தலைப்பாகைகளைச் சரி செய்து கொண்டு பியசீலி, அய்யோ! குளிர் தாங்க முடியவில்லையே! என்று வெட வெடவென நடுங்கினாள்.

"ஒரு ஆண்பிள்ளை இப்படி குளிரில்?" எனக் கேலி பேசிக் கொண்டே மர்த்தனியும் குளிரின் கொடுமையினால் தனது முழங்கால்களைக் கட்டிக் கொண்டு சமாளித்துப் பார்த்தாள்.

இயற்கையின் சீற்றம் எல்லை மீறியது! மண்டபத்தின் உட்புறத்தில் மழைத் தண்ணீர் புகுந்தது! அவர்கள் இருவரும்

இருந்த பகுதி தவிர மற்ற பகுதி அனைத்தும் இடிபாடுகளால் ஏற்பட்ட சீரழிவினால் பள்ளங்களாகத் தாழ்ந்து குளத்தைப் போல் காட்சியளித்தன. சற்றே மேடான ஒரு மூலையில் இரு வரும் ஒடுங்கிக் கிடந்தனர்.

"இந்த இடிமழையில் மண்டபம் நொறுங்கி நமது தலையில் விழுந்தால் நீயும் உன் தந்தையும் போட்ட திட்டங்கள் எல்லாம் என்ன ஆவது?" என்று குளிரில் நடுங்கிக் கொண்டே கேட்டாள் மர்த்தினி!

"இப்போது அதையெல்லாம் சொல்லி என்னைக் கொல்லாதே!" என்றாள் பியசீலி!

பியசீலி, குளிரால் மிகவும் அவதிப்படுவதைக் கண்ட மர்த்தனி, அவளை இறுக அணைத்துக் கொண்டு " இப்போது கொஞ்சம் குளிர் குறைவாக இருக்கிறதா?" என்று கேட்டாள்.

"உன் உடம்பு ஆண்கள் உடம்பைப் போல சூடாக இருக்கிற தடி! நன்றாக அணைத்துக் கொள்!" என்றாள் பியசீலி!.

அந்தக் கதகதப்பில் குளிரின் வேகத்தை ஓரளவு இருவரும் தாக்குபிடித்தார்கள்.

விடியுமட்டும் மழையும் புயலும் ஓயவில்லை. புயலும் மௌனமாகவில்லை. பொழுது புலர்வதற்கும் அமைதி ஏற்படு வதற்கும் சரியாக இருந்தது.

தங்களையறியாமல் கண் அயர்ந்திருந்த இருவரும் குதிரை களின் கனைப்புச் சப்தம் கேட்டு, திடுக்கிட்டெழுந்து பொழுது விடிந்து விட்டதை உணர்ந்தனர்.

இருவருக்கும் ஒரு நீண்ட பெரு மூச்சு! ஒருவரையொருவர் நேரடியாகப் பார்க்காமல் கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டு புன்சிரிப்பைத் தவழ விட்டனர்.

"இந்த இடிமழையே நம்மை ஒன்றும் செய்யவில்லை. கடவுள் நம் பக்கம்தான் இருக்கிறார் என்பதற்கு இதைவிட சாட்சி தேவையில்லை " எனக் கூறிக்கொண்டே பியசீலி, தனது குதிரையில் ஏறினாள்.

"கடவுள் பல நேரங்களில் தீயவர்கள் பக்கம்தான் இருப்பார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்" என்று சிரித்துக் கொண்டே

பதில் அளித்த மர்த்தனியும் தனது குதிரையில் ஏறிக் கொண்டாள்.

முதலில் மெல்ல நடை போட்ட குதிரைகள், விரைவில் வேகமாக ஓடத் தொடங்கின.

முல்லைத்தீவு செல்லும் பாதைக்கு வழிகாட்டும் ஒரு கைகாட்டி மரத்தினருகே பியசீலி - அல்ல! அல்ல! ஜெயசீலன், தனது குதிரையை நிறுத்தி, அந்தக் கைகாட்டியைப் பார்த்துவிட்டு அந்தப் பாதையில் குதிரையைச் செலுத்தினாள். மர்த்தனியின் குதிரையும் அவ்வழியே அவனைப் பின் தொடர்ந்தது.

வந்தார்கள் அங்கே!

35

கிழக்கின் நெற்றியில் குங்குமப் போட்டு போலக் கிளம்பிய கதிரின் அழகை ரசித்துக் கொண்டு மாளிகையின் மேல் தட்டில் உலவிக் கொண்டிருந்த பண்டாரக வன்னியனை நோக்கி குருவிச்சி வேகமாக வந்து கொண் டிருந்தாள். "என்னம்மா இப்பொழுது தான் எழுந்தாயா?" என்று அவள் தாமதமாக எழுந்த தைக் குத்திக்காட்டுவது போல பண்டாரகன் கேட்டான்.

"இல்லை! நான் இரவு சரியாகவே தூங்கவில்லை. கண்களை மூடிக் கொண்டே படுத்திருந்தேன்"

"அதனால் விடியற்காலை அயர்ந்து தூங்கிவிட்டாய் இல்லையா?"

"விடியற்காலையில் தூங்கவில்லை. விடிந்தும் தூங்க வில்லை."

"பொய்! பொய்! நன்றாகக் குறட்டை விட்டுத் தூங்கிவிட்டு என்னிடம் பொய் சொல்லுகிறாய்?"

"மாளிகையின் கீழே படுத்திருந்த என் குறட்டைச் சப்தம், மாளிகையின் மேல் தட்டில் தூங்கிக் கொண்டிருந்த உங் களுக்குக் கேட்டதாக்கும். ஒருவேளை, காதுகளை மட்டும் கழற்றி துப்பறிவதற்கு அனுப்பியிருந்தீர்களோ?"

பண்டாரகன் சிரித்தான். குருவிச்சி நாச்சியும் புன்னகை புரிந்தாள்.

"குருவிச்சி! கேட்க மறந்து போனேன்! நமது ஒற்றர்கள் சிலர் விடியற்காலை வந்திருக்க வேண்டுமே, வந்தார்களா? தெரியுமா?"

"வந்தவர்கள் தந்துள்ள செய்தியை எடுத்துக் கொண்டு தானே இங்கே ஓடி வந்தேன்!"

"என்ன சொன்னார்கள்? பியசீலியின் மரணத்திற்குப் பிறகு கண்டியில் வேறென்ன விசேஷமாம்?"

"கொழும்பிலிருந்தபடியே முத்துசாமி, தன்னைக் கண்டியின் மன்னனாகப் பிரகடனப்படுத்தி அந்தச் செய்தியைக் கண்டியில் பரப்பியுள்ளானாம்!"

"சரியான பைத்தியக்காரன்!"

"என்ன, இப்படிச் சொல்லிவிட்டீர்கள்! தனக்கு ஒரு பின்பலம் இருக்கிறது என்ற நம்பிக்கையில்தானே அந்த முத்துசாமி, அவ்வாறு பிரகடனப்படுத்தியிருக்க வேண்டும்!"

"என்ன பெரிய பின்பலம்? அந்த ஆங்கிலேய ஆதிபத்திய வெறியன் நார்த் பிரபுவின் படை பலம்தான் அவன் நம்புகின்ற பின்பலம்! அதை வைத்துக் கொண்டு, அந்த முத்துச்சாமி – கொழும்பிலிருந்து கண்டியை ஆண்டு விட முடியுமா? குருவீ! இது எப்படியிருக்கிறது தெரியுமா? ஒரு முற்றிப் போன பித்தன் பூமியில் நின்று கொண்டு நான் சூரிய மண்டலத்தை ஆட்சி புரிந்து கொண்டிருக்கிறேன் என்று சொல்வது போலிருக்கிறது! ஒரு நாட்டை படை கொண்டு மட்டும் வென்றுவிட முடியாது! அந்த நாட்டு மக்கள் ஒன்று கூடித் தமது சுதந்திரத்திற்காகப் போர் முனையில் தங்களின் நெஞ்சங்களை நிமிர்த்திக் கொண்டு நின்றால் அவர்களைத் தோற்கடித்து அடிமையாக்குவது இயலாத காரியம்! எந்தவொரு நியாயமான இலட்சியமும் நிரந்தரமாக அழிந்து போனது கிடையாது! கண்டியின் மக்கள் நார்த் பிரபுவுக்கு அடிமையாகிக் கிடக்கும் முத்துசாமியின் பிரகடனத்தைக் கேள்விப்பட்டு கைகொட்டிச் சிரித்திருப் பார்கள்!"

"ஆமாம்! அதையும் ஒற்றர்கள் சொன்னார்கள். முத்துசாமியின் பிரகடனம் வெளியானதும் கண்டி மக்கள் சிரித்தார்களாம்! சினந்தெழுந்தார்களாம்! முத்துச்சாமிக்கு மூளைக் கோளாறு என்று சுவர்களில் எழுதி வைக்கிறார்களாம், இளைஞர்கள்! அமைச்சர் பிலிமதளாவை கூட முத்துசாமியின் பிரகடனத்தைக் கண்டித்துப் பொதுமக்களைக் கூட்டிப் பேசினாராம்!"

"அப்படியா? ஆச்சரியமாயிருக்கிறதே!"

"அரண்மனை வாசலில் நடத்தப்பட்ட அந்தக் கூட்டத்தில் பிலிமதளாவையின் உருக்கமான பேச்சும் பொதுமக்கள் அனைவரும் அவர் முன்னிலையில் எடுத்துக் கொண்ட ராஜவிசுவாசப் பிரமாணமும் மிகவும் உணர்ச்சிகரமாக இருந்ததாம்! ஒற்றர்கள் சொல்கிறார்கள்!"

"பொதுமக்கள் சரி! ஆனால் எனக்குள்ள வியப்பெல்லாம் அந்த பிலிமதளாவையும் முத்துசாமியின் பிரகடனத்தைக் கண்டித்திருக்கிறாரே, அதைப் பற்றித்தான்!"

"ஒற்றர்கள் இன்னொன்றும் சொன்னார்கள்! கண்டியில் ஒரு சில வட்டாரங்களில் முத்துசாமியின் பிரகடனம் குழப் பத்தை ஏற்படுத்தியுள்ளதாம்!"

"என்ன குழப்பம்?"

"ஏதோ ஒரு முடிவுடன்தான் முத்துசாமி இந்தப் பிரகட னத்தைச் செய்திருக்க வேண்டும். ஒருவேளை ஆங்கிலேயப் படைகளின் துணையுடன் அவன், கண்டியின் மீது படையெடுக்கக் கூடும் என்று, மக்களில் ஒரு சாரார் பேசிக் கொள்கிறார் களாம்."

"வேறு ஏதாவது ஒற்றர்கள் சொன்னார்களா?"

"மதுரை இளவரசியை அழைத்துக் கொண்டு அவளது பெற்றோர் கண்டிக்கு வந்து விட்டார்களாம்! மிக எளிய முறை யில் உங்கள் நண்பர் விக்ரம ராஜ சிங்கன் அவளைத் திருமணம் செய்து கொண்டாராம்!"

"தங்கக் குணம் படைத்த என் நண்பனுக்கு அந்தத் தமிழச்சியாவது வாழ்வில் நிம்மதியை வழங்கட்டும்! என்னம்மா குருவி, உன் முகம் ஒரு மாதிரி மாறுகிறது! நண்பர்கள் வாழ் வெல்லாம் நல்வாழ்வாக அமையப் பிரார்த்தனை செய்கிறவன் நம் வாழ்வைப் பற்றிக் கவலைப்படவில்லையே என்றுதானே!

அதற்குள் குருவிச்சி நாச்சி, தன்னைச் சரிபடுத்திக் கொண்டு விட்டாள். பண்டாரகன் உள்ளத்தில் தன்னைப் பற்றி எதுவும் தவறான கணக்கு ஏற்பட்டுவிடக் கூடாதே என்ற பரபரப்பு அவளுக்கு!

"என் முகம் ஒன்றும் மாறவில்லையே! நீங்களே கற்பனை செய்துகொள்கிறீர்களா? என் வாழ்வைப் பற்றி என்றைக்கு நான் கவலைப் பட்டிருக்கிறேன். உங்கள் வாழ்வுதான் என் வாழ்வு! என் வாழ்வின் குறிக்கோள்! நீங்கள் வாழ்ந்தால்தான் இலங்கையில் உள்ள தமிழ் இனம் வாழும் என்பதை உணர்ந்தவள் நான்!"

"எனக்கு மட்டும் உன் வாழ்வைப் பற்றி அக்கறை கிடையாதா என்ன? நிச்சயம் நமது இலட்சியம் நிறைவேறத்தான் போகிறது! கண்டியை வசப்படுத்தலாம் என்ற கனவும் நிறைவேறாமல் - முல்லைத் தீவை முறியடிக்கலாம் என்ற முனைப்பும் தேய்ந்து போய் ஆங்கிலேயர்கள் ஓடத்தான் போகிறார்கள். அதற்குப் பிறகு நமது அன்பின் அடுத்த கட்டத்திற்கு எந்தத் தடையும் இருக்கப் போவதில்லை!"

"நமது இலட்சிய வெற்றி குறித்து எனக்கு எந்தச் சந்தேகமுமில்லை. ஆனாலும் நம்மிடையே உலவுகிற காட்டிக் கொடுக்கும் துரோகிகளால் நமது வெற்றி பாதிக்கப்படுமோ என்றுதான் அஞ்சுகிறேன்."

"காட்டிக் கொடுப்பது - துரோகம் செய்வது - இவைகள் இன்று நேற்று தோன்றியவை அல்ல! எத்தனையோ நூற்றாண்டுகளாய், ஏன் புராண காலத்திலிருந்தே புழக்கத்தில் இருப்பவை! துரோகிகளையும், காட்டிக்கொடுப்போர்களையும் கண்டு தயக்கம் கொள்ளாமல் - நமது இலட்சியப் பயணத்தில் முன்னேறிக் கொண்டே இருக்க வேண்டும். இன்று நாம் விதைக்கின்ற சுதந்திர ஆர்வமென்ற விதை நமது காலத்தில் முளைத்துச் செழித்துத் தழைத்துத் தருவாகத் திகழாவிடினும் - நமக்குப் பிறகாவது அது நடக்கும் என்ற நம்பிக்கையுடன் தான் நாம் முன்னேறிக் கொண்டேயிருக்க வேண்டும்."

"எட்டப்பனின் காட்டிக்கொடுக்கும் இழிதகைப் பண்பினால் தமிழகத்தில் நாள்தோறும் ஆங்கிலேயக் கம்பெனியாரின் கை ஓங்கி வருவதையும் பாஞ்சாலங்குறிச்சியின் பலமும் பாதுகாப்பும் குன்றி வருவதையும் கேள்விப்படும்போது - அந்தோ தமிழகமே! என்று ஏங்கவும் செய்கிறோம். அதே நிலை ஈழத்திலுமா? என்று துடிக்கவும் செய்கிறோமே!"

"குருவீ! நான் ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்கிறேன் கேள்! விதை நட்டவன்தான் அந்த மரத்தின் பழத்தைச் சாப்பிட வேண்டுமென்று என்னுவது தவறு! எதிர் காலத்திற்காக அந்த எதிர் காலச் சுதந்திரத் தாயகம் அமைவதற்காக - பாடுபடுகிற நாமும் கூட, அது அமைகிறவரையில் வாழ்ந்துதான் பின்னர் மறைய வேண்டுமென்று ஆசைப்படக்கூடாது! இன்று நாம் புரிகிற தியாகமும் ஆற்றுகிற பணியும் எதிர்காலத்தில் வெற்றி பெற்றுவிடுமேயானால் அப்போது நாம் உயிரோடு வாழா விட்டாலும் மக்களின் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருப் போம்! என்னதான் அதிகமாக இருப்பினும் மனிதன் நூற்றாண்டு தான் இருக்க போகிறான். அதற்குப் பிறகும் அவன் வாழ வேண்டுமென்றால் அவன் வாழும்போது அதற்கான அடித் தளத்தை உருவாக்கிட வேண்டும் . உலகத்தில் மனித ராசி தோன்றிய காலம் தொட்டு எத்தனையோ கோடானு கோடி மக்கள் பிறந்து இறந்திருக்கிறார்கள். ஆனால் வரலாற்று வரி களில் இன்னமும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் ஒரு சிலர் தானே! அதனால்தான் குருவி, நீயும் நானும் அன்பு என்னும் இந்தக் கட்டத்தைத் தாண்டி அடுத்த கட்டமான உடலுறவு இன்பத்தைப் பெறாமலேயே - நமது இலட்சியத்திற்காக உயிரை அர்ப்பணித்து விட்டால் கூட எத்தனையோ நூறு ஆண்டுகளுக்குப் பிறகும் நாம் வாழ்ந்து கொண்டிருக்கத்தான் போகிறோம்."

"பண்டாரக வன்னியனும் குருவிச்சி நாச்சியும் நாட்டுக் காகவும் நாட்டின் சுதந்திரத்திற்காகவும் இன்ப சுகத்தையே அருகே அண்ட விடாமல் வாழ்ந்து மறைந்தார்கள் என்றாலும் அதுவும் எனக்குப் பெருமைதான்!"

என்றாள் குருவிச்சி! அப்போது அவள் விழியோரம் நீர்த்துளிகள் எட்டிப் பார்த்தன! அவற்றைப் பண்டாரகன் தனது விரல்களால் துடைத்துவிட்டு - அவள் கூந்தலை கோதினான்.

இவ்வாறு இலட்சியச் சிந்தனையில் ஈர்க்கப்பட்டு இருவரும் பேசிக் கொண்டிருக்கும் போது யாரோ வரும் ஒலி கேட்டது. பண்டாரக வன்னியன் திரும்பிப் பார்த்து "யார்?" என்றான். ஒரு குடுகுடுப்பைக்காரன் நின்று கொண்டிருந்தான். அதற்குள்

குருவிச்சி, மெல்லச் சிரித்தவாறு "அடையாளம் தெரிய வில்லையா? நமது ஒற்றர்களில் ஒருவர்தான்!" என்றாள்.

"ஓ! தணிகையா? வேடம் நன்றாகத் தானிருக்கிறது! குருவிச்சியிடம் நீ தெரிவித்த தகவல்களையெல்லாம் தெரிந்து கொண்டேன்."

ஒற்றன், பண்டாரகனை வணங்கி விட்டுச் சொன்னான்-

"யாரோ இருவர் - ஒரு ஆணும் பெண்ணும் - கணவன் மனைவியாம் கணவன் ஊமை கண்டியிலிருந்து வந்துள் ளார்கள் தங்களைக் காண வேண்டுமாம்!"

"அப்படியா? வா குருவி, கீழே போவோம்!"

என்றவாறு குருவிச்சியுடன் பண்டாரகன் மாளிகையின் மேல் தட்டிலிருந்து கீழே இறங்கினான்.

கைக்கு வந்த கடிதம்!


36

கதிரவனும், கவின்நிலவும் இணையாக நடந்து வருவது போல மாளிகையின் படிகளில் இறங்கி வந்த பண்டாரகனும் குருவிச்சியும் முன் தாழ்வாரத்தில் மெத்த பணிவுடன் வணங்கி நிமிர்ந்த ஜெயசீலனையும் மர்த்தனியையும் கனிவுடன் பார்த்தனர். குருவிச்சி, மர்த்தனியின் தலையை மெல்லத் தடவிக் கொடுத்தவாறு என்னம்மா என்றாள் குளிர்ச்சியான மொழியில்! மர்த்தனி யென்று சொல்லிக் கொண்டவள், "இவர் என் கணவர் - பெயர் ஜெயசீலன்! பிறவியிலேயே ஊமை!" என்று அறிமுகப்படுத்தி வைத்தாள். குருவிச்சிக்கு வணக்கம் தெரிவித்த ஜெயசீலன், பண்டாரகனின் காலில் விழுந்து அந்தக் கால்களிலேயே முகம் புதைத்தான். "அடடே! இதெல்லாம் என்ன? எழுந்திரு தம்பி!" என்று கூறியவாறு அவன் தோள்களைப் பற்றித் தூக்கி நிறுத்தி னான் பண்டாரகன்.

ஜெயசீலனாக நின்றிருக்கும் பியசீலிக்கு உடம்பு முழுதும் திடீரென மின்னல் வேகத்தில் ஒரு கதகதப்பு பரவியது, பண்டாரகனின் கைகள், தன் மீது பட்டதை அவள் அவ்வளவு இன்பமாக உணர்ந்தாள். வலைவீசச் சென்றவளும் அவளே - கொலை புரியத் துணிந்தவளும் அவளே- இப்போது அவன ஸ்பரிசத்தால் நிலை குலைந்து நிற்பவளும் அவளே!

"பாவம், அழகான வாலிபன்! ஆண்டவன் இவனைப் பிறவி ஊமையாகப் படைத்து விட்டான் பார்!" என்று அனுதாபத்தைப் பொழிந்தான் பண்டாரக வன்னியன்.

அதற்குள் மர்த்தனி குறுக்கிட்டு, "அய்யோ! ஆண்டவன் மீது குற்றம் சொல்லாதீர்கள்! அவர் இவருக்கு குரல் வளத்தைக் கொடுப்பதற்குள் இவர் அவசரப்பட்டு பிறந்து விட்டால் - அதற்கு ஆண்டவனா பொறுப்பாளி?" என்று வெகுளித் தனமாகக்



கூறியதைக் கேட்டு குருவிச்சி நாச்சி 'களுக்' என்று சிரித்து விட்டாள். அந்தச் சிரிப்பின் போது அவள் இதழ்களைப் பிரித்துக் கொண்டு ஒளியுமிர்ந்த முத்தாரப் பல்வரிசை கண்டு, பியசீலிக்குக் கொஞ்சம் பொறாமைதான்! தனது நளினத்தையும், வாலிபரைச் சுண்டியிழுக்கும் வாளிப்பான உடற் கட்டையும் மிகவும் சிரமப்பட்டு மறைத்துக் கொண்டு ஜெயசீலனாக நிற்கும் அவளுக்கு குருவிச்சி மீது கோபம் ஏற்பட காரணமாயிருந்தது.

வீர நெஞ்சங் கொண்ட குருவிச்சிக்கு விளக்கின் ஒளி போல் திருமுகம். நேரில் நின்று நோக்கினால் ஒரு அழகு. பக்கம் திரும்பி நோக்கினால் அதனினும் அழகு அப்படியொரு அற்புதமான முகம் அந்த முகம். அதனால்தானே பண்டாரகன்

அவளிடத்தில் தன்னுள்ளத்தைப் பறிகொடுத்து விட்டுத் தன்னை அலட்சியம் செய்துவிட்டான் என்ற நினைப்பில் எழுந்த நெருப்புத்தான் அந்த கோபம்.

காளையரைக் கட்டி இழுக்கும் கடைக் கண் நோக்கு தனக்கு! இடை நெளித்தால் படை கவிழும் காலடியில் என்ற நம்பிக்கை! புடைத்த தனமிரண்டும் எத்தனை இளைஞர்தம் இதயத்தை உடைத்தன என்ற கணக்குத்தான் உண்டா? சிவப்பு எழுதாமலேயே இரு செம்பருத்தி இதழ்கள் சிங்கம்நிகர் வீரர்களைத் தொலைவிலிருந்து தொல்லைப்படுத்தும் பருவத்தின் காமவில்லாய் புருவம் அமைந்ததால் கர்வத்தை விடுத்து அவள் கட்டிலில் சரணடைய களம் பல கண்ட தளகர்த்தர்களும்

தவித்திடுவர்! சிரிப்பாள் – சிலிர்த்திடுவர் அடலேறுகள்! தொடு வாள் தொழுது வீழ்வர் அவள் மடியில்! அன்னம் அள்ள அள்ளக் குறையாமல் தருமென்பர் அட்சய பாத்திரம், கன்னமே தனக்கு அந்தப் பாத்திர மெனக் கருதுகிறவள் அவள்!

அந்த அவள் இப்போது, தானே வலிந்து தரத் தயாராக இருக்கும் இன்ப லாகிரிக் கொடையை ஏற்றுக்கொள்ள மறுத்த ஒருவன் முன்னால் தனது ஆயிரமாயிரம் சல்லாப சாகசங் களையும் – ஏன்? தனது உருவையே மறைத்துக் கொண்டு ஒரு ஊமைக் கணவனாக நிற்கிறாள்!

எதற்காக அங்கு வந்தாளோ அந்த லட்சியம் மறந்து போயிற்று! அவனைக் கொலையும் செய்யத் துணிந்து செயல் பட்டாளே, அந்த நிகழ்ச்சி அவள் உள்ளத்தை விட்டுப் பறந்து போயிற்று!

அவனுக்கு நேராகத் தன் சுயரூபத்தைக் காட்டாமல் நடிப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டாள் பியசீலி! ஒரு பெருமூச்சு! அதைக்கூடப் பண்டாரகனும் குருவிச்சியும் கவனித்து விடக் கூடாது என்பதிலே அவள் எச்சரிக்கையாக இருந்தாள்! விம்மிப் புடைக்கும் நெஞ்சத்தை அவர்கள் ஒரு வேளை பார்த்துவிட்டால் ஜெயசீல வேடம் கலைந்து விடுமே என்ற அச்சம்! அதனால் மெதுவாகச் சிறிது திரும்பிக் கொண்டாள்! வேடத்தால் ஜெயசீலன்! காமவேதனையால் பியசீலி! மரம், மட்டை, எதைக் கண்டாலும் மதயானை விடாது! பெண்களிலே அப்படிச் சில பியசீலிகள்!

"ஏம்மா! கண்டியிலிருந்தா வருகிறீர்கள்?"

கம்பீரத் தோற்றம் ஆனால் கனிவு மிகுந்த கேள்வி! பண்டாரகனைப் பார்த்து பட்டென்று பதில் சொன்னாள் மர்த்தனி, "ஆமாம் பிரபு!"

"பிரபு இல்லை நான்!" பண்டாரகன் புன்னகை புரிந்தான்.

"மன்னிக்கவும். மன்னர் என அழைக்க மறந்து போனேன்!"

"மன்னர் பிரபு அதெல்லாம் கிடக்கட்டும்! இப்போது உங்கள் முன் நிற்பவன் ஒரு மனிதன்! இந்த மண்ணின் சுதந்திரத் திற்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஒரு மனிதன்!

கண்டியிலிருந்து என்னைத் தேடி வந்த காரணம் என்ன? நான் ஏதாவது உதவி செய்ய வேண்டுமா உங்களுக்கு?"

"உங்களுக்கு உதவி செய்வதற்காகத் தான் நாங்கள் வந்திருக்கிறோம்."

"எனக்கு உதவியா? ஒரு பிறவி ஊமையும் ஒரு பெண்ணும் சேர்ந்து எனக்கு என்ன உதவி செய்து விட முடியும்?"

"என்ன உதவி உங்களுக்குச் செய்ய முடியுமென்று எங்களுக்கே தெரியாது! ஆனால் எங்கள் விக்ரம ராஜ சிங்க மகாராஜா அப்படிக் கருதுகிறார்! நம்புகிறார்!"

"யார்? கண்டி மன்னனா?"

"ஆமாம்! உங்கள் நண்பர் கண்ணுசாமியேதான்!"

"இதோ பார் பெண்ணே!"

"என் பெயர் மர்த்தனி!"

"சரி! மர்த்தனி என்னும் மடப் பெண்ணே! என் நண்பன் கண்ணுசாமியின் பெயரை நான் மட்டுமே உச்சரிக்க முடியும்; வேறு யாராவது உச்சரித்தால் வெட்டி எறிவேன் அந்த நாவை!"

"அய்யோ கடவுளே! என் கணவர் மட்டுமே ஊமையாக இருக்கட்டும்! என்னையும் ஊமையாக்கி விடாதீர்கள்! கண்டி மன்னர் பெயரைச் சொன்னதற்கு என் கன்னத்தில் இரண்டு போடுங்கள்!"

அதற்குள் ஊமை ஜெயசீலன் குறுக்கிட்டு, கை ஜாடை காட்டி, அவள் கன்னத்தில் அடிக்க வேண்டாம் - அவளுக்குப் பதிலாகத் தனது கன்னத்தில் அடிக்குமாறு கெஞ்சிக் கேட்டுக் கொண்டான். எப்படியாவது பண்டாரகனின் கரம் தனது மேனியில் பட வேண்டும் என்ற மாறாத தாகம்! மாளாத மோகம்!

"பரவாயில்லையே! மனைவி மீது இவ்வளவு பாசம் வைத்திருக்கிறாயே!"

என்று ஜெயசீலனின் முதுகில் செல்லமாகத் தட்டிக் கொடுத்தான் பண்டாரகன்! இப்படியே தட்டிக் கொண்டும் தடவிக் கொண்டும் இருக்கமாட்டானா என்று தவித்தாள் ஜெயசீலனுக்குள்ளே சிறையிருக்கும் பீயசீலி!

"சரி! சரி! கண்டி மன்னன்தான் உங்களிருவரையும் அனுப்பி வைத்திருப்பதா?"

பதிலை ஆவலுடன் எதிர்பார்த்தான் பண்டாரகன்!

"நாங்கள் சொன்னால் நம்புவீர்களோ இல்லையோ என்று தானே கண்டி ராஜா, தனது கையொப்பமிட்ட கடிதமே கொடுத்திருக்கிறார்" என்று நாணிக் கோணி நின்றாள் மர்த்தனி!

"கடிதமா? கண்டி மன்னனிடமிருந்தா? அதை இவ்வளவு நேரம் சொல்லவில்லையே! எங்கே கொடம்மா பார்க்கலாம்!"

"குதிரைமேல் இருக்கிறது! இதோ எடுத்து வருகிறேன்!" என்று தாழ்வாரத்தைக் கடந்து வெளியே ஓடினாள் மர்த்தனி!

அப்போது பண்டாரகன் அங்குள்ள நீளமான ஒரு இருக்கையில் அமர்ந்து கொண்டே, ஜெயசீலனின் கையையும் பிடித்து "நீயும் உட்காரு தம்பி!" என்றவாறு தன்னருகே உட்கார வைத்துக் கொண்டான்.

காமாந்தக்காரி பியசீலிக்கு உச்சி முதல் உள்ளங்கால் வரைக்கும் சூடு ஏறிற்று! இந்த ஆண் உடையால் அடிக்கும் அதிர்ஷ்டம் இது என எண்ணிக்கொண்டு, பண்டாரகன் பக்கத்தில் அமர்ந்து உலகை மறந்திருந்தாள்.

"குருவிச்சி! இவர்களுக்கு சாப்பிட ஏதாவது கொண்டு வரச் சொல்லேன்!"

"நானே போய்க் கொண்டு வருகிறேன்" என்று புறப்பட்ட குருவிச்சி, ஒற்றன் தணிகையைப் பார்த்து, "நீ இங்கேயே இரு!" என்று சைகை செய்துவிட்டு உட்புறம் சென்றாள். தணிகை, ஒற்றனாக மட்டுமின்றி - பண்டாரகனின் மெய்க்காப்பாளனாகவும் பணியேற்றுக் கொண்டு அங்கே கவனமாக இருந்தான்.

வெளியில் ஓடிய மர்த்தனி, கையில் ஒரு மடலுடன் விரைந்து வந்தாள் பண்டாரகனிடம்!

மடலை வாங்கிய பண்டாரக வன்னியன் அதனை உற்றுப் பார்த்தான். கண்டி அரண்மனையின் ராஜ முத்திரை, ஆம் - அரக்கு முத்திரை மடலின் உறை மீது மின்னிக் கொண்டிருந்தது. அந்த முத்திரைக் கடிதத்தை, தனது விரல் நுழைத்து மெதுவாகக் கிழித்து விரித்துப் பார்த்தான். நீண்ட கடிதம், கடிதத்தின் இறுதியில் விக்ரம ராஜ சிங்கனின் கையெழுத்து, அதையும்

உற்றுப் பார்த்து ஐயம் நீக்கிக் கொண்டான். அதற்குள் குருவிச்சி, ஜெயசீலனுக்கும் மர்த்தனிக்கும் இரு தட்டுகளில் பண்டங்களைக் கொண்டு வந்து இருவர் முன்னே நீட்டினாள்.

இரு தட்டுகளையும் மர்த்தனி வாங்கிக் கொண்டு, ஒன்றை ஜெயசீலனிடம் தந்தாள்.

அதற்கிடையே பண்டாரக வன்னியன், கண்டி மன்னனின், கடிதத்தைப் படிக்கத் தொடங்கினான்.

இணையற்ற இணை!

37

அன்புள்ள வைரமுத்துவுக்கு உன் நண்பன் கண்ணுசாமியின் பிரியமுள்ள வாழ்த்துக்கள். நம்மிடையே பிரிவு ஏற்பட்டு நாலு யுகங்கள் கழிந்தன என எண்ணிடத் தோன்றுகிறது. எனது அரசுப் பணிகளும் உனது போராட்டப் பணிகளும் பிரிவு என்னும் அகழை நமக்கிடையே உருவாக்கித் தொலைத்துவிட்டன. இங்கு அமைச்சர் பிலிமதளாவை வழக்கம் போல்வஞ்ச நெஞ்சத்துடன்தான் என்னை வளைத்துக் கொண்டு வலம் வந்தவண்ணமிருக்கிறார். அத்துடன் அவரது ஆசை மகளும் எனக்கு மனைவியாக ஆக்கப் பட்டவளுமான பியசீலி செத்து ஒழிந்ததற்குப் பிறகு கவலை வேறு அவரைக் குடைந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே இடி விழுந்து பாழான வீடு - அதிலே எலிகள் வேறு மூலைக்கு மூலை குடைந்து கொண் டிருந்தால் எப்படியோ அப்படித்தான் அவரது உள்ளம் இப் போது! அந்த இருட்டு உள்ளத்தில் குருட்டுத்தனமாக திட்டங் களுக்கு மட்டும் குறைவே இல்லை. ஆங்கிலேய கவர்னர் அதிகார வெறியன் - அந்த ஆணவம் பிடித்த நார்த் பிரபு, பிலிமதளாவைக்கு மிகுந்த நம்பிக்கையூட்டியிருக்கிறான் என்பது தீர்க்கமாகப் புரிகிறது.எனக்குத் தெரியாது என்று கருதிக் கொண்டு, நார்த் அனுப்புகிற ஒற்றர்கள் கண்டியில் அலைந்து திரிந்து மக்களின் எண்ணங்களைத் திசை திருப்பும் செயல்களில் ஈடுபடுவது மட்டுமல்ல, அடிக்கடி பிலிமதளாவையும் ரகசிய மாகச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். நெருப்புக் கோழி, தலையை மட்டும் ஒளிய வைத்துக் கொண்டு தனது உடல் முழுதும் மறைக்கப்பட்டிருப்பதாக எண்ணிக் கொள்ளுமாமே, அது போல இருக்கிறது அந்த முட்டாள்களின் வேலை!

நமது ஒற்றர்கள் திறம்படப் பணியாற்றுபவர்கள் என்பதால் அரிசியில் கல் பொறுக்குவதுபோல அவர்களைப் பொறுக்கி விடுகிறார்கள். அதனால் அவர்களைத் தொடர்ந்துகொண்டே யிருக்கிறார்கள். உச்சி வெயிலில் நமது நிழல் பூமியில் விழாமல் நமது மேலே தானேப் பரவி விழுகிறது. அந்த நிழல் போல நமது ஒற்றர்கள் பகைவரின் ஒற்றர்களைத் தொடர்கிறார்கள். எனது ஒற்றர் படையின் ஒரு பிரிவினர் கொழும்புத் தலைநகரிலேயே முகாமிட்டிருப்பதுதான் உனக்குத் தெரியுமே! அந்தப் பிரிவில் அங்கம்வகித்து கொழும்புநகர்ப் பகுதிகளில் தீவிரப் பணியாற்றிய திறமைசாலிகள் இருவரைத்தான் இந்தக் கடிதவாயிலாக உனக்கு அறிமுகப்படுத்துகிறேன். ஜெயசீலனும் மார்த்தனியும் கணவனும் மனைவியுமாவர். நீயே புரிந்து கொண்டிருப்பாய், கணவன் ஊமை! மனைவி மார்த்தனியோ - அவன் பேச வேண்டி யதையும் சேர்த்துப் பேசக் கூடிய வாயாடி! ஆனால் துப்பறியும் கலையில் இருவரும் வல்லவர்கள்! இதுபோன்ற ஒரு இணை, உனக்குத் துணையாக இருக்கட்டுமென்றுதான் முல்லைத் தீவுக்கு அனுப்பி வைத்திருக்கிறேன்.

கொழும்பு நகரில் நார்த் பிரபுவின் கோட்டைக்குள்ளேயே காற்றைப் போல நுழைந்து பல செய்திகளை வாறிக் கொண்டு வந்து என்னை ஆச்சரியத்தில் மூழ்கடித்துவிட்டார்கள் இவர்கள் இருவரும்! இவர்கள் என்னிடத்தில் கொடுத்திருக்கும் மிக ரகசிய மான தஸ்தாவேஜுகள் - ஆங்கிலேயர் வகுத்திருக்கும் சதித் திட்டங் கள் - வெகு முக்கியமானவைகளாகும். புலியை அதன் குகை யிலேயே புகுந்து வேட்டையாடுவது போல கொழும்புத் தலைநகருக்குள் ளேயே நமது படைகளை அனுப்பி நார்த் பிரபுவைக் கைது செய்வது மிகச் சுலபமான காரியமாக எனக்குத் தோன்றுகிறது. ஜெயசீலனும் மார்த்தனியும் அதற்கான வழி வகைகள் அனைத்தையும் என்னிடம் தந்துள்ளார்கள். வட்டமிடும் கழுகைப் போல் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறேன். ஒரே பாய்ச்சல்! கொழுத்த வெள்ளாடு - ஆம்! கொழும்பில் கோலோச்சும் நார்த் பிரபு, என்னிடம் சிக்கிக் கொண்டு சாகப் போகிறான்! அவ்வளவு தைரியத்தை ஜெயசீலனும், மார்த்தனியும் கொடுத்த விபரங்கள் எனக்கு வழங்கியிருக்கின்றன!

ஊமையாக இருக்கிறானே ஜெயசீலன் என்று அலட்சியப் படுத்திவிடாதே! மர்த்தனியும் பெண்தானே என்று சாதாரணமாகக் கருதி விடாதே!

கொழும்பு நகரில் இவர்கள் நடத்திய சாகசமொன்றை உனக்கு இந்தக் கடிதமூலம் அறிவித்தே ஆக வேண்டும்.

நார்த் பிரபுவுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பெண் வேண்டுமாம், கூட இருந்து குடிப்பதற்கும் - கூடிக் கிடந்து களிப் பதற்கும்! இரவு எப்போது வரும் என்று ஏங்கிக் கொண்டிருப்பானாம்! வெள்ளைக்காரிகளை உள்நாட்டு சரக்கு என்று வெறுத்துவிட்டானாம்! அதனால் கொழும்புக் குமரிகளுக்கு அவ னது எடுபிடிகள் வலை வீசினார்களாம்! விலை அதிகம் கிடைக் கிறது என்பதற்காக இல்லாதவர்கள் பலர் தங்கள் உடலை ஓர் இரவுக்கு விற்றுக்கொண்டு, பொன்னும் மணியும் பெற்றுக் கொண்டார்களாம்! சில சீமான் வீட்டுச் சிங்காரிகளும் ஓய்யாரிகளும்கூட அதிகாரபலம்கொண்டவனின் அம்ச தூளிகா மஞ்சத்தில் படுத்துப் புரள்வது தமது அந்தஸ்த்தை உயர்த்துமென்று ஆசைப்பட்டு, அழைப்பதற்கு முன்பு ஓடினார்களாம்! இன்னமும் நித்திய நிகழ்ச்சியாக நடைபெறுகிற அவனது காமக் கேளிக்கைக்கு ஒரு நாள் திடீர்ப் பஞ்சம் ஏற்பட்டு விட்டதாம்! நார்த் பிரபுவின் தூதர்கள் நாயாக அலைந்து பார்த்திருக்கிறார்கள் - சரக்கு எதுவும் கிடைக்க வில்லை! பல பெண்கள் முன்வந்தனர். ஆனால் அவர்கள் ஏற்கனவே பழகியவர்கள். அன்றாடம் புதிது வேண்டுமே, ஆங்கிலேய துரை மகனுக்கு!

அலைந்தவர்களின் கண்களில் கடைசியாகத் தென்பட்டது மர்த்தனிதான்! அதாவது அவர்களின் கண்களில் படும்படியாக நடந்து கொண்டிருக்கிறாள்! பிரபுவின் எடுபிடிகள் அவளுக்கு வலைவீசியிருக்கிறார்கள்! வலையில் அகப்படுவது போல நடித்து, எதிரியின் பாசறைக்குள் போகத் துடித்துக் கொண்டிருக்கும் மர்த்தனி, மறுப்பாளா என்ன? ஒரு நிபந்தனை மட்டும் போட்டாள்! தனது ஊமைக் கணவனும் தன்னுடன் வர வேண்டுமென்று! தூதர்கள் சரி என்றனர். இருவரையும் தூக் கிச் சென்றனர் கொழும்புக் கோட்டையின் அந்தப்புரத்திற்கு!

அணைத்து மகிழ ஒரு அழகி. அர்த்த ராத்திரி வரையிலே வராததால் அளவுக்கு மீறிக் குடித்துவிட்டு தலையைக் காலாக மாற்றிக் கொண்டு அறைக்குள் திரிந்தான் நார்த் பிரபு.

"பிரபோ! இன்று கொழும்பு நகர்முழுதும் சல்லடை போட்டு அரித்து இறுதியாக இந்தக் குடும்ப விளக்கைத்தான் கொண்டு வந்துள்ளோம். துணைக்கு இவள் கணவனும் வந்திருக்கிறான் – ஆனால் ஊமை. அறைக்குவெளியே இவன் உருண்டு கிடப்பான். நாங்கள் வருகிறோம்" என்று சொல்லி, தூதர்கள் அகன்று விட்டார்களாம்!

மது மயக்கத்தில் தள்ளாடிக் கொண்டிருந்த நார்த் பிரபு, மார்த்தனியின் கொள்ளை அழகில் மேலும் போதையேறிட – பூந்தோட்டம் புகுந்த குரங்காக மாறினான்! இவளோ புயல்! ஆயினும் தென்றல் போலத் தவழ்ந்து அவனைச் சாகசத்தால் வீழ்த்தினாள். தன்னுடலைத் தொட விடாமலே, அவனைத் தன் இஷ்டம் போல் ஆட்டி வைக்கும் கலை பயின்ற இந்தக் கற்பரசி, மாட்டை விழுங்கிய மலைப் பாம்பு போல அவனை அந்த மஞ்சத்தில் கிடத்திவிட்டாள்!

அதுதான் நேரமென்று, ஊமை ஜெயசீலன் அந்தப்புரத்து ரகசியப் பேழைகள் அனைத்தையும் திறந்து நமக்குத் தேவையான விபரங்கள் பலவற்றைக் கவர்ந்துகொண்டான். விடிந்ததும் விடியாமலும் இருவரும் வெளியேறிவிட்டனர். இனியும் அங்கிருந்தால் ஆங்கிலேய வீரர்களிடம் அகப்பட்டுக் கொள்ள நேரிடுமென்று கண்டிக்கு வந்துவிட்டனர். என் கையில் ரகசியங்களைத் தந்துவிட்டனர்.

இந்தத் திறமைசாலிகள் சில நாட்களாவது உன்னுடனிருந்து உனக்கு உதவி புரிய வேண்டுமென்பது என் ஆசை. இவர்களுக்கோ கண்டி ராஜ்யத்துக்குத் தொண்டு செய்யத்தான் விருப்பம். இறுதி யாக என் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு உன்னிடம் வருகின்றனர்!

வல்லவர்கள் மட்டுமல்ல, நல்லவர்களும் கூட! ஊமையாகப் பிறந்துவிட்ட தனது அத்தை மகனை எந்தப் பெண்ணும் மணந்து கொள்ள விரும்பாதபோது இதோ இந்த இதிகாசப் பெண்மணி

மர்த்தனி, அவன்மீது தீராத காதல் கொண்டு, அவனையே மணப்பேன் என ஒற்றைக்காலில் நின்று தனது சபதத்தை நிறைவேற்றிக் கொண்டாள். அந்தக் காதல் திருமணத்திற்குக் குறுக்கே எத்தனையோ பேர் நின்றார்கள். எல்லோருக்கும் ஈடுகொடுத்து ஊமைக் கணவனைத் தனது உயிர் துணைவனாக ஏற்றுக் கொண்டாள் மர்த்தனி!

இத்துணைப் பெருமை வாய்ந்த ஜோடியை உன்னிடம் அனுப்பியிருக்கிறேன். நீ வகுத்திடும் வியூகங்களுக்கும், உனது போர் முறைகளுக்கும் மேலும் மெருகேற்றி, வெற்றியை ஈட்டித் தரக் கூடியவர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

ஆண்டவன், நமது நீண்ட காலப் பிரிவுக்கு விடையளித்து விரைவில் நம்மை சந்திக்க வைப்பாராக!

இங்ஙனம்

உன் உயிர் நண்பன்

கண்ணுச்சாமி.

கடிதத்தைப் படித்து முடித்த பண்டாரக வன்னியனின் கண்களில் அவனது பரவசத்தை வெளிப்படுத்தும் பன்னீர்த் துளிகள்!

"குருவி! நீயும் இதைப் படித்துப் பார்! என் நண்பன் என்மீது கொண்டுள்ள வாஞ்சைக்கு ஒரு எடுத்துக்காட்டு மட்டுமல்ல, இந்த இணைபிரியாதவர்கள் எவ்வளவு இணையற்றவர்கள் என்பதையும் சித்தரிக்கும் நற்சான்றிதழாகும் இந்தக் கடிதம்!"

என்றவாறு குருவிச்சியிடம் கடிதத்தைக் கொடுத்தான் பண்டாரகன். அவள் அதைப் படித்து முடித்து ஒரு நீண்ட பெரு மூச்சு விட்டாள்.

"இவர்கள் இருவரும் தங்குவதற்கான வசதிகளைச் செய்து கொடு" என்று ஒற்றன் தணிகைக்கு உத்தரவிட்டாள் குருவிச்சி.

"பிறகு சந்திக்கிறேன். சில முக்கியமான அலுவல்கள் இருக்கின்றன". எனக் கூறிவிட்டு பண்டாரகன், அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு மாளிகையின் உட்புற அறைக்குள் சென்றான்.

ஜெயசீலன், மர்த்தனியைப் பார்த்து வெற்றிப் புன்னகையோடு கண்சிமிட்டியவாறு, தணிகையைப் பின்தொடர்ந்ததை குருவிச்சி நாச்சியார் கவனிக்கத் தவறவில்லை.

"உங்கள் பெயர் தணிகையா?" என்றாள் குளிர்ந்த குரலில் மர்த்தனி,

"ஆமாம்! தணிகைமலை! அதைச் சுருக்கித் தணிகை என அழைப்பார்கள்" என்றான் அவர்களை அழைத்துக் கொண்டு புறப்பட்ட ஒற்றன்.

"நாங்கள் கொண்டு வந்த கடிதம் எவ்வளவு முக்கிய மானதென்று உங்களுக்குத் தெரியுமா?" என்றாள் மர்த்தனி.

"அவர் சொல்லாத ஒன்றை நான் தெரிந்து கொள்ள விரும்புவதில்லை" என்றான் தணிகை.

முகத்தில் சிரிப்பைத் தேக்கி "சபாஷ்! சரியான பதில்!" என்பது போல சைகை செய்தவாறு அவன் தோளைக் குலுக்கினான் ஜெயசீலன்!

"என்ன உன் கை பூப்போல இருக்கிறது?" என்று ஜெயசீலனின் கையைத் தொட்டு மெதுவாகத் தடவிப் பார்த்தான் தணிகை!

ஆண்கள் தொட மாட்டார்களா என ஏங்கும் பியசீலிக்கு அப் போது உடம்பு முழுதும் தீப்பிழம்பு!

நாவால் குஞ்சம் நாவால் குஞ்சம் நாவால் குஞ்சம் நாவால் குஞ்சம் நாவால் குஞ்சம் நா
ம் நாவால் குஞ்சம் நாவால் குஞ்சம் நாவால் குஞ்சம் நாவால் குஞ்சம் நாவால் கு
நாவால்
குஞ்சம்
நாவா
குஞ்ச
நாவா
குஞ்சம்
நாவால்
குஞ்சம்
நாவால்
குஞ்சம்
நாவால்

என்றான் தணிகைமலை! "சரிதானா?" என்பதுபோல மர்த்தனி, ஜெயசீலனைப் பார்த்தாள்! ஜெயசீலன் ஒத்துக் கொண்டதைப் போல புன்னகையுடன் தலையசைத்தான்.

மர்த்தனிக்குத்தான் பியசீலியின் பசியும் ருசியும் புரியுமே!

அதற்காகத் தணிகையைப் பார்த்து, "உங்களுக்குக் கல்யாணம் ஆகவில்லையா?" என்று ஒரு கேள்வியைக் கேட்டு வைத்தாள்.

"அது நடந்திருந்தால் இந்நேரம் உங்களிருவரையும் ஏழெட்டு குட்டிச் சாத்தான்கள் வாசலில் ஓடி வந்து வரவேற்றிருக்குமே!"

"அது என்ன அப்படி? குழந்தைகளைப் போய் குட்டிச் சாத்தான் என்கிறீர்கள்? எங்களுக்கு ஒன்று பிறக்கவில்லையே என்று தவம் கிடக்கிறோம்!"

மர்த்தனி, மிகவும் கவலைப்படுபவள் போல் சரியாகவே நடித்தாள்.

"உங்களிருவருக்கும் என்ன வயதாகிவிட்டது! இன்னும் நாலைந்து வருடங்கள் கழித்து ஆரம்பித்தாலும் பத்து பதினைந்து என்று கணக்கு எண்ணி விடுவீர்கள்!" எனச் சிரித்தான் தணிகை!

"அது நடக்காதுங்க!"

"ஏன்?"

"எங்கள் இருவரில் யாரோ ஒருவர் மலடு என்பது உண்மை! அதனால் எங்களுக்கு பிள்ளைப்பேறு இந்தப் பிறவியில் இல்லை"

மர்த்தனியின் முகத்தில் மேலும் கவலை படர்ந்தது போன்ற தோற்றம்!

"நல்லதாகப் போயிற்று! எதிர் காலத்தில் முதியோர் காதலில்கூட குழந்தைகள் என்ற வானரங்களின் குறுக்கீடு கிடையாது உங்களுக்கு!"

"பாருங்க! எவ்வளவு சாதாரணமாகச் சொல்லிவிட்டார்! என் வயிற்றில் ஒரு புழுபூச்சி வைக்கவில்லையே என்று நான் படும் வேதனை எனக்கல்லவா தெரியும்!" என்று பெருமூச்சு விட்டவாறு ஜெயசீலனின் தோளில் முகம் புதைத்தாள் மர்த்தனி!

"எனக்குத் தெரிந்த ஒரு யோகிஸ்வரர் இருக்கிறார். அவரை ஒரு நாள் இங்கு அழைத்து வருகிறேன். அல்லது உங்களை

அழைத்துப் போய் அறிமுகப்படுத்துகிறேன். அவர் சில குளிகைகள் கொடுப்பார். அவற்றை சாப்பிட்டால் உடனே குழந்தை பிறக்கும்!"

நம்பிக்கையுடன் தணிகைமலை இருவரையும் நோக்கிச் சொன்னான். ஜெயசீலன், "இப்படியும் இருக்குமா?" என்பது போல இமைகள் இரண்டையும் பறப்பதற்கு எழும் பறவைகளின் இறக்கைகளைப்போல விரித்துக் கொண்டு மார்த்தனியைப் பார்க்கவே, மார்த்தனியும் ஒரு துள்ளுத்துள்ளி- தணிகையின் புஜத்தைத் தனது கையால் ஒரு உலுக்கு உலுக்கி, "என்னங்க இது? குளிகை கொடுப்பதாவது- உடனே குழந்தை பிறப்ப தாவது?" என ஆச்சரியத்தை அள்ளி வீசினாள்!

"மார்த்தனீ! நீ மகாபாரதக் கதை கேட்டதில்லையா? குந்தி தேவிக்கு எப்படிக் குழந்தைகள் பிறந்தன! உன் கணவன் ஊமை என்பதுபோல் குந்தி தேவியின் கணவன் சாபத்திற்கு ஆளானவன்! கல்யாணமாகாத கன்னிப் பெண்ணாக அவள் இருக்கும்போதே அவளுக்குக் கிடைத்த ஒரு குளிகையை சூரியனை நினைத்துக் கொண்டு சாப்பிட்டுவிட்டாள். உடனே கன்னத்து வழியாகக் கர்ணன் பிறந்துவிட்டான். பிறகு கல்யாணமான பிற்பாடு- எமனை நினைத்து ஒரு குளிகையைச் சாப்பிட தர்மன் பிறந்தான் என்றும், வாயுபகவானை நினைத்து ஒரு குளிகையைச் சாப்பிட பீமசேனன் பிறந்தான் என்றும், இந்திரனை நினைத்து ஒரு குளிகையைச் சாப்பிட அர்ச்சுனன் பிறந்தான் என்றும் மகாபாரதம் கூறுகிறது!"

"போங்க! நீங்க புண்யக் கதையையெல்லாம் தப்பு தப்பா மாத்திச் சொல்றீங்க! குளிகையை சாப்பிடுவதாவது - குழந்தை பிறப்பதாவது?"

என்று மார்த்தனி, தணிகையின் மீது ஒரு இடிஇடித்தாள் செல்லமாக!

அதாவது, பியசீலி- மார்த்தனியைக்கொண்டு அவன் இயல்பு என்ன என்பதை ஆழம் பார்க்கிறாள். அந்த இடியில், தணிகைமலை சற்றேநகர்ந்துகொண்டானே தவிர முற்றிலுமாக ஒதுங்கி விடவில்லை. அதைக் கூர்மையாகக் கவனித்து

கொண்ட பியசீலி, கொஞ்சம் கஷ்டப்பட்டால் தணிகையைத் தன்வசமாக்கி கொள்ளலாம் என்று தீர்மானித்துக் கொண்டாள்.

அவனை வசமாக்குவது, திட்டங்களை நிறைவேற்றுவதற்காக என்று மட்டுமே இருந்தால்கூட, பியசீலிக்கு அவ்வளவு அக்கறை ஏற்பட்டிருக்காது!

அவனைப் பார்த்த மாத்திரத்திலேயே அவனது ஆஜானு பாகுவான தோற்றம் அவளது உடற்பசியைக் கிளறிவிட்டிருந்தது- அவனது உதடுகளையே அவள் அடிக்கடி பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள். யானையின் துதிக்கைகள் இரண்டு ஒன்றன் மேல் ஒன்றாக இணைந்து அசைவது போல் அவளுக்குத் தோன்றியது. அந்தத் துதிக்கை உதடுகளால் அவளது உடல் வளைக்கப் பட்டு நசுக்கப்படும் கொள்ளை இன்பத்துக்காக அவள் துடித்து நின்றாள். இருப்பினும் மிகவும் சிரமப்பட்டு அந்த உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொண்டு ஊமை நாடகத்தைத் திறம்பட நடத்திக் கொண்டிருந்தாள்.

வாருங்கள் மேல்தளத்திற்கு எனக்கூறி, இருவரையும் தணிகை மலை படிக்கட்டுகளில் அழைத்துச் சென்றான். அந்த வீட்டின் மேல்தளம் மிக எளிமையாகவே அமைந்திருந்தது.

"இது என்ன நரியின் வாலை-குஞ்சமாகத் தொங்க விட்டிருக்கிறீர்கள்?" என்று மர்த்தனி, அந்தக் குஞ்சத்தைத் தனது விரல்களால் தொட்டு ரசித்துக் கொண்டே கேட்டாள்.

"ஒற்றர் வேலை என்றாலே நரி வேலைதானே! அதனால்தான் ஒற்றன் வீட்டில் நரிவால் குஞ்சம் தொங்குகிறது! சில நேரங்களில் உத்திகள் எதுவும் அத்துபடியாகாமல் நான் கஷ்டப்படுவேன். அப்போது இங்கே வந்து இந்தக் கட்டிலில் படுத்துக்கொண்டு, இந்த நரிவால் குஞ்சத்தை வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டு மந்திரம் ஜெபிப்பேன்! அப்போது திடீரென என் மூளையில் ஒற்று வேலைக்கான உத்திகள் உதயமாகத் தொடங்கிவிடும்! உடனே எழுந்து என் பணியைத் தொடங்கப் புறப்படுவேன்!"

"அது என்ன மந்திரம்? நாங்களும் ஒற்றர்கள்தானே எங்களுக்குச் சொல்லக் கூடாதா?"

"நீங்களும் ஒற்றர்களா?"

"தெரியாதது போலக் கேட்கிறீர்களே! பாம்பறியும் பாம்பின்கால் என்ற பழமொழி பொய்யா?"

"என்ன இருந்தாலும் அந்த மந்திரத்தை உடனே சொல்லி விட முடியாது! சில நாட்கள் நாம் பழகிய பிறகு வேண்டுமானால் சொல்லுகிறேன். இப்போது நீங்கள் இங்கே ஒய்வு எடுக்கலாம். அதோ அடுக்களை! நீயும் உன் கணவனும் தேவையானதை சமைத்துச் சாப்பிடலாம்"

"உங்களுக்கு?"

"உன் கைவண்ணம் எப்படியிருக்கிறது என்று பார்க்கிறேன். முடிந்தால் கொஞ்சம் கீழ்த்தளத்துக்கும் தூக்கி எறி!"

"எதற்காக எறிய வேண்டும்! நானே கொண்டு வந்து தருகிறேன்"

"மிகவும் நன்றி! நான் கீழே போகிறேன்! உங்களுக்கு இடை யூறாக நான் இங்கு நின்று கொண்டிருக்க விரும்பவில்லை"

தணிகைமலை, இருவரையும் பார்த்து மெல்லச் சிரித்துவிட்டுப் படிகளில் இறங்கினான். பியசீலியின் கண்கள், அவன் போவ தையே பார்த்துக் கொண்டிருந்தன. அவன் கீழ்த்தளத்துக்குப் போய்விட்டான் என அறிந்ததும், மார்த்தனி மேல் தளத்துக் கதவைத் தாழிட்டுவிட்டு ஜெயசீலனிடம் வந்தாள். அதற்குள் ஜெயசீலன், தனது உடைகள் அனைத்தையும் அவசர அவசரமாகக் களைந்து அந்த அறையின் மூலையில் வீசிக் கொண்டிருந்தான்.

"ஏ, அப்பா! இந்த உடைகள் என்ன புழுக்கம்! என்ன புழுக்கம்!" பியசீலியின் இந்த முணுமுணுப்பைக் கேட்டுச் சிரித்துக் கொண்டே மார்த்தனி சொன்னாள்.-

"முழு உடம்பில் முக்கால் உடம்பு தெரிய உடையணிந்து பழகி விட்ட உனக்கு, இந்த முரட்டுத்தனமான ஆண் உடை பெரிய சுமைதான்!"

"ஆனால் ஒன்று மார்த்தனி! இந்த ஆண் உடையை சுமப்பது பெரும் வேதனையாக இருந்தாலும்- இந்த உடையே ஒரு ஆண்மகன் என்னைப் போர்த்திக் கொண்டிருப்பது போன்ற சுகத்தை எனக்கு அளிக்கிறது!"

பியசீலியின் ஆண்மோகத்திற்கு அளவுகோல்தான் எது என்று கண்டுபிடிக்க முடியாமல் திணறியவளாக மார்த்தனி, தனது மூட்டையிலிருந்த உடைகளை எடுத்து பிறந்தமேனியாக நின்ற பியசீலியிடம் நீட்டி, "உம்! இவற்றை உடுத்திக் கொள்!" என்றாள். பியசீலி அந்த உடைகளை அலட்சியமாகப் பெற்று கீழே எறிந்து விட்டு மார்த்தனியை ஆலிங்கனம் செய்து கொண்டாள்.

"சரி! சரி! நான் முதலில் சமைக்கிறேன்!" என்று, மார்த்தனி அவளிடமிருந்து விடுபட்டு அடுக்களைப் பக்கம் போனாள். வீசப் பட்ட உடையை எடுத்து, தன் தோளில் போட்டுக்கொண்டு பிய சீலியும் அடுக்களைக்குள் நுழைந்தாள். இருவரும் அருகருகே நின்று பேசிக்கொண்டே இருவருமாக சமையல் வேலைகளைக் கவனித்தனர். பியசீலிக்கு அறவே பழக்கமில்லா வேலை- இருந்த போதிலும் மார்த்தனியுடன் அவள் சில முக்கிய திட்டங்களைப் பற்றிப்பேசி அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டுமே!

கீழ்த்தளத்தில் தனது அறையில் ஒரு சாதாரண உடைந்த கட்டி லின் மீது ஒருக்களித்துப் படுத்தவாறு ஆழ்ந்த சிந்தனையில் ஈடு பட்டிருந்தான் தணிகைமலை! அவனது சிந்தனை முழுவதும் ஜெயசீலனையும் மார்த்தனியையும் பற்றியதுதான்! அப்போது அறையின் கதவை யாரோ விரலால் சுண்டியது போன்ற ஒலி கேட்கவே, தணிகைமலை, கதவின் பக்கம் கவனத்தைத் திருப்பிக் கட்டிலில் எழுந்து உட்கார்ந்தான்.

தலை வணும் தலை வியும்!

39

கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தது குருவிச்சி நாச்சியார்தான்!

தணிகைமலையோ அவள் வருகையை சற்றும் எதிர்பாராத நிலையில் திடுக்கிட்டுப்போய் எழுந்து நின்று வியப்புடன் கேட்டான் "நீங்களா?" என்று!

"ஆமாம் தணிகை! நானே தான்! ஏன் வந்திருக்கிறேன் என்று உனக்குப் புரிகிறதா?"

"புரியவில்லையே! என் வீட்டுக்கு நீங்கள் வருவீர்கள் என்று நான் கனவுகூடக் கண்டிருக்க முடியாதே! கூப்பிட்டனுப்பினால் ஓடி வந்திருப்பேனே!"

"ஏன்? உன் வீடு என்றால் இங்கு வருவது எனக்குத் தகுதிக் குறைவா? முல்லைத் தீவின் மாளிகையில் மட்டுமா இருக்கிறேன்? களத்தில் நிற்கும் நமக்குக் கள்ளிக்காடுகளும்கூட கவின்மிகு சோலையாகத் தோன்றும்போது நல்லவன் நீ வாழும் இந்த வீடு என்ன, எதிலே குறைந்தது, எதனால் தாழ்ந்தது?"

"நின்று கொண்டிருக்கிறீர்களே! உட்காருங்கள் தயவுசெய்து!"

இருக்கையின் தூசிகளைத் தட்டிவிட்டு, அதில் ஒரு துணியை விரித்தான் தணிகைமலை. குருவிச்சி நாச்சியார், அந்தத் துணியை எடுத்துப் போட்டுவிட்டு இருக்கையில் அமர்ந்தாள். என்ன சொல்லப் போகிறாள் என்று ஆவலுடன் அவளையே பார்த்துக் கொண்டு இருந்தான் அவன்.

"வந்திருப்பவர்கள் யார் என்று தெரிகிறதா?"

"யாரைக் கேட்கிறீர்கள்?"

"அதுதான் அந்த ஊமையும் அவன் மனைவியும்! அவர்களைப் பற்றித்தான் கேட்கிறேன்!"

"கண்டி மன்னர்தானே அனுப்பியிருக்கிறார். அதுதான் தெளிவாகத் தெரியுமே!"

"நீ ஒற்றனாயிற்றே! ஏதாவது உனக்குச் சந்தேகம் வந்ததா என்பதற்காகத்தான் கேட்கிறேன்!"

"ஆரம்பத்தில் நான் சந்தேகப்பட்டேன். பிறகு கண்டி ராஜாவே கடிதம் கொடுத்தனுப்பியிருக்கிறார் என்றதும் சந்தேகத்திலிருந்து என்னை விடுவித்துக் கொண்டேன். இருந்தாலும் மழைவிட்ட பிறகும் தூறல் விடவில்லை என்கிற மாதிரி என் மனத்தில் சிறு துளி சந்தேகம் இருக்கத்தான் செய்கிறது!"

"சிறு துளியாக அது இருக்கக் கூடாது தணிகை! சிறு துளி பெருவெள்ளம் என்பார்கள். சிறு துளிகள் பல சேர்ந்தால்தான் வெள்ளமாகும். எனவே உன் சந்தேகம் சிறு துளியாக இருந்து பய னில்லை. சிறு பொறியாக இருக்க வேண்டும். அந்தத் தீப் பொறிதான், அதுவே விசுவரூபம் எடுத்து ஒரு ஊரையே எரிக்கும் அளவுக்குத் தன்னைத் தானே பெருக்கிக்கொள்ளும். அதுபோல உன் சந்தேகம் சிறு துளியாகக் காய்ந்துவிடாமல் சிறு பொறி யாகப் பரவிட வேண்டும்."

"என்ன சொல்கிறீர்கள் என்பதைத் தெளிவாகச் சொன்னால்- அதற்கேற்ப நான் நடந்து கொள்ள முடியும்!"

"கண்டி ராஜாவின் கடிதத்தை நானும் பார்த்தேனல்லவா? அது அவர் கைப்பட எழுதாத கடிதம்-கையொப்பம் மட்டுந்தான் அவருடையது!"

"அம்மா! இது போலக் கண்டி மன்னர் ஏற்கெனவேகூடக் கடிதம் எழுதியிருக்கிறார். அதில் அவர் கையொப்பம் மட்டும் தான் இருக்கும். கடிதத்தை அவர் சொற்படி வேறு யாராவது தானே எழுதியிருப்பார்கள்!"

"நீ சொல்வதும் சரிதான்! ஆனால் எந்த ஒன்றையும்-அதன் சூழ்நிலை, இடம், காலம் இவற்றையும் இணைத்துப் பார்த்துத் தான் தீர்க்கமான முடிவுக்கு வரவேண்டும்"

"தங்களைப் போலவே நமது தலைவரும் சந்தேகப் படுகிறாரா?"

தணிகைமலை! நமது தலைவரைப் பற்றி உனக்குத் தெரியாதா? தியாகத்தின் திருஉருவம்! களம் காணத் துடிக்கும் அஞ்சா நெஞ்சினர்! தமிழ்இன மக்களுக்காகவே வாழ வேண்டும்- அவர்களுக்காகச் சாகவும் வேண்டும் என்று உறுதி பூண்டிருப்பவர் - ஆனால் எதிரிகள் கொஞ்சம் உருக்கமாகக் குழைந்து பேசினால், அய்யோ பாவம் என்று அவர்களை அப்படியே நம்பிவிடக்கூடிய இயல்பு அவருடன்கூடப் பிறந்த ஒன்றாயிற்றே!"

"அப்படியானால் அவர் கண்டி மன்னர் கடிதத்தையும் நம்புகிறார். கண்டி மன்னர் அனுப்பிய இவர்களையும்நம்புகிறார் என்று சொல்லுங்கள்!"

"நானேகூட நம்ப மறுக்கவில்லை! உன்னையும் மறுக்கச் சொல்லவில்லை! கொடிகளும் செடிகளும் நிறைந்த இடத்தில் காலில்பட்டது பச்சைக் கொடியாகவே இருந்தாலும்கூட, ஒரு வேளை அது பச்சைப் பாம்பாக இருக்குமோ என்று கூர்ந்து பார்த்துத் தெளிவடைவதில் குற்றம் என்ன? ஆனால் இவரோ, சிறிதுகூட என் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை! அந்த ஊமை மீது ஒரே அனுதாபம்! அந்தப் பெண்மீது திடீரென ஒரு மரியாதை! ஏ, அப்பா எவ்வளவு பயங்கரமான சூழலில் கொழும்புத் தலைநகரிலேயே தங்கள் திறமையைக் காட்டி யிருக்கிறார்கள் என்று அதிசயித்துப்போகிறார்!"

"நமது தலைவர் எப்போதுமே ஒருவரை நம்பிவிட்டால் அவர் களுக்காக எதுவும் செய்யத் தயாராகி விடுவார். அவர்களில் எத்தனைபேர் இவரை மோசம் செய்திருக்கிறார்கள் என்பது எனக்கல்லவா தெரியும்? அந்தப் படுபாவி இருக்கிறானே, காக்கை வன்னியன் - அவனைக்கூட ஒரு காலத்தில் நண்ப னாக்கிக் கொள்ளலாமா என்று எண்ணினார்! நான்தான் அந்த முயற்சிக்குக் குறுக்கே நின்று அப்படியொரு அபாயம் ஏற்படாமல் தடுத்தேன்! நமது வீரப்போராட்டம் வெற்றிபெற வேண்டும் என்ற துடிப்பில் அவர் யாரையும் எளிதில் நம்பிவிடுவார்!"

"காக்கை வன்னியனை அவர் எட்டிக்காயைவிட அதிகமாக வெறுக்கிறார். அந்த உண்மையை என் விவகாரத்திலேயே புரிந்து

கொண்டேன். நல்ல வேளை - காக்கையைப்பற்றி நீ முன்கூட்டியே அவரை எச்சரித்திருக்கிறாய்!"

"ஏ..யப்பா! மனிதனா அவன்? உடம்பு முழுதும் அவனுக்கு ஓடுவது ரத்தமே அல்ல! கார்க்கோடகன் என்று ஒரு கொடிய பாம்பு இருப்பதாகச் சொல்வார்களே, அதனுடைய விஷம்தான் அவன் உடம்பு முழுதும் ஓடுகிறது!"

"தணிகை! அவனைப்பற்றியும் பேசத்தான் உன்னிடம் வந்திருக்கிறேன்! கண்டி மன்னர் அனுப்பியதாக வந்துள்ளவர்களைப் பற்றிப்பேச, நானாகவே வந்தேன்! ஆனால் காக்கை வன்னியனைப்பற்றி உன்னிடம்பேச, என்னை அவர் தான் உன்னிடம் அனுப்பியிருக்கிறார்!"

"என்ன? நமது தலைவரா?"

"ஆமாம்! அவருக்கு அதைப்பற்றி உன்னிடம் பேச என்னமோ ஒரு மாதிரி இருக்கிறதாம்! அதனால் தான் என்னை உன்னிடம் பேசச் சொல்லி அனுப்பினார்!"

குழப்பமான உள்ளத்துடன், ஏதோவொரு புதிரைப் புரிந்து கொள்ள வேண்டுமென்ற தவிப்புடன் தணிகைமலை, குருவிச்சி என்ன சொல்லப்போகிறாள் என்று அவளது உதடுகளின் அசைவையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

"பண்டாரகரின் சகோதரி நல்ல நாச்சியாரைத்தான் உனக்குத் தெரியுமே!"

"இதுகூடவா தெரியாது! திருகோணமலைப் பகுதியை அந்த நாச்சியார்தானே காவல் புரிந்து வருகிறார். அதேபோல இன்னொரு சகோதரி ஊமச்சி நாச்சியார் பனங்காமம் பகுதியைக் காவல் புரிந்து வருகிறார்"

"இருவரும் நன்றாகத்தான் காவல் புரிந்து வருகிறார்கள். அதில் நல்லநாச்சியார் திருகோணமலையைத் திறம்படக் காவல் காத்திடுகிறாளே தவிர, தன்னைச் சரியாகக் காவல் காத்துக் கொள்ளத் தெரியவில்லையென்று நமது தலைவருக்கு வருத்தம்!"

"என்னம்மா இது, ஏதோ என் வயிற்றில் புளியைக் கரைப்பது போல் இருக்கிறது!"

"உனக்கு வயிற்றில் புளியைக் கரைக்கிறது! ஆனால் நமது தலைவர், பாலில் புளியைக் கரைத்தால் என்ன ஆகும் என்று வேதனைப்படுகிறார்!"

"அவர் வேதனைப்படாமல் இருக்கத்தானே நாமெல்லாம் இருக்கிறோம்! விவரமாகச் சொல்லுங்கள்!"

"எப்படியோ அந்தக் காக்கை வன்னியன், நல்லநாச்சியை ஏமாற்றிக் காதல்வலையில் விழ வைத்து விட்டான்."

"என்ன? என்ன? எரிமலையை மலைப்பாம்பு விழுங்கி விட்டதா? இருக்காதம்மா! இருக்கவே இருக்காது! இருக்கவே முடியாது!"

"உண்மையைத்தான் சொல்கிறேன்! காக்கை வன்னியன், தன்னைப் பெரிய வணிகர் வீட்டுப் பிள்ளையென்றும் - பெயர் பிர்மானந்தன் என்றும் கூறிக்கொண்டு, நல்லநாச்சியை ஏமாற்றியிருக்கிறான். யார் செய்த புண்ணியமோ அந்தக் காதல் வெறும் பேச்சோடு நிற்கிறது. அந்த மோசடிக்காரன் காக்கை வன்னியன் என்று தெரியாமலே அவனைத் திருமணம் செய்து கொள்ள நல்லநாச்சியார் அவசரப்படுகிறாள்!"

"அவன் யார் என்று நாச்சியாரிடம் சொல்லிவிட வேண்டியது தானே நமது தலைவர்?"

"சகோதரியின் உள்ளம் மிகவும் மென்மையானது என்று அறிந்தவராயிற்றே! அப்படியொரு செய்தி கேட்டு என்ன ஆவாளோ? எப்படி அவள் முடிவு இருக்குமோ? என்று குழப்பமடைந்துள்ளார்"

"அந்தப் பொறுப்பை என்னிடம் விட்டு விடுங்கள். நான் பார்த்துக் கொள்கிறேன். மன்னரிடம் கவலைப் படவேண்டாம் என்று சொல்லிவையுங்கள். நீங்கள் அவர் அருகில் இருப்பது தான் எங்களைப் போன்றவர்களுக்கு ஒரு ஆறுதல்!"

"சரி! நான் வந்த இரண்டு விஷயங்களில் ஒன்று முடிந்தது! மற்றொன்று....."

"அதுதான் முதலிலேயே சொல்லிவிட்டீர்களே! சந்தேகம், சிறு துளியாக இல்லாமல் சிறு பொறியாக இருக்க வேண்டும்! நான் இந்த ஊமையனையும் மர்த்தனியையும் கவனித்துக் கொள்கிறேன்"

தணிகைமலையின் திறமையிலும், விசுவாசத்திலும் நம்பிக் கையுண்டு என்பதைத் தனது இதழோரப் புன்னகைமூலம் பதிலாக அறிவித்துவிட்டு, குருவிச்சிநாச்சியார் அங்கிருந்து

புறப்பட்டாள். அவளை வாசல்வரையில் வந்து மரியாதை காட்டி வழியனுப்புவதற்குத் தணிகைமலையும் பின் தொடர்ந்தான். தலையை அசைத்து குருவிச்சி விடைபெற்றுக் கொண்டு அங்கிருந்து மறைந்தாள்.

அப்போதுதான் பலகாரத் தட்டுடன் கீழ்த்தளத்திற்கு வந்த மர்த்தனி, இருவர் கண்ணிலும் படாமல் ஒரு தடுப்புத் தட்டியின் பின்னால் தன்னை ஒளித்துக் கொண்டு, ஒடுங்கி நின்று கொண்டாள்.

பச்சைக் கொடி அடையாளம்!

40

"வரலாமா?" என்று கேட்டுக் கொண்டே பதிலை எதிர்பாராமல் பலகாரத் தட்டுடன் உள்ளே நுழைந்த மர்த்தனியின் நாட்டிய நடையை அவ்வளவாக ரசிக்காமல் இதயத்தில் வரைந்திருந்த வினாக்குறியை மேலும் பெரிதாக்கிக் கொண்டு "ஓ! மர்த்தனியா?" என்று அவளையே உற்று நோக்கினான் தணிகைமலை!

பலகாரத் தட்டை அவன் எதிரே வைத்தவாறு அவள், "ஊருக்கும் புதிது! இந்த வீட்டுக்கும் புதிது! ஏதோ என்னால் முடிந்ததைச் செய்திருக்கிறேன். கொஞ்சம் சுவைத்துப் பார்த்து, நன்றாக இருக்கிறதா? என்று சொல்லுங்கள்!" என்றாள் மந்தகாசச் சிரிப்புடன்!

ஏற்கனவே தனக்கு ஏற்பட்டிருந்த சந்தேகத்தை மேலும் வலுப்படுத்திவிட்டுப் போயிருக்கிற குருவிச்சிநாச்சியின் மொழிகள், தணிகைமலையின் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருந்தன.

"கதவைச் சாத்தாமலே வந்து விட்டாயே!" என்று ஓரக்கண்ணால் கவனித்தவாறு அவன் கேட்டான்.

"பலகாரம் சாப்பிடுவதற்குக் கதவை ஏன் மூட வேண்டும்?"

"பலகாரம் மட்டும் சாப்பிட என்றால் கதவை மூடத் தேவையில்லை!"

பேச்சிலே மட்டுமன்றி தணிகையின் விழி வீச்சிலும் குறும்பு!

"என்னைப் பற்றி ஏதோ அவசர முடிவுக்கு வந்து விட்டது போல் தெரிகிறது! நான் அப்படிப்பட்டவள் அல்ல!"

"இப்போது நான் என்ன சொல்லிவிட்டேன்! அதற்குள் அதிக தொலைவுக்குப் பேச்சைக் கொண்டு போய்விட்டாயே! பலகாரம்

மட்டும் சாப்பிடப் போவதில்லை! எத்தனையோ அரசியல் விஷயங்களும் பேசவேண்டியிருக்கும் - அதனால்தான் கதவு மூடியிருப்பது நல்லது என்று நினைத்தேன்."

"ஓகோ - அதற்காகச் சொன்னீர்களா? எனக்கு என்ன பயம் என்றால்? புருஷனோ ஊமைக்கோட்டான்! பிள்ளையோ பிறக்கவில்லை! அவனுடன் இவள் என்ன வாழ்ந்து மகிழ்ந் திருக்கப் போகிறாள். அதனால் கொஞ்சம் முயற்சித்துப் பார்ப்போமே என்று நினைத்து விட்டீர்களோ என்று...."

"சே! சே! பைத்யக்காரப் பெண்ணாக இருக்கிறாயே! கல் ஆனாலும் கணவன் - புல் ஆனாலும் புருஷன் என்பது நமது பரம்பரைப் பண்பாடு என்பதை மறந்தவனா நான் - குஷ்டரோகம் கொண்ட தனது கணவனை, அவனது விருப்பத்திற்கிணங்க வேசி வீட்டுக்கே தூக்கிச் சென்றவளாயிற்றே நளாயினி! அப்படிப்பட்ட பத்தினிகளின் வழி வந்தவளாகத் தானே நீயும் இருக்கமுடியும்!"

"நிச்சயமாக - சத்தியமாக அப்படித்தான்! எல்லோரிடமும் கலங்கமின்றி சகஜமாகப் பழகுவேன். அதைப்பார்த்து சில பேர் என்னைப் பற்றித் தப்புக் கணக்குப் போடுவதுண்டு!"

"நான் தப்புக் கணக்குப் போட்டதாகக் கருதி விடாதே! அவ்வாறு நினைத்திருந்தால் உடனே அதை மறந்துவிடு!" என்று சொல்லிக் கொண்டே பலகாரத்தைச் சிறிது சுவைத்துப் பார்த்து "ஆகா! மிக வும் ருசியாக இருக்கிறது" என்று பாராட்டினான் தணிகை!

இவள் நம்மை வளைக்க வந்தவள் தானா? என்பதை அறிந்து கொள்ளக் கடுகளவு ஜாடை காட்டிப் பார்த்தோம்! ஆனால் அது போலத் தெரியவில்லையே! கறாராகப் பேசுகிறாள்! கற்புக்கரசி போல கதைக்கிறாள்! என்னடா இது, ஒன்றும் புரியவில்லையே - என்று மனத்தைக் குழப்பிக் கொண்டான் தனிகைமலை!

மர்த்தனிக்கும் உள்ளூரச் சற்று ஏமாற்றம்தான்! அவள் நினைத்து அந்த அறைக்குள் வந்தது தொட்டவுடன் துவண்டு விடக்கூடாது, கொஞ்சம் "பிகு" பண்ணிக்கொண்டு - அவனை நம்ப வைத்து பிறகு தனது வலைக்குள் வீழ்த்த வேண்டும், என்ற திட்டத்துடன்!

தணிகைமலை, தனது பேச்சையும் நடவடிக்கையையும் பார்த்து அப்படியே தன்னையொரு கண்ணகி என எண்ணி விட்டான் போலிருக்கிறதே என்று தடுமாற்றத்தால் பரக்கப் பரக்க விழித் தாள்.

இருப்பினும் காட்டிக் கொள்ளாமல் - அவன் பலகாரத்தின் ருசியைப் பாராட்டியதும் "நன்றி" என்று சிரித்துக் கொண்டே சொன்னாள். அவனோ தொடர்ந்து பலகாரம் தின்பதிலேயே தனது கவனத்தைச் செலுத்தினான்.

"என் மீது கோபம் ஒன்றுமில்லையே!" என்று தணிகையைப் பார்த்து அவள் குழையும் குரலில் கேட்டதும் - தணிகை, "எதற்காகக் கோபம் கொள்ளப் போகிறேன்! நான் உன்னிடம் எதை எதிர்பார்த்து அதை நீ கொடுக்க மறுத்துவிட்டதால், அதற்காகக் கோபம் கொள்வதற்கு? நீயாக எதுவும் கற்பனை செய்து கொள்ளாதே!" என்றான் கண்டிப்பான தொனியை வரவழைத்துக் கொண்டு!

"நீங்கள் நினைத்ததைக் கொடுக்க முடியவில்லையே என்று எனக்குக் கூட வருத்தம்தான்!"

"என்னடா சனியன் இது? மறுபடியும் எங்கேயோ சுற்றி வளைக்கிறது?" என மனதுக்குள் முணுமுணுத்துக் கொண்டான் தணிகை!

"மர்த்தனீ! நான் ஒன்றும் உன்னிடம் நினைக்கவேயில்லை! ஏதாவது கேட்டிருந்தால் அல்லவா - நீ கொடுக்கவில்லையே என்று கோபித்திருக்க முடியும்?"

"சத்தியமாகச் சொல்லுங்கள்! நான் உள்ளே வந்தவுடன், அரசியல் விஷயம் பேசுவதற்காகத்தானா கதவை மூடச் சொன்னீர்கள்?"

"பிறகு எதற்காக என்று நீ நினைக்கிறாய்?"

"நீங்களே சொல்லுங்களேன்! ஏன் கதவை மூடச் சொன்னீர்கள்?"

"பண்புள்ள ஒரு பெண் இந்த பிரச்சினையை இத்துடன் விட்டுவிட வேண்டும்."

"அப்படியானால் "பிரச்சினை" இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்கிறீர்கள்?"

"மர்த்தனீ! மர்த்தனீ! இப்போது நீ என்னதான் சொல்லிக் தொலைக்கிறாய்?"

தணிகைமலை, தனது தலையில் அடித்துக் கொள்ள எடுத்த கையை, தாவிப் பிடித்துக் கொண்டாள் மர்த்தனி!

தணிகைமலை திடுக்கிட்டான்! எனினும் அவள் பிடியிலிருந்து தனது கையை விடுவித்துக் கொள்ள முயற்சி செய்யவில்லை.

"நானும் அரசியல் பிரச்சினையைத்தான் குறிப்பிடுகிறேன்" என்றவள், தனது கையாலேயே பலகாரத்தை எடுத்து அவன் கையில் கொடுத்து "உம்! சாப்பிடுங்கள்!" என்றாள்.

தணிகைமலையோ "வேண்டாம் போதும்" என்பது போலத் தலையசைத்தான்.

"கையில் கொடுத்தால் பிடிக்காதோ? இதோ வாயிலேயே கொடுக்கிறேன்" என்று தனது அழகிய விரல் நுனிகளால் தாங்கிய பலகாரத்துண்டு ஒன்றை அவனது முரட்டு உதடுகளுக்குள் திணித்தாள். இருவரும் ஒருவரையொருவர் ஏமாற்றுகிறார்கள் எனினும் - அதற்கென வகுத்துக் கொண்ட அந்தத் திட்டத்தில் இயல்பாகவே இருவர் உடலிலும் சூடேறிற்று! நெருப்பில் புரண்டால் உடல் தகிக்கும் - நீரில் விழுந்தால் உடல் குளிரும் - ஒருவருக்கொருவர் வீசுகிற காம வலையும் அது போலத்தானே! கரையேற வேண்டுமென எண்ணினாலும் - அவற்றின் ஆதிக் கத்தில் இருக்கும் வரையில் அந்தத் தட்பவெட்பங்களின் சூழலுக்கு ஆட்பட்டுத்தானே தீர வேண்டும்.

உதடுகளுக்கிடையே திணிக்கப்பட்ட பலகாரத் துண்டுடன் சேர்த்து, அவளது விரல்களையும் சுவைத்துத் தீர்த்தான் தணிகை மலை!

"இனி அரசியல் விஷயம் பேசலாம்! கதவை மூடி விடட்டுமா?" என்றாள் மர்த்தனி!

சரியான வித்தாரக் கள்ளிதான்போலும் என்று ஒரு முடிவுக்கு வந்துவிட்ட தணிகைமலை, அவள் போக்கிலேயே சென்று அவளும் அந்த ஊமையனும் வகுத்துள்ள திட்டத்தை உடைக்க வேண்டுமென சங்கற்பம் செய்து கொண்டான்.

"உன் இஷ்டம்!" என்று அவன் அவளைப் பார்த்துச் சிரித்தவுடன், புள்ளிமானைப் போலத் துள்ளிச் சென்று கதவை

மூடித் தாழிட்டாள் மர்த்தனி! ஆனால் கதவோரத்திலிருந்து உடனே அவனருகே திரும்பிவரவில்லை. முதலிரவுக் கட்டிலறைக்குள் மணமகன் காத்திருக்கும்போது, கழுத்தைப் பிடித்துத் தள்ளி விடப்பட்டு - கதவையும் மூடிவிட்ட பிறகு - நாணிக் கொண்டு நிற்கும் மணமகளைப் போல தனது பாதப் பெருவிரல்களைக் குனிந்து நோக்கியவாறு நின்றாள்!

தணிகைமலை, மெல்ல எழுந்து அவளை நெருங்கிச் சென்றான். அவனது முரட்டுக் கரத்தால் அவளது முகவாய்க் கட்டையைத் தொட்டு "வெட்கமா?" என்றான். அவள் கண்களில் மயக்கத்தின் தள்ளாட்டம்! அவனையே பார்த்துக்கொண்டு நின்றாள்! அவனும் அவளை வெறித்து நோக்கினான்! அடுத்த கணம் மர்த்தனியின் ஆலிங்கனத்தில் அவன் மெய் மறந்தான் என்றாலும் - பண்டாரக வன்னியனின் மெய்காப்பாளன் என் பதையும் ஒற்றன் என்பதையும் மறவாமல் சமாளித்தான். அணைத்துக் கொண்டவள், அவனை விடுவதாக இல்லை! அங்கிருந்த படுக்கையில் சாய்த்தாள்! அவனது உதடுகளை உண்ணத்தலைப்பட்டாள்! அவனோ, கண்களை மூடிக்கொண்டு அவளை இறுகக் கட்டிக் கொண்டான்!

"அரசியல் விஷயம் பேசலாமா?" என்று அவள் மிகவும் மெல்லிய குரலில் யாழின் நரம்பு அதிர்ந்தது போலக் கேட்டவுடன் - அவன், அவளை மேலும் இறுக்கமாக அணைத்துக் கொண்டான்.

ஏதோ பெரிய பயங்கரத் தவறுசெய்துவிட்ட உணர்வோடு, தீயை மிதித்துவிட்டவள் போலத் தன்னை அவனிடமிருந்து வேகமாக விடுவித்துக் கொண்டு,

"அய்யோ - என் கணவனுக்குத் தெரிந்துவிட்டால் என்ன ஆவது?" என்று துடியாய்த் துடித்தாள்!

"ஒன்றும் ஆகாது! நாமென்ன அரசியல் விஷயம்தானே பேசுகிறோம்! என்றான் அமைதியாக தணிகைமலை!

"அது சரி! எனக்கு அவசரமாக ஒரு பச்சைத்துணியும் ஒரு சிறு கம்பும் வேண்டும்" என்றாள் மர்த்தனி!

"பச்சைத் துணியும் கம்புமா? எதற்காக?" என்றுஅதிசயித் தான் தணிகை!

"கொடி தயாரிப்பதற்காக!"

"கொடியா? எதற்கு?"

"இந்த வீட்டு வாசலில் மாட்டி வைப்பதற்காக?"

"பச்சைக் கொடியை என் வீட்டு வாசலில் மாட்டி வைப்பதா? புரியவில்லையே!"

"அந்தக்கொடி, ஒரு அடையாளத்திற்காக - இந்த வீட்டு முகப்பில் இருக்க வேண்டும்."

"என்ன அடையாளம்?"

"சொல்லுகிறேன்!"

தணிகைமலை ஆவேசம்!

41

விலகி நின்றவளை இழுத்து அணைத்துக்கொண்டு, "இச்சைக்கு இனிய வளே! பச்சைக்கொடி எதற்கு? சொல்லுகிறேன் எனக்கூறிவிட்டுச் சும்மா நிற்பது ஏன்? வெல்லப்பாகும் தோற்றுவிடும் உன் இதழ்களை அசைத்திடு தங்கம்!" என்றான் தணிகை! அவளை ஏமாற்ற அவள் வழியிலேயே போவது எனத் தீர்மானித்துக் கொண்டவனல்லவா, அதனால்!

"பெரிய புலவர் போலிருக்கிறதே! வர்ணனை மழையாகக் கொட்டுகிறதே!" என்றவாறு தணிகையின் தோளில் முகம் சாய்த்துக் கொண்டாள் மர்த்தனி.

"நான் புலவனுமல்ல - கவிஞனுமல்ல! உன்னைக் கண்டவுடன் கற்பனை பெருக்கெடுக்கிறது. அவ்வளவுதான். அதிருக்கட்டும்! பச்சைக்கொடி எதற்காக அதைச் சொல்!"

"என் கணவனுக்கு ஒரு தங்கை இருக்கிறாள்! பெயர் கலா! கண்டியிலிருந்து எங்களுடன்தான் வந்தாள். அவளை, வழியில் வேறு வேலையாக அனுப்பியிருக்கிறோம். அந்த வேலையை முடித்துவிட்டு, முல்லைத் தீவுக்கு வருவாள் அவள். அப்படி அவள் வரும்போது நானும் என் கணவரும் தங்கியிருக்கும் இடம் அவளுக்குத் தெரிவதற்காக வீட்டு வாசலில் ஒரு பச்சைக் கொடி பறந்து கொண்டிருக்கும் என்று அடையாளம் சொல்லியிருக்கிறோம். அதைப் பார்த்துக்கொண்டு அவள் இங்கே வந்து விடுவாள்."

"அந்தக் கலாவை என்ன வேலையாக அனுப்பியிருக்கிறீர்கள் என்று நான் தெரிந்து கொள்ளலாமா?"

"எதற்காக மறைக்க வேண்டும்? கண்டி மன்னரின் ஆணைப் படி எல்லாமே பண்டாரக வன்னியரின் நன்மைக்காகத்தான்! கலாவை, காக்கை வன்னியன் கோட்டைக்கு அனுப்பி யிருக்கிறோம்".

"ஒரு பெண்ணை - அதுவும் தனியாக! அதிலும் காக்கை வன்னியன் கோட்டைக்கு!"

"இப்போதே இப்படிச் சொல்கிறீர்கள்! கலாவை நீங்கள் நேரில் பார்த்துவிட்டால், அய்யோ! இந்த ரூபவதியையா அந்தத் துரோகியின் கோட்டைக்குள் அனுப்பினீர்கள் என்று கேட்பீர்கள்!"

"அவ்வளவு அழகியா அவள்?"

"என்னைவிட ஆயிரம் மடங்கு அதிகமான அழகி! அவளைப் பார்த்து ரசிக்க உங்களுக்கு இரண்டு கண் போதாது! இரவலாக ஆயிரம் கண்கள் வாங்க வேண்டும்!"

"அது என்ன பெரிய காரியம்! இந்திரனிடம் இரவல் வாங்கிக் கொண்டால் போகிறது!"

"இந்திரன் என்ன கண் வியாபாரம் செய்கிற கடைக்காரரா? எப்படி அவரிடம் ஆயிரம் கண் வாங்குவது?"

"இந்திரன் உடல் முழுதும் கண்கள் என்று நீ கதை கேட்ட தில்லையா? அகல்யை என்று ஒரு ரிஷிபத்தினி இருந்தாள். கொள்ளை அழகி. அவள் மீது இந்திரனுக்கு ஆசை ஏற்பட்டு விட்டது. அதனால் இந்திரன் ஒரு நாள் ரிஷியை ஏமாற்றி வெளியே அனுப்பிவிட்டு, அந்த ரிஷியைப் போல தனது உருவத்தை மாற்றிக் கொண்டு ஆஸ்ரமத்துக்குள் நுழைந்து விட்டான்."

"அகல்யா என்ன செய்தாள்?"

"என்ன செய்வாள்? இத்தனை நாளுமில்லாமல் இன்று நம் கணவருக்கு நம்மீது இவ்வளவு ஆசை வந்து விட்டதே என்று அவளுக்கு ஒரே குதூகலம்!"

"அதனால்?"

"ஒரே இன்பமயம்!"

"கடைசிவரையில் அவளுக்கு உண்மை தெரியவே இல்லையா?"

"கொஞ்ச நேரத்திலேயே அவளுக்குப் புரிந்துவிட்டது!"

"புரிந்தவுடன்?"

"கொஞ்சவே ஆரம்பித்துவிட்டாள்!"

"என்ன சொல்கிறீர்கள்? கணவனைப் போல உருவமெடுத்து வருகிறான் இந்திரன்..."

"சாதாரண இந்திரனல்ல! தேவேந்திரன்! தேவர்களுக்கெல்லாம் அதிபதி!"

"சரி! யாருக்கோ அதிபதி! அவனைத் தன் பதியல்ல என்று உணர்ந்ததும் அகல்யா வெகுண்டெழுவில்லை என்கிறீர்களே!"

"நமது நிலைதான் அந்த ஆஸ்ரமத்திலும் என்று வைத்துக் கொள்ளேன்! உனக்கு உன் கணவனைப் பற்றிய பயமும் இருக்கிறது- என்மீது ஆசையும் இருக்கிறது- இதே நிலையில் தான் அகல்யா, அவன் இந்திரன் என அறிந்தும் அவனுடன் கூடிக் கிடந்தாள்."

"வெளியில் சென்ற ரிஷி திரும்பி வரவே இல்லையா?"

"வந்துவிட்டார்! சிவப்பூஜையில் கரடியைப்போல!"

"வந்து என்ன செய்தார்?"

"நல்ல கேள்வி! இப்போது இங்கே உன் கணவன் வந்தால் என்ன செய்வான்? அதையேதான் அந்த முனிவரும் செய்தார்! அடி பாதகி அகல்யா! என்னைப்போல வடிவம் கொண்டு வந்தவன் இந்திரன் என அறிந்தவுடன், உனது ஏமாற்றத்துக்காக வருந்தி, அவனை வெளியே துரத்தாமல் அவனுடன் கூடிக் கிடந்த உன்னைச் சபிக்கிறேன். நீ கல்லாகப் போகக் கடவாய்! என்று சாபம் கொடுத்தார். பாவம், அவள் கல்லாக மாறிவிட்டாள். அந்தக் கல்லின் மீது ராமனின் பாதம்பட்டபோதுதான் அவளுக்கு சாப விமோசனமே கிடைத்தது."

"இந்திரனை என்ன செய்தார்?"

"தேவேந்திரா! உன்னைப்போல உத்தமனே கிடையாது! என்னை ஏமாற்றிய உன் திறமையே திறமை! என் பத்தினி அகல்யாவின் தாபத்தைத் தீர்த்த உனக்கு என் ஆசிர்வாதம்! என்று உட்காரவைத்துப் பாராட்டி உச்சிமோந்து அனுப்புவாரா என்ன? அடே! துன்மார்க்கா! இப்படியொரு துர்நடத்தையில் ஈடுபட்ட உனக்கு உடம்பு முழுதும் கண்களாகப் போகட்டும்! என்று

கடுமையான சாபம் கொடுத்தார். உடனே இந்திரன் உடலில் ஆயிரம் கண்கள் உண்டாயின! அந்தக் கண்களை இரவல் வாங்கிக் கொண்டுதான் நீ சொன்ன கலாவின் அழகை ரசிக் கலாம் என்று கூறினேன்."

"ரசிப்பதோடு நில்லுங்கள்! கலா மிகவும் கோபக்காரி! துடுக் காக ஏதாவது சொல்லி விடுவாள்!"

"நீகூடத்தான் முதலில் கோபக்காரியாக இருந்தாய்! மர்த்தனீ! எனக்கு ஒரு ராசியே உண்டு. எந்தப் பெண்ணாக இருந்தாலும் என் வலையிலே விழுந்துதான் தீரவேண்டும்."

"குருவிச்சி நாச்சி கூடவா?"

இந்தக் கேள்வியைக் கேட்டு அவள் வாய் மூடவில்லை. அவளது கன்னத்தில் பளார் என்று ஒரு அடி! எப்படித்தான் அந்த ஆவேசம் வந்ததோ அவனுக்கு!

"விருந்தாக வந்திருப்பதால் இத்துடன் விட்டேன்! நீ தப்பினாய்! இல்லையேல் இந்நேரம் நீ இவ்வுலகில் இல்லை என்று ஆக்கியிருப்பேன்."

என்று கூச்சலிட்டான் தணிகைமலை.

"தவறிக் கேட்டு விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள்!" என்று அவன் முழங்கால்களைப் பற்றிக் கொண்டாள் மர்த்தனி!

வஞ்சக நோக்குடன் வந்துள்ளவளுடன் தானும் அப்படித்தானே நடந்து கொள்ளவேண்டும் என்பதை மறந்து உணர்ச்சி வயப்பட்டு விட்டதற்காகத் தன்னையே நொந்து கொண்டவனாக "பரவாயில்லை. எழுந்திரு. நான் என் உடன்பிறவாச் சகோதரியாக நினைக்கும் நாச்சியாரைப் பற்றி நீ அப்படிப் பேசியதால் நிதானமிழந்து விட்டேன்" என்ற சமா தானம் செய்தான் தணிகைமலை!

"எப்படி வீங்கிவிட்டது என் கன்னம்! பாருங்கள்! நீங்கள்தான் ஒத்தடம் கொடுத்து வீக்கத்தை வடிய வைக்கவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே கன்னத்தை அவன் உதட்டருகே கொண்டு போனாள். அவளைச் சரிப்படுத்திட, அவனும் அவள் கேட்டதைக் கொடுத்தான். அவனுக்கென்ன நஷ்டமா? கஷ்டமா?

"கொடி கேட்டேனே!"

மர்த்தனி, தணிகைமலையைக் கொடியாகச் சுற்றிக் கொண்டாள்!

"ஆளை விட்டால்தானே எடுத்துத் தரமுடியும்?" எனக் கூறிய வாறு, அவளிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட தணிகை, அங்கு குவியலாகக் கிடந்த துணிகளைக் கிளறி, இறுதியாக ஒரு பச்சைத் துணியை எடுத்து சிறிய கம்பொன்றில் கட்டிக் கொடி யாக்கி அவள் கையில் கொடுத்தான்.

"இதை நான் வீட்டு வாசலில் கட்டிவிட்டு, என் கணவனிடம் போகிறேன்."

தணிகைமலை தலையசைக்கவே, மீண்டும் ஒன்று அவன் உதட்டில் அளித்துவிட்டு, கதவைத் திறந்து கொண்டு மர்த்தனி வெளியேறினாள்.

தலையைச் சொறிந்துகொண்டு, நெற்றி முகட்டில் உள்ளங் கையை வைத்துத் தேய்த்தவாறு தணிகைமலை - படுக்கையில் சாய்ந்தான்.

"கலா என்று ஒருத்தி வருகிறாளாம்! அதிரூப அமராவதியாம்! இந்த ஊமையன் ஜெயசீலனுக்குத் தங்கையாம்! அவளைக் காக்கை வன்னியன் கோட்டைக்கு அனுப்பி வைத்திருக்கிறார் களாம்! ஒன்றும் தெளிவாக இல்லை! நாம் மிகவும் எச்சரிக்கை யாகச் செயல்பட வேண்டும்"

இந்தச் சிந்தனை தணிகைமலைக்கு! வீட்டின் மேல் தள த்திலிருந்து ஒரு கூக்குரல்!

"அய்யோ! கடவுளே! நான் மோசம் போய்விட்டேனே!"

அது, மர்த்தனியின் குரலேதான்! வேகமாகத் தணிகைமலை எழுந்து வெளியே ஓடி வந்தான். அவனது கால்கள் மேல்தள த்துக்குச் செல்லும் படிகளைத் தாண்டின.

மறைந்த மாயம் என்னவோ?

42

தளம்விட்டுத் தளம் தாண்டி ஓடி வந்த தணிகைமலைக்கு எதிரே தலைவிரி கோல மாக நின்றுகொண்டு, மர்த்தனி கதறி அழுதாள். "என் கணவன் எங்கேயோ போய் விட்டார் என்மீது கோபித்துக் கொண்டு என்னை விட்டுப்போய்விட்டார். இதோ அவர் எழுதிவைத்து விட்டுப் போன கடிதம்!"

தணிகைமலை அந்தக் கடிதத்தை வாங்கிப் பார்த்தான்.

"அன்புள்ள மர்த்தனிக்கு! சீ! சீ! தவறு! தவறு! அன்பு என்றால் என்ன விலை என்று கேட்கும் உன்னைப் பார்த்து "அன்புள்ள" என்று குறிப்பிடுவது கடைந்தெடுத்த பைத்தியக் காரத்தனம். உன்னை நான் மனமாற நேசித்தேன். நீயும் என்மீது உயிரையே வைத்திருப்பதாக நம்பினேன். வாய் பேச முடியாத ஊமை! ஏதோ ஒரு வகையில் ஊனமுள்ளவன்! அப்படியிருந்தும் மர்த்தனி, நம்மீது புனிதமான காதல் கொண்டு, கணவனே கண் கண்ட தெய்வமெனக் கருதி வாழ்கிறாளே என்று எண்ணி எண்ணி பூரித்துப் போயிருக்கிறேன். கண்டி ராஜ்யத்தின் விசுவாசமுள்ள ஒற்றனாகப் பணியாற்றும் எனக்குப் பாதுகாப்பு அரணாகவும், பாசமுள்ள மனைவியாகவும் நீ வாய்த்துள்ளாய் என்றுதான் கட வுளுக்கு இத்தனை நாளும் நன்றி கூறிக் கொண்டிருந்தேன். நமக்குத் திருமணமாகி முதல் இரவு அறையில் உன் முகத்தையே பார்த்து நான் கண்ணீர் சிந்தினேன். அப்போது நீ உன் காந்தள் விரல்களால் அந்தக் கண்ணீரைத் துடைத்தாய். அவை காந்தள் விரல்களல்ல! கட்டு விரியன் பாம்பின் கூரிய பற்கள் என்று எனக்கு அப்போது தெரியாது! ஊமையான என்னை நீ விரும்புகிறாயா? என்று எழுதிக் கேட்டேன். நீ என் பாதங்களைப் பிடித்துக் கொண்டு உன் கண்ணீரால் நனைத்தாய்! அப்போது முட்டாள்தனமான இன்னொரு கேள்வியும் எழுதினேன்.

அது அப்போது முட்டாள்தனமான கேள்வியாக எனக்குப் பட்டது. ஆனால் இப்போது அது எவ்வளவு புத்திசாலித்தனமான கேள்வி என்று எனக்குப் புரிகிறது. "எந்தக் காலத்திலும் எனக்குத் துரோகம் செய்யமாட்டாயே?" என்பதுதான் அந்தக் கேள்வி! அதைப்படித்துவிட்டு நீபட்டபாடு - அடடா! அற்புதமான நடிப்பு! "உள்ளத்தாலும் உடலாலும் உங்களுக்குத் துரோகம் செய்யவே மாட்டேன். இந்த உயிர் உங்களுக்காகவே ஆண்டவனால் படைக்கப்பட்டதாகும். என்னைப்பார்த்து எவ்வளவு கேவலமான கேள்வியைக் கேட்டு விட்டீர்கள். என் கண்களைப் பாருங்கள், அதில் களங்கத்தின் சாயல் தெரிகிறதா? என் புருவம் - அது என்ன பருவ இளைஞர்களைக் கண்டவுடன் வளையும் வில்லா? என் விழி - அது என்ன அம்பா? என் முகம் தாமரை யென்றால் இந்தத் தாமரை இதோ என் எதிரே இருக்கும் இந்தக் கதிரவனுக்காக மட்டுமே மலரும்! ஆற்றிலோ குளத்திலோ நான் விழுந்து உயிர் போகும் ஆபத்தில் எவனாவது ஒரு ஆண் மகன், என்னைத் தொட்டு தூக்கி விட்டால்கூட - எச்சில்பட்ட பண்ட மாகிவிட்டேன் என்று நினைத்து ஆவியைப் போக்கிக் கொள்வேன் அத்தான்! இது சத்தியம்! என்று கூறிக் கண்கள் வீங்குமளவுக்கு அழுது தீர்த்தாயே! அதெல்லாம் ஒரு நீலி ஆடிய நர்த்தனம் தானா? உன்னை நான் இந்த உலகத்தை விடப் பெரிதாகக் கருதினேன். நீயிருக்க எனக்கென்ன கவலையென இறுமாந் திருந்தேன். நமக்குள் ஏற்பட்ட கணவன் மனைவி உறவு என்பது எவ்வளவு பவித்திரமானது - சரி, அதைக்கூட விட்டுத் தொலைக் கலாம், நாமிருவரும் நமது கண்டி மன்னருக்காகவும் - அவரது கட்டளைப்படி அவரது நண்பர் பண்டாரக வன்னியனுக்காகவும் எடுத்துக்கொண்ட சபதம் என்ன? அந்த சபதத்தை நிறை வேற்றவும், அதற்காகப் பண்டாரக வன்னியரிடம் பணியாற்ற வும்தானே இந்த முல்லைத் தீவுக்கு வந்தோம். ஆனால் நீ செய்த காரியம் என்ன? கொஞ்சம் சிந்தித்துப் பார்! தெய்வத்துக்கே அடுக்குமா? தெருவில் நட்டிருக்கும் கல் லைக்கூட விடமாட்டாய்! தெண்டனிட்டு வணங்கி - பக்திச் சுவை சொட்டச் சொட்ட மெய் மறந்து நிற்பாய்! ஊரிலே ஒரு தெய்வத்தை விடாமல் தொழு

திடும் நீயா ஊரிலே இருப்பவன் தோளில் எல்லாம் தொத்துகிறாய்? இந்த ஊமையை ஏமாற்ற உனக்கு எப்படியடி மனம் வந்தது? நான் உனக்கு என்ன தவறு செய்தேன்! உன் னையன்றி எந்தப் பெண் மீதாவது என் கண்ணை வீசியிருக் கிறேனா? எனக்கு எல்லாமே நீதான் என்று முடிவு கட்டிக் கொண்டு நான் வாழும்போது அதை உணராமல் இப்படி யொரு துரோகம் செய்யலாமா? இன்று நான் பார்த்தது என் கண்ணுக்கு மெய்யான சாட்சி! இன்னும் நான் காணாமல் எத்தனை எத்தனை இன்பக் காட்சிகளோ? அந்தக் காட்சிகளில் கதாநாயகியாக நீதானே இருந்திருப்பாய்! காமுகர்களின் வேட்டைப் பொருள்! விருந்துப் பண்டம்! இதற்கு நீ உன் விலாசத்தை விலைமகளிர் வாழும் வீதியிலேயே வைத்துக் கொண்டிருந்திருக்கலாம்! மலர் மீது மொய்க்கும் வண்டுகள் மலத்தின் மீதும் மொய்க்கத்தானே செய்கின்றன! உன்னைப் போல ஒரு பெண், ஏதோ ஒப்பற்ற தியாகம் செய்பவளைப் போல ஊமையாகிய என்னை மணந்து கொண்டு - ஊரார் பாராட்டுதலை வெளிச்சத்திலே பெற்றுக்கொண்டு, இருட்டிலே எவனெவன் மடியிலோ படுத்து இதழ் கடிக்க விடுகிறாள் என்றால் - இத்தனை நாளும் பெண் இனத்தின் மீது நான் கொண்டிருந்த மதிப்பைக் காலிலே போட்டு மிதிக்காமல் என்ன செய்வது! தணிகைமலை - பாவி! பாதகன்! தங்கக் கம்பி மாதிரி பழகினான். அவனே என் நெஞ்சில் தணலை அள்ளிக் கொட்டினான்! அவனைக் குறை சொல்லி என்ன பயன்? உன்னைப் போல உடல்வாகு கொண்ட ஆள்மயக்கி ஒருத்தி வலியச் சென்று வளைத்தால் - பாவம், அவன்தான் என்ன செய் வான்? பாய்ந்துவிட்டான்! அவசர அவசரமாகப் பதார்த்தம் தயாரித்துக் கொண்டு, கட்டிய கணவனைக்கூட பட்டினி போட்டுவிட்டு, நீ கீழ்த்தளத்துக்கு ஓடியபோதே, என்று மில்லாத சந்தேகம் எனக்கு வந்தது! பின் தொடர்ந்தேன்! தூண்களின் மறைவில் ஒளிந்திருந்தேன்! சிறிது நேரத்தில் கதவு மூடப்பட்டது! ஆம்! அய்யோ! உள்ளே அந்த அறையில் ஒரு சொர்க்கலோகம் திறக்கப்பட்டது. அதற்காக அந்தக் கதவு மூடப்பட்டது. கதவின்

இடுக்குவழியே கண்டேனடி அந்தக் கண்கொள்ளாக் காட்சியை! என்னைக் கட்டியணைத்து முத்த மிட்டவாறு இந்திரன் - சந்திரன் என்று புகழ்ந்த வாயைக் குவித்து அவனது உதடுகளை நீ விழுங்கிக் கொண்டிருந்த அந்தக் கண் றாவியைக் கண்டேனடி! எப்படியடி உனக்கு மனம் துணிந்தது? ஏ, அப்பா! என்னை ஏமாற்ற எத்தனை நாடகம் ஆடியிருக்கிறாய்? இப்போதுதானே புரிகிறது, ஊரை ஏய்த்திடப் பேருக்கு ஒருவனை மணந்து கொண்டு, உன் இஷ்டத்துக்கு வாழலாம் - உல்லாசமாக வாழலாம்-ஓய்யாரமாக வாழலாம்-பாபச் சகதியில் புரளலாம் - -பாதகம் புரியலாம்-என நீ போட்ட திட்டம்! மர்த்தனீ! நீ மகா பாதகி! ராட்சசி! இனி உன்னுடன் நான் இருப்பது என் உயிருக்கே ஆபத்து! ஆபத்தே இல்லாவிடினும் அசிங்கம்! மானமுள்ள ஒரு மனிதனின் செயலாக அது இருக்க முடியாது! எனது மன்னர் கண்டி ராஜாவின் ஆணையை உன் துணையின்றி என்னால் நிறைவேற்ற முடியும்! அவரது உத்திரவுப்படி பண்டாரக வன்னி யருக்கான உதவிகளைச் செய்திட என் உழைப்பைத் தருவேன்! ஏன்! என் உயிரையே கூட தருவேன்! உத்தமியே? பத்தினியே? போதும் உன் சகவாசம்! என்னை மறந்துவிடு! தணிகைமலை யிடம் உன் தாபத்தைத் தணித்துக்கொள்! அதிலும் திருப்தி ஏற்பட வில்லையென்றால் பண்டாரக வன்னியன் படையில் ஏராளமான முரட்டு வீரர்கள் இருக்கிறார்கள்! அவர்களை யெல்லாம் உன் பிடியில் போடு! இனி உன் முகத்தை நான் பார்க்க விரும்பவில்லை! நான் போய் வருகிறேன்! இல்லை! இல்லை! போகிறேன்! இப்படிக்கு ஜெயசீலன்!"

"படித்தீர்களா இந்தக் கடிதத்தை! நான் என்ன செய்வேன்! அவரை மணந்த காலந்தொட்டு இதுவரையில் நான் அந்நிய புருஷனை ஏறெடுத்தும் பார்த்ததில்லை. ஏதோ ஒரு காந்த சக்தி உங்களிடம் இருந்து என்னை இழுத்துவிட்டது. அதனால் தடுமாறி விழுந்துவிட்டேன். எத்தனை எத்தனை ஆண்கள் என்னை வளைய வளைய வந்திருக்கிறார்கள்! எவ்வளவு சீமான்கள் பணத்தைக் கொட்டிக் கொடுக்கக் காத்திருந்தார்கள். அவ்வளவு ஏன்? கண்டி மன்னர் விக்கிரம ராஜ சிங்காவுக்குக்கூட என்மீது ஒரு

மயக்கம்! தூதுகள் அனுப்பிப் பார்த்தார்! ஒரு நாள் அவரே நேரில் கேட்டுவிட்டார். மண்டியிடாததுதான் பாக்கி! மனதைக் கல்லாக்கிக் கொண்டேன்! இவள் நெருப்பு என்பதைத் தெரிந்து கொண்டு நெருங்காமலே இருந்துவிட்டார். மர்த்தனீ! இனிமேல் நீ எனக்கு ஒரு தங்கை மாதிரி என்று அவர் வாயாலேயே சொல்ல வைக்கும் வைராக்கியம் என்னிடமிருந்தது! வைரத்தை சம்மட்டியால் அடித்து நொறுக்குவது போல என் வைராக்கியத்தை நீங்கள் பொடிப் பொடியாக்கிவிட்டீர்கள்! இனி நான் என் செய்வேன்! வாய் பேச இயலாத அவர் எங்கே போனாரோ? என்ன ஆனாரோ? அவமானம் தாங்க முடியாமல் உயிரைத்தான் மாய்த்துக் கொண்டாரோ?"

தேம்பித் தேம்பி அழுதாள்! கதறினாள்! அவளை ஆசுவாசப் படுத்த - தணிகைமலை அவளைத் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டு, "அழாதே! பொறுமையாக இரு!" என்று அவளது முதுகில் தட்டிக் கொடுத்தான்.

"கணவனை இழந்து நிற்கும் இந்த நேரத்தில்கூட இது மிகவும் இதமாகத் தான் இருக்கிறது! அய்யோ! இந்த மாயத்தை நீங்கள் எங்கே கற்றீர்கள்?"

என்று மர்த்தனியும் அவனை நன்றாகத் தழுவிக் கொண்டாள்.

"மர்த்தனீ! ஏதோ நடந்தது நடந்து விட்டது - உன் கணவன், அதற்குள் இந்தப் பகுதியிலிருந்து வெகுதூரம் போயிருக்க முடியாது!"

"அப்படியானால் இப்போதே சென்று அவரைத் தேடிக் கொண்டு வாருங்கள்!"

மர்த்தனி, தணிகையின் கன்னத்தோடு தன் கன்னத்தைப் பதித்துக் கொண்டு, தனது கணவனுக்காகப் பிரலாபித்தாள்.

"இரு! வவுனியா காடு முழுவதும் வலை போட்டுத் தேடி உன் கணவனைக் கையோடு கொண்டு வருகிறேன்!"

புறப்பட்டான் தணிகைமலை! அவனை இழுத்து ஒரு முத்தம் கொடுத்து அனுப்பினாள் மரகதம்.

தணிகைமலை அவளைப் பார்த்து முறைத்தான்.

"இதுதான் கடைசி முத்தம்! என் கணவர் வந்துவிட்டால் இனி மேல் உங்களை நெருங்கவே மாட்டேன்!"

"அதற்காக அவரைக் கண்டு பிடிக்காமல்விட்டுவிடாதீர்கள்!"

தணிகைமலை சிரித்துக் கொண்டே, படிகளைக் கடந்து வாசலுக்குவந்தான். வீட்டு வாசலில் பச்சைக் கொடி முகப்பில் பறந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்துவிட்டு, குதிரை யொன்றில் பாய்ந்தேறினான்.

பறந்தது குதிரை, அந்தப் பகுதி முழுவதும்! நாளெல்லாம் தேடியலைந்தான்! ஊமை ஜெயசீலனைக் கண்டபாடில்லை. எங்கு போயிருப்பான்? அவன் கேட்டுக்கொண்ட கேள்விக்கு விடை கிடைக்கவில்லை! எல்லாமே புதிராக இருக்கிறதே! இந்த வியப்பு அவனுக்குக் குழப்பத்தை அதிகமாக்கியது! குருவிச்சி நாச்சியார் கூறியவை கோடை காலத்துப் பெரிய மழைத் துளிகள் போல அவன் நெஞ்சில் பட்டுத் தெறித்துக் கொண் டிருந்தன!

எங்குமே ஜெயசீலனைக் காணமுடியாததால் - இறுதியாக வீடு நோக்கிக் குதிரையைத் தட்டிவிட்டான். வீட்டு வாசலில் இறங் கியவன். முகப்பிலிருந்த பச்சைக்கொடியைக் காணாமல் சிறிது வியப்புற்றான்.

வீட்டுக்குள் வந்தான். மர்த்தனி, தனது வருகையை எதிர்நோக்கி ஆவலுடன் ஓடிவருவாள் என்று நினைத்து, வீட்டின் மேல் தளத்தைப் பார்த்தான்.

மேல்தளத்துக் கதவு மூடப்பட்டிருந்தது. சிறிது ஆசுவாசப் படுத்திக் கொள்ளலாமென்று தனது அறைக்குள் நுழைந்தான்.

அப்போது அங்கே ஒரு பெண்! அவள் அவசரமாக எழுந்து, அவனுக்கு மரியாதை செலுத்தி நின்றாள்!

பார்வைக்குக் குறத்தி போல இருந்தாள்!

"நீ?"


"குறி சொல்லும் குறத்தி!"

"உன் பெயர்?"

"கலா!"

"கலாவா? மர்த்தனீ சொன்னாளே! அந்தக் கலாவா?" மேலும் ஆச்சரியத்துடன் கேட்டான். அவள் "ஆம்" என்று தலையசைத்தபோது விளக்கொளிக்கு முன்னால் வைரக் குவியல் ஜொலிப்பது போல் இருந்தது.

சுந்தரிகளின் சூழ்ச்சி!



43

"உளமை ஜெயசீலனின் தங்கையா நீ?"

"ஆமாம்! என்னைப் பற்றி எல்லாம் தெரிந்து வைத்திருக்கிறாயே!"

"தெரிந்து வைத்திருக்கிறீர்களே என்று மரியாதையாகக் கேள்!"

"எனக்கு அப்படித்தான் பேசிப் பழக்கம். குறத்தியொருத்தி எப்படிப் பேசுவாள் என்று உனக்குத் தெரியாதா?"

"நீ பரம்பரைக் குறத்தியா?"

"என் பரம்பரையைப் பற்றி உனக்குத்தெரியாது. அதைத் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியமும் கிடையாது. ஜெய சீலனின் தங்கை கலா என்பது மட்டும் உனக்குத் தெரிந்தால் போதுமானது. இன்னொரு செய்தி வேண்டுமானால் சொல் கிறேன். நான் மேற்கொண்டுள்ள ராஜ கடமைக்காக குறத்தி வேடத்தில் இருக்கிறேன்".

"எவ்வளவு நாட்களாக?"

"கண்டி ராஜாவின் கட்டளை என்றைக்குப் பிறந்ததோ அன்று முதல்!"

"அப்படியானால் நீ இப்போது காக்கை வன்னியனின் கோட்டைக்குப் போய் விட்டு வருகிறாய் என்று சொல்!"

"அதையும் உன்னிடம் என் சகோதரன் ஜெயசீலன் சொல்லி விட்டானா?"

"அவன் மனைவி மர்த்தனியிருக்கிறாளே, அவள் எல்லா விபரங்களையும் சொன்னாள்!"

"மர்த்தனி! அடடா! மாதர் குலமாணிக்கமாயிற்றே அவள்! கற்பின் திருவிளக்கு! கணவனே கண் கண்ட தெய்வம் அவளுக்கு!"

மர்த்தனிபுராணத்தைக் கலா பாடும்போது, தணிகைமலை மனதுக்குள்ளாக சிரித்துக்கொண்டான். ஏனெனில் அந்த மாதர் குலமாணிக்கத்தின் மடியில் கிடந்தவன் - பிடியில் சிக்கியவன் - அந்தத் திருவிளக்கை அணைத்தவன் அந்தத் தெய்வத்தால் ஆராதிக்கப்பட்டவன்! அதனால் தனக்குள் சிரித்தான்.

"காக்கை வன்னியன் மாளிகையில் ஏதாவது துப்புக் கிடைத்ததா?"

"என்னை அவன் உண்மையிலேயே குறி சொல்லும் குறத்தியாகவே நம்பிவிட்டான். அவன் கையைப் பிடித்துக்குறி சொன்னேன்"

"கையைப் பிடித்தாயா? சும்மா இருந்திருக்கமாட்டானே?"

"என் கை பட்டதும் அவன் உடம்பு முழுதும் கொதித்தது அவன் கையிலேயே தெரிந்தது! நான் என்ன, பல்லைக் காட்டியவனுக் கெல்லாம் படுக்கை விரிக்கும் பாவையா? என் கண்களின் கடுமையைக் கண்டு அந்தக் காக்கை, பெட்டிப் பாம்பாய் அடங்கிப் போய்விட்டான்".

"ஓகோ! துணிச்சல்காரி தான்! பிறகு என்ன நடந்தது?"

"கூடிய விரைவில் அவன் முல்லைத்தீவுக்கு மன்னனாகப் போகிறான் என்றும், பிறகு கண்டி ராஜ்யமே அவன் காலடியில் விழப்போகிறது என்றும் கதை அளந்தேன்!"

"அதையும் அந்த முட்டாள் நம்பினானா?"

"குறி சொல்லும்போது ஆரூடம் சொல்லும் போதும் யார் குறிகேட்கிறார்களோ அவர்களை ஒரேடியாகப் புகழ்ந்து உயரத்தில் தூக்கி வைத்து விட்டு நீ தான் இந்த உலகத்தையே ஆளப்போகிறாய் என்று சொல்ல வேண்டிய முறையில் சொல்லி விட்டால் போதும்! குறி ஜோஸ்யம் இவைகளில் நம்பிக்கையில்லாதவர்கள் கூட நாக்கைத் தொங்கப்போட்டுக் கொண்டு தங்கள் எதிர்காலத்தை எண்ணி எச்சிலை வழிய விடுவார்கள்!"

"அப்படியா? அப்படியானால் காக்கை வன்னியன் நாக்கிலிருந்து இப்போது எச்சில் கொட்டிக் கொண்டேயிருக்குமென்று சொல்!"

"நாக்கு எதற்கு? அவன் இரண்டு கடை வாயிலுமிருந்து நீர் வீழ்ச்சிபோல சதா சர்வகாலமும் அது கொட்டிக் கொண்டேயிருககிறதே!"

"அங்கு நீ போனதின் நோக்கம் என்ன? தெரிந்து கொண்ட ரகசியம் என்ன?"

"கொழும்பிலே உள்ள நார்த் துரைக்கும் காக்கை வன்னியனுக்கும் இப்போது அவ்வளவாக உறவு இல்லையென்று ஒரு தகவல்! அது உண்மையா என்று தெரிந்து கொள்ளத்தான் போனேன்!"

"தெரிந்ததா?"

"தெரியாமல் இருக்குமா?"

"எப்படி?"

"முல்லைத்தீவுக்கு நீ தான் எதிர்கால அதிபதி! கண்டிக்கும்கூட நீ தான் ராஜா! இப்படி நான் அள்ளிவிட்டதும், உடனே அவன் அது எப்படி முடியும்? என்னிடம் அவ்வளவு படை பலம் இல்லையே என்றான்! அதற்கு நான், பயப்படாதே! நார்த் பிரபு நம்பியவரைக் கைவிட மாட்டார் என்று ஒரு போடு போட்டேன்!"

"அதையும் நம்பி விட்டானா?"

"இல்லை! அப்போது தான் உண்மையைக் கக்கி விட்டான்!"

"என்ன உண்மை?"

"நார்த் பிரபு இப்போதெல்லாம் காக்கை வன்னியனை ஏறெடுத்தும் பார்ப்பதில்லையாம்! ஏழு முறை கொழும்புக்குப் போய் பேட்டிக்குத் தவம் கிடந்தானாம்! பேட்டி கிடைக்கவே இல்லையாம்! நார்த் பிரபுவின் குணம் தான் தெரியுமே! தனக்குப் பயன்படுகிற வரையில் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு ஆடுவான்! பயனில்லை என்றால் பிறகு இலைக்கு வெளியே தூக்கி எறியப்படும் கருவேப்பிலை தானே! அந்தக் கருவேப் பிலையின் கதிதான் காக்கை வன்னியனுக்கு!"

"இன நலம் மறந்து விட்டு, எப்படியோ தன்னை மட்டும் வாழவைத்துக்கொண்டால்போதுமென்ற தன்னல நோக்கத்தில் தங் களைத் தாழ்த்திக் கொண்டவர்களுக்கு இத்தகைய நிலை, தவிர்க்க முடியாதது!"

"சரி! சரி! அதற்குள் தத்துவத்திற்குப் போய் விட்டாயே! அங்கு நான் காட்டிய சாமர்த்தியத்தைக்கேள்!"

"உன்னைப் பார்த்தால் ஒற்றர் வேலைக்குத் தகுதியான பெண்ணாகவே தெரியவில்லையே!"

"ஏன்? உனக்கு திடீர் சந்தேகம்?"

"ஒற்றர் என்றால் தனது திறமைகளைப் பிறரிடம் சொல்லக் கூடாது! எல்லாம் ரகசியமாகத்தான் இருக்க வேண்டும்!"

"அந்தக் கலை எனக்குத் தெரியாதா என்ன? நீயும் நானும் மர்த்தனியும் என் அண்ணன் ஜெயசீலனும் ஒரே நோக்கத்திற்காக ஒரே பணியில் ஈடுபட்டிருப்பதால் உன்னிடம் ரகசியங்களைச் சொன்னேன். நீ வேண்டுமானால் அவ்வளவு நெருக்கமில்லாதவன் - நம்பிக் கையில்லாதவன் என்று சொல்லிவிடு - மறைக்க வேண்டியதை மறைத்து விடுகிறேன்."

"கோபித்துக் கொள்ளாதே! ஆழம் பார்த்தேன், அவ்வளவு தான்!"

"தனக்கும் நார்த் பிரபுவுக்கும் இனி நட்பே ஏற்படாது என்று கவலைப்பட்ட காக்கை வன்னியனுக்கு ஒரு பரிகாரம் சொல்லி யிருக்கிறேன். கண்ணகியம்மன் கோயிலுக்குப்போய் மூன்று நாட்கள் நள்ளிரவு முதல் விடியும் வரையில் தன்னந்தனியனாக இருந்து தவம் செய்! அவள் அருள் கிடைக்கும்! பிறகு நார்த் பிரபு உன்னை நாடி ஓடி வருவான்! இப்படியொரு யோசனை சொல்லிக் கொடுத்திருக்கிறேன்!"

"மூன்று நாள் தவமிருந்து, அதன் பிறகும் அவனுக்கு நார்த்தின் நட்பு கிடைக்காவிட்டால் உன் பேச்சை நம்புவானா?"

"சரியான பைத்தியக்கார மனிதனாக இருக்கிறாயே! காக் கையை கண்ணகிகோயிலுக்கு ஏன் போகச் சொல்லியிருக் கிறேன்? அதுவும் தனியாக?"

"ஏன்?"

"அப்படிக் கேள்! முல்லைத்தீவில் உள்ள தமிழ் மக்களுக்குத் துரோகியாக இருக்கும் அவன், கண்ணகி கோயிலுக்குத் தனது படைகளுடன் வந்தால் தப்பி விடுவான். தனியாக வந்தால் அவன் தலையை நீ வெட்டிச் சாய்க்கலாம் அல்லவா?"

"என்ன?"

"ஆமாம்! நமது எதிரிகளில் ஒருவனை அப்படித்தான் முடிக்க வேண்டும். பிறகு நமது பாதையில் துரோகம் குறுக்கிடாது! யோசிக்காதே! கண்டி மன்னர் கட்டளை இது!

காக்கை வன்னியனை முதலில் தீர்த்துக் கட்ட வேண்டும்! பிறகு ஆங்கிலேயரை வீழ்த்தி விரட்ட கண்டி ராஜ்யப் படையும் பண்டாரக வன்னியர்படையும் இடையூறு ஏதுமின்றி முன்னேற முடியும்!"

சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்த தணிகைமலை மெல்ல இமைகளை மூடிக் கொண்டிருந்தபோது - அவன் தோள் மீது நாலைந்து அரும்புகள் விழுந்தது போன்ற உணர்வு! அரும்புகள்தானா என்று தனது விரல்களால் தடவிப் பார்த்தான் விழிகளைத் திறக்காமலே! அந்த அரும்புகள், குறத்தி கலாவின் அழகான விரல்கள்! மெல்லச் சிரித்தான் தணிகைமலை! "நீயும் மர்த்தனியைப் போலக் கற்புக்கரசிதானா?" என்று கேட்டுக் கொண்டே அவளைத் தழுவினான்.

எதிரிகள் எனத்தெரிகிறது! அவர்களோ வலுவில் வந்து இன்பத்தைவாரி வழங்குகிறார்கள்! அதனை வேண்டாமென்று சொல்வானேன்? அதையும் அனுபவித்துக் கொண்டு அவர்களை வீழ்த்துவதை ஏன் குறிக்கோளாகக் கொள்ளக் கூடாது? இது போன்ற ஒரு எண்ணம், தணிகைமலைக்கு! முள்ளை முள்ளால் எடுப்பது போல மர்த்தனியும், கலாவும் வழங்க வந்த இன்பத்தைப்பெற்று அதற்குப் பதிலாக அவர்களுக்கும் இன்பம் தந்து - இறுதியில் வெற்றி காண்பது என்பது தணிகையின் திட்டம்! தலைவனிடம் விசுவாசமுள்ள தளபதிகளில் ஒருவனாக - மெய் காப்பாளனாக - உண்மை ஒற்றனாக இருந்த அவன், இந்த விவகாரத்தில் சாதாரண மனிதனாகவே இருந்தான்.

"அவ்வளவு பெரிய கோட்டையிலிருக்கும் காக்கை வன்னியனை உதறிவிட்டு, சாதாரண தளபதியான என்னிடம் உனக்கு இவ்வளவு ஆசையா?"

அவள் பதில் சொல்லவில்லை! அவனைப் பின்னிக் கொண்டாள்! பியசீலி ஆயிற்றே! அவளது மென்மைக்குத் தணிகைமலை போன்ற முரட்டு ஆண்களின் அணைப்பு தானே தெவிட்டாத சுகம்!

அவளோடு இறுகிக் கிடந்த தணிகைமலை, "கலா! என்ன வேண்டும்?" என்றான் எச்சிலை விழுங்கிக்கொண்டே!

"சகல கலையும் வேண்டும் ராஜா!" என்றாள் அவள்!

அமளி - பின்னர் அமைதி - திடுக்கிட்டவளாக நடித்த கலா, "நான் என் அண்ணனையும் மர்த்தனியையும் பார்க்க வேண்டுமே!" என்று துடித்தாள்!

அவளை, அவன் மேல் தளத்திற்கு அனுப்பிவைத்தான். அவன் களைப்புற்றவனாக தனது அறையிலேயே படுத் தயர்ந்தான்.

கலாவும் மர்த்தனியும் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்துக் கொண்டார்கள்.


"என்ன வெற்றிதானே?" என்றாள் மர்த்தனி!

"ஆமாம்! கண்ணகி கோயிலுக்குப் போய் காக்கை வன்னி யனைக் கொல்ல சம்மதித்து விட்டான் தணிகை!" என்றாள் கலா வாக இருக்கும் பியசீலி!

"காக்கை வன்னியன், இவனைத் தீர்த்துக் கட்டத் தயாராக இருப்பானல்லவா?" என்றாள் மர்த்தனி!

"அந்த ஏற்பாடுகள் எல்லாம் திருப்திகரம்!" என்றாள் கலா!

இன்றா, நாளையா? ஏன்?



"எங்கே கொஞ்சம் விபரமாகச் சொல்! எப்படிச் செய்து முடித்தாய் அந்த ஏற்பாடுகளை?"

மர்த்தனி ஆவலுடன் பியசீலியையே பார்த்துக் சொண்டிருந்தாள்.

"மர்த்தனீ! சொல்லாமலா இருக்கப் போகிறேன். சொல்லத்தான் போகிறேன். முதலில் நீ எனக்குச் சொல், ஊமை ஜெயசீலன் ஓடிவிட்டான் என்ற நாடகத்தைத் தணிகை மலையை எப்படி நம்ப வைத்தாய்?"

"ஒரு ஆண் மகனை எப்படி வலையில் விழவைப்பது என்பது நீயும் நானும் கற்ற கலைதானே! இயற்கை நமது உடலுக்கு வழங்கியுள்ள வளைவும், நெளிவும் - அதைவிட நமது நெஞ்சில் மதுக்கலயத்தில் நொங்கும் நுரையுமாகப் பொங்கி வழிவது போல் வழிந்து கொண்டிருக்கும் பொய்யான போலி அன்பும் இந்த ஒரு தணிகைமலையை அல்ல, புருஷ இனத்தையே காலடியில் கிடத்தி விடாதா என்ன! மாவீரர்களை மயக்கும் நாடகத்தில் நீ என்னை விடக் கைகாரி ஆயிற்றே!"

இந்தப் புகழுரை கேட்டுப் பியசீலி பெருமிதம் கொண்டு புன்னகை புரிந்தாள். இருந்தபோதிலும் அந்தப் பண்டாரக வன்னியனைத் தன்வசமாக்க முடியாமல் தோற்றுவிட்டதை நினத்துப் பெருமூச்செறிந்தாள்.

"பண்டாரகனை என் அழகால் - நளினத்தால் - மயக்கு மொழியால் - காமக்கண் வீச்சால் - வெல்லத்தான் முடியவில்லை! அவனைக் கொல்லத்தான் முடிந்ததா? இரண்டில் ஒன்று நடக்காத வரையில் எனக்கு நிம்மதியில்லையடி மர்த்தனி!"

"உன்னை எனக்குப் புரியும்! நீ அவனைக் கொல்வதாக

இருந்தாலும் - அதற்கு முன்பு அவனை அணைத்து மகிழ்ந்து ஆசையைத் தீர்த்துக் கொண்டால்தான், நீ கிழமாகிச் செத்த பிறகும் உன் ஆத்மா சாந்தி அடையும்!"

"புதுப்புது ஆண்களிடம் சுகம் காண ஆண்டவன் எனக்கு வரம் வழங்கியிருக்கும்போது - பண்டாரகன் மட்டும் பல் இளிக்க மறுக்கிறானே, ஏனடி மர்த்தனி?"

"என்ன செய்வது - இப்படியும் சில முட்டாள்கள் இருக்கத் தான் செய்கிறார்கள்! ஆனால் சும்மா சொல்லக்கூடாது, இந்தத் தணிகை மலை இருக்கிறானே, நாம் எட்டடி பாய்ந்தால் இவன் பதினாறு அடி பாய்கிறான்!"


"மர்த்தனீ! உன்னிடம் பதினாறு அடிதான் பாய்ந்தானா? என்னிடம் முப்பத்திரெண்டு அடி பாய்ந்தான்! மிகவும் காய்ந்து கிடந்தவன் போலிருக்கிறது!"

"ஆமாம்! ஒய்வில்லாமல் எதிரிகளை மோப்பம் பிடித்துக் கொண்டிருந்தவன் - மோக போதையில் அப்படியே மூழ்கித் திளைத்து விட்டான்! அதனால்தான் உன்னைக் காணவில்லை யென்று - அதாவது என் ஆருயிர்க் கணவன் ஜெயசீலனைக் காண வில்லையென்று நான் அழுது புலம்பி ஆர்ப்பாட்டம் நடத்தியதும் அப்படியே நம்பிவிட்டான் மடையன்! இப்போதே போய் அவனைக் கண்டுபிடித்துக் கொண்டு வருகிறேன் என்று புறப்பட்டான்! அப்போதுகூட நான் அவனை விடவில்லை! ஒரு சிணுங்கல்! ஒரு தழுவல்! ஒரு முத்தம்! பாவம், கிறுகிறுத்து விட்டான்."

"ஆமாம் - அவனைக் கண்டு பிடிக்கவில்லையென்று உன்னிடமும் வந்து சொல்லவில்லை! "கலா! உன் அண்ணனைக் காணவில்லையென்று அவன் என்னிடமும் சொல்லவில்லையே, ஏன்?"

"அதற்குள்தான் உலகக் கவர்ச்சியே உன் உருவத்தில் அவன் அறைக்குள் உட்கார்ந்திருந்ததை அவன் பார்த்துவிட்டானே! அதனால் எல்லாவற்றையும் மறந்திருப்பான்!"

"ஒருவேளை, நாம் யார் என்பதைப் புரிந்துகொண்டு இந்தத் தணிகைமலை நம்மை ஏமாற்றுகிறானோ என்றுகூட எனக்கு ஒரு பயம்!"



"அனுபவக் களஞ்சியமான பியசீலிக்கு இன்னுமா இந்த ஆண்களின் பலகீனம் தெரியவில்லை! சிவந்ததோலே சில ஆண்களை சிலந்தி வலையில் சிக்கிய ஈயாக்கி விடுகிறது! சிவந்த ரோஜா மட்டுமா நீயும் நானும்? புள்ளிக் கலாப மயிலின் கழுத்து வளைவது போல உனது இடை வளைவது கண்டு நானே மனதைப் பறி கொடுத்து விடுகிறேன்! தணிகைமலையைப் பற்றிக் கேட்கவா வேண்டும்? பழத்தைச் சுவைப்பது போல என்னையே சுவைத் தவன், பழரசத்தைச் சுவைத்தது போல அல்லவா உன்னைச் சுவைத் திருப்பான்! நீ நிச்சயமாக நம்பு! தணிகைமலை இனி மேல் நம்மிடம் பெட்டிப்பாம்புதான்! அதிருக்கட்டும், ஏற்பாடு கள் எல்லாம் திருப்திகரம் என்றாயே – எப்படி என்று என்னிடம் சொல்லவில்லையே!"

"நான் கடிதம் எழுதி வைத்து விட்டு இங்கிருந்து கிளம்பி, நேராகக் காக்கை வன்னியன் கோட்டைக்குத் தான் போனேன். முதலில் கோட்டைக் காவலர் என்னை அனுமதிக்க மறுத்து விட்டனர். பிறகு தந்தை பிலிமதளாவையின் முத்திரை மோதிரத் தையும் அவர் காக்கைக்குக் கொடுத்திருந்த கடிதத்தையும் காவலனிடம் தந்து உள்ளே அனுப்பினேன். உடனே என்னை அழைத்து வரும்படி காக்கை வன்னியன் உத்திரவிட்டான். உள்ளே போனேன். அங்கே அவன் மதுக்கலயம் ஒன்றைக் காலி செய்து கொண்டிருந்தான்."

"அதைப் பார்த்து நீ பூரித்துப் போயிருப்பாய்!"

"என் ஆண் வேடத்தைப் பார்த்து அவன்தான் முதலில் திகைத் தான்! அவன் சந்தேகத்தை வளர்த்தக் கூடாதென்று, ஒருக்கணத் தில் வேடம் கலைத்து நின்றேன். பியசீலி! என்று கத்தினான்! நல்ல அழகான கரடிக்குரல்! எனக்கும் பசி!"

மர்த்தனி சிரித்துக்கொண்டே, "அதுதான் யானைப் பசி ஆயிற்றே!" என்றாள்.

"சோளப் பொரி என்பதற்காக விடமுடியுமா?" எனப் பதில் வந்தது பியசீலியிடமிருந்து!

"சரி! சரி! பிறகு நடந்ததைச் சொல்!"

"எப்போதும் என் வாழ்க்கையில் நடப்பதுதான்! அவனருகே நெருங்கிச் சென்று உட்கார முயன்றேன்! உடும்புப்பிடியாக

என்னைப் பிடித்துக் கொண்டான்! விடாதே ராஜா, என்றேன்! ஒன்று இரண்டு மூன்று என அங்கிருந்த மதுக்கலயங்கள் அனைத்தும் காலி ஆயின! வந்த வேலையை பிறகு பார்க்கலாம் என்று சொந்த வேலையை முதலில் முடித்துக் கொண்டேன். முழுமையான திருப்தி இல்லை. ஏதோ பரவாயில்லை. அடுத்த கட்டம் தான் தணிகைமலை இருக்கிறானே என்று ஒரு ஆறுதல்."

"பியசீலி! நமது விஜயத்தின் நோக்கத்தை விளக்கினாயா? அதற்கு அவன் ஒத்துக் கொண்டானா?"

"பிலிமதளாவையின் திட்டம் பிரமாதம் என்று பாராட்டினான். கொழும்பில் உள்ள ஆங்கிலேயக் கம்பெனியுடன் அவன் ரகசியத் தொடர்பு வைத்துக்கொண்டு, முல்லைத்தீவு செய்திகளை அடிக்கடி அனுப்பிக் கொண்டிருக்கிறானாம்! ஒன்று எனக்கு காக்கை வன்னியனிடம் மிகவும் பிடித்திருந்ததடி!"

"மறுபடியும் படுக்கையறைக்குப் போகிறாயே, விஷயத்துக்கு வா!"

"விஷயத்தைத்தானடி சொல்கிறேன்! துரோகம் செய்யும் கலையில் அவனை வெல்வதற்கு யாரும் இன்னும் பிறக்க வில்லை! முல்லைத்தீவை ஆங்கிலேயருக்கு அடிமையாக்கி விட்டு, பண்டாரக வன்னியனையும் ஆங்கிலேயரின் கைதியாகப் பிடிக்கச் செய்து, நார்த் பிரபுவின் நம்பிக்கைக்குரிய நண்பனாக ஆக வேண்டு மென்பதே தனது லட்சியமென்றும், அதுவே தனக்குப் பிறவி எடுத்ததின் பயன் என்றும் அவன் சொன்ன போது, அவனை அப்படியே கட்டிப் பிடித்து இருபது முத்தம் கொடுத்தேன்!"

"கண்டி ராஜ்யத்தைப் பற்றி எதுவும் பேசவில்லையா?"

"இருபதைப் பெற்றுக்கொண்டு பேசாமல் இருப்பானா? முல்லைத்தீவுக்கு இந்தக் காக்கை! கண்டிக்கு அந்தக் கழுகு! இரண்டும்தான் இனி ராஜாக்கள் – என்றான்!"

"கழுகா? அது யார்?"

"என் தந்தை பிலிமதளாவையைத் தான் அவ்வளவு அழகாகச் சொல்லுகிறான்."

"நன்றாக இருக்கிறது! உம்! சொல்லு!"

"பண்டாரக வன்னியனின் பலத்தைப் படிப்படியாகக் குறைக்க வேண்டும். முதல் குறியாக தணிகைமலையைத் தீர்த்துக் கட்ட வேண்டும். காக்கை வன்னியன் தன்னந்தனியனாகத் தவம் செய்ய வற்றாப்பளை கண்ணகி கோயிலுக்கு மூன்று நாட்கள் வரப்போவதாகச் சொல்லி, அங்கே தன்னந்தனியனாகத் தணிகைமலையைப் போகச் செய்வது! கண்ணகி கோயிலில் தணிகைமலையைத் தீர்த்துக் கட்டுவது! இந்தத் திட்டத்தைக் காக்கை வரவேற்று ஏற்றுக் கொண்டு விட்டான்."

"அடுத்தது?"

"காக்கை வன்னியன் என்று தெரியாமலே அவனைக் காதலித்துக் கொண்டிருக்கிறாளாம், பண்டாரகனின் சகோதரி நல்லநாச்சியார்!"

"அப்படியா?"

"ஆமாம்! தன்னை ஒரு பெரும் வணிகன் என்றுகூறி, நல்ல நாச்சியின் காதலனாக நடித்துக் கொண்டிருக்கிறானாம் காக்கை!"

"அப்படியானால் அந்தக் காதல் விவகாரத்தை வைத்தே நல்ல நாச்சிக்கும் பண்டாரகனுக்கும் விரோதத்தை உருவாக்கலாமே!"

"ஆமாம் - அதற்கும் திட்டம் இருக்கிறது! நல்லநாச்சியாருக்கும் பண்டாரகனுக்கும் பகை ஏற்பட்டுவிட்டால் பிறகு திருகோணமலையின் மீது பண்டாரக வன்னியனுக்குள்ள ஆதிக்கம் அற்றுப் போய்விடும். நல்லநாச்சியை நமது கைக்குள் போட்டுக்கொண்டு பண்டாரகனின் பாதி பலத்தைக் குறைத்துவிட முடியும். அதற்குப் பிறகு பனங்காமத்தில் உள்ள ஊமைச்சி நாச்சி - பண்டாரகனின் இன்னொரு தங்கச்சி - அவளை அழிப்பது - அல்லது பண்டாரகனுக்கு அவளையும் பகையாக்குவது - இப்படியாக பண்டாரக வன்னியனின் வலிமையான இறக்கைகளை வெட்டி விட்டு - அவனைப் பறக்க முடியாமல் செய்து பரங்கியரின் சிறையில் பூட்டுவது!"

"சபாஷ், பியசீலி! சபாஷ்! வற்றாப்பளை கண்ணகி கோயிலுக்கு இன்றிரவே காக்கை வன்னியன், தக்க ஏற்பாடுகளுடன் வந்து

விடுவான் என்றால் - இன்றைக்கே தணிகைமலையை அங்கு அனுப்பி, விவகாரத்தை வெற்றிகரமாக முடித்து விடலாமே!"

"இல்லை! தணிகையை நாளைக்கு அனுப்பலாம்!"

"ஏன் ஒரு நாள் தாமதிக்க வேண்டும்?"


"இன்று ஒரு நாள் இரவு, அவனுடன் இருக்க வேண்டும் போலிருக்கிறது!"

"என்ன பியசீலி, இப்போது இதுவா முக்கியம்? வந்த வேலையில் கவனம் வேண்டாமா?"

"மர்த்தனீ! இந்த ஒரு நாள் இரவை அவனுடன் நீ பாதி நான் பாதி என்று பங்கிட்டுக் கொள்ளலாம். சரிதானா?"

"சரி! உன் இஷ்டப்படி செய்!" என்று பிடிக்காதவளைப் போலப் பாசாங்கு செய்து - இறுதியில் ஒப்புக் கொண்டாள் மர்த்தனி!

தேவை நூறு வீரர்கள்!



மறுநாள் காலையில் மிகுந்த களைப் புடன் எழுந்தான் தணிகைமலை! பியசீலியும் மர்த்தனியும் போட்டி போட்டுக் கொண்டு ஏற்றிய களி நடன போதையில் இரவு முழுதும் செலவாகி, விடியற்காலையில் சற்றுக் கண்ணயர்ந்தவனுக்கு, திடுமெனத் தூக்கி வாரிப்போட்டு விழிப்பு வந்து விட்டது! உடலை வளைத்துத் திருகி சோம்பல் முறித்துக்கொண்டு அவனையும் மீறி வந்து கொண்டிருந்த கொட்டாவியை மிகச் சிரமத்துடன் அடக்கப் பார்த்து முடியாமல், அவசர அவசரமாகக் குளிர்ந்த நீரைத்தலையில் கொட்டிக் குளித்து முடித்து ஆடை உடுத்திப் புறப்பட ஆயத்தமானான.

இரவில் நிகழ்ந்த இன்ப கேளிக்கையால் அவனுடல் அலுத்துப் போயிருந்தாலும் - உள்ளத்திலே ஒரு கிலுகிலுப்பு!

மர்த்தனி மது கொடுத்தால் - பியசீலி, இதழ் கொடுப்பாள்! இவள் இதழ்கொடுத்தால் - அவள் இடை நெளிப்பாள்! ஒரு கன்னம் உனக்கு ஒரு கன்னம் எனக்கு என இருவரும் அவனது முரட்டுக் கன்னங்களில் உதடுகளால் உழுதபோது இன்பத்தின் உச்சாணிக் கொப்புக்கே அவன் போய் விட்டான்!

ஊமைக் கணவன் தன்னை விட்டுப்போய் விட்டான் என்று தவித்தவள் மர்த்தனி - அவன் எங்கே போனான் என்று தெரியாமல் திகைப்பவள் கலா - இந்த இருவருமே அந்தக் கவலையொன்றிருப்பதாகவே காட்டிக் கொள்ளாமல் அவனை அந்த இரவு முழுதும் அணுஅணுவாகச் சுவைத்ததை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது!

குருவிநாச்சியார் சந்தேகப்பட்டது போல! வஞ்சகம் புரிய வந்தவர்கள் தான்! அதில் இரண்டு கருத்துக்கு இடமிருப்பதாக

அவன் நினைக்கவில்லை! இருப்பினும் வலுவில் வந்து வாரியிறைக்கப்படும் இன்பத்தேன் துளிகளை வெறுத்து ஒதுக்கும் முட்டாளாக ஏன் இருத்தல்வேண்டும்! அதனால் ஆசை தீர அனுபவித்து மகிழ்ந்தான்! சரசம், விரசம், சகலமும் அந்தப் பெண்கள் இருவருக்கும் அத்துபடி! அதில் அவன் ஏமாந்து கிடக்கிறான் என்றெண்ணி கற்ற வித்தைகள் அனைத்தையும் காட்டினர்! விழித்துக்கொண்டே தூங்கியவன் போல் நடித்த தணிகைமலைக்கு அந்த இரவு இன்ப இரவே தான்!

"கண்டி ராஜாவுக்கு நாங்கள் கோடி கோடி நன்றி கூற வேண்டும்! அவர் எங்களை இங்கே அனுப்பி வைக்காமல் இருந்திருந்தால் எங்களுக்கு இப்படியொரு அதிர்ஷ்டம் வாய்த்திருக்குமா?"

என்றவாறு அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு செல்லக் கடி கடித்தாள் கலா என்ற பியசீலி!

"ஊமைப் புருஷன் ஜெயசீலன் ஓடி விட்டானேயென்று முதலில் வருத்தமாகத்தானிருந்தது! என் தாகம் முழுவதையும் இந்தத் தணிகைமலை தணித்து விட்ட பிறகு, இவருடனேயே வாழ்ந்து விடலாம் என்று தோன்றுகிறது!"

என்றவாறு அவன் கரங்களை எடுத்துத்தன் மார்போடு தழுவிக் கொண்டாள் மர்த்தனி!

பேய்கள் இரண்டு, பேரழகுப் பெண்களாக உருக்கொண்டு ஆடும் நாடகத்தை அவன் ரசித்தான்! அவர்களையும் முழுமையாக ரசித்தான்!

அந்த இரவின் நினைவலைகளுடன் அறையை விட்டுக் கிளம்பியவன், மேல் தளத்தில் என்ன நடக்கிறது எனப் பார்க்கப் படிகளில் ஏறினான். அவன் படிகளில் நடந்து வரும் ஓசை கேட்டு, அதுவரையில் விழித்துக் கொண்டிருந்த பியசீலியும் மர்த்தனியும் பரபரப்புடன் அங்கிருந்த பாய்களில் படுத்துக்கொண்டு மிக அயர்ந்து தூங்குவது போல் பாசாங்கு செய்தனர். மேல்தளத்திற்கு வந்தவன் அவர்களையே உற்றுப் பார்த்தவாறு நின்றான்.

தூக்கத்தில் இருவரும் ஏதோ புலம்புகிறார்களாம்! ஆமாம் - கனவு கண்டு புலம்புகிறார்களாம்! அந்தக் கனவு கூட அவர்கள்

இருவரும் கண்டி ராஜனிடத்திலும் பண்டாரக வன்னியனிடத்திலும் எவ்வளவு விசுவாசமாக உள்ளனர் என்பதை விளக்கும் கனவாக இருந்தது போலும்! அதனால்தான் அந்தப் புலம்பல்!

"முடியாது! முடியாது! விடமாட்டேன்!"

பண்டாரக வன்னியருக்கு எந்த ஆபத்து வரவும் விட மாட்டேன்!

"வாழ்க கண்டி மன்னர்! வாழ்க வாழ்க பண்டாரக வன்னியர்!"

"அந்தத் துரோகிப் பயல் காக்கை வன்னியன், கண்ணகி கோயிலில் சாகப்போகிறான் பார்!"

பியசீலி, மர்த்தனி இருவரும் தூக்கத்தில் கூட விசுவாசமுள்ள உத்தமர்களாக இருப்பதற்கு அடையாளமாக இப்படிப் புலம்பிக் காட்டுகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டானோ இல்லையோ, தணிகைமலை, ஒரு கனைப்புக் கனைத்துக் காட்டினான். நன்றாகத் தூங்கி விழித்தவர்கள் போல சரசிகள் இருவரும் கண்களைக் கசக்கிக் கொண்டு, அந்தத் தூக்கக் கலக்கத்தில் ஆடைகள் நழுவுவதும், விலகுவதும் தெரியாதவர்கள் போலக் கலைத்திறம் வெளிப்படுத்தியவாறு "நீங்களா? அதற்குள் எழுந்து புறப்பட்டு விட்டீர்களா?" என ஒரே குரலில் கேட்டனர்.

"ஆமாம்! ஜெயசீலனைத் தேட வேண்டிய வேலையிருக்கிறது. அதற்குப் பிறகு வற்றாப்பளை கண்ணகியம்மன் கோயிலுக்குப் போக வேண்டியிருக்கிறது" என்றான் தணிகை!

"கண்ணகியம்மன் கோயிலுக்கா? எதற்கு?" என்றாள் ஒன்றும் தெரியாதவள்போல மர்த்தனி!

"நான் தான் உன்னிடம் சொன்னேனே, அதற்குள் மறந்து விட்டாயா? அங்குதானே அந்த துரோகி காக்கை வன்னியன் மூன்று நாள் தவத்திற்காகத் தன்னந்தனியனாக வந்திருப்பான்! தனியாக வரும் அவனது தலையைத் துண்டித்து விட இவரும் நானும் ஒரு திட்டம் தீட்டி..."

பியசீலி சொல்லி முடிப்பதற்குள், "கலா! கலா!! இப்போது ஞாபகம் வந்து விட்டது! போதும் நிறுத்து!" என்று அவளது

வாயை மூடிய, மர்த்தனி – தணிகைமலையிடம் நெருங்கி, "என் கணவனைக் கண்டு பிடிப்பது கூட அடுத்த வேலையாக இருக்கட்டும்! முதலில் அந்தத் துரோகியைத் தொலைத்து விட்டுத் திரும்புங்கள்!" என்று கடுமையான குரலில் முழங் கினாள்.

"இரவு, அவன் தலையுடன் வருகிறேன்! என்ன பரிசு எனக்கு?" எனச் சிரித்துக் கொண்டே கீழிறங்கத் தயாரானான் தணிகை!

"தனியாகப் பரிசு தர என்ன இருக்கிறது! எங்களையே முழுமையாகக் கொடுத்து விட்டோமே!" என்றாள் பியசீலி!

அவன் கீழிறங்கிப்போய் விட்டான் என்று தெரிந்த பிறகு பியசீலி மர்த்தனியிடம் சொன்னாள்.–

"தலையைக் கொண்டு வரப்போகிறானாம் தலையை! பாவம், இவன் தலையை இழந்து விட்டு ஒருவேளை முண்டமாக வந்தாலும் வருவான்"

இருவரும் அந்த ஏமாளியை நினைத்து சிரித்துக்கொண்டனர். அவனோ எல்லாம் புரிந்தவனாக அந்தப் பெண்களை ஏமாளி யாக்கும் திட்டமுடன் அங்கிருந்து வெளியேறிக் குதிரையில் அமர்ந்து வேகமாகப் பறந்தான்.

"தணிகைமலை உங்களைப் பார்க்க வேண்டுமாம்! மிக அவசரமாம்!" என்று சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்த பண்டாரக வன்னியனிடம் செய்தி சொன்னாள் குருவிச்சி நாச்சியார்! இருவரும் பேசிக் கொண்டிருக்கும்போதே தணிகைமலை உள்ளே வந்து விட்டான்.

"என்ன விசேஷம்? ஏதோ அவசரம் என்று சொன்னாயாமே!"

"ஆமாம்! எனக்கு அவசரமாக ஒரு உதவி வேண்டும்!"

தணிகைமலை என்ன கேட்கப் போகிறான் என்று தெரியா மலேயே பண்டாரகனும் குருவிச்சியும் ஒருவரையொருவர் நோக் கினர்.

"நான் தங்களிடம் ஒற்றனாக மட்டுமல்ல – தங்களின் மெய் காப்பாளனாகவும் இருக்கிறேன்!"

"ஆமாம் அதற்கென்ன இப்போது?"

"தற்காலிகமாக நமது படைப்பிரிவு ஒன்றுக்கு நான் தளபதியாக வேண்டும்!"

"நீ கோருவது எனக்கு புரியவில்லையே தணிகைமலை!"

"தற்காலிகமாகத்தான் கேட்கிறேன்! நூறு வீரர்களை என்னுடன் அனுப்பித் தரவேண்டும்!"

"நூறு வீரர்கள்! உன்னுடன்?"

"ஆமாம்!"

"யாரை எதிர்க்க? எந்தக் கோட்டையைப் பிடிக்க?"

"தங்களை மீறிப்பேசி அறியாதவன் நான்! ஆனால் ஒன்று - இப்போது எந்த விபரமும் தங்களிடம் சொல்ல இயலாத நிலையில் இருக்கிறேன். தயவு செய்து நூறு வீரர்களை அழைத்துச் செல்ல அனுமதி கொடுங்கள்!"

"குருவிச்சி! தணிகை சொல்வதைக்கேட்டாயா? வீரர்கள் வேண்டுமாம் - ஆனால் ஏன் என்று விளக்கம் சொல்ல முடியாதாம்!"

குருவிச்சி நாச்சியார் தலையைக் குடைந்து கொள்ளாமலே ஓரளவு தணிகைமலையின் கோரிக்கைக்கான காரணத்தைப் புரிந்து கொண்டாள் போலும்!

கண்டி மன்னன் கடிதத்துடன் வந்திருப்பவர்களிடம் எச் சரிக்கையாக இருக்குமாறு குருவிச்சி, தணிகையிடம் கூறியிருந் தமையால், ஏதோ அதனையொட்டித்தான் அவன் தனக்குத் துணையாக நூறு வீரர்களைக் கேட்கிறான் என்றுணர்ந்தாள்.

"தணிகையின் சொல்லில் நம்பிக்கை வைப்பதற்கு ஜோசியமா கேட்க வேண்டும்? நூறு வீரர்கள் உடனடியாகத் தேவை யென்றால், அது ஏதோ ஒரு முக்கியமான காரியத்திற்காகத் தான் இருக்கும். வேண்டுகோளை முதலில் நிறைவேற்றிவிட்டு விளக்கத்தைப் பிறகு கேட்கலாம் என்பது என் கருத்து!"

"ஏனப்பா தணிகைமலை! கம்பெனிக்கார அதிகாரிகள் யாரா வது வருகிறார்களா? அவர்களைத் தீர்த்துக் கட்டவா?"

பண்டாரகன், தணிகைமலையிடமிருந்து எதிர்பார்த்தவாறு பதில் கிடைக்கவில்லை!

"மன்னித்துக் கொள்க என்னை! நான் என்றைக்கும் முட்டாள் தனமான வழியில் போக மாட்டேன்" என்றான் தணிகை திடமான தொனியில்!

"ஏய், தணிகைமலை! நீயா முட்டாள்தனமான வழியில் போக மாட்டாய்? இரவு முழுதும் இரண்டு ஆள்மயக்கிகளிடம் ஆனந்த சாகரத்தில் மிதந்தாயே, அது என்ன மிகவும் புத்திசாலித்தன மான வழியோ?"

இந்தக் கேள்வியை யாரும்கேட்கவில்லை! தணிகைமலையின் மனச்சாட்சியே அவனைப் பார்த்துக்கேட்டது!

அதற்கும் அவன் பதில் சொல்லிக்கொண்டான் - "முள்ளை முள்ளால் எடுப்பது என்பது பழமொழியாக இருக்கும் போது, மோகத்தை மோகத்தால் வென்று விடு என்பது புதுமொழியாக இருக்கக் கூடாதா?" என்பதே அந்த பதில்!

"நாச்சியார் அவர்களுக்கு எனது பணியின் முக்கியத்துவம் புரியும் என்று நம்புகிறேன்"

"ஓகோ! நாச்சியாருக்குத் தெரிந்தது எனக்குத் தெரியக் கூடாதோ?"

பண்டாரகன் கோபிக்கவில்லை, கேலியாக குருவிச்சியைப் பார்த்துக் கேட்டான்.

"நீங்களும் பிடித்தால் பிடிவாதம்!" என்று சன்னக் குரலில் கூறிக்கொண்டே பண்டாரகனைக் கடைவிழியால நோக்கிய வாறு நகர்ந்தாள் குருவிச்சி!


"சரி! என்ன காரணமாக இருந்தாலும் பரவாயில்லை! குருவீ! தணிகைமலையின் வேண்டுகோளை உடனே நிறைவேற்றி வை!"

பண்டாரகன் இப்படிச் சொன்னதும் குருவிச்சி நாச்சியார் தணிகைமலையை ஜாடை காட்டி அழைத்துக்கொண்டு அங் கிருந்து நகர்ந்தாள்.

பண்டாரகனின் காதுக்கெட்டாத தொலைவாக இருந்த போதிலும், அவன் காதில் விழுந்து விடப் போகிறது என்ற அச் சத்துடன் தணிகையிடம் குருவிச்சிகேட்டாள் எதற்காக நூறு பேர்?" என்று!

அவன், அவள் காதருகே மரியாதையுடன் வளைந்து நின்று ரகசியமாக ஏதோ சொன்னான்.

எல்லாம் நன்மைக்கே!



தணிகைமலை விரும்பியது போலவே அவனுடன் செல்வதற்கு நூறு வீரர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டாயிற்று. அவர்களை அழைத்துச் சென்று அன்று மாலையில் அடர்ந்த தோப்பு ஒன்றில் அமர வைத்த தணிகைமலை அவர்கள் தன்னுடன் வந்து என்ன செய்ய வேண்டும் என்பதற்கான யோசனைகளைத் தெரிவித்துக் கொண்டிருந் தான். கையில் ஏந்தியிருந்த கத்திகளையெல்லாம் அந்த வீரர்கள், தமது இடைக் கச்சத்திற்குள் மறைத்து வைத்துக் கொண்டார்கள். தணிகைமலையைத் தவிர அனைவருமே சில விநாடிகளில் கண்ணகியம்மன் கோயிலுக்குச் செல்லும் பக்தசிரோன் மணிகளாக உருமாறினார்கள். ஒரு குழுவில் பத்து பேர் மற்றொரு குழுவில் பதினைந்து பேர் - இன்னொரு குழுவில் ஐந்து அல்லது ஆறு பேர் - இப்படி பிரிந்து பிரிந்து ஒவ்வொரு குழுவாகக் கண்ணகியம்மன் கோயிலுக்குச் செல்ல வேண்டும். எல்லாக் குழுக்களும் கோயிலுக்குப் போய்ச் சேர்ந்தவுடன், தணிகைமலை அங்கு குதிரையில் வந்து சேர்வான். அங்கே காக்கை வன்னியன் தவம் புரிவது போன்று பாசாங்கு செய்து கொண்டிருப்பான். ஆனால் அவன் வற்றாப்பளைக் கண்ணகி ஆலயத்திற்குத் தன்னந்தனியனாக நிச்சயம் வந்திருக்க மாட் டான். எங்கேயாவது ஒரு இடத்தில் கோயிலுக்கருகில் அவனது படை வீரர்களை மறைந்திருக்கச் செய்திருப்பான். தணிகை மலையை அந்த வீரர்கள் சுற்றி வளைத்துக் கொண்டு எப்படி யும் தீர்த்துக் கட்டிவிடுவார்கள். அவர்களை ஏமாளிகளாக்கி விரட்டியடித்துக் காக்கை வன்னியனைக் கைது செய்து

முல்லைத் தீவுக்கு இழுத்து வருவதற்கான பணி, மிகச் சுலபமாக நிறைவேறப் போகிறது. அதற்காகவே முல்லைத் தீவின் வீரர்கள் நூறு பேர் பக்த சிகாமணிகளாகப் பத்தினியம்மன் கோயிலுக்கு முன்கூட்டி அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

இந்த திட்டத்தை வெளியிட்ட தணிகைமலை, வீரர்களைத் தனித் தனிக் குழுக்களாக அந்தத் தோப்பிலிருந்து அனுப்பி வைக்கத் தொடங்கினான்.

"பாவை கண்ணகியே!
பழி வாங்கும் பத்தினியே!
கோவலனின் குல விளக்கே! எங்கள் குடும்பத்தை காப்பாற்று தாயே!"

இப்படியொரு குழுவினர் பாடிக் கொண்டு, தோளில் காவடி களைச் சுமந்து சென்றனர்.

"கண்ணான தேவியம்மா-எங்கப்
பெண் தெய்வ மாரியம்மா!
மண் மேலே ஒரு தெய்வம்-ஏன்?
விண் மீதும் இல்லையம்மா!
கடுங் கோபக்காரியம்மா-எங்கக்
கண்ணகிக் காளியம்மா!
வரம் வேண்டி வாரோம் அம்மா
தர வேண்டும் தாயே சும்மா!"

இவ்வாறு ஒரு குழுவினர் பாடிக் கொண்டு குதித்துக் கும்மாளம் போட்டவாறு தலையில் கரகங்களைச் சுமந்தபடி பக்திச்சுவை சொட்டச்சொட்ட வற்றாப்பளை நோக்கி புறப் பட்டனர்.

தனது யோசனைக்கும் அதிகமாகவே தனது வீரர்கள் செயல் பட்டுச் செல்வது கண்டு தணிகைமலை பூரித்துப் போனான். எல்லாக் குழுக்களும் அங்கிருந்து கிளம்பிய பிறகு அவன் குதிரை யைத் தட்டி விடுவான். அதுவரையில் அந்தத் தோப்பில் உள்ள ஒரு பெரிய மரத்தடியில் குதிரையிலிருந்தவாறே கவனித்துக் கொண்டிருந்தான்.

இதற்கிடையே மர்த்தனியுடன் இணைந்து வகுத்த திட்டத் தின்படி கலா உருவில் உள்ள பியசீலி . திரிகோணமலையில் நல்லநாச்சியார் மாளிகையருகே போய்ச் சேர்ந்தாள். இப்போது அவள் முன்பு இருந்ததைக் காட்டிலும் அதிகப் பொருத்தமாக - தத்ரூபமான குறி சொல்லும் மங்கையாகவே தோன்றினாள். வளைந்து, நெளிந்து, குழைந்து மாளிகை வாசலுக்குப் போய்ச் சேர்ந்த கலா, நல்லநாச்சிக்கு ஒரு அவசரமும் ஆபத்தும் கலந்த செய்தியைச் சொல்ல வேண்டும் - அதுவும் உடனடியாகச் சொல்ல வேண்டும் என்று பரபரப்புடன் துடித்தாள். இப்படி யொருத்தி மாளிகை வாசலில் பதட்டப்படுவதை நல்லநாச்சி யாரிடத்தில் அரண்மனை வீரர்கள் தெரிவிக்கவே, அவளும் கலாவை உடனே அழைத்து வருமாறு கட்டளையிட்டாள். உள்ளே வந்து மிக்க மரியாதையுடன் வணங்கி நின்றாள் கலா.

"யாரம்மா நீ?"

"குறி சொல்லுகிறவள்!" குறத்தி!

"எங்கே வந்தாய் என்னிடம்?"

கலா, சுற்றுமுற்றும் தனது வண்டு, விழிகளால் பார்த்தாள். பிறகு மெல்லப் பதில் சொன்னாள்?"

"தனியாக உன்னோடு பேச வேண்டும் தாயே!"

அதைக் கேட்டவுடன், நல்லநாச்சியார் அங்கிருந்த வீரர்களை யும் - தோழிகளையும் ஜாடைகாட்டி ஒதுங்கிப் போகுமாறு பணித்தாள்.

"குறத்தீ! உன் பெயர் என்ன சொன்னாய்?"

"என் பெயர் கலா! முழுப் பெயர் கலாவதி!"

"குறி சொல்லுமாறு உன்னை யாராவது இங்கு அழைத்தார் களா?"

"நான் குறி சொல்லவரவில்லை. ஒரு கொடுமையான காரியத் தைத் தடுப்பதற்காக ஓடி வந்தேன்."

"புரியும் படி சொல்!"

"சொல்லத்தானே வந்திருக்கிறேன்"

கலா, தனது கண்களை முந்தானைத் தலைப்பினால் துடைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள். அந்த விம்மலில் பெண்களைக் கூடக் கவரத்தக்க அளவுக்கு அவளது மார்பகம் உயர்ந்து தாழ்ந்தது.

"அழாதே! அவசர விஷயம் என்றாய், ஆபத்தான விஷயம் என்றாய்! அதைச் சொல்ல ஏன் இவ்வளவு தயக்கம்?"

"உன் காதலன் பிர்மானந்தனுக்குக் குறி சொல்லப் போனதால் வந்த வினைதான் எல்லாம்!"

பிர்மானந்தன் என்ற பெயரைக் கேட்டதும் நல்லநாச்சி, அதிர்ச்சி அடைந்தாள். அவருக்கு என்ன நேர்ந்து விட்டதோ என்ற கவலையால் வாடிப் போனாள். எனவே பதைப்புடன் கேட்டாள் "என்ன நடந்தது? என்ன நடந்தது?" என்று!

"இனி என்ன நடக்க வேண்டும்? நடக்கக் கூடாதது நடக்கப் போகிறது! அதை எப்படியும் தடுப்பதற்கே இங்கே ஓடோடி வந்திருக்கிறேன்"

நல்லநாச்சியாருக்கு உச்சி முதல் உள்ளங்கால் வரையில் நடுக்கம்! இந்தக் குறத்தி தனது அருமைக் காதலனைப் பற்றி என்ன ஆபத்தான செய்தி சொல்லப் போகிறாளோ என்று திகைப்புடன் அவளைப் பிடித்துக் குலுக்கினாள்.

"சொல்லடி! அவர் நன்றாயிருக்கிறார் அல்லவா?"

"இந்தக் கணம் வரையில் நன்றாகத்தான் இருக்கிறார். ஆனால் இன்னும் சில நாழிகைகளில் என்ன ஆவாரோ, அது அந்த வற்றாப்பளை கண்ணகியம்மனுக்குத் தான் வெளிச்சம்!"

"அய்யோ! என் இருதயத்தை நொறுக்குகிறாயே, என்ன என்ற விபரத்தைச் சொல்லேன்"

"அம்மா! உனக்கு அந்த பிர்மானந்தரிடம் உண்மையான காதல் தானே!"

"துடிக்கிறேனே! பார்த்தாலே தெரியவில்லை?"

"தெரிகிறது! தெரிகிறது! துடித்து என்ன பயன்?"

"இன்னும் எவ்வளவு நேரம் உன் ஆருயிர்க் காதலன் இந்த உலகத்தில் இருக்கப் போகிறாரோ? யார் கண்டது?"

"அய்யோ! என்னை சித்ரவதை செய்யாதே! விபரத்தைச் சொல்!"

"குறி பார்க்க என்னைக் கூப்பிட்டு அனுப்பினார். நானும் போனேன்".

"ம்! பிறகு சொல்லு!"

"இரு! தாயே! அவசரப்படாதே! பொன்னும் பொருளும் எவ்வளவு வேண்டுமானாலும் தருகிறேன். என் கைரேகைகளைப் பார்த்து என் எண்ணம் ஈடேறுமா? என்று உடனே சொல் - என்றார்! நான் சொன்னேன்! அய்யா பெருவணிகப் பெருமானே! உமது அழகைப் பார்த்துக் கொண்டிருந்தாலே போதும், அதுவே எனக்குப் பரிசுதான்! வேறு பொன்னும் பொருளும் வேண்டாம் என்றேன் - இதைச் சொன்னதும் அவருக்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை! அடியே குறத்தி! சொர்க்கத்திலிருந்து ஊர்வசியும் ரம்பையும் இறங்கி வந்தாலும் சரி, என் நல்லநாச்சியைத் தவிர எந்தவொரு பெண்ணையும் மனதால் கூட தீண்டமாட்டேன் என்று உரக்கக் கத்தி விட்டார்!"

கலாவின் இந்தக் கற்பனை கேட்டு, நல்லநாச்சி விண்ணில் சிறகடித்துப் பறந்தாள். அப்படிப்பட்ட என் தெய்வத்துக்கு என்ன ஆபத்து வந்ததோ என அவள் உள்ளம் புலம்பித் தவித்தது.

"நான் காதலிக்கிற பெண்ணை நான் அடைவேனா?

என்று பிர்மானந்தன் கேட்டதும் நான் உதட்டைப் பிதுக்கி விட்டேன்!"

"ஏனடி, ஏன்?"

"அவரது கைரேகை அப்படித் தான் சொன்னது. அந்த உண்மையைச் சொன்னேன். உடனே அவர் தரையில் விழுந்து தடதடவெனப் புரண்டு அழுதார். என் நல்லநாச்சி எனக்குக் கிடைக்காவிட்டால் இந்த உலகத்தில் இருந்து பயன் என்ன என்று கதறினார்"

"பிறகு என்ன நடந்தது?"

பாவம், திரிகோணமலையைக் காக்கும் அந்த வீராங்கனையினால் தனது காதலனின் துன்பத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவள் உணர்வுகளை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளும் முடிவுக்கு வந்து விட்டாள் கலா!

"நல்ல நாச்சியை நீ மணப்பது என்பது இந்த ஜென்மத்தில் இல்லை! ஒருவேளை தப்பித் தவறி அந்த விதிமாற வேண்டுமானால் வற்றாப்பளை கண்ணகியம்மன் கோயிலில் போய் மூன்று நாள் தவம் இரு! கண்ணகியம்மன் கருணையினால் உன் காதல் நிறைவேறலாம் என்று சொன்னேன்!"

"உன் பேச்சைக் கேட்டு என் காதலர் அங்கே தவம் செய்ய போய் விட்டாரா?"

"சாதாரண தவமில்லை! கடும் தவம்! என்ன சபதம் செய்து விட்டுப் போயிருக்கிறார் தெரியுமா?"

"சொல்லடி சொல்! என்ன சபதம்?"

"கண்ணகி கோயிலில் மூன்று நாள் தவமாம்! அதற்குள் நீ வந்து அவரை மணந்து கொள்ளாவிட்டால் அந்தக் கோயிலிலேயே அவர் பிணம் விழுமாம்!"

நல்லநாச்சியார், அவளையறியாமல் அலறிவிட்டாள்! கொண்டு வாருங்கள் என் குதிரையை என்று உரக்கக் குரல் கொடுத்தாள்!

குதிரையிலேறிப் பறந்து செல்லும் நல்லநாச்சியாரின் பைத்தியக் காரத்தனத்தை எண்ணிப் புன்னகை புரிந்தவாறு கலா நின்று கொண்டிருந்தாள்.

"ஏ, குறத்தீ! என்ன சொன்னாய்? நாச்சியார் எங்கே போகிறார்கள்?" என்றனர் அரண்மனையில் இருந்தவர்கள்.

"எல்லாம் நல்ல காரியத்துக்காகத்தான்!"

எனக் கூறிக்கொண்டே கலா, அங்கிருந்து வளைந்து நெளிந்து குழைந்து நடந்து அகன்றாள்.

கணையாழி மாற்றிக் கொண்டனர்

47

வற்றாப்பளை கண்ணகியம்மன் கோயிலுக்குள் கர்ப்பக் கிரகத்தையடுத்த முகப்பு மண்டபத்தின் பீடத்திற்கு எதிரே கண்களை மூடியவாறு கைகூப்பிய வண்ணம் தவம் செய்பவனைப் போல அமர்ந்திருந் தான் காக்கை வன்னியன். மூடப்பட்டிருந்த கண்கள், அடிக்கடி இமைகளின் இடுக்கு வழியாக யாராவது வருகிறார்களா எனத் தலை நீட்டிப் பார்த் துக் கொண்டும் - பின்னர் இமைகளைத் தாளிட்டுக் கொண்டும் ஒரு மோசமான சூழ்ச்சி நாடகத்தை அரங்கேற்றிக் கொண் டிருந்தன. அப்பொழுது தான் பாடல் ஒலி முழங்க பக்தர்கள் காவடிகளுடனும், கரகங்களுடனும் கோயிலுக்குள் வந்து குழுமினர். அவர்களைப் படைவீரர்கள் என அறியாது காக்கை வன்னியன் ஆழ்ந்த தவத்தில் இருப்பவனைப் போல மிகத் திறமையாக நடித்துக் கொண்டிருந்தான். அந்தப் பக்தர்கள், கண்ணகியம்மன் கோயில் பூசாரி மூலமாக தங்களது காணிக்கைகளைத் தேவிக்குச் செலுத்திவிட்டு, பக்தி சிரத்தையுடன் தொழுது வணங்கியதோடு - "யாரோ பெரிய மகான் போலிருக்கிறது" என்று ஒருவருக்கொருவர் கூறிக் கொண்டு காக்கை வன்னியனையும் கும்பிட்டு வணங்கியவாறு வரிசை வரிசையாக வெளியே நகர்ந்தனர். "இவன்தான் நமது இலக்கு" என்பது போலவும்- "இவன் நம்மை ஏமாற்றுவதாக எண்ணிக் கொண்டு தன்னை "ஏமாற்றிக் கொள்கிறான்" என்பது போலவும் ஒருவருக்கொருவர் குறும்புத்தனமாக கண்ணடித் துக் காட்டிய காட்சியைக் காக்கை வன்னியன் பார்க்கவில்லை. அவன்தான் இமைகளை இப்பொழுது இறுக்கி மூடிக்கொண்டு உதடுகளில் மந்திரம் முணுமுணுத்துக் கொண்டிருந்தானே!

கர்ப்பக்கிரக முகப்பு மண்டபத்தை விட்டு வெளியேறிய அந்த "பக்தர்கள்" - ஆலய வாசலில் ஐந்து பேர் ஆறு பேராகப் பிரிந்து பிரிந்து உட்கார்ந்து கட்டுச் சோறு மூட்டைகளை அவிழ்த்து உணவருந்தத் தொடங்கினார்கள். அப்போதும் பக்தி ரசம் நனி சொட்டச் சொட்டப் பாடல்கள்தான்..

பல்வேறு குழுக்களாக உட்கார்ந்து அவர்கள் சாப்பிட்டுக் கும்மாளம் கொட்டுவதை ஆலயத்திற்குச் சற்று தொலைவில் அடர்ந்திருந்த புதர்களின் பக்கம் மறைந்திருந்த நூற்றுக்கணக் கான கூரிய விழிகள் நோக்கிக் கொண்டிருந்தன. அந்த விழிகளுக்குச் சொந்தக்காரர்கள் காக்கை வன்னியனின் வீரர்கள். அவர்களுக்குத் தளகர்த்தனாக ஒருவன் கையில் ஒரு ஈட்டியுடன் புதர் மறைவில் உள்ள ஒரு பாராங்கல்லில் அமர்ந் திருந்தான். அவன் தனது வீரர்களை பார்த்துச் சொன்னான். "இது ஏதோ சோற்றுப் பட்டாளம்! அம்மனுக்கு அஞ்சலி செலுத்தக் காவடியும் கரகமுமாக வந்துள்ளது! தின்று முடித் ததும் சென்று விடும்! எதற்கும் எச்சரிக்கையாக இருப்போம்!" வீரர்கள் அவன் பேச்சை ஆட்டு மந்தை போல ஒரே மாதிரி தலையசைத்து ஆமோதித்தனர்.

புதர்களினிடையே இருந்த காக்கை வன்னியனின் வீரர்கள் கவனித்துக் கொண்டிருக்கும்போதே - குதிரையொன்று மெல்ல நடந்து வரும்காலடியோசை கேட்டது. அந்த வீரர்கள் மட்டுமல்ல, ஆலயத்தைச் சுற்றி அமர்ந்திருந்த பக்தர்களும் - குதிரையிலிருந்து கீழே இறங்கிய தணிகைமலையை ஆவலுடன் பார்த்தனர். அப் போதுதான் கோயிலுக்குள்ளேயிருந்து வெளியே வந்த பூசாரி, சிறிது திகைப்புற்று நின்றார். பூசாரியைப் பார்த்துத் தணிகை மலை "சற்று நேரத்தில் இங்கே புயல் வீசக்கூடும். நீர் போய் விடுவது நல்லது!" எனச் சொன்னதுதான் தாமதம் - அவர் அங்கிருந்து பறந்து விட்டார்.

தணிகைமலை, ஆலய வாசலில் குழுக்களாகப் பிரிந்து அமர்ந் திருந்த தனது பக்தர்களை கோபத்துடன் நோக்குவது போலப் பார்த்தான். "இங்கே என்ன கூட்டம்? போய் விடுங்கள் இதை விட்டு!" என்று ஆத்திரத்துடன் கத்தினான். தணிகை மலையின் நடிப்பாற்றலை மெச்சியவாறு அந்த பக்தர்கள் அங்கிருந்து வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து காக்கை வன்னியனின்

வீரர்கள் ஒளிந்திருந்த புதர்களின் ஓரம் போய் அணிவகுத்து அமர்ந்து கொண்டனர்.

"யார் இந்த ஆள்? நம்மை இப்படி மிரட்டி விரட்டி அடிக்கிறான்? அம்மனைக் கும்பிட வந்த இடத்தில் இவன் ஏன் இத்தனை ஆர்ப்பாட்டம் செய்கிறான்?"

என்று எதுவும் தெரியாதவர்களைப் போல, அந்த பக்தர்கள் உரக்கப் பேசிக் கொண்டது, காக்கை வன்னியனின் வீரர்களின் காதுகளிலும் விழுந்தது.- அவர்களின் காதில் விழ வேண்டு மென்றுதானே அந்த பக்தர்கள் பேசினார்கள்!

தணிகைமலை, காலணியைக் கழற்றி ஆலய வாசலில் விட்டு விட்டு உள்ளே நுழைந்தான். எல்லோரும் வெளியேறியிருந்த காரணத்தால் அமைதியாக இருந்த கர்ப்பக்கிரக முகப்பு மண்ட பத்தில் யாரோ வருகிற ஓசை கேட்கிறதேயென்று விழிகளை மெல்லத் திறந்து கவனித்தான் காக்கை வன்னியன். தணிகை மலைதான் என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டான்.

"என்ன? கண்ணகி தேவியின் முன்னே காக்கை கடுந்தவம் புரிகிறதோ?"

கேலி நிறைந்த கேள்வி.

அந்தக் கேள்விக்குக் காக்கை வன்னியனிடமிருந்து பதில் வரவில்லை.

"என்ன, கேட்கிறேன் - பதிலே இல்லை?"

காக்கையின் தோளில் தணிகை ஒரு தட்டுத் தட்டினான் மெதுவாக!

அப்போது திடீரென ஆறு வீரர்கள் அந்த முகப்பு மண்ட பத்தின் மேல் விதானத்திலிருந்து திடீரெனக் குதித்தார்கள். அவர்கள் அந்த விதானத்துடன் ஒட்டிக் கொண்டு மறைந் திருந்ததை, தணிகைமலையின் வீரர்களும் கவனிக்காமலே தான் போயிருக்கிறார்கள்.

குதித்திட்ட அந்த வீரர்கள் தணிகைமலையின் மீது ஒரு இரும்புச் சங்கிலியை வீசி, அவனை இறுகப்பிணைத்து விட் டார்கள்.

"என்னப்பா தணிகைமலை? எப்படியிருக்கிறது உன் கேள் விக்கு பதில்? உனது தலைவன் - அதாவது அவன்தான் அந்த திமிர் பிடித்தவன் பண்டாரக வன்னியன் எப்படியிருக்கிறான்?

இனி அவன் கதை நடக்காது என்று சொல்! ஓ! நீ திரும்பிச் சென்றால் அல்லவா நான் சொன்னதை அவனிடம் சொல்ல! எப்படி என் ராஜ தந்திரம்? உங்கள் சூரத்தனத்தை சூழ்ச்சியால் முறியடிப்பது என்று முடிவு கட்டிவிட்டேன். அதன் முதல் கட்டம் இப்போது அரங்கேறப் போகிறது.

என்றுரைத்தவாறு அவன் கன்னத்தில் மெல்லத் தட்டிச் சிரித்துக் கொக்கரித்த காக்கை வன்னியன், தனது ஆறு வீரர்களையும் நோக்கி ஆணையிட்டான்.

"உம்! தணிகைமலையைக் கொண்டு போய்க் கண்ணகியம்மன் கோயில் கொடி மரத்தில் கட்டிவையுங்கள். இவனது உடல் மட்டுமல்ல, இவன் வாயும் கட்டப்பட வேண்டும். சற்று நேரத்தில் நல்லநாச்சி என்னைத் தேடிக் கொண்டு இங்கு வந்து விடுவாள். அவளும் நானும் அம்மன் சன்னதியில் திருமணம் முடித்துக் கொண்டு, மணக்கோலத்துடன் இவன் எதிரே வந்து இவனது தலையைக் காணிக்கையாகப் பெற்றுக் கொள்கிறோம்".

வீரர்கள், தணிகைமலையை இழுத்துக்கொண்டு வெளியே வந்தனர். புதர்களுக்குமுன்னே அணிவகுத்திருந்த பக்தர்கள் பதறிப்போனார்கள். அப்போது தணிகைமலை தனது கையை உயர்த்தி ஏதோ சைகை காட்டினான். அந்த சைகைக்கு அமைதியாய் இருக்க வேண்டுமென்று அர்த்தம். எனவே அமைதி நிலவியது. புதர்களுக்குப் பின்னால் ஒளிந்திருந்த காக்கை வன்னியன் வீரர்கள் முதல் வெற்றி கிடைத்த களிப்பில் மூழ்கிக் குதித்தனர். அவர்களின் ஆரவாரத்தை அந்த தளகர்த்தன் அடக்கி வைத்தான்.

இப்போது மீண்டும் ஒரு குதிரை வரும் ஓசை! முன் போல அல்ல! மிக வேகமாக வந்து ஆலய வாசலில் நின்றது அந்தக் குதிரை! குதிரையிலிருந்து குதித்த நல்லநாச்சியாருக்கு சுற்று முற்றும் பார்க்கக்கூட சிந்தனையில்லை! ஆலயத்துக்குள்ளிருக்கும் தனது காதலன் பிர்மானந்தனைக் காணவேண்டும் - அதுவும் உயிரோடு காணவேண்டும் என்ற துடிப்புடன் உள்ளே ஓடினாள். தடுமாறிக் கீழே விழும் அளவுக்கு ஓடினாள். விழுந்தெழுந்து வீறிட்டலறிக் கொண்டு உள்ளே ஓடியவளின் முன்பாக ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருந்தான் காக்கை வன்னியன்.

"என்னங்க! என்னங்க! ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? தயவு

செய்து என்னைப் பாருங்கள்! இதோ உங்கள் நல்ல நாச்சியார் வந்துவிட்டேன்!" என்று அவனது தொடையைத் தொட்டு உலுக்கிக் குமுறி அழத் தொடங்கி விட்டாள்.

"யார்? நல்லநாச்சியா? என் அன்புக்கிளியா? என் அமுதமா? என் ஆருயிரா? என் தங்கமே! நீயா? உண்மையிலேயே நீ தானா? வந்துவிட்டாயா?"

நடிப்பின் உச்சக்கட்டத்திற்கே போய்விட்டான் காக்கை வன்னியன்.

"நானேதான்! உங்கள் நல்ல நாச்சியேதான்! நல்லவேளை அந்த குறத்தி வந்தாள் - இல்லாவிட்டால் இந்நேரம் என் தெய் வத்தை இழந்திருப்பேன்!"

"அன்பே! இந்த பிர்மானந்தனின் உள்ளத்தை அறிந் திருந்தும், அந்த உள்ளத்தில் உனக்கு ஒருத்திக்குத்தான் இடம் என்று புரிந்திருந்தும் நமது திருமண விஷயமாக நீ இது வரை யில் எந்த முடிவான தகவலும் அனுப்பாததால்தான் நான் இப்படியொரு தீர்மானத்திற்கு வந்தேன்."

"என் அண்ணனைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா? அவருக்கு எத்தனையோ அல்லல்! எத்தனையோ பிரச்சினை! அதனால் அவரிடம் நான் பிடிவாதமாக வலியுறுத்த முடியவில்லை. என் சகோதரியும் என்னைக் கொஞ்ச நாள் பொறுமையாக இருக்கச் சொன்னாள். பிறகு அண்ணன் சம்மதத்தைப் பெற்று விடலாம் என்று நம்பிக்கை தெரிவித்தாள். அதனால்தான் நான் தங்களுக்கு தகவல் அனுப்பவில்லை. அதற்காக இப்படியொரு முடிவு எடுப்பதா?"

"நல்லநாச்சி! இப்போதும் நான் எனது முடிவை மாற்றிக் கொள்ளப் போவதில்லை. இதோ இந்தக் கண்ணகி தேவியின் சாட்சியாக அவளுக்கு முன்னாலேயே நமது காந்தர்வ மணம் நடந்தாக வேண்டும். நீயும் நானும் கணவன் மனைவியாக அம்மனின் காலடியில் விழுந்து வணங்க வேண்டும். மறுபடியும் நீ அண்ணனைக் காட்டி என்னை தவிக்க விடுவதாக இருந்தால், இங்கேயே இந்த இடத்திலேயே என் உயிரைப் போக்கிக் கொள் வதாக இருக்கிறேன்"

என்று உருக்கமுடன் கூறிய அவன், அம்மன் சிலையைப் பார்த்து உணர்ச்சிமயமாய் கத்தினான்.

"தாயே! கண்ணகியம்மா! நல்ல நாச்சியை உயிருக்குயிராக நேசித்த இந்த பிர்மானந்தன், இதோ உன் பாதாரவிந்தங்களில் பிணமாக விழப்போகிறேன்! என்னை ஏற்றுக் கொள்!"

கட்டாரியைக் கையில் எடுத்து மார்பில் குத்திக் கொள்ள மேலே ஓங்கிவிட்டான். நடிப்பு என்றுணராத நல்லநாச்சியார், திடுமென அவன் மீது பாய்ந்து அந்தக் கட்டாரியைப் பிடுங்கிக் கொண்டாள்.

"என்னை சாக விடு! நீயில்லாமல் இந்த உலகில் எனக்கு வாழ்க்கை ஒரு கேடா?"

எனக் கதறினான். அவன் நடிப்புக்குத் துணை புரியக் கண்ணீர் கூடக் கன்னங்களில் வழிந்தோடியது.

அந்தக் கண்ணீரைத் தனது அழகிய விரல்களால் துடைத்துக் கொண்டே நல்லநாச்சியார்,

"எனக்கும் அப்படித்தான் என்பதை நீங்கள் இன்னும் அறிந்து கொள்ளவில்லையா? நான் இப்போதே தயார்! கண்ணகி தேவியின் சாட்சியாகக் கணையாழிகளை மாற்றிக் கொள்வோம்"

என்று சொன்னது தான் தாமதம், அவன் அந்த மண்டபத்து விதானம் வரையில் எழுந்து குதித்து அவளைத் தூக்கிக் கொண்டான்.

"உஸ்! தேவி சன்னதி!" என்று அவள் கொஞ்சலாக அதட்டியதும் விட்டுவிட்டான்.

இருவரும் அந்த மண்டபத்திலேயே கணையாழி மாற்றிக் கொண்டனர்.

கண்ணகியைத் தொழுதனர். ஆலயத்திலிருந்து ஆனந்தமாக வெளியே வந்தனர். கைகோத்துக் கொண்டு ஆலய வாசலில் வரும் இருவரையும் கொடி மரத்தில் கட்டப்பட்டிருந்த தணிகைமலை ஆத்திரம் கொப்பளிக்கப் பார்த்தான்.

"அதோ பார்த்தாயா, ஒரு முட்டாள் என்னுடன் மோத வந்தான்! அடிப்பட்டுக் கிடக்கிறான்."

என்று கொடி மரத்தின் பக்கம் விரலை நீட்டிக் காட்டினான் நல்லநாச்சியின் காதலன் பிர்மானந்தன்! அதாவது காக்கை வன்னியன்!

முகத்திரை கிழிந்தது!

48

அவன் சொல்லி முடிப்பதற்குள், காவடியுடனும் கரகங்களுடனும் புதர் அருகே இருந்த "பக்தர்கள்" கச்சை கட்டியவர்களாய், கட்கம் ஏந்தியவர்களாய் பாய்ந்து வந்து அந்தக் கொடி மரத்தைச் சூழ்ந்து கொண்டனர். கண்சிமிட்டும் நேரத்திற்குள் தனக்கு முன்னால் மாறிவிட்ட காட்சி கண்டு காக்கை வன்னியன் பதறிப் போனான். முல்லைத் தீவின் வீரர்கள் முந்திக் கொண்டு விட்டால் ஆபத்து என்பதை ஒரு நொடிக்குள் உணர்ந்துவிட்ட அவன், புதருக்குப் பின்னால் மறைந்திருந்த தனது வீரர்களுக்கு சைகை காட்டிக் கொண்டே உரக்கக் கத்தினான். அடுத்த விநாடியே அவர்கள் புதர்களில் இருந்து வெளிப்பட்டு முல்லைத் தீவின் வீரர்களை வளைக்கத் தொடங்கினர். வாட்கள் மோதும் ஒலி! ஈட்டிகள் பாயும் மின்னல் வீச்சு! வெட்டுண்ட தலைகள் வீழ்ந்து புரண்டன தரையில்! குத்துண்ட உடல்கள் பூமியை ரத்தத் தால் நனைத்தன! நல்லநாச்சியாருக்கு ஒன்றுமே புரியவில்லை! பிர்மானந்தனின் உயிரைக் காப்பாற்றி அவனிடத்தில் தன்னை ஒப்படைத்து விட வந்த இடத்தில் திடீரென இரு படைகள் மோதிக் கொள்கின்றன - ஒரு படை முல்லைத் தீவின் படை, அதாவது தனது அண்ணன் பண்டாரக வன்னியனின் படை - மற்றொரு படை யாருடையது? இந்தக் கேள்விக்கு அவள் பதில் காண்பதற்குள் "உனக்குத் தெரியவில்லையா? ஒன்று பண்டாரகன் படை! மற்றொன்று காக்கை வன்னியனின் படை!" என்றான் பிர்மானந்தன் எனக் கூறிக் கொண்டிருக்கும் காக்கை வன்னியன்.

அதற்குள் நல்லநாச்சியாருக்கு ஏதோ சந்தேகம் வந்துவிட்டது - கொடி மரத்தில் கட்டப்பட்டிருக்கும் தணிகைமலையை

நோக்கி ஓடினாள், ஆனால் காக்கை வன்னியன் அவளை விடவில்லை. இழுத்துப் பிடித்து நிறுத்திவிட்டான்.

"தணிகைமலை முல்லைத்தீவின் ஒற்றர். அவரை ஏன் கட்டிப் போட்டிருக்கிறீர்கள்? இங்கே என்ன நடக்கிறது? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே!"

என்று உரத்த குரலில் கேட்டாள் நல்ல நாச்சியார். அவளைத் தொடர்ந்து ஏமாற்ற வேண்டும் என்று தன்னைத் தயார்படுத்திக் கொண்ட காக்கை வன்னியன் - "அடேடே! இவன் முல்லைத் தீவுக்காரனா? எனக்குத் தெரியாதே! நான் கண்ணகி தேவிக்கு முன்னால் உன்னை நினைத்து தவம் செய்து கொண்டிருந்த சமயம் என் தவத்தைக் கெடுப்பது போல உள்ளே வந்து குறும்புத்தனம் செய்தான். என் ஆட்களை விட்டு இவனைக் கட்டிப் போடச் சொன்னேன்" என்று விளக்கமளித்தான்.

"நீங்களோ ஒரு வணிகர்! உங்களுக்கும் இந்தப் போருக்கும் என்ன சம்பந்தம்?"

போரின் பேரிரைச்சலுக்கிடையே அவனைப் பார்த்து நாச்சியார் இந்தக் கேள்வியைக் கேட்டாள்.

"அதுதான் எனக்கும் புரியவில்லை! நான் உனக்காகத் தவமிருந்து உயிரைவிட இங்கே வந்தேன்! ஆனால் இங்கு எல்லாம் ஒரே புதிராக இருக்கிறது! அவன் என் தவத்தை கலைப்பானேன்? நான் அவனைக் கட்டிப் போடச் சொல்லுவானேன்? திடீரென்று இந்த இடத்தில் காக்கை வன்னியன் படை வீரர்களும் பண்டாரக வன்னியன் படைவீரர்களும் மோதிக் கொள்வானேன்?"

"அவர்கள் மோதிக்கொள்வது இருக்கட்டும்! நீங்கள் ஏதோ சைகை செய்தீர்கள் - புதரில் இருந்து காக்கை வன்னியனின் வீரர்கள் வந்தார்கள்! அது ஏன் என்று எனக்குப் புரியவில்லையே!"

"அதுவா? உனக்குப் புரியவில்லையா? யாரோ இரு சாரார் மோதிக் கொள்கிறார்கள் - இந்த இடத்தில் நாம் ஏன் இருக்க வேண்டும் என்று எண்ணி, என்னுடைய குதிரையை வரச்சொல்லி அதில் இருவரும் ஏறி ஓடிவிடலாம் என்று குதிரைக்குப் பழக்க

மான குரலில் ஒலி எழுப்பினேன். அதற்குள் பெரிய போர்க்களமே உருவாகிவிட்டது. இதில் என் குதிரை எப்படி வர முடியும்? அதோ நீ வந்த குதிரையிருக்கிறது! வா அதில் போய் விடுவோம்!" என்றவாறு நல்ல நாச்சியை இழுத்துக்கொண்டு அவளது குதிரையிடம் ஓடினான்.

அதற்கிடையே கொடி மரத்தைச் சுற்றியும், கோயில் வாசலிலும் நடந்த போராட்டம் உக்கிரமான கட்டத்தை எட்டி விட்டது. காக்கை வன்னியனின் வீரர்கள் முல்லைத் தீவின் வீரர்களின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் பலர் செத்து வீழ்ந்தனர். சிலர் ஓட்டம் பிடித்தனர். தணிகைமலையின் கட்ட விழ்க்கப்பட்டு, அவனும் களத்தில் இறங்கி மரத்திலிருந்து பழுத்த பழங்களை உலுக்கி உதிர்ப்பது போல எதிரிகளின் அங்கங்களை வெட்டி உதிர்த்துக் கொண்டிருந்தான்.

போர்முனையில் தனது வாள் முனையில் ஒரு கண்ணும், நல்லநாச்சியைக் காக்கை வன்னியன் எங்கே கொண்டு போகிறான் என்பதை அறிவதில் ஒரு கண்ணுமாக இருந்த அவன், காக்கை வன்னியனின் தளபதியுடன் கடும்போரிட்டு அவன் உயிரற்ற உடலைத் தனது காலால் எட்டி உதைத்து வீசி எறிந்தவாறு - தனது குதிரையில் பாய்ந்து ஏறினான் குருதி வழியும் வாளை சுழற்றிக் கொண்டே!

அதற்குள்ளாக காக்கை வன்னியனும் நல்லநாச்சியும் குதிரையில் ஏறிக் கிளம்பிவிட்டனர். நல்லநாச்சியின் குதிரையை அவள்தானே ஓட்ட முடியும். அவளோடு அந்தக் குதிரையில் ஓட்டிக் கொண்டு உட்கார்ந்து சென்றான் காக்கை வன்னியன். அவளுக்கு இன்னமும் அவன் பிர்மானந்தன்தான்!

எனினும் ஒரு சந்தேகம் - தனது காதலன் பிர்மானந்தன் ஒரு வணிகன்! அவனுக்கு ஏன் இந்த வேண்டாத வேலை! எதற்காக அவன் தணிகைமலையைக் கொடி மரத்தில் கட்டிப்போட வேண்டும்? விடை கிடைக்காத வினாக்குறியுடன் குதிரையை வேகமாகச் செலுத்தினாள்.

"எங்கே போகிறாய் என் தங்கமே!"

"எங்கே போகவேண்டும் சொல்லுங்கள்!"

"என் மாளிகைக்குப் போகலாம்!"

"எவ்வளவு தொலைவு?"

"வழி சொல்லுகிறேன்! நான் சொல்லும் வழியில் நீ போய்க் கொண்டே இரு!" வலப்புறம் இடப்புறம் என்று அவன் பாதையைச் சொல்லச் சொல்ல அவள் குதிரையைப் பறக்க விட்டுக் கொண் டிருந்தாள்.

வெகுதூரம் போன பிறகு, தங்களுக்குப்பின்னால் ஒரு குதிரை வேகமாகத் தொடர்ந்து வரும் ஒலியைக் கேட்டனர் இருவரும்!

மிகுந்த ஜாக்கிரதையுடன் குதிரையை வேகமாகச் செலுத்திக் கொண்டே திரும்பிப் பார்த்த நல்லநாச்சியார் அதிர்ச்சியடைந்து குதிரையை நிறுத்தினாள்.

"ஏன்? ஏன்? நிறுத்திவிட்டாய்?" பதறினான் காக்கை வன் னியன்.

"நம்மைத் தொடர்ந்து வருவது தணிகைமலை! எனக்குத் தெரிந்த ஒற்றர்தான்!"

"யாராயிருந்தால் என்ன? வேண்டாம்! வேண்டாம்! விரட்டு குதிரையை!" என்று சப்தம் போட்டான் காக்கை வன்னியன்.

"நிறுத்தி என்னவென்று கேட்போமே! என்னை மீறி தணிகைமலை உங்கள் மீது கோபம் கொள்ள மாட்டார். உங்கள் இருவரையும் சமாதானம் செய்து வைக்கக்கூட என்னால் முடியும்."

"எதுவாயிருந்தாலும் – பாதி வழியில் வேண்டாம்! முதலில் என் மாளிகைக்குப் போய்ச் சேருவோம்! அவன் நம்மைத் தொடர்ந்து நமது மாளிகைக்கு வந்தால் அங்கே பேசிக் கொள்ளலாம்" காக்கை வன்னியனுக்குத் தனது பிர்மானந்த வேடம் வெளிச்சமாகி விட்டால் என்ன செய்வது என்ற பயம்! எப்படியும் நல்ல நாச்சியைத் தனது கோட்டைக்குள் கொண்டு போய் அவளது உடலைக் களங்கப்படுத்தி விடவேண்டும். ஆசை தீர அனுபவித்திட வேண்டும். அவள், தன்னைத் தேடி வந்து விட்டாள் – தனது மனைவியாகி விட்டாள் என்று கேள்வியுற்று பண்டாரக வன்னியன் துடிக்கவேண்டும்! அவமானத்தால் தலை கவிழவேண்டும்! இப்படியொரு திட்டம் தீட்டிக் கொண்டு

செயல்பட்ட காக்கை வன்னியன், குதிரையை இன்னும் வேகமாக விரட்டுமாறு அவளை விரட்டினான்.

நல்லநாச்சியாருக்கோ இவ்வளவு குழப்பத்திற்கிடையிலேயும் அவளது இதயத்தில் அவனுக்கு அளித்து விட்ட இடத்தை விட்டு அகற்றிட முடியவில்லை! அவளது கேள்வியெல்லாம், இந்தப் பெருவணிகனுக்கு தணிகைமலையிடம் எதற்காக விரோதம் என்பதுதான்! விர்ரென்று அம்பு போலப் போய்க் கொண்டிருக்கும் அந்த வேகத்திலேகூட அவள், அவனிடம் கேட்டாள், "கண்ணகி கோயில் வாசலில் நடக்கும் போர் இந்நேரம் முடிந்திருக்குமா? காக்கை வன்னியன் படை தோற்றிருக்குமா?" என்று!

"காக்கை வன்னியனாவது - கழுகு வன்னியனாவது! எந்தப் படையும் பண்டாரக வன்னியனின் படைக்கு முன்னால் பஞ்சு பஞ்சாகப் போகும்! பயப்படாமல் குதிரையை விரட்டு!"

என்றவாறு அவள் மீது நன்றாக முகம் பதித்து அழுத்தமாகச் சாய்ந்து கொண்டான்.

இரண்டு குதிரைகளும் புழுதி மண்டலத்தில் நாலு கால் பாய்ச்சலில் ஓடிக்கொண்டிருந்தன.

திடீரென ஒரு சப்தம் - தணிகைமலையின் குதிரை ஒரு சிறிய வழுக்குப் பாறையில் கால் ஊன்றிப் பாய்ந்தபோது நிலை குலைந்து விழுந்துவிட்ட சப்தம்தான் அது!

அதை கவனித்து விட்ட நல்லநாச்சியார், தனது குதிரையை இழுத்து பிடித்தாள்.

கீழே உருண்ட குதிரை எழுந்திடவில்லை! தணிகைமலை ரத்தம் சொட்டச்சொட்டத் தள்ளாடியவாறு எழுந்து நிற்க முயற்சித்தான்!

"அய்யோ பாவம்! குதிரையைத் திருப்பு! அவனுக்குஏதாவது உதவி செய்யலாம்!"

என்றான் காக்கை வன்னியன். தனது காதலனின் பகை உள்ளத் திலும் பரிவும் மனித நேயமும் பசுமையாகப் படர்ந் திருப்பதை எண்ணிக்களித்தாள் நல்லநாச்சி! குதிரையை திருப்பி, தணிகைமலை விழுந்த இடத்திற்கு விரைந்தாள். அவள்,

குதிரையை விட்டுக் குதிப்பதற்குள் காக்கை வன்னியன் குதித்துவிட்டான். குதித்துவிட்டது மாத்திரமல்ல, தணிகை மலையின் நெஞ்சிலும் கட்டாரியால் ஓங்கிக் குத்திவிட்டான்.

பதைப்புடன் நல்லநாச்சியார் அவனைத் தடுக்க ஓடித் தோற்றாள்.

"தணிகைமலை! என்ன இதுகோலம்?"

என்று வாய்விட்டு அலறியவாறு அவனைப் போய்த் தாங்கிப் பிடித்துக் கொண்டாள். "இந்தக் கோலம் வீரக்கோலம் அம்மா! காக்கை வன்னியனுடன் கைகோத்துக் கொண்ட உங்கள் கோலத்துக்குத்தான் எனக்குப் பொருள் புரியவில்லை அம்மா?"

என்று கலங்கினான், நெஞ்சைப் பிடித்துக்கொண்டே தணிகைமலை!

"காக்கை வன்னியனா? யார் எங்கே?"

என அதிர்ந்தாள் நல்லநாச்சியார்!

"இதோ இவன்தான், இந்த துரோகிதான்"

என்று விரலை நீட்டிக்கொண்டே விபரம் எதுவும் சொல்ல முடியாமல் வீழ்ந்துவிட்டான் தணிகைமலை!

தனது கண்ணெதிரே பிணமாகிவிட்ட தணிகைமலையைக் கண்டு அலறி அழுத நல்லநாச்சியைத் தேற்றிட முனைந்தான் காக்கை வன்னியன்.

"இவன் என்னமோ உளறுகிறான். நானாவது காக்கை வன்னியனாவது - சாவு இவன் கண்களை மறைத்து விட்டது! இவன் பேச்சை நம்பாதே!"

"உதவி புரியலாம்வா எனக் கூறிவிட்டு, உயிரைப் பறித்தவன் மனிதாபிமானம் இல்லாதவனாகத்தான் இருக்கவேண்டும். அந்த மிருகம் காக்கை வன்னியனாகத்தான் இருக்க வேண்டும்."

"உன் எதிரே நிற்பது உன் பிரியமுள்ள பிர்மானந்தன்! கண்ணகியம்மன் சாட்சியாக உன்னை மணந்து கொண்ட கணவன்"

"கணவனா? கயவனா?"

"கண்ணை இமை காப்பது போல உன்னைக் காக்க எண்ணும் காதலன்!"

ANNA CENTENARY LIBRARY
CHENNAI - 600 085.
0010391


"போதும்! நான் நம்பிக் கெட்டது போதும்!" அவன் கோயிலில் அணிவித்த கணையாழியைக் கழற்றி வீசி எறிந்தாள் நல்ல நாச்சியார்.

"நான் காக்கை வன்னியன் தான்! ஆனால் உன் கணவன்! உன்னை முழுவதுமாக சுவைக்காமல் நீ விவாகரத்து செய்து கொள்ள விடமாட்டேன்"

என்று கூறியவாறு அவளது கைகளைப் பிடித்து பலமாக இழுத்தான்.

"சீ! விடு என்னை!" என்று சீறினாள் நல்லநாச்சியார்!

சூழ்ந்து வருகுது பகை!



நல்ல நாச்சியாருக்கு இப்போது தான் அன்றொரு நாள் அண்ணன் எழுதிக்காட்டிய அந்தக் கவிதை வரிகள் நினைவுக்கு வந்தன. தன் தங்கை காதலிப்பது பிர்மானந்தன் என்ற வணிக வாலிபனையல்ல, காக்கை வன்னியன் என்னும் கயவனை - துரோகியை - என்ற உண்மை புரிந்துவிட்ட காரணத்தால்தான் அப்போது பண்டாரக வன்னியன் இடிவிழுந்த ஆலயத்துக் கோபுரமாக நொறுங்கிப்போய் நின்றிருக்கிறார். நாம்தான் மோசம் போய்விட்டோம். பாசத்தை மழையாகப் பொழிந்து என்னை நேசிக்கும் என் அண்ணன், என் காதலன் யார் என்று கேட்டபோது நான் காட்டிய அந்த ஓவியத்தைப் பார்த்து உடைந்து தூளாகிவிட்ட உள்ளத்துடன் அந்த இடத்தை விட்டுச் சென்றாரே, அதற்குக் காரணம் எனக்கு இப்போதுதான் புரிகிறது! அவசரப்பட்டு அருமைத் தங்கை நாட்டுக்கும், இனத்துக்கும் விரோதமான துரோகச் செயலுக்கு அவளையறியாமல் துணை போய்விட்டாளேயென்று என் அண்ணன் துடித்த துடிப்பு தானே அந்த வேதனைக் கவிதையாக வெளிப்பட்டிருக்கிறது!

"நீ ஒரு ஓவியம் வரைந்து காட்டினாய் அல்லவா? இதோ நான் ஒரு ஓவியம் வரைந்திருக்கிறேன்! படித்துப் பார்! இதுதான் என் வாழ்க்கை ஓவியம்! வருகிறேன்!"

என அந்தக் கவிதையை அவள் கையில் தந்துவிட்டுப் பண்டாரக வன்னியன் கண்டிக்குப் புறப்பட்டானே. அப்போதே அந்தக் கவிதை அவள் உள்ளத்தில் எரிந்துருகும் மெழுகாகச் சுட்டது! ஆனால் பிர்மானந்தன் மீது கொண்டிருந்த ஆழ்ந்த காதல் அவள் விழிகளைத் திறக்கவொட்டாமல் கெட்டியான பூட்டு மாட்டியிருந்தது!

இப்போது பண்டாரகன் எழுதிக் கொடுத்துவிட்டுச் சென்ற அந்தக் கவிதை வரிகள் அவள் நெஞ்சத்தில் புலம்பத் தொடங்கின.

"வாழ்வையே போராட்டமாக்கிக் கொண்டு
வாழ்கின்ற மனிதன்,
காரிருளில் மின்னல் ஒளிகண்டு
களிப்படைகிறான்.
அந்த மின்னலுடன் பின்னிக் கொண்டு
அவன் தலையில் இடியொன்றும் வீழ்ந்துவிட,
அதிலும் சாகாமல் பிழைத்துக் கொண்டு
அக்கினியைப் புசித்தன்றோ வாழ்கின்றான்!
உடனிருந்து உயிர் தருகிறேன் என
ஒப்பி வந்தவரோ – சிலர் உடனிருந்து
குழிபறிக்கின்றார்!
உடன்பிறப்பாய் இணைந்து பிறந்தவரோ, சிலர்
உடன்பிறந்தே கொல்லும் நோயாக மாறிவிட்டார்.
இதையெல்லாம் எதிர்த்து நிற்க – எனக்கு
எதையும் தாங்கும் இதயம் யார் தருவார்?
வானத்தில் ஓட்டை போட ஒரு கோடி
வல்லூறுப் பறவையினம் முயன்றாலும் – முடியாதென்பேன்!
தமிழர்,
மானத்தைத் தேட்டை போட ஒரு கோடி
அந்நியப் பகைவர் வரினும் தோற்றே போவார்!

பண்டாரகவன்னியனே நல்ல நாச்சியின் நெஞ்சுக்குள் புகுந்து கொண்டு இந்தக் கவிதை வரிகளை உரக்க உரக்க – ஓங்கி ஓங்கி முழக்குவது போலிருந்தது!

"அய்யோ! நான் எவ்வளவு பெரிய துரோகியாகி விட்டேன்! நான் செய்துவிட்ட பாபத்தைப் போல் எந்த ஒரு பெண்ணும் செய்வதற்கியலாது! ஈழத்துத் தமிழச்சியா நான்? இல்லை, இல்லவே இல்லை! அப்படிச் சொல்லிக் கொள்ளும் தகுதி, மரியாதை, அனைத்தையும் இழந்துவிட்டேன்! காசுக்கும், பணத்துக்கும் தன்னைக் கூசாமல் விற்றுக் கொள்ளும் இழிந்த

மனிதனான உன்னைக் காதலித்து ஏமாந்த என் கண்களைத் தோண்டி கழுகுகளுக்கல்லவோ விருந்தாக்க வேண்டும்? விழு கிறது சம்மட்டியடி என் இருதயத்தில்! விழுந்து கொண்டே யிருக்கட்டும்! நான் செய்துவிட்ட துரோகம், என் அண்ணனை மட்டும் பாதிப்பதில்லையே! என் குடும்பத்து மானத்தை மட்டும் ஊனப்படுத்துவதில்லையே! இலங்கைத் திருநாட்டுக்கே, ஈழத் தமிழ் இனத்துக்கே நீங்காத பழியை அல்லவா தேடித்தந்து விட்டேன்!"

காக்கை வன்னியனின் கைகளை உதறிவிட்டு, நல்லநாச்சி, அவன் எதிரே நின்றுகொண்டு எரிமலையின் நெருப்புக் குழம் பாக வழிந்தாள்!

"என்னம்மா பெரிதாக தமிழ் இனம் மண்ணாங்கட்டி என்று பேசுகிறாய்? நான் என்ன தமிழன் இல்லையா? சிங்களவனா? அல்லது வெள்ளையனா?" எனக் கேட்டுக் கேலிப் புன்னகை புரிந்தான் காக்கை வன்னியன்.

"நீ தமிழன்தான்! இனத்தால், மொழியால், உன் உடலில் ஓடும் இரத்தத்தால் நீ தமிழன்தான்! ஆனால் சூடு சொரணை யில்லாத தமிழன்! பணத்துக்காகப் பாதபூஜை செய்யும் தமி ழன்! பதவிக்காக மானத்தை அடகுவைக்கும் தமிழன்!" பொறிந்து தள்ளினாள் நல்லநாச்சி! அவனுக்கு அதனால் கோபம் ஒன் றும் வந்துவிடவில்லை! வராது! வசதி, வாய்ப்பு, நோகாத வாழ்வு, என்றும் போகாத சுகம் என்பதையே குறிக்கோளாகக் கொண்டுவிட்ட மாமிசப் பிண்டங்களுக்கு - சோற்றுத் துருத்தி களுக்கு - மலக் குவியல்கூட மணம் வீசும் மலர்க் குவியலாகத் தான் தோன்றும்! அதில் ஒரு இனிப்பும், சுவையும் கண்டுவிட்ட பிராணிகள் - ஆமாம், பன்றிகள் - தம்மைக் கண்டு அசிங்கம் என ஒதுங்கிச் செல்வோரைப் பார்த்து வெட்கப்படவா செய்கின்றன! அதைப் போலத்தான் காக்கை வன்னியன் நல்லநாச்சியின் சுடு சொற்களைப் பொருட் படுத்தாமல் மீண் டும் அவளையே நெருங்கினான்!

"தமிழ்! தமிழினம்! தமிழச்சி! என்றெல்லாம் கொக்கரிக் கிறாய்! நான் கேட்கிறேன் அதற்குப் பதில் சொல்! கற்புத்

தெய்வம் கண்ணகியம்மன் கோயிலில் கணையாழி மாற்றிக் கொண்டு கணவன்-மனைவியாகி விட்டபிறகு, கைபிடித்த கணவனைப் பார்த்துக் கயவன் என்றும் துரோகியென்றும் கண்டபடி தூற்றுவது தமிழ்ப் பண்பாடா?"

"இப்படியொரு பண்பாடு பேசித்தான் பெண்குலத்தையே திண்டாட விடுகிறீர்கள்! கணவன் தன்னைத்தானே கெடுத்துக் கொள்ளும் தீய ஒழுக்கங்களில் தோய்ந்து கிடப்பவனாக இருந் தால் அவனைத் திருத்திடக் கடமைப்பட்டவள் மனைவி! நீ, உன் னைக் கெடுத்துக் கொள்வதைப்பற்றி எனக்குக் கவலையில்லை! இந்த ஊரையே கெடுக்கிறாய்! தமிழன் என்ற உணர்வையே கெடுக்கிறாய்! இனத் துரோகி - வஞ்சக நரி - பதவிக்கு வாய் பிளக்கும் மலைப்பாம்பு - அடிமையினும் கீழான அடிமையாக இருந்து தன்மானத்தை தரங்கெட்டவர்களிடம் சோரம் போக விடும் சொகுசுப் பிறவி - உனக்கு நான் மனைவியா? இந்தக் கொடிய வார்த்தையைக் கேட்காமல் என் உயிரே போய்விட் டால் மிக மிக நல்லது! ஆனால் இந்த உயிர், எந்தப் பயனுமின்றி வீணே போகாது! கழுத்தறுக்கும் செயல்புரிந்து இனத்தையே எதிரி கட்குக் காட்டிக்கொடுக்கும் உன் உயிரைப் போக்கி விட்டு, பிறகு என் உயிர் போகுமேயானால், சொர்க்கம் என்று ஒன்றிருந்தால் அங்கு வீரசிம்மாசனத்தில் ஏறி வீற்றிருக்கும் பாக்கியத்தை அந்த உயிர் பெறும்!"

"நல்லநாச்சி! என்ன உளறுகிறாய்? அருவியோரத்தில், ஆல மரத்து நிழலில், பளிங்கு நீரோடையில், பாறைகளின் உச்சியில் நீயும், நானும் பேசி மகிழ்ந்த காதல் கதைகளை மறந்துவிட்டாயா? ஒருவருக்கொருவர் உரைத்திட்ட உறுதி மொழிகளை நினைக்கத் தவறி விட்டாயா? கரம் பிடித்து சத்தியம் செய்துகொண்ட அந்த இன்பமான நிகழ்ச்சிகள், கனவுகளா? கற்பனைகளா?"

"கனவுமல்ல - கற்பனையுமல்ல! தீயைத் தெளிந்த நீர்த் தடாகம் எனத் தெரியாமல் கால் வைத்துவிட்ட ஒரு அவசரக் காரியின் சரித்திரம்! அவளது சரித்திரம், ஒரு சாதனையைச் செய்யாமல் முடியாது! முடியக்கூடாது! உம்! எடுத்துக் கொள் உனது வாளை!"

சொல்லிக்கொண்டே, வாளை உருவி அவன் தலைக்கு நேரே ஓங்கினாள் நல்லநாச்சி! இனியும் அவளைப் பேச்சால் வீழ்த்த முடியாது எனப் புரிந்துகொண்ட காக்கை வன்னியன், அவனும் வாளை எடுத்து, அவளது வாளைத் தடுத்து நிறுத்தினான். வாட்போர் இருவரிடையே உச்சகட்டத்தை அடைந்தது. வீர மங்கை, நல்லநாச்சியின் வாள்வீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாமல் காக்கை திணறினான். இரண்டு மூன்று தடவை தரையில் விழுந்து எழுந்தான். தடுமாறினான். தத்தளித்தான். குறுக்கும், நெடுக்கமாக மின்னல் கீற்றுகள் தெறிப்பதுபோல இரு வாட்களும் மோதிக் கொண்டன. ஒரு கட்டத்தில் வாட்களின் பிடிகள் இரண்டும் மோதிய நிலையில் - ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டனர்! நான்கு விழிகள் அசையாமல் நோக்கின! காக்கையின் விழிகளிலோ ஒரு விதமான கெஞ்சல்! அவள் விழிகளோ அவனை மிஞ்சி நின்றன!

"நல்லநாச்சி! நாதனை நாயகிகொன்றால், அவளுக்கு நரகம்தான் சம்பவிக்கும்!"

"நாதனையல்ல, நாதர் முடிமேலிருக்கும் நல்லபாம்பைக் கூட அல்ல, நான் வீழ்த்த முடிவெடுத்திருப்பது - நாட்டுக்குத் துரோகம் செய்ய நெளிந்து கொண்டிருக்கும் நச்சுப் பாம்பை!"

"மறுபரிசீலனையே கிடையாதா?"

"மறுபிறப்பு என ஒன்றிருந்தால்? அப்போது நன்கு பரிசீலிப்பேன். இப்படியொரு நயவஞ்சகனிடம் ஏமாறாமல் இருப்பதற்கு என்ன வழியென்று நன்கு பரிசீலிப்பேன்! காக்கை வன்னியா! இப்போது காலம் தாழ்ந்துவிட்டது - உனக்கு உயிர்ப்பிச்சை அளிக்க என்னால் ஆகாது!"

சிறிது நேரம் ஓட்டிக்கொண்டிருந்த வாள்கள் பெருத்த ஒலியுடன் காற்றைக் கிழித்துக்கொண்டு மீண்டும் மோதின! இனியும் அவனைவிட்டு வைக்கக்கூடாது - அவனது தவறுக்கு அவனைக் கொன்று குவிப்பதே பிராயச்சித்தம் என முடிவு கொண்டவளாக காட்டெருமையின் மீது பாயும் பெண் சிங்கத்தைப்போல காக்கை வன்னியன் மீது வாளுடன் பாய்ந்தாள் நல்லநாச்சி! புயல், சூறாவளி, ஊழிக்காற்று, இவற்றில்

எதையும் உவமை காட்ட முடியாத அளவுக்குச் சீறியெழுந்த நல்லநாச்சியின் ஆவேசம் கண்டுகாக்கை வன்னியன்தனது கைவாளுடன் அங்கிருந்து ஓடத் தொடங்கினான். நல்லநாச்சி விடவில்லை. துரத்தினாள்.

சிறிது தொலைவு இருவரும் ஓடுவதற்குள்ளாக பத்து, பதினைந்து குதிரைகளில் யாரோ வீரர்கள் வருவதை இருவருமே பார்த்தனர். முல்லைத்தீவின் வீரர்களாகத் தானிருக்கும் என்ற மகிழ்ச்சியில் நல்லநாச்சி, தனது வாளை உயர்த்தி அவர்களை வரவேற்றாள்.

காக்கை வன்னியன், கதிகலங்கிப் போய்விட்டான். இனித் தப்பவே முடியாது என்ற முடிவுக்கு வந்தவனாக அப்படியே அசைவற்று நின்றுவிட்டான். நல்லநாச்சி ஓங்கிய வாளுடன் அவனை நோக்கி ஓடிவந்தாள். அவளுக்கு இப்போது புதுதெம்பு, முல்லைத்தீவு வீரர்கள் வருகிறார்கள் என்பதால்!

வேறு வழி தெரியாத காக்கை வன்னியன், நல்லநாச்சியின் வாள் முனைக்குத் தப்புவதற்காக அவளை நோக்கி சாஷ்டாங்க மாகத் தெண்டனிட்டு, "தாயே! என்னைக் காப்பாற்று!" எனத் தரையில் குப்புற விழுந்தான். நல்லநாச்சியாருக்கு இரக்கம் துளியும் ஏற்படவில்லை. ஆனால் குப்புற வீழ்ந்து கிடக்கும் அவன் முதுகில் குத்த அவள் விரும்பவில்லை.

"கபட நாடகமாடியே! எழுந்திரு! நீ சாகத்தான் வேண்டும்! சாகும் நேரத்தில் உனக்கு ஒரு சலுகை வழங்குகிறேன், நெஞ்சில் வாள் தாங்கிச் செத்துப் போ! அந்த ஒரு பெயர் உன் துரோக வாழ்க்கைக்குப் பரிகாரமாக அமையட்டும்! உம், எழுந்திரு!"

என்று ஆத்திரத்துடன் கத்தினாள் நல்லநாச்சியார்!


குப்புறக்கிடந்த காக்கை வன்னியன் மெதுவாகத் தலையைத் தூக்கிப் பார்த்தான். திடீரென அவன் கண்களில் ஒரு புத்தொளி. அவர்கள் இருக்குமிடம் நோக்கி வரும் குதிரை வீரர்கள் முல்லைத்தீவுக்காரர்கள் அல்ல என்பது அவனுக்குப் புரிந்து விட்டது. கண்ணகியம்மன் கோயில் சண்டையில், முல்லைத்தீவு வீரர்களிடம் அடிப்பட்டு ஓடி வரும் காக்கை வன்னியனின் வீரர் கள்தான் அவர்கள்!

அந்தக் குதிரைகள் வரும் வரையில் குப்புற வீழ்ந்து கிடந்தால், நல்லநாச்சி தன்னைக் கொல்லமாட்டாள் என்ற நம்பிக்கையுடன் அப்படியே படுத்திருந்தான்.

அவன் எதிர்பார்த்தபடியே அவனது வீரர்கள் அங்கே வந்து சேர்ந்தனர். கீழேபோட்ட வாளைக் கையில் எடுத்துக்கொண்டு, நல்லநாச்சியை நோக்கிப் பாய்ந்தான் காக்கை வன்னியன்!

தன்னைச் சுற்றிப் பகைவர்கள் சூழ்ந்து கொண்டிருப்பதை நல்லநாச்சி உணர்ந்துகொண்டு திடுக்கிட்டாள்!

பண்டாரகன் - பதைப்பு



"வீரர்களே! சரியான நேரத்தில் வந்தீர்கள்! முல்லைத்தீவு வீரர்களுக்கு முதுகு காட்டி ஓடி வந்தாலும் - இப்போது உங்கள் வீரத்தை வெளிக்காட்ட ஒரு வாய்ப்பு கிட்டியிருக்கிறது! இந்த நல்ல சமயத்தை நழுவ விடாதீர்கள்! இதோ நிற்கிறாளே இவள், புலிநகம் படைத்த மான்குட்டி! சிங்கப்பல் முளைத்த முயல் குட்டி! இவளை தனியொருவனாக எதிர்த்து என்னால் வெல்ல முடியவில்லை! இப்போது இவள் நான்கு பக்கமும் கழுகுகள் சூழ்ந்திட நடுவில் சிக்கிய புறா! வல்லூறுகளால் வளைக்கப்பட்ட சிட்டுக் குருவி! ஆனால் ஒன்று! மிக முக்கியமான விஷயம்! இவளைக் கொன்று விடாதீர்கள்! கூடை போட்டுக் கோழியை அமுக்குவது போல அப்படியே அமுக்கி நமது கோட்டைக்குக் கொண்டு வாருங்கள்! அங்கே இவளுக்கும் எனக்கும் வெக விமரிசையாகத் திருமணம்! இவளது அண்ணன் பண்டாரக வன்னியன் அந்தச் செய்தி கேட்டு துடிக்க வேண்டும்! இவள் சாகப்போவது என்னமோ உறுதி, ஆனால் அதற்குள் இவளை நான் அணுஅணுவாக அனுபவித்துத் தீரவேண்டும்!"

அடிபட்ட பாம்புக்கு உயிர் வந்ததுபோல படமெடுத்து ஆடினான் காக்கை வன்னியன்! அவனது ஆணை கேட்டு அந்த வீரர்கள் நல்லநாச்சியைச் சுற்றி வளைத்து வாளை ஓங்கியவாறு நெருங்கிக் கொண்டிருந்தனர். பெண்மையின் வல்லமையைக் குறைத்து எடைபோட்டுக் கொண்டு வாளோங்கி வரும் வாய் பிளந்த அந்த ஓநாய்களுக்குத் தக்க பாடம் வழங்கிடத் தயாராக நின்ற நல்லநாச்சியார், தனது வாளை விறுவிறுவெனச் சுழற்றிக் கொண்டு முன்னேறத் தொடங்கினாள். வான மென்னும் கரிய நிற உள்ளங்கையில் ரேகைகளைக் கிழித்து

மறையும் மின்னல்களின் வேகமெல்லாம் அவளது வாள் வீச்சுக்கு முன் எம்மாத்திரம் என வியக்கும் வண்ணம் போரிட்டாள்! காக்கை வன்னியனோ களைப்புற்று நின்றான்! அவளது வீரம் கண்டு கதிகலங்கிப் போனான்! அவளை நெருங்கிய வீரர்களின் தலைகள் ஒன்றிரண்டு தரையில் பந்துகளாக உருண்டன! வாள் பிடித்த ஒருவன் கை, அந்த வாளைப் பிடித்தபடியே மண்ணில் வீழ்ந்தது! "விடாதீர்கள்! அவளைப் பிடியுங்கள்!" என்று காக்கை வன்னியன் குரலை உயர்த்திக் கத்திக்கொண்டே இருந்தான். "ஒரு பெண்ணிடம் உங்கள் திறமை எடுபடவில்லையென்றால் உங்கள் ஒவ்வொருவரையும் சிரச்சேதம் செய்வேன்! அதற்கு பதிலாக அவள் கையாலேயே செத்துத் தொலையுங்கள்!" என்று கூச்சலிட்டான்! "நாமோ பலர்! இவளோ ஒருத்தி! எப்படியும் ஜெயித்து விடலாம்!" என்ற நம்பிக்கையுடன் அந்த வீரர்கள் பின்வாங்காமலே போரிட்டார்கள். பெண் புலியாகப் பாய்ந்து ஓநாய்கள் உடல்களைக் கிழித்துக் கொண்டிருந்த நல்லநாச்சியின் கைவாள் சூறாவளியாகச் சுழன்று கொண்டிருந்த போது எதிரிகளின் வாட்கள் அனைத்தும் ஒரே சமயத்தில் அந்த வாளின் மீது பெரும் அதிர்ச்சியுடன் மோதிய வேகத்தில் அவள் படைக்கலப் பறி கொடுத்தப் பாவையானாள்! இரண்டு துண்டுகளாக முறிந்து விழுந்த அந்த வாளைக் கையில் எடுத்துக் கொண்டு ஆங்காரமாகச் சிரித்து அட்டகாசம் புரிந்தான் காக்கை வன்னியன்! அதற்குள்ளாக நல்லநாச்சியார் அவளது வீரர்களுக்கு மத்தியில் பொறியில் அகப்பட்ட நிலை பெற்றுத் தடுமாறி நின்றாள்!

"யார் கையும் அவள் மீது படக்கூடாது! அவள் என் காதலி! என் சொத்து! என் சுகத்துக்காக ஆண்டவன் படைத்த அமுத கலசம்! என் தங்கக் கிளி தப்பி விடாமல் - அதே நேரம் ராஜ மரியாதையுடன் அழைத்துக் கொண்டு வாருங்கள்! இந்தக் காக்கை வன்னியன் கோட்டை இன்றைக்குத்தான் களை கட்டப் போகிறது!"

அவன் உத்தரவுப்படியே நல்லநாச்சியை வளையம் போட்டு சூழ்ந்து கொண்டு அவனது வீரர்கள் அங்கிருந்து நடத்தி அழைத்துச் சென்றனர்.

கனல் மட்டுமே கிளம்பிப் பொங்கிக் கொண்டிருந்த அவளது கண்களில் இப்போது புனல்! எனினும், ஒரு வீராங்கனைக்குரிய அந்த கம்பீரத்துடன் அவள் நடந்து கொண்டிருந்தாள். காக்கை வன்னியன் தனக்குத் துணையாக முன்னால் இருவர் பின்னால் இருவர் வாளேந்தி வர புன்னகை சிந்திக்கொண்டு ராஜ நடை போட்டான்.

காக்கையின் கோட்டைக்குள் அந்த அழகிய புறா அடைக்கப் பட்டுவிட்டது. எல்லா வாயில்களும் மூடப்பட்டுவிட்டன. எங்கும் பலத்த காவல். பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்ட படுக்கையறை யொன்றில் இரு கரங்களும் பின்னால் வைத்துக் கட்டப்பட்ட நிலையில் நல்லநாச்சி! வேறு யாருமில்லை அங்கே! இருட்டை விலக்குவதாகச் சொல்லி, ஒரு தீப்பந்தம் மட்டும் அவளுக்காக அழுது கொண்டிருந்தது! ஏதாவது ஒரு ஆயுதம் கைக்குக் கிடைக்காதா என்ற அடங்காத தவிப்புடன் அவளது கண்கள் அந்த அறைக்குள் சுழன்று கொண்டிருந்தன.

கண்ணுக்குத் தெரிந்து என்ன பயன்? கைக்குக் கிட்ட வேண்டாமா? கைகள் தான் கட்டுண்டு கிடக்கின்றனவே! என்ன தான் நடக்கப்போகிறது என்பதைப் பார்த்து விடுவோம் - இந்த உடல், உயிரோடு இனி எந்த ஒரு ஆண் மகனின் கரம் படவும் இடம் தரப்போவதில்லை எனச் சபதம் செய்து கொண்டு அவள் அந்த அறையில் உலவிக் கொண்டிருந்தாள்!

அதே நேரம் - முல்லைத் தீவு மாளிகையின் கூடத்தில் பண்டாரக வன்னியன் பரபரப்புடன் உலவிக் கொண்டிருந்தான், தன் எதிரே நிற்கும் மர்த்தனியைப் பார்த்து "நீ சொல்வதெல் லாம் உண்மைதானா?" என்று கேட்டவாறு!

"ஆம், தலைவரே! ஆண்டவனறிய உண்மையைத்தான் சொல்கிறேன். மணந்தால் காக்கை வன்னியனை மணப்பேன், இல்லையேல் மரித்துப் போவேன் என்று நல்லநாச்சியார், ஊமைச்சி நாச்சியாரிடம்சொல்ல-அதற்கு ஊமைச்சிநாச்சியார் "அக்கா! நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே! இப்போதே காக்கை வன்னியனைப் போய்ப் பார்! இருவரும் மணந்து கொண்டதாகச் செய்தி கிடைத்தால் பிறகு அண்ணன் பண்டாரக வன்னியன்

பதில் பேச முடியாது!" என்று தைரியம் சொல்லிக் கொடுத்ததே பனங்காமத்தில் ஆட்சிபுரியும் தங்களின் தங்கை ஊமைச்சி நாச்சியார் தான்! இப்படியொன்று நடக்கப் போகிறது என்பதை நான் தங்களிடம் எப்படிச் சொல்வது என்று தயங்கித்தான் தங்களின் நம்பிக்கையான ஒற்றர் என நான் நம்பி தணிகை மலையிடம் சொன்னேன். அந்த பாவி என்னை அழைத்துக் கொண்டு போய் வற்றாப்பளைக் கண்ணகியம்மன் கோயிலுக்கருகில் கற்பழிக்க முயன்றான். அதைத் தடுத்து நிறுத்திட முனைந்த என் ஊமைக் கணவர் - உத்தம புத்திரன் - ஜெயசீலனுடன் போரிட்டார். ஜெயசீலன், தணிகைமலையைக் கொன்று விட்டு - தங்களுக்குப் பயந்து கொண்டு எங்கேயோ ஓடி ஒளிந்து விட்டார்! கண்டி மன்னர் எங்களை உங்களுக்குத் துணையாக அனுப்பி வைத்தார். நானோ என் துணையை இழந்தேன். அதைப் பற்றிக்கூட எனக்குக் கவலையில்லை இப்போது! எங்கிருந்தாலும் என் கணவர் என்னைத் தேடி வருவார்! தெய்வம் அவரைக் கொண்டு வந்து என்னிடம் சேர்க்கும். ஆனால், நான் எதிர்பாராத விதமாகத் தங்கள் சகோதரிகள் இருவரும் தங்களுக்கு எதிராகத் தங்கள் விரோதிக்குத் துணை போய் விட்டார்களே என்பதுதான் எனக்குப் பெருங் கவலை!"

மர்த்தனி, தனது வாக்குமூலத்தை அழுத்தமாக உறுதிப் படுத்தியவுடன் பண்டாரக வன்னியனின் பாதங்கள் தரையில் நிற்கவில்லை!

"நல்லநாச்சியார் ஏமாந்தாள்! அதற்கு இன்னொரு தங்கை துணை போனாள்! ஒரு துரோகி என் தன்மானத்துக்கே அறை கூவல் விடுத்துள்ளான்! அவன் பக்கம் எனது உடன்பிறப்புக்கள்! குருவிச்சீ! உன் யோசனை என்ன? இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?"

"முதலில் அமைதியாக சிந்திக்க வேண்டும்!"

என்று பதில் கூறிய குருவிச்சி நாச்சியார், "மர்த்தனீ! நீ கொஞ்சம் வெளியே இரு!" என்று அவளைப் பார்த்து மெல்லிய குரலில் கூறினாள்! மர்த்தனி, தலை தாழ்த்தி இருவருக்கும் வணக்கம் தெரிவித்துவிட்டு கூடத்துக்கு வெளியே சென்றாள்.

குருவிச்சி நாச்சியார் என்ன சொல்லப் போகிறாள் என்பதைக் கூர்ந்து கவனித்தான் பண்டாரக வன்னியன்!

"மிகப் பழைய மொழிதான், ஆனாலும் சொல்கிறேன்! அலட்சியப்படுத்தாமல் கேளுங்கள்!"

"என்ன?"

"கண்ணால் கண்டதும் பொய்! காதால் கேட்டதும் பொய்! தீர விசாரித்தறிவதே மெய்!"

"விளக்கமாகச் சொல்!"

"தணிகைமலை, இந்த மர்த்தனியைப் பலாத்காரம் செய்திருக்கக் கூடும் என்பதை நீங்கள் நம்புகிறீர்களா?"

"எனக்குத் தெரியும் அவனைப் பற்றி! அவன், பெண்கள் விஷயத்தில் கொஞ்சம் பலவீனமானவன் தான்!"

"இருக்கலாம்! ஆனால் சொல்வதை நீங்கள் ஒரேயடியாக மறுத்துவிடக் கூடாது! பலாத்காரத்தின் மூலம் தான் பெறக் கூடிய பொருள் இந்த மர்த்தனி என்பது சுத்தப் பொய்! இவள் ஒரு வேஷக்காரி! கற்பு இவளுக்குக் கடைச்சரக்கு! அட்சய பாத்திரம் போல் உடலை வைத்துக் கொண்டு அனைவருக்கும் அள்ளி அள்ளி வழங்கும் ஆபாசப் பெண்மணி!"

"அப்படியொரு கணிகையையா கண்டி ராஜன் என்னிடம் அனுப்பியிருக்கக் கூடும்?"

"கண்டி மன்னர், கட்டளைப்படி வந்ததாக இவள் கூறுவதையும் - இவள் கணவன் எனப்படும் அந்த ஊமை ஒரு ஆண் என்பதையும் நான் ஏற்றுக் கொள்ளவில்லை!"

"எப்படிச் சொல்லுகிறாய், இவ்வளவு திட்டவட்டமாக!"

"நீங்கள் சொன்னால் முதலில் நம்ப மாட்டீர்கள் என்று தான் - என் சந்தேகத்தைத் தணிகைமலையிடமே ஜாடையாக, அறிவித்து ஜாக்கிரதையாக இருக்கச் சொன்னேன். தங்களின் தங்கை, காக்கை வன்னியனை, வணிகன் பிர்மானந்தன் என எண்ணிக் கண்ணகி கோயிலுக்கு வரப் போவதையும் - அந்தக் கோயிலில் தணிகைமலையைத் தனியே அனுப்பி, காக்கை வன்னியனின் வீரர்களைக் கொண்டு கொல்ல முயற்சி நடப்பதையும் நான் தணிகைமலை மூலமே தெரிந்து கொண்டேன்.

இந்த விஷயம் தங்களுக்குத் தெரிந்தால் தங்கை நல்லநாச்சியின் மீது சினம் கொள்வீர்கள் என்று தான், தணிகைமலையுடன், நூறு வீரர்களை அனுப்புவதற்குத் தங்களிடம் சிபாரிசு செய்தேன். இந்த சூழ்ச்சிகளுக்கெல்லாம் திட்டமிட்டவர்கள் இந்த மார்த்தனியும், ஊமையன் வேஷத்திலிருந்த பியசீலியும் தான்!"

"என்ன? பியசீலியா? அவள்தான் இறந்து விட்டாளே! கண்டி மன்னன் கடிதத்தை நீ படிக்கவில்லையா?"

"கண்டி மன்னர் எழுதிய கடிதமே அல்ல அது! இந்த சதி காரிகள் தயாரித்த மடல்! இவர்களை அனுப்பி வைத்ததே கண்டியின் அமைச்சர் பிலிமதளாவைதான்!"

பண்டாரக வன்னியன் திகைத்தான்! அதிர்ச்சியுற்றான்! தீயை மிதித்தவன் போல் குருவிச்சியின் பக்கம் திரும்பினான்!

"இத்தனை விஷயங்களையும் என்னிடம் ஏன் சொல்ல வில்லை நீ?"

"உங்களுக்கும் உங்கள் சகோதரிகளுக்குமுள்ள உன்னதமான உறவு-வற்றாத பாசம்-நாசமாகிவிடக் கூடாதே என்பதற்காகத் தான், என்னளவில் அதைச் சமாளிக்க முயற்சி செய்தேன்! ஆனால் இப்போது நிலைமை என்னையும் மீறிப் போய் விட்டது!"

இதைக் குருவிச்சி சொல்லிக் கொண்டிருக்கும்போதே, கூடத்துக்கு வெளிப்புறம் யாரோ ஓடுகிற ஒலி கேட்டது. இருவரும் வெளிப்புறம் நோக்கி வேகமாக வந்து எட்டிப் பார்த்தனர். மார்த்தனி, பதைப்புடன் அங்கிருந்து ஓடிக் கொண்டிருந்தாள். ஆனால் குருவிச்சி நாச்சி அவளை விடவில்லை. இடையிலிருந்த கட்டாரியை எடுத்து, ஓடுகிற மார்த்தனியின் குதிகாலுக்குக் குறி பார்த்து ஓங்கி வீசினாள். அடுத்த கணம், "அம்மா!" என அலறிக் கொண்டு, மார்த்தனி கீழே உருண்டு விழுந்தாள்.

எங்குற்றாள் அந்தக் குறத்தி?

51

மன்னன் என் நண்பன் கண்ணுசாமி அனுப்பி வைத்ததாகச் சொன்னாயே, அதெல்லாம் கட்டுக் கதைதானே? ஏன் பேசாமலிருக் கிறாய்? பேசு! நீ உண்மையானவளாக இருந் தால் நாங்கள் பேசிக்கொண்டிருந்ததை ஒட்டுக் கேட்க வேண்டிய அவசியமென்ன? உண்மைகள் அம்பலத்துக்குவந்துவிட்டனவே என்று பயந்துதானே ஓடினாய்?"

இப்படி கேள்வி மேல் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனான் பண்டாரக வன்னியன்.

மௌனம் சாதித்தே தப்பித்துவிடலாம் என எண்ணியோ என்னவோ மார்த்தனி, குதிகாலில் ஏற்பட்ட காயத்திற்குப் போடப்பட்ட கட்டுடன் படுத்துக்கொண்டே திருதிருவென விழித்தாள்!

குருவிச்சிநாச்சியாருக்குக் கோபம் தாங்கவில்லை! மார்த்தனி யின் தோளைப் பிடித்து ஒரு உலுக்கு உலுக்கி, "என்னடி நாடகமாடுகிறாய்? நீ உண்மைகளை இப்போது சொல்லாவிட் டால் உன் குதிகாலைக் குறி பார்த்த இந்தக் கட்டாரி, உன் குரல் வளையில் பாயும்! சொல்லிவிடு, நீயும் உன் உமைக்கணவன் ஜெயசீலனும் யார்? சத்தியமாக நீங்கள் இருவரும் கண்டி மன்ன ரால் அனுப்பி வைக்கப்பட்டவர்களா?" என்று சீறினாள்.

தனது கழுத்தை நோக்கிக் குருவிச்சியின் கட்டாரி ஓங்கப்பட் டது கண்டு பயந்து போன மார்த்தனி "அய்யோ! என்னைக் கொன்று விடாதீர்கள்!" என்று அலறினாள்.

"அப்படியானால் பதில் சொல்! உண்மையிலேயே நீங்கள் முல்லைத்தீவின் தலைவருக்குத் துணைபுரிவதற்காகக் கண்டி மன்னரால் அனுப்பப்பட்ட ஒற்றர்களா?"

இப்போது குருவிச்சி கட்டாரியை மார்த்தனியின் கழுத்துக் கருகே கொண்டு போனாள்.

"உண்மைதான்! சத்தியமாகச் சொல்லுகிறேன், நாங்கள் கண்டியிலிருந்து அனுப்பப்பட்டவர்கள்தான்!"

மர்த்தனியின் பதிலைக் கேட்டு, குருவிச்சி ஆத்திரச் சிரிப் பொன்றை உதிர்த்தாள்.

"கண்டியிலிருந்து அனுப்பப்பட்டீர்கள், ஒத்துக்கொள் கிறேன்! ஆனால் யாரால் அனுப்பப்பட்டீர்கள்? கண்டி மன்ன ராலா?"

"ஆமாம்!" என்று அசைந்தது மர்த்தனியின் தலை!

"பொய் சொல்லாதே!" கட்டாரியை வேகமாக ஓங்கி விட் டாள் குருவிச்சி!

அதற்குள் பண்டாரகன், குருவிச்சியின் கையைப் பிடித்து விட்டான்.

"எங்களை அனுப்பியது பிலிமதளாவைதான்!"

வேறு வழியில்லை உயிர் பிழைக்க என்பதைப் புரிந்து கொண்ட மர்த்தனி உண்மையைக் கூறிவிட்டாள். ஆனால் குருவிச்சி விடவில்லை.

"அப்படியானால் உன்னுடன் வந்த அந்த ஊமை ஜெய சீலன் எங்கே? அவன் நிஜமாகவே ஊமைதானா?"

"ஆமாம். அவர் ஊமைதான். அவர் எங்கு போனார் என்று எனக்கே தெரியாது."

"மறுபடியும் பொய்த்திரை போடாதே! அது உன் கணவனே அல்ல! ஏன், ஜெயசீலன் என்பதே நீங்கள் நடத்தும் துரோக நாடகத்திற்காக வைக்கப்பட்ட பெயர் என்கிறேன்."

"இல்லை! இல்லவே இல்லை! என்னை நம்புங்கள்! பிலிம தளாவை என்னையும் என் கணவரையும் இங்கு அனுப்பியது உண்மைதான்! என் கணவர் பெயர் ஜெயசீலன்தான்! என் கணவர் பெயர் ஜெயசீலன்தான்! கடவுளறிய இது சத்தியம்!"

"பிலிமதளாவையின்மகள் பியசீலியை உனக்குத் தெரியுமா?"

"தெரியும்! அவள்தான் செத்துப் போய்விட்டாளே!"

"செத்துப் போனவளின் ஆவிதான் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து ஜெயசீலன் உருவத்தில் உலவுகிறதோ?"

"அம்மா! நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றே எனக்குப் புரியவில்லை."

"புரியாதடி உனக்கு! இந்தப் புலிக்குகையை அழிப்பதற்கு உங்களைப் போன்ற பூனைகளால் முடியுமென்று தப்புக் கணக்குப் போட்ட தளுக்குக்காரிகள் அல்லவா நீங்கள்! உனக்கும் புரியாது! உங்களைத் தயாரித்து அனுப்பியுள்ள பிலிமதளாவைக்கும் புரியாது, நீங்கள் விழித்துக் கொண்டிருக்கும் புலியின் வாலை மிதிக்கிறீர்கள் என்பது! நான் மேலும் சொல்கிறேன் கேள்! செத்துப்போன பியசீலியின் ஆவி, ஜெயசீலனின் உடலில் புகுந்துகொண்டது! அதற்குப் பிறகு அந்த ஆவி, குறி சொல்லும் ஒரு குறத்தியின் உடலில் புகுந்து கொண்டது! என்ன? சரிதானா நான் சொல்வது?"

"எனக்கு ஒன்றுமே புரியவில்லை! ஆவியாவது உடலில் புகுந்து கொள்வதாவது! குறத்தியாவது மண்ணாங்கட்டியாவது! எல்லாம் ஒரே புதிராக இருக்கிறதே!"

ஆச்சரியத்தின் உச்சிக்கே போய்விட்டவளைப் போல மர்த்தனி நடித்தாள்.

"அடியே சாகசக்காரி! தணிகைமலையின் பலகீனத்தைப் புரிந்து கொண்டு உன் தளுக்கிலும் மினுக்கிலும் அவனை மயக்கவில்லையா? அதைத் தெரிந்துகொண்ட உனது ஊமைக் கணவன் மானம் தாங்காமல் ஓடிவிட்டான் என்று நீ தணிகைமலையிடம் ஒப்பாரி வைக்கவில்லையா? ஓடிப்போனதாகச் சொல்லப்பட்ட அந்த ஊமை ஜெயசீலன், பின்னர் உருமாறி - குறத்தியாக வந்து தணிகைமலையைத் தழுவிடவில்லையா?"

மர்த்தனி திகைத்துப் போய் வாயடைத்துக் கிடந்தாள். பண்டாரக வன்னியன் வியப்பு மேலிட்டவனாகக் குருவிச்சி நாச்சியைப் பார்த்து "ஆமாம்! இத்தனை விஷயங்களை நீ என்னிடம்கூடச் சொல்லாமல் மறைத்திருக்கிறாயே - துரோகம் இவர்கள் உருவத்தில் வந்துள்ளதை நீ எப்படித் தெரிந்து கொண்டாய்? பியசீலி என்கிறாய் - ஜெயசீலன் என்கிறாய் - குறத்தி என்கிறாய் - எல்லாமே நம்ப முடியாதவைகளாக இருக்கின்றனவே! இத்தனையும் உனக்குச் சொன்னது யார்?"

"எல்லாம் அந்தக் குறத்தியின் மூலம் அறிந்து கொண்டேன்!"

"அப்படியா?"

"ஆமாம்! ஆண் வேடத்தில் இருந்த போது அடையாளம் கண்டு கொள்ள முடியாமல் இருந்தவள் - குறி சொல்லும் பெண்ணாக மாறி வந்தபோது அவள்தான் பியசீலி என்ற உண்மை எனக்கு உறுதியாகிவிட்டது!"

"என்னால் நம்ப முடியவில்லை குருவி!"

"நீங்கள் நம்ப மாட்டீர்கள் என்று தான் அவளைக் கூண்டிலே போட்டிருக்கிறேன்."

"அடடா! என்ன இது, ஒன்றன் மீது ஒன்றாக அதிசய செய்திகளை அடுக்கிக்கொண்டே போகிறாய்?" குருவிச்சிநாச்சியார் அப்போது ஒரு புன்னகையை வெளிப்படுத்தி "ஆண்கள் வீரர்களாக இருப்பார்கள்! ஆனால் பெண்கள் வீராங்கனைகளாக மட்டுமன்றி விவேகிகளாகவும் இருப்பார்கள்!" என்று பதில் அளித்தாள்.

பண்டாரக வன்னியன் அவளைக் குறும்புத்தனமாகப் பார்த்தான்.

"சரி! சரி! எங்கே அந்தக் குறத்தி?"

"குறத்தி என்று ஏன் கேட்கிறீர்கள்? பியசீலி என்றே கேளுங்கள்! வாருங்கள் என்னோடு! நமது அரண்மனையில்தான் ஒரு அறையில் அவளை சிறை வைத்திருக்கிறேன். அவளிடம் கொஞ்சம் கடுமையாக நடந்துகொண்டு எல்லா உண்மைகளையும் கக்கும்படி செய்துவிட்டேன்!"

பண்டாரகனுக்கு விளக்கமளித்த குருவிச்சி, "இன்னும் என் பேச்சில் உங்களுக்கு நம்பிக்கையில்லையா? அந்தக் குறத்தி சொன்னதையெல்லாம் சொல்லட்டுமா? கண்டி மன்னரிடம் கையெழுத்துப் பெற்ற வெற்று மடலில், பியசீலியே ஒரு கடிதம் தயாரித்தாள்! அந்தக் கடிதம்தான் நம்மிடம் தரப்பட்டது! பிலிமதளாவையின் ஏற்பாட்டின்படியே எல்லாம் நடந்திருக்கிறது. பியசீலி ஜெயசீலனாக மாறினாள்! இந்த மர்த்தனியைத் தனது மனைவியாக நடிக்கச் சொன்னாள். இவர்களது முதல் முயற்சிக்குக் கிடைத்த வெற்றிதான் நமது ஒற்றன் தணிகை மலையை மயக்கிய நிகழ்ச்சி! தணிகைமலையை நான் எச்சரித்து வைத்திருந்ததால் முற்றிலுமாக ஏமாந்துவிடாமல் - இவர்

களது சூழ்ச்சியை முறியடிக்க முடிந்தது! வாருங்கள் என்னுடன்! அந்தக் குறத்தி பியசீலி வாயினாலேயே எல்லா விபரங்களையும் உங்களிடம் சொல்ல வைக்கிறேன்."

என்று கூறிய குருவிச்சி, கைதட்டிக் காவலர்களை அழைத்து. மர்த்தனியை ஓடிவிடாமல் பார்த்துக் கொள்ளுமாறு கட்டளையிட்டுவிட்டு, பண்டாரகனுடன் அங்கிருந்து புறப்பட்டாள்!

அரண்மனையின் பின்புறத்தில் அமைந்த அறையின் முன்னால் நாலுகாவலர்கள் ஈட்டியுடன் காவல் புரிந்து கொண்டிருந்தனர்.

பண்டாரகனும், குருவிச்சியும் அங்கு வந்தனர். காவலர்களைப் பார்த்துக் குருவிச்சி கதவைத்திறக்குமாறு சைகை காட்டினாள். கதவு திறக்கப்பட்டது. உள்ளே இருவரும் நுழைந்தனர். அவர்களின் பின்னால் காவலர்கள் தொடர்ந்தனர். குருவிச்சிக்குத் தூக்கி வாரிப்போட்டது. அவள் அடைத்து வைத்திருப்பதாகச் சொன்ன அந்தக் குறத்தி - ஆம், பியசீலியைக் காணவில்லை! ஒரு தீப்பந்தம் மட்டும் எரிந்து கொண்டிருந்தது!

"எங்கே அவள்?" உரக்கக் கத்தினாள் குருவிச்சி! காவலர்கள் விழித்தனர்!

"ஏமாந்து போய் விட்டுவிட்டீர்களே?" பதறினாள் அந்தப் பாவை? அப்போது ஒரு வீரன் மூச்சு வாங்க அங்கு ஓடி வந்தான்! பண்டாரகனுக்கு முன்னே வணங்கி நின்றான்!

"என்ன?" என்று பண்டாரகன் கேட்பதற்குள் "அரசே! தணிகைமலையைக் காக்கை வன்னியன் கொன்றுவிட்டான்! அத்துடன் நல்லநாச்சியாரையும் அவனது கோட்டைக்கு அழைத்துப் போய் விட்டானாம்! அங்கே திருமண ஏற்பாடுகள் நடக்கிறதாம்!" என்று பரபரப்புடன் செய்தி சொன்னான்! காட்டின் அமைதியைக் கிழித்துக் கொண்டு கிளம்பும் சிங்கத்தின் கர்ச்சனையெனப் பண்டாரகன் "ஆ! என்ன?" என்றவாறு வாளை உருவினான்.

மயங்குகிறாள் ஒரு மாது!

52

பல நூற்றுக்கணக்கானவர் புடை சூழப் பண்டாரக வன்னியனின் படை புறப்பட்டது. படை முகப்பில் இரு குதிரைகளில் பண்டாரகன் வைரமுத்துவும் - அவனது அன்பு சேர் நெஞ்சில் கரைதொடும் அலையென நிறைந்திட்ட பண்புடைப் பாவை குருவிச்சி நாச்சியாரும் தனல் துண்டங்களாக மாறிய விழிகளுடன், கரங்களில் ஒங்கிப் பிடித்த வாட்களுடன் அந்தப் படைக்குத் தலைமையேற்றுச் சென்றனர்.


"நேராகக் காக்கை வன்னியன் கோட்டைக்குத்தானே?" என்று கேட்டாள் குருவிச்சி, குமுறிக் கொண்டே!

"இல்லை! முதலில் வற்றாப்பளை கண்ணகியம்மன் கோயிலுக்கு! அங்கே தணிகைமலை என்ன ஆனான் என்பதை நேரிலே நான் அறிந்திட வேண்டும்! அதன் பிறகே காக்கை வன்னியன் கோட்டை மீது தாக்குதல்!"

கர்ச்சனை செய்தான் பண்டாரக வன்னியன்!

காக்கை வன்னியன் கோட்டைக்குள் காமவேள் நடன சாலையாகவே அமைக்கப்பட்டிருந்த அந்தப் பளிங்குக் கல் படுக்கையறையில் கட்டுண்ட கரங்களுடன் உலவிக் கொண்டிருந்த நல்ல நாச்சியின் செவிகளில் கதவுகள் மெல்லக் கிரீச்சிடும் ஒலி கேட் கவே, உலவுவதை நிறுத்தி விட்டுத் திரும்பிப் பார்த்தாள். பளபளக்கும் பட்டாடையுடுத்தி, ஜொலிக்கும் நவரத்தினங்கள் இழைத்த அணிமணிகள் பூண்டு, அத்தர் - புனுகு - சவ்வாது அத்தனையும் அவனுடலில் ஒருசேர மணக்க உள்ளே நுழைந்தான் காக்கை வன்னியன்.

"என்னம்மா -எல்லா வசதிகளும் சரியாக இருக்கிறதா? பழம் சாப்பிட்டாயா? பால் அருந்தினாயா?"



காக்கையின் கேள்விக்கு அந்தக் கிள்ளையிடமிருந்து பதில் இல்லை.

"ஓ! நான் வந்தபிறகு இருவரும் ஒன்றாகச் சேர்ந்து அருந்தலாம் என்று காத்திருக்கிறாயா? ஆமாம், அதுவும் சரிதான்! பழமெடுத்து உரித்து அதன் சுளைகளை நீ என் வாயில் ஊட்டி விட – நான் பால் கிண்ணத்தை இதழ்களால் எச்சில்படுத்தி உன் உதடுகளில் பொருத்திட – அடடா! அது ஒரு தனி இன்பம்தான்! உனக்கு அந்த அனுபவம் இருக்காது! ஆனால் இந்தப் படுக்கை யறை போன ஜென்மத்தில் என்ன புண்ணியம் செய்ததோ தெரியவில்லை – இந்தக் காக்கை வன்னியனின் படுக்கை யறையாக உருவெடுத்து பல்வேறு வகையான பாவைகளின்

ஜாலங்களை, நிர்வாணக் கோலங்களை, இன்ப சுகத்தில் வெளிப்படும் ஓலங்களைக் கேட்டும் பார்த்தும் பழகிப் போயிருக்கிறது! கண்டி ராஜ்யத்துக் கற்கண்டு பியசீலியைத் தெரியுமா உனக்கு? பிலிமதளாவை பெற்றெடுத்த அழகுப்பெட்டகம்! கண்டி மன்னனின் பட்டத்து ராணி! அவள் மேனி இங்கு, என் அணைப்பில் பட்டபாடு – அய்யகோ, அந்த சுகத்தை வாயால் வர்ணிக்க முடியாது! செயலில்தான் காட்ட வேண்டும் இந்தச் செல்லக் கிளியிடம்! பியசீலியின் முகத்தழகை முன்னூறு பிறவி எடுத்து ரசிக்கலாம் – இனிய தேன் பலாச் சுளைகள் இரண்டையல்லவா அவள் இதழ்களாகப் பெற்றிருக்கிறாள் – கழுத்தழகு அவளுக்கு! அதைக் கண்டாலேபோதும், காமன் கணை தேவையில்லாமலே

அவளுடன் கட்டிப்புரளத் தோன்றிடும்! உப்பளத்தில் கூர்கட்டி வைத்திருக்கும் உப்புக் குவியல் இரண்டை எடுத்து நெஞ்சகத் தில் ஒட்டிக் கொண்டிருக்கிறாளோ, அந்த வஞ்சிக்கொடியென எண்ணத் தோன்றும் - இடையோ பாம்பின் நடு உடல் போல நெளியும்! ஆனால் சீறமாட்டாள் உன்னைப்போல! சிருங்கார ரசம் யார் மூலம் கிடைத்தாலும் பருகிக் களிக்கும் பருவச்சிட்டு அவள்! உருவத்தைத் தான் சொன்னேன் - ஆனால் ஆண்கள் தரும் இரையைப்போதாது, போதாது எனக் கொத்தி விழுங்கும் கழுகு அவள் காமக் களத்தில்! அவளை முழுமையாகத் திருப்திப் படுத்தியவன் நான் தானென்று என்னைவிட்டு அகல மறுத்தாள்! பிறகு பெரும்பாடு பட்டு அவளைப் பிரித்து அனுப்பி வைத்தேன்! ஏன் தெரியுமா? எதற்காகத் தெரியுமா? என்னடா இவன், நம்மை எதிரே நிறுத்தி வைத்துக்கொண்டு எவளையோ உச்சி முதல் உள்ளங்கால் வரையில் புகழ்ந்து கொண்டிருக் கிறானேயென்று எரிச்சல் ஏற்படும் உனக்கு! என் புகழ்ச்சிக் கும் போற்றுதலுக்குரிய அந்தப் பூவையிருக்கிறாளே - அவளை உன் அழகுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், நீ தொலைவில் இருந்த நிலவு! அவள் என் தொடையில் கிடந்த நட்சத்திரம்! உன் வனப்புவான வெளிச்சோலை! அவளோர் தடாகத்துத் தாமரை! அவளையே நான் அனுபவித்து மகிழ்ந்தபோது - அதனை ரசித் துக் களித்த இந்தப் பள்ளியறை, துள்ளி விளையாடும் இந்த மானுடன் இந்தச் சிங்கம் அள்ளி வழங்கும் காதல் லீலைகளைக் காண நேரிட்டால் எப்படி எகிறிக் குதித்து மகிழ்ச்சிக் கூத்தாடும் தெரியுமா?"

காக்கை வன்னியன், படுக்கையறைக்கென்றே தனி பாஷை பயின்று வைத்திருக்கிறான் போலும் என முடிவு கட்டிக் கொண்ட நல்லநாச்சியார், அவனைப் பார்த்து -"இப்படியெல் லாம் பேச உனக்கு வெட்கமாக இல்லையா?" என்று சினந்தாள்!

"இந்த அறைக்குள் நுழைவதென்றால் வெட்கத்தை வெளித் தாழ்வாரத்தில் விட்டு வைக்க வேண்டும் - நாணத்தை விரட்டி யடித்துவிட வேண்டும் - அனைத்தும் முடிந்து அறையை விட்டு வெளியேறிய பிறகுதான் - ஆகாயத்தை நோக்கி விட்டெறிந்த

கல், திரும்பி வருவதுபோல் அந்த வெட்கமும் நாணமும் பெண்களிடம் திரும்ப வரவேண்டும்! ஒரு ஆண்! ஒரு பெண்! வேறு யாரும் தலை காட்ட முடியாத இடத்தில் வெட்கம் எதற் காகத் தலைகாட்ட வேண்டும்? இதோ பார்! காலைக் கதிர் கிளம்புவதற்கு முன்பு கொஞ்சம் கொஞ்சமாக வானம் வெளுப்பதுபோல - அதாவது முதலில் பனி மூட்டம் போன்ற நிலை - அடுத்துக் காற்றில் பலமிழக் கும் புகை மூட்டம் போன்ற நிலை - அதற்கடுத்து வெளிச்ச நிலை - பின்னர் வெட்ட வெளிச்சம் -பிறகு வெயில் - இப்போது அந்த எல்லா நிலைகளையும் ஒவ்வொன்றாக நீயே உணருவாய் பாரேன்!" என்று சொல்லிக் கொண்டே காக்கை வன்னியன், நல்லநாச்சியாரின் மார்பகத்தை மூடிக் மயங்கிக் கிடந்த சேலையின் முந்தானையைத் தன் முரட்டுக் கையால் மெதுவாக இழுத்தான்.

கரங்கள் கட்டப்பட்ட நிலையில் அவனுக்கு நேராக அம்மணமாக - அவமானச் சின்னமாக - அவள் விரும்பவில்லை! எப்போது களைவர் ஆடவர் தமது ஆடையை எனத் தவிக்கும் சில தையலர் உண்டு இந்தத் தரையில்! அந்த வர்க்கத்தினள் அல்ல நல்ல நாச்சியார் என்பதால், திடுமென ஒரு முடிவுக்கு வந்தாள்! அவள் உள்ளக் கொதிப்பை எங்குதான் கொட்டி வைத்தாளோ தெரியாது! எரிந்து கொண்டிருந்த இருவிழிகளையும் எப்படித்தான் மலர்களாக மாற்றிக் கொண்டாளோ அதுவும் தெரியாது! உலைக்களத்து நெருப்புத் துண்டங்களாகக் காட்சியளித்த அவள் உதடு கள், முத்துப் பற்களின் முறுவலைக் காட்சியாக்க எப்படித்தான் நாடக மேடைத் திரைகளாக சுருண்டு கொண்டனவோ அதுவும் தெரியாது!

நெருப்புக் கோளம் நீர் மேல் மிதக்கும் மலர்க்குவியல் ஆனது கண்டு, காக்கை வன்னியனும் வெற்றி! வெற்றி! என மௌனமாகத் தன்னைச் சிலாகித்து வாழ்த்திக் கொண்டான்!

அவள் பேசினாள் இப்போது! அந்தக் குரலில் கடுமை இல்லை! மாறாக இனிமை இருந்தது!

"ஆமாம்! என்னை அடைய உங்களுக்கு உண்மையிலேயே

விருப்பமிருந்தால் - எதற்காக இப்படி வணிகர் என்று பொய் சொல்ல வேண்டும்? நேரடியாக என் அண்ணனிடம் வருவது - என்னைப் பெண் கேட்பது - மணப்பது - பிறகு என் அண்ணனும் நீங்களும் மைத்துனர்களாவது - அதன் பின்னர் ஆங்கிலேயர் அல்ல - இந்த அகிலமே முயன்றாலும் உங்களிருவரையும் வென்றிட முடியுமா? உறவை வளர்ப்பதற்கு உரிய மார்க்க மிருக்கும்போது வீணாகப் பகையை வளர்த்துக் கொண்டீர்களே, ஏன்?"

"நல்லநாச்சீ! நீ என்ன சொல்கிறாய்?"

"என் உள்ளமும் உங்களை எண்ணி ஏங்கிக் கிடக்கிறது என்பதை வேறு நான் எப்படிச் சொல்ல முடியும்?"

"நீயா பேசுகிறாய்? குஞ்சுதனைக் கொல்லவரும் பருந்தை விரட்டும் கோழியின் ஆவேசம் உன்னிடத்தில் இருந்ததைப் பார்த்தேன்! அதாவது கற்பெனும் குஞ்சுதனை இழக்க விரும்பாத கோழியாக இருந்தாய் - அதனால் கோடையிடியாக ஒலித்தாய்! இப்போது உன் குரல் வளைக்கூட்டுக்குள் ஒரு கோகிலம் வந்து குந்திக்கொண்டு கூவுவது போல் இருக்கிறதே! இது என்ன மாற்றம்!"

"எந்த மாற்றமும் இல்லை! என்னை அடைவதற்கு நீங்கள் கடைப்பிடித்த மார்க்கம்தான் எனக்கு அறவே பிடிக்கவில்லை! அதனால்தான் உங்களை வெறுத்தேன்! விரோதியாகப் பாவித் தேன்!"

"அப்படியானால் இப்பொழுது?"

"வேறு வழியில்லை! எவர் மீது என் மனம் சென்றதோ, அவருட னேயே வாழ்வது!"

"உண்மையாகவா?"

"ஆமாம் பிரபு! உங்களைப் புறக்கணித்துவிட்டு வேறொரு வனை விவாகம் செய்து கொள்வது ஒன்றும் பெரிய காரியமல்ல! ஆனால் நான் என் உயிரைவிட மேலாகக் கருதும் கற்பை இழந்தவளாகி விடுவேன் அல்லவா?"

"அதனால்?"

"இஷ்டமின்றிக் கற்பைத் தங்களின் காலடியில் பலி கொடுப் பதைவிட - அந்தக் கற்பை நிரந்தரமாகக் காப்பாற்றிக் கொள்ள,

நீங்கள் கணவனாகவும் நான் உங்கள் மனைவியாகவும் கால முழுதும் வாழ்ந்து விடுவது நல்லதல்லவா?"

"அப்படியென்றால் உன் அண்ணன் பண்டாரகனின் விரோதம் வருமே?"

"பாசமிகு அண்ணன் - பத்துநாள் பகை பாராட்டுவார்! பிறகு, அவரே நம்மை மன்னித்து விடுவார்! மன்னிக்காவிட்டாலும் பரவாயில்லை - எனக்கென்று எந்த ராஜ்யமும் வேண்டாம்! உங்கள் இதய சாம்ராஜ்யத்திலே இடமிருந்தால் போதும்!"

"நான் எத்தனையோ பெண்களுக்கு இந்த இதயத்தை கூடக் கூலிக்குக் கொடுத்தவனாயிற்றே!"

"அதில் நான் ஒருத்தியாக இருக்கமாட்டேன்! அவர்களைப் போல நான் இந்த இதயத்தைக் காலி செய்துவிட்டுப் போக மாட் டேன்! நீங்கள் எத்தனை ஊர்வசி ரம்பைகளுடன் வேண்டு மானாலும் ஆடுங்கள்! பாடுங்கள்! ஆயிரம் கோபிகைகளுடன் கூத்தாடிய கண்ணனிடம் அன்பு செலுத்திய ராதையாகத் தங்களுக்கு நானிருப்பேன்."

"அடி என் தங்கமே! உன் அடி மனத்தில் இவ்வளவு ஆசை முத்துக்கள் இறைந்து கிடக்குமென எனக்குத் தெரியாமல் போயிற்றே!" என்றவாறு காக்கை வன்னியன் அவளைக் கட்டிப்பிடிக்க முனைந்தான்! அவள் சிணுங்கினாள் சிரித்துக் கொண்டே!

"உம்! உங்கள் கைகள் என்னைத் தழுவும்! என் கைகள் மட்டும் உங்களைத் தொட முடியாமல் துடித்துக் கொண்டிருக்க வேண்டுமாக்கும்?"

"அட, அதை மறந்துவிட்டேன்! இதோ உன் கைக்கட்டை மட்டுமல்ல, என் கண்மணியின் உடற்கட்டை மறைத்திருக்கும் அனைத்தையுமே களைந்து விட்டு - அதோ காத்துக் கிடக்கும் கனகமணிக் கட்டிலிலே உன்னைத் தூக்கியவாறு விழுகிறேன்!"

குடித்திருந்த மது போதை - அத்துடன் கலந்துவிட்ட காம போதை - இரண்டும் இணைந்து தலைக்கேறக் காக்கை வன்னியன், நல்லநாச்சியின் கரங்களைப் பிணைத்திருந்த கட்டினை அவிழ்த்துவிட்டான்! அவன் அப்படி அவிழ்த்ததுதான்

தாமதம், மானாக இருந்து நளினம் காட்டியவள் - திடுக்கெனப் புலியாக மாறி அந்த அறையில் எரிந்து கொண்டிருந்த தீப்பந்தத்தைக் கையில் எடுத்துக் கொண்டாள்! சற்றும் குறி தவறாமல் அந்தத் தீப்பந்தம் கொண்டு காக்கை வன்னியனின் முகத்தைத் தாக்கினாள்! அவனால் எதிர்பாராத அந்தத் தாக்குதலை சமாளிக்க முடிய வில்லை! படுக்கையறைக் கதவின் மீது போய் விழுந்தான் - விழுந்த வேகத்தில் கதவு திறந்து கொண்டது! வெளியில் இருந்த வீரர்கள் திடுக்கிட்டு அறைக்குள் பாய்ந்து தீப்பந்தமும் கையுமாகத் தீம்பிழம்பாக நின்ற நல்லநாச்சி யாரைச் சூழ்ந்து கொண்டனர்!

அவளை நோக்கி வந்த கட்டாரிகள், ஈட்டிகள், வாட்கள், அனைத்தையும் தனது கையிலிருந்த தீப்பந்தத்தினாலேயே தடுத்தாள்! எவ்வளவு நேரம் அப்படித் தடுத்திட இயலும்!

மற்றொரு மதுரை?

53

வற்றாப்பளை கண்ணகியம்மன் கோயிலைச் சுற்றிச் சுழன்ற பண்டாரக வன்னியனின் படை வீரர்கள், அவர்கள் தேடி வந்த தணிகைமலை அங்கு இல்லாததால் திகைப்புடன் தங்கள் தலைவனை நோக்கினர். பண்டாரகனும் குருவிச்சியும் அந்தக் கோயில் வாசலிலும், கோயிலைச் சூழ்ந்தும் சிதறிக் கிடந்த இரத்தத் துளிகளையும், படுகாயமுற்றுப் பிணமாகக் கிடந்த வீரர்களையும் கண்டனர். இருதரப்பு வீரர்களும் அந்தக் களத்தில் கிடந்தனர்.

"குருவிச்சீ! நீ அதோ அந்த ஒற்றையடிப் பாதை வழியாகக் காக்கையின் கோட்டை நோக்கி வா! நான் இதோ இந்தப் பாதை வழியாக அந்தக் கோட்டைக்கு வருகிறேன்! நமது படை வீரர்கள் ஒரு பிரிவினர் உன்னோடும் இன்னொரு பிரிவினர் என்னோடும் வரட்டும்! தணிகைமலையை வழியில யார் சந்தித்தாலும் அவனுயிரைப் பாதுகாக்கும் பொறுப்பினை ஏற்போம்!" என்று கூறிக் கொண்டே தனது குதிரையைத் தட்டிவிட்டான் பண்டாரகன்!

"தணிகைமலை சாகக்கூடாது - செத்திருக்கக் கூடாது என்ற பாச உணர்வு பண்டாரகனுக்கு மிகுந்திருக்கிற காரணத்தால் அவன் மாண்டு விட்டான் என்ற செய்தியை இன்னமும் நம்ப மறுக்கிறார், அவர் ஆசைப்படி தணிகைமலை உயிருடன் இருந்தாலும்- நான் நினைக்கிறபடி அவன் கொல்லப்பட்டிருந்தாலும் - எப்படியும் அந்த விசுவாசமுள்ள வீரனைப் போய்ப் பார்த்துத்தானே ஆக வேண்டும்."

இவ்வாறு குருவிச்சியின் உள்ளம் ஒரு சோகக் குயிலாகக்

கூவிக் கொண்டிருந்தது. அவளும் ஒரு பிரிவு வீரர்களுடன் பண்டாரகன் சுட்டிக் காட்டிய வழியில் குதிரையை விரட்டினாள்.

வற்றாப்பளையிலிருந்து பண்டாரகன் மேற்கொண்ட பாதையில் சிறிது நேரத்திற்கெல்லாம் தணிகைமலையின் உடலை அவனால் காண முடிந்தது. மாண்டு கிடந்த அந்த மாவீரனைப் பார்த்தவுடன், பதறிப்போன பண்டாரக வன்னியன் தனது பரியிலிருந்து கீழேபாய்ந்தோடி, உருக்கமும் உணர்ச்சிவேகமும் உந்தித்தள்ள அவனது உடலை அள்ளி அணைத்துக் கொண்டு கதறிவிட்டான். சகோதரி நல்லநாச்சியைப் பற்றிவந்த செய்திக்கு இரண்டாவது இடம் கொடுத்துவிட்டு, தனது படையின் நம்பிக்கைக்குரிய ஒற்றன் தணிகைமலைக்கு முதலிடம் கொடுத்ததின் வாயிலாகத் தன்னையோர் தன்னலமற்ற சிங்கமெனக் காட்டிக் கொண்ட பண்டாரக வன்னியன், தணிகைமலையின் உச்சி மோந்து முத்தமிட்டான். தனது கழுத்தில் கிடந்த மெல்லிய ஆரம் ஒன்றைக் கழற்றி, தணிகையின் கழுத்தில் அணிவித்தான்.

"வீரனே! என் விசுவாசமுள்ள நண்பனே! அந்நியரின் ஆதிக்கச் சுவடுகள்கூட அறவே அழிக்கப்பட்டு, முல்லைத் தீவை சுதந்திரம் மணக்கும் சுந்தர பூமியாக வடிவமைக்க நீ எனக்குத் தந்த ஒத்துழைப்பு கொஞ்சமல்லவே! ஆனால் உன் கனவு நிறைவேறி, அந்நியர் எவரும் இந்த நிலத்துக்குள் நுழைய முடியவில்லை என்ற நிலை தோன்றுவதற்கு முன்பாகவே நீ கண்களை மூடி விட்டாயே, இது என்னடா நியாயம்?"

என்று கேட்டபோது பண்டாரகனின் குரல் தழுதழுத்தது. இமையணைகளை உடைத்துக்கொண்டு கண்ணீர் வெள்ளம் பெருக்கெடுத்தவாறு இருந்தது! தணிகைமலையைத் தூக்கி தன்னருகே இருந்த வீரர்களின் கையில் ஒப்படைத்து, "இந்த நம்பிக்கைக்குரிய தங்கத்தை நமது அரண்மனை வளாகத் திற்குள்ளேயே புதையலாக இருக்கச் செய்யுங்கள்" என்றான். நாலைந்து வீரர்கள், தணிகைமலையின் உடலுடன் முல்லைத்தீவு நோக்கித் திரும்பினர். தணிகையின் உடலைத் தூக்கிச் சென்ற அந்த வீரர்கள், தனது பார்வையிலிருந்து மறையும் வரையில்

வைத்த விழி வாங்காமல் அந்தத் திசையையே நோக்கிக்கொண்டு நின்றிருந்தான் பண்டாரகன்! தான் பிறந்த மண்ணின் உரிமைக் காகவும் - அதன் மானம் காப்பதற்காகவும் - தன்னுயிரைத் தரவும் தயாராகப் படைக்கலன் ஏந்தி நிற்கும் அந்த வீரவேங்கை வைர முத்துப் பண்டாரகன், தனது அன்புக்குரிய தோழன், அநியாய மாகச் சதி மூலம் சாய்க்கப்பட்டுவிட்டானே என எண்ணும் போது கொந்தளித்தான்! அதேசமயம் கோவெனக் கதறி அழுதும் விட்டான்! வீரன் என்றால் அவன் இதயத்திலிருந்து ஈரத்தைப் பிழிந்து எடுத்துவிட்டவன் அல்லவே! அந்த ஈர உணர்வு, அவனது வீர உணர் வையும் மிஞ்சி நின்றது!

"தலைவன் எனில் இவர்தான் தலைவன்! விழுகின்ற தனது வீரர்களின் உடல்கள் ஒவ்வொன்றுக்காகவும் அழுகின்ற விழி களைப் பெற்றவர்! போலிக் கண்ணீர் அன்று! புயலடிக்கும் நெஞ்சத்திலிருந்து திசைகெட்டுப் பிரவாகிக்கும் பெருவெள்ளம்!"

தொலைவில் நின்ற ஒரு வீரன், தனது தோழனிடம் இவ்வாறு சொன்னான்.

"ஆம், அதனால்தானே இந்தத் தலைவனுடன் வேதனைகளை யும் சோதனைகளையும் பொருட்படுத்தாமல் அணிவகுத்து நிற்கிறோம்! வேறு யார், தனது சகோதரி என்ன ஆனாள் என்பதைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் - முதலில் தணிகை மலையைப் பார்ப்போம்! எனக் கிளம்புவான்!"

வீரனின் தோழன், பெருமிதத்துடன் பதில் அளித்தான், ஒரு கேள்வி வாயிலாக!

வேதனை, நடையில் காட்டி வேங்கையாம் பண்டாரக வன்னியன், மீண்டும் குதிரையில் ஏறினான். இப்போது அவனுக்கு நல்ல நாச்சியின் நினைவு வந்து விட்டது.

சிறிது தூரம் மெல்ல நடந்த குதிரைகள் வேகமாக ஓடத் தொடங்கின!

இதற்கிடையே குருவிச்சி நாச்சியார் தனது படைப்பிரிவுடன் காக்கை வன்னியன் கோட்டையை நோக்கி விரைந்து கொண் டிருந்தாள். அவளது எண்ணம் முழுதும் நல்லநாச்சியாரை எப்படியும் காக்கை வன்னியனின் பிடியிலிருந்து விடுவிக்க வேண்டும் என்றே இருந்தாலும் - தணிகைமலை கொல்லப்பட்டது

பற்றிய சந்தேகம் அவளுக்கு எழாததாலும் - இறந்து போனவனை விட்டு விட்டு இருப்பவளைக் காப்பாற்றிடத் துடித்தாள்!

காக்கை வன்னியனைத் தீப்பந்தம் கொண்டு தாக்கிய நல்ல நாச்சியை அவனது வீரர்கள் வளைத்துக் கொண்டு கடுமையாகத் தாக்குதல் தொடுத்ததற்கும் அவள் கலங்காமல் அவர்களை எதிர்த்துப் போரிட்டாள்! அந்த வீராங்கனையின் ஆற்றல் கண்டு அதிசயித்துப் போன காக்கை வன்னியன் முக்கி முனகிக் கொண்டு, தலையில் பட்ட காயத்திலிருந்து கொட்டும் குருதியுடன் எழுந்து தள்ளாடினான்! ஆனால் நல்லநாச்சியார் அவனை விடுவதாக இல்லை! சூழ்ந்திருந்த வீரர்களையும் சமாளித்துக் கொண்டு - காக்கை வன்னியனின் காலை நோக்கித் தீப்பந்தத் தால் ஓங்கி அடித்தாள்! அய்யோ அம்மா என ஓலமிட்டுக் கொண்டே காக்கை வன்னியன், தனது காதுகளை எதிர்பாராத ஒரு ஓலியின் திசை நோக்கித் திருப்பினான்!

குதிரைகளின் காலடி ஓசைதான் அது! கடைசியாக அவனது விஷ மூளையில் ஒரு சூழ்ச்சி மின்னல் போலப் பிறந்தது!

"ஆகா! சபாஷ்! நான் கூப்பிட்டு அனுப்பிய குதிரைப் படையும் அதோ வந்து விட்டது! அடியே நல்லநாச்சி! பேசாமல் அடங்கி விடு! இல்லையேல் உன் உயிர், மானம் எல்லாம் நூற்றுக்கணக் கான வீரர்களின் கண்ணெதிரே பறிக்கப்படும்" என்று கூச்ச லிட்டான் காக்கை வன்னியன்!

வந்துகொண்டிருக்கின்ற குதிரைப் படைக்குத் தலைமை யேற்று நடத்தி வருபவள் குருவிச்சி என்று புரிந்து கொள்ளாத நல்லநாச்சியார், பொங்கி எழுந்தாள்! குள்ள நரிக் கூட்டத்திட மிருந்து தப்புவதற்கு அவளுக்கு வேறு எந்த வழியும் தெரியவில்லை! காக்கை வன்னியனின் கோட்டையையே தீக்கு இரையாக்கிவிடுவது எனத் தீர்மானித்தாள்! தீர்மானத்தை நிறைவேற்ற அவள், இமைக்கும் பொழுதுகூட நேரம் எடுத்துக் கொள்ளவில்லை!

படுக்கையறையின் வெளித் தாழ்வாரத்தில் போரிட்டுக் கொண்டிருந்த அவள் உள்ளே ஓடினாள்! மரண அடி வாங்கி

யிருந்த காக்கை வன்னியன், தன் பலம் முழுவதையும் திரட்டிக் கொண்டு - இதுவே தனது இறுதி முயற்சி என மனத்துக்குள் உரமேற்றியவாறு, அவளைத் தொடர்ந்து படுக்கையறைக்குள் பாய்ந்தான்! பாய்ந்தவன் தலையில் ஓங்கி ஒரு அடி! பாவை யின் கை தீப்பந்தத்தினால் விழுந்தது எனினும் அது பாறை யொன்று தலையிலே விழுந்தது போலிருந்தது! தலை நசுக்கப் பட்ட பல்லியின் காலும், வாலும் துடிப்பது போல அவனது அங்கங்கள் துடித்தன! அதற்குள் காக்கை வன்னியனின் வீரர்கள் அறைக்குள் வந்து அவளைச் சுற்றி வளைத்திடத் தொடங்கினர்! கோட்டைக்கருகே குதிரைகள் விரைந்துவரும் பேரொலி, செவிகள் செவிடுபடக் கேட்டுக்கொண்டிருந்தது!

அய்யோ! அந்தக் குதிரைப் பட்டாளமும் வந்து சேர்ந்து விட்டால், தனது மானம் பறிபோகும் எனப் பயந்த நல்ல நாச்சியார், பளிங்குக் கல் படுக்கையறையில் காற்றில் அசைந் தாடிக் கொண்டிருந்த பட்டுத் திரைகள் அனைத்துக்கும் தீ மூட்டினாள்! தீ மள மளவெனப் பரவிற்று! அறை முழுதும் தீயின் நாக்குகள்! வீரர்கள் சிலர் ஓடினர்! சிலர் அந்தத் தீயில் வீழ்ந்தே வாடினர்!

காக்கை வன்னியனின் கோட்டை முழுதும் நெருப்பின் கால்கள் நடை போட்டன! தீயின் கரங்கள் அபிநயம் பிடித்தன! படீர் படீர் எனச் சிதறும் மரங்களின் ஆணிகள்! முறிபட்டு விழுகின்ற உத்திரங்கள்! எரிக்கப்பட்ட பட்டுத்திரைகள், துணி மணிகள், விலை உயர்ந்த பொருட்கள் போதாதென்று அக்கினியின் நாக்குகள் ஆகாயத்து மேகங்களையும் பிடித்துத் தின்ன நீளுவதுபோல மேல் நோக்கி உயர்ந்து அசைந்தன!

கோட்டை எரிந்து கொண்டிருப்பதை வீரர்களுடன் வந்து கொண்டிருந்த குருவிச்சி பார்த்துக் கலங்கினாள்! நல்லநாச்சி யார் என்ன ஆனாளோ? என்றபதைப்புடன் குதிரையை கோட்டை நோக்கி விரட்டினாள்! எரிந்து கொண்டிருந்த கோட்டைக்குள் ளிருந்து எரியும் உடலுடன் நல்லநாச்சியார் கையில் பிடித்த தீப் பந்தத்தைக் கீழே போடாமல் ஓங்கி உயர்த்தியவாறு ஆவேச மாக ஓடி வந்தாள்!

குருவிச்சியைப் பார்த்ததும், நல்லநாச்சியார், "அழித்து

ஒழித்து விட்டேன் காக்கை வன்னியனை! துரோகி தொலைந் தான்! அவன் கோட்டையே அவனுக்குச் சுடுகாடாகிவிட்டது!" என்று பயங்கரமாகச் சிரித்தாள்!

மதுரைக்குத் தீயிட்டு நின்ற கண்ணகியோ இவள் எனக் குருவிச்சி எண்ணிக்கொண்டே, முதலில் அவளை நெருப்பு வளையத்துக்குள்ளிருந்து காப்பாற்ற அவளருகே ஓடினாள்! மான்குட்டியை மலைப்பாம்பு ஒன்று சுற்றிக்கொண்டதுபோல நெருப்பு நல்ல நாச்சியை சுற்றிக்கொண்டு கருக்கியது! என்ன ஆனாலும் ஆகட்டு மென்று குருவிச்சி அவளை இழுத்துத் தரையில் தள்ளி, நெருப்பை அணைக்க அங்குமிங்கும் உருட்டினாள்!

அணைந்தது நெருப்பு எனினும் - அங்கமெலாம் தீப்புண்களு டனும், பாதி முகத்தை நெருப்புக்குப் படைத்துவிட்ட நிலையிலும் எழுந்து நின்று தள்ளாடினாள் நல்லநாச்சியார்!

குருவிச்சி, அவளை அங்கிருந்து தன்னுடன் அழைத்துப் போய் விட வேண்டுமென்று முடிவு செய்து, ஒரு கையில் ஓங்கிய வாளுடன் - எதிரிகள் தன்னை நெருங்காதபடி பார்த்துக் கொண்டு - மற்றொரு கையினால் நல்லநாச்சியைத் தாங்கிப் பிடித்தாள்!

நல்லநாச்சியோ, குருவிச்சியிடமிருந்து திடுமென விலகிச் சென்று "குருவிச்சி! தொடாதே என்னை!" என்று கத்தினாள்!

அவள் கண்ட சொர்க்கம்!

54

உள்ளம் தீயாக எரிய - உடலும் எரிந்திட ஊழிக்காலத்து ஆவேசமாகக் கொந்தளித்த நல்லநாச்சியாரிடம் என்ன பேசுவ தென்றே தெரியாமல் ஒருக்கணம் ஊமையாகித் திகைத்தாள் குருவிச்சி நாச்சியார்!

"நான் நமது நாட்டுக்குத் துரோகம் செய்துவிட்டேன்! நமது இனத்துக்குத் துரோ கம் செய்துவிட்டேன்! என் அண்ணனுக்குத் துரோகம் செய்து விட்டேன்! ஏன், எனக்கே நான் துரோகம் செய்துவிட்டேன்!"

வெடித்துச் சிதறிய அவள் இதயம் சுடுகாட்டுத் தனிப் புலம் பலாய் ஓலமிட்டது!

"நல்லநாச்சீ! நீ யாருக்கும் துரோகம் செய்யவில்லை! உன்னால் துரோகம் செய்யமுடியாது! தாய்ப்பால் குழந்தையைக் கொல்லுமா? அதுபோல உன் தூய உள்ளத்தில் துரோகம் என்ற விஷப்பல் முளைக்கவே முளைக்காது!"

குருவிச்சி, பதில் அளித்துக் கொண்டே நல்லநாச்சியைப் பர பரப்பாக நெருங்க முனைந்தாள்.

ஆனால் நல்லநாச்சியோ அவளைத் தன்னருகே நெருங்க விடாமல்,

"தயவுசெய்து என்னருகே வர வேண்டாம்! நான் பாபப்பட்ட ஜென்மம்! பாம்புக்கும் பச்சைக் கொடிக்கும் வித்தியாசம் தெரி யாமல் நமது இனத்துக்கே ஒரு பழியாக உருவெடுத்து நிற்பவள்! நீ இப்போது ஏதாவது எனக்கு ஒரு உதவி செய்ய முடியு

மென்றால் - அந்த உதவி தான் ஒருவேளை அடுத்த பிறவியென ஒன்றிருந்து அப்போதும் நான் பெண்ணாய்ப் பிறக்க நேரிட்டால் உன்னை நினைத்து நினைத்து நன்றி தெரிவிக்கக் கூடியதாக இருக்கும்! செய்வாயா அந்த உதவியை?" என்று கதறினாள் கருகிக் கொண்டிருந்த அந்தக் காரிகை!

"என்ன உதவி வேண்டுமானாலும் செய்கிறேன்! முதலில் என்னை நெருங்கவிடு! நெருப்பை அணைக்கிறேன்! பிறகு உனக்குத் தேவையானதைக் கேள்! என்றவாறு இரண்டடி அவளை நோக்கி எடுத்து வைத்தாள் குருவிச்சி!

அவளோ இரண்டடி தொலைவு பின்னோக்கி நடந்து கொண்டே,

"எனக்குத் தேவையான உதவி, உன் கையிலுள்ள வாளினால் குத்தப்பட்டு சாவதுதான்! அந்த இனிய சாவை எனக்கு அளித்திடு! இனிநான் வாழக்கூடாது! வாழ முடியாது! நான் வாழ நினைக்கவில்லை!"

"என்ன? என் கையால் நீ சாவதா? அந்தப் பாதகத்தைப் புரியவா நான் இங்கு ஓடோடி வந்திருக்கிறேன்?"

"ஆமாம்! உன் கையால்தான் நான் சாக வேண்டும்! நாட்டுக்காகவும் இனத்துக்காவும் தன்னையே ஒப்படைத்துக் கொண்டு தணல் மீது நடந்து கொண்டிருக்கும் என் அண்ணனைத் தலைவனாக ஏற்றுக் கொண்டு - இன்ப சுகம் அனைத்தையும் அவர் காலடியிலே வைத்துவிட்டு, ஒரு தவசியைப் போல கடுஞ் சபதம் மேற்கொண்டு - அவரையே நிழலாகக் கருதி அவருக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கும் புனிதவதியான உன் கையால் சாவதை விட எனக்கு - என் பாபச் செயலுக்கு வேறு பிராயச் சித்தமே இல்லை!"

"சொல்வதைக் கேள் நல்லநாச்சி! சாகரத்தில் கருக் கொள்ளும் புயலைப்போல எத்தனையோ சங்கடங்கள் - பிரச்சினைகள் சமாளிக்கப்பட வேண்டியிருந்தாலும் அவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து எதிர்கொள்ளும் நமது தலைவர் பண்டாரகன், தனது அன்புச் சகோதரிகளான உங்களிருவருக் கும் இதயத்தில் தனி இடம் ஒதுக்கியிருக்கிறார் என்பதை மறந்து விடாதே!

"அதனால்தான் துடிக்கிறேன்! என் உயிரைக் குடித்துவிடு உடனே என்று பறக்கிறேன்! எவ்வளவு நம்பிக்கையுடன் திரிகோண மலைக்கு என்னை ஆட்சிக் காவல் பொறுப்பளித்து நியமித்தார்! நான் அந்தப் பொறுப்பைச் செம்மையாக கவனித்தேனா? இல்லையே! காதல் என்ற பெயரால் இந்த இனத்துக்கே துரோக மல்லவா இழைத்துவிட்டேன்! அண்ணன் என்னைக் காணும்போது நான் உயிரோடு இருக்க விரும்பவில்லை! அவர் எனக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் வடித்தால் - அது இந்த துரோகியின் நெஞ்சத்தைச் சுட் டெரிக்கும், அய்யோ அதை என்னால் தாங்கமுடியாது! அதற்குள் நான் மரணத்தின் மடியில் அமைதி காண வேண்டும்! தயவுசெய்து உன்கையில் உள்ள வாலினால் எனக்கு அந்தப் பிச்சையைப் போடு!"

"முடியாது! முடியவே முடியாது! நாமெல்லாம் உயிரோ டிருந்து நமது தலைவரைப் பாதுகாக்க வேண்டும்! அவர் பாதுகாக்கப்பட்டால் நமது இனம், நமது மண், நமது மரியாதை அனைத்தும் பாதுகாக்கப்படும்" என்று கூறியவாறு நின்றுவிட்டாள் குருவிச்சி நாச்சியார்!

"என்ன சொன்னாய்? முடியாதா? நீயும் நானும் பண்டாரக வன்னியனைப் பாதுகாக்க வேண்டுமா? எதற்காக? ஏன்? குரு விச்சீ! உன்னைத் தெரியாதா எனக்கு? நீ எதற்காகப் பண் டாரகனுடன் சுற்றுகிறாய் என்று புரியாதா எனக்கு? அவர் நினைத்துக் கொண்டிருக்கிறார், நீ அவரை உயிருக்குயிராக எண்ணியிருப்பதாக! எனக்கல்லவா தெரியும் நீ யார் என்று!"

நல்லநாச்சியிடமிருந்து சற்றும் எதிர்பாராத வார்த்தைகள் சரமாரியாகப் பொழிவது கண்டு குருவிச்சி மரமாக நின்றாள்! நல்லநாச்சி மேலும் தொடர்ந்தாள்.

"என் அண்ணன் பண்டாரகனுக்கு ஒரு நாடு இருக்கிறது! அந்த நாட்டு மக்கள் அவரை நம்பியிருக்கிறார்கள்! கோட்டை கொத்தளமிருக்கிறது. அதிலே அவர் கொடி பறக்கிறது! செல்வமும் செல் வாக்குமிருக்கிற பெரும் புள்ளி உன்னிடம் மயங்கிக் கிடக்கும்போது, நீ சும்மாவிடுவாயா? ஆளை மடக்கி உன் அடிமையாக்கிப் போட்டு விடமாட்டாயா?"

குருவிச்சி அவளையறியாமல் அலறி விட்டாள். "நல்லநாச்சி

என்ன பேசுகிறாய்?" குருவிச்சியின் உள்ளம் உலைக்களத்து நெருப்பு மூச்சாய் ஒலியெழுப்பியது!

"உன்னைப் பற்றிய உண்மைகளைத்தான் பேசுகிறேன்! சத்தியமாகச் சொல், நீ என் அண்ணனை தூய்மையாகக் காதலிக்கிறாய் என்று! சொல்ல முடியாது உன்னால்! நீ என் அண்ணன் மீது பாசத்தைக் கொட்டுவதாகப் பசப்பித் திரிகிறாய்! அவர் ஒரு ஏமாளி! வெளுத்ததெல்லாம் பால் என நம்புகிறவர்! நீ அவரைப் பாதுகாப்பதாகக் கூறுவதெல்லாம் வெறும் பகட்டுப் பேச்சு! பாசாங்கு மொழி! இது எனக்கு நன்றாகவே தெரியும்!"

"நல்லநாச்சீ!"

குருவிச்சி நாச்சியார், அவளது பெயரைச் சொல்லி மட்டுந்தான் அலறினாள்! ஆனால் அந்த ஒரு சொல்லில் "அடி பாவி! என்னையா இப்படிப் பேசுகிறாய்? என்னுடல், பொருள், ஆவி அனைத்தும் பண்டாரகன்தான் என எண்ணிக்கிடக்கும் என்னைப் பற்றியா இப்படிச் சொல்லுகிறாய்?" என்ற கேள்விகள் அடங்கிக்கிடந்தன!

அந்தக் கேள்விகளைப் புரிந்து கொண்டவளைப் போல நல்லநாச்சியார், குருவிச்சியை மேலும் கோபப்படுத்திட வேண்டுமென்று திட்டமிட்டவளாக,

"நீயொரு நடமாடும் நாசம்! அண்ணனுக்குத் தெரியாது, இந்த அழகு மோகினி ஒரு ஆள் மயக்கி என்று! உன் காமக்களியாட்டத் தில் கணக்கற்ற ஆண்கள் நீச்சல் அடித்த கதையெல்லாம் என் அண்ணனுக்குத் தெரியாததால் உன்னை மாசற்ற மங்கையென்றும், புடம் போட்ட புனிதவதியென்றும், அவருக்காகவே வாழும் முற்றும் துறந்த முல்லைக் கொடியாள் என்றும் முட்டாள்தனமாக நம்பிக் கெட்டுப் போகிறார்" என்று நல்லநாச்சியார் சொல்லி வாய் மூடுவதற்குள் - அறவே பொறுமையிழந்தவளாக "என்ன சொன்னாய்?" என்று வாளுடன் அவளை நோக்கிப் பாய்ந்தாள் குருவிச்சி நாச்சியார்!

அதைத்தான் எதிர்பார்த்தாள் நல்லநாச்சியார்! அதற்காகத் தான் சுடுமொழிகளை, கடுமொழிகளை வலையாகப் பின்னி

விரித்தாள்! அந்த வலையில் விழுந்துவிட்டவளாக வாளை ஓங்கி விட்டாள் குருவிச்சி! நல்லநாச்சியும் ஒரு வாளுடன் அவளை எதிர்த்தாள்! இரண்டு வாட்களும் ஒன்றோடொன்று மோதத் தொடங்கின! தனது தலைக்கு மேல் வேகமாக ஓங்கப்பட்ட நல்லநாச்சியின் வாளை, குருவிச்சி தடுத்து அடித்த வேகத்தில் அந்த வாள் எங்கேயோ போய் விழுந்தது! தாக்குதலால் அது விழவில்லை! தானாகவே நல்லநாச்சி அதனைத் தவற விட்டு விட்டாள்! அவளது வாளைத் தட்டிய அதே வேகத்துடன், குரு விச்சியின் வாள் கீழே தணிந்து நேரே நின்றது! அதுதான் சமய மென்று நல்லநாச்சி யார் வேகமாக முன்னேறி ஓடிவந்து அந்த வாளுக்குள் தன் உடலைக் கோத்துக் கொண்டாள்! ஏற்கனவே நெருப்பால் கருகிய அந்த உடலில் இருந்து பீறிட்டுக் கிளம்பியது குருதி ஊற்று! நல்ல நாச்சியின் முகத்தில் திடீரென மலர்ச்சி! மகிழ்ச்சி! குருவிச்சிக்கு ஒன்றும் புரியவில்லை! நல்லநாச்சியை வாரியணைத்துக் தூக்கிக் கொண்டாள்!

"என்னை மன்னித்து விடு! நீ என்னை சாக அடிக்க மாட்டாய் என்றுதான், சண்டாளத்தனமாக உன்னைத் தூற்றினேன்! அதற்காக என்னை மன்னித்துவிடு! ஒரு தூயவளின் கையால் இந்தத் துரோகி சாகிறேன்! இதுவே எனக்கு சொர்க்கம்!"


நல்லநாச்சியின் கண்களில் அருவி பொங்கிற்று! விழிகளாலேயே அவள், குருவிச்சியிடம் மன்னிப்புக்கேட்டாள்! அவசரப்பட்டு, தான் ஏமாற்றமடைந்ததை எண்ணிக் குருவிச்சி கலக்க முற்றாள்!

பண்டாரகன், தனது படைப் பிரிவுடன் அங்குவந்து சேர்ந்தான், குருவிச்சியின் மடியில் நல்லநாச்சியார் பிணமாகப் படுத்திருப்பதைத்தான் அவன் காண முடிந்தது!

தழுதழுத்த குரலில் - ஆனால் மிக அமைதியாக "குருவிச்சீ! என்றான், கீழே குனிந்து சகோதரியைப் பார்த்தவாறு!

"உங்கள் சகோதரி என் கையால் தனது தவறுக்குப் பிராயச் சித்தம் தேடிக் கொண்டாள்" எனக் கண்ணீர் வடித்தாள் குருவிச்சி! நிலைகுலைந்து நின்ற பண்டாரக வன்னியன், தனது அன்புச் சகோதரியை இருகரங்களில் ஏந்திக்கொண்டு எதிரே எரிந்து தணிந்து கொண்டிருந்த காக்கை வன்னியன் கோட்டையைக் கண்களை அகல விரித்துப் பார்த்தபடி

வீரர்கள் சாவதில்லை!



காக்கை வன்னியனின் கோட்டை கருகிச் சாம்பலாகிக் கொண்டிருந்த அதே நாளில் - பாயும் புலி பண்டாரக வன்னியன், தனது பாசமிகு சகோதரி நல்லநாச்சிக்காக கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்த அதே நாளில் - தமிழகத்தில் கயத்தாறுப் பூமியில் வெள்ளைக்கார மேஜர் பானர் மேன் அவசர நீதி விசாரணை யொன்றை நடத்திக் கொண் டிருந்தான். அந்த விசாரணை மன்றத் தில் பாளையப் பட்டுகள் பலவற்றின் குறுநில மன்னர்கள் அமர்ந்திருந்தார்கள். தீர விசாரித்துக் குற்றம் மெய்ப்பிக்கப்பட்ட பிறகே தண்டனை வழங் கினோம் என்று தங் களை நீதிமான்களாகக் காட்டிக் கொள்ள விரும்பிய கம்பெனி ஆதிக்க வெறியர்கள் அந்தக் குறுநில மன்னர்களுக்கு நடுவே ஒரு குற்றவாளிக் கூண்டில் வீரபாண்டியக் கட்டபொம்மனை நிறுத்தியிருந்தார்கள். மேஜர் துரை பானர்மேன் இறுமாப்புடன் கேட்டான், உம்மை ஏன் கூண்டில் நிறுத்தியிருக்கிறோம் தெரியுமா என்று!

சிங்கமென முழங்கினான் வீரபாண்டியன்!

"இது கூடத் தெரியாதா? என் நண்பர் புதுக்கோட்டை மன்னர் அவர்கள் எட்டயாபுரத்து மன்னர் எட்டப்பருடன் போட்டியிட்டு துரோகத்திற்கான முதற் பரிசைத் தட்டிக் கொண்டு விட்டார்! அதனால் நான் இந்தக் கூண்டிலே நிற்கிறேன்!"

"அதுவல்ல காரணம்!" என்று மேஜையைக் குத்தினான் பானர்மேன்!

"வேறு சில காரணங்களும் இருக்கின்றன! ஒற்றுமையின் மையால் உருப்படாமல் போன இனம் என்று உலகில் ஒரு இனம் உண்டென்றால் அது தமிழ் இனம் தான்! எதிரிகள் கஷ்டப்பட்டுப் பிரித்து வைக்கத் தேவையில்லாமலே தாங் களாகவே கசப்பு பொறாமை, காழ்ப்பு, இவற்றின் உச்ச கட்டத் திற்குச் சென்று பிரிந்து நிற்கும் இனமும் தமிழ் இனந்தான்! அதன் விளைவுதான் இதோ உமது எதிரில் வீர பாண்டியன் கூண்டில் நிற்பதும் அதனை இத்தனைத் தமிழ் குறுநில மன்னர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்பதும்!"

"ஓகோ! உங்கள் இனத்தை ஒற்றுமைப்படுத்தி, வலுப்படுத்தி, வகைப்படுத்தி, உலகில் ஒரு பெரும் வல்லரசாக வளர்ப்பது தான் எங்கள் வேலையோ? நீங்கள் நெல்லிக்காய் மூட்டையாக இருந்தால் அதற்கு நாங்களா பொறுப்பு! இனத்துக்குத் தலைமை ஏற்கும் தகுதி யாருக்கு உண்டு என்று தெளிவுபட முடியாத படித்த தற்குறிகள் பல்லாயிரம் பேர் உம்மினத்திலே உண்டு என்பதை அறிந்து கொண்ட காரணத்தினால் தான் எம்மை போன்றோர் வேலை எளிதாக முடிகிறது!"

"பானர்மேன்! நன்றாகச் சொல்லும்! பரம திருப்தி எனக்கு! இதோ பளபளக்கும் உடையணிந்து, பச்சை, மரகதம், வைரம், கோமேதகம், வைடூரியமென அணிமணிகள் பூண்டு - பதவிக் காகவும் பவிசுக்காகவும் தங்களையே விற்றுக் கொண்டு தாசானுதாசர்களாகத் தண்டனிட்டுக் கிடக்கிறார்களே, இந்தப் பெரிய மனிதர்களுக்குப் புரியும்படி சொல்லும்! வீரம் - மானம் காதல் - புகழ் - கொடை எனப் பேசும் பழந்தமிழ் இலக்கியங்கள்! இலக்கியங்களா அவை! அல்ல! பண்பாட்டுச் சின்னங்கள்! வரலாற்று முத்துக்கள்! மரபை உணர்த்தும் மாணிக்கப் பரல்கள்! இவர்களோ வீரத்தைச் சோரம் போக விட்டவர்கள்! மானத்துக்கு மரணம் தந்து, தங்களை மரணத்திலிருந்து தற்காலிகமாகக் காத் துக் கொண்டவர்கள்! எட்டாத பழமாகக் கிட்டாத மலராகப் புகழ் விலகிப் போயினும் கவலையில்லையென்று பணத்தையும் பதவியையும் காதலித்து, அதற்கென இன உணர்வையே தியாகக் கொடையாக வழங்கிடும் வள்ளல்கள்! இவர்களுக்கு உமது

வார்த்தைகளில் ஒளிந்து கிடக்கும் உண்மைப் பொருள் மட்டும் புரிய வேண்டிய நேரத்தில் புரிந்திருந்தால் - இந்நேரம் நீரும் உமது அதிகாரக் கூட்டமும் கயத்தாறு மண்ணில் நின்று கட்டப்பொம்மனைக் கூண்டிலே நிறுத்திக் கொக்கரித்துக் கொண்டிருக்க முடியுமா? என்ன செய்வது? எல்லோரும் ஊமைத் துரைகளாக - வெள்ளையத்தேவன்களாக - சுந்தரலிங்க வீரர்களாக - இலங்கை முல்லைத் தீவை ஆளுகின்ற என் நண்பர் பண்டாரக வன்னிய வைர முத்துக்களாக - இருக்க முடிகிறதா? தமிழ்இனக் கழனியில் கதிர் குலுங்கும் பயிர்கள் குறைவு! களைகள் நிறைய! இதோ அந்தக் களைகளின் நடுவேதான் நான் நிறுத்தப்பட்டிருக்கிறேன்!"

"போதும்!" என்று பானர்மேன் காட்டுக் கூச்சல் போட்டான்! "இவர்கள் எல்லாம் எனது அன்புக்கினியவர்கள்! விசுவாசமுள்ள நண்பர்கள்! உதயமாகப் போகும் ஆங்கிலேயக் கம்பெனி ஆட்சிக்கு அஸ்திவாரக் கற்கள்!" என்று பானர்மேன் உரக்கச் சத்தமிட்டதும் கட்டப்பொம்மன் கலகலவென சிரித்துக் கொண்டு கேலியாகச் சொன்னான், "இவர்களைப் பாராட்டிட இத்தனை சொற் றொடர்கள் ஏன்? சுருக்கமாக ஒரே சொல் - கோடரிக் காம்புகள் - என்று சுவைபடக் கூறலாமே!" என்று!

"இனி வாதப் பிரதிவாதங்கள் இதுபோலத் தேவையில்லை! வழக்கின் முகப்புக்கு வருவோம்! இப்போது கட்டபொம்மன் மீதுள்ள குற்றச்சாட்டுக்களைப் படிக்கிறேன்!" எனச் சினந்தபடி, பானர்மேன் தனது கையில் இருந்த குற்றப் பத்திரிகையைப் பிரித்துப் படித்தான்.

பாஞ்சாலங்குறிச்சி அதிபர் வீரபாண்டியக் கட்டபொம்மன் கிழக்கிந்திய கம்பெனியாருக்கு வரி செலுத்த மறுத்தது ஒரு குற்றம் - கலெக்டர் லூஷிங்டன் துரை பேட்டிக்கு அழைத்த போது அவரை அவமதித்தது ஒரு குற்றம் - கம்பெனிப் படை வீரர்கள் பலரைக் கொன்று குவித்தது ஒரு குற்றம் - இப்படிக் குற்றச்சாட்டுக்களைப் பானர்மேன் அடுக்கிக் கொண்டே போனபோது, வீரபாண்டியன் குறுக்கிட்டான்.

"வரி கொடுத்து வாழ்வதெனில் பாஞ்சாலங்குறிச்சிச் சீமை

பரங்கியருக்குப் பணிந்து விட்டது என்று பொருள்! எனவே வரி கொடுக்க மறுத்தோம்! எம்மை நாடி வருவோரை அன்புடன் உபசரித்துப் பழக்கப்பட்டவர்களே தவிர, நாங்கள் எதிரிகளுக்கு அடங்கி ஒடுங்கிட அவர்களை வலுவில் தேடி ஓட வேண்டிய வாலறுந்த பிராணிகள் அல்லர்! பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை முற்றுகையிட்டீர்கள் - பகைவனது காலடிகள் எமது மண்ணை மிதித்த பிறகும் உயிரை வெல்லமாக மதித்திட நாங்கள் என்ன மாமிசப் பிண்டங்களா? சோற்றுத் துருத்திகளா? தலை நிமிர்ந்து வாழ்ந்த இனம் தமிழ் இனம் - அந்த இனம், வஞ்சகத்தின் முன்னால் வளைந்து நிற்குமோ? சரசத்திற்கு மயங்குமோ? சபலத்திற்கு ஆட்படுமோ? இன்னுயிர் தந்து இந்தத் தமிழ் மண்ணகம் காப்போம் என்று எழுந்ததில் என்ன வியப்பு? அது எப்படிக் குற்றமாகும்? கோட்டையை விட்டு வெளியேறிய என்னையும் எனது படையையும் காட்டிக் கொடுப்போர் துணையுடன் வளைத்து விட்டதால் குற்றச்சாட்டுக்களை என் முன்னால் கொட்டிக் குவிக்கிறீர்! தீர்ப்பை எழுதித் தயாராக வைத்துக் கொண்டு எதற்காக இந்தப் போலி விசாரணை! நீர் அளிக்கப் போகும் தீர்ப்பை நானே சொல்லட்டுமா?"

பானர்மேன் பயங்கரமாகச் சிரித்துக் கொண்டு சொன்னான், "என் வேலை மிச்சம்! தாராளமாகச் சொல்லலாம்!" என்று!

எதற்காக நான் சொல்ல வேண்டும்? உமது வாயாலேயே சொல்லும்! அந்த இனிய இசையைக் கேட்டு - இதோ இங்கு அமர்ந்திருக்கும் பாளையப்பட்டுகளின் ரசிகப் பெருமக்கள் எல்லாம் சிரமசைத்து, கரகோஷம் செய்து ஆரவாரம் செய்யட்டும்!"

கட்டப்பொம்மன் முகத்தில் முறுவல் மாறவில்லை! பொலிவு அதிகமாகப் பெருகியது! பானர்மேன் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டான். தனது பாதுகாப்பு படைவீரர்கள் உஷாராக இருக்கிறார்களா எனக் கவனித்துக் கொண்டான். பிறகு படித்தான் தீர்ப்பை! கயத்தாறு புளிய மரத்தில் அந்த ஏறு நடை சிங்கத்தை - எதற்கும் கலங்காத எதிர் நீச்சல் வீரனை - எதையும் தாங்கும் இதயம் படைத்த மனிதனை - தூக்கிலே போட வேண்டும் என்று

தீர்ப்பளிக்கப்பட்டவுடன், அவனைக் காட்டிக் கொடுத்தோர் - அவனுக்குத் துரோகம் செய்தோர் அவனை எதிர்த்த காரணத்தால் பதவிச் சுகம் பெற்றோர் - அவர்கள் எல்லாம் கூடக் கண் கலங்கினர்! எதிர்காலச் சரித்திரத்தில் இழி பிறவிகள் என வர்ணிக்கப்படுவோமேயென்று முன்கூட்டியே கலங்கினார்கள் போலும்!

"தீர்ப்பு பற்றி எனக்குக் கவலையில்லை! ஒரே ஒரு கவலை! எதிரிகளுடன் போரிட்டு என் கோட்டை வாசலில் மாண்டிருந்தால் என் வரலாறு இன்னும் பெருமைமிக்கதாக ஆகியிருக்கும். அந்தப் பேறுபெறாமல் தூக்கில் தொங்கப்போகிறேன். பகைவனின் பாதம் கழுவிக் குடிப்போரே! உங்களுக்கு மகிழ்ச்சி தானே! வாழ்க! வாழ்க! நன்றாக வாழ்க! நான் விடைபெற்றுக் கொள்கிறேன்!"

என்று கரம் தூக்கி அசைத்துக் காட்டி விட்டு, வீரநடை போட்டவாறு தூக்குக் கயிற்றைத் தொட்டிழுத்து முத்தமிட்டான்! தானே தனது கழுத்தில் கயிறை மாட்டிக் கொண்டு - ஆங்கிலேய வெறியர்கள் தந்த தண்டனையைச் சிரித்த முகத்துடன் நிறைவேற்றிக் கொண்டான்.

சகோதரியையும், தணிகைமலையையும் இழந்து விட்டு - சஞ் சலத்துடன் மாளிகைக்குத் திரும்பிய பண்டாரக வன்னியன், வீரபாண்டியக் கட்டபொம்மனின் முடிவைக் கேட்டுப் பதைத்தான்!

தமிழகமிருந்து வந்த தகவலினால் அவன் தளர்ந்து விடக் கூடாதேயென்று கருதிய குருவிச்சிநாச்சியார், அவனது தோளில் மெல்லக் கைவைத்துக் குலுக்கி - "வீரர்கள் சாவதில்லை! நாமும் சாகபோவதில்லை!" என்றாள்! அவளது கையை அழுத்தமாகப் பற்றிக் கொண்டான் பண்டாரக வன்னியன்!

கொழும்பில் கொண்டாட்டம்!

56

கொழும்புத் தலைநகரத்தில் நார்த் பிரபுவின் மாளிகையின் முன்புறத்தில் வண்ண வண்ண மத்தாப்புக்கள் கொளுத்தப்பட்டு, அந்தப் பகுதியே பகல் பொழுது போலக் காட்சியளித்தது. ஆங்கிலேயக் கம்பெனியின் வீரர்கள் கைகளில் மதுப்புட்டிகளுடன் ஒருவரையொருவர் அணைத்துக்கொண்டும், சிறிது வாய்ப்பு கிடைத்தவர்கள் வெள்ளைக்காரப் பெண்டு களைத் தழுவிக் கொண்டும் தங்கள் மகிழ்ச்சியை மதுமயக்கத் தோடு வெளிப் படுத்திக் கொண்டிருந்தனர். வெற்றிக் களிப்பில் வெடிகளின் ஓசையும் இடை இடையே இணைந்து முழங்கிக் கொண்டிருந்தது. அந்தக் குதூகலக் களியாட்டத்துக்கும் பாட் டுக்கும் கூத்துக்கும் மது மங்கையர் நடனத்துக்கும் மயக்கம் கொண்ட ஆடவர் கூச்சலுக்கும் காரணம் என்ன?

தமிழகத்தில் ஆங்கிலேய ஆதிக்கத்தின் காலடி படக் கூடாது எனக் கர்ச்சித்துக் கொண்டிருந்த சிங்கம் - பாஞ்சாலக்குறிச் சிப் பார்த்திபன் - வீரபாண்டியக் கட்டபொம்மன் வீழ்த்தப்பட் டான் என்ற வெற்றிச் செய்தி கேட்டுத்தான் இலங்கையில் வெள்ளைக்காரக் கும்பல் வெறி பிடித்து ஆடியது! தமிழகத் துக்கு மிக அருகாமையில் - தமிழகத்தின் ஒவ்வொரு நிகழ்ச்சி யாலும் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்படக் கூடிய தமிழ் மக்கள் வாழும் பகுதியான இலங்கைத் தீவில், அந்தச் செய்தி பரவினால் ஆங்கிலேய எதிர்ப் பின் வேகம் குறைந்து பீதியடைந்து ஒடுங்கிடுவர் இலங்கைத் தமிழர் என்று அந்த ஆதிக்கக்காரர்கள் கருதினர். அதனால்தான் தங்களை எதிர்த்து நின்ற ஒரு தமிழ்

நாட்டு மாவீரனின் மரணம் கண்டு குதியாட்டம் போட்டனர். கட்ட பொம்மனின் வீழ்ச்சியால் இலங்கையில் உள்ள பண்டாரக வன்னியனின் ஆவேசம் குறையும் - ஆங்கிலேயரை இனியும் பகைத்துக் கொள்ளக் கூடாது என்ற முடிவுக்கு அவன் வந்தே தீரவேண்டுமென்று அவர்கள் நம்பினர். அதனால்தான் அந்த அளவுக்கு நார்த் பிரபுவின் மாளிகை அமர்க்களப்பட்டது.

உச்சி மாளிகையின் ஓய்யார மண்டபத்தில் பட்டு மெத்தையில் பாவையொருத்தியைத் தன் மடிமீது படுக்க வைத்துக்கொண்டு, ஒரு கையால் அவள் கூந்தலைக் கோதியவாறு, மற்றொரு கையால் மதுக் கிண்ணத்தைக் காலி செய்து கொண்டிருந்தான் நார்த் பிரபு!

அவளோ அவன் தொடைகளில் முகம் புதைத்து, பின்னழகு முழுவதையும் காட்டியவாறு குப்புறப் படுத்திருந்தாள். அவள் கூந்தலைக் கோதுவதுடன் நில்லாது, அவளது முதுகைத் தடவிக் கொண்டும், தனது பாதங்களால் அவளது பாதங்களை மெல்ல உரசிக்கொண்டும், தனது உடலுக்கு சூடேற்றிக்கொண்டிருந் தான் நார்த் பிரபு!

"உம்! பிறகு சொல்லு! நீ சொல்லச் சொல்ல சுவைக்கிறது! நீ என் மடியில் படுத்துக்கொண்டே பேசுவதும், அதை நான் குடித்துக் கொண்டே கேட்பதும் எவ்வளவு இன்பமாக இருக் கிறது தெரியுமா?"

"எனக்கு எப்படியிருக்கிறது தெரியுமா? நீங்கள் கொஞ்ச நேரம் என்னோடு பேசாமல் இருக்க வேண்டும்! நான் என்னை மறந்து உங்கள் மடியில் மௌனமாக அப்படியே குப்புறக் கிடக்க வேண்டும்!"

"இன்னும் கொஞ்சம் குடிக்கிறாயா?"

"அய்யோ வேண்டாம்! அளவுக்கு அதிகமாகிவிட்டது! உங்களையே எனக்கு இப்போது இரண்டு பேராகத் தெரிகிறது!"

"அப்படியொரு ஆசைகூட உனக்கு இருக்கிறதா?"

"சே! என்னங்க? இரண்டு ஆள் பலம் உங்களுக்கு இருப்பதாக நான் சொன்னதாக வைத்துக் கொள்ளுங்களேன்!"

"என்ன இருந்தாலும் எனக்கு உன்மீது ரொம்பக் கோபம்

தெரியுமா?"

"கோபமா? ஏன்?"

"எவ்வளவு பெரிய விருந்து! அதுவும் விதவிதமான விருந்து! நானும் எத்தனையோ பெண்களை அனுபவித்திருக்கிறேன். ஆனால் இன்றைய அனுபவமிருக்கிறதே, அடடா! நீயல்லவா என்னை அணுஅணுவாக அனுபவிக்கிறாய்! இந்த மகத்தான வாய்ப்பை இத்தனை நாள் தாமதமாக வழங்குகிறாயே, அதிலே எனக்குக் கோபம் இருக்காதா?"

குப்புறப் படுத்திருந்த அந்தக் கோமளவல்லி, "குலுக்" என்று சிரித்துவிட்டாள். அப்போது அவளது வாகான உடம்பு குலுங்கியது! ஆம், உறை கழன்ற வீணையொன்று மேலும் கீழுமாக அசைந்தது போன்று! அந்தக் குலுங்கலில் நார்த் பிரபுவின் கையிலிருந்த கோப்பையும் திடீரென அசைந்தது! அசைந்த கோப்பையிலிருந்து மதுத்துளிகள் அந்த மயக்கு மங்கையின் முதுகில் விழுந்தன!

"ஓ!" என்று அவள் திடுக்கிட்டுப் புரண்டு நிமிர்வதற்குள், அவனே துடைத்துவிட்டான். அவள், கவிழ்ந்திருந்த நிலையிலிருந்து மல்லாந்தவாறு தலையைத் தூக்கிப் புன்னகை புரிந்தாள்.

"இந்தக் கண்கள்தான் எப்படி ஜொலிக்கின்றன! இந்த இதழ்கள் தான் எப்படிச் சுவைக்கின்றன!"

என்றவாறு விரல்களால் அவளது விழிகளை வருடினான்! இதழ்களில் முத்தம் பதித்தான்!

"அன்புள்ள நார்த்! நன்றி!" என்றாள் அவள், அவனது கழுத்தை இருகரம் கொண்டு வளைத்தவாறு!

"இன்னும் நான் தர வேண்டியதும், நீ எனக்கு தர வேண்டியதும் எவ்வளவோ இருக்கிறது! அதற்குள் நன்றி அறிவிப்புப் படலமா?"

நார்த் பிரபு போதைச் சிரிப்புடன் அவளை வாரியணைத்துக் கொண்டான்.

"நார்த்!" அவள் இன்பமாக முனகினாள்! அவனும் "பியசீலி!" என்று காம வேட்கையில் தழுதழுத்தான்.

அருகிலிருந்த விளக்கு, ஒளி மேலும் குறைக்கப்பட்டு தள்ளி வைக்கப்பட்டது! படுக்கையிலிருந்து அந்த மதுக்கோப்பை கீழே விழுந்து எஞ்சியிருந்த மதுவைத் தரையில் சிந்திக் கொண்டு, உருண்டுபோய் ஒரு மூலையில் நின்றது.

மீண்டும் விளக்கு பிரகாசமாயிற்று! பிறந்த மேனிப் பாவையாக அவள் எழுந்து நின்று மதுக் கலயத்தை இரண்டு கோப்பைகளுக்கு மாற்றிக்கொண்டிருந்தாள். ஒரு இன்ப அயர்வுடன், நார்த் பிரபு அவளைத் தழுவியவாறு தன் கையிலிருந்த மதுவை அவளுக்குத் தர, அவள் தன் கையிலிருந்த மதுவை அவன் உதடுகளில் திணித்தாள்.

மறுபடியும் படுக்கையில் சாய்ந்தனர்.

"பியசீலி! பண்டாரகனின் கட்டுக் காவலில் இருந்து எப்படித் தப்பி வந்தாய்? அதைச் சொல்!"

பியசீலி, நார்த் பிரபுவின்மீது ஒரு காலைத் தூக்கி அலட்சியமாகப் போட்டுக்கொண்டு சிரித்தாள்.

"என்ன சிரிக்கிறாய்?" என்று கேட்டுக்கொண்டே, அவனும் அவளுடன் பின்னிக்கொண்டான்!

"ஒன்றுமில்லை! நான் தப்பித்து வந்ததை நினைத்தால் எனக்கே சிரிப்பு வருகிறது!"

என்றாள் பியசீலி!

"அப்படியென்ன அபூர்வமான நகைச்சுவை நிகழ்ச்சி அது? அதை நான் தெரிந்து கொண்டு ரசிக்கக் கூடாதா?"

இறுக அணைத்துக்கொண்டான் பியசீலியை நார்த்!

"எப்படிதப்பி வந்தேன் தெரியுமா?"

"உம்! சொல்லு! இந்தா அதைச் சொல்ல அச்சாரம்!"

பியசீலியின் உதடுகளை பறித்தெடுப்பது போல அவை இரண்டும் இரத்தம் கட்டிப் போகிற அளவுக்கு ஒரு முத்தம்! அடங்காப்பசிகாரிக்கு அப்படி ஆயிரம் அளித்தால்தான் என்ன, போதுமென்றா சொல்லப்போகிறாள்!

"உம்! சொல்லு! எப்படித் தப்பினாய்?"

"சொல்லுகிறேன்!"

பியசீலி அந்தப் படுக்கை அறைச் சுவரை வெறிக்கப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். பண்டாரகனின் மாளிகையை

தப்பித்து வந்த விதம்!

57

பியசீலியை குறத்தி வேடத்துடனே முல்லைத்தீவு மாளிகையின் அறையொன்றில் சிறை வைத்துவிட்டு நான்கு காவலர்களை அந்த அறைக்குள்ளேயே பாதுகாப்பாக இருக்கச் சொல்லிவிட்டுக் குருவிச்சி, பண்டாரக வன்னியனைப் பார்க்க அங்கிருந்து வேகமாகச் சென்று விடுகிறாள். குறத்தி பியசீலியின் கண்கள் அந்த அறையைச் சுற்றிலும் சுழன்று வட்டமிடுகின்றன.

"என்ன பார்க்கிறாய்? இந்த அறையிலிருந்து தப்பித்துச் செல்ல ஏதாவது வழியிருக்கிறதா, என்று பார்க்கிறாயா?"

ஒரு தடித்த மீசைக்காரக் காவலன் பியசீலியை மிரட்டுவது போலப் பார்த்துக்கொண்டே கேட்கிறான்"

"சே! சே! நான் ஏன் தப்பித்து ஓட வேண்டும்? பண்டாரக வன்னியரின் விருந்தினளாக வந்திருக்கும் எனக்கு இங்கிருந்து ஓடுவதற்கு மனம் வருமா?"

"பிறகு என்ன கழுகுப் பார்வை?"

"இவ்வளவு அழகான அறையில் நான் ஒருத்தி மட்டும் இருக்கிறேன் – நீங்கள் நாலு பேர் இருக்கிறீர்களே – என்றுதான் யோசிக்கிறேன்."

"எங்கள் பெயர்கள்கூட ராமன், இலக்குவன், பரதன், சத்ருக்கனன் தான்! எப்படி நாலு பேரின் பெயர்ப் பொருத்தம் பார்த்தாயா?"

"எனக்கு இராமாயணம் பிடிக்காது! மகாபாரதம்தான்

பிடிக்கும்!"

"அப்படியென்றால்?"

"நீங்கள் ஐவராக இருந்து, அந்த ஐவரும் தர்மன், பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் என்ற பெயர்களோடு இருந்தால் இந்தப் பாஞ்சாலிக்கு எவ்வளவு பரவசமாக இருந்திருக்கும், பரவாயில்லை. ஒன்று குறைவதால் ஒரு மோசமும் இல்லை! அதிருக்கட்டும். இவ்வளவு விசாலமான அறையில் ஒரே ஒரு சிறிய கட்டில் மட்டும் இருக்கிறதே! நாம் ஐவரும் படுத்துப் புரள விளையாட்டு மைதானம்போல பெரிய கட்டில் இருக்கவேண்டாமோ?"

"என்னம்மா உளறுகிறாய்? இந்த மண்ணுக்கு விரோதமாகத் துரோகம் செய்ய வந்த பெண்மணியென்று குற்றம் சாட்டப்பட்டு, சிறையில் அடைபட்டிருக்கும் கைதி நீ என்பதை மறந்துவிடாதே!"

"உண்மையைச் சொல்லுங்கள்! உங்கள் ஒவ்வொருவர் மனச் சிறையிலும் இப்போது நான் இல்லையா? உங்கள் மனசைத் தொட்டுச் சொல்லுங்கள்!"

தளுக்கி மினுக்கியபடி பியசீலி இதைச் சொல்லும்போது, நால்வரில் ஒருவன் மட்டும் பல்லை இளித்துக் கொண்டு சிறிது வளைந்து நெளிகிறான். அதைக் கவனித்துவிட்ட தடித்த மீசைக்காரன், அவன்முதுகில் வேகமாக ஒரு தட்டுத் தட்டி அடக்கி வைக்கிறான்.

அதை ஓரக்கண்ணால் பார்த்து விடும் பியசீலி, தடித்த மீசையைப் பார்த்து "என்னய்யா! நீ ஆண்மகனாக இல்லாமல் இருக்கலாம். அந்த மனிதனுக்குப் பல் இளிக்கிற சுதந்திரம் கூடக் கொடுக்காமல் தடுப்பது நியாயமா?" என்று, அவன் தோள்பட்டையில் ஒரு தட்டுத் தட்டுகிறாள்.

அந்த மெல்லிய விரல்களின் ஸ்பரிசம் பட்டு எத்தனையோ வீராதி வீரர்கள், தளபதிகள் எல்லாம் இரும்புக்குண்டு நடுக் கடலில் விழுந்தது போல அவளிடம் விழுந்திருக்கிறார்கள். ஆனால் அந்த தடித்த மீசைக்காரன், அவனுடன் மற்றும் இரு காவலர்கள் அவளை ஒரு விஷப்பூச்சியைப் பார்ப்பது போலத் தான் எல்லையற்ற வெறுப்புடன் பார்க்கிறார்கள். அந்த ஒருவன்

மட்டும் பல்லைக் காட்டி நெளிந்துவிட்டு, அதற்கு மேல் தலைமைக் காவலனுக்குக் கட்டுப்படாமல் இருந்தால் பல் வரிசை இரண்டும் கழன்றுவிடும் என்ற பயத்தில் அவளைக் கோபத்துடன் நோக்குவதாக நடிக்கிறான். ஆனாலும் அவன் வாயின் இதழ்க் கடையிலிருந்து உமிழ்நீர் சுரந்து வடிவதைப் பியசீலி பார்க்கத் தவறவில்லை. நாலில் ஒன்று நமது பிடியில் அகப்பட்டது என்ற பெருமிதத்துடன் சிரித்துக்கொள்கிறாள்.

"சரி! சரி! அந்தத் திரைச் சீலையை இழுத்துவிட்டு கட்டிலை மறைத்துவிட்டு நீ படுத்துத் தூங்கு! நாங்கள் இந்த அறைக் குள்ளேயே இருந்து காவல்புரிகிறோம்" என்கிறான் தடித்த மீசை!

"கொஞ்சம்கூட உங்களுக்குப் பண்பு கிடையாதா? ஒரு பெண் இத்தனை ஆண்களுக்கு எதிரில் தனியாகப் படுத்து எப்படித் தூங்க முடியும்? தூக்கக் கலக்கத்தில் என் உடம்பில் இருக்கிற துணி விலகுவதாக வைத்துக் கொள்ளுங்கள்! உங்களுக்கு நான் அரையாடை அழகியாகக் காட்சி கொடுத்துக்கொண்டு கண்ணயர வேண்டுமா?"

"அதற்குத்தான் இந்தத் திரைச்சீலையை இழுத்துவிட்டுக் கொள்ளச் சொல்கிறோம்."

"உங்களில் யாருக்காவது கால் பிடிக்கத் தெரியுமா?"

"கழுத்தைப் பிடிக்கத் தெரியும்!"

"அய்யோ! நீங்கள் கொலைகாரப் பாவிகளா?"

"பேசாதே! மரியாதையாக போய்ப் படு!"

"எப்படி எனக்கு உறக்கம் வரும் உங்கள் ராணியம்மாள் குருவிச்சி நாச்சியார், என்னை அடித்த அடியிலும் - தரையில் போட்டுப் புரட்டியதிலும் - என் உடம்பெல்லாம் ஊமைக்காயமாக இருக்கிறது! கொஞ்சம் குளியல் அறைக்குச் சென்று சூடாக உடம்பில் தண்ணீர் ஊற்றிக்கொண்டு வருகிறேன்."

பியசீலி, பேசிக்கொண்டே அந்த நாலு பேருக்கு நடுவில் தனது ஆடைகளை ஒவ்வொன்றாகக் களையத் தொடங்குகிறாள். நால் வரும் கண்ணை மூடிக்கொள்கிறார்கள். கண்ணை மூடிக் கொண்டார்களே தவிர, தடித்த மீசைக்காரனைத் தவிர, மற்ற

மூவரும் இமைகளில் ஒரு சிறிது இடுக்கு வைத்துக்கொண்டே அவளது அழகு லாவகத்தை ரசித்துக்கொண்டிருக்கின்றனர். ஆடையைக் களையும் அவசரத்தில் அவள் இடையில் சொருகி யிருந்த நீளமான இரும்புத் திறவுகோல் ஒன்று கீழே தரையில் விழுகிறது!

"என்னம்மா, இவ்வளவு பெரிய இரும்புச் சாவி?"

"இதுவா? இந்தச் சாவி எந்தப் பணப் பெட்டியையும் திறப்பதற்கு அல்ல!"

"பிறகு எதற்கு?"

"எனக்குச் சில நேரங்களில் பயங்கரமான காக்கா வலிப்பு வரும். அந்த நேரத்தில் யாராவது இந்த இரும்புச் சாவியைக் கையில் கொடுத்தால், அந்த வலிப்பு நோய் படிப்படியாகக் குறையும். அதற்குத்தான் இதை வைத்திருக்கிறேன்."

அடப்பாவமே! இவ்வளவு ரூபவதியான ஒரு இளம் பெண்ணுக்கு அதுபோல ஒரு வியாதியா என்று ஒரு திடீர்க்கவலை அந்தத் தடித்த மீசைக்காரனின் நெஞ்சில் தோன்றி உடனே மறைவதை அவன் முகம் காட்டிக்கொடுக் கிறது. அந்த மாறுதலையும் அதை அவன் சமாளித்துக் கொண்டு வேறுபக்கமாக முகத்தைத் திருப்பிக் கொள்வதையும் பியசீலி கவனித்துப் புன்னகை புரிகிறாள்.

உடலை மூடியிருந்த - அதுவும் அரைகுறையாக மூடியிருந்த ஆடைகளில் முக்கால் பகுதியைக் கழற்றி எறிந்து விட்டு - மேலே ஒரு துண்டுத் துணி, இடையில் ஒரு சிறு பாவாடையுடன், "சரி! சரி! நான் குளிக்கிறேன்." என்று அவசரமாகக் குளியல் அறைக் குள் நுழைந்தவள், திடுமெனக் கூச்சலிட்டவாறு கீழேவிழுகிறாள். காவலர்கள் நால்வரும் திடுக்கிட்டுப் பார்க்கிறார்கள். விழுந் தவள் கை கால்களை உதறிக் கொண்டு தரையில் மல்லாந்தபடி புரளுகிறாள். வாயையும் கோணிக் கோணி இழுக்கிறது.

"ஓ! அவள் சொன்னபடியே காக்காய் வலிப்புத்தான்" என்று தடித்த மீசைக்காரன் தீர்மானித்துக் கொள்கிறான். பல் இளித்த காவலன் இப்போது தனக்கு முப்பத்திரண்டு பற்களும் விழாமல் இருப்பதைக் காட்டியபடி இருக்கிறான். தடித்த மீசை, மூன்று காவலர்களையும் முறைத்தபடி வெளியே போகச் சொல்லு

கிறான். அவர்களும் வேண்டா வெறுப்பாக வெளியேறுகிறார்கள். தடித்த மீசை, முகத்தை வேறு திசையில் திருப்பிக்கொண்டு கீழேகிடந்த சாவியை எடுத்துப் பியசீலியின் கையில் திணிக்கிறான். பிறகு அவனும் வெளியே போய் அந்த மூன்று காவலர்களுடனும் நிற்கிறான். அவன் என்னவோ தவம் செய்யும் முனிவரைப் போலத்தான் உள்பக்கமே பார்க்காமல் உறுதியோடு நிற்கிறான். ஆனால் அந்த மூவரின் முகங்களும் அவர்களையறியாமல் அறைக்குள்ளேயே நோட்டம் விடுகின்றன. அதை அனுமதிக்கத் தயாராக இல்லாத தடித்த மீசைக்காரன் அந்த அறைக் கதவை மூடிக் கொண்டு வெளியிலே மூவருடனும் வெகு உஷாராகக் காவல் புரிகிறான்.

பிறந்த மேனியாகப் புரண்டு கொண்டிருந்த பியசீலி, கடைக் கண்ணால் கதவுப்புறம் பார்க்கிறாள். பெருமூச்சு விட்டுக் கொள்கிறாள். அமைதியாக - ஆனால் அதே நிர்வாணக் கோலத்தில் தரையில் கிடக்கிறாள். மெல்லக் கதவைத் திறந்து தடித்த மீசை நோக்குகிறான்.

"வலிப்பு தீர்ந்தது! மயக்கமாக இருக்கிறாள்" என்று அவன் வாய் முணுமுணுக்கிறது. பியசீலி, உள்ளே அலங்கோலமாகப் படுத்திருக்கிறாள் என்றே அவர்கள் நம்பிக்கொண்டு வெளியே காவல்புரிகிறார்கள். ஆனால் அவளோ, அந்த அறையின் பின்புறக் கதவைத் திறந்துகொண்டு, தப்பித்துவிடுகிறாள்.

பியசீலி, நார்த் பிரபுவிடம், தான் எப்படித் தப்பி வந்தேன் என்றகதையைச் சொன்னவுடன் நார்த் "பலே! பலே!! கைகாரி!!!" என்று கூறிக்கொண்டே அவளைத் தூக்கிக் கொண்டு, அந்த ஆடம்பர அறையில் பேய்போலக் குதித்தான். அவள் கீழே விழுந்துவிடாமல் அவன் தோள்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, கலகலவெனச் சிரித்தாள்.

அதிலே இது ஒன்று!

58

பியசீலியின் அந்தச் சிரிப்பொலி இசையாக முழங்கிற்று! மத்தளமாக அதிர்ந்தது! பிடில் வாத்தியமாக எழுந்தது! அந்தச் சங்கீத ஆரவாரத்தில் நார்த், அவளைத் தூக்கிய நிலையிலேயே நடனமாட ஆரம்பித்தான். அவளும் அவன் கழுத்தை இறுகப் பிடித்துக்கொண்டு மாறி மாறி முத்தம் பொழிந்தாள், மாரி போல! காமக் களியாட்டத்தின் உச்சகட்டத்தை எட்டுமளவுக்கு அவனும் அவளும் அருந்திய மதுவின் சேட்டை, கொடி கட்டிப் பறந்தது!

ஆடிக்கொண்டே, அவளைப் பலமாக அணைத்துக் கொண்டே கேட்டான், இன்னும் ஒரு புட்டியைக் காலி செய்கிறாயா என்று! அவள், வாய் குழறியவாறு பதில் அளித்தாள்- "கண்ணா! உன் வாயில் சுரக்கும் உமிழ்நீரை என் வாயில் கொடு! அது ரொம்ப ரொம்ப போதையாக இருக்கும்! நீ அவ்வளவு குடித்திருக்கிறாய், அதனால் எச்சிலைக் கொடு என் இறைவா! என் தேவா! அதுதான் இப்போது உயர்ந்த மது! அதற்குத்தான் கிறுகிறுப்பு அதிகம்!"

பியசீலியின் இந்தப் பதிலைக் கேட்டதும், மேலும் பத்து கோப்பைகள் மதுவருந்திய கிறுகிறுப்புடன் அவன், அவளது கோரிக்கையை நிறைவேற்றினான்.

"இதற்குப் பதிலாக உனக்கு என்ன வேண்டும் என் ராஜா?"

என்று அவனைக் கைகளால் தழுவுவதாகக் கருதிக் கொண்டு, கால்களால் அவனுடலைச் சுற்றிப் படர்ந்தாள். அவன், அவளைத் தரையில் கிடத்திக்கொண்டே, "உன் ரத்

தத்தை உறிஞ்சிக் குடிக்க வேண்டும். இந்த அழகியின் ரத்தத்தோடு கலந்த மது - அடடா, எவ்வளவு ருசியாக இருக்கும்!" என்று கூறிச் சிரித்தான். அது சாதாரண சிரிப்பாகத் தெரிய வில்லை. வெறிச் சிரிப்பாக இருந்தது. பியசீலி பீதியடைந்தாள். அதனால் அந்தத் தரையில் உருண்டு புரண்டு சற்று தொலைவாகச் சென்றாள். அவனும் அவ்வாறே உருண்டு போய் அவளைத் தழுவிக்கொண்டு அழுத்திப் பிடித்து வளைத்துக் கொண்டான். போதையில் அழுந்தியிருந்த பியசீலி, "பிரபோ! என் ரத்தத்தை எப்படி உறிஞ்ச முடியும் உங்களால்?" என்று தழுதழுத்தாள்! அப்போதும் அவள் அவனை அணைத் துக் கொண்டுதான் இருந்தாள். இருவருக்குமே என்ன செய் கிறோம் என்று தெரியவில்லை. காம வெறிக் கூத்தின் கடைசிக் காட்சி "ருத்ர தாண்டவ"மாகவே அமைந்துவிட்டது!

"எப்படி உறிஞ்ச முடியும் என்றா கேட்கிறாய்? அடி பைத்தியமே! உங்கள் கிருஷ்ண பரமாத்மா, பூதகியின் ரத்தத்தை எப்படி உறிஞ்சினாரோ - அப்படி உறிஞ்சப் போகிறேன்!"

என்று வெறித்தனமாக சிரித்துக்கொண்டே அவள் மார்பகத்தில் முரட்டுத்தனமாக முத்தமிட்டான். "ஓ! முத்தம் தானா?" என்று பியசீலியும் அந்த இன்பத்தை ரசிக்கலானாள்! அந்த இரவில் பல தடவை நடந்த ஆலிங்கனத்தை விட அந்த ஆலிங்கனம் வித்தியாசமாக இருப்பதை உணர்ந்தபோதிலும், அதை அவள் விரும்பியவளாகவே அவனுடன் ஒத்துழைத்தாள். அவளா ஒத்துழைத்தாள்? இல்லை! அவளைத் தனது ஆதிக் கத்தில்கொண்டு வந்துவிட்ட அந்த மதுவின் அட்டகாசம் அப்படியிருந்தது! நார்த்தின் பற்கள் அவள் மேனியில்படாத இடம் இல்லை! பற்குறிகளும் நகக்குறிகளும் மறுநாள் காலை யில் அவள் குளியலறையில் பார்த்துப் பார்த்து மகிழத்தக்க மலரும் நினைவுகளாக இல்லை! அதற்கு மாறாக, கட்டுமானத் தங்கத்தை விட்டு வெளியே எட்டிப் பார்க்கும் சிவப்புக் கற்களைப் போல - அவளது மாம்பழ மேனியில் ரத்தக் காயங்கள் மளமள வென உருவாயின! அருகம்புல்லின் மீது அதிகாலையில் அமர்ந் திருக்கும் இளம் பனித்துளிகள் போல குண்டு குண்டாக - ஆனால்

செந்நிறமாக அவள் உடல் முழுதும் ரத்தத் துளிகள்! இன்ப போதையிலும் மது மயக்கத்திலும் வலி தெரியாத கடிகளாக அவை இருந்த போதிலும் "ஆ! ஊ!!" என்று அவள் அதிர்வதும், பிறகு அவனை அணைத்துக் கொள்வதுமாக அவனுடன் சேர்ந்து தரையில் புரண்டாள்!

அவளது ஆசைக்கு அவளும் அவனை இரண்டொரு இடங்களில் கடித்துச் சுவைத்தாள்! ஆனால் அவனது பாணி, மிகவும் முரட்டுத்தனமாக மாறியது!

"இன்பமே! என்னடி இது எனக்கு இவ்வளவு சுகம்? என்றுமே கண்டிராத சுகத்தை இன்று நான் பெறுகிறேனடி! உன் கண்ணாடிக் கன்னம்! அய்யோ! அய்யோ! என் முகம் தெரிகிறதடி உன் கன்னத்தில்"

பியசீலியின் கன்னம் புண்ணாயிற்று! "ஆ! என்னங்க?" என்று சிணுங்கினாளே தவிர, வலி தெரியாத அந்த மயக்கத்தில் அவனை மேலும் பலமாகத் தழுவித்தான் கிடந்தாள்!

"உன்னை அப்படியே கடித்து, மாம்பழத்தை உறிஞ்சுவது போல! என் ஆசை முழுதும் தீர்த்துக் கொள்ள வேண்டும்!"

என்றவாறு மீண்டும் அவள் மார்பகத்தில் முத்தமிடத் தொடங்கி விட்டான். முதலில், ரசித்துக் கிடந்தவள் - பிறகு அலற ஆரம்பித்தாள்! அவன் விடுவதாக இல்லை! அவள் கூச்சல் போடப் போட அவனுக்கு வெறி அதிகமாயிற்றே தவிர அடங்கவில்லை!

"விடு என்னை! விடு! விடு! வலி தாங்க முடியவில்லை! நான் செத்து விடுவேன்!"

என்று கெஞ்சிப் பார்த்தாள். அவன் ஆசையுடன்தான் அவளைச் சுவைத்தான். அவள்மீது அவனுக்கு எந்தக் கோபமும் இல்லை. அணிலின் கையில் கொய்யாப்பழம் கிடைத்தால் அந்தப் பழத்தின்மீது கோபம் கொண்டா கடித்துக் குதறுகிறது? அதைப் போலத்தான் அந்தக் கொய்யாவை அவன் குதறினான்! பியசீலி கதறினாள்! கெஞ்சினாள்! அலறினாள்! அவன் தலையைப் பிடித்துக் குலுக்கித் தள்ளிவிடப் போராடினாள்! அவனோ அவளைத் தேனே - பாலே - தெய்வலோகமே - தேடக்

கிடைக்காத அமுதமே - என்று வர்ணித்துக்கொண்டே, அந்த வாய்க்குள் அவள் உடலைத் திணித்து விழுங்கத் தீர்மானித்த வன்போல வெறியாட்டம் நடத்திக் களித்தான்.

நீண்டநேரம் அந்தக் களப்போர்! வேங்கையின் வாயில் வெள்ளாடு சிக்கியது போல அவள் துடித்தாள்! அவனுக்கு இரக்கம்பிறக்கவில்லை! மயக்கம்! மயக்கம்! அவள்மீது கொண்ட அடங்காத ஆசை, பசித்த புலியின் முன்னால் பாய்ந்து துள்ளும் புள்ளிமானை விட்டது போன்ற நிலை! இதுபோன்ற முரட்டுத் தனத்தை அவள் கொஞ்சம் கொஞ்சமாக அனுபவித்திட விரும்புபவள்! எனினும் இந்த முரட்டுத்தனம், ஒரு காளை மாடு கிடாரியிடம் காட்டுவது போலில்லாது - ஒரு காண்டாமிருகத்தின் முரட்டுத்தனமாகத் திடீரென மாறியதால் அவள் மிரண்டு போனாள்!

நார்த் பிரபு, தன்னை மறந்து விட்டான் என்பதைப் புரிந்து கொண்ட அவள் - உடல் முழுதும் ஏற்பட்ட காயங்களினால் ஓரளவு போதை குறைந்து அவனைப் பார்த்து "தயவு செய்து என்னை விட்டுவிடு!" என்று கெஞ்சினாள்!

"தயவுசெய்து என்னைத் தழுவிக் கொள்!" என்றும் "தயவு செய்து என்னை விடாதே! பிடித்துக்கொள்!" என்றும் தடந்தோள் வீரர்களிடம் காமப் பிச்சைக் கேட்டுப் பழகிப்போன அவள், இப்போதுதான் முதல் தடவையாக நார்த் பிரபுவைப் பார்த்து "என்னை விட்டுவிடு தயவு செய்து!" எனக் கண்கலங்கி அழுதாள்!

பாவம், அவன் இந்த உலகத்தில் இருந்தால்தானே! அவன் இப்போது இன்ப சாகரத்தின் எல்லையைத் தாண்டிப் போய் விட்டான்!

திடுமென ஒரு பேய்க் கூச்சல்! பியசீலியிடமிருந்து பிறகு சத்தம் வரவேயில்லை! இருந்தபோதிலும் அவன் முத்தம் நிற்கவில்லை! விடியும் வரையில் அவளை அவன் விழுங்கிக்கொண்டே யிருந்தான்! பிறகு அவனாலும் முடியாமல் விலகிப் படுத்துக் கொண்டான்! அதுவும் அவனுக்குத் தெரியாது! விடிந்த பிறகு தான் நார்த் பிரபுவுக்குத் தன்னருகே பியசீலியெனும் பேரழகி யின் பிணம் கிடப்பது தெரியும்!

உலக இன்பங்களில் உயர்ந்த இன்பம் காமவேள் நடன சாலையில் விளையும் இன்பந்தான் எனக் கண்டுணர்ந்து, அந்த இன்பத்தைப் பெற்றுத் திளைப்பதே - பிறவி எடுத்ததின் பயன் என்றும் வாழ்வின் குறிக்கோள் என்றும் பெண்ணின் இலக்கணமென்றும் - ஆடவர் மடிகளில் தாவி - அவர்தம் பிடிகளில் ஆனந்தம்கொண்ட அந்தப் பைத்தியக்காரப் பாவையின் வாழ்க்கை அவள் விரும்பியவாறே எவனோ ஒருவனின் படுக்கையறையில் முடிந்தது!

அவள் ஆடிய ஆட்டங்கள் - ஓடிய ஓட்டங்கள் - பாடிய கீதங்கள் - நாடிய ஆண்கள் - எல்லாமே இன்பத்தில் துன்பமாய், சுகத்தில் சுபமாய், நிறைந்து கலந்து முடிவெய்திவிட்டன!

மயக்கம் தெளிந்த நார்த் பிரபு, "என்ன காரியம் செய்து விட்டேன்!" என்று கையைப் பிசைந்து கொண்டான்! "கவலை பட்டுக் கொண்டிருக்க நேரமில்லை. ஆக வேண்டியதைப் பார்ப்போம்!" என்றனர், அவனால் அழைக்கப்பட்டு ஓடிவந்த அதிகாரிகள்!

திட்டமிட்டபடி சவப்பெட்டி வந்து சேர்ந்தது! இரத்தினக் கற்கள் பதித்த தங்கக் கொடியொன்றைப் பேழையில் வைத்து மூடுவதுபோல - இரத்தத் துளிகள் மொய்த்த அந்தத் தங்கச் சிலையனையாளைச் சவப்பெட்டியில் வைத்து மூடினர்!

ஒரு அழகுக் காவியத்தைப் பலரும் படித்து முடித்து, புத்தகத்தின் அட்டையை மூடி வைத்து விட்டனர்! ஆள் மயக்கிகளின் முடிவு இப்படித்தான் இருக்குமென்பதற்கு எத்தனையோ சரித்திரச் சான்றுகள் உண்டு! அதிலே இது ஒன்று!

இன்று முதல் உங்கள் எதிரி!

59

"கண்டி ராஜ்யத்தில் இப்போது எல்லாமே பிலிமதளாவைதான்! அதனால் அவரை முக்கியமான அரசியல் விஷயம் பேச வேண்டுமென்று உடனே கொழும்பு நகருக்கு வர வழைக்க வேண்டும்."

நார்த் பிரபுவின் ஆலோசனைக் கூட்டத்தில் ஒரு அதிகாரி இப்படியொரு கருத்தை வெளியிட்டான்.

"அவரை வரவழைப்பதின் நோக்கம் என்னவென்று கூற முடியுமா?" புருவங்களை உயர்த்திக்கொண்டே நார்த் எழுப்பிய கேள்விக்குப் பதில் சொல்ல அந்த அதிகாரி தயங்கவில்லை.

"பிலிமதளாவைக்குக் கண்டி மன்னன் விக்ரமசிங்க ராஜாவின்மீது கடுங்கோபம் ஏற்படுமாறு செய்வதற்குத்தான் இந்த யோசனை கூறுகிறேன்."

"விக்ரம ராஜசிங்கா இப்போது பேருக்குத்தானே மன்னன். எல்லா அதிகாரங்களும்தான் பிலிமதளாவையிடம் இருக்கின்றனவே! இந்த நிலையில் அவருக்குக் கண்டி மன்னனிடம் கோபம் எதற்காக வரவேண்டும்? எப்படி வரும்?"

"பியசீலியை வேண்டுமென்றே திட்டமிட்டுக் காமவெறியில் கடித்துக் குதறிச் சாகடித்தது விக்ரமராஜ சிங்கன்தான் என்று பிலிமதளாவையிடம் ஒரு கதை கட்டினால், அவர் அதற்குப் பழி வாங்கிடக் கண்டியரசன்மீது பாய்வார்! அவரைப் பயன்படுத்திக் கொண்டு முதற்கட்டமாக மன்னனை வீழ்த்துவது! அவன் சரித்திரம் முடிந்ததும் அடுத்த கட்டமாகப் பிலிமதளா வையை முடிப்பது! மூன்றாவது கட்டமாக கண்டி ராஜ்யத்துக்கு நாமே கதியென்று முற்றுப்புள்ளி வைப்பது! எப்படி என் யோசனை?"

"யோசனை நன்றாகத்தானிருக்கிறது! ஆனால் என்னை மறந்துவிட்டுப் பேசுகிறாய்! பியசீலி, தீக்காயமுற்று இறந்து விட்டதாகக் கண்டியில் ராஜமரியாதையுடன் சவ ஊர்வலமெல் லாம் நடைபெற்றுவிட்டதே! அப்படியொரு பொய்க்கதை கட்டி கண்டி மன்னனை பிலிமதளாவையும், பியசீலியும் ஏமாற்றினர் என்று பியசீலியே என்னிடம் சொல்லியிருக்கிறாளே!"

"சொல்லியிருந்தால் என்ன? பியசீலி உயிரோடு கண்டியை விட்டு வெளியேறிவிட்ட விஷயம் கண்டி மன்னனுக்குத் தெரிந்துவிட்டது! அதனால் அவன் ஒற்றர்களை அனுப்பிப் பரம ரகசியமாக அவளைத் தேடச் சொன்னான்! ஒற்றர்களிடம் அவள் சிக்கிக்கொண்டாள்! இன்ப மயக்கத்தில் தன்னை ஆழ்த்தி ஏமாற்றிய அவளை, இன்ப மயக்கத்திலேயே தண்டிக்க வேண்டுமென்று விக்ரம ராஜசிங்கன் திட்டமிட்டான்! திட்ட மிட்டபடி கண்டிக் கருகேயுள்ள அரண்மனை உல்லாச மண்ட பத்துக்குபியசீலிகொண்டு வரப்பட்டாள்! விக்ரமராஜ சிங்கனும் வந்து சேர்ந்தான்! பியசீலியைப் பாகுமொழியால் தன்வசப் படுத்தினான் மன்னன்! அளவுக்கு மீறிய மதுவை அவளுக்குக் கொடுத்தான் - அவனும் குடித்தான்! பியசீலி, மெய்மறந்து கிடந்தபோது அவளை அவன் சின்னாபின்னப்படுத்தினான் - குற்றுயிரும் குலை உயிருமாகப் பியசீலி அந்த மண்டபத்திலிருந்து தப்பித்து ஓடிவந்தாள்! ஓடி வந்தபோது இரக்கமே உருவான இரண்டு பிரிட்டிஷ் ஒற்றர்கள் அவளைக் காப்பாற்றி, கொழும் புக்கு நார்த் பிரபுவின் மாளிகைக்குக் கொண்டுவந்தனர். அவள் நார்த்துக்கு நேராக நடந்ததையெல்லாம் சொல்லிவிட்டு உயிர் நீத்தாள்! இப்படியொரு சோகச் சித்திரத்தைத் தீட்டிக் காண்பித்தால் - பிலிமதளாவைக்கு விக்ரம ராஜசிங்கன்மீது சீற்றம் பிறக்கும்! கண்டியின்மீது ஆங்கிலேயப் படையெடுப்பை அவர் அனுமதித்து ஒதுங்கியிருப்பார்!"

"சபாஷ்! நல்ல யோசனைதான்! பெற்ற மகளை இந்த நிலை யில் காணும் எந்தத் தகப்பனும் துடித்துத்தான் போவான். பழி வாங்கத்தான் கிளம்புவான். மிகப் பிரமாதமான யோசனை. ஆனால் ஒன்று! நமது ஆங்கிலேய ஒற்றர்கள் பியசீலியைக்

கண்டிக்கு அழைத்துப் போகாமல் இங்கே கொழும்பு தலைநகருக்கு ஏன் கொண்டுவர வேண்டும்? என்று ஒரு சந்தேகம் பிலிமதளாவைக்கு ஏற்படக் கூடுமல்லவா?"

"அதற்கும்பதில் இருக்கிறது பிரபு, என்னிடம்!. காமவெறியும் கொலை வெறியும் கலந்து பியசீலியைத் தாக்கிய சூழலில் – அந்த வெறிபிடித்தவன் இருக்கும் கண்டி மாநகருக்கு அவளைக் கொண்டு செல்லக் கூடாது என்பதற்காகத்தான் – அவளுக்கு உடனடி சிகிச்சைகள் செய்வதற்குக் கொழும்புக்குக் கொண்டு வந்தனர்!"

"பலே! பலே! ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் என் பார்களே, அந்தப் பொய்யர்களின் திலகமே நீதான்!"

அதிகாரியின் முதுகில் நார்த் பிரபு தட்டிக்கொடுத்துக் கொண்டே கலகலவென சிரித்தான்.

சிரித்தவனின் கண்களில் அந்த சவப்பெட்டி பட்டது! சிரிப்பு திடீரென நின்றது!

மிருகத்தனமாக ஒரு பெண்ணிடம் நடந்துகொண்டு விட்டோமே என்ற மனசாட்சி அவனைக் குத்தியதுபோலும், அதனால் அவன் அந்த அழகியின் சவப்பெட்டியைப் பார்த்த வாறே அசையாமல் நின்றான். இரவு நடந்து முடிந்த இன்ப வெறிக் கூத்து அவன் நெஞ்சில் நிழலாடியது – பனி மூட்டம்போல் அந்தக் காட்சி அவனை அசையவொட்டாமல் சிறிது நேரம் தடுத்தது! அவன், அந்த அதிகாரியைப் பார்த்து தழுதழுத்த குரலில் பேசினான்.

"என்ன இருந்தாலும், நான் பியசீலியிடம் அவ்வளவு முரட்டுத் தனமாக நடந்து கொண்டிருக்கக் கூடாது!"

"நடந்தவைகளுக்காக வருந்திக் கொண்டிருந்தால் நாடு பிடிக்கும் நமது ஆசை நிறைவேறாது! என்றைக்கோ ஒருநாள் கிழடு தட்டி, சுருக்கம் விழுந்து, கூனிக்குறுகி, ஈளை கட்டி இருமல் மிகுந்து, துன்பத்தில் உழன்று சாகப்போகும் இந்தப் பெண், இப்போதே அழகுச் சிலையாக நொறுங்கிப்போனது அவள் அதிர்ஷ்டமே! இன்ப மயக்கத்தில் மரணமடையும் இந்த பாக்கியம் எல்லாப் பெண்களுக்கும் எளிதில் கிடைத்துவிடாது பிரபு! நீங்கள்

இவளுக்கு நன்மைதான் செய்திருக்கிறீர்கள்! இவளால் நமக்கு விளைய இருக்கும் நன்மையை நாம் தவறவிடக் கூடாது!"

"அப்படியானால் இப்போதே பிலிமதளாவைக்கு ஆள் அனுப்ப வேண்டும், இல்லையா?"

"ஆம், பிரபு! அவசரமான அரசியல் விஷயம் ஒன்று பேச வேண்டுமென்று!"

நார்த் பிரபு சரியென்று தலையசைத்ததும் கொழும்புத் தூதன், கண்டி அரண்மனையில் பிலிமதளாவைக்கு முன்னால் போய் நின்றான்.

"என்ன திடீரென்று அரசியல் விஷயம்?" எனப் பிலிமதளாவை கேட்ட கேள்விக்கு அந்தத் தூதன் உதட்டைப் பிதுக்கி, "விபரம் எதுவும் எனக்குத் தெரியாது" என வணங்கி நின்றான். பிலிம தளாவை, விக்ரமராஜ சிங்கனின் அந்தப்புரம் நோக்கி நடந்தார். பொழுதெல்லாம் தனது மனைவி மதுரை இளவரசியுடன் கூடிக் கிடப்பதே ராஜரீகம் எனக்கொண்டு, அதனையே வாழ்க்கையாக மாற்றிக் கொண்ட விக்ரமராஜ சிங்கன், பிலிமதளாவை வருவது கேள்வியுற்று அந்தப்புரத்தின் வாசலுக்கே ஓடி வந்து வர வேற்றான்.

"மன்னருக்கு ஒரு அறிவிப்பு! கொழும்புத் தலைநகரில் ஏதோ அவசர அரசியல் பிரச்சினையாம்! நார்த் பிரபுவிடமிருந்து அழைப்பு வந்துள்ளது, என்னை உடனே வரச் சொல்லி!"

"ஓ! அதற்கு என்னிடம் அனுமதி வேண்டுமோ?"

"அனுமதி கேட்க வரவில்லை! அதற்கு அவசியமும் இல்லை! நான் கொழும்புக்குச் செல்கிறேன் என்பதை அறிவிக்க வந்தேன், அவ்வளவே!"

"பரவாயில்லை! இவ்வளவே போதும்! என்னிடம் தாங்கள் காட்டும் மரியாதைக்கு நன்றி! தங்களுக்குக் கண்டி ராஜ்யத்தில் இருக்கும் அதிகார அந்தஸ்துக்கு என்னிடம் அறிவிக்காமலே கூடப் போகலாம்!"

"எச்சரிக்கை! எல்லாம் நல்லபடியாக இருக்கட்டும் இங்கே! நான் கொழும்பு புறப்படுகிறேன்!"

நார்த் பிரபு எதிர்பார்த்தபடியே பிலிமதளாவை, கொழும்பு

வந்து சேர்ந்தார். அதிகாரியின் துணையுடன் நார்த் பிரபு தயாரித்துவைத்திருந்த கதை அவரிடம் சொல்லப்பட்டது. அவர் அதை நம்பியதாகத் தெரியவில்லை. பியசீலியின் உடல் மூடி வைக்கப் பட்டிருந்த சவப்பெட்டியைத் திறந்து காட்டியபோது, பிலிமதளாவை துடித்துப்போனார்.

என்ன இருந்தாலும் தனது மகளை இப்படியொரு அலங் கோலத்தில் காணும் எந்தத் தந்தையும் சகித்துக் கொண்டு பொறுமையுடன் இருக்க முடியாதுதான்! பிலிமதளாவை எரிமலையாகப் பொங்கினார்!

"நீங்கள் சொன்ன பொய் எல்லாம் சரிதான்! இந்தப் பொய்களை நான் நம்ப முடியாமைக்குக் காரணம், விக்ரமராஜ சிங்கன் என் கட்டுப்பாட்டில் சிறையில் இருப்பது போலக் கண்டி மாளிகையில் இருக்கிறான். அவனாவது அரண்மனை உல்லாச மாளிகைக்கு என் அனுமதியின்றிப் போவதாவது - எல்லாம் கற்பனை! கதை! என்பதுதான்."

பிலிமதளாவையை நம்ப வைப்பதற்கு நார்த் துரையும், அதி காரியும் எடுத்துக்கொண்ட பெருமுயற்சி வீணாகிவிட்டது!

"என் மகள் ஒருமாதிரிதான்! நான் இல்லையென்று சொல்ல வில்லை, அவளை நான் என்ராஜதந்திர விளையாட்டுக்குப் பகடைக் காயாகப் பயன்படுத்தியதும் உண்மைதான்! அதற்காக, அவளை இவ்வளவு கொடூரமாகக் கொலை செய்த உங்களோடு என்னால் உறவாட முடியாது! பழிக்குப்பழி வாங்கியே தீருவேன்."

பிலிமதளாவைப் பொங்கி வழிந்தார்! புயல் போல ஆத்திரத் தைக் கக்கினார்!

நார்த் பிரபு எதிர்பார்த்தது ஒன்று, நடப்பதோ வேறொன்று! அதனால் அதிர்ச்சியுற்று, "என்னை நம்புக! நம்புக!!" என்று கூச்சலிட்டான் கெஞ்சுகிற தோரணையில்!

"நம்பியது போதும்! நம்பி உமக்காக நான் செய்த காரியங்கள் போதும்! நம்பியவரின் பெண்ணின் வாழ்வையே நாசமாக்கி விட்டு, இன்னும் என்னிடம் நண்பர்களைப் போல நடிக் கிறீர்களா?"

ஆவேசத்தின் உச்சிக்கே போய்விட்ட பிலிமதளாவை, தன்னுடன் வந்த வீரர்கள் தாழ்வாரத்தில் நின்றவர்களை வெளியே வந்து கைகாட்டி அழைத்துக்கொண்டு வேகமாக நடந்து சென்று குதிரையில் ஏறினார்.

குதிரைகள் அங்கிருந்து புறப்படும்பொழுது, பிலிமதளாவை, நார்த் பிரபு நின்றிருந்த இடம் நோக்கி விரலை நீட்டி "இன்று முதல் நான் உங்களுக்கு எதிரி! இனி உங்களை எதிர்ப்பதே என் வேலை!" என்று உறுமினார். நார்த் பிரபும், அதிகாரியும் ஒருவர் முகத்தை ஒருவர் வியப்புடன் பார்த்துக்கொண்டு நின்றனர்.

பகையும் – பண்பும்!

60

கணத்திற்குக் கணம் வஞ்சினம் நெஞ்சில் வளர்ந்து கொண்டேயிருக்கக் காலமும் நாட் கணக்கில், மாதக்கணக்கில், ஏன், ஆண்டுக் கணக்கில் நகர்ந்துகொண்டேயிருந்தது. தனது ஆயுள் என்றைக்கும் திடீரென முடிந்து விடக்கூடும் - ஆனால் அதற்குள் அந்த நார்த் பிரபுவின் கொடிய வெறியாட்டத்துக்குப் பழிவாங்கியே தீரவேண்டும் - அப்போதுதான் "பியசீலியின் ஆத்மா" சாந்தியடையும் என்று முணுமுணுத்துக்கொண்டே இருந்தார் பிலிமதளாவை!

கொழும்புப் படைகளை எதிர்க்கக் கூடிய அளவுக்கு வலிமை வாய்ந்த பட்டாளப் பிரிவுகளையும், படைக்கலன்களையும் தயார் செய்து கொண்டபிறகே தனது வெளிப்படையான எதிர்ப்பை ஆங்கிலேயே அதிகாரிகளுக்குக் காட்டவேண்டும் என்பதில் பிலிமதளாவை கண்ணும் கருத்துமாக இருந்தார். விக்ரம ராஜ சிங்கா எதையும் கண்டுகொள்ளவிரும்பவில்லை. பிலிமதளாவை யை நம்பி, கண்டி ராஜ்யத்தை அவரது பரிபாலனத்தில் விட்டு விட்டுத் தனக்கு வேண்டிய இன்ப சுகத்தை அந்தப்புரத்தில் அள் ளிப் பருகிக் கொண்டிருந்ததால் அதுவே வாழ்க்கையின் குறிக் கோளாயிற்று. அதனால் பிலிமதளாவையின் துண்டுச்சீட்டு வந்த போதெல்லாம் அரசாங்கக் கருவூலம் திறக்கப்பட்டது. பிலிம தளாவைக்குத் தேவையான தொகை மிக்க மரியாதையுடன் சென்று கொண்டிருந்தது. கண்டி ராஜ்யத்தின் வளத்திற்கு வழி வகுக்கும் திட்டங்களைப் பற்றியோ, மக்களின் அன்றாடத் தேவை

களை நிறைவு செய்வதற்குரிய வழி வகைகள் குறித்தோ பிலிமதளாவையின் மூளையில் எந்தச் சிந்தனையும் எழவில்லை. பியசீலிக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்குப் பழிவாங்கும் செயலுக்காகவே அந்த அரசின் அனைத்துத் துறைகளும் திருப்பி விடப்பட்டன. ஆனால் எந்தத் துறையினருக்கும் தமது நட வடிக்கைகள் ஏன் திருப்பிவிடப்படுகின்றன என்ற உள்நோக் கம் தெரியவே தெரியாது.

ஒரு பெரும் போருக்கான ஆயத்தங்களே பிலிமதளா வையின் திட்டமிட்ட முயற்சிகளாகத் திகழ்ந்தன. களம் எப்போது அமையும் என்பதிலேயே அவர் கவனம் இருந்தது. விக்ரமராஜ சிங்காவின் களமோ வேறாக இருந்தது! கட்டிலறையில்!

ஒருநாள் முன் இரவு நேரம், பிலிமதளாவை, தனது தளபதிகளுடன் கண்டியின் படைப் பெருக்கம் குறித்துபேசிக் கொண்டிருந்தார். ஆங்கிலேயர் ஆதிக்கம் இந்த மண்ணில் வேரூன்ற விடக்கூடாது என்ற ஆவேசம் அவர் பேச்சில் பொங்கி வழிந்ததைத் தளபதிகள் உணர்ந்து நெகிழ்ந்தனர். ஆனால் அவரது ஆத்திரமும் ஆவேசமும் தனது மகளுக்கு இழைக்கப் பட்ட கொடுமையினால் ஏற்பட்டது என்பதை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. கண்டி ராஜ்யத்துப் படைகள் மட்டும் ஆங்கிலேயரை முழுமையாக அழித்து வெற்றி முரசு கொட்டப் போதுமானவையல்ல எதற்கும் முல்லைத்தீவு மன்னன் வைரமுத்துப் பண்டாரக வன்னியனையும் துணைக்குச் சேர்த் துக்கொள்வது மிகவும் நல்லது - வெற்றிக் கொடியைத் திண்ண மாகப் பறக்க விட முடியும் என்று தளபதிகள் கருத்துத் தெரிவித்தனர். "அவனைத்தான் விரோதியாக்கிக் கொண்டிருக் கிறோமே, அவன் நம்முடன் இணைந்து படை நடத்திட வரு வானா?" என்றார் பிலிமதளாவை!

பொதுஎதிரியை வீழ்த்துவதற்கு நமக்குள்ளேயிருக்கும் கசப்புகளையும், காழ்ப்புகளையும் மறந்துவிட்டுச் செயல்பட வேண்டும் என்பதுதான் பண்டாரகனின் கொள்கை - அதற்கு இணக்கமாக இலங்கைத் தீவில் உள்ள எல்லா அரசுகளும் இல்லை என்பதுதானே அவரது கவலை என்று பதிலுரைத் தனர் தளபதிகள்!

மொட்டைத் தலையைத் தடவிக்கொண்டு பிலிமதளாவை சிந்திக்கத் தொடங்கியபோது அவரது பார்வையை ஈர்க்கும் வண்ணம் ஒரு வீரன் வந்து நின்றான். அவனருகே சென்று, "என்ன?" என்று மெல்லிய குரலில் கேட்டார். அந்த வீரன், அவரது காதில் ஏதோ ரகசியமாகச் சொன்னான். "அப்படியா?" என்று முட்டை விழிகளை அகலமாக விரித்தவர், தளபதிகளை நோக்கி, "தொடர்ந்து காலையில் பேசலாம்" என்று கூறவே அவர்கள் வணக்கம் தெரிவித்துவிட்டு நகர்ந்தனர். அவர்கள் சென்றதும், பிலிமதளாவை, அந்த வீரனைப் பார்த்து, "இப்பொழுது அவள் எங்கேயிருக்கிறாள்?" என்று சற்றுப் பரபரப்புடன் கேட்டார்.

"தங்களின் தனி அறையில்தான் பிரபூ!" என்று குனிந்து நிமிர்ந்தான் அந்த வீரன்! "சரி! நீ போ! நான் போய்ப் பார்க் கிறேன்!" என்று கூறிவிட்டுத் தனது தனி அறையை நோக்கி நடந் தார் பிலிமதளாவை!

அறையின் கதவு மூடப்பட்டிருந்தது! திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார்! விளக்குகளின் மங்கலான ஒளியில் அவள் முகம் தெரிந்தது! ஆம், மர்த்தனி அங்குள்ள ஒரு ஆடம்பரமான நாற்காலியில் அமர்ந்திருந்தாள்!

"மர்த்தனீ! எப்போது வந்தாய்?"

"காலையில் வந்துவிட்டேன். மன்னருக்குத் தெரியாமல் வர வேண்டுமேயென்று இப்போது வந்தேன்."

"ஏன்? அவனுக்குத் தெரிந்தால் என்ன கிழித்துவிடுவான்? இப்போது அவன் என் கைப்பாவை! அதிருக்கட்டும் பியசீலியை விட்டு எப்படிப் பிரிந்தாய்? ஏன் பிரிந்தாய்?"

"நானும் பியசீலியும் தங்களின் திட்டப்படி முல்லைத்தீவில் நடத்திய நாடகத்திற்கு அந்தக் குருவிச்சி நாச்சியார் முற்றுப்புள்ளி வைத்துவிட்டாள்! அதனால் ஒருவரையொருவர் பிரிய நேரிட்டது! இப்போது பியசீலி எங்கே? இங்கு வந்துவிட்டாளா?"

பிலிமதளாவை உணர்ச்சிவயப்பட்டு மர்த்தனியின் கேள்விக்கு விடையளிக்காமல் நின்றார்.

"பியசீலி என்ன ஆனாள்? சொல்லுங்கள்!"

பதைப்புடன் காணப்பட்டாள் மர்த்தனி!

"சொல்லுகிறேன்! அவளை அந்த ஆங்கிலேய மிருகம் நார்த் பிரபு தனது காமவெறிக்குத் தீனியாக்கிக் கொண்டு கட்டி லறையிலேயே கல்லறை கட்டி முடித்துவிட்டான். என் கண் மணியைக் கடித்துச் சுவைத்தே பிணமாக்கிவிட்டான்!"

மர்த்தனி அசைவற்று உட்கார்ந்திருந்தாள். அவள் கண்களில் நீர் வழிந்து கன்னங்களில் உருண்டது. தனது மனத்துயரையும், கொதிப்பையும் ஆற்றிக்கொள்ள அந்த அறைக்குள் சிறிது நேரம் உலவிய பிலிமதளாவைக்கு ஒரு சந்தேகம்!

மர்த்தனி, தனக்கு நேராக ஒரு ஆமையைப் போல அடங்கி ஒடுங்கிக் கிடப்பவள் - இப்போது, தான் நின்று கொண்டிருக்க - அவள் எவ்வளவு திமிருடன் நாற்காலியில் சாய்ந்து கொண்டு பேசுகிறாள் என்ற சந்தேகம்தான் அது!

"பியசீலிக்காகக் கண்ணீர் வடிக்கிறாய் சரி! நானும் வந்த திலிருந்து பார்க்கிறேன் - முல்லைத்தீவுக்குப் போய்த் திரும்பிய பிறகு, உன்னிடமிருந்து மரியாதை ஓடிப்போய்விட்டது! மமதை உன்னை ஒட்டிக் கொண்டுவிட்டது! இந்த வித்தியாசத்துக்கு என்ன காரணமோ?"

கோபத்தில் தோய்ந்த சொற்களாக இவை வெளிப்பட்டன.

வேதனையான சிரிப்பு ஒன்றுதான் மர்த்தனியிடமிருந்து விடையாக வெளிப்பட்டது.

"என்ன? நான் கேட்கிறேன்! நீ சிரிக்கிறாய்?" என்று பிலிம தளாவை அதட்டினார்.

தனது கால்களில் ஒன்றை மறைத்திருந்த ஆடையின் தலைப்பை மர்த்தனி நீக்கினாள். கணுக்காலுடன் ஒரு பாதம் காணப்பட வில்லை.

"மர்த்தனீ! என்ன இது?" என்று பிலிமதளாவை அவளை அணைத்துக் கொண்டார்.

"நான் செத்திருக்க வேண்டியவள்! சாவதற்குவழிவகுத்ததும் குருவிச்சிதான்! பிறகு அந்த சாவின் வழியை அடைத்துவிட்டு என்னைப் பிழைக்க வைத்ததும் குருவிச்சிதான்."

"புரியவில்லை மர்த்தனீ விபரமாகச் சொல்லு!"

இதற்குள் அந்த மொட்டைத் தலையை மார்த்தனி பலமுறை தடவி, அந்த முட்டைக் கண்களிலும் முத்தங்களைக் கொடுத்தாள். இட்ட பணியை ஒழுங்காக முடிக்காமல் சிக்கிக்கொண்டதற்காகக் கோபிப்பாரேயென்று பயந்து, தனது மயக்கும் கலையை வலையாக்கினாள்.

"ஒரு கட்டத்தில் நானும், பியசீலியும் குருவிச்சி நாச்சியாரிடம் சிக்கிக் கொண்டோம். அவள் வீசிய கட்டாரி என் குதிகாலைத் தாக்கவே நான் கீழே விழுந்தேன். அது விஷம் பூசிய கட்டாரி என்பதால் ரணம் ஆறவே இல்லை. என்னைக் கட்டாரியால் தாக்கி வீழ்த்திய குருவிச்சியே எனக்கு சிகிச்சையும் அளித்து ஒரு சகோதரியைப் போல கவனித்துக்கொண்டாள்! நாட்கள், மாதங்கள் ஓடின! காலில் வேதனை தாங்க முடியவில்லை! புண், புரையோடத் தொடங்கிவிட்டது என்றும் - இதற்கு மேலும் விட்டால், ஒரு காலை அடியோடு எடுக்க வேண்டுமென்றும் உயிருக்கே ஆபத்து என்றும் அங்குள்ள வைத்தியர் கூறிவிட்டார். குருவிச்சியும், பண்டாரகனும் என்விருப்பத்தைக் கேட்டார்கள்!"

"நீ, பாதத்தை அகற்றிவிடச் சொல்லிவிட்டாயா?"

"அதுவும் ஒரு நிபந்தனையுடன் தான் சொன்னேன். என்னைத் திரும்பவும், கண்டி ராஜ்யத்துக்கு அனுப்புவதில்லையென்றால் இங்கேயே செத்துவிடுகிறேன். அனுப்புவதாக உறுதியளித்தால் பாதத்தை வெட்டிக்கொண்டு உயிர் வாழ சம்மதிக்கிறேன் என்றேன். குருவிச்சி பண்டாரகனைத் தனியே அழைத்துப் போய் ஏதோ பேசினாள். பிறகு இருவருமே என்னிடம் வந்து என் நிபந்தனையை ஏற்றுக்கொண்டனர்."

"காலை வெட்டுவது! அய்யோ! மிகவும் துடித்துப் போயிருப்பாயே!"

கண்டி ராஜ்யத்தின் முடிசூடாத மன்னர் இந்தப் பிலிமதளாவைக்காக எதையும் பொறுத்துக் கொள்ளத்தானே வேண்டும்! ஆனால் ஒன்று! நான் சிகிச்சை பெறும்போது அந்தக் குருவிச்சியும், பண்டாரகனும் என்னை எவ்வளவு அக்கறையுடன் கவனித்துக்கொண்டார்கள் தெரியுமா? நான் அவர்களின்

விரோதி என்று தெரிந்தும் எவ்வளவு அன்பாக என்னை நடத்தினார்கள் என்பதை இப்போது நினைத்தாலும்..."

"போதும்! போதும்! அதிகமாக நினைக்காதே! அவர்கள்மீது உனக்குப் பாசம் பிறந்துவிடப் போகிறது! பகை, மறந்துவிடப் போகிறது!"

"என்னமோ, என்னைப் பொறுத்தவரையில் அவர்களின் பண்பு, என் பகையுணர்வைக் குறைத்துத்தான் விட்டது!"

"மர்த்தனீ! பகையுணர்வு மங்கினால் நமது திட்டங்கள் தடைப் படும்! நமது வெற்றிகள் தாமதப்படும்! எதிரிகள் எவ்வளவு நல்லவர்களாக இருந்தாலும், எத்துணை நற்செயல்களை நமக் காகப் புரிந்தாலும் அவற்றுக்காக நன்றி காட்டும் பைத்தியக் காரத்தனம் நம் இதயத்தில் எழவேகூடாது!"

மர்த்தனி, மௌனமாக பிலிமதளாவையின் அணைப்பில் இருந்தாள்!

"என் மகள் பியசீலியின் பிணத்தை - காமவெறியன் கடித்துச் சிதைத்த அந்த உடலை - என் கண்ணாலேயே கண்டேன்! அதற்குப் பழி தீர்த்துக்கொள்ள வழியொன்று சொல்!"

"என்னைக் கேட்கிறீர்களே! இந்த மூளையில் உதிக்காத வழிகளா?"

"படை திரட்டுகிறேன் பழி தீர்க்க! ஆனால் ஆங்கிலேயனை வலிய வம்புக்கிழுக்க ஒரு திட்டம் தேவை! அதைத்தான் யோசிக் கிறேன்!"

"அதற்கு சரியான யோசனை நான் சொல்லுகிறேன்."

"நீ சொல்லுவாய்! எனக்குத் தெரியும்!" என்று அவளை இறுகத் தழுவிக் கொண்டார் பிலிமதளாவை!

செங்குரங்கு ஒரு பச்சைக்கிளியை அணைத்துக்கொண்டது போன்ற அந்தக் காட்சி கண்டு, அந்த அறையின் விளக்குகள் நகைத்துக் கூத்தாடின மென்காற்றில்!

போருக்கான புலக்கங்கள்!

61

மர்த்தனி, பிலிமதளாவையின் மடியில் சயனித்துக் கொண்டே கூறிய யோசனைகள் ஒன்றன்பின் ஒன்றாகச் செயல்படத் தொடங்கின. ஆங்கிலேயரைக் கொண்டு பண்டாரக வன்னியனையும், விக்ரமராஜ சிங்காவையும் அடக்கி ஒடுக்கிவிட்டு கண்டியின் மகுடபதியாக ஆகிவிடுவதெனத் திட்டம் தீட்டிக்கொண்டிருந்த பிலிமதளாவை, தனது மகள் பியசீலியின் கொடுமையான சாவுக்குப் பிறகு - ஆங்கிலேயர்மீது வலுச் சண்டைக்குச் சென்று அவர்களைத் துரத்தியடிப்பது - நார்த்பிரபுவைப் பழிவாங்குவது என்று சபதம் பூண்டுவிட்ட காரணத்தால் - அதற்கேற்ப மார்த்தனி தரும் ஆலோசனைகளை எந்தத் திருத்தமுமின்றி ஆமோதித்து அமல்படுத்த ஆணைகள் பிறப்பித்துக் கொண்டேயிருந்தார்.

ஒரு நாள் மாலை நேரம் - புத்தளம் என்று ஒரு நகரம் - ஆங்கிலேயர்களின் அதிகாரத்திற்குட்பட்ட இடம் - அந்நகரின் கடைவீதிகளில் ஏராளமான வண்டிகளில் ஆங்கிலேயர்கள் பொருள்களை ஏற்றிக் கொண்டு செல்கின்றனர். அந்தப் பொருள்களை, அவர்கள் சொல்லும் விலை கொடுத்து, அந்த நகர் மக்கள் போட்டி போட்டு வாங்குகிறார்கள். சில வண்டிகளில் உள்ள பண்டங்கள் மட்டுமே சில்லறையாக விற்கப்படுகின்றன. மற்ற வண்டிகளில் உள்ள பொருள்கள். மொத்த விற்பனைக்கென கொழும்பு போன்ற நகரங்களுக்குச் செல்ல இருப்பதாக ஆங்கிலேயர் இறுமாப்புடன் பதில் அளிக்கின்றனர். வீதிகளில் வியாபாரம் நடத்திக் கொண்டே

செல்லும் அந்த வண்டிகளைத் தொடர்ந்து சால்வைகளால் உடலை மூடிக்கொண்டு முகத்தை மட்டுமே திறந்தவாறு பத்து பத்து பேராக சிறுசிறு கும்பல்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றன. வண்டிகளை நடத்திச் செல்லும் வெள்ளைக்காரர்கள் அந்தக் கும்பல்களைக் கவனிக்கவில்லை. ஒரு சில்லரை வியாபார வண்டியை மக்கள் சூழ்ந்து கொண்டு, அந்த வண்டியில் உள்ள பலவகைப் பொருள்களைப் பணம் கொடுத்து வாங்கிக் கொண்டிருக்கின்றனர். அந்தக் கூட்டத்தில் வறண்ட தலையுடன் ஒரு சிறுவன், எட்டு அல்லது ஒன்பது வயது இருக்கும். தலை வாரும் சீப்புப் போல விலா எலும்புகள் வெளியே தெரியும் உடல் அமைப்பு! மர ஏற்றத்தைப் போல குழி விழுந்து ஒட்டிப் போன வயிறு! சோளக் கொல்லைப் பொம்மைக்குச் சொருகியது போன்று இளைத்துக் கிடக்கும் கால்கள் - அவற்றையொத்த கைகள் - வறுமையின் நிழல், அந்தச் சிறுவனாக வடிவெடுத்து வந்து நிற்கிறது என்று கூறலாம்!

பொருள்களை மக்கள் வாங்கி வாங்கிக் கூடைகளில் போட்டுக் கொள்வதையும் - மடிகளில் கட்டிக் கொள்வதையும் - கண் கொட்டாமல் அந்தச் சிறுவன் பார்த்துக் கொண்டேயிருக்கிறான். உண்பதற்குரிய பண்டங்கள் பக்குவப்படுத்தப்பட்டு ஆங்கிலேயர் பாணியில் விலை போவதைக் காணுகிற அந்தக் கொழுந்துச் சிறுவனுக்குப் பசித்தீ அதிகமாகிவிட்டது போலும்! அத்தீ அவனைச் சுட்டெரித்தது போலும்! ஆங்கிலேய வியாபாரிகள் தங்கள் வண்டியிலிருந்து வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டிருப்பதால், தன்னைக் கவனிக்க மாட்டார்கள் என நம்பி, அந்தச் சிறுவன் வண்டிக்குள் கை விட்டுச் சில கிழங்குகளை எடுத்து விடுகிறான். பசியின் வேகம், ஒரு கிழங்கைக் கடித்துச் சுவைத்து அங்கிருந்து குதித்தோடுகிறான். வெள்ளைக்கார வியாபாரியின் கழுகுப் பார்வையில் எப்படித்தான் அச்சிறுவன் சிக்கினானோ தெரியவில்லை - அந்த வியாபாரி, வண்டியை விட்டுக் குதித்தோடி சிறுவனின் வறண்ட தலை ரோமத்தைப் பிடித்துக் கொள்கிறான். பலங்கொண்ட மட்டும் அந்தச் சிறுவனின் முகத்தில் ஒரு குத்து!

சிறுவனின் அலறல்! அம்மா என்ற ஓலம்! பசி பறந்து விடுகிறது அவனுக்கு! அதை மறக்கிற அளவுக்குத் தான் இப்போது வலி வந்துவிட்டதே! சிறுவனின் முகம் குருதியில் குளிப்பாட்டியது போலாகிறது! அவன் கையிலிருந்த பண்டங்களைப் பிடுங்கிக் கொண்டு, ஆங்கிலேய வணிகன் திரும்புகிறான். அதற்குள் அந்தச் சால்வை போர்த்திய கும்பல் அந்த ஆங்கிலேயனை வளைத்துக் கொள்கிறது! அடி! அடி மேல் அடி! ஆங்கிலேயன், "கடவுளே" என்று கூச்சலிடுகிறான்! சால்வைகளைத் தூர வீசிவிட்டு அந்தக் கும்பல், தன்னைக் கண்டி வீரர்களின் கூட்டம் என அடையாளம் காட்டிக் கொள்கிறது.

பத்து பத்து பேராக வந்த அந்தக் கும்பல் – ஆங்காங்கு எல்லா வண்டிகளையும் மறிக்கின்றது!

குழந்தை என்றும் பாராமல் என்ன கொடுமை பார்த்தீர் களா? என்று அந்தச் சிறுவனைத் தூக்கி புத்தளத்து மக்களிடம் கண்டி வீரர்கள் காட்டுகின்றனர். அந்தக் கூட்டத்தைப் பிளந்து கொண்டு, ஒரு விதவைத் தாய் ஓடி வருகிறாள்! ஓடி வர அவள் கால்களில் பலமில்லைதான்! இருந்தாலும் புத்திர வாஞ்சை, அவளை மூச்சைப் பிடித்துக் கொண்டு அந்த இடத்திற்குத் துரத்துகிறது. "அய்யோ! அவன் என் பையன்!" என்று அலறிய வாறு அந்தச் சிறுவனைக் கைகளில் ஏந்துகிறாள். இப்போது அந்த ஏழைச் சிறுவனுக்கு வலியில்லை! பசியில்லை! அவன், வலியும், பசியும், துன்பமும், துயரமும் இல்லாத இடத்திற்குப் போய் விடுகிறான்!

"அடப்பாவிகளே! என் பிள்ளையை அநியாயமாகக் கொன்று விட்டீர்களே!" என்று அந்தத் தாய் கேட்பதற்குள்ளாக கண்டி வீரர்கள் ஆங்கிலேயர்களின் வண்டிகளைச் சூழ்ந்து கொண்டு பொருள்களைச் சூறையாடுகிறார்கள். திடீர்த் தாக்குதலால் மிரண்டு போன வெள்ளையர்கள் வண்டிகளை விட்டுவிட்டு புத்தளம் நகரிலிருந்தே ஓடத் தொடங்குகின்றனர். ஆங்கிலேயரை வலுச்சண்டைக்கு இழுப்பது எப்படியென்று புத்தளம் நகரில் நுழைந்த கண்டி வீரர்களுக்கு ஒரு நல்ல சாக்கு கிடைத்தது! பாவம், அந்தச் சிறுவன்! அவனையும் அவனை இழந்த அந்தப்

பரிதாபத்திற்குரிய தாயையும் பிறகு யாரும் கவனிக்கவில்லை! நாதியற்று வீதியில் விடப்பட்ட அந்த வண்டிகளில் உள்ள பொருள்களைச் சுருட்டுவதிலேயே கண்டி வீரர்களும், புத்தளம் மக்களும் தீவிர கவனம் செலுத்தினர்!

கொழும்பு நகருக்கு இச்செய்தி எட்டிய மாத்திரத்தில் நார்த் பிரபு கொதித்தெழுந்தான்! அவன் கோபத்தை மேலும் கிளறும் வண்ணம் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்கள் கொழும்பு நகரத்திற்கே விற்பனைக்கும் வந்துவிட்டன! உடனே நார்த் பிரபுவிடமிருந்து கண்டி மன்னனுக்கு ஓலை பறந்தது! "உமது வீரர்கள், ஆங்கிலேய வியாபாரிகளுக்குச் சொந்தமான பொருள்களை வழிமறித்துக் கொள்ளையிட்டதுமில்லாமல் - எம்மை அவமானப்படுத்துவதுபோல் எமது கொழும்புத் தலைநகரிலேயே அவற்றைக் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். இதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள்வது தவிர்க்கமுடியாதது! எனினும் இது முதல் எச்சரிக்கை! எனவே தக்க நஷ்ட ஈட்டுத் தொகையைக் கண்டி அரசு உடனே தந்திட வேண்டும்."

அந்த ஓலை பிலிமதளாவையின் கைக்குத்தான் கிடைத்தது. மர்த்தனியின் மார்பகத்தில் புதைந்து கிடந்த வாயை எடுத்துக் கலகலவெனச் சிரித்தான்! விகாரமான சிரிப்புதான்! இருந்தாலும் அந்தச் சிரிப்பை இந்திர தேவனின் சிரிப்பு என சிலாகித்துத் தழுவிக் கொண்டாள் மர்த்தனி! "இதற்கு என்ன பதில் எழுதுவது?" அவளைக் கேட்டான். அவள், அருகிருந்த மடல் ஒன்றை எடுத்தாள். பிலிமதளாவையின் முதுகில் வைத்து மடலில் எழுதினாள். பிறகு அதை அவனிடம் கொடுத்து கையெழுத்துப் போடச் சொன்னாள். கண்டி அரசன் சார்பில் அவன் கையொப்பமிட்டான்.

"கண்டி ராஜ்யத்தை ஆங்கிலேயர்க்கு கப்பம் கட்டும் நாடாகக் கருத வேண்டாம்! நஷ்ட ஈடு என்பது நடக்காத ஒன்று! இங்ஙனம் கண்டி மன்னர் விக்ரம ராஜ சிங்காவுக்காக - பிலிமதளாவை!"

பதில் கடிதம் கண்டு பரங்கித் துரைமகன் நார்த் பிரபு ஆடிப் போய்விட்டான்! அவனது அதிகாரிகள் அனைவரும் ஆலோ

சனைக்கு அழைக்கப்பட்டனர். மேஜர் ஜெனரல் மெக்டோவல் அந்த ஆலோசனைக் கூட்டத்தில் நார்த் பிரபுவுக்கு மிக்க உறு துணையாக இருந்தான். எனினும் கண்டி ராஜ்யத்தின் மீது படையெடுப்பதில் அவசரம் காட்டக்கூடாது என்று கருத்து தெரிவித்தான். மேஜர் ஜெனரலாயிற்றே, எனவே மெக்டோ வலின் கருத்தை நார்த் பிரபு உடனடியாக மீற முடியவில்லை.

கண்டி மீது படையெடுத்து வருவார்கள் ஆங்கிலேயர்கள் என எதிர் பார்த்த பிலிமதளாவைக்கு ஏமாற்றம்! தனது மகளுக்கு நடந்த சித்ரவதைக்கு நார்த் பிரபுவைப் பழி தீர்க்க வேண்டுமென்ற அவரது எண்ணம் நிறைவேறவில்லையே என்ற ஆதங்கம்!

ஆங்கிலேய ஆதிக்கத்தின் ஊடுருவலையே எதிர்ப்பதுபோல கண்டி மக்களிடம் முழக்கமிட ஆரம்பித்தார். கண்டி ராஜ்யம், யாருக்கும் அடிபணியாது என்ற வீரக்குரல் அவரால் பல இடங்களில் ஒலிக்கப்பட்டது. அவரது சொந்த சுயநலத் திட்டத்திற்குச் சுதந்திர வெறி நாடகம் நடத்துகிறார் என்பதைக் கண்டி ராஜ்ய மக்கள் அறியவில்லை. அவரது திடீர் மாற்றம் கண்டு விக்ரம ராஜ சிங்கா திகைத்துப் போனான் எனினும் – ஆங்கிலேயரின் எதிரியாகத் தனது பிரதான அமைச்சர் மாறியதில் அவனுக்கு மகிழ்ச்சியே!

மீண்டும் ஒரு நாள் – கண்டித் தலைநகரில் – ஓர் இரவில், ஆங்கிலேயர் வாழும் பகுதிகளில் ஒரே கூச்சல் – குழப்பம்!

கண்டியின் வீரர்கள், பிலிமதளாவையின் ஆணைப்படி கட்டவிழ்த்து விடப்பட்டனர். வெள்ளையர் வீடுகளின் கதவுகள் தட்டப்பட்டன. திறக்காத கதவுகள் உடைக்கப்பட்டன. கண்டி வீரர்கள் இழுத்து அணைக்காத பெண்களே இல்லையென்கிற அளவுக்கு – ஆங்கிலேய மாதர்கள் கண்டி வீரர்களின் கடுமை யான காமப் பசிக்கு இரையாயினர். தமது கண் எதிரிலேயே தமது துணைவியர், தமது பெண்கள், கண்டி வீரர்களால் கசக்கி முகரப்படும் காட்சி கண்டு, துடித்துப் போய் எதிர்த்தோர் – துவண்டு போய், அந்த இரவில் திக்குத் தடுமாறி ஓடினர். அன்றிரவு வெள்ளையர் குடியிருப்பு முழுதும் காமக் களியாட்ட வெறியர்களின் கூத்து மண்டபங்களாயின! கூச்சல், கதறலுடன்!

கொழும்பு நகருக்கு செய்தி எட்டியது மட்டுமல்ல, பாதிக்கப்பட்ட அந்தப் பரங்கியர் குடும்பங்கள் - நார்த் பிரபுவின் மாளிகையில் தஞ்சம் புகுந்தன!

"இதற்கு மேலும் பொறுமையா?" என்று நார்த் பிரபு, மேஜர் ஜெனரல் மெக்டோவலிடம் வினவினான்! மெக்டோவல், தனது உடைவாளை உருவி, தலைக்கு மேலே உயர்த்தி "கண்டியின் மீது படையெடுக்கத் தயார்!" என எக்காளமிட்டான்! மூவாயிரம் வீரர்களைக் கொண்ட இரு படைப்பிரிவுகள், கண்டியைத் தாக்குவது எனத் திட்டம் வகுக்கப்பட்டது!

கண்டியை நோக்கி, ஆங்கிலேயப் படை எனக் கேள்வியுற்ற பிலிமதளாவை, மகிழ்ந்தார். பழிக்குப் பழி தீர்த்துக் கொள்ளும் நேரம் வந்துவிட்டது எனக் கூறி, மர்த்தனியை இறுகத் தழுவிக் கொண்டார். அவளது யோசனைப்படி, விக்ரமராஜ சிங்காவிடம் ஒரு அவசர மடலை வாங்கி, பண்டாரக வன்னியனின் உதவி கேட்டு முல்லைத் தீவுக்கு அந்த மடலை அனுப்பி வைத்தார். அந்த மடலை எடுத்துக் கொண்டு பண்டாரக வன்னியனை சந்திக்க மர்த்தனிதான் புறப்பட்டாள்.

ஆண்மகன் அல்லவோ!

62

மர்த்தனியும், குருவிச்சி நாச்சியும் அருகே அமர்ந்திருக்க, கண்டி மன்னனின் மடலைப் படித்து முடித்த பண்டாரக வன்னியன், "சபாஷ்! வேளை வந்துவிட்டது! வெள்ளைக்காரக் கும்பலை இலங்கைத் தீவை விட்டே விரட்டுவதற்கு நானும் என் நண்பனும் இணைந்து போராடும் வேளை வந்து விட்டது!" என்று பூரிப்புடன் கூறியபடி இடையில் மின்னிய உடைவாளைத் தடவிக் கொடுத்தான்.

"தாங்களும் கண்டி மன்னரும் இணைந்து ஆங்கிலேயரை எதிர்ப்பது மட்டுமல்ல முக்கியம் - இதுவரை ஆங்கிலேயரின் மறைமுக விசுவாசியாக விளங்கிய பிலிமதளாவையே ஆங்கிலேயரை வீழ்த்தியே ஆக வேண்டுமென்று வியூகம் வகுத்துவிட்டாரே, அதுதான் மிக முக்கியம்!"

என்று மர்த்தனி கூறினாள். அப்போது திடீரென நினைவு வந்தவனாக பண்டாரக வன்னியன், மர்த்தனியைப் பார்த்து - "ஆமாம்! கண்டிக்குத் தன்னையே மன்னன் என்று கொழும் பிலிருந்து அறிவித்த அந்த முத்துசாமி என்ன ஆனான்? எங்கிருக்கிறான்?" என வினவினான். மர்த்தனி, ஒரு கேலிப் புன்னகையுடன் விடை யளித்தாள்-

"மேஜர் ஜெனரல் மெக்டோவல் தலைமையில் ஒரு படையும் - கர்னல் பார்பட் என்பவன் தலைமையில் மற்றொரு படையும் கண்டி நோக்கி வருவதாகக் கடிதத்தில் எமது மன்னர் குறிப்பிட்டிருக்கிறார் அல்லவா, அதில் கர்னல் பார்பட் தலைமை யில் வரும் படையுடன் முத்துசாமியும் வருவதாகக் கேள்வி! பிலிமதளாவையே என்னிடம் சொன்னார்!"

"பரவாயில்லையே - பிலிமதளாவை பெண்களை வைத்தே ராஜ்ய பரிபாலனம் புரிகிறார்! எவ்வளவு பெரிய ரகசியங்களை அவர் உன்னிடம் கூறியிருக்கிறார்!"

"நான் அவரிடம் என் ரகசியங்கள் எதையும் மறைக்காமல் பழகுகிறவளாயிற்றே!"

மர்த்தனியின் வாயிலிருந்து இப்படியொரு அநாகரீகமான வாசகம் வெளிப்பட்டதும், பண்டாரக வன்னியனின் முகம் விகாரமாயிற்று! குருவிச்சி நாச்சியார். முகத்தைத் திருப்பிக் கொண்டு, அந்த அறையின் பலகணிப் பக்கம் போய் நின்று, வானத்தைப் பார்ப்பவளைப் போல நடித்தாள்.

"என்ன குருவிச்சி? ஏன் ஒதுங்கி போய் நின்றுவிட்டாய்?" எனத் தன்னைச் சமாளித்துக் கொண்டவனாக அவளருகே சென்றான் பண்டாரக வன்னியன்!

அதைப் பார்த்த மர்த்தனி கண்ணைச் சிமிட்டிக் கொண்டே - "நானிருப்பது இடையூறாக இருக்கும்! நான் வேண்டுமானால் வேறு பக்கம் போய் விடுகிறேன்!" என்றவுடன் குருவிச்சிக்குக் கோபம் கொப்பளித்தது.

"மர்த்தனீ! உனக்கு உயிர்ப்பிச்சை அளித்து ஊருக்குத் திருப்பி அனுப்பியதற்கு நீ இதுவும் பேசுவாய்- இன்னமும் பேசுவாய்! எனக்கும் பண்டாரகருக்கும் உள்ள உறவு, **உள்ள உறவுதான், உடலுறவு அல்ல-** எங்களின் தூய்மையான பாசத்தையும், புனிதமான காதலையும் உன்னைப் போல உடலை வைத்து அரசியலே நடத்த முன் வந்துவிட்ட பேதைகளால் உணர முடியாது!"

"நாச்சியார் கோபித்துக் கொள்ளக் கூடாது! இல்வாழ்வாம் இன்ப வாழ்வையே வேப்பங்காயாகக் கருதும் இளந்துறவிகள் நீங்கள் என்பதை நான் மறந்து பேசிவிட்டேன். மன்னித்துக் கொள்ளவும்."

பண்டாரகன் குறுக்கிட்டான் - "அதற்குள் அவசரப்பட்டு எங்களைத் துறவிகளாக்கிவிடாதே! எங்களுக்கும் இல்லறம் நடத்த வேண்டுமென்ற ஆசையுண்டு! இல்லறத்தை வெறுக்கும் கொள்கை படைத்தவர்களல்ல நாங்கள்! ஆங்கிலேயர் ஆதிக்கம்

அறவே ஒழிக்கப்பட்டு, முல்லைத் தீவுக்குள் வெள்ளைக்காரர் நுழையவே முடியாது என்ற சுதந்திரச் சங்கநாதம் ஒலிக்கப் பட்டு, இலங்கையில் எங்கனும் அந்த அந்நியர் ஆக்ரமிப்பு இல்லை என்ற நிலை ஏற்படும்வரையில் - எங்களுக்குள் உடலுறவு இல்லை எனச் சபதம் செய்து கொண்டு, ஒருவரையொருவர் மனதாரக் காதலிப்பவர் நாங்கள் இருவரும்!"

மர்த்தனி புன்னகை புரிந்தாள்! இப்போது அவள் கண்டி மன்னனின் கடிதம் கொண்டு வந்திருப்பவள் அல்லவா? அதனால் அசட்டுத் துணிச்சலுடன் பேசினாள்!

"ஏ அப்பா! இது உலக மகா அதிசயம்தான்! மகா வீரர் ஒருவர்! மன்மதனை வெல்லும் அழகுடையவர்! மலைத்தோள் கொண்ட மனிதர்! கன்னியரைக் கவரும் கம்பீர புருஷர்! நாச்சியரோ நளின சிங்காரி! நானிலம் போற்றும் ஒய்யாரி! அவரது உடல் வனப்புக்கு உலகின் அழகு முழுதும் ஈடாகாது! இப்படி ஒரு ஜோடி - பாவம். ஒரு தேவையற்ற சபதத்தினால் தேவையை வெறுத்து தேக சுகத்தை வீணாக்குவது என்பது உலக அதிசயம்தான்!"

குருவிச்சி நாச்சியாருக்கு மர்த்தனியை மட்டம் தட்ட வேண்டுமென்று துடிப்பு! அதனால் பதைப்பு!

"மர்த்தனீ! உலகத்தில் எல்லாப் பெண்களுமே உன்னைப் போலவும், பியசீலியைப் போலவும் இருந்து விடுவார்களா? கற்பு என்பதை கடைச்சரக்காகவும் - பண்பாடு என்பதைப் பகை மூட்டமாகவும் கருதி ஒதுக்கிவிட்டு, நாளைக்கொரு ஆடவன்- வேளைக்கொரு படுக்கை என மாற்றிக் கொண்டிருக்க மனத் தைப் பக்குவப்படுத்திக் கொண்டு, அந்தப் பேய் மகளிர் சிலர் அரசாங்க விவகாரங்களிலும் தலைதூக்கி நிற்கிறார்களே, அதைப் போல எல்லாப் பெண்களைப் பற்றியும் கணக்கிட்டு விடாதே!"

"நீங்கள் கூடத்தான் முல்லைத் தீவின் அரசர் - இங்குள்ள தமிழர்களின் தலைவர் - இந்தப் பாயும் புலிக்குப் பக்கத் திலிருந்து அரசியல் காரியங்களைக் கவனிக்கிறீர்கள்! நீங்கள் கற்பின் பெட்டகமாகத் திகழவில்லையா?"

அதற்குள் பண்டாரகன் "மர்த்தனீ!" என்று முரட்டுக் குரலில் அழைத்து, அவளை நோக்கிச் சொன்னான் - "கூழாங்கல்லும் ஜொலிக்கும் வைரமும் ஒன்றல்ல என்பதைப் புரிந்து கொள்!" என்று!

மர்த்தனி, உடனே அவன் காலைத் தொட்டு வணங்கினாள்.

"என்னை மன்னியுங்கள்! நீங்கள் இருவரும் என்னை எதிரியின் சார்பில் வந்தவள் என்றும் பாராமல் - என்னைக் காப்பாற்றிக் கண்டிக்கு அனுப்பி வைத்ததை என்றும் மறக்க மாட்டேன். அந்த நன்றியை மறவாமல்தான் பிலிமதளாவைக்குத் தங்கள் மீதிருந்த வெறுப்பை மாற்றி- கண்டியின் படைகளுக்குத் துணையாக முல்லைத்தீவின் படைகளும் வரவேண்டுமென்ற என் யோசனைக்கு அவரை இணங்க வைத்தேன்."

பண்டாரகன் சிரித்துக் கொண்டே கேட்டான்.

"இணங்க வைத்தாய் சரி! ஆனால் நீ உன் யோசனைக்கு யாரை இணங்கவைப்பதாக இருந்தாலும் - முதலில் அவர்களுக்கு உன்னைத் தர இணங்கி விடுகிறாயே, அது ஏன்?"

"அது...அது...பியசீலியின் தோழி என்பதால் என்னைப் பிடித்துக்கொண்டநோய்! ஆனால்ஒன்று! இந்தநோய்எவ்வளவு பெரிய வீரர்களானாலும் - இலட்சியவாதிகளானாலும் அவர் களை வீழ்த்தி விடும் பலம் வாய்ந்த நோய்! ஒருவரைத் தவிர! **அதுதான் நீங்கள்!**"

குருவிச்சி இப்போது மர்த்தனியின் கன்னத்தில் ஓங்கி அறைந்து விட்டாள்.

"யாரைப் பார்த்து என்ன வார்த்தை பேசுகிறாய்? கண்டி மன்னரின் கடிதம் கொண்டு வந்திருக்கிறாய் என்பதால் இத்தனைபொறுமை காட்டினேன்!"

எனக் கூறிய குருவிச்சி, அதே சீற்றத்துடன் பண்டாரகனிடம் திரும்பி - "அந்தக் கடிதத்தை நன்றாகப் பாருங்கள், அது கண்டி மன்னர் எழுதியதுதானா என்று!" எனக் கூச்சலிட்டுக் கேட்டாள்.

"ஆமாம் குருவிச்சி! உனக்குத் தோன்றிய சந்தேகம் எனக்கும் தோன்றியது! இந்தக் கடிதம் முழுவதுமே விக்ரம ராஜ சிங்கன் கைப்பட எழுதியது. அதனால் இது உண்மைக் கடிதமே!"

இடையே மர்த்தனி, மிகுந்த அடக்கத்துடனும் அமைதியுடனும் அவர்களிடம் பேச முனைந்தாள்.

"எல்லோரிடமும் பண்பாடு புரியாமல் பழகிப் பழகி, அதனால் ஏற்பட்ட விளைவு, ஏதேதோ பேசிவிட்டேன், நான் பேசியது எதுவும் குற்றமானதல்ல என்று எனக்குத் தோன்றியதால் ஏற்பட்ட தவறு! நல்ல காரியத்துக்காக வந்த நான், கெட்ட விஷயங்களைப் பேசியிருக்கக் கூடாது! என் செய்வது, என் ரத்தத்துடன் ஊறிப்போன பழக்கம் - இருவரும் என்னைத் தயைகூர்ந்து மன்னித்து விடுங்கள்!"

எனத் தரையில் வீழ்ந்து இருவரையும் தொழுதழுதாள்.

"இப்படிச் சில பிறவிகள்" என எண்ணிக் கொண்டே பண்டாரகனும் குருவிச்சியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

"சரி! சரி! எழுந்திரு! நீ உடனே திரும்பிச் சென்று, விக்ரம ராஜ சிங்கனிடமும், பிலிமதளாவையிடமும் என் படைகள் துணை வரத் தயார் என நான் கூறியதாகவும் - விரைவில் நானே தலைமையேற்று வருவேன் என்று தெரிவித்ததாகவும் அறி வித்திடுக!" என்றான் பண்டாரகன்.

மர்த்தனி, அடிபட்ட கன்னத்தை மெல்லத் தடவிக் கொண்டே, விடைபெற்றுப் புறப்பட ஆயத்தமானாள். அவளை இரண்டொரு பெண்களின் துணையுடன் அனுப்பி வைத்தனர் பண்டாரகனும் குருவிச்சியும்! பிறகு குருவிச்சி பண்டாரகனிடம் கண்டிக்குத் துணை போவது பற்றி விவாதிக்கத் தொடங்கினாள்.

"ஆமாம்! நமது படைக்குத் தலைமை தாங்கி நீங்களே போவதாகக் கூறினீர்களே, வழியிலேயே ஆங்கிலேயப் படைகள் மடக்கி விட்டால் என்ன செய்வது?"

"போர் என்றால் எல்லாவற்றையும் எதிர்நோக்க வேண்டி யதுதான்!"

"எனக்கென்னமோ, பிலிமதளாவையின் சூழ்ச்சி இதில் மறைந்திருக்குமோ என்ற பயமிருக்கிறது!"

"கண்டி மன்னன்தான் கடிதம் அனுப்பியிருக்கிறான் என்பது தெளிவான உண்மை!"

"ஒருவேளை பிலிமதளாவை கண்டி மன்னரை அடைத்துப்

போட்டு, வற்புறுத்தி இதுபோல ஒரு கடிதத்தை எழுதி வாங்கியிருந்தால்?"

"இப்படியெல்லாம் சந்தேகப்பட்டு - நமது படையை அனுப் பாமல் இருந்தால், சந்தேகத்திற்கு விளக்கம் கிடைப்பதற்கு முன்பு கண்டிக்குள், ஆங்கிலேயப் படை நுழைந்து விடக் கூடும்."

"அதனால்?"

"கொஞ்சம் கேள்! உன் தலைமையில் நமது படை கண்டி நோக்கிக் கிளம்பி - கண்டிக்கருகில் வழியில் முகாமிட்டுத் தங்கு கிறது! அதற்குள் நான் வேறு வழியாக கண்டி சென்று விக்ரம ராஜ சிங்கனை, பிலிமதளாவைக்குத் தெரியாமல் சந்தித்து உண்மையை அறிந்து கொள்கிறேன். அதன் பிறகு நீயும் படை யினரும் முகாமிட்டுள்ள இடத்துக்கு செய்தி அனுப்புகிறேன்".

"இது நல்ல ஏற்பாடுதான்!"

"குருவிச்சி! இங்கேயே இரு - நான் நமது தளபதிகள் சிலருடன் பேசி விட்டு வந்து விடுகிறேன்."

பண்டாரகன் அங்கிருந்து சென்றவுடன் குருவிச்சி, பலத்த சிந்தனையில் ஆழ்ந்தாள்! தன் தலைமையில் படை நடத்தச் சொல்லிப் பண்டாரகன் கூறியது அவளுக்கு மிக இனிப்பான செய்தியாக இருந்தது. நீண்ட நேரமாயிற்று பண்டாரகன் வரவில்லை. ஒரு வீரன், உள்ளே நுழைந்தான். குருவிச்சியை வணங்கினான். "என்ன?" என்றாள். "தலைவரைப் பார்க்க ஒரு மருத்துவர் வந்துள்ளார். தலைவர் வரச் சொல்லியிருந்தாராம்" - என்றான் வீரன்!

அவனைத் தொடர்ந்து வெண்தாடி முதியவர் ஒருவர் வந்தார்! அவர்தான் வீரன் சொன்ன அந்த மருத்துவர்!

"தலைவர் இல்லையா அம்மா?" அதற்குள் வீரன் வெளியே போய் விட்டான்.

"எதற்கு உங்களை வரச் சொன்னார்?"

"மருத்துவனை எதற்கு அழைப்பார்கள்? வைத்தியத் திற்குத்தான்!"

"அவருக்கு என்ன உடம்புக்கு? தங்களை ஏன் அழைத்திருக் கிறார்?"

"என்ன செய்வது? ஆஜானுபாகுவான தோற்றம்! சிங்கம் போன்ற உருவம்! நாட்டுக்கே தலைவர்! இருந்தாலும் பண்டாரகனுக்கு ஆண்மை உணர்வு இல்லையாமே, அதற் குத்தான் வைத்தியம் செய்ய வந்தேன்."

ஆச்சரியத்தால் குருவிச்சி நாச்சியார் மருத்துவ முதிய வரைப் பார்த்தாள்!

"அதனால்தானம்மா – அவர், உன்னிடம் நெருங்குவதில்லை! அதற்கு வைத்தியம் செய்யத்தான் என்னை வரச் சொன்னார்! இதுவரை இந்த உண்மை உனக்குத் தெரியாதா?"

குருவிச்சி நாச்சியார், மருத்துவரை வெறிக்கப் பார்த்தாள். அவள் கலங்கிப் போயிருப்பதை மருத்துவர் உணர்ந்து "பரவா யில்லை! பயப்படாதே! நான் தலைவரைக் குணப்படுத்தி வீரிய முள்ள ஆண்மகனாக ஆக்கி விடுகிறேன்!" என்றார்.

மாறுவேட மருத்துவர்!

63

"தனக்குள்ள பலவீனத்தைப் பற்றி இதுவரை அவர் ஜாடையாகக் கூட என்னிடம் சொன்னதில்லையே!" என்று வியப்பு தெரிவித்தாள் குருவிச்சி.

"ஒரு பெண்ணிடம் சொல்லக் கூடிய செய்தியா இது? அது மட்டுமல்ல, நீங்களிருவரும் செய்து கொண்டுள்ள சபதத்தின் காரணமாக அதைச் சொல்ல வேண்டிய அவசியமே பண்டாரக வன்னியருக்கு ஏற்பட்டிருக்காது! என்ன? நான் கூறுவது சரிதானே?"

மருத்துவர், தனது தாடியைத் தடவிக் கொண்டே குருவிச்சியை ஏற இறங்கப் பார்த்தார்.

"மருத்துவரே! பண்டாரகர் ஆண்மையற்றவர் என்பது பாதியில் வந்த நோயல்ல - தாங்கள் சொல்வதைப் பார்த்தால் பிறவியிலேயே ஏற்பட்ட நிலை என்பது தெளிவாகிறது! இந்த இயலாமையை மறைக்கத்தான் என்னிடம் சபதம் செய்து சமாளித்துக் கொண்டிருக்கிறார் என்ற உண்மை இப்போது தான் வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது!"

"சரியாகச் சொன்னாய் அம்மா! ஆனால் ஒன்று! பண்டாரக வன்னியரின் செயல் மிகவும் பாபகரமானது! தன்னுடைய பலகீனத்தை மறைப்பதற்காக உன்னைப் போன்ற ஒரு பருவக் கொடியை வாழ்நாள் முழுவதும் பயனற்றுப் போகுமாறு செய்திட அவர் செய்துள்ள சதியை மன்னிக்கவே முடியாது!"

"மருத்துவரே! தாங்கள் சொன்ன பிறகு எனக்கு அவர் மீதுள்ள பாசம், அன்பு, காதல் அனைத்துமே பறந்து போய் விட்டன!"

"அப்படியா?"

"அவை பறந்து போனது மட்டுமல்ல - அவர்மீது ஒரு வெறுப்பே ஏற்பட்டு விட்டது!"

"அய்யோ! வெறுப்பா? அடடா, அதற்கு நான் பொறுப்பா?"

"ஆமாம் - இனிமேல் நீங்கள்தான் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்"

"என்னம்மா சொல்லுகிறாய்? எனக்கு எதுவும் புரிய வில்லையே!"

"ஆண்மையிழந்தவர்க்கு ஆண்மை வழங்கும் அற்புத மருத்து வரல்லவா தாங்கள்?"

"ஆமாம்!"

"அப்படியானால் தங்களிடம் ஆண்மைக் குறைவே இருக்காது! தாங்கள் ஆண்மையின் களஞ்சியமாகத்தான் இருக்க வேண்டும்!"

"அதனால் என்ன?"

"ஆண்மையற்ற ஒரு மனிதர் என்னை இத்தனை நாள் ஏமாற்றிக் கொண்டிருக்கிற ஒரு பெரிய ரகசியத்தை இன்று வெளியிட்ட தங்களின் மீது எனக்கு மரியாதை ஏற்படுகிறது!"

"மரியாதையா?"

"மரியாதை மாத்திரமல்ல, மட்டற்ற அன்புகூட!"

"அன்பா? என் மீதா?"

"அன்பு மட்டுமல்ல, மகத்தான பாசமுங்கூட!"

"பாசமா? இந்தப் பருவம் மாறிய கிழவனிடமா?"

"மட்டற்ற அன்பு - மகத்தான பாசம் மட்டுமல்ல, மாறாத காதல் கூட ஏற்பட்டுவிட்டது!"

"என்ன? என்ன? என்னம்மா சொல்கிறாய்?"

"பிறகென்ன? கொழிக்கும் என் இளமை உள்ளத்தில் செழிக்கும் உணர்வுகளைத் துச்சமெனக் கருதி என் வாழ்வையே ஒழிக்கத் திட்டமிட்டப் பண்டாரகரைவிடப் பல ஆயிரம் மடங்கு தாங்கள் நல்லவர்! வல்லவர்! பார்த்தவுடனே பறி கொடுத்து விட்டேன் இதயத்தை!"

"இதென்ன பயங்கரமான புதிர்! இந்த விஷயம் பண்டாரக

வன்னியனுக்குத் தெரிந்தால் பட்டாக் கத்தியல்லவா என்மீது பாயும்!"

"என்னை அவருக்குப் பட்டாவா எழுதி வைத்திருக்கிறேன்?"

"என்ன இருந்தாலும் - நீ இவ்வளவு அவசரப்பட்டு உன் காதலை ஒருக்கணத்தில் மாற்றிக் கொண்டிருக்கக்கூடாது!"

"மருத்துவரே! தாங்களும் இவ்வளவு அவசரப்பட்டு தாடியை ஒட்டிக் கொண்டு வந்திருக்கக் கூடாது! இதோ தொட்டுப் பாருங்கள், உங்கள் காதின் ஓரத்தில் தாடி சரியாகவே ஒட்டப்படாமல் இருக்கிறது!"

மருத்துவரின் தாடியைத் தன் கையால் அவரது கன்னத்தில் அழுத்தியபடியே குருவிச்சி நாச்சியார் கலகலவெனச் சிரிக்கத் தொடங்கினாள். அவள் சிரிக்கும் பேரொலி வெளியே கேட்காமல் மருத்துவர் வேடத்திலிருந்த பண்டாரக வன்னியன், அவள் வாயைப் பொத்தினான்.

"என்னை ஏமாற்றலாமென்று தானே பார்த்தீர்கள்! இப்போது ஏமாற்றமடைந்தது யார்? நீங்களா? நானா?"

"நம்மில் ஒருவரையொருவர் ஏமாற்றவும் முடியாது! ஏமாறவும் மாட்டோம்!"

"இந்த வேடத்தில் கண்டி அரண்மனைக்குச் செல்வதாகத் திட்டமாக்கும்?"

"ஆமாம்! குருவிச்சி! மாறுவேடத்தில் சென்றுதான் கண்டி மன்னனை சந்திப்பது என முடிவு செய்திருக்கிறேன்! இல்லையேல் பிலிமதளாவை என்னையும் கண்டி மன்னனான என் நண்பனையும் சந்திக்கவே விடாமல் ஏதாவது சதி செய்திடுவார்! அதனால் நான் முதலில் கூறியவாறு நீ படைத்தலைமையேற்றுப்புறப்படு! நீங்கள் தங்கியிருக்கும் முகாமுக்குக் கண்டியிலிருந்து நான் செய்தி அனுப்புகிறேன். அதன் பிறகு நமது படை செயல் படத் தொடங்கலாம்!"

குருவிச்சியிடம் விடைபெற்றுக் கிளம்பினான் பண்டாரக வன்னியன்! அவன் கம்பீரமாக நடந்து செல்லும் பின்னழகைக் கண்ட குருவிச்சி நாச்சியார் அவன் காதில் விழுமாறு சொன்னாள்.-

"வேடம் காட்டிக் கொடுக்காது! ஆனால் இந்த வீர நடை காட்டிக் கொடுத்து விடும்!"

குருவிச்சி நாச்சியார் புளகாங்கிதம் பொங்கிட மெய்மறந்து சொன்ன இந்த வார்த்தைகளைக் கேட்டு அன்பு ததும்ப அவளைத் திரும்பிப் பார்த்துப் புன்னகை புரிந்த பண்டாரக வன்னியன், உடனடியாகத் தன் முதுகை வளைத்துக் கூன் போட்டுக் கொண்டு தள்ளாடி நடந்து காட்டி அவளைச் சிரிக்க வைத்தான்.

மாளிகை வாசலில் தயாராக நிறுத்தப்பட்டிருந்த குதிரை யின் மீது ஏறி அமர்ந்து, குருவிச்சியை நோக்கிக் கை அசைத்து விட்டுக் குதிரையைத் தட்டிவிட்டான். குன்றென நிமிர்ந்த தனது அன்புக்குரிய ஆணழகன் - இலட்சிய வீரன் - கொள்கைத் தங்கம் - மண்ணின் மானங் காத்திட மரணத்தின் மடியிலும் படுத்திடத் தயங்கா மாமனிதன் - கூனிக் குறுகிய மருத்துவர் வேடத்தில் குதிரையில் பறப்பதை மாளிகை வாசலில் நின்று பார்த்தவாறு பூரித்துப் போனாள் அந்தப் பூவை!

அவன் வேடமிட்டு வந்ததும் - விஷமத்தனமாகப் பேசியதும் - முதலில் அவளே திடுக்கிட்டுப் போனதும் - பிறகு உண்மை புரிந்து, அவனையே அவள் திகைக்க வைத்திட முயன்றதும் - எல்லாமே குருவிச்சியின் அகக்கண்களில் நிழலாடின! அன்பின் அருவி சதங்கை கட்டிய பெண்போல சங்கீத ஒலியெழுப்பி இதயத்தைக் கிறுகிறுக்க வைத்தது!

அவன் மீது அவளுக்குத்தான் அப்படியென்ன மோகமோ? அவனும்தான் என்ன பாசத்தைப் பொழிவதில் அவளுக்கு இளைத்தவனா என்ன?

இயல்பாக எழும் இளம்பருவத்து உணர்வுகளை ஒதுக்கி வைத்துவிட்டு - இரண்டு உள்ளங்களும் இலட்சிய நோக்கத்தால் காதல் கயிறுகொண்டு அழுத்தமாகக் கட்டப்பட்டிருப்பதால் அந்த ஆழ்ந்த அன்பு, எல்லையே இல்லாமல் விரிந்து பரந்த வானவெளியாக அமைந்திருந்தது!

விழிநோக்கிலிருந்து குதிரை மறையும் வரையில் பார்த்துக் கொண்டிருந்த குருவிச்சி நாச்சி சிறிது நேரம் கழித்து உணர்வு

வந்தவளாக மாளிகைக்குள்ளே சென்றாள். அவளது ஆணைக் கிணங்க, படைத்தளபதிகள் ஆயத்தமாயினர். முல்லைத் தீவுக் கோட்டைக்கும், எல்லைக்கும் பாதுகாப்புக்குத் தேவையான படைவீரர்களை மட்டும் விட்டுவிட்டு மீதமுள்ள படைகள் அனைத்தும் தன்னுடன் அணிவகுக்க வேண்டுமெனக் கட்டளை பிறப்பித்தாள்.

இதற்கிடையே மேஜர் ஜெனரல் மெக்டோவலின் தலைமையில் புறப்பட்ட படையை அன்னியில் மற்றொரு படை கர்னல் பார்பட் என்பவனின் தலைமையில் கண்டி நோக்கிப் புறப்பட்டது. இரு ஆங்கிலேயப் படை வீரர்களும் கண்டிக்கு மூன்று கல் தொலைவில் உள்ள 'மகாவில்லா கங்கா' என்னுமிடத்தை வந்தடைந்தனர். ஆங்கிலேயப் படை அவ்வளவு அருகாமையில் வந்துவிட்ட செய்தி, பிலிமதளாவைக்குத் திடீர் என தெரிவிக்கப்பட்டதால் அவர் அதிர்ந்து போனார். கண்டிக்கு இன்னமும் பண்டாரக வன்னியனின் படைத் துணை வந்து சேரவில்லையே என்ற பதைப்பில் மன்னன் விக்ரமராஜ சிங்காவின் அந்தப்புரம் நோக்கி ஓடினார். அந்தப்புரக் கதவு மூடியிருந்தது. அவரே அந்தக் கதவை ஓங்கித் தட்டினார்.

"நேரம் காலமில்லை இவனுடைய காம விளையாட்டுக்கு! பகை பக்கத்திலே வந்துவிட்டது. இவன் இந்தநேரம் படுக்கையில் புரளுகிறான் பத்தினியுடன்!" என்று முணுமுணுத்துக் கொண்டார் பிலிமதளாவை!

அப்போது கதவு திறக்கப்பட்டது! ராணியே வந்து கதவைத் திறந்ததை பிலிமதளாவை கவனித்துவிட்டு "எங்கே மன்னன்?" என சற்று உரத்த குரலில் கேட்டார்!

"உடல் நலமில்லை! மருத்துவர் வந்து பரிசோதித்துக் கொண்டிருக்கிறார்" – என்று படுக்கையைச் சுட்டிக் காட்டினாள் ராணி!

பிலிமதளாவை "அப்படியா?" என்று கேட்டுக்கொண்டே படுக்கையை நோக்கினார்.

மல்லாந்து படுத்திருந்த மன்னன் வயிற்றில் கைவைத்து அழுத்தியவாறு பரிசோதனையில் ஈடுபட்டிருந்தான் மருத்துவர் வேடத்தில் இருந்த பண்டாரக வன்னியன்!

அதிர்ந்தது போர்முரசு!

64

"என்ன வந்தது உடம்புக்கு இந்த நேரத்தில்?" என்று எரிச்சலுடன் கேட்டுக்கொண்டு வந்த பிலிமதளாவைக்கு, தன்னருகில் இருப்பது பண்டாரக வன்னியன் என்பது தெரியவில்லை. அவரது கேள்விக்கு, மருத்துவர் வேடத்தில் இருந்த பண்டாரகன் பதில் அளித்தான். தள்ளாடும் உடலுக்கான நடிப்பும், தளர்ந்த நிலையில் வெளிப்படும் வார்த்தைகளுக்கான நடிப்பும் அவனுக்கு நன்றாகவே பொருந்தியிருந்தன.

"மன்னர், வயிற்றுவலியினால் வேதனைப்படுகிறார். மருந்து கொடுத்திருக்கிறேன். விரைவில் குணமாகிவிடும்."

"சரி! சரி! உன் வேலை முடிந்தால் வெளியில் போவதுதானே! நான் சில முக்கியமான ரகசியங்களை மன்னனிடம் பேச வேண்டியிருக்கிறது!"

"மன்னிக்கவும்! மன்னிக்கவும்! இதோ போய் விடுகிறேன். மகாராணி! நான் கொடுத்த மருந்துகளை இன்னும் இரண்டு வேளை தவறாமல் கொடுங்கள்! மன்னர் சுகமாகிவிடுவார்!"

மருத்துவர் அடங்கி, ஒடுங்கி, நடுங்கியவாறு பிலிம தளாவையிடமும், ராணியிடமும் விடைபெற்றுக் கொண்டு அந்த அறையின் கதவு வரையில் சென்று வெளியேறுவது போலப் போக்கு காட்டி, அந்தக் கதவின் இடுக்கிலேயே நின்று கொண்டார். கண்டி மன்னனுடன் பேச வேண்டிய அவசரத்தில் பிலிமதளாவை மருத்துவரைக் கவனிக்காமலேயே மன்னனுக்குப் பக்கத்தில் அமர்ந்தார்.

"ஆங்கிலேயப் படைப் பிரிவுகள் மகாவில்லா கங்கா வரையில் வந்து முகாமிட்டிருக்கின்ற செய்தி தெரியுமல்லவா?"

"தெரியும்! சற்று முன்னர் தகவல் கிடைத்தது!"

"தெரிந்த பிறகுமா வயிற்று வலி என்று படுத்துக் கொண்டிருப்பது?"

"தங்களை உடனே சந்திக்க வேண்டுமென்று ஆள் அனுப்புவதாக இருந்தேன். அதற்குள் தாங்களே வந்து விட்டீர்கள்!"

"இப்போது என்ன செய்வது? அந்தப் பண்டாரக வன்னியனின் படைத்துணையை எதிர்பார்த்தேன். அவன் வருவதாகச் சொல்லிவிட்டு நன்றாக ஏமாற்றிவிட்டான்!"

"ஆமாம்! எனக்குக்கூட ஆச்சரியமாக இருக்கிறது. நண்பன் என்னை இப்படி நட்டாற்றில் விடுவான் என்று நான் எதிர் பார்க்கவே இல்லை!"

"உங்கள் நட்பும், மண்ணாங்கட்டியும்! அவன் எப்படியும் கண்டிக்குத் துணைவருவான் என்று எதிர்பார்த்துத்தான் நான் ஆங்கிலேயருடன் மோதுவதற்குத் தயார் ஆனேன்! இப்போது என்ன செய்வது என்றே தெரியவில்லை!"

"நான் மிக நன்றாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். நான் செய்துள்ள முடிவைத் தாங்கள் ஏற்றுக் கொள்வதாக இருந்தால் சொல்லுகிறேன்!"

"மாட்டைத் தண்ணீருக்குள் நிறுத்தி விட்டு விலை பேசுவது – என்று ஒரு பழமொழி உண்டு! என்ன சிந்தனை! என்ன முடிவு என்று சொன்னால்தானே, அதை ஏற்றுக் கொள்வதா இல்லையா என்று கூற முடியும்!"

"இதோ என் ராணியிடம் கூட அந்த முடிவைக் கூறி அவள் சம்மதத்தையும் பெற்றுவிட்டேன்."

"எவ்வளவு நேரம் கையை மூடிக்கொண்டு, கைக்குள் இருப்பது என்ன தெரியுமா என்று கேட்பது? எதிரிகள் மகாவில்லா கங்கா வரையில் வந்து விட்டதை மறந்து விடுவது மடமையிலும் மடமை!"

"அவர்களை ஏன் எதிரிகளாகக் கருத வேண்டும்?"

"பிறகென்ன? ஆங்கிலேயர்களையும் அவர்களுக்குத்துணை வந்துள்ள டச்சுப் படை வீரர்களையும் நமது நண்பர்களாகக் கருதி வரவேற்பு வழங்கலாமா?"

"வரவேற்பது தவறல்ல!"

"என்ன? நான் அவர்களைப் பகை என்கிறேன்! பழிவாங்கத் துடிக்கிறேன்! பாராட்டி வரவேற்க நினைப்பது படுகோழைத் தனம்!"

"என்னைவிட அறிவிலும், ஆற்றலிலும், அனுபவத்திலும் சிறந்தவர் தாங்கள்! அதில் எள் அளவு சந்தேகமும் இல்லை! நான் செய்துள்ள முடிவைத் தாங்கள் அறிந்தால் இந்த அளவுக்கு ஆத்திரப்பட மாட்டீர்கள்!"

"முடிவு! முடிவு! என்னதான் அந்த மகா முடிவு! என் மூளையிலே கூட உதிக்காத அந்த அதிசய முடிவு!"

"இந்த முடிவு, நாட்டுக்காக எந்த வித தியாகத்திற்கும் தயாராக இருப்பவர்களின் மூளையில் மட்டுமே உதிக்கக் கூடியது!"

"அப்படியானால் கண்டி ராஜ்யத்துக்காகத் தியாகம் செய்யும் இதயமில்லாதவனா நான்?"

"அவசரப்படாதீர்கள்! நான் சொல்வதை நிதானமாகக் கேட்டால் எனக்கும் நல்லது. தங்களுக்கும் நல்லது. கண்டி ராஜ்யத்து மக்களுக்கும் நல்லது."

"சொல்லலாம்!"

"எப்படியோ வெள்ளையர் பெரும் படையுடன் கண்டி நோக்கி வந்துவிட்டனர். பண்டாரக வன்னியனை நம்பி நாமும் ஏமாந்து விட்டோம். இப்போதுள்ள சூழ்நிலையில் நமது படைகள் எதிரிகளுடன் மோதினால் பலத்த சேதமுடன் தோல்வியைத் தான் தழுவ நேரிடும். படை வீரர்கள் மட்டுமல்ல, கண்டி ராஜ்யத்து மக்களும், தொகை தொகையாகச் சாக நேரிடும்."

"அதனால் சரணடைந்து விடலாம் என்று முடிவா?"

"ஆங்கிலேயருடன் போரிட்டு அவர்களைப் பழி வாங்கிடத் தாங்கள் துடிப்பது எனக்குப் புரிகிறது! ஆனால் ஒன்று! நான் செய்திருக்கும் முடிவை, தாங்கள் முழுமையாகத் தெரிந்து கொண்டால் மகிழ்ச்சி அடைவீர்கள்!"

"ஓகோ! இன்னும் முழுமையாகக் கூறவில்லையா? சரி! பொறுமையாகக் கேட்கிறேன்! என்ன முடிவு?"

"ஆங்கிலேயப் படையை கண்டிக்குள் தாராளமாகத் தடையின்றி அனுமதித்து விடுகிறோம்! அவர்களை எதிர்த்து ஒரு வீரன்கூட வாளை அசைக்கக்கூடாது! அவர்கள் நமது அரண்மனைக்குள் நுழைகிறார்கள்! நான் மகுடம் துறந்து விட்டதாகவும், கண்டி ராஜ்யம் ஆங்கிலேயருக்கு அடங்கி நடப்பதாகவும் உறுதி அளிக்கிறேன்! அவர்களுக்கு அடங்கி நடக்கும் கண்டியின் ராஜ பரிபாலனம் முழுவதையும் பிலிம தளாவைக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்! ஆங்கிலேயர் அதனை ஒப்புக் கொள்கிறார்கள்! தங்களைக் கண்டிச் சிம்மாசனத்தில் உட்கார வைத்து விட்டு, நானும் என் குடும்பத்தாரும் உடனடியாகத் தமிழகத்திற்குச் சென்று விடுகிறோம்! இதுதான் என் முடிவு!"

விக்ரம ராஜ சிங்காவின் இந்த முடிவினைக் கேட்டவுடன், பிலிமதளாவைக்குத் தன் காதுகளையே தன்னால் நம்ப முடிய வில்லை!

கண்டி ராஜ்யத்தின் முடிசூடா மன்னனாக இதுவரையில் இருந்த நிலை மாறி, ஒரு துளி ரத்தச் செலவுமில்லாமல் முடிசூடப்படுகிறது என்பதை எண்ணியபோது, தன் மகள் பியசீலியின் நிமித்தம் ஆங்கிலேய வர்க்கத்தின் மீது ஏற்பட்டிருந்த கோபத் தீ கொஞ்சம் கொஞ்சமாக அணைந்து தணிந்தது! பதவிக்கு எத்துணை சக்தி இருக்கிறது என்பதை விக்ரம ராஜ சிங்கன், தன்னெதிரே பிலிமதளாவையின் முகத்தில் தோன்றிய மகிழ்ச்சி ரேகைகளைப் பார்த்து வியந்து போனான்!

விக்ரம ராஜ சிங்கன் ஆங்கிலேயருக்கு அடிமையாக இருந்து ஆட்சி நடத்த விரும்பவில்லை. அதனால் தந்திரமாக அவன் முடி துறக்க முடிவு செய்துவிட்டான். இருந்தாலும் அவன் ஒரு முட்டாள் என்பதற்கு அடையாளமாகத் தன்னைக் கண்டிக்கு அதிபதியாக்கிடத் தீர்மானித்துவிட்டான். எப்படியோ கஷ்டப் படாமல் கண்டி ராஜ்யம் தனது காலடிக்குக் கீழே வரப் போகிறது! இவ்வளவுக்கும் காரணம் கற்பைப் பற்றிக் கவலைப்படாத தன் மகள் பியசீலியல்லவா? என்று நினைத்து அவளுக்கு மானசீக மாக நன்றி தெரிவித்துக் கொண்டான்.

கண்டி மன்னன், ராணியைப் புன்னகை நெளிய நோக்கினான். அவள் முகத்தில் எந்தச் சலனமும் இன்றி இருந்தாள். அவள் கவலையெல்லாம் கதவிடுக்கில் ஒளிந்திருக்கும் பண்டாரகனைப் பிலிமதளாவை கவனித்து விடக்கூடாது என்பதிலேயே இருந்தது!

"அப்படியானால் - கண்டி ராஜ்யத்து எல்லைப் பாது காப்பைத் தளர்த்தி விடக் கட்டளையிடுகிறேன்! வீதிகளில் கூட நமது வீரர்களின் நடமாட்டம் இல்லாமல் செய்து விடுகிறேன்!"

"அதுதான் சரி! நமது வீரர்கள் அவர்தம் பாசறைகளில் மதுவருந்திப் படுத்துறங்கட்டும்! திறந்த வீட்டில் நாய் நுழைவது போல ஆங்கிலேயப்படை, இந்த அரண்மனை வரையில் நுழையட்டும்! அவர்களை நானே வரவேற்று, நாட்டை அவர்கள் மூலமாகத் தங்களிடம் ஒப்படைத்துவிட்டு விடைபெற்றுச் செல்கிறேன்!"

பிலிமதளாவையின் பேரானந்தம் பல கடல்களின் சங்கமமாயிற்று! கத்தியின்றி, ரத்தமின்றிக் கண்டி ராஜ்யத்தின் மன்னராகிறார் என்றால், அது சாதாரண விஷயமா? மன்னனைத் தட்டிக் கொடுத்து விட்டு அறையிலிருந்து வெளிக் கிளம்பினார்.

பியசீலி, கொடூரமாகக் கொல்லப்பட்டதும் நல்லதாகத் தான் போயிற்று! இல்லையேல் அவருக்கு ஆங்கிலேயர் மீது ஆத்திரம் வந்திருக்காது! ஆங்கிலேயர் படையெடுக்கிற அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்காது! எதிர்பாராமல் எல்லாம் நடந்த காரணத்தினால்தான் அடிமை நாடாகக் கண்டி ராஜ்யம் ஆனாலும் கூட அதன் மன்னனாக பிலிமதளாவை பொறுப் பேற்கும் வாய்ப்பு வந்து கொண்டிருக்கிறது! இந்தப் பூரிப்புடன் பிலிமதளாவை சென்றவுடன் அறையின் கதவோரம் நின்றிருந்த பண்டாரக வன்னியன் கதவைச் சாத்தித் தாழிட்டு விட்டு விக்ரம ராஜ சிங்கனிடம் சிரித்துக் கொண்டே வந்தான் தாடியைத் தடவியவாறு!

"என்ன, நீ சொன்னபடி எல்லாம் சொல்லிவிட்டேனா? சரியாக இருந்ததா?"

"சபாஷ்! அற்புதமாக இருந்தது! பிலிமதளாவையின் பதவி ஆசை எந்த அளவுக்கு வெறி கொண்டு ஆடுகிறது என்பதை

கவனித்தாயா? அடிமை நாடாக இருக்கலாம் கண்டி ராஜ்யம்! ஆனால் அதற்கு அவர் மன்னராக இருந்தால் போதுமாம்!"

பண்டாரகன் பல்லைக் கடித்துக் கொண்டே பிலிமதளாவையின் மீது சினத்தைப் பொழிந்தான்

"ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்ப்பவர் என்று கண்டி மக்களை நம்பச் செய்திருக்கிறார்! இப்போது கண்டியைக் காட்டிக் கொடுத்த பழியை என் மீது போட்டுவிட்டு அவர் பரங்கியருக்கு எடுபிடியாக கண்டியின் பரிபாலனத்தை ஏற்கப் போகிறார்!"

"அப்படியொரு நினைப்பு அவருக்கு! என் யோசனையை நீ கேட்டு, அதன்படி நடந்து கொண்டதால் அவரும் நம்பிப் போயிருக்கிறார்! ஆனால் நடப்பது வேறாக இருக்கப் போகிறதே!"

பண்டாரகன் கலகலவென நகை முழக்கம் செய்தான்!

"உன் திட்டம் எப்படிச் செயல்படப் போகிறது என்று பார்ப்போம்!"

படுக்கையிலிருந்து எழுந்து அந்த அறைக்குள் உலவினான் விக்ரம ராஜ சிங்கன்!

"சரி! நான் விடைபெற்றுக் கொள்கிறேன். குருவிச்சிக்குத் தகவல் அனுப்ப வேண்டும். எல்லாம் நாம் நினைத்தபடி நடக்கும். கவலைப்படாதே. வருகிறேன்."

கண்டி மன்னனின் தோளைப் பிடித்து குலுக்கிவிட்டு மருத்துவர் வேடத்திலேயே பண்டாரக வன்னியன் அங்கிருந்து விடைபெற்றுப் புறப்பட்டான்.

மகாவில்லா கங்காவில் தங்கியிருந்த ஜெனரல் மெக்டோவல் பயங்கரமாகச் சிரித்துக் கொண்டே ஒரு மதுப் புட்டியைக் கீழே போட்டு உடைத்தான். காரணம், அவனுக்குக் கிடைத்த செய்தியின் படி கண்டியில் அவன் படைகளை எதிர்ப்போர் யாருமில்லை!

"வீரர்களே! அனைவரும் மதுப் புட்டிகளைக் காலி செய்யுங்கள்! ஆயுதங்களை ஏந்துங்கள்! கண்டியில் நம்மை மறிப்போர் யாருமில்லை! உடனே கிளம்புங்கள்!"

ஜெனரலின் ஆணை கிடைத்ததும் படை வீரர்கள் குதித்தெழுந்தனர்! மதுப்புட்டிகள் காலியாகித் தரையில் உருண்டன! போர் முரசு அதிர்ந்தது! படை எழுந்தது!

கண்டிக்குள் களம்!

65


மகாவில்லா கங்காவிலிருந்து ஆங்கிலேயப்படை, கண்டி நோக்கிக் கிளம்பியபோது, ஒரு சிறு படையுடன் முத்துசாமி விரைந்து வந்து கலந்து கொண்டான். ஜெனரல் மெக்டோவல், முத்துசாமியைத் தட்டிக் கொடுத்து, "நீதான் கண்டி நகருக்குள் சுலபமாக நுழைவதற்கும் அரண்மனையை எளிதாக வளைப்பதற்கும் வழி காட்ட வேண்டும்" என்று ஆணையிட்டான்.

முத்துசாமிதான், ஏற்கனவே தன்னைக் கண்டி ராஜ்யத்தின் மன்னன் என்று அவனாகவே அறிவித்துக் கொண்டு – ஆங்கிலேய ஆதிபத்தியத்தின் நிழலில் ஒண்டிக் கிடக்கும் எடுபிடியாயிற்றே! அதனால் அவன் மெக்டோவல் உத்திரவை சிரமேற்கொண்டு, முதன் முதலாக கண்டியின் மன்னனாகவே அந்த நகருக்குள் நுழையப் போவதாக எண்ணிக் கொண்டு பூரித்துப் போனான். ஆங்கிலேயப் படைக்குவழி காட்டிபோல முத்துச்சாமியின் படை முன்னே போயிற்று. பாதையில் எந்தவொரு இடத்திலும் எதிர்ப்பு என்பது துளியும் தலை காட்டாத நிலை கண்டு மெக்டோவல் ஆச்சரியத்துடன் முத்து சாமியை நோக்கினான்.

"எதிர்ப்பே இல்லாமல் போய்க் கொண்டிருக்கிறோம் என்று வியப்படைகிறீர்களா? எல்லாம் இந்த முத்துசாமியின் வேலை! கண்ணுசாமிக்கும், பிலிமதளாவைக்கும் முன்பே செய்தி அனுப்பிவிட்டேன். மோதாதே! மோதி அழியாதே!! என்று!"

"அது யாரப்பா கண்ணுசாமி?"

"தெரியாதா? அவன்தான் எனக்குப் போட்டியாக



முளைத்தவன்! இன்றைக்கு கண்டி மாளிகையில் விக்ரம ராஜசிங்கன் என்ற பெயரில் உலவிக் கொண்டிருக்கிறானே, அவனது சொந்தப் பெயர்தான் கண்ணுசாமி! இன்றுமுதல் அவன் பழையபடி கண்ணுசாமியே தான்!"

"அப்படியானால் அவனும், பிலிமதளாவையும் ஊரை விட்டே ஓடியிருப்பார்களோ?"

"ஓடியிருக்க மாட்டார்கள்! நம்மை வரவேற்று அடிபணிந்து சரணடைவதற்குத் தயாராகிக் கொண்டிருப்பார்கள். தாங்கள் அவர்களுக்கு உயிர்பிச்சை கொடுத்து கொழும்பு சிறையில் கொண்டு போய் அடைக்கச் சொல்ல வேண்டும். இந்த முத்து சாமியை கண்டியின் மன்னன் என்று அறிவிக்க வேண்டும்.

"எங்களுக்கு உன்னைப் போல ஒரு விசுவாசமுள்ள ஊழியன் வேண்டும் என்பதில் இருவிதமான கருத்துக்கே இடமில்லை. முதலில் அவர்கள் சரண் அடையட்டும். அதன் பிறகு நடக்க வேண்டிய சம்பிரதாயபூர்வமான காரியங்களை நார்த் பிரபு கவனிப்பார்."

எதிர்ப்போர் யாருமில்லாத சூழலில் குதிரைகளில் அமர்ந்தவாறு இப்படிப் பேசிக் கொண்டே படை நடத்தியபடி ஜெனரல் மெக்டோவலும் முத்துசாமியும் கண்டி நகர் எல்லைக்கு வந்துவிட்டனர். எல்லையிலும் எந்தச் சந்தடியும் இல்லை. நகர எல்லைக் கோட்டை முகப்பில் ஆயுதம் தாங்கிய நூறு வீரர்கள் எப்போதும் இருப்பது வழக்கம். ஆனால் மெக்டோவலின் படை

நுழையும்போது அடையாளத்துக்கு ஒரு ஆள்கூட எல்லைக் காவலில் இல்லை. மெக்டோவல், தனது குதிரையிலிருந்தவாறே படைவீரர்களைத் திரும்பிப் பார்த்து, இறுமாப்புடனும், பேரானந்தமுடனும் கையை அசைத்து, தன்னைப் பின் பற்றி முன்னேறச் சொன்னான்.

கண்டி நகர வீதிகளில் கூட வீரர்கள் மட்டுமல்ல, அந்த நகர மக்களின் நடமாட்டம் கூட இல்லை!

தங்கு, தடையின்றி, மேட்டிலிருந்து பள்ளம் நோக்கிச் செல்லும் வெள்ளம்போல வெள்ளையர் படை, கண்டி நகருக்குள் கம்பீர நடை போட்டுச் சென்றது.

எல்லை தாண்டிய சிறிது நேரத்திற்கெல்லாம் கண்டியின் வீரன் ஒருவன், மெக்டோவல் படையின் எதிரே குதிரையில் வந்து வணக்கம் செய்து நின்றான். எச்சரிக்கையாக இருக்க வேண்டு மென்ற நினைப்பில், ஆங்கிலேய வீரர்கள் தங்கள் கைகளில் உள்ள ஆயுதங்களை உயர்த்திப் பிடித்துக் கொண்டனர். அவர்கள் எதிர்பார்த்தபடி ஒன்றும் நடந்துவிடவில்லை. கண்டியின் வீரன், கடிதச் சுருள் ஒன்றை தலை தாழ்த்தியவாறு நீட்டினான். அதனை வாங்கிட முத்துசாமி முனைந்தபோது - அவனை அலட்சியப்படுத்திவிட்டு அந்த வீரன், ஜெனரல் மெக்டோவலிடம் பயபக்தியுடன் அந்தக் கடிதத்தைக் கொடுத தான். ஜெனரல் அந்தக் கடிதத்தைப் படித்துவிட்டு, உரக்கச் சிரித்தபடி "சபாஷ்!" என்றான். அடுத்து என்ன சொல்லப் போகிறான் என்று முத்துசாமி, ஜெனரலின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"கண்டி மன்னன் விக்ரம ராஜசிங்கன் பதவி துறக்கும் முடிவுக்கு வந்துவிட்டான்" என்று ஜெனரல் கம்பீரமாகக் கூறினான்.

"அப்படியானால் இந்த முத்துசாமிதான் கண்டி மன்னன் என்பது - அதாவது ஏற்கனவே அறிவிக்கப்பட்ட உண்மை, இன்று உறுதியாகிவிட்டது."

"முத்துசாமி! அதற்குள் அவசரப்படாதே! விக்ரம ராஜ சிங்கன், தனது பதவியை பிலிமதளாவைக்கு விட்டுக் கொடுத்து

- அவரை எங்களுக்குப் பரிபூரண விசுவாசியாக இருக்குமாறு பணித்து விட்டிருக்கிறான்."

"அப்படியானால் என் கதி?" என்று அலறிவிட்டான் முத்துசாமி!

"உன் கதி அதோகதிதான்!" என்று ஒரு குரல் கேட்டது! அது ஒரு பெண்ணின் குரல்! எல்லோரும் அந்தக் குரல் கேட்ட பக்கம் திரும்பினர். கையில் ஏந்திய வாளுடன், ஒரு பெரிய தூணின் மறைவிலிருந்து குருவிச்சி நாச்சியார் போர்க்கோலம் பூண்டு நடந்து வந்தாள். ஒருக்கணம் அதிர்ச்சி! ஜெனரல் மெக்டோவல், தனது படையினரை அடுத்தகணம் எச்சரிக்கை செய்தான்! குருவிச்சி, அஞ்சிடவில்லை. ஓங்கிய வாளுடன் அவர்கள் எதிரே தலை நிமிர்ந்து நின்றாள். அவள் விழிகள் முத்துசாமியின் பக்கம் பாய்ந்தன.

"முத்துசாமி அவர்களே! மிகவும் நன்றி! நாம் திட்டமிட்டபடி ஆங்கிலேயப் படையை கண்டி நகருக்குள் கொண்டு வந்துவிட்டீர்! இந்தப் படையை சுற்றி வளைத்து சுக்கு நூறாக்கிட, கண்டி ராஜ்யப் படைகளும், பண்டாரக வன்னியர் படைகளும் தயார்! மிகத் தந்திரமாக மெக்டோவலையும் அவரது படையையும் கண்டிக்குள் அழைத்து வந்து சிக்க வைத்ததற்கு, முத்துச்சாமி அவர்களே! உங்களைக் கோயில் வைத்துக் கும்பிட வேண்டும்!"

இப்படி குருவிச்சி பேசியதும், முத்துசாமி நடுங்கிப் போனான்.

"நானா? நான் உங்கள் திட்டப்படி நடந்து கொண்டேனா? என்னம்மா உளறுகிறாய்? யார்? நீ?"

"என்னைத் தெரியவில்லையா? நான்தான் குருவிச்சி நாச்சியார்! மெக்டோவல் அவர்களே! நீங்கள் படித்தீர்களே, அந்தக் கடிதம் - அதை கண்டி மன்னர் விக்ரம ராஜ சிங்கன் எழுதவில்லை! நான்தான் எழுதினேன்! உங்களைக் கண்டி நகருக்குள் அனுமதித்து விட்டு, சுற்றி வளைத்து அழிப்பது என்பது எங்கள் திட்டம்! அதற்கு இந்த முத்துசாமியும் பெரிதும் உதவியிருக்கிறார். அதனால்தான் இவருக்கு முதலில் நன்றி சொன்னேன்,"

வேண்டுமென்றே ஒரு துரோகியை, எதிரிகளின் கையாலேயே தீர்த்துக் கட்ட வேண்டுமென்பதற்காகக் குருவிச்சி மிகத் திறமையாக அந்தப் பொய்யைத் திரும்பத் திரும்பச் சொன்னாள். முத்துசாமி, அதை மறுத்துக் கொண்டிருக்கும் போதே கண்டி நகரத்து வீதிகளில் மூடப்பட்டிருந்த ஒவ்வொரு வீட்டின் கதவையும் திறந்து கொண்டு கண்டி ராஜ்ய வீரர்களும், பண்டாரக வன்னியனின் படையினரும் புற்றீசல் போலப் புறப்பட்டு - ஆங்கிலேயப் படை, எந்தப் பக்கமும் திரும்ப முடியாமல் வளைத்தவாறு நெருங்கத் தொடங்கினர்.

மெக்டோவலுக்கு ஏமாற்றத்தால் ஏற்பட்ட ஆத்திரம் பொங்கியது! எரிமலை போல் ஆனான்!

"நண்பனாக நடித்து நரி வேலை செய்து விட்டாயே, துரோகி!" என்று முத்துசாமியின் மீது சீறினான்.

அவன், "இல்லை பிரபு" என்று சொல்லி முடிப்பதற்குள் மெக்டோவலின் கைவாள் அவன் தலையை இல்லையென்று ஆக்கிவிட்டது. முத்துசாமியின் தலையொரு பக்கமும் - முண்டம் ஒரு பக்கமும் குதிரையிலிருந்து சரிந்து விழுந்தன தரையில்! எதிரியின் கையால் துரோகிக்கு கிடைத்த பரிசினை எண்ணி, குருவிச்சி நாச்சியார் இதயம் குளிர்ந்தாள். தங்கள் தலைவனை இழந்த பதைப்பில் முத்துச்சாமியின் சிறிய படையின் வீரர்கள், மெக்டோவலை நோக்கிப் பாய்ந்தனர். ஆங்கிலேய வீரர்களுக்கும் அவர்களுக்கும் இடையே கலகம் விளைந்ததை, மேலும் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு - கண்டியின் வீரர்களும், பண்டாரக வன்னியனின் வீரர்களும் எதிரிகள் மீது பெருந்தாக்குதலை நடத்தினர்.

தனக்குத் தெரியாமலே ஆங்கிலேயப் படையை கண்டி வீரர்கள் எப்படித் தாக்கினர்? யாரிடம் உத்திரவு பெற்றனர்? என்று புரியாமல் பிலிமதளாவை விழித்தார். விக்ரம ராஜ சிங்கனிடம் ஓடினார்.

விக்ரம ராஜ சிங்கா, மிகுந்த நிதானமாக பிலிமதளாவைக்கு விளக்கமளித்தான்.

"திடீரென்று பண்டாரக வன்னியன் படை, கண்டியின்

உதவிக்கு வந்து விட்ட காரணத்தால் - நானே இந்த முடிவு எடுத்தேன்" என்று அவன் உறுதியான நிலையில் கூறியதும், பிலிமதளாவையும் தன்னைச் சமாளித்துக் கொண்டார்.

"நல்ல முடிவு! மிகவும் நல்ல முடிவு! எங்கே இந்த ராஜ்ய பாரத்தை முழுமையாக நான் சுமக்க வேண்டி வருமோ என்று கவலைப்பட்டேன். நல்ல வேளையாக திடீர்த் திருப்பம் ஏற் பட்டு, தப்பித்துக் கொண்டேன். வாழ்க பண்டாரக வன்னியன்!" என்று பிலிமதளாவை சொன்னாரே தவிர, அவர் ரோமக் கால்கூட மிஞ்சாத அளவுக்கு நஞ்சு நிறைந்திருந்தது அந்தச் சமாளிப்பில்!

கண்டி மாநகருக்குள் நுழைகின்ற வரையில் எதிர்ப் பில்லாமல் விடுத்து, திடுமெனத் தாக்குதல் நடத்திய ராஜ தந்திரத்தில் சிக்கிச் சீரழிந்தது ஆங்கிலேயப் படை. ஜெனரல் மெக்டோவல், கர்னல் பார்பட் இருவராலும் அந்தத் திடீர் எதிர்ப்பைத் தாக்குப் பிடிக்கமுடியவில்லை. இருப்பினும், கண்டி நகரைத் தங்கள் வசமாக்கிட மூர்க்கத்தனமாகப் போரிட்டனர். வீதிகள் அனைத்திலும் வீரர்களின் பிணங்கள் குவிந்த வண்ணமிருந்தன. ஒரு கட்டத்தில் குருவிச்சி நாச்சியார். மெக்டோவலின் கைத்துப் பாக்கிக்கு இலக்கானாள். இமைப் பொழுதுதான்! குருவிச்சியின் உயிர் பறந்து போயிருக்கும்! ஆனால் மெக்டோவல், குதிரையுடன் கீழே சாய்ந்து அங்கிருந்து ஓட்டமெடுக்கிற அளவுக்கு ஒரு நிகழ்ச்சி! பண்டாரக வன்னியன் அவன் மீது பாய்ந்தான்!

அதைத் தொடர்ந்து, குருவிச்சியும் பண்டாரகவன்னியனும் எதிரிகள் மீது பொழிந்த கணைகள் -வீசிய ஈட்டிகள்- அவர்களது படையினர் நடத்திய வீர சாகசம் - அவற்றுக்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறிய வெள்ளைப்படை, ஓட்டமெடுக்கத் தொடங்கியது. மேஜர் டேவி என்ற துணைத் தளபதியை பண்டாரக வன்னியன் கண்டி வீதியில் பரபரவென இழுத்துச் சென்று அவனைச் சிறையில் அடைக்குமாறு உத்தர விட்டான். ஏனையோர் தப்பித்தோம் பிழைத்தோம் என்று வட்டபேலிகா தோணித் துறையில் போய் ஒளிந்து கொண்டனர். ஒரு வழியாக

ஆங்கிலேயரின் கண்டிப் படையெடுப்பை, பண்டாரக வன்னியனும், குருவிச்சி நாச்சியும் தங்களது திறமையினாலும், வீர நெஞ்சத்தினாலும் தகர்த்து எறிந்தனர்.

கண்டி மன்னன், அந்த வெற்றி விழாவைப் பண்டாரகன், குருவிச்சி முன்னிலையில் - மிகச் சிறப்பாக நடத்தத் திட்ட மிட்டான். "ஆமாம்! நடத்த வேண்டியதுதான்! "என்று பிலிம தளாவை ஆமோதித்தபோதிலும், இந்தப் பாவிகளை எப்படி ஒழிப்பது?" என்ற விஷக் காற்றுதான் அவனது மூச்சாக வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

ஒடி ஒளிந்து கொண்ட மெக்டோவலின் கோட்டையைச் சுற்றி, பண்டாரக வன்னியனின் படை சூழ்ந்தது.

தனது வீரர்கள், மெக்டோவலின் உயிரைப் பறித்துவிடக் கூடுமெனக் கேள்வியுற்ற பண்டாரக வன்னியன், அவசர அவசரமாக மெக்டோவலைக் காப்பாற்றப் புறப்பட்டான்.

வெள்ளைக் கொடியும்—
வெற்றி விழாவும்!

66

வீர வேங்கையாகக் கண்டி நகருக்குள் நுழைந்து, வீழ்த்தப்பட்ட வெள்ளாடு போல திருகோணமலைக்குச் செல்லும்வழியில் ஒரு கோட்டைக்குள் புகுந்துகொண்டமெக்டோவலை வெளியே வரமுடியாமல் பண்டாரக வன்னி யனின் படை வீரர்கள் முற்றுகையிட்டு முன் னேறுவதைக் கேள்வியுற்று, தளபதி மேட்ஜ் என்பவன் தலைமையில் திருகோணமலை வழியாக இன்னொரு ஆங்கிலேயப் படை வருவது, பண்டாரக வன்னியனுக்கு தெரிவிக்கப்பட்டது. தனது வீரர்களிடமிருந்து ஜெனரல் மெக்டோவலின் உயிரைக் காப்பாற்றவேண்டுமென்று விரைந்தோடிய பண்டாரக வன்னியனுக்கு - முதலில் தளபதி மேட்ஜின் படையை சந்திப்பது முக்கியமான பிரச்சினையாகி விட்டது.

தளபதி மேட்ஜ் தனது படையுடன் திருகோணமலை யிலிருந்து கிளம்பிய சிறிது நேரத்திற்கெல்லாம் வழியிலேயே அவனைச் சந்தித்து விட்டான் பண்டாரக வன்னியன்! ஆங்கிலேய வீரர்களின் துப்பாக்கிக் குண்டுகளுக்குத் தப்புகிற தந்திரம் கற்றவர்களாக மட்டுமின்றி, துப்பாக்கி ஏந்திய அந்த வீரர்களை, வேல்களையும் ஈட்டிகளையும் எறிந்து வீழ்த்துகிற ஆற்றலையும் பெற்றிருந்த பண்டாரகனின் படை வீரர்களுக்கு முன்னால் அந்தப் பரங்கித் தளபதி மேட்ஜின் தாக்குதல் நிற்க முடியவில்லை. அதனால் அவன் திடீரெனப் போர் நிறுத்தம் செய்தான். அவனது வீரர்கள், அவன் கூறப்போகிற முடிவுக்காக அவனையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

"வீரர்களே! கண்டிப் படையையும், பண்டாரகன் படையையும் நாம் வெற்றி காண வேண்டுமானால் ஒரே வழிதான் இருக்கிறது!" என்றான் மேட்ஜ்!

"என்ன வழி? என்ன வழி?" என்று அலறினார்கள், ஆங்கிலேய வீரர்கள்!

"இப்போது நாம் திருகோணமலைக்கே திரும்பச் செல்ல வேண்டும். இல்லையேல் அனைவரும் பரலோகம் போய் விடுவோம். இரண்டில் எதைச் செய்லாம்?"

தளபதி மேட்ஜ், கொஞ்சம் வேடிக்கையான மனிதன்! முட்டாள்தனமாக ஒரு யுத்தத்தில் உயிரிழப்பதை விரும்பாதவன்! பண்டாரக வன்னியனின் வலிமை பற்றி அவனுக்கு மிக நன்றாகவே தெரியும். படை பலமின்றியே தனித்து நின்று போரிடக்கூடிய வல்லமை பண்டாரக வன்னியனுக்கு உண்டு என்பதை அவன் அறிந்திருந்தான். எனவே, பண்டாரகனும் அவனது வீரர்களும் ஆச்சரியப்படும்படியாக தளபதி மேட்ஜ், தனது படையுடன் புறங்காட்டி ஓடினான் திருகோணமலையை நோக்கி!

கண்டியிலும், திருகோணமலைக்கருகிலும் ஆங்கிலேயர் களுக்கெதிராகப் பெற்ற வெற்றிப் பெருமிதமுடன் பண்டாரக வன்னியன், ஜெனரல் மெக்டோவலை மீட்பதற்காக மீண்டும் விரைந்து சென்றான்.

மெக்டோவல் ஒளிந்திருந்த கோட்டையைச் சுற்றி நின்ற முல்லைத்தீவு வீரர்களும், கண்டியின் வீரர்களும் பண்டாரக வன்னியனைக் கண்டதும் விலகி நின்று வழிவிட்டனர். அவன் அவர்களனைவரையும் நோக்கிப் புன்னகை புரிந்துவிட்டு, அமைதியாக இருக்குமாறு கையசைத்து ஆணை பிறப்பித்தான். தங்களின் தலைவன் குதிரையிலிருந்து கீழேயிறங்கிய அந்தக் கம்பீரத்தைக் கண்டு பூரித்துப் போய் நின்ற முல்லைத்தீவின் வீரர்கள் அவனை வளைத்துக் கொண்டு, "தாங்கள் உள்ளே செல்வது நல்லதல்ல! தனியொருவராகத் தாங்கள் போவதை நாங்கள் விரும்பவில்லை" என்று கூச்சலிட்டனர்.

"பயமா? எனக்கா? நீங்கள் இருக்கும்போதா? உங்கள்

நெஞ்சில் நான் இருக்கும்போதா?" என்று தனது உயர்ந்த தோள்களைக் குலுக்கிக்கொண்டு கேட்டவாறு, பண்டாரகன் தன்னந்தனியனாக அந்தக் கோட்டைக்குள் நுழைந்தான்.

குகை போன்ற நுழைவாயிலைக் கடந்து, அவன் கோட்டை யின் உட்பகுதிக்குச் சென்றபோது - துப்பாக்கிகளை நீட்டியவாறு நான்கு திசைகளிலும் ஆங்கிலேய வீரர்கள், அவன் நெஞ்சுக்குக் குறி பார்த்துக் கொண்டே நெருங்கி வந்தனர். பாதுகாப்புக்குக் கூட யாருமின்றி, கோட்டைக்குள் வந்துவிட்ட பண்டாரகனுக்கு ஒரு துளி கலக்கமும் ஏற்படவில்லை. புன்னகை மாறாமல் அவர்களுக்கு நடுவில் நின்றான். அப்போது ஒரு கைத்துப பாக்கியை நீட்டிக் குறி பார்த்தவாறு ஜெனரல் மெக்டோவல் ஆத்திரம் கொப்பளிக்க பண்டாரகனின் முன்னால் பாய்ந்து வந்தான்.

"சிங்கத்தின் குகைக்குள்ளேயே வந்து சிக்கிக் கொண்டாய்!"

என்று கூறி இறுமாப்புடன் சிரித்த அந்த வெள்ளைக்கார ஜெனரலை, பண்டாரகன் வெறுப்புடன் கூடப் பார்க்கவில்லை. மாறாக, அந்த வீர வன்னியன் - கலகலவெனச் சிரித்தான்.

"முட்டாள் ஜெனரலே! இப்போது நான் உன்னை என்னுடைய வீரர்களிடமிருந்து காப்பாற்ற வந்திருக்கிறேன். அதாவது உனக்கு உயிர்ப் பிச்சை அளிக்க வந்திருக்கிறேன்."

ஜெனரல் மெக்டோவல் பண்டாரகனின் பெருந்தன்மையை உணர்ந்து கொள்ளவில்லை. "நீயா? எனக்கா? உயிர்ப்பிச்சை கொடுப்பதா?" என்று உறுமினான்.

"பொறியில் அகப்பட்டது போல கண்டி மாநகருக்குள் நீ அகப்பட்டுக் கொண்டு விழித்ததை மறந்துவிட்டாயா? தலை தப்பினால்போதுமென ஓடிவந்து இந்தக் கோட்டைக்குள் புகுந்து கொண்டதை மறந்து விட்டாயா? ஓடுகிறவனையும், உயிருக்குப் பயந்து ஒளிந்து கொள்கிறவனையும் கொல்லக்கூடாது என்ற பண்பாடு கருதி, உன்னைக் காப்பாற்ற வந்திருக்கிறேன் என்பதையாவது மறந்து விடாதே!

'ஓ! யுத்த தர்மம் எனக்கு சொல்லித் தருகிறாயா? ஓட முடியாமலும், ஒளிய முடியாமலும் என்னிடம் வந்து நீ அகப்பட்டிருக்கிறாய்! இப்போது உன் உயிர் எனக்குத் தேவை!"

மெக்டோவல், கைத்துப்பாக்கியை பண்டாரக வன்னியனின் நெற்றிப் பொட்டுக்கு நேராக நீட்டி, விசையை அழுத்தப் போனான். அடுத்த கணம் பண்டாரகன், மெக்டோவலின் கையை அழுத்திப் பிடித்துத் திருக்கிக் கொண்டே, "என் உயிரை நீ போக்கி விடலாம்! ஆனால் உன் உயிரைப் போக்க - உன் உடலைச் சல்லடைக் கண்களாகத் துளைப்பதற்கு - எத்தனை வீரர்கள், கோட்டைக்கு வெளியே காத்திருக்கிறார்கள் தெரியுமா?" என்று நிதானமாகக் கேட்டான். தனக்கு நேராக துப்பாக்கிகள் நீட்டப்பட்டுள்ள நிலையிலும் பரபரப்பு அடையாமல் அவ்வளவு நிதானமாக அச்சமின்றி, ஆத்திரமின்றி பேசிய ஒரு வீரத் திருமகனை மிக நெருக்கமாகப் பார்த்த ஜெனரல் மெக்டோவல் வியப்புற்று நின்று விட்டான்.

"பண்டாரகனே! உன் பிணம் இங்கே விழுந்த மாத்திரத்தில் கோட்டைக்கு வெளியே நிற்கும் உன் வீரர்கள் சிதறியோடி விடுவார்கள் என்பது எனக்குத் தெரியும்."

"மெக்டோவல்! இங்கேதான் நீ தப்புக் கணக்கு போடுகிறாய்! தலைவனின் தலை சாய்ந்தால், வீரர்கள் சிதறுவர்! அணி அலங்கோலமாகும்! தாங்கிப் பிடிக்க ஆள் இருக்கமாட்டார்கள்! இந்த விளைவுகள் எல்லாம் வேறிடத்தில் ஏற்படக்கூடும்! ஆனால், எனது வீரர்கள் அப்படியல்ல! தலைவனையே பிணமாகக் கண்டாலும், தங்கள் உடலில் கடைசி மூச்சு இருக்கும் வரையில் களத்தை விட்டு வெளியேற மாட்டார்கள். என்னைத் தன்னந்தனியாக இங்கே கொன்று போட்டு விட்டு, நீயும் உனது ஆட்களும் இந்தக் கோட்டையிலிருந்து உயிரோடு வெளியேற முடியும் என்ற நினைப்பா? அது மூளையற்றவனின் கணிப்பாகத் தான் முடியும்! எங்கே பார்க்கலாம் என்னை சுட்டுத் தள்ளி விடு! அடுத்த கணம் உன் உடல் சுக்கல் சுக்கலாகிறதா இல்லையா என்பதை உனது ஆட்கள் புரிந்து கொள்ளட்டும்! பாவம், படையெடுத்து வந்த நீ பயந்து ஓடியது கண்டு பரிதாபப்பட்டேன்! உன் உயிருக்கே ஆபத்து எனக் கேட்டு துடித்துப் போய் விரைந்து வந்தேன்! இனி எந்த விளக்கமும் அளிக்க நான் தயாராக இல்லை! அது ஒரு வீரனுக்கு

அழகுமில்லை! இதோ, தனியாக வந்துள்ள என்னைக் கொன்றுவிட்டு, தைரியமிருந்தால் என் வீரர்களிடமிருந்து தப்பித்துக் கொள்!"

பண்டாரகனின் முழக்கத்தைக் கேட்டு ஜெனரல் மெக்டோவல் திகைத்துப் போனான். அவன் கையிலிருந்த துப்பாக்கியைக் கீழே போட்டுவிட்டு பண்டாரகனின் கையைக் குலுக்கினான்.

இதற்கிடையே கோட்டையைச் சூழ்ந்து நின்ற வீரர்கள், உள்ளே சென்ற தலைவன் என்ன ஆனான் என்ற பதைப்பில் ஆரவாரம் செய்யத் தொடங்கினர். வெகு நேரமாகியும் பண்டாரகன் திரும்பி வராததால் அந்த வீரர்களின் சந்தேகம் வலுத்தது. அவர்தம் முகங்களில் படர்ந்த கலக்கம் - மெல்ல மெல்ல அவர்களை உசுப்பிவிடும் உணர்வாக மாறி - ஒருவர் இருவர் கோட்டைக்குள் நுழைந்திடவுமான நிலையை உருவாக்கியது. அவர்களை அந்தக் கோட்டையில் காவலர்கள் எதிர்த்து மாண்டனர். அதைப் போலவே அந்தக் காவலர் சிலரால் பண்டாரகனின் ஒரிரு வீரர்களும் கொலையுண்டனர்.

கோட்டைக்கு வெளியேயுள்ள வீரர்கள் அனைவருமே உள்ளே நுழைவது என்கிற அளவுக்கு நிலைமை முற்றி விட்டபோது - கோட்டைக்குள்ளிருந்து ஒரு வெள்ளைக் கொடியைப் பிடித்தவாறு ஜெனரல் மெக்டோவல் முதலில் வெளியே வந்தான். அவனைத் தொடர்ந்து பண்டாரக வன்னியன், பாயும் புலிபோல வந்து கொண்டிருந்தான்.

"வீரர்களே! ஆங்கிலேயர்களுக்கு ஓர் எச்சரிக்கையாகவும் - நமது மண்ணில் அவர்கள் ஆதிக்கத்திற்கு இடமில்லை என்னும் அறிவிப்பாகவும் - இதோ ஜெனரல் மெக்டோவலை கொழும்புக்குத் திருப்பி அனுப்ப இருக்கிறேன். தோற்றோடி ஒளிந்து கொண்ட ஒரு தளபதியை மன்னித்துக் காப்பாற்றி அனுப்பியுள்ள நமது பெருந்தன்மையை உணர்ந்தபிறகாவது, ஆங்கிலேய ஆதிபத்தியம் இந்தத் தீவை விட்டு வெளியேறும் என்று எதிர் பார்க்கிறேன். இப்போது வெள்ளைக் கொடியுடன் ஜெனரல் மெக்டோவல் வெளியேறிக் கொழும்பு போய்ச் சேர

அனுமதிக்கப்படுகிறார். நீங்கள் அனைவரும் அவருக்கு வழி விடுமாறு கேட்டுக் கொள்கிறேன்."

"நன்றி!" என்று பண்டாரகனைப் பார்த்துக் கூறிவிட்டு, மெக்டோவல், தனது ஆட்களுடன் வெளியேறியதைக் கையொலி செய்து வரவேற்று, தங்கள் தலைவனை வாழ்த்தி மகிழ்ந்தனர் கோட்டைக்கு வெளியே குழுமியிருந்த அந்த வீரர்கள்.

வெள்ளைக் கொடியுடன் கொழும்புக்கு வந்து சேர்ந்த மெக்டோவலைக் கண்டு வெகுண்டெழுந்தான் நார்த் பிரபு! மெக்டோவல், நடந்தவற்றை விளக்கமாகக் கூறிய பிறகு, நார்த்தின் தலைமையில் ஆலோசனைக் கூட்டத்திற்கு ஏற்பாடாகியது.

நார்த் பிரபு கடைபிடித்த நடைமுறைகளும், படையெடுப்பும் அந்தக் கூட்டத்தில் விமர்சிக்கப்பட்டன.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் அமைவதற்கு உறுதுணையாக இருப்பதாகக் கூறி, பிலிமதளாவை ஏமாற்றிவிட்டார். எனவே அவரை முதலில் நம்பியது தவறு. அதைவிடப் பெரிய தவறு, முத்து சாமிக்குக் கொழும்பில் அடைக்கலம் கொடுத்து -அவனிடம் பெரிய பலம் இருப்பதாக நம்பி - இறுதியில் அவனால் பெரும் தோல்விக்கு ஆளானது. இப்படி, விமர்சனம் தொடர்ந்தது. இந்தத் தோல்விக்கு எல்லாவற்றையும் விட மிக முக்கியமான காரணம், பண்டாரக வன்னியன், கண்டி மன்னனுக்கு உதவியாக வந்து போரில் வீர சாகசம் பல நடத்தியதுதான் என்று அந்த ஆலோசனைக் கூட்டம், விமர்சனத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டுக் கலைந்தது.

கொழும்புத் தலைநகரில் ஆங்கிலேய ஆதிபத்தியவாதிகள், கண்டிப் படையெடுப்பு குறித்து ஆலோசனை நடத்திக் கொண்டிருந்த அதே நேரத்தில் கண்டியில் வெற்றி விழாவுக்கான ஏற்பாடுகளில் விக்ரம ராஜசிங்கன் தனி ஆர்வத்துடன் ஈடுபட்டான். அந்த விழாவில் தனது விஷமூளையை எப்படி வேலை செய்ய விடுவது என்பது குறித்து பிலிமதளாவை சிந்திக்கத் தொடங்கினார்.

இரத்தம் படிந்த வாள்!

67

"அழகானவளே! என் அன்புக்குரியளே! என் மனக் கோட்டையில் இடி விழுந்து தூள் தூளாகச் சிதறிப் போய், இப்போது நானே ஒரு குட்டிச் சுவராகக் காட்சியளித்துக் கொண் டிருக்கிறேன். வெள்ளைக்காரர்கள் எனக்கு மகுடம் சூட்டுகிற விழா நடைபெறும் என்று எதிர் பார்த்துக் காத்திருந்த எனக்கு முன்னால் விக்ரமராஜசிங்கனும், பண்டாரக வன்னியனும், அந்தக் குட்டி குருவிச்சி நாச்சியும் எடுக்கிற வெற்றி விழாவா? மர்த்தனீ! அந்த விழாவை அமங்கலவிழாவாக மாற்றிட நீதான் ஒரு யோசனை சொல்ல வேண்டும்."

பிலிமதளாவை, வெளுத்துப் போன முகத்துடன், மர்த் தனியின் உதடுகள் உதிர்க்கும் பதில் என்ன என்று ஆவலுடன் கவனித்தார்.

"நான் ஒரு சிங்களவப் பெண் - நீங்களோ அனுபவச் சுரங்கம்! அனைவரும் பாராட்டுகிற தலைசிறந்த நிர்வாகி - தங்கள் மகள் பியசீலியிடம் நான் கொண்டிருந்த நட்பின் காரணமாக, அவள் தவறுகளுக்கெல்லாம் துணை போனேன்! துணை போனது மட்டுமல்ல அந்தத் தவறுக்கும் தவறான பல தவறுகளைச் செய்து அவற்றுக்காக இப்போது வருந்துகிறேன். பண்டாரக வன்னி யரின் முல்லைத் தீவுக்குப் பியசீலியுடன் போனபோது தமிழர்கள் என்றாலே ஒரு வெறுப்போடு தான் போனேன். ஆனால் பண்டாரகவன்னியன், குருவிச்சி நாச்சியார், மற்றும் அங்கிருந்த தமிழ் மக்களிடம் நெருங்கிப் பார்த்த போதுதான், அவர்கள் பண்பாடு மிக்கவர்களாகவும், இந்த இலங்கைத் தீவில் ஆங்கிலேயர்களான அன்னியர்களின் ஆதிக்கம் அறவே இருக் கக்கூடாது என்று உறுதி படைத்தவர்களாகவும் இருப்பதை

உணர்ந்து கொள்ள முடிந்தது. கண்டி ராஜ்யத்தை வெள்ளையர்கள் வளைத்து விடக் கூடாது என்பதில் எவ்வளவு அக்கறை இருந்தால், பண்டாரக வன்னியர் தனது படைகள் முழுவதையும் முல்லைத் தீவிலிருந்து இங்கே அழைத்து வந்திருப்பார் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். அதனால் அவருக்கோ அவரது இதய நாயகியாக இருக்கின்ற குருவிச்சி நாச்சியாருக்கோ இம்மியளவு தீங்கு நினைக்கவும் இனிமேல் என் மனம் ஒப்பாது!"

பிலிமதளாவையின் ஆந்தைக் கண்கள் விகாரமாக விரிந்தன! அந்தப் பார்வையில் ஒரு பெரும் ஏமாற்றம் பொங்கி வழிந்தது!

"மர்த்தனீ! உன்னை ஒரு சிங்களவப் பெண் என்று பெருமையோடு சொல்லிக் கொண்டாய்! அதில் என்ன பயன்? கண்டியின் மகுடத்தைச் சூட்டிக் கொண்டு, அது உன் காலில் படுமாறு கட்டிலில் தலை கீழாகப் படுத்து கட்டியணைத்துக் களிப்படையக் கனவு கண்டேன். அந்தக் கனவு பலிக்கவில்லையே என நான் படும் கவலையில் நீ பங்கு பெறாமல் இருப்பதைப் பார்த்தால் நீ ஒரு சிங்களவப் பெண்தானா? என்ற சந்தேகமே எனக்கு ஏற்பட்டு விட்டது!"

"நீங்கள் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது! சிங்களப் பெண் என்றால், அவள் சிரிக்கும் சிலந்தியாகத்தான் இருக்க வேண்டுமா? சிந்தித்து நான் எடுத்துள்ள முடிவைப் போல் நீங்களும் எடுத்திடக் கூடாதா?"

"ஓ! நீ முடிவே எடுத்துவிட்டாயா? சிங்கள மக்களைத் தமிழர்களுக்குக் காட்டிக் கொடுப்பது என்று?"

"சிங்களவர்களும், தமிழர்களும் இந்தத் தீவிலே வாழும் இந்தத் தீவுக்குச் சொந்தக் காரர்கள்! இந்த இரு இனமும் தங்களுக்குள்ள சமமான உரிமைகளைப் பெற்று, ஒருவரை யொருவர் பகைத்துக் கொள்ளாமல் வாழ வேண்டுமென்பது தான் என்னுடைய ஆசை! இதிலே காட்டிக் கொடுப்பது என்ற சொற் களுக்கே இடமில்லை! நான் செய்த தவறுகளுக்குப் பிராயச்சித்தம் செய்துகொள்ள தயவு செய்து என்னை அனுமதியுங்கள்!"

"நானும் வந்ததில் இருந்து பார்க்கிறேன். தொலைவில் தள்ளியே இருந்து பேசுகிறாய்! என்னைக் கவரும் கடைக் கண் வீச்சைக் காண முடியவில்லை! என்னை மயக்கி இழுக்கும் மார்பகத்தைக் கூட கார்காலத்து மேகக் கூட்டம் கதிரவனை மறைப்பது போலச் சேலையால் முழுமையாக மூடி அமர்ந்திருக்கிறாய்! என்ன காரணம்! ஒரு வேளை புத்த சந்நியாசினி ஆகப் போகிறாயா?"

"என்னுள்ளே மேடாக உயர்ந்திருக்கும் சாக்கடைக் குப்பை களை அள்ளி வீசிவிட்டு, அறவழிகளில் நடப்பதற்கு சந்நியாசி வேடம் தேவையில்லை என்றும் தீர்மானித்திருக்கிறேன். ஒரு புத்த சந்நியாசினிக்குத் தேவையான தூய்மையும், வாய்மையும் எனக்குக் கிட்ட வேண்டுமென்பதே எனது ஆசை! வேடங்களில் எனக்கு நம்பிக்கையில்லை"

"எவ்வளவு மாறிப் போயிருக்கிறாய் மர்த்தனி! இந்த அதிசய மாற்றத்துக்கு உடனடியாக காரணங்கள் ஏதாவது இருக்க வேண்டுமே?"

"முதலிலேயே சொல்லியிருக்கிறேனே! பண்டாரக வன்னியர், கண்டி மன்னர் மீது கொண்டுள்ள மாசு மறுவற்ற நட்பு எனக்கு அவர் மீது பெருமதிப்பை ஏற்படுத்திவிட்டது. கேவலம், உடலூறும் உணர்ச்சிகளுக்குத் தீனி போடுவதே வாழ்க்கையின் இலட்சியம் என்று கருதாமல் பண்டாரகரும், குருவிச்சியும் இலட்சிய வாழ்க்கை ஒன்றை நடத்துகிறார்கள். அந்த இலட்சியம், இலங்கையின் அந்நியர் ஆதிக்கம் அகற்றப்பட வேண்டும் என்பது! அவர்களது சொல்லும் செயலும் என் உள்ளத்தைப் பாதித்தது மட்டுமல்ல, எனது கடந்த கால நாச நடவடிக்கை களும் என்னைச் சுடுமணலில் நிறுத்திவைத்து சுளீர் சவுக்கால் அடித்துக் கொண்டிருக்கின்றன!"

"சபாஷ்! என் மடியில் புரண்ட மர்த்தனி, திடீரென கண்டி மன்னனின் விசுவாசியாகிவிட்டாள்! பண்டாரக வன்னிய பக்தை ஆகிவிட்டாள்!"

"இல்லை! ஒதுக்கி வைத்திருந்த பெண்மையை எடுத்து ஊனோடும், உயிரோடும் உள்ளத்து உணர்வுகளோடும் ஒட்ட வைத்துக் கொண்ட 'பெண்' ஆகிவிட்டேன்"

"அப்படியானால் என் மனம் நோக கண்டியில் வெற்றிவிழா நடப்பதைத் தடுத்திட மார்க்கமொன்று கூறமாட்டாய், இல்லையா?"

"அந்த விழாவைத் தடுக்கவே கூடாது என்கிறேன். பிறகு எப்படி நான் மார்க்கம் கூற முடியும்?"

இவர்களின் உரையாடல் நடைபெற்றுக் கொண்டிருந்த போதே கண்டித் திருநகரம், வெற்றிவிழாக் காட்சிகளைக் கண்டு மலர்ந்த முகம் காட்டத் தொடங்கிவிட்டது.

வீதிகள் அனைத்திலும் வெற்றி விழாத் தோரணங்கள்.. வீடுகள் அனைத்திலும் விளக்கு வரிசைகள். மகளிர், ஆடவர் இரு சாராரும் புத்தாடை புனைந்து மன்னனை வாழ்த்தித் தெருக்களில் மகிழ்ச்சிக் கூத்தாடினர். கொடும் வாட்களை ஏந்திய கரங்களில் கொடிகளை உயர்த்திப் பிடித்தவாறு குதிரைகளில் அமர்ந்து பட்டாளத்து வீரர்கள் ராஜ வீதியில் பவனி வந்தனர்! அந்த வீரர்களுக்கிடையே கண்டி மன்னன் அவனது ராணியுடன் ஒரு அழகிய தேரில் பவனி வந்து கொண்டிருந்தான். அந்தத் தேரினை ஓட்டினாற்போல் மற்றொரு தேரில் பண்டாரகனும், குருவிச்சியும் சிரிப்பு செழிக்கும் முகத்துடன் வந்து கொண்டிருந்தனர். அவர்கள் வந்தமர்ந்து கண்டி மக்களின் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் பெற்றுக் கொள்வதற்கென கண்டி அரண்மனையில் கொலுமண்டபம் சிறப்புமிகுந்த அலங்காரங்கள் செய்யப்பட்டு காண்போர் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவண்ணமிருந்தது. தேரில் வரும் தீரர்களாம் விக்ரம ராஜ சிங்கனையும், பண்டாரகனையும் கண்ட மக்கள், கூடைகளில் மலர்களை நிரப்பிக்கொண்டு, அவர்கள் மீது மழையென மலர்களைப் பொழிந்து கூத்தாடினர். கொலுமண்டபத்தில் அழகிய வெள்ளித் தட்டு ஒன்றில் தங்க உறை போடப்பட்ட வாள், ஒரு எழில்மிகு பீடத்தில் மின்னிக் கொண்டிருந்தது.

பண்டாரகனுக்குக் கண்டி மன்னன் பரிசளிப்பதற்காக அந்த ஏற்பாடு! உற்சாக வெள்ளம் கரைபுரளப் பவனி முடிந்து, விக்ரம ராஜ சிங்கனும், பண்டாரகனும் கொலுமண்டபத்திற்குள்

நுழைந்தனர். குருவிச்சியும், கண்டி ராணியும் அவர்களுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்தனர். கொலுமண்டபத்தில் நிறைந்திருந்த ஆன்றோர், சான்றோர் எல்லோரும் எழுந்து நின்று, வாழ்த்தும், வணக்கமும் தெரிவித்தனர்.

அதுவரையில் அந்த வெற்றி விழாப் பவனியில் கண்ணில் படாமல் இருந்த பிலிமதளாவை, கொலுமண்டபத்தில் அரசனின் இருக்கைக்குப் பக்கத்தில் அமைதியாக நின்று கொண்டிருந்தார். அவரைப் பார்த்த கண்டி மன்னன், வியப்புடன் பண்டாரகனை நோக்கவே, பண்டாரகன் ஒரு புன்னகையை மட்டும் சிந்தியபடி கொலுமண்டபத்தில் முன்னேறிக் கொண்டிருந்தான்.

தனது இருக்கையின் முன்னால் வந்து நின்றுவிட்ட கண்டி மன்னன், அருகே ராணியை அமரச் செய்து விட்டு - பண்டாரகனும், குருவிச்சியும் அமர்வதற்காக பக்கத்தில் உள்ள மற்றொரு இருக்கையைக் காட்டினான். எல்லோரும் மகிழ்வு பெருகிடும் நெஞ்சினராய் அவரவர் இடத்தில் உட்கார்ந்தனர். கண்டி மன்னன் எழுந்து நின்று பேசத் தொடங்கினான்.

"மங்கலம் நிறைந்த இந்த விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பு நமக்கு கிடைத்தமைக்கு முழு முதற்காரணம், பண்டாரக வன்னியரேயாகும்."

கொலுமண்டபம் அதிர்ந்தது, கையொலியாலும், வாழ்த் தொலியாலும் பண்டாரகன், மண்டபத்தில் இருந்தோரை வணங்கி நிமிர்ந்தான்.

"மங்கலமான விழா! இல்லை! இல்லை! இதை அமங்கல விழாவாக ஆக்கிவிட்டால் நான் கொண்ட சபதம் நிறைவேறாமல் போய் விடும்" இப்படி முணுமுணுத்தது பிலிமதளாவையின் உதடு!

"முதல்வர் பிலிமதளாவை அவர்களே! ஆங்கிலேயர்களின் படை எடுப்பைத் தடுத்து, அவர்களை நிலைகுலையச் செய்த வீராதி வீரன் - தீராதி தீரன் -பண்டாரக வன்னியனுக்கு, நமது அரசின் சார்பில் வாள் ஒன்றைப் பரிசாக அளிக்கத் திட்டமிட்டுள்ளேன். அந்த வாளை இந்த மங்கல விழாவில் பண்டாரகனுக்கு வழங்க வேண்டும். அதோ பீடத்திலிருக்கும்

வாளை எடுத்துத் தங்கள் கையால் என்னிடம் கொடுங்கள். நான் அந்த வெற்றிப் பரிசை, பண்டாரகனுக்குக் கொடுக்கிறேன். "கண்டி மன்னன் சொல்லி முடிப்பதற்குள், பிலிமதளாவை மன்னனின் முன் சென்று தலைவணங்கி நின்றுவிட்டு, "அப்படியே ஆகட்டும் அரசே!" என்றார்.

அத்துடன், பிலிமதளாவை தனது இடையில் தொங்கிய உடை வாளுரையை முழுவதுமாகக் கழற்றி, வாளை மட்டும் மன்னனுக்கு நேராகப் பணிவுடன் நீட்டி வணக்கம் தெரிவித்தார்.


அப்போது அங்கிருந்த எல்லோருடைய கண்களும், அந்த வாளையே நோக்கின! காரணம், அந்த வாளில் ரத்தம் தோய்ந்து, துளித் துளியாகக் கீழே சிந்திக் கொண்டும் இருந்தது.

"அமைச்சர் அவர்களே! என்ன இது?" என்றான் அதிர்ச்சியுடன் விக்ரம ராஜ சிங்கன்!

"கண்டி மன்னரே! மங்கலமான இந்த விழாவில் அமங்கலத்தைக் கலக்க ஒருத்தி திட்டம் போட்டாள்! மன்னரையும், மகாராணியையும் தீர்த்துக் கட்டுவதே அந்த மகா பாதகியின் திட்டம்! அவளை நான் தீர்த்துக் கட்டிவிட்டு, அவள் ரத்தம் படிந்த வாளுடன் இங்கே வந்திருக்கிறேன்"

"யார் அவள்?"

"மர்த்தனி!" என்று பிலிமதளாவை சொன்னதும், "மர்த்தனியா? என்னால் நம்ப முடியாது!" என்று கூச்சலிட்டுக் கொண்டு எழுந்தாள் குருவிச்சி நாச்சியார்!



பிலிமதளாவை நினைத்தபடியே வெற்றிவிழா, வேதனை விழாவாக முடிந்தது. பிலிமதளாவையின் மொட்டைத் தலைக்குள்ளே இருக்கிற விஷத்தை, அவரது முட்டை விழிகள் வெளியே கக்கிக் கொண்டிருப்பதைப் பண்டாரக வன்னியன் உணர்ந்திருப்பதைப் போலவே கண்டி மன்னனும் உணர்ந் திருந்தான். எனவே இருவரும் குருவிச்சி நாச்சியாரின் அதிர்ச்சி கண்டு வியப்படையவில்லை. அவர்களுக்கே அந்த அதிர்ச்சி ஏற்பட்டது. விழா பாதியில் நின்று விட்டது. விக்ரம ராஜ சிங்கன், சோகம் தோய்ந்த திகைப்புடன் பண்டாரகனைப் பார்த்துக் கொண்டிருப்பதைப் பண்டாரகன் கவனிக்கத் தவறவில்லை.

"பரவாயில்லை! விழாவை எப்போது வேண்டுமானாலும் நடத்திக் கொள்ளலாம். ஆனால் உடனே சென்றால்தான் உண்மையைப் புரிந்துகொள்ளலாம்" என்று பண்டாரகன், கண்டி மன்னனின் தோளில் ஆறுதலாகத் தட்டினான். கண்டி மன்னன் "மன்னிக்கவும், என்னுடன் வாருங்கள்" என்று கூறிக்கொண்டே கொலு மண்டபத்தை விட்டு வேகமாக மாளிகையின் உட்புறம் நோக்கி நடந்தான். அவனைப் பின்பற்றி பண்டாரகன், குரு விச்சி, ராணி, ஆகியோர் நடந்தனர். மர்த்தனியின் மரணத்தோடு மங்கல விழாவை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டோம் என்ற மகிழ்ச்சியுடன், பிலிமதளாவை, தனது ஆந்தை விழிகளை மேலும் அகலமாக்கிக் கொண்டு தலையைத் தடவியவாறு அவர்களைத் தொடர்ந்து நடந்தான்.

மர்த்தனியின் பிணம் எங்கேயிருக்கிறது எனத் தெரியாமலே

மாளிகையின் தாழ்வாரங்களைக் கடந்து கொண்டிருந்த கண்டி மன்னன், திடீரென நின்று திரும்பிப்பார்த்தான் பிலிமதளாவையை!

"மர்த்தனி எங்கே?" என்று ஆத்திரம் கொப்பளிக்க அவன் கேட்ட கேள்வியில் அதிகாரத்தொனி நிரம்பியிருந்ததை பிலிமதளாவைப் புரிந்துகொண்டார்.

"இந்த வீரம் இவனுக்கு தானாக வந்ததில்லை! அருகில் பண்டாரக வன்னியன் இருப்பதால் வந்தது!" என மனதுக்குள் முணுமுணுத்துக் கொண்டார்.

"என் அறையில்தான் அந்தப் பாதகி பிணமாகக் கிடக்கிறாள்!"

பிலிமதளாவையின்பதிலைக் கேட்டதும் "உமதுஅறையிலா? அங்கு ஏன் வந்தாள்? எப்படி வந்தாள்?" என நடந்தபடியே கேட்டான் விக்ரமராஜ சிங்கன்.

"என்னிடம் ஒருமாதிரி பழகுவாள் அவள்! அந்த நம்பிக்கையில்தான் அவள் வகுத்திருந்த சதித் திட்டத்தை என்னிடம் கூறுவதற்கு என் அறைக்கு வந்தாள். அந்த வஞ்சகி வகுத்திருந்த திட்டத்தை அறிந்தவுடன் என்னையும் மீறிய ராஜ விசுவாசத்தில் அவளைத் தீர்த்துக் கட்டி விட்டேன்"

பிலிமதளாவையை எதிர்மறித்துக் கொண்டு குருவிச்சி கடுமையான குரலில்,

"உம்மைப்பற்றி அறியாதவர்களிடம் போய் நீர் ஓர் உண்மை விளம்பி என்று பறை சாற்றிடும்! அவர்கள் ஒருவேளை நம்பக்கூடும்! மன்னரையோ ராணியையோ கொல்ல வேண்டுமென்று மர்த்தனி திட்டமிட்டதாகக் கட்டும் கதையை எங்களால் நம்பமுடியாது!" என்றாள்.

"ஏன் அவசரம்? எதற்காக நான் பொய் கூற வேண்டும்? என்னிடம் பிரியமுள்ள ஒரு பெண்ணைக் கொல்ல வேண்டிய அவசியம்எனக்கென்ன வந்தது? இதோ, இன்னும் சிறிது தூரம் நடந்தால் எனது அறை! அங்கே போனால் எல்லா உண்மைகளும் தெரியப் போகிறது!"

முட்டைக் கண்களை உருட்டிக் கொண்டு மொட்டைத்

தலையைத் தடவிக் கொண்டு ஒரு பச்சைச் சிரிப்பு சிரித்தார் பிலிமதளாவை! அது மிகவும் பயங்கரமான சிரிப்பு!

பேசிக் கொண்டே அனைவரும் பிலிமதளாவையின் அறைக்குள் நுழைந்துவிட்டனர்.

"எங்கே மர்த்தனி?" என்று பரபரப்புடன் கேட்டாள் குருவிச்சி!

தீங்கு புரியும் நோக்குடன் முல்லைத் தீவுக்கு வந்து பின்னர் திருந்திவிட்ட பெண்ணாகத் தன்னுடன் அன்போடு பழகிய நாட்கள் அதிகமில்லை எனினும், அதற்கிடையே அவள் தன்மீது காட்டிய பாசத்தை எண்ணிக் குருவிச்சி உணர்ச்சி வயப்பட்டிருந்தாள். அவள் அழகிய விழிகள் அந்த அறையை வட்டமிட்டன. மர்த்தனியின் பிணம் அங்கில்லை. ஆனால் அறை முழுவதும் திட்டு திட்டாக இரத்தம் உறைந்திருந்ததை அவர்கள் கண்டனர். மர்த்தனியின் உடல் அங்கில்லாதது கண்டு பிலிமதளாவையும் ஆச்சரியப்பட்டார். திடுக்கிட்டார்.

"என்ன? எல்லாம் புதிராக இருக்கிறது!

எங்கே மர்த்தனியின் உடல்?"

விக்ரம ராஜசிங்கன், மிரட்டும் தோரணையில் கேள்வி கேட்பதைக் கண்டு பிலிமதளாவை எரிச்சல் கொண்டார். இவனுக்கென்ன இவ்வளவு வீரமும், திமிரும்? என எண்ணிக் கொண்டவராய் அவன் முகத்தை வெறித்துப்பார்த்தார் எனினும், அவருக்கே அதிர்ச்சியாக இருந்தது? சற்று முன்னர் அவராலேயே குத்திச் சாய்க்கப்பட்ட மர்த்தனியின் சவம் எங்கே மறைந்தது என்று!

"இங்கேதான், இதே இடத்திலேதான் அந்தப் பாதகியை இந்த உடைவாள் கொண்டு பிணமாக்கினேன்!"

என்று பிலிமதளாவை உரக்கக் கத்தினார்.

"கண்டி மாளிகையில் நடப்பது ஒவ்வொன்றும் மர்மக் கதைதான்! அரசனையும், அரசியையும் கொல்ல ஒருத்தி சதி செய்தாளாம்! அவள், இவருக்கு பிரியமுள்ளவளாம்! அவளை இவர் கொன்று விட்டாராம்! செத்துப்போனவள், ஆவியாக அல்லாமல் தனது உடலுடன் சொர்க்கத்துக்குப் போய் விட்டாளாம்! பிலிமதளாவை அவர்களே! இந்தக் கதைகளை எல்லாம் நாங்கள் நம்ப வேண்டும், இல்லையா?"

பண்டாரக வன்னியன், ஏகடியமாக மட்டுமல்ல - எரிமலை போலப் பொங்கிக்கொண்டு இந்தக் கேள்வியைக் கேட்டான்.

பண்டாரகனை முல்லைத் தீவுக்கு அனுப்பி வைக்கும் வரையில் பொறுமையாக இருந்து, பிறகு கண்டி ராஜ்யத்தில் தனது இறுதிக் கட்ட சூழ்ச்சியை வெற்றிகரமாக முடிக்க வேண்டுமென்று திட்டமிட்டுக் கொண்டிருந்த பிலிமதளாவை ஆத்திரப்படாமல் அமைதியாகவே பதில் சொன்னார்.

"ராஜ விசுவாசத்துடன் நான் நடந்து கொண்டதை நம்புங்கள்! இல்லாவிட்டால் 'ஸ்த்ரீஹத்தி' வந்து சேரும் என்றும் கவலைப படாமல் மர்த்தனியை நான் கொன்றிருக்க மாட்டேன். இதோ இந்தத் தங்கக் கிண்ணங்களில் பால் இருக்கிறது பாருங்கள்! இதில் விஷம் கலந்து அரசனுக்கும், அரசிக்கும் கொடுக்கவே மர்த்தனி ஏற்பாடு செய்தாள். அதை நான் தடுத்தேன். அவள் மறுத்தாள். ஆங்கிலேயர்களிடம் பேரம் பேசியிருப்பதாகத் தெரிவித்தாள். என்னைக் கண்டியின் அரசனாக்கி, அவளை அரசியாக்குவதாக ஆங்கிலேயர் வாக்குறுதி அளித்திருப்பதாகச் சொன்னாள். அதற்காக இந்தச் சதியை நிறைவேற்ற வேண்டு மென்றாள். எனக்கு கண்டி ராஜ்யம் தேவையில்லை. கடைசி யாகக் கண் மூடுகிற வரையில் விக்ரம ராஜசிங்கனுக்கு விசுவாசமுள்ள ஊழியனாக இருந்து விட்டுப் போகிறேன் என்றேன். அவளோ, நஞ்சு கலந்த பாலை எப்படியும் அரச னுக்கும், அரசிக்கும் கொடுத்தே தீருவேன் என்றாள். இப்போது தடுத்து நிறுத்தினாலும், எப்போதாவது கொடுத்து அவர் களைக் கொல்லத்தான் போகிறேன் என்றாள். எனக்கு வந்த கோபத்தில் என்ன செய்கிறேன் எனத் தெரியாமலே உடைவாளை எடுத்து அவள் நெஞ்சில் குத்திவிட்டேன்"

அதை நம்ப மறுத்து குருவிச்சி "எல்லாம் பொய்! திறமை யான நாடகம்! அருமையான நடிப்பு!" என்று கத்தினாள்.

"நம்பமாட்டீர்களா? இதோ இந்தப் பாலில் எவ்வளவு பயங்கரமான விஷம் கலந்திருக்கிறாள் என்று பாருங்கள்!" என்று கூறிக் கொண்டே, தங்கக் கிண்ணத்திலிருந்து பாலைத் தரையில் ஊற்றினார். அப்போது அறையின் கோடியில் ஒரு பீடத்தில்

உட்கார்ந்திருந்த பூனைக் குட்டியொன்று ஓடி வந்து அந்தப் பாலை ஆவலுடன் குடித்தது. குடித்துக் கொண்டிருக்கும் போதே சுருண்டு விழுந்து செத்துவிட்டது.

"இப்போதுகூட என்னை நம்பமாட்டீர்களா? உதட்டருகே கொண்டு போனாலேயே உயிரை மாய்க்கும் சக்தி வாய்ந்த விஷத்தைக் கொடுத்து, நான் உயிராக மதிக்கும் அரசனைக் கொல்லுகிற முயற்சியை நான் எப்படி அனுமதிக்க முடியும்? அப்படி நினைத்த ஒரு நீலியை நான் எப்படி உயிரோடு விட்டு வைக்க முடியும்?"

பிலிமதளாவையின் பேச்சில் உண்மையிருக்குமோ என்று கண்டி மன்னன் எண்ணுவதை அவன் முகம் பளிச்செனக் காட்டியது. ஆனால், அந்த சந்தேகத்தை நீடிக்க விடாமல் பண்டாரக வன்னியன், பிலிமதளாவையை நோக்கி "அப்படியானால் உம்மால் கொல்லப்பட்ட அந்த மர்த்தனியின் உயிரற்ற உடல் எங்கே? அதை எங்கே மறைத்துவிட்டீர்? அப்படி மறைக்கவேண்டிய அவசியம் என்ன வந்தது உமக்கு?" என்று கேள்விகளை அடுக்கினான்.

"அந்தச் சண்டாளியின் உடலை நான் மறைக்கவில்லை!"

"பிறகு எங்கே மறைந்தது? யார் தான் மறைத்தார்கள்?" பண்டாரகனின் குரல் கம்பீரமாக ஒலித்தது.

"யாரும் மறைக்கவில்லை! நானேதான் மறைத்து கொண்டேன்!" என்று அந்த அறைக்குள்ளிருந்து ஒரு பெண் குரல் கேட்டது! அது மர்த்தனியின் குரலேதான்!

திகைத்தோர் திரும்பிப் பார்ப்பதற்குள்ளாகவே திரைச் சீலையை விலக்கிக் கொண்டு, ஆடை முழுவதும் ரத்தத்தால் நனைந்த நிலையில் மர்த்தனி வெளிப்பட்டாள்.

"இன்னும் நான் சாகவில்லை! ஓரிரு கணங்கள் உயிரோடிருக்க விரும்புகிறேன்! நான் எதிர்பார்த்தபடி எல்லோரும் வந்து விட்டீர்கள்! வருவீர்கள் என்றுதான் கடைசி மூச்சைக் கையில் பிடித்துக் கொண்டு, இந்தக் கட்டாரியுடன் இந்தத் திரைக்குப் பின்னால் காத்துக் கொண்டிருந்தேன். என் தவறுகளுக்கெல்லாம் முன்னமே மன்னிப்புக் கேட்டுக்

கொண்டிருக்கிறேன். இப்போதும் கேட்கிறேன். என்னை மன்னித்து விடுங்கள் வெற்றிவிழாவை வேதனை விழாவாக ஆக்கிடவேண்டுமென இதோ நிற்கும் இந்த வீணன் விரும்பினான். பிலிமதளாவையை மரியாதைக் குறைவாகப் பேசினால் அதற்காக என்னை அவன் தண்டிக்க முடியாது. இவன் ஏற்கனவே என்னைத் தண்டித்துவிட்டான். கண்டி மன்னரையும், ராணியையும் நான் கொல்லத் துணிந்ததாக இவன் சொல்வது சுத்தப் பொய்! மங்கல விழாவை அமங்கல விழாவாக்கிட மார்க்கமொன்று சொல்லடி என்று என்னைக் கேட்டவன் இவனே! இவன் திட்டத்தை எதிர்த்தேன் - அதனால் என்னைத் தீர்த்துவிட்டு, அவன் லட்சியத்தை நிறைவேற்றிக் கொண்டான்! இதோ என் லட்சியம் நிறைவேறப் போகிறது! ஒரு சிங்களப் பெண், இப்போது ஒரு சிங்கப் பெண்ணாகப் போகிறாள்!"

பேசிக் கொண்டேயிருந்த மர்த்தனி, மின்னலையும் மிஞ்சும் வேகத்தில், கண்டி மன்னனின் இடையிலிருந்த வாளைப் பாய்ந்து எடுத்து, எடுத்த அதே வேகத்தில் அடுத்த விநாடியே பிலிமதளாவையின் நெஞ்சில் குத்தினாள். ஒன்றல்ல - இரண்டல்ல ஆத்திரம் அடங்கும்வரையில் குத்தினாள்! சொல்லப் போனால் அவள் ஆவி அடங்கும்வரையில் குத்திக் கொண்டே கீழே சாய்ந்தாள்!

குருவிச்சி, ஓடிப்போய்! "மர்த்தனி!" என அலறிக்கொண்டே அவள் உடலைத் தாங்கினாள். "சகோதரி! என்னை மன்னித்து விடு! ஒரு பெண் பிராயச்சித்தம் செய்துகொண்டாள்" என்ற கடைசி வாசகத்துடன் மர்த்தனி, பிணமாக - குருவிச்சியின் மடியில் கிடந்தாள்!

சூது, சூழ்ச்சி, சுயமரியாதையை விலை கூறித் தனது சுகத்தைப் பெருக்கிக்கொள்ளும் இழிகுணம், எல்லாமே உருவாய் சுருண்டு கிடப்பது போல் பிலிமதளாவைப் பிணமாக முடங்கிக் கிடந்தார், இரத்த வெள்ளத்தில்!

மனத்தை மாற்றிய மடல்!

69

வெற்றி விழா, வேதனை விழாவிலே முடிவுற்றாலுங்கூட அந்நிய ஏகாதிபத்தியத்துக்குக் கண்டி ராஜ்யம் அடிமையாகி விடவில்லை என்றமன ஆறுதலுடன் பண்டாரகனும், குருவிச்சியும் கண்டியிலேயே தமது படைகளுடன் நீண்ட காலம் தங்கி விட்டனர். எப்படியும் கொழும்பிலிருந்து நார்த் பிரபு கண்டியின் மீது பெரும் பலம் கொண்டு தாக்குவான் என அவர்கள் எதிர்பார்த்து எச்சரிக்கையாக இருந்தனர். பனங்காமம் பகுதியைப் பரிபாலித்து வந்த தனது தங்கை ஊமைச்சி நாச்சியை முல்லைத்தீவின் பாதுகாப்புப் பொறுப்பையும், நிர்வாகப் பொறுப்பையும் சேர்த்து கவனித்துக் கொள்ளுமாறு பண்டாரகன் பணித்திருந்தான். அவனுக்கும் குருவிச்சிக்கும் அவனது படை வீரர்களுக்கும் கண்டியில் நாள்தோறும் சிறப்பு விருந்துதான்! அதுவும் ஆண்டுக் கணக்கில்!

முல்லைத்தீவு நோக்கி ஆங்கிலேயர் முதலில் வரமாட்டார்கள் கண்டியைப் பிடித்தபிறகே அங்கே காலூன்ற முனைவார்கள் என்று கண்டி மன்னனும், பண்டாரக வன்னியனும் எண்ணிய காரணத்தால், பண்டாரகனும் குருவிச்சியும் கண்டியைக் காப்பாற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர்.

அந்த காலகட்டத்தில் பனங்காமத்திலிருந்து ஊமைச்சி நாச்சியார் விடுத்திருந்த மடல் குருவிச்சிக்கு வந்து சேர்ந்தது!

மடலின் முகப்பில் "குருவிச்சி நாச்சியார் மட்டும் தனியாகப் படிப்பதற்கு!" என எழுதப்பட்டிருந்ததால், குருவிச்சி அந்த மடலை மறைத்துக் கொண்டு, கண்டி மாளிகையின் தனியறைக்குச் சென்று கதவைத்தாளிட்டுக் கொண்டு மடலைப் பிரித்தாள்.

"அன்புள்ள குருவிச்சி நாச்சியாருக்கு - எனக்கென்னமோ "அண்ணியாருக்கு" என அழைத்துக் கடிதம் எழுத வேண்டும் போல ஆசை துடிக்கிறது! அந்த ஆசையை நீங்கள் இருவரும் விரைவில் நிறைவேற்ற மாட்டீர்கள் போலிருக்கிறதே! கண்டியில் தோல்வியுற்று மிரண்டோடிய பிறகு ஆங்கிலேயர் அடங்கிக் கிடக்கின்றனர். கொழும்பு நகரில் இப்போதெல்லாம் அவர்கள் கும்மாளம் போட்டுக் கூத்தடிப்பது இல்லையாம். இனிமேல் ஈழத்தில் மட்டுமல்ல, இலங்கையில் எந்தப் பகுதியிலும் படையெடுத்துச் செல்வது என்ற பேச்சுக்கே இடமில்லையென ஆங்கிலேய அதிகாரிகள் முடிவெடுத்து விட்டார்களாம். எனவே, நமது மண்ணை வளைத்திட, கொழும்பில் கூடாரம் அமைத்திருக்கும் வெள்ளையர் கூட்டம் ஒரு கடுகளவு முயற்சியிலும் ஈடுபடாது என்றே நம்பலாம். அதனால் நீங்கள் இருவரும் செய்து கொண்டிருக்கிற சபதத்தை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். உங்களின் வீரம் செறிந்த சூளுரை நிறைவேறிவிட்டதென்றே சந்தேகத்திற்கிடமின்றி கூறலாம். விரைவில் உங்கள் இருவரின் திருமணத்திற்கான ஏற்பாட்டைச் செய்யலாம் அல்லவா? திருமணத்திற்காவது முல்லைத்தீவுக்கு வரலாமா? அல்லது அதையும் கண்டி நண்பரின் தலைநகரத்தி லேயே நடத்திக் கொள்ளப் போகிறீர்களா? வெட்கப்பட்டு "போடீ!" என்று செல்லமாகத் திட்ட வேண்டாம்! வெறுப்புடன் என் மீது சீறவும் வேண்டாம்! வெறுப்பு, உங்களுக்கு அண்ணன் மீது எப்படி இருக்க முடியும்? விரைவில் உங்களிருவரின் இனிய நல்முடிவை எனக்கு நாள் குறித்து அறிவியுங்கள்! அன்புள்ள ஊமைச்சி நாச்சியார்."

கடிதத்தைக் கையில் வைத்துக் கொண்டு குருவிச்சி, பலகணி வழியாக வானத்தையே நோக்கிக் கொண்டிருந்தாள். கடிதத்தின் ஒவ்வொரு வரியும் அவளைச் சிந்திக்க வைத்துக் குழப்பத்தில் ஆழ்த்தின.

ஊமைச்சி நாச்சியார் எழுதியிருப்பதும் உண்மைதானே! கண்டியில் பெருந்தோல்வி கண்ட ஆங்கிலேயர், தமது வாணிபத்தில் நாட்டம் செலுத்திக் கொண்டிருக்கிறார்களே

தவிர, நாடு பிடிப்பதில் இனி ஆர்வம் காட்டுவார்கள் என்று தோன்றவே இல்லை. எனவே பண்டாரகனும், குருவிச்சியும் மேற்கொண்ட சூளுரை வெற்றி பெற்று விட்டதென்றுதானே எடுத்துக் கொள்ள வேண்டும். மனக்கோயில்களில் இரு தெய்வச் சிலைகள்! குருவிச்சியின் நெஞ்சில் பண்டாரகன்! அவனது நெஞ்சிலோ குருவிச்சி! முறையே ஆண்டவன் அம்பாள் சிலைகளாக! அப்படியொரு அன்பு, பாசம், மதிப்பு, அனைத்தையும் மீறிய பக்தி, ஒருவருக்கொருவர்! உடல்கள் உராய்ந்து, தழுவி, களித்துச் சுகித்தால்தானா காதலின் முழுமை! ஒருவரை யொருவர் தூய்மையான அன்பினால் கட்டிப் போட்டிருக்கிறார்களே, அது காதல் அல்லவா?

வானத்தில் ஊர்ந்து கொண்டிருந்த நிலவு, இதுபோல முற்றுப்புள்ளியிட்ட வாசகங்களையும், கேள்விக்குறி பொறித்த வாசகங்களையும் முணுமுணுப்பதுபோல குருவிச்சிக்குத் தோன்றியது!

அவளது அகன்ற நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பின! தங்கநிறத் தாமரை முகம் மலர்வதா - கூம்புவதா எனப் புரியாமல் தடுமாறியது!

ஊமைச்சி நாச்சியார் எழுதியிருப்பது சரிதானே என்ற முடிவுக்கு வந்தவளாக எழுந்தாள், பெருமூச்சுவிட்டவாறு! அந்தப் பெருமூச்சு எவ்வளவு ஆழமானது என்பதை திடீரென விம்மி உயரமான அவளது மார்பகம் காட்டிக் கொடுக்கத் தவறவில்லை!

கடிதத்தைப் பண்டாரகனிடம் கொடுத்தால் என்ன? கொடுக்கலாம் என்று கூறியது "அசரீரி" போல அவளது இதயம்!

வேகமாக எழுந்தாள் எனினும், மெதுவாகத்தான் அங்கிருந்து நடந்தாள். இந்த நேரத்தில் பண்டாரகனும், விக்ரமராஜ சிங்கனும் அரண்மனைத் தோட்டத்தில் உலவிக் கொண்டிருப்பார்கள். மன்னருக்கு நேராக மடலைப் பண்டாரகனிடம் கொடுப்பதா? சே! சே! கூடாது! அங்கே போவோம்! அவர் என்னிடம் வந்து என்னவென்று கேட்பார்! மெல்ல அவரை அழைத்துக் கொண்டு போய், பிறகு அவர் தங்கையின் கடிதத்தை அவரிடம் காட்டலாம்!

அவள் நினைத்தபடியே நடந்தது! இருவரும் ஏதோ பேசிக்கொணடு இடையிடையே சிரித்தவாறு தோட்டத்தில் உலவிக்கொண்டிருந்தார்கள். குருவிச்சி நிற்பதைப் பண்டாரகன் பார்த்துவிட்டான். "என்ன குருவிச்சீ?" என்றான் ஆவலுடன்! பண்டாரகனுடன் இணைந்து நடந்து கொண்டே கண்டி மன்னனும் குருவிச்சியை நோக்கிவந்தான்.

"நீங்கள் பிரமச்சாரி! உங்களுக்குப் பரவாயில்லை! மன்னர் அப்படியா? ராணி எவ்வளவு நேரமாகக் காத்திருக்கிறார்!" என்றுசொல்லிக்கொண்டே "களுக்"என்று சிரித்தாள் குருவிச்சி! அந்தச் சிரிப்பில் சிந்திய ஒளி, வெண்ணிலவின் வெள்ளி ஒளியுடன் போட்டி போட்டு வென்றதை பண்டாரகன் கண்டு மயங்கினான் எனினும், சமாளித்துக் கொண்டான்.

"அடடா! அரசி, காத்திருக்கிறாளா? இதோ போகிறேன்" என்று கூறிக்கொண்டே விக்ரம ராஜ சிங்கன், தோட்டத்தை விட்டு நகர்ந்தான் வேகமாக!

ஆனால் அவன் மனம் அவனைப் போகவிடவில்லை. அரசி காத்திருப்பதாக குருவிச்சி சொன்னது பொய்யாகத் தானிருக்கும். இவள் பண்டாரகனுடன் ஏதோ பேசிக் குலவுவதற்காக என்னைத் துரத்தியிருக்கிறாள். இருக்கட்டும். இவர்கள் விளை யாட்டை நான் கண்டுபிடித்து இவர்களைத் தோட்டத்திலிருந்து வெட்கியோடச் செய்கிறேன். மனத்தின் யோசனைக்கு மறுப்பு சொல்லாமல் அடர்ந்த செடி கொடிகளுக்குப் பின்னால் அரசன் மறைந்து கொண்டான்.

"என்ன குருவிச்சி? எங்கே வந்தாய், திடீரென்று?"

"வரக்கூடாதா?"

"யார் சொன்னது அப்படி? இவ்வளவு நாட்களாக இந்த அரண்மனையில் இருக்கிறோம். ஒரு நாளிலாவது இரவு நேரத்தில் என்னைக் காண்பதற்கு நீயோ, அல்லது உன்னைக் காண்பதற்கு நானோ வந்தது இல்லையே!"

"இன்றைக்கும் வருவதாக இல்லை! ஆனால் வரும்படியாக ஒரு கடிதம்!"

"கடிதமா? நானா? உனக்கு எழுதினேனா?"

"ஏன் பதறுகிறீர்கள்? எழுதியதே இல்லையா? நான் சொல்லுகிற கடிதம் நீங்கள் எழுதியது இல்லை!"

"பிறகு யார் எழுதியது?"

"ஊமைச்சி நாச்சியார் - உங்கள் தங்கை எழுதியது!"

"என்ன நடந்ததாம்? ஏதாவது முல்லைத்தீவில் பிரச்சினையா?"

"பிரச்சினை சாதாரணமானதல்ல! கொஞ்சம் பயங்கரம் தான்!"

"அப்படியா? நான் அப்போதே நினைத்தேன், பனங்காமம், முல்லைத்தீவு இரண்டு பகுதி பொறுப்புகளையும் ஊமைச்சி நாச்சியார் கவனிக்க முடியுமா என்று! நீதான் போக மறுத்து விட்டு இங்கேயே இருந்துவிட்டாய்!"

"தெருவில் தொலைவில் இருந்து தரிசனம் செய்கிற உரிமை நந்தனுக்குக்கூடத் தரப்பட்டதே, அந்த உரிமை எனக்குக் கிடை யாதா?"

"என்ன? பேச்சு ஒரு மாதிரி திடீரெனத் திசை மாறுகிறது?"

"என் குற்றமல்ல அது! இந்தக் கடிதத்தின் குற்றம்! இதோ, உங்கள் தங்கை எழுதிய மடல்!"

"உன் பார்வைக்கு மட்டும் எழுதியிருக்கிறாள்!"

"என் பார்வையில் உங்கள் பார்வையும் இல்லையா?"


பண்டாரகன், குருவிச்சியை ஒரு மாதிரி பார்த்துக்கொண்டே கடிதத்தைப் பிரித்தான். நாலைந்து நாட்களுக்கு முன்பு எழுதப்பட்டதாகத் தேதியிருக்கிறதே என்றவாறு எழுத்துக் களில் விழிகளை ஓட்டினான். " இன்றுதான் என் கையில் கிடைத்தது" என்று பதில் அளித்துக்கொண்டே - நாணமிகுதியால் விழிகளைத் தனது பாதப் பெருவிரல்கள் மீது செலுத்தினாள் குருவிச்சி! ஊமைநாச்சியின் கடிதத்தைப் படித்தபிறகு தனக்கு ஏற்பட்ட மனமாற்றம் பண்டாரகனுக்கும் ஏற்பட்டே தீரும்! தோட்டத்தில் யாருமில்லாத காரணத்தால் திடீரென ஓடிவந்து தழுவிக்கொண்டாலும் கொள்வான்! அய்யோ, நிலவு வெளிச்சம் வேறு பகல் போல் இருக்கிறதே - குருவிச்சியின் இதயத் துடிப்புகள், அவள் காதுகளிலே கேட்கிற அளவுக்கு உரக்க

ஒலித்தன. அவளால் அவனை நிமிர்ந்து நோக்க முடியவில்லை. அது அவளுக்கு மேலும் வெட்கமாக இருந்தது.

ஒருவரையொருவர் நிமிர்ந்து நோக்கி பார்த்தவாறு எத்தனையோ களங்களைப் பற்றிப் பேசியிருக்கின்றனர் – எத்தனையோ போர்த்திட்டங்களை வகுத்திருக்கின்றனர்! ஆனால் இப்போது? குருவிச்சி, தனது கால் விரல் மீது பதித்த பார்வையை விலக்காமல் குனிந்து நின்றாள்!

அந்தக்கால் விரல் நுனியில் காயம் ஏற்படுகிற அளவுக்கு அந்தக் கடிதம் வேகமாக வந்து விழுந்தது! மடலின் கனமான உருளைபட்டுக் கால் விரலில் ரத்தம் கசிந்தது! அதைப் பொருட்படுத்தாமல், குருவிச்சி நாச்சியார், பண்டாரக வன்னியனை வியப்புடன் நிமிர்ந்து பார்த்தாள்.

தோட்டத்தில் கேட்ட ஒலி!



"உன்னுடைய ஏற்பாடு மிகவும் பிரமாதம்! என் தங்கை ஊமைச்சி நாச்சியாரைக் கருவியாகப் பயன்படுத்திக் கொண்டு, இந்தக் கடிதம் மூலம் தொடங்கிவிட்டாய் உன் நாடகத்தை!"

நிலவொளி பட்டுக் குளிர்ந்து காணப்பட வேண்டிய பண்டாரகனின் முகம் நெருப்புச் சுடராய் தோற்றமளித்ததைக் கண்டு குருவிச்சி நடுங்கிப் போனாள். அவளது கால் விரலில் கசிந்த ரத்தத்தைக் கண்டு விட்ட பண்டாரகன், அதற்குமேல் எதுவும் பேசாமல் உடனே தனது மேலங்கியின் ஒரு முனையைக் கிழித்துப் பரபரப்புடன் அந்தக் காயத்தில் சுற்றினான். முகத்தில் தான் தீப்பிழம்பு - அகத்தில் சந்தனக் குழம்பு என்பதைப் புரிந்துகொண்ட குருவிச்சி, "என்னை மன்னித்து விடுங்கள்!" என்றாள். வீரம் கொப்பளிக்கும் அவன் நெஞ்சத்தில் ஈரமும் அந்த அளவுக்கு உண்டு என்பதை அவள் அறியாதவளா?

"நிற்காதே! உட்கார்!" என்று அவள் தோளைப் பிடித்து அழுத்தி, அங்கிருந்த அழகிய வேலைப்பாடுடன் கூடிய கருங்கல் ஆசனத்தில் அமர்த்தினான்.

"நீங்கள் நிற்கிறீர்களே?"

"ஏன்? நானும் உன் பக்கத்தில் அமர்ந்து கொள்ள வேண்டுமா? தாலியும் தயார் செய்துகொண்டு வந்துவிட்டாயாக்கும்!"

"ஏன் இப்படிச் சீற வேண்டும்? தங்கச்சி எழுதிய கடிதம்! உங்களிடம் அதைக் கொடுக்காவிட்டால் பிறகு கோபித்துக் கொள்ள மாட்டீர்களா?"

"தங்கச்சியே எழுதினாள் என்று நீ சொல்வதை நான்

நம்புகிறேன். இந்தக் கடிதத்தை நீ படித்ததும் என்ன செய்திருக்க வேண்டும்! நீயே கிழித்துக் கொளுத்திப் போட்டிருக்க வேண்டாமா?"

"உங்கள் மனதில் உள்ளதைத் தெரிந்துகொள்ளாமல் நான் எப்படி அவசரப்பட்டிருக்க முடியும்?"

"இத்தனை காலம் பழகி என் மனதில் உள்ளதை நீ தெரிந்து கொள்ளவில்லை என்பது நம்பமுடியாத ஆச்சரியம்!"

"நமது இலட்சியம் பெருமளவு ஈடேறி விட்டது என்று..."

"என் தங்கை கருதுகிறாள்! அதனால் கடிதம் எழுதுகிறாள்! நீ நம்புகிறாயா, நமது இலட்சியம் ஈடேறிவிட்டதென்று? கொழும்பில் கூடாரம் போட்டிருக்கும் கொழுப்பெடுத்த வெள்ளைக்காரன் இனிமேல் நம்மைத் திரும்பியும் பார்க்க மாட்டான் – நம் மிடம் வம்புக்கு வரமாட்டான் – நமது மண்ணில் வாலாட்ட மாட்டான் – அவனுண்டு அவன் வாணிபம் உண்டு என்று வாயைப் பொத்திக் கொண்டு கிடப்பான் என்றெல்லாம் என் அப்பாவித் தங்கை நம்புகிறாள்! அவ்வளவு பெரிய தமிழகத்திலேயே கப்பலில் வந்த வியாபாரி இன்றைக்குத் தமிழ் மன்னர்கள் கப்பம் செலுத்த வேண்டுமெனக் கட்டளை யிடுகிறான்! தமிழ்நாடு முழுதும் ஆங்கிலேய ஆதிக்கம் பரவிக்கொண்டிருக்கிறது! அதனுடன் ஒப்பிடும்போது இந்தத் தீவு கடுகளவுதான்! ஆனால் கடுகு சிறுத்தாலும் காரம் போகாதென்று கடுமையாக எதிர்த்துக் கொண்டிருக்கிறோம் – வெள்ளைக்காரன் பயந்துவிட்டான் என நினைப்பது தவறு! பதுங்கியிருக்கிறான் அவ்வளவுதான்! எந்த நேரத்திலும் அவன் படைகள் நம்மீது பாயக்கூடும். என்ன, நான் சொல்வது புரிகிறதா?"

"தங்களின் கணிப்பு சரியானதாகவும் இருக்கலாம். அல்லது என்னைத் தட்டிக்கழிக்கும் தந்திரமாகவும் இருக்கலாம்!"

"சே! நாட்டுப் பற்றுக்கு நீ விடை கொடுத்துவிட்டாய்! உடல் பசியென்பது உன்னைக் காட்டுத் தீ போலப் பற்றிக் கொண்டு விட்டது! குருவிச்சி! உன்னிடம் நான் இந்த மாற்றத்தை எதிர் பார்க்கவே இல்லை!"

"என்னை இவ்வளவு கேவலமாக எண்ணிடுவீர்கள் என்று நானும் எதிர்பார்க்கவில்லை. எனது இலட்சியத்துக்கு வலு வளிப்பது உங்களைப் பற்றிய நினைவுதான் என்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் என்னைப் பார்த்து "உடற்பசிக்காரி" என எவ்வளவு சீக்கிரம் சொல்லி விட்டீர்கள்!"

"பிறகென்ன! கணவன் ஏற்றுக்கொண்டிருக்கிற பொறுப் பான கடமையில் அவன் மனம்போல நடந்துகொண்டு, அவனது முயற்சிகள் வெற்றி பெற, எள் முனையளவு இடையூறுமின்றி ஒத்துழைப்பு தருவதுதானே உண்மையான ஒரு மனைவியின் கடமை!"

"கணவன் என்கிறீர்கள்! மனைவி என்கிறீர்கள்! அந்தத் தகுதியை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்கிறேன்! நீங்களோ அந்தத் தகுதியை எனக்கு வழங்க மறுக்கிறீர்கள்! பிறகு எங்கிருந்து வந்தது கணவன் மனைவி உறவு?"

குருவிச்சியின் இந்தக் கேள்வியில் பண்டாரகன் திக்கு முக்காடித் திகைத்துப் போனான்.

"சரியான கேள்வி! என் நண்பனைச் சவுக்கால் அடித்தது போன்ற கேள்வி! சபாஷ் குருவிச்சி, சபாஷ்!"

என்று கலகலவென சிரித்தவாறு விக்ரமராஜ சிங்கன் அங்கே விரைந்து வந்தான்.

"நீ இங்கேயா இருக்கிறாய்?" என்று வியப்புடன் முகம் சிவந் தான் பண்டாரகன்!

"ஏற்கனவே கோபமாக இருக்கிறாய்! இன்னும் கொஞ்சம் கொந்தளிக்காதே!" என்று கூறிக் கொண்டே, அருகில் வந்த கண்டி மன்னன் அவனைத் தழுவிக் கொண்டான். குருவிச்சி நாச்சியார், வீர மங்கைதான் எனினும், விஷயம் காதலின் உச்ச கட்டத்தைப் பற்றியதால் தலைகுனிந்து நின்றாள்.

"நண்பா! எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டுதானிருந்தேன். ராணி என்னைத் தேடிக் கொண்டிருப்பதாகக் குருவிச்சி சொன் னதை நான் நம்பவில்லை. புரியாத புதிர்களாக இருக்கும் உங்க ளிருவரையும் பற்றி இன்றைக்கு எப்படியும் புரிந்துகொள்ள ஒரு வாய்ப்பு கிடைக்கும் என்றே மறைந்திருந்தேன்."

"மண்ணாளும் மகராசனுக்கு இப்படி ஒரு புத்தி

இருக்கக்கூடாது!"

"புத்தியே இருக்கக்கூடாது என்று கூடச் சொல்வாய்! சொல்லிவிட்டுப் போ!' அதைப்பற்றி எனக்கு கவலை இல்லை! ஆனால் ஒன்று! எனது சுக துக்கங்களுக்காக அல்லும் பகலும் அக்கறை கொண்டுழைக்கும் ஓர் இனிய நண்பனின் இல் வாழ்க்கை இனிதாக அமைய வேண்டுமெனக் கவலைப்பட எனக்கு உரிமை உண்டு என்பதை உன்னால் மறுக்க முடியாது!"

"விக்ரமா! நானும் குருவிச்சியும் உடல்களால் இருவரே தவிர உயிரால், உன்னதமான இலட்சியத்தால் ஒருவரே என்பதை நீ அறியமாட்டாயா?"

"உடலாலும் ஒருவராய் இருந்தால் என்ன? உடலால் ஒருவரானால் உயிரால் இருவராகிவிடுவீர்களா? உடலால் ஒருவர் என்பது எப்போதுமா? எப்போதாவதுதானே!"

குருவிச்சிக்கு வெட்கம் தாங்க முடியவில்லை. திரும்பிக் கொண்டு, வானத்து நிலவைப் பார்த்தாள்.

"ஓகோ! நீங்கள் எல்லோருமே சேர்ந்து நீண்ட நாளாகத் திட்டம் போட்டிருக்கிறீர்கள். என் தங்கையைப் பிடித்து கடிதம் எழுதச் செய்து, அந்தக் கடிதத்தில் தொத்திக்கொண்டு என் கழுத்துக்குக் கத்தி வைக்கிறீர்கள்!"

"இதில் உன் கழுத்துப் பிரச்சினையே எதுவுமில்லை! குருவிச்சியின் கழுத்தைப் பற்றித்தான் பிரச்சினை! உன் கையால் அணிவிக்கப்படும் தாலிக்காக எழுந்துள்ள பிரச்சினை!"

"விக்ரம ராஜசிங்கனுக்கு எல்லாமே விளையாட்டுத்தான்! தற்காலிகமாகக் கிடைத்துள்ள வெற்றிகளால் தடுமாற்றம் அடைந்துள்ளீர்கள்! வெள்ளைக்காரன், இனிமேல் நமது மண்ணை ஆதிக்கம் செலுத்திட முற்படமாட்டான் என்று யார் ஆரூடம் கணித்தது? ஆயிரம் நரிகளின் மூளை ஒரு ஆங்கிலேயன் தலையில் என்பதை மறந்து விடாதீர்கள்! நாடு பிடிக்கும் வெறியுடன் அலையும் அந்தக் கேடு கெட்டவர்கள் ஓடிவிட்டார்கள் இந்தத் தீவைவிட்டு என முடிவுரை எழுதுகிற வரையில் உமது உரை எதுவும் தெளிவுரையாக எனக்குப் படவில்லை. என் நண்பனுக்குக் குருவிச்சியின் மீதுள்ள அனுதாபத்தை விட, என் தங் கைக்கு, இவள் மீதுள்ள பாசத்தைவிட என் அன்பு ஒன்றும் குறைந்ததல்ல! இந்த மண்ணின் முழுமையான சுதந்திரம்

பழுதின்றி அமையும் வரையில் இருவரும் இல்லற உறவு கொள்வதில்லை என்று சூளுரை மேற்கொண்டிருப்பதை எப்படித்தான் என் குருவிச்சி மறந்தாள் என்று எனக்குத் தெரியவில்லை!"

பண்டாரகன், குரல் தழுதழுக்க இதைச் சொன்னவுடன், குருவிச்சி ஓடிவந்து அவன் காலைப் பிடித்துக் கொண்டு "தயவு செய்து என்னை மன்னித்துவிடுங்கள்" என்று கண் கலங்கினாள். அவளது கைகளைப் பற்றி பண்டாரகன் ஆறுதல் கூறினான்.

"சரி! சரி! எழுந்திரு! இதில் மன்னிப்பதற்கு எதுவுமில்லை! இளமையின் துடிப்பு!"

"நீ மட்டும் முதிர்ந்த கிழவன்! உணர்ச்சிகளற்ற மரம்! இல்லையா?" என்று மடக்கினான் விக்ரமராஜ சிங்கன்.

"விக்ரமா! இப்போது என்னை என்னதான் செய்யச் சொல்லுகிறாய்?"

"பண்டாரகா! அப்படி வா என் பாதைக்கு! ஒன்றும் வேண்டாம்! எனக்கு ஒரு ஆசை! உங்களிருவரையும் மணக்கோலத்தில் பார்க்க வேண்டும்!"

"பிறகு?"

"பிறகு உங்களிஷ்டம்! உங்களை மணக்கோலத்தில் பார்த்தால் மட்டும் போதும்!"

"சரி! நண்பனின் விருப்பத்தை நிறைவேற்றுகிறேன்! ஆனால் ஒன்று, எங்கள் லட்சியம் முழுமையாக நிறைவேறும் வரையில் நாங்கள், கல்யாணமாகியும் பிரமச்சாரிகள்தான்!"


"அது போதும் எனக்கு!" என்று துள்ளிக் குதித்தான் விக்ரம ராஜ சிங்கன்.

"திருமண ஏற்பாடுகளை நாளைக்கே தொடங்குகிறேன்" என்றான்.

"முதலில் என் தங்கைக்குச் செய்தி அனுப்பிவிடுக" என்று கூறிக் கொண்டே குருவிச்சியைப் பார்த்து இதழோரப் புன்னகையை நெளிய விட்டான்.

மூவருமே மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர். "இப்போதுதான் என் மனம் நிம்மதியடைந்தது" என்று விக்ரம ராஜ சிங்கன் பெரு மூச்சு விட்டபோது கண்டி அரண்மனையில் முரசம் பேரொலியுடன் அதிர்ந்தது. ஏதாவது ஆபத்தானதும் அவசரமானதுமான செய்தி என்றால் எந்த நேரத்திலும் அந்த முரசு ஒலிப்பது வழக்கம்.

இன்பம், இமைப்பொழுது!



முரசொலியைத் தொடர்ந்து என்ன செய்தி வரப்போகிறது என்று மூவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு அந்த அழகிய பூங்காவிலிருந்து அரண்மனை நோக்கி நடந்தனர். அவர்கள் அரண்மனைத் தாழ்வாரத்தை நெருங்குவதற்குள்ளாக கண்டியின் வீரர்களும் முல்லைத்தீவின் வீரர்களும் மிகுந்த பரபரப்புடன் நாலாப்பக்கமும் படைக் கலன்களைத் தாங்கிய கைகளுடன் ஓடிவந்து குழுமினர். வீரர்கள் புற்றீசல் போலப் புறப்பட்டதைக் கண்டு மகிழ்ந்தும், தனது மன்னவர் வருவதைக் கண்டு புத்துணர்வு கொண்டும் - கோட்டை முகப்பில் முரசறைந்து கொண்டிருந்தவன் ஓடோடி வந்து அந்த மூவரின் எதிரிலும் வணங்கி நின்றான்.

"என்ன நடந்தது?" என விக்ரம ராஜ சிங்கன் அவனைப் பார்த்து சிங்கத்தைப் போல் கர்ச்சனை செய்தான்.

"கொழும்பிலிருந்து பிர்மாண்டமான ஆங்கிலேயப் படைகள் புறப்பட்டிருக்கின்றனவாம். கண்டியை நான்கு புறமும் சுற்றி வளைப்பதென்றும், அதே நேரத்தில் முல்லைத் தீவையும் நான்கு திசைகளிலும் சுற்றி வளைக்கப் படையை அனுப்புவதென்றும் கொழும்பில் திட்டம் தீட்டப்பட்டு, அவ்வாறே ஆங்கிலேயப் படைகள் புறப்பட்டுவிட்டன."

முரசறைந்த வீரன், இந்தச் செய்தியைச் சொன்னதும் ஆத்திரம் கொப்பளிக்க பண்டாரக வன்னியன், "என்ன?" என்று கொதித்தெழுந்தான்.

"முல்லைத் தீவின் படை வீரர்கள் கண்டியைக் காப்பாற்ற உடனடியாக வியூகம் வகுத்து எல்லைப் பகுதிகளுக்குச்



செல்லுங்கள்!"

என்று பண்டாரகன் விடுத்த ஆணையை விக்ரம ராஜ சிங்கன் ஏற்றுக்கொள்ளவில்லை.

"நண்பா! நம் இரு நாடுகளில் எந்த ஒரு நாடு ஆங்கிலேயர் களின் வசப்பட்டாலும் அதைத் தொடர்ந்து மற்றும் ஒரு நாடு அவர்களால் அழிக்கப்பட்டே அடிமைப்பட்டு விடும். அதனால் கண்டியைக் காப்பாற்றிக் கொள்ள நானும் எனது நாட்டு வீரர்களும் களம் காணுகிறோம்! நீ தயவு செய்து உடனே உனது வீரர்களுடன் முல்லைத் தீவுக்குப் புறப்படு! ஆங்கிலேயப்படை முல்லைத்தீவை நெருங்குவதற்குள் உனது வீரர்கள் அவர்களை எதிர்ப்பதற்குத் தயாராக முல்லைத்தீவின் எல்லைகளுக்குப் போயாக வேண்டும்."

விக்ரமராஜ சிங்கன் சொன்ன கருத்து ஏற்கக் கூடியதுதான் என்று பண்டாரகனுக்குத் தெரிந்தாலும் கூட, கண்டியை விட்டு விட்டுச் செல்வதற்கு ஏனோ அவனுக்கு மனமில்லை.

"விக்ரமா! நாம் எப்படியோ அலட்சியமாக இருந்துவிட்டோம்! தோற்றோடிய அந்நியர் மீண்டும் நம் மீது வஞ்சினம் கொண்டு வளைக்கக் கூடும் என நினைத்தோமே தவிர, அதற்கான தற் காப்பு ஏற்பாடுகளைச் செய்து கொள்ளாமலேயே இருந்துவிட்டது பெருந்தவறு!"

"பண்டாரக வன்னியன் முகத்தில் முதன் முதலாக கலக் கத்தின் சாயலைக் காணுகிறேன்."

"கலக்கமில்லை! கண்டியைக் காப்பாற்றும் கடமையிலிருந்து என்னை விலகச் சொல்கிறாயே, அதை எண்ணித்தான் சற்று தயங்குகிறேன்."

"தயக்கமே கூடாது! நான் சொல்வதைக் கேள்! நீயும் குருவிச்சியும் முல்லைத் தீவின் படைகளுடன், இங்கிருந்து விடியற்காலை புறப்பட்டாக வேண்டும்!"

"அது ஏன் விடியற்காலை? புறப்படுவதென்றால் இப்போதே புறப்படவேண்டியதுதானே!"

"அதற்குள் ஒன்றும் தலை போய்விடாது! நீயும் குருவிச்சியும் என் கண்முன்னால் மணமக்களாகக் காட்சி தரவேண்டும் என்று

கூறினேனே, அந்த ஆசை நிறைவேற வேண்டாமா?"

"என்ன விக்ரமா இது? எதிரிகள் எனது நாட்டையும் உனது நாட்டையும் சுற்றி வளைக்க வருகிறார்கள் எனச் செய்தி வந்துள்ளது! இப்போது தான் இப்படியெல்லாம் விளையாடு வதா?"

"வா இங்கே, உன்னுடன் தனியாக இரண்டு வார்த்தை பேச வேண்டும்!"

என்றவாறு பண்டாரக வன்னியனை, விக்ரம ராஜ சிங்கன் காற்றிலாடிக் கொண்டிருந்த பட்டுத் திரைக்குப் பின்னால் அழைத்துச் சென்றான்.

"என்ன ரகசியம் விக்ரமா?"

"ஒன்றுமில்லை! யுத்தம் என்று வந்துவிட்டால் நாமோ அல்லது எதிரியோ இரு சாராரில் ஒரு சாரார் சாவைத் தழுவித்தான் தீர வேண்டும்! நமது பலத்தை முற்றிலும் கணக்கிட்டுக் கொண்டி ருக்கிற ஆங்கிலேயர் இந்த முறை நம்மீது சாதாரணமாகமோதமாட்டார்கள். அதனால் நானோ அல்லது என் உயிர் நண்பனாகிய நீயோ இந்தப் போரில் பலியாகப் போவது என்னமோ உண்மை என்றே எனக்குத் தோன்றுகிறது! இந்த நேரத்தில் என் நெஞ்சைத் துளைத்துக்கொண்டுள்ள விருப்பத்தை நீ நிறைவேற்றியே தீர வேண்டும்."

"விபரமாகச் சொல்! நீ எங்களை மணக்கோலத்துடன் பார்க்க வேண்டும், அவ்வளவுதானே?"

"மணக்கோலத்துடன் பார்ப்பது மட்டுமல்ல, அந்தக் குருவிச்சி, தனது நெஞ்சில் எவ்வளவு ஆசைகளைப் புதைத்துக் கொண்டு துடித்துக் கொண்டிருக்கிறாள் என்பதை என் ராணி சொல்ல நான் தெரிந்து வைத்திருக்கிறேன்!"

"அதனால்?"

"அதனால் ஒன்றுமில்லை! அமங்கலமாக ஏதோ உளறு கிறேன் என்று எண்ணக்கூடாது! உன்னையே தெய்வமாக நினைத்து உருகிக் கொண்டிருக்கும் அந்த உத்தமியுடன் இந்த ஓர் இரவு இன்ப இரவாக நகரட்டும்! விடியற்காலை போர்

முனைக்குப் புறப்படுவதற்கு முன்பு, குருவிச்சியின் வாழ்வில் ஒரு விடியல் ஏற்படட்டும்! அது குருவிச்சிக்குக் கிடைக்கும் ஒருநாள். ஆம்! ஒரே ஒரு நாள் இன்பமாக இருந்தாலும் பரவாயில்லை! அவள் மனம் ஆறுதல் அடைந்தது என்றால் எனக்குக் களச்சாவு கூட பிறகு மிக மிக அற்பமானதுதான்! நண்பா! அருள்கூர்ந்து எனக்காக, உன் நண்பனின் வேண்டு கோளுக்காக - குருவிச்சியின் நீண்ட காலக் கனவை நினை வாக்கிடுக!"

பண்டாரக வன்னியன், தன்னை மறந்து அசையாமல் அப்படியே நின்றான்.

"என்னதான் இலட்சியப் பெண்ணாக இருந்தாலும், இளமையின் தாக்குதல் அவளை ஆட்டிப் படைத்திருக்கிறது. அதனால்தான் கண்டி ராணியிடம் தனது உள்ளத்து அலை களை யெல்லாம் கொட்டித் தீர்த்திருக்கிறாள். கண்டி மன்னன் சொல்வதைப் போல இந்தப் போராட்டத்தில் நானோ அல்லது குருவிச்சியோ களத்தில் கொல்லப்பட்டு விட்டால், ஏ அப்பா! எவ்வளவு ஆசைகளைக் குருவிச்சி தன்னோடு சுமந்து கொண்டு செல்ல வேண்டியிருக்கும்!"

பண்டாரகனின் உள்மனம் இவ்வளவு பேசிற்று! கண்டி மன்னனை அவன் நிமிர்ந்து பார்த்தான்! பண்டாரகன் புன்னகை ததும்பத் தன்னை நோக்குவதை விக்ரம ராஜ சிங்கன் மகிழ்ச்சி யுடன் கவனித்தான்.

மன்னனின் தோளில் கை வைத்து அழுத்தியவாறு "சரி! எல்லாம் மன்னரின் உத்திரவுபடி நடக்கட்டும்!" என்று கூறினான் பண்டாரகன்.

அடுத்த கணமே அவனைத் தழுவிக் கொண்டு ஆனந்த வெள்ளத்தில் மிதந்தவாறு அரண்மனை அந்தப்புரத்தை நோக்கி நடந்தான்.

"ராணீ! யுத்தம் நமது நாட்டையும் முல்லைத்தீவையும் நோக்கி வருகிறது என நீயும் கேள்விப்பட்டிருப்பாய்! கண்டியைக் காத்திட நமது படைகள் தயார்! முல்லைத்தீவைக் காத்திட

பண்டாரகனும் குருவிச்சியும் விடியற்காலை படைகளுடன் புறப்பட இருக்கிறார்கள்!

அதற்குமுன்பு நீயும் நானும் ஏற்கனவே பேசிக்கொண்டிருந்த திட்டத்தை இப்போதே அவசர அவசரமாக நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கிறது!"

"தங்கள் ஆணை எதுவோ அதற்கு நான் காத்திருக்கிறேன்!"

"பண்டாரகனும் குருவிச்சியும் வெறும் மலர்களை மாற்றிக் கொள்ளக் கூடாது, முத்தாரங்களை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று சொன்னேனே, நினைவிருக்கிறதா?"

"நினைவில்லாமலா அந்த மாலைகளை எப்போதோ தயாரித்துப் பேழையில் வைத்துப் பூட்டியிருக்கிறேன்!"

என்று கூறிக்கொண்டே, ராணி ஓடிச் சென்று ஒரு வெள்ளிப் பேழையை எடுத்து வந்து, கண்டி மன்னன் கையில் கொடுத்தாள்.

பேழையைத் திறந்து அதிலிருந்த மாலைகளை எடுத்து பண்டாரகன் கையில் ஒன்றும் குருவிச்சியின் கையில் ஒன்றும் அளித்து,

"இப்போது எங்களின் அன்பான இதய வாழ்த்துக்களுடன் மாலை மாற்றிக்கொள்ளுங்கள்!"

என்று மகிழ்ச்சி பொங்கிட வேண்டிக் கொண்டான் விக்ரம ராஜ சிங்கன்.

என்னதான் நடக்கிறது என்று பார்ப்போமே என்ற ஆவலுடன் –குனிந்த தலை நிமிராமல் சிலைபோல நின்றாள் குருவிச்சி! அந்தப்புற அறையில் எரிந்து கொண்டிருந்த விளக்கின் மஞ்சள் நிற ஒளியில் அவளது மெல்லிதழ்களில் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த குறுநகை இருகுன்றுகளுக்கிடையே எழுந்த இன்ப ஜோதியாகக் காட்சியளித்தது.

"உம்! நடக்கட்டும்!"என்றான் கண்டி மன்னன் கட்டளையிடும் தோரணையில்!

பண்டாரகன், குருவிச்சியின் கழுத்தில் முத்துமாலையை அணிவித்தான். அருகில் இருந்த ராணி, குருவிச்சியை அரவணைத்தவாறு அவள் கையிலிருந்த முத்துமாலையைப் பண்டாரகன் கழுத்தில் அணிவிக்கச் செய்தாள்.

"எங்களுக்காகக் காத்திருக்கும் பால் பழம் எல்லாம் இப்போது உங்களுக்கே! வா ராணி போகலாம்!"

என்றவாறு, அறையின் கதவைக் கண்டி மன்னன் சாத்திக் கொண்டு கிளம்பினான். "விக்ரமா! என்ன இது?" என்று மன்னனின் கையைப் பிடித்து இழுத்தான் பண்டாரகன்.

குருவிச்சியும், ராணியின் பின்னால் மறைந்து கொண்டு வெளியே நழுவப் பார்த்தாள்.

ஆனால் இருவரும் அதற்கு இடம் தரவில்லை. பண்டாரகனை விக்ரமனும், குருவிச்சியை ராணியும் அந்த அறைக்குள்ளே தள்ளிக் கதவைச் சாத்தினர்.

கண்டி மன்னன், கதவைச் சிறிது திறந்து பண்டாரகனைப் பார்த்து,

"விடியற்காலை வந்து எழுப்புகிறேன்" எனக் கூறிவிட்டு, கதவின் வெளிப்புறத்தைப் பூட்டிக் கொண்டு போய்விட்டான்.

எத்தனையோ களங்கள் பற்றியும், எதிரிகளை எப்படி மடக்குவது என்பதுபற்றியும், மனம்விட்டுத் தாராளமாகப் பேசிக் கொண்டிருந்த காலம் போய் - இப்போது அந்த அறையில் பண்டாரகனும், குருவிச்சியும் ஊமைப் பதுமைகளாய் மூலைக்கு ஒருவராக முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தனர்.

என்ன இது? ஏன் இப்படி? இதைப் பற்றி யார் முதலில் கேட்பது? இருவர் உள்ளத்திலும் இப்படியொரு போராட்டம்!

மன்னன், தனது அந்தப்புரத்தையே இருவரின் மணவிழா மேடையாகவும் முதல் இரவுக் கூடமாகவும் ஆக்கிக் கொடுத்திருக்கிறான் என்றால், அவனுக்குத்தான் பண்டாரகனிடம் எவ்வளவு ஆழமான நட்பு! குருவிச்சியிடம் எவ்வளவு தூய்மையான அன்பு!

கண்டி மன்னனின் இனிய இயல்பை எண்ணியவாறு இருவரும் அமர்ந்திருந்தனர்.

சரி, யாராவது ஒருவர் முதலில் பேசி மௌனச் சூழலை உடைத்தெறிய வேண்டாமா? குருவிச்சியே முதலில் பேசுவ தென்று துணிந்து விட்டாள்.

"முல்லைத்தீவை நோக்கிப் பகைவர்கள்! இங்கே முகத்தைக்

கவிழ்த்துக் கொண்டு நாம் இருவரும்! இதெல்லாம் என்ன வேடிக்கை?"

"எல்லாம் நீ செய்த வேடிக்கைதான்! காதல் பூகம்பத்தால் வெடித்துவிடும் இருதயம் என்று ராணியிடம் சொல்லியிருக்கிறாய்! ஏன், என்னிடமே சொன்னாயே! அதனால் விளைந்த விபரீதம்தான் எல்லாம்! விரோதிகளை எப்படி வீழ்த்துவது என்று வியூகம் வகுத்திட வேண்டிய வேளையில் விரகதாபத்திற்கு விடை காண்பது எப்படியென விழித்துக் கொண்டிருக்கிறோம்!"-

"மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டுவிட்டேன் என் தவறுக்கு! தங்கள் தங்கை ஊமைச்சி நாச்சியார் எழுதிய கடிதத்தால் என் மனத்தில் ஊசலாட்டம் ஏற்பட்டது உண்மை! ஆனால் அதனை ஒரு நொடியில் சமாளித்து விட்டேன் உங்கள் அறிவுரை கேட்டு! இப்போதும் சொல்கிறேன். மன்னரின் ஆசைப்படி மணக் கோலம் பூண்டுவிட்டோம்! அது போதும் எனக்கு! காலையில் களம் காணப் போர்க்கோலம் பூணத் தயாராக இருக்கிறேன் நான்!"

அழுத்தம் திருத்தமாக குருவிச்சி நாச்சியார் இதைச் சொன்னாள் எனினும், ஏனோ தெரியவில்லை அவள் கண்கள் கலங்கின!

அதைக் கவனித்துவிட்ட பண்டாரகன், அவளிடம் வேகமாக நடந்து வந்தான்.

"குருவீ! காலையில் களம் காணப் போர்க் கோலம் பூணப் போகிறாய். உண்மை! காலையில் காணப் போவது போர்க்களம்! இதோ இப்போது போகக் களம் காண்போம் வா!"

என்று அவளை இறுக அணைத்துக் கொண்டான். இருவரும் சேர்ந்து கட்டிலில் விழுந்தனர்! எத்தனையோ நாட்கள் தொலைவில் இருந்து பார்த்து துடித்தும் - நெருக்கமாக இருந்து பார்த்து நெஞ்சில் ஏக்கத்தைப் பெருக்கியும் - தவித்த குருவிச்சிக்குப் பண்டாரகன் தந்த தழுவல் இன்பம், இதயத்தைத்

தண்பொழிலாக்கி - இன்னுடலைத் தணலாக்கி மகிழ்வித்தது.

ஆனால் அந்த இன்பம் இமைப்பொழுது கூட இல்லை! கட்டிலில் இருவரும் தழுவியவாறு விழுந்த அடுத்த கணமே அந்தப்புரத்தின் கதவு தட்டப்பட்டது. இருவரும் வாரிச் சுருட்டி எழுந்தனர். கதவின் பூட்டு வெளியே திறக்கப்படும் ஓசை கேட்டது.

கதவைத் திறந்துகொண்டே கண்டி மன்னன் நுழைந்தான்! அவனைப் பார்த்துப் பதறிப் போன பண்டாரகன், "விக்ரமா! என்ன இது? ஏன் முகத்தில் இவ்வளவு வேதனை?" என வினவினான். மன்னன், மௌனமாக நின்றான். மன்னனுடன் வந்த வீரன் சொன்னான்-

"பனங்காமத்தில் தங்கள் தங்கை ஊமைச்சி நாச்சியாரை ஆங்கிலேயப் படை கொன்றுவிட்டதாம்! பனங்காமத்தைப் பிடித்துக் கொண்ட வெள்ளையர்கள் முல்லைத் தீவை முற்றுகையிடப் போகிறார்களாம்!"

பகைவர் கையில் பனங்காமம்!


72

தங்கை கொல்லப்பட்டு விட்டாள் என்ற சொற்கள் பண்டாரகனின் இதயத்தில் கோடிக்கணக்கான குளவிகள் ஒன்று சேர்ந்து கொட்டியது போல் அவனைத் துடிக்க வைத்தன. கண்ணீர் அருவி கன்னங்களில் பெருகியோட குருவிச்சி ஒரு தூணைப் பிடித்துக்கொண்டு அதன் துணையினால் கீழே விழாமல் நின்றாள். குமுறும் எரிமலையைக் கரம் கொண்டு மூடியணைக்க முயற்சிப்பது போல, பீறிட்டுக் கொண்டு கிளம் பும் சோகத்தை முற்றிலுமாக வெளிக் காட்டிக் கொள்ளாமல் பண்டாரக வன்னியன், செய்தி கொண்டு வந்த வீரனைப் பார்த்து –"பனங்காமத்தின் மீது படையெடுத்தது எப்படி? யார்?" என்று வினவினான். அதற்கு வீரன் சொன்ன பதில்—

"ஆங்கிலேய படைகள் மூன்று திசைகளில் வந்துகொண்டி ருக்கின்றன. மன்னாரிலிருந்து ஒரு படை வருகிறது. திருகோண மலையிலிருந்து ஒரு படை வருகிறது. யாழ்ப்பாணத்திலிருந்து வந்த படைதான் பனங்காமத்தை முற்றுகையிட்டிருந்தது. தாங்கள் முல்லைத் தீவில் இல்லை என்ற தைரியத்தில் பனங்காமம் கோட்டையை முதலில் பிடித்துவிடலாம் என்று ஆங்கிலேய வீரர்கள் திட்டம் தீட்டி, அதிலே வெற்றியும் பெற்று விட்டார்கள்!"

வீரனின் பதில் கேட்ட பண்டாரகன், "அப்படியானால் முல்லைத்தீவை வளைத்திடப் படை நடத்திச் செல்வது யார்?" என்று ஆத்திரத்துடன் கேள்வி எழுப்பினான்.

"வான்டெரி பெர்க் தலைமையில் மன்னாரிலிருந்து ஒரு படை!



எட்வர்ட் மேட்ஜ் தலைமையில் திருகோணமலையிலிருந்து ஒரு படை!"

"ஓகோ! வான்டெரி பெர்க்கா? ஆங்கிலேயர்களிடமுள்ள பீரங்கிகளையும் வெடிமருந்துகளையும் எதிர்த்து ஆதிகால மனிதர்களின் ஆயுதங்களான ஈட்டிகளையும் போர்வாட்களை யும் கொண்டு பண்டாரகவன்னியன் என்ன செய்து விடமுடியும் என்று ஏகடியம் செய்து, எனது வாள் வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் சுருண்டு விழுந்தானே, அந்த சூரப்புலியா? அன்றைக்கு நான் போனால் போகிறது என்று அந்த வான்டெரி பெர்க்குக்கு உயிர்பிச்சை கொடுத்து முல்லைத்தீவிலிருந்து விரட்டினேன். அவனே மறுபடியும் முல்லைத் தீவின் மீது படையெடுத்து வருகிறானா?"

என்று மீசையை கம்பீரமாக முறுக்கிக் கொண்டே பண்டா ரகன், குருவிச்சியை உற்று நோக்கினான். அவள் விழிகளிலிருந்து வழிந்த கண்ணீர் நின்றபாடில்லை. அவளருகே சென்றான். தனது மேலங்கி முனையை எடுத்து, குருவிச்சியின் கண்ணீரைத் துடைத்தவாறு சொன்னான்.

"போர்முனை அழைக்கிறது! புலம்பிக் கொண்டிருக்க நேரமில்லை! புறப்படத் தயாராகு!"

"முதலில் நாம் இருவரும் பனங்காமம் சென்று ஊமைச்சி நாச்சியார் உடலை...."

இதைச் சொல்லும்போதே குருவிச்சி கதறி அழுதுவிட்டாள்.

"இறந்துவிட்ட தங்கைக்காக அழுது கொண்டேயிருந்தால், முல்லைத்தீவையும் ஆங்கிலேயரிடம் இழந்துவிட வேண்டி யதுதான்! குருவிச்சி, நான் சொல்வதைக் கேள்! நீ இங்கிருந்து பனங் காமத்துக்குப் புறப்பட்டுப் போ! தங்கையின் ஈமச் சடங்குகளைக் கவனித்துவிட்டு என்னுடன் வந்து முல்லைத்தீவில் இணைந்து கொள்! நான் நேராக இப்போது படைகளுடன் முல்லைத் தீவு புறப்படுகிறேன்."

"தங்கையின் முகத்தைக் கடைசியாக ஒரு முறை பார்த்திடத் தாங்களும் பனங்காமம் வரக்கூடாதா?"

"இப்போது நான் போருக்குத் தலைமை தாங்குகிறேன்! என்

வார்த்தைகள் ஒவ்வொன்றும் இனிமேல் இந்தப் போர் முடியும் வரையில் உத்தரவுகள்தான்! குருவிச்சி! நீ பனங்காமம் போகிறாய் படைகளுடன்! ஊமைச்சி நாச்சியின் இறுதிக் கடன்களை நடத்துகிறாய்! அதற்கும் ஆங்கிலேயப் படையின் தடையிருக்குமேயானால் அந்தத் தடையை உடைக்கிறாய்! வெற்றியுடன் முல்லைத்தீவுக்கு வருகிறாய்!"

பண்டாரகனின் சொற்கள் ஆணைகளாக வெளிவந்தவுடன், குருவிச்சி தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்! இதயத்தைக் கப்பியிருந்த சோகத்தை ஒருக்கணத்தில் துரத்திவிட்டு, இரும்பின் உறுதியோடு தலை நிமிர்ந்தாள்!

"இந்தா! என் வாளை நீ எடுத்துச் செல்! நான் உன்னோடு வருகிறேன் என்ற உணர்வை இது உண்டாக்கும்!"

வாளை எடுத்து, அவளிடம் கொடுத்தான். குருவிச்சி, அந்த வாளுக்கு முத்தமிட்டுத் தன் கையில் உயர்த்திப் பிடித்துக் கொண்டாள்.

அதுவரையில் அங்கிருந்த தூண்களில் ஒரு தூணாக அசைவற்று நின்று கொண்டிருந்த விக்ரமராஜ சிங்கன், பண்டாரகனைப் பாசத்துடன் அரவணைத்துத் தழுவிக் கொண்டு சொன்னான், "கண்டியின் படைகளும் முல்லைத் தீவுக்கு அனுப்பப்படும்" என்று!

"வேண்டாம்! வேண்டவே வேண்டாம்! முல்லைத்தீவையும் பனங்காமத்தையும் வென்றெடுக்கவே முப்புறங்களில் இருந்தும் ஆங்கிலேயப்படை அனுப்பப்படுகிறதென்றால் - கண்டியை மட்டும் அவர்கள் விட்டுவைக்க மாட்டார்கள்! உடனடியாக இல்லாவிடினும் விரைவில் ஒரு நாள் மீண்டும் ஒரு ஆபத்து கண்டிக்கு வரும்! அப்போது நான் உயிரோடிருந்தால் கண்டியைக் காத்திட வந்து சேருவேன்!"

பண்டாரகனை விக்ரம ராஜ சிங்கன் கட்டித் தழுவிக் கொண்டான். இருவரும் உணர்ச்சிப் பிழம்புகளாயினர்.

பொழுது முழுமையாக விடிவதற்குள் பண்டாரகனும் குருவிச்சியும் கண்டி மன்னர் தம்பதிகளிடம் விடைபெற்றுக் கொண்டு படைகளுடன் கிளம்பினர்.

குருவிச்சி படையுடன் பனங்காமம் எல்லையை நெருங்கியதும், பனங்காமம் கோட்டையில் ஆங்கிலேயர்களின் கொடி பறந்துகொண்டிருப்பதைக் கண்டு கொதித்தாள். ஆனால் அவள் சிறிதும் எதிர்பாராத அளவுக்கு, அவளுக்கும் அவளுடன் வந்த படை வீரர்களுக்கும் ஆங்கிலேயப் படை தங்கு தடையின்றி வழி விட்டது.

என்னதான் ஆதிக்கவெறியர்களாக ஆங்கிலேயர் இருந்த போதிலும் - இறந்துவிட்ட ஊமைச்சிநாச்சியாருக்கு இறுதிக் கடனாற்ற தனக்குத் தடை விதிக்காததை எண்ணி அவள் பெருமிதத்துடன் ஆங்கிலேயரின் பண்பாட்டைத் தனக்குள் பாராட்டிக் கொண்டாள்.

இருபுறமும் குருவிச்சிக்கு மரியாதை அணிவகுப்பு நடத்தி கௌரவிப்பதைப் போல் வெள்ளைக்கார வீரர்கள் குதிரைகளில் அமர்ந்து, கைகளில் துப்பாக்கிகளை உயர்த்திப் பிடித்து, அதே சமயம் தலைகளைக் குனிந்து அவளுக்கு வணக்கம் தெரிவித்தனர்.

குருவிச்சி, பனங்காமம் கோட்டைக்குள் நுழைந்ததும் - ஒரு ஆங்கிலேய அதிகாரி, அவளைப் பார்த்து, "சற்று இங்கேயே நிற்க வேண்டுகிறேன்" என்றான். குருவிச்சி மறுக்கவில்லை! நின்றாள்! கவனித்தாள்! நாலைந்து பிரிட்டிஷ் வீரர்கள், வெள்ளித் தட்டுகளில் மலர்களை நிறைத்துக் கொண்டு குருவிச்சியின் முன்னே வந்து நின்றனர்.

"எதற்கு?" என்பது போல குருவிச்சி மௌனமாகப் பார்த்தாள். அதற்குள், அவளை மரியாதையுடன் அழைத்து வந்த அந்த ஆங்கிலேய அதிகாரி சொன்னான், "பனங்காமத்து அரசி ஊமைச்சி நாச்சியாருக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக!" என்று!

குருவிச்சி, அந்தத் தட்டுகளில் இருந்த மலர்களைக் கரங்களில் அள்ளி எடுத்துக் கொண்டாள்!

"ஊமைச்சி நாச்சியாரைக் காண எந்தப் பக்கம் போக வேண்டும்?"

அதிகாரி கை காட்டிய பக்கம் ஒரு நீண்ட தாழ்வாரத்தில்

நடந்தாள் குருவிச்சி!

கோட்டைக்குள் எங்கும் ஊமைச்சி நாச்சியாரின் உடல் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. கோட்டைத் தாழ்வாரத்திலும் வேறு சில குறுகிய - குகை போன்ற பாதைகளிலும் சென்று கொண்டிருந்த குருவிச்சி, திடீரெனக் கோட்டைக்குப் பின்புற வாசல் பக்கம் வந்து விட்டதை உணர்ந்தாள்!

"இதோ இதுதான் ஊமைச்சியின் சமாதி!" என்று மண்ணால் உயரமான மேடாகப் பூசி மெழுகி மூடப்பட்டிருந்த சமாதியைக் குருவிச்சி பார்த்து அவளையுமறியாமல் கண்களை நீர் வீழ்ச்சிகளாக்கிக் கொண்டிருந்தாள்.

ஊமைச்சி நாச்சியின் சமாதியின் மீது ஒரு அகல் விளக்கு அந்தப் பகல் வேளையிலும் எரிந்து கொண்டிருந்தது. அந்த விளக்கின் ஒளியில் ஊமைச்சியின் முகத்தைப் பார்த்திடும் உணர்வுடன் குருவிச்சி சமாதியின் முன்னால் நின்றாள். அவளையுமறியாமல் கண்கள் மூடியபோது, விழிகளுக்குள் ளிருந்து வெளியே வரத் துடித்துக் கொண்டிருந்த நீர்த்துளிகள் இமைகளை மீறிக் கொண்டு அவளது அழகியதும், மென்மை யானதுமான, செக்கச் சிவந்த கன்னமேடுகளில் குதித்து இறங்கின! கைகளில் அள்ளி வைத்திருந்த மலர்களை ஊமைச்சி நாச்சியின் சமாதியின் மீது தூவி, வணங்கினாள்.

பிறகு, ஆங்கிலேய அதிகாரியைப் பின் தொடர்ந்து கோட்டையின் பின்புற வழியாகவே கோட்டைக்குள் நுழைந்தாள் குருவிச்சி,

சிறியதும், கவர்ச்சிகரமானதுமான ஒரு கூடம்! அந்தக் கூடத்தில் தான் ஊமைச்சி நாச்சியார், ஆங்கிலேயர்களை எதிர்த்து உயிர் விட்டாள் என்று குருவிச்சிக்குக் கூறப்பட்டது. சுவரின் மீது காய்ந்த நிலையில் காட்சியளித்த இரத்தத் துளிகளை குருவிச்சி கவனித்தாள்.

"இது ஊமைச்சி நாச்சியார் வாளால் வெட்டுண்டு வீழ்ந்த போது அவர் உடலில் இருந்து தெறித்த ரத்தம்!"

அதிகாரி, எந்தவித உணர்ச்சியுமற்ற மரக்கட்டையாகத்

தகவல் தந்தான்.

குருவிச்சி சுவரோரம் சென்று, அந்த ரத்தத்துளிகளைத் தன் கைகளால் சுரண்டியெடுத்து, தனது நெற்றியில் வீரத் திலகமாக இட்டுக் கொண்டாள்.

"இந்தக் கூடத்திலேயே அமருங்கள்! விரைவில் உணவு தயாராகிவிடும்" என்று நாற்காலியைக் காட்டினான் அதிகாரி.

"பரவாயில்லை! உங்கள் உபசாரத்திற்கு மிகவும் நன்றி! நான் புறப்படுகிறேன்" என்றாள் குருவிச்சி!

"உணவு என்றதும் ஒருவேளை விருந்து எனத் தவறாகக் கருதிக் கொண்டீர்கள் போலும்! இனி எப்போதுமே நீங்கள் எங்கள் நிரந்தர விருந்தினர்தான்!"

அதிகாரியின் ஆணவமான பேச்சிலிருந்து குருவிச்சி ஒரு உண்மையைப் புரிந்துகொண்டாள், தன்னை அவர்கள் தந்திரமாக வளைத்து விட்டார்கள் என்று!

"என்ன சொன்னீர்கள்? என்னை நீங்கள் கைது செய்யப் போவதை, நிரந்தர விருந்து என்ற பெயரால் சுட்டிக் காட்டுகிறீர்களா?"

பேச்சை முடிக்காமலேயே குருவிச்சி, வாளை உருவி ஓங்கிக் கொண்டு அந்த அதிகாரியைப் பார்த்தாள்.

அந்த அதிகாரி மட்டுமல்ல, அங்கிருந்த ஆங்கிலேய வீரர்கள் அனைவருமே அந்தக் கூடம் அதிரும் வண்ணம் கெக்கலி கொட்டிச் சிரித்தனர்.

அந்தச் சிரிப்பொலியுனூடே கோட்டைக்கு வெளிப்புறத்தில் வாட்கள் மோதிடும் ஒலிகள் பீரங்கிகள் வெடிக்கும் ஓசையும் பயங்கரமாக கேட்டன.

குருவிச்சி, ஆவலுடன் அந்த ஒலி வந்த திசைகளின் பக்கம் முகத்தைத் திருப்பினாள்.

பிரிட்டிஷ் அதிகாரி குரைத்தான். "பயப்படுவதற்கு ஒன்று மில்லை! குருவிச்சியுடன் வந்த வீரர்கள் எங்கள் வீரர்களிடம் எலிப்பொறியில் சிக்குவது போல் சிக்கிக்கொண்டு திணறு கிறார்கள். அதைச் சமாளிக்கவே சிறிது நேரம் போரிடு கிறார்கள்! பாவம் அற்பாயுசு மனிதர்கள்!" என்பதாக!

குருவிச்சி நாச்சியார் ஒங்கிய வாளுடன் அந்தக் கூடத்தில்

நின்றாள் எனினும், அதைப்பற்றி துளியும் கவலைப்படாமல், ஆங்கிலேய வீரர்கள் அவளைச் சூழ்ந்து நின்று கொண்டார்கள்.


"என்ன சொல்கிறாய்? நீ இப்போது எங்கள் கைதி!"

அதைக் கேட்டு அவள், தன் கையில் உயர்த்திப் பிடித்திருந்த வாளைக் கீழ் நோக்கித் தணித்து, அந்த வாளின் பிடியில் ஒரு முத்தம் கொடுத்தாள்.

அடுத்த நொடியில் அந்தக் கோட்டைக் கூடத்திற்குள் புயல் வீசத் தொடங்கிற்று. விண்ணில் பறந்து கொண்டே, மண்ணில் கால் படாமல் அவள் வீசிய வாளின் சுழற்சிக்கு முன்னால் ஆங்கிலேய வீரர்கள் திணறினர்! தவித்தனர்!

எனினும் அவள் ஒருத்தி! அவளை எதிர்த்து வீழ்த்திட ஆயிரக்கணக்கான ஆங்கிலேயர்கள்! போர் மீண்டும் உச்சக்கட்டத்தினை எட்டிவிட்டது பனங்காமம் கோட்டையில்!

திறமையை வென்ற திறமை!



பனங்காமத்தில் கடும்போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதேசமயத்தில் முல்லைத் தீவை ஆங்கிலேயப் படைகள் நெருங்கி வந்துகொண்டிருப்பதை அறிந்து கொண்டான் பண்டாரகவன்னியன். வான்ட்ரி பெர்க் தலைமையிலும், எட்வர்ட் மேட்ஜ் தலைமையிலும் மன்னார் பகுதியிலிருந்தும், திருகோணமலைப் பகுதியிலிருந்தும் வரும் அந்தப் படைகளுடன் போட்டி போட்டுக்கொண்டு, முல்லைத் தீவுக்குப் பண்டாரக வன்னியன் போய்ச் சேருவது என்பதும், அங்கிருந்து எதிரிப்படைகளைத் தாக்குவது என்பதும் இனி இயலாத காரியம், காலதாமத மாகிவிட்டது என்பதை உணர்ந்த காரணத்தால் அவன் ஒரு அற்புதமான போர் தந்திரத்தில் ஈடுபட்டான்.

ஆங்கிலேயப் படைகள் காட்டு வழிகளைக் கடந்துதான் முல்லைத் தீவை நெருங்க முடியும். எனவே, அந்த அந்நியப் படைகளை குறுக்கே காட்டுக்குள் சென்று சந்திப்பது என்று தீர்மானித்தான். அவன் விரைந்து எடுத்த அந்த விவேகமான முடிவை செயல்படுத்தவும் அதிக நேரம் எடுத்துக் கொள்ள வில்லை. வாளுடன் வானை நோக்கிக் கரம் உயர்த்தி, தனது படைகளுக்குக் கட்டளையிட்டுக் கர்ச்சனை செய்தான். "எல்லோரும் என்னைத் தொடர்ந்து வாருங்கள்! எதிரியை நமது வீரத்தால் மட்டுமல்ல, விவேகத்தினாலும் வென்றிடுவோம்!" என்ற பண்டாரக வன்னியனின் தீர முழக்கம் அந்தப் பகுதி முழுதும் எதிரொலித்தது.

காட்டு வழியில் ஆங்கிலேயப் படைகள் புகுந்த சில நாழிகைகளுக்குள் பண்டாரகனின் படை வீரர்கள் அந்த வழிகளில் குறுக்கே சென்று புதர்களிலும், பாறைகளிலும் ஒளிந்துகொண்டு தங்களின் சிங்கத் தலைவனாம் பண்டாரகனின் அடுத்த ஆணையென்ன என்றறிய விழிகளைச் செவிகளாக்கிக் கொண்டு கூர்மையான பார்வைக் கூட்டத்தால் அவனையே மொய்த்துக் கொண்டிருந்தனர். தனது ஆணை என்ன, அற்புதமான போர்த்திட்டம் என்ன, என்பதை அறிவிக்க அந்த மாவீரன் பண்டாரகன், குதிரையிலிருந்து கீழேகுதித்தான். தொலைவிலிருந்த அவனது வீரர்களின் கண்கள் அவனது செயல்களோடு சேர்ந்து அசைந்தன.

கீழேகுதித்தவன் அங்கிருந்த காட்டு மூங்கில் மரத்தினருகே சென்றான். அதனை நிமிர்ந்து பார்த்தான். அந்த மரத்தை நோக்கியவாறு இரு கைகளையும் உயர்த்திக் கொண்டு, கால்களைத் தரையில் ஒரு அழுத்து அழுத்தியவாறு குதித்து எழும்பினான். அதே வேகத்தில் மூங்கிலின் மேல்பகுதியைக் கைகளால் பற்றிக் கொண்டு, அந்த மூங்கிலுடன் சேர்ந்து வளைந்தான். மூங்கில் நுனியில் மெல்லிய கயிறு கொண்டு ஓரளவு பெருங்கற்களை முடிந்து வைத்தான். பின்னர் ஒரு பெரிய கயிறு கொண்டு மூங்கில் நுனியைக் கட்டி அந்தக் கயிறு நுனியைத் தன் கையில் பிடித்துக் கொண்டான்.

அவனது வீரர்கள் இமை கொட்டாமல் அடுத்தது என்ன என்று எதிர்பார்த்துக்கொண்டு அவனை விட்டுப் பார்வையை எடுக்காமல் இருந்தனர். அப்போது அந்த வழியே ஒரு காட்டெருமை போவதைப் பண்டாரகன் பார்த்துவிட்டான். வீரர்கள், தன்னையே நோக்குமாறு சைகை செய்துவிட்டு, மூங்கிலின் நுனியைத் தரைவரையில் வளைத்துப் பிடித்திருந்த கயிறைத் திடீரெனத் தனது பிடியிலிருந்து விடுவித்தான். விடுவித்ததுதான் தாமதம், விர்ரென்று அந்த மூங்கில் நுனி நிமிர்ந்தது. நிமிர்ந்த வேகத்தில் அதன் நுனியில் மெல்லிய கயிறால் கட்டப்பட்டிருந்த பெரிய கல் கயிறை அறுத்துக் கொண்டு மிக மிக வேகமாக அந்தக் காட்டெருமையின் மீது

பாய்ந்தது. கல்லின் கனமும், அதன் வேகமும் சேர்ந்து அந்தக் காட்டெருமையைக் கீழே சாய்த்தது.

பண்டாரகன் முகத்தில் வீர மிடுக்கிற்கு மேலும் எழுச்சிமிகு எழில் சேர்ப்பதுபோல் ஒரு புன்னகை மின்னிற்று. அடுத்த கணமே அவனது வீரர்களால் அந்தக் காட்டிடல் உள்ள மூங்கில் மரங்கள் எல்லாம் வளைக்கப்பட்டன. அவற்றின் நுனியில் கற்கள், காய்கள் குலை தள்ளியிருப்பதுபோலக் காட்சியளித்தன. மூங்கிலின் நுனிகளில் கட்டப்பட்ட நீண்ட கயிறுகளின் முனைகளைக் கைகளில் பிடித்தவாறு முல்லைத் தீவின் வீரர்கள், பாறைகள் மறைவில் பதுங்கியிருந்தனர்.

பண்டாரகன் எதிர்பார்த்தவாறே ஆங்கிலேயப்படைகள் அந்த வழியில் முரசு கொட்டிக்கொண்டு வரத் தொடங்கின. ஆங்கிலேயர் கொண்டுவரும் பீரங்கி வண்டிகளில் இருந்து புறப்படும் குண்டுகளை விட, பண்டாரகனின் படையினர் வளைத்து வைத்திருக்கும் மூங்கில் மர நுனிகளில் இருந்து விடுபட்டுக் கிளம்பும் கற்கள் சக்தி வாய்ந்தவை என்பது பண்டாரகனின் நம்பிக்கை.

அந்த நம்பிக்கை ஓரளவு வீண் போகவில்லை. வான்ட்ரி பெர்க் தலைமையிலும், எட்வர்ட் மேட்ஜ் தலைமையிலும் வந்த படைகளுக்கு முன்னால் தளபதி ஜான்ஸ்டன் என்பவன் ஒரு தற்காப்புப் படையை நடத்திக்கொண்டு அந்தக் காட்டு வழியில் வந்தான்.

ஜான்ஸ்டனின் தற்காப்புப் படை முன்னால் வந்ததின் நோக்கமே எதிரிகளின் முஸ்தீபுகள் எப்படியிருக்கின்றன என்று தெரிந்து கொள்வதற்காகத்தான். தொலைதூரங்களில் அந்தக் காட்டு வழியில் புதர்களிலும், பாறைகளிலும் மறைந்திருந்த பண்டாரகனின் வீரர்களுக்கு, ஆங்கிலேயப்படைக்குத் தலைமை யேற்று வருவது வான்ட்ரி பெர்க்கா - எட்வர்ட் மேட்ஜர் - அல்லது துணைத் தளபதி ஜான்ஸ்டனா? என்பது சரியாகப் புரியவில்லை.

அவர்கள், தங்களின் தலைவனது விரலசைவு ஒன்றையே எதிர்பார்த்துக்கொண்டு பதுங்கியிருந்தனர். பண்டாரகனின்

பார்வையும், அவனது படை வீரர்கள் பார்வையும் காட்டு மார்க்கத்தில் வரும் எதிரிப்படை மீதே அழுந்தியிருந்தது. முன்னால் துணைத் தளபதி ஜான்ஸ்டனின் படையை அனுப்பி வைத்து பண்டாரகனின் கவனத்தைச் திசை திருப்ப வான்ட்ரி பெர்க்கும், எட்வர்ட் மேட்ஜும் சூழ்ச்சி வலையை மிகத் திறமையாகப் பின்னியிருந்தனர்.

புதரிலும், பாறைகளிலும் ஒளிந்திருந்த வீரர்களைக் கடந்து காட்டுவழியில் சென்றுகொண்டிருந்த ஜான்ஸ்டனின் வீரர்கள், சற்றும் எதிர் பாராத நிலையில் பண்டாரகனும் அவனது படை வீரர்களும் செயல்பட்டனர். வளைத்து பூமியைத் தொட்டுக் கொண்டிருந்த மூங்கில் மரநுனிகள் சடார் சடார் என, மின்னல் கீற்றின் வேகத்தை மூன்றாவது நான்காவது இடத்திற்குத் தள்ளும் அளவுக்கு நிமிர்ந்தன! அப்படி நிமிர்ந்த அதே வேகத்தில் அவற்றின் நுனியில் கட்டப்பட்டிருந்த கற்கள், ஆங்கிலேயப் படையின் மீது கணைகளாகவோ அல்லது பீரங்கிக் குண்டுகளாகவோ சீறிப் பாய்ந்து தாக்கின! முதன் முதலாகத் தாக்குண்டு வீழ்ந்த துணைத் தளபதி ஜான்ஸ்டன் மயக்கமுற்றது மட்டுமின்றி விழுந்த அதிர்ச்சியில் கண் பார்வையையும் இழந்தான். தற்காப்புப் படையின் தளகர்த்தன் வீழ்ந்ததைத் தொடர்ந்து வளைந்து நின்ற மூங்கில் மர நுனிகள் எல்லாம் நிமிர்ந்தன! கற்களைப் பொழிந்தன!

அந்தத் திடீர் தாக்குதலை சமாளிக்க முடியாமல் ஆங்கிலேயப்படை வீரர்கள் சிதறி ஓடினர். அவர்கள் தாக்குண்டு தரையில் பிணங்களாக விழுவதையும், உயிர் தப்பியோர் குதிரைகளை விரட்டிக்கொண்டு 'ஓ' என அலறியவாறு அந்தக் காட்டு வழியில் கண்ட கண்ட பக்கமெல்லாம் தலை தெரிக்க ஓடுவதையும் பார்த்து பண்டாரக வன்னியன் கைகொட்டிச் சிரித்தான். அவனது வீரர்களும் வெற்றி முழக்கமிட்டனர். மேலும் அந்த வழியில் ஆங்கிலேயர் படை வருகிறதா என்பதை அறிய ஆவல் காட்டினர்.

வழிமேல் விழி வைத்து வஞ்சக அந்நியரைத் தமது போர்த் தந்திரத்தால் அடியோடு அழித்துவிட, மேலும் மேலும் மூங்கில்

மரங்களைத் தயார் செய்துகொண்டிருந்த பண்டாரக வன்னியனின் வீரர்கள் சற்றும் எதிர்பாராத நிலையில் பண்டாரகனின் படை வீரர்களுக்குப் பின்னால் மெல்ல மெல்ல ஊர்ந்து வந்து ஆங்கிலேயப் படையினர் சூழ்ந்து வளைத்துக் கொண்டார்கள். அரியதோர் சாகசப் போர் முறை மூலம் ஆங்கிலேயத் தற்காப்புப் படையின் தளகர்த்தனையும் அந்தப் படைவீரர் களையும் திக்கு முக்காடச் செய்த வீரனும் விவேகியுமான பண்டாரக வன்னியன், அவனது வீரர்களுடன் ஆங்கிலேயப்படை வளையத்துக்குள் சிக்கிக்கொள்ள நேரிட்டது.

தனது போர்த் திறமையைப் பிறிதொரு திறமையினால் வெள்ளையர் வெற்றி கண்டுவிட்டனரே என அதிர்ச்சி அடைந்தான் அந்த அடலேறு! ஆயினும் அவன் துணிவையும், நம்பிக்கையையும் இழக்கவில்லை! கம்பீரமாக நிமிர்ந்து நின்று, வாளை ஓங்கிக் காட்டி, வீரர்களை நோக்கி ஒரு சில வார்த்தை கள் மட்டுமே சொன்னான்!

"வீரர்களே! தன்மானத் தமிழ்நெஞ்சங்களே! பிறந்த உயிர்கள் ஒரு நாள் இறந்தே தீர வேண்டும்! அப்படிப் பிரியும் உயிர், ஒவ்வொரு நாளும் இறந்துபோகும் எத்தனையோ லட்சம் அல்லது கோடி உயிர்களில் ஒன்றாக இருந்தால் அதனை மதிப்பார் யார்? மறக்காமல் இருப்போர்தான் எவர்? எனவே, போகும் உயிர் தமிழுக்காக - தமிழ் இனத்துக்காக - தமிழர்களின் உரிமைக்காக - இந்த மண்ணின் சுதந்திரத்திற்காகப் போகுமே யானால் அவைகள் அனைத்தும் நமது இனமானப் புகழ் விளக்குகளாகச் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டி ருக்கும்!"

பண்டாரகன் பேசிய அந்தக் குரல் அவனது வீரர்களுக்குப் போர் முரசாக ஒலித்தது! வீரர்களை முறுக்கேற்றப் பேசிவிட்டு, தான் மட்டும் ஒதுங்கிவிடும் வீணன் அல்லவே அந்தத் தலைவன்! தன்னைச் சூழ்ந்து வளைத்துக் கொண்டி ருக்கும் ஆங்கிலேயப் படை வீரர்களை நோக்கி ஓங்கிய வாளுடன் நடந்தான்.

காடு, களமாயிற்று! வான்ட்ரி பெர்க், தனது படையுடன் வந்த பீரங்கிகளை இயக்குமாறு கட்டளையிட்டான்! குண்டுகளைப் பொழியும் அந்த பீரங்கிகளுக்கு பண்டாரகனின் படை வீரர்கள்

எண்ணற்றோர் பலியாயினர். அந்தப் பகுதி முழுதும் புகை சூழ்ந்துகொண்டது. அடர்த்தியானதும் விரைவில் விலகாததுமான அந்தப் புகையில் பண்டாரகன் என்ன ஆனான் என்றே தெரியவில்லை!

புகை, கொஞ்சம் கொஞ்சமாக விலகத் தொடங்கிடவே அந்தக் களத்தில் விழுந்து கிடந்த வீரர்களின் பிணங்களை ஆங்கிலேய வீரர்கள் கால்களால் உதைத்துப் புரட்டிப் பார்த்தனர். அந்தச் செயல் கண்டு சினமுற்ற வான்ட்ரி பெர்க்கும், எட்வர்ட் மேட்ஜும் ஏக காலத்தில் உரக்கச் சத்தமிட்டனர்.

"ஏ, முட்டாள் வீரர்களே! எவ்வளவு திமிர் உங்களுக்கு! தங்கள் நாட்டுக்காக உயிர் கொடுத்த தியாக தீபங்களை காலால் உதைத்துப் புரட்டிப் பார்க்கிறீர்களா? அந்தப் பிணங்களில் ஒரு பிணமாக பண்டாரக வன்னியனின் பிணம் இருந்தால் – எவ்வளவு பெரிய மகாவீரனை இழிவு படுத்திய குற்றம் நம்மை வந்து சேரும் தெரியுமா?"

தளபதிகளின் கோபம் கண்டு, வெள்ளை வீரர்கள் தங்களின் இழிசெயலை நிறுத்திக்கொண்டு – அந்தப் பிணங்களைக் கைகளாலேயே தொட்டு நகர்த்திப் பார்த்தனர், பண்டாரகனின் உடல் அந்தக் களத்தில் கிடக்கிறதா என்று!

காக்ஸ்டனும் குருவியும்!

74

"குன்றெடுக்கும் நெடுந்தோள் கொண்ட குலசேகரம் வைரமுத்து எனும் பண்டாரக வன்னிய மாவீரன் என்னிடம் தோற்றோடி விட்டான் என்ற செய்தி என் வாழ்க்கை வரலாற்றில் ஒரு பொன்னேடு! நண்பனே! எட்வர்ட்! இந்தப் பிணங்களுக் கிடையில் பண்டாரகனின் பிணமும் இருந்திருப்பின் நான் மிகவும் கலங்கி போயிருப்பேன். அந்தப் பாயும் புலி மீண்டும் நம்மீது பாய்வதற்குப் பதுங்கும் புலியாகத் தற்காலிகமாகத் தப்பித்துப் போயிருக்கிறது. நம்மிடம் நவீனப் படைக்கருவிகள், பீரங்கிகள், குண்டுகள் இத்தனை இருந்தும் நமது வீரர்கள் எத்தனை பேர் உயிரிழந்து இங்கே கிடக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது எவ்வளவு வசதி வாய்ப்பு உள்ள படைகளாக இருந்தாலும் உணர்ச்சியால் உந்தப்பட்டு யுத்தம் நடத்துகின்ற வர்களிடம் ஊதியத்துக்காகப் பணிபுரிவோர் எளிதில் வெற்றியை அறுவடை செய்வதென்பது இயலாத காரியம்தான். நான் சொல்லும் இந்த உண்மையை கற்சிலை மடுவுக்கு அருகாமையில் நடைபெற்ற இந்தப் போர் நிரூபித்திருக்கிறது!"

வான்ட்ரி பெர்க், விசனம் தோய்ந்த முகத்துடன் - அதே சமயம் வெற்றியால் ஏற்பட்ட உற்சாகத்துடன் எட்வர்ட்டின் தோளைப் பிடித்துக் கொண்டு இப்படிப் பேசினான். எட்வர்ட் மேட்ஜும் பதிலுக்குப் பேசாமலில்லை!

"நண்பா! இன்னொரு நாட்டைப் பிடிக்க போகும்பொழுது படைத் தலைவனுக்கு இருக்கும் ஆர்வம், ஆவல், உணர்வு

இவற்றில் எதுவும் படைவீரர்களுக்கு இருக்க நியாயமில்லை! தன்னுடைய நாட்டை எதிரிகள் அடிமையாக்கிடக் கூடாது என்பதில் உறுதி படைத்தோர் தமது உயிரைத் துச்சமாக மதித்துப் போரிடுவர்! மகிழ்வுடன் மரணத்தை முத்தமிடுவர்! ஆனால் அந்த உணர்வும், ஊக்கமும், உறுதியும் அடிமை கொள்ளப் போகும் படையில் உள்ள வீரர்களுக்கு நிச்சயமாக இருக்காது என்பதில் இரு கருத்துக்கே இடம இல்லை. அதனால்தான் கொள்கை வீரர்கள் சிலரைக் கொல்ல கூலிப் படையினர் பல நூறு பேர் சாக வேண்டியிருக்கிறது!"

"நாம் இருவரும் ஒன்றுபோலவே நினைக்கிறோம். எட்வர்ட்! பண்டாரக வன்னியனைத் தேடும் முயற்சியில் ஈடுபடலாமா? அல்லது...."

"இந்த நிலையில் அப்படியொரு திட்டத்தை நினைத்துப் பார்க்கவே கூடாது! நாம் பல வீரர்களை இந்தப் போரில் இழந்திருக்கிறோம். பண்டாரகனும் தனது படைவீரர் பலரை இழந்திருக்கிறான் எனினும் அவனுடன் தப்பிச் சென்றுள்ள சில வீரர்களைச் சாதாரணமாக நாம் கணக்கிடக்கூடாது! இப்போது நாம் செய்ய வேண்டியது, பண்டாரகன் இல்லாத இந்த நேரம் பார்த்து முல்லைத்தீவை ஆக்ரமித்துக்கொள்ள வேண்டியதுதான்!"

"அப்படியானால் பண்டாரகவன்னியனின் திட்டம் எதுவாக இருக்கும்?"

"படைபலம் குறைந்துள்ள இந்த நிலையில் நேருக்கு நேர் எதிர்க்க மாட்டான். இனி மலைக்குகைகளே அவன் மாளிகைகளாகும்! அடர்ந்த காடுகளே அவன் வாழும் அரண்மனைகளாக மாறும்! அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் காடுகளில் அவனது பாசறைகள் தோன்றும்!"

"அப்படி அவனை வளர விட்டு நாம் பார்த்துக் கொண்டிருப்பதா?"

"நாமும் நமது வலிவைப் பெருக்கிக் கொள்ள கொஞ்ச காலம் காத்திருக்க வேண்டியதுதான்! முதலில் நாம் முல்லைத் தீவு அரண்மனைக்குச் செல்வோம்!"

"எட்வர்ட்! என் ஆசையொன்று! அதை நிறைவேற்றிவிட்டு இங்கிருந்து முல்லைத்தீவுக்குப் புறப்படலாமே!"

இதைச் சொல்லும்போது வான்ட்ரி பெர்க்கிற்கு அவனையு மறியாமல் ஒரு நாணம் தலையில் பெரும் சுமையாக இறங்கி, அவன் தலையைக் கீழ் நோக்கிக் குனியச் செய்தது!

"என்ன ஆசை? அந்த ஆசையை நிறைவேற்றுவதில் ஏதாவது சிரமம் இருக்கிறதா?"

"ஒன்றுமில்லை! இந்த இடத்தில் ஒரு கல் நாட்டுவிழா நடத்த விரும்புகிறேன்! அந்தக் கல்லை உன் கைகளால் திறந்து வைக்க வேண்டும்!"

"கல்லா? என்ன கல்?"

"கற்சிலை மடுவுக்கருகே இந்த இடத்தில்தான் பண்டாரக வன்னியனை வான்ட்ரி பெர்க் தோற்கடித்தார் - என்று செதுக்கப்பட்ட ஒரு கல்லை இங்கே நட வேண்டுமென்று விரும்புகிறேன்."

"நண்பனின் அதியற்புத புத்திசாலித்தனத்தை மெச்சுகிறேன்! படைநடத்தி வந்தவர்கள் நாமிருவர்! ஆனால் வெற்றி பெற்றதாக நினைவுக்கல் வான்ட்ரி பெர்க்கிற்கு! அதை இன்னொரு தளபதி எட்வர்ட் திறந்து வைக்க வேண்டும்! பரவாயில்லை! பண்டாரகனை எதிர்த்து தற்காலிக வெற்றி! அந்த வெற்றியின் பெருமை முழுதும் வான்ட்ரி பெர்க்கிற்கே செல்லட்டும்!"

எட்வர்ட் கேலியாகப் புன்னகை செய்ததை வான்ட்ரி பெர்க் புரிந்துகொண்டான் எனினும், ஆசை வெட்கமறியாதே, அதனால் உடனடியாக அவன் கையைக் குலுக்கி நன்றி தெரிவித்துவிட்டு அங்கே நடுவதற்காக எழுத்துக்கள் பொறித்த கல்லைத் தயார் செய்யுமாறு வீரர்களுக்குக் கட்டளையிட்டான்.

கற்சிலை மடுவிலுள்ள பண்டாரக வன்னியனின் ஞாபகச் சின்னம்

இந்த இடத்தில்தான் தளபதி வான்ட்ரி பெர்க் பண்டாரக வன்னியனைத் தோல்வியுறச் செய்தான்.

என்ற வாசகத்துடன் கல்லொன்று சில நாழிகைகளில் நிமிர்ந்து நின்றது. அந்தக் கல்லில் எழுதப்பட்ட வார்த்தைகளைப்

பார்த்துப் பார்த்து வான்ட்ரி பெர்க் பெருமிதம் கொண்டான். அந்தக் கல்லின் மீது ஒரு பட்டுத் துணி போர்த்தப்பட்டது. உயிர்பிழைத்தும், காயமுற்றும் சூழ்ந்திருந்த ஆங்கிலேய வீரர் களுக்கு மதுக் கிண்ணங்கள் வழங்கப்பட்டு அவற்றில் இடை விடாமல் மது நிரப்பப்பட்டு கொண்டேயிருந்தது. வெற்றியைக் கொண்டாடி கல்நாட்டுவிழா நடத்தும் அழகு அது!

எட்வர்ட் போதை தலைக்கேற அந்தக் கல்லின் அருகே சென்று,

"வான்ட்ரி பெர்க் வாழ்க!"

என்று ஊளையிட்டவாறு, பட்டுத் துணியை விலக்கியதோடு அந்தத் துணியை தன் கழுத்தைச் சுற்றிக் கட்டிக்கொண்டு நினைவுக்கல்லைச் சுற்றி சுற்றி நடனமாடத் தொடங்கினான். அவனோடு சேர்ந்து மற்ற வீரர்களும் தள்ளாடித் தடுமாறி ஆனந்தக் கூத்தாடினர். காலாகாலத்திற்கும் அந்தக் கல், தன்னுடைய புகழைப் பாடிக்கொண்டிருக்கப் போகிறது என்ற பூரிப்புடன் வான்ட்ரி பெர்க், வயிறு புடைக்க க் குடித்து விட்டு - எட்வர்ட் என எண்ணி அந்தக் கல்லைக் கட்டித் தழுவிக் கொண்டான்.

மெய்மறந்த நிலையில் அந்தக் கல்லைச் சூழ்ந்து தரையில் கிடந்தோர், மெல்ல மெல்ல ஒவ்வொருவராக எழுந்தனர். வான்ட்ரி பெர்க்கும் எட்வர்டும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளக் கூடிய அளவுக்கு நிதானம் பெற்றதும் முல்லைத்தீவுக்குள் நுழைந்திட வீரர்களை உசுப்பினர்.

அந்தக் காட்டின் அடர்ந்த பகுதிகளில் ஆங்கிலேயப் படை வந்து கொண்டிருந்தபோது, வான்ட்ரி பெர்க் திடீரென அதிர்ச்சியுற்றவனாக,

"எட்வர்ட்! அதோ! அதோ!"

என்று பூமியைச் சுட்டிக் காட்டினான். எட்வர்ட் தனது குதிரையை நிறுத்தியவாறு, வான்ட்ரி பெர்க் குறிப்பிட்ட இடத்தைப் பார்த்தான்.

சேறும் சகதியும் படிந்த பாதை - அந்தப் பாதையில் சில குதிரைகள் சென்றதற்கு அடையாளமாக குளம்புகளின் சுவடுகள்!

"ஆமாம் - இந்தப் பாதையில்தான் பண்டாரக வன்னியன், தனது வீரர்களுடன் சென்றிருக்க வேண்டும்! நிச்சயமாக இது முல்லைத்தீவுக்குப் போகிற பாதையல்ல! எனவே அவன் முல்லைத் தீவைக் கைவிட்டு விட்டு வேறு எங்கேயோ ஓரிடத்தில் பாசறை அமைக்கப் பதுங்கியிருக்கிறான்."

எட்வர்ட் கூறிய விளக்கத்தை வான்ட்ரி பெர்க் ஏற்றுக் கொண்டான்.

"நண்பனே! எட்வர்ட் ! நான் சொல்வதை கேட்க வேண்டும்! என்ன சரிதானா?"

"சொன்னால்தானே கேட்க முடியும்!"

"சொல்லுகிறேன்! நான் இந்தப் படையின் ஒரு பிரிவினரை அழைத்துக் கொண்டு - பண்டாரக வன்னியன்சென்றுள்ள வழியிற் சென்று, அவன் பதுங்கியிருக்குமிடத்தை அறிந்து வருகிறேன்.

"அதுவும் சரிதான்! நான் மற்றவர்களுடன் முல்லைத்தீவு அரண்மனைக்குள் நுழைகிறேன்!"

இருவரும் தங்களின் திட்டங்கள் குறித்து தனித்துச் சிறது நேரம் பேசிக்கொண்டனர். பண்டாரக வன்னியன் இருக்குமிடத்தை அறிந்திட, வான்ட்ரி பெர்க் வேறு பாதையில் திரும்பியதும் - எட்வர்ட் முல்லைத்தீவுப் பாதையில் தனது படையை நடத்தினான்.

முல்லைத்தீவுக்குள் நுழைந்த எட்வர்டுக்கு ஒரே திகைப்பு! யாருமே அவனையும் அவனது படையையும் எதிர்க்கவுமில்லை - தடுக்கவுமில்லை - இன்னும் சொல்லப்போனால் யாரும் அவன் கண் எதிரே காணப்படவுமில்லை!

எதிர்ப்பே இல்லை என்றதும், எட்வர்டு இறுமாப்புடன் குதிரையைத் தட்டிக்கொடுத்து, முல்லைத் தீவு அரண்மனையின் முகப்புக்குள் வீரர்களுடன் நுழைந்தான். அப்போதும் யாரும் குறுக்கிடவில்லை. எட்வர்டுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. வீரர்களை நோக்கிக் கத்தினான்.

"பார்த்தீர்களா? நம்மை
எதிர்க்க ஒரு காக்கை குருவி

கூட இல்லை!"

என்று கர்வத்துடன் அவன் எழுப்பிய ஒலி அடங்குவதற்குள்,

"காக்கை எப்போதோ
செத்துத் தொலைந்துவிட்டது!
இதோ குருவி இருக்கிறது,
உம்மை எதிர்க்க!"

என்று வீர முழக்கம் கேட்டது! குரல் வந்த திக்கு நோக்கி எட்வர்ட் மேட்ஜும் வீரர்களும் அதிர்ச்சியுடன் திரும்பினர்.

வீர முழக்கமிட்ட வீராங்கனை குருவிச்சி ஓங்கிய வாளுடன் எதிர் வந்து நின்றாள்.

75

மிரளும் விழிகளுடன் தன்னைப் பார்க்கும் எட்வர்டையும் அவனுடன் வந்த வீரர்களையும் நோக்கிக் குருவிச்சி ஆவேசமாகச் சிரித்தாள்.

"என்ன திகைக்கிறீர்கள்? பனங்காமத்தில் பிணமாகிக் கிடக்க வேண்டியவள் இங்கே எப்படி வந்தாள் என்றுதானே? பைதியக் காரர்களே! பனங்காமத்தில் உமது வீரர் களைப் பிணமாக்கிப் போட்டுவிட்டு நானும் எனது வீரர்களும் முல்லைத்தீவு அரண்மனையைப் பாதுகாக்க வந்திருக்கிறோம். என்ன சொல்கிறீர்கள்? உங்கள் உடம்பில் உயிரைச் சுமந்து கொண்டு திரும்பப் போகிறீர்களா? அல்லது உயிரை இங்கே இறக்கிவைத்து விட்டு உடல்களைக் கல்லறைகளுக்கு அனுப்பி வைக்கும் முடிவோடு வந்திருக்கிறீர்களா?"

குருவிச்சி நாச்சியின் கையிலிருந்த வாள், சிவப்பு வண்ணம் பூசிக் கொண்டிருந்த நிலையில் சுழன்றது.

எட்வர்ட் மேட்ஜின் மூளையில் எப்படித்தான் அப்படி ஒரு சூழ்ச்சி உதித்ததோ தெரியவில்லை. குருவிச்சியின் கோபாக்கினிக்கு முன்னே பதிலுக்கு அவனும் கொந்தளிக்காமல் மிக நிதானமாகச் சிரித்துக் கொண்டே பதில் சொல்ல ஆரம்பித்தான்.

"அம்மா! நீ அவசரப்பட்டுப் பேசுகிறாய்! அத்துடன் ஏதோ நடந்துவிட்டது என்ற ஆத்திரவசப்பட்டும் இருக்கிறாய்! தயவு செய்து நான் சொல்வதைக் கேள்! ஒரு வழியாக யுத்தம் முடிந்துவிட்டது! உன் காதலனும் இந்த முல்லைத்தீவின்

காவலனுமான பண்டாரக வன்னியன் எம்முடன் நடத்திய யுத்தத்தில் தோற்று சமாதான உடன்படிக்கை செய்து கொண்டுவிட்டான். எமது தளபதிகளில் ஒருவரான வான்ட்ரி பெர்க்கும், பண்டாரகவன்னியனும் ஒருவரோடு ஒருவர் கை கொடுத்துக் கொண்டு விருந்து அருந்திக் கொண்டிருக் கின்றனர்."

குருவிச்சி, எட்வர்ட்டின் பேச்சை எளிதில் நம்பிவிட்டாள். அப்படியொன்று நடைபெற்றிருக்காவிட்டால் எட்வர்டும், அவனது வீரர்களும் இவ்வளவு சுலபமாக முல்லைத்தீவின் அரண்மனைக்கு வந்திருக்க முடியாதல்லவா? இந்தச் சந்தேகத்தினால் எட்வர்ட் பின்னிய சதிவலையில் அவள் விழுந்துவிட்டாள்.

"இப்போது அவர் எங்கே எந்த இடத்தில் இருக்கிறார்?"

"வான்ட்ரி பெர்க்கின் கூடாரத்தில் இருக்கிறார். இருவரும் பகையை மறந்துவிட்டு, நீண்டகாலம் பழகிய நண்பர்களைப்போல் அளவளாவிக் கொண்டிருக்கிறார்கள்."

குருவிச்சியின் கையில் ஒங்கி உயர்ந்திருந்த வாள், கீழே தணிந்து தரையை நோக்கியது. அப்போதும் அவள் மேலும் விவரம் அறிந்து கொள்ளும் ஆவலுடன், "அந்தக் கூடாரம் எங்கே இருக்கிறது?" என்று வினவினாள்.

அப்படியொரு கூடாரம் இருந்து, அங்கே வான்ட்ரி பெர்க்கும் பண்டாரக வன்னியனும் விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தால் தானே எட்வர்டால் கூறமுடியும். இருந்தாலும் அவன் சமர்த்திய மாக சமாளித்தான்.

"இந்தப் பகுதியெல்லாம் எங்களுக்குப் புதிய இடங்கள்! அதனால் கூடாரம் இருக்குமிடத்தின் பெயரைக் குறிப்பாகக் கூற இயலாது! எங்களோடு வந்தால், அந்த இடத்திற்கு அழைத் துப் போகும்பாதை எங்களுக்கு நிச்சயமாகத் தெரியும்."

குருவிச்சி, சற்று குழப்பமடைந்தாள். பண்டாரக வன்னியன் எதிரியிடம் தோல்வியுற்று, அவனிடம் சமாதான ஒப்பந்தம் செய்துகொண்டு, அவன் கூடாரத்தில் அமர்ந்து விருந்துண்ணு கிறான் என்பதை அவளால் திடீரென நம்ப முடியவில்லை.

ஆனால் ஒன்று - ஆங்கிலேயப்படையினரின் நவீன போர்க் கருவிகளுக்கு மத்தியில் அப்படியொரு தோல்வி பண்டாரகனுக்கு ஏற்பட்டிருக்கக்கூடும் என்பதையும் அவளால் முழுமையாக மறுக்கமுடியவில்லை.

"என்னை அவர் இருக்குமிடத்திற்கு அழைத்துச் செல்வது தான் நீங்கள் இங்கே வந்ததின் நோக்கமா?"

"இல்லை! இல்லை! அம்மா! நீ இங்கே இருப்பதே எங்களுக்குத் தெரியாது! பண்டாரகனும், வான்ட்ரிபெர்க்கும் செய்துகொண்ட ஒப்பந்தப்படி முல்லைத்தீவு அரண்மனையை எங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரும் நோக்கத்துடன்தான் இங்கே வந்தோம்! வந்த இடத்தில் உன்னைக் காண நேரிட்டது! பண்டாரகனையே தோற்கடித்த இந்தப் படையின் முன்னால் பாவை உன் ஆற்றல் எதற்காக வீணாக வேண்டும் - எனவே உண்மையைச் சொல்லிவிடலாம் என்ற முடிவுக்கு வந்தோம்! அந்தக் கூடாரத்துக்கு வருவதும், வராததும் உனது விருப் பத்தைப் பொறுத்தது! எம்முடன் வருவதாயின் நானே அழைத்துக் கொண்டு போகிறேன். இல்லையேல் நீ இந்த அரண்மனையைக் காலி செய்துவிட்டு போக வேண்டியிருக்கும். அல்லது எமது படையை எதிர்க்க வேண்டியிருக்கும். என்னம்மா, திகைப்பு! பேசாமல் அமைதியாக எம்முடன் வந்து பண்டார கனைப் பார்த்தால் எல்லா விபரங்களையும் அறிந்து கொள்ளலாம் இல்லையா?"

"சரி வருகிறேன்!" வாளை உறையில் போட்டுக்கொண்டு குருவிச்சி நாச்சியார் எட்வர்டைப் பின் தொடர்ந்தாள். எட்வர்டைச் சேர்ந்த இரு வீரர்களும், குருவிச்சியின் இரு வீரர்களும் முல்லைத் தீவு அரண்மனையின் முகப்பிலேயிருந்து அந்த இருவரின் பின்னால் தொடர்ந்து சென்றார்கள். ஆறு குதிரைகளும், முல்லைத் தீவின் தெருக்கள் பலவற்றைக் கடந்து நீண்ட குறுகிய சாலையொன்றில் போய்க் கொண்டிருந்தபோது எதிரில் ஒரு குதிரையில் ஓர் ஆங்கிலேய வீரன் மிக வேகமாக வந்து எட்வர்டின் முன்னால் குதிரையை நிறுத்தினான்.

எட்வர்ட், அந்த வீரனை இறுமாப்புடன் நோக்கி "என்ன?"

என்றான்.

அந்த வீரன், ஒரு கடிதச் சுருளை எட்வர்டின் கையில் கொடுத்தான். எட்வர்ட், அந்த மடலைப் பரபரப்புடன் படித்துப் பார்த்தான் மனதுக்குள்ளாகவே!

"அன்புள்ள எட்வர்ட்! பண்டாரக வன்னியன், அவனது படை வீரர்கள் ஐம்பது பேருடன்ஓட்டுச்சுட்டான் பகுதியில் நெடுங்காணி சாலையருகே நமது படைகளால் வளைக்கப்பட்டு சிறைவைக் கப்பட்டுவிட்டான். நண்பா! நீ உடனே பனங்காமம் சென்று அங்கே மிக ஆவேசமாக நம்மை எதிர்த்துப் போரிட்டுக் கொண்டிருக்கும் குருவிச்சி நாச்சியாரைத் தோற்கடித்தாக வேண்டும் - இங்ஙனம் வான்ட்ரி பெர்க்"

எனக் கடிதம் பேசிற்று! எட்வர்ட், மனதுக்குள் மகிழ்ந்து கொண்டான்! பனங்காமம் செல்லும் வேலையில்லாமலேயே குருவிச்சியை ஏமாற்றி அழைத்துப் போகிறோமே என்ற எக்களிப்பால் அவன், தன்னைத் தானே புகழ்ந்து கொண்டான். குருவிச்சி எதுவும் நினைத்துவிடக் கூடாதே என்பதற்காக அவளைப் பார்த்து புன்னகை புரிந்தவாறு, "நீ முதலில் கேட்டாயே, கூடாரம் எங்கே இருக்கிறது என்று - இந்தக் கடிதத்தில் அந்த விபரம் வந்திருக்கிறது" என்றான் எட்வர்ட்!

"எங்கே இருக்கிறது?" என்றாள் குருவிச்சி!

"ஓட்டுக்சுட்டான் பகுதி நெடுங்கேணிச் சாலையருகில் இருக்கிற தாம்!"

கடிதத்தைச் சுருட்டி, அதைக் கொண்டு வந்த வீரனிடமே எட்வர்ட் வீசி எறிந்தான். அந்த வீரன் அதை லாவகமாகப் பிடித்துக் கொண்டான்.

ஏழு குதிரைகளும் நெடுங்கேணிச் சாலைக்கு வந்துவிட்டன. உயர்ந்த மரங்கள் அடர்ந்த தோப்பு. அந்தத் தோப்புக்குள்ளே ஒரு கூடாரமாம். கூடாரத்தையொட்டியுள்ள மரங்கள் ஒவ்வொன்றிலும் முல்லைத்தீவின் வீரன் ஒருவன் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக்கிறான். அப்படி ஐம்பது வீரர்கள் கட்டப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நடுவே ஒரு பெரிய வலுவான மரத்தில் சங்கிலியால் கட்டுண்டு பண்டாரக

வன்னியன்.

அந்தக் கொடுமையான காட்சியைப் பார்த்ததும் குருவிச்சி, தன்னை மறந்து ஓடிப்போய் பண்டாரகனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கோவெனக் கதறிவிட்டாள். அவளது கூந்தலைக் கோதிவிட்டவாறு, பண்டாரகன் அவளுக்கு ஆறுதல் சொன்னான்.

"கவலைப்படாதே! இந்தத் தோப்பில் களைப்பாறிக் கொண்டிருந்த எங்களைத் திடீரெனச் சூழ்ந்து கொண்டு வென்றுவிட்டதாக ஆர்ப்பாட்டம் புரிகிறார்கள்."

பண்டாரகன் புலியாக உறுமினான்!

"இவர்களுடன் உடன்பாடு செய்துகொண்டதாகக் கூறி என்னை அழைத்து வந்தார்களே!"

"உடன்பாடா? இலங்கை மண்ணையும் தமிழ் ஈழத்தையும் அந்நியராம் ஆங்கிலேயர்க்கு அடிமையாக்க ஒரு உடன்பாடா? அதற்கு இந்த உயிர் உள்ளவரையில் என் தலை அசையுமென நீ நம்புகிறாயா?"

குருவிச்சி பேசாமல் நின்றாள். ஏதோ தீர்க்கமாக சிந்தித்தாள். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவளாக வான்ட்ரி பெர்க்கையும், எட்வர்ட்டையும் பார்த்துச் சொன்னாள்.

"அவர் அப்படித்தான் பேசுவார் - ஆனால் நான் அவரை என் வழிக்குக் கொண்டு வர முடியும் - உங்களோடு இதுவரை உடன்பாடு செய்து கொள்ளாவிட்டாலும், இனி ஒரு உடன்பாடு செய்துகொள்ள நான் தயார்! இவரும் என் பேச்சைத் தட்டமாட்டார்!"

என்று கூறிக்கொண்டே குருவிச்சி, பண்டாரகனைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டியபடி "என் பேச்சைத் தட்டக் கூடாது! என்ன சரிதானா?" என்று கேட்டாள். பண்டாரகன், குருவிச்சியின் மனதைப் புரிந்துகொண்டு மௌனமாக நின்றான்.

"மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி! காலமெல்லாம் ஆங்கிலேயருடன் போரிட்டு நாங்கள் களைத்துப் போய்விட்டோம். எங்களின் பழைய படைக் கருவிகள் அற்புதமானவை! ஆற்றல் வாய்ந்தவை! ஆயினும் உங்களின் நவீன ஆயுதங்கள் முன்னால் அவை நிற்க முடியவில்லை! ஆயுதங்களின்றியே நாங்கள் பல சாகசங்களைச் செய்யக் கூடியவர்கள்! வாளையும் ஈட்டியையும்

வைத்துக் கொண்டே இந்த வையகம் வியக்கும் சாதனைகளைச் செய்வோம்!"

என்று குருவிச்சி பேசிக் கொண்டிருக்கும்பொழுதே, வான்ட்ரி பெர்க் குறுக்கிட்டு –

"வாளையும் ஈட்டியையும் வைத்துக் கொண்டு அப்படியென்ன வையம் புகழக்கூடிய சாதனைகளைச் செய்வீர்கள்?"

என்று வியப்புடன் கேட்டான்.

"எங்கள் வீரர்கள் ஐம்பது பேரை இரு பிரிவாகப் பிரித்து இருபுறமும் நிறத்துவோம். அவர்கள் கைகளில் வாட்கள் இருக்கும். நான் என் தலையின் மீது ஈட்டியால் குத்தப்பட்ட ஒரு பெரிய பழத்தை வைத்துக்கொண்டு நடுவில் நிற்பேன். எங்கள் ஐம்பது வீரர்களும் எதிரும் புதிருமாக வாளுடன் பாய்ந்து யாருக்கும் ஒரு காயமில்லாமல் என் தலையில் ஈட்டி முனையில் உள்ள பழத்தை ஐம்பது துண்டுகளாக ஒரே வெட்டில் வெட்டுவார்கள். ஒரே ஒரு பழத்துண்டு மட்டும் ஈட்டியுடன் என் தலைமீது எஞ்சியிருக்கும்."

குருவிச்சி இதைச் சொன்னவுடன் "அப்படியா?" என்ற கேள்வியுடன் வான்ட்ரி பெர்க், வீரர்களைப் பார்த்து "ஏய்! பண்டாரக வன்னியனைத் தவிர மற்றவர்களை அவிழ்த்து விடுங்கள்! அந்த அதிசய சாதனையை அவர்கள் நிகழ்த்தட்டும் பார்க்கலாம்" என ஆணையிட்டான்.

"பண்டாரகனைத் தவிர" என்றதும் குருவிச்சிக்குப் பெரும் ஏமாற்றம் தான்! ஆனாலும் சமாளித்துக் கொண்டாள்.

பெரிய பழமொன்றை ஈட்டியில் பொருத்தி, தன் தலை மீது வைத்துக் கொண்டு நடுவில் நின்றாள். பண்டாரகனைத் தவிர கட்டவிழ்த்து விடப்பட்ட முல்லைத் தீவின் வீரர்கள் ஒரு பக்கத்துக்கு இருபத்தைந்து பேராக வாட்களுடன் குதிரைகளில் அமர்ந்து திருந்தனர்.

"உம்! பாயலாம்!" என்று குருவிச்சி தனது கையை ஓங்கித் தட்டியதுதான் தாமதம், அந்த ஐம்பது வீரர்களும் அங்கே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஆங்கிலேய வீரர்களுடன் மோதினர். பெரும் அமளிக்கிடையே பண்டாரக வன்னியனின்

கட்டுக்கள் களையப்பட்டன. பண்டாரகன். பாயும் புலியாகவே ஒரு குதிரையிலேறி எட்வர்டைக் குத்திச் சாய்த்தான். நூற்றுக்கணக்கான ஆங்கிலேய வீரர்களின் உடல்கள் துண்டு துண்டுகளாகச் சிதறின.

கீழே சாய்ந்த எட்வர்டு, மரண மூச்சு விட்டுக்கொண்டே தனது துப்பாக்கியைத் தூக்கினான். துப்பாக்கிக் குண்டு, குருவிச்சியின் நெற்றிப் பொட்டை நோக்கிப் பறந்தது. அதற்குள் அவளைத் தூக்கிக்கொண்டு போகப் பண்டாரகன் குதிரையுடன் அவளிடம் பாய்ந்தான். ஆனால் அதற்குள் துப்பாக்கிக் குண்டுகள் அவள் உயிரைக் குடித்துவிட்டன.

அவள் மூச்சு நின்றுபோனது தெரியாமலே குதிரை மீது அவளை அணைத்தவாறு பண்டாரக வன்னியன், ஆங்கிலே யரிடமிருந்து தப்பிவிட்டான். எஞ்சிய அவனது வீரர்களும் அவனைப் பின் தொடர்ந்தனர்.

மணக்கோலம் பூண்டு வாழ்வின் சுவை அறியத் துடித்தவள் - இலட்சியத் திருவிளக்காய் - அணைந்தும் அணையாத தியாகச் சுடர் விளக்காய் - பிணக்கோலம் பூண்டு, பண்டாரகனின் மடியில் படுத்துக்கொண்டு - அவனது இறுக்கமான தழுவலுடன் குதிரையில் வேக வேகமாகப் போய்க் கொண்டிருந்தாள்.

அவள் உயிருடனிருப்பதாகவே கருதிக்கொண்டு அவனும், அவனைத் தொடர்ந்த தமிழ் வீரர்களும் காட்டுப் பாதையில் நெடுந்தூரம் சென்று கொண்டிருந்தனர்.

காட்டுப்பாதையில் சென்று அவர்கள் அன்று காட்டிய பாதை வீரமறவர்களின் பாதை! பண்டாரக வன்னியன் ஒருவனல்ல; அவனைப் போல பலர்; உறுதியும் வாய்மை ஒளியும் உணர் வும் கொண்டவர்கள் தோன்றிட - அந்த மாவீரனின் வரலாறு பயன்படத் தவறவில்லை. எனவே அது வாழும் வரலாறு!


(முற்றும்)

குறிப்பு :-

பண்டாரகவன்னியனின் மரணம் இயற்கையானதா? அல்லது களத்தில் மாண்டானா? இதனை வரலாறு தெளிவாகக் குறிப்பிடவில்லை! ஆனால் ஒன்று; அவன் இறுதி வரையில் அந்நியரை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தான். எனவே இந்தத் தொடர்கதைக்கு நான் எழுதியுள்ள "முகப்புரை" யைத்தான் இக்கதையின் முடிவுரையாக வாசகர்கள் மீண்டும் ஒருமுறை படித்துப் பார்த்துக் கொள்ளவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

மு. க.

கண்டி விக்கிரம ராஜ சிங்கனின்
நினைவு முத்து மண்டபம்



பண்டாரக வன்னியனின் உயிர்த்தோழன்-இலங்கையை ஆண்ட கடைசித் தமிழ் மன்னன் கண்டி விக்கிரம ராஜசிங்கனின் கல்லறை வேலூர் பாலாற்றங்கரையில் சிதிலமடைந்து கிடந்தது. கலைஞர் அவர்கள் மீண்டும் ஆட்சிப்பொறுப்பிற்கு வந்ததும்-புதர் மண்டிக் கிடந்த கண்டி மன்னனின் கல்லறையிருந்த இடத்தில் அழகிய நினைவு முத்து மண்டபம் எழுப்பி 11-7-90 ஆம் நாள் அதனைத் திறந்து வைத்தார்கள்

TAMIL CENTENARY LIBRARY
00103911
18 JAN 2010





ROCK FORT Publications (P) Ltd.

MADRAS — 600032